# யாழ்ப்பாண வைபவ கௌமுதி

## (HISTORY OF JAFFNA)

க. வேலுப்பிள்ளை

| | |
|---|---|
| தலைப்பு | : யாழ்ப்பாண வைபவ கௌமுதி<br>(யாழ்ப்பாண சரித்திரம்) |
| ஆசிரியர் | : க.வேலுப்பிள்ளை |
| முதற்பதிப்பு | : 1918 |
| இரண்டாம்பதிப்பு | : 2001 |
| வெளியீடு | : வல்வெட்டித்துறை வரலாற்று ஆவணக்காப்பகம். – கனடா |

| | |
|---|---|
| TITLE | : YALPAANA VAIPAVA KOWMUTHI<br>(HISTORY OF JAFFNA) |
| AUTHOR | : K.VELUPPILLAI |
| FIRST EDITION | : 1918 |
| SECOND EDITION | : 2001 |
| PUBLISHED BY | : VALVAI. N.NAGULASIGAMANY<br>3947 LAWRENCE AVENUE EAST # 413<br>SCARBOROUGH, ONTARIO<br>CANADA, M1G – 1S1 |
| TELEPHONE | : 416 – 438 – 7650 |
| EMAIL | : Nagulasigamany@gmail.com |
| WEB SITE | : WWW.VVTHISTORY.COM |

உ

சிவமயம்

யாழ்ப்பாண

# வைபவ கௌமுதி.

---

இது

வண. சா. ஞானப்பிரகாசர் (O. M. I.)

கனம். C. D. வேலுப்பிள்ளை (போதகர்)

மெஸ். ச. குமாரசுவாமி (கிளாக்கு)

என்பவர்களின் பேருதவிகொண்டு

வயாவிளான்

சுதேசநாட்டிய மானேசர்

## மெஸ். க. வேலுப்பிள்ளை


என்பவராலியற்றப்பட்டு

தமது

ஜயசிறீ சாரதா பீடேந்திர சாலையில்

முத்திரிகாணஞ் செய்விக்கப்பட்டது.

1918



யாழ்ப்பாணம்.



T. ISAAC TAMBYAH, Esq.,

(BARRISTER-AT-LAW.)

# முகவுரை.

நமது யாழ்ப்பாணநாட்டைப்பற்றிய சரித்திரங்கள் பற்பல காலங்களிலும் பற்பலராற் பற்பலவாறாய்ச் சுருக்கியும் விரித்தும் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றுள் பல தமிழிலும், சில அங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளன.

நம் யாழ்ப்பாணம் தமிழராலும், சிங்களராலும், பறங்கிகளாலும், ஒல்லாந்தராலும் ஆளப்பட்டுண்மையின்; யாழ்ப்பாணத்தைப்பற்றிய சரித்திரத்தை எழுதுவதற்குத் தமிழ்ப்பாஷையின் அறிவும் ஆராய்ச்சியும்மாத்திரம் போதுமென்று அறிஞர் ஒருபோதுங்கூறார். தமிழிலெழுதப்பட்டுள்ள மேற்படி நூல்களுக்கும், அவ்வக்காலங்களில் அரசாண்ட அரசர் பாஷையிலுள்ள இராசரீக 'றிப்போட்டு'கள் சரிதசூசிகளுக்கும் அநேகவிபரீதங்கள் காணப்படுதலின், சிங்களம், உற்சு, அங்கிலம், போர்த்துக்கீசு என்னும் பாஷைகளை நன்கு வாசித்துணரும் உணர்வும், சரித்திரத்தை ஆய்ந்து ஆக்குவார்க்கு அகத்தியம் வேண்டற்பாலதாம். இந்நியாயம்பற்றியே இச்சரித்திரத்தை நாம் முடிப்பதற்கு மேற்கூறியபாஷைகள் தெரிந்துள்ளார் சிலரின் உதவியையுந் தேடவேண்டியது அத்தியாவசியகமாயிற்று.

அங்ஙனந்தேடி நாம் விசேட உதவி பெற்றவருள் சிறுபராயந்தொட்டு எமது நேசத்தைப் பெரிதுமுவந்துபாராட்டி வந்த, வருகின்ற வண. சா. ஞானப்பிரகாசர் O. M. I அவர்களே தலையாயினர். இப்புத்தகத்துக்காய் அவர் எமக்குச்செய்த உதவியும், எடுத்துக்கொண்ட பிரயாசையுமோ, எம்மை அவர்க்கு என்ஞான்றுங் கடமைப்படுத்தும். முற்பகுதியிற்றோற்றுஞ் சில குறிப்புக்களையும், அங்கிளர்காலத்தையும் நமது நண்பர், அச்சுவேலி, கனம். தானியேல் வேலுப்பிள்ளைப் போதகரவர்களும், இடப்பெயர் விளக்கத்தை நமது அத்தியந்த நண்பர், தெல்லிப்பழை ஸ்ரீ ஈ. குமாரசுவாமி (யாழ்ப்பாணம் பொலிஸ்கந்தோர் பிரதமகிளாக்) அவர்களும் தங்கள் பொறுப்பிலேயேற்று முடித்துவிட்டனர். இவர்கள் அபிமானமும், கடமையும் என்றுமெம்மாற் பாராட்டப்படத் தக்கதேயாம். இப்புத்தகம் ஆராய்ச்சியளவில் நமது நண்பரெனப்படுவோர்க்குச் சந்தோஷகரத்தை வருவிப்பதாயிருந்தாலும், இங்கு எழுதி முடிக்கப்பட்டிருக்கும் வழியோ கிரமத்தப்பற்றவாறாய் முடிக்கப்பட்டில்லை என்பதும், எழுதப்பட்ட பாஷைநடையோ சரித்திரத்துக்கேற்ற இலலித நடையில் எழுதப்படவில்லை என்பதும், அதினும் அக்கரமிழைகள், சொற்பிழைகள், தரிப்புக்குறிப்பிழைகள் அனேகமிருக்கின்றனவென்பதும் நாமே ஒத்துக்கொள்ளக்கிடக்குமென்றும்.

இவைகளுக்கு இப்புத்தகத்தை அவசியம் முடிக்கவேண்டுமென்ற அவாவால் நம்மிடமுண்டான துடிதுடிப்பும், நமக்குக் காத்திராது இலபித்த சில இடர்களும், பலரனுப்பிய குறிப்புகளின் மாறுபாடுகளும், நால்வரின் பாஷா சங்கலனமுமே காரணமாம். இது ஒருபுறமிருக்க.

சிலரின் குடும்பக்குறிப்புக்கள் மிகப்பிந்திக் கைக்குக்கிடைத்தமையாலும், அங்ஙனமனுப்பப்பட்டவைகளுள்ளுஞ் சில, கிரமமாய்ப் பூரண ஆராய்ச்சிகொண்டு எழுதப்பட்டில்லாமையாலும், சிலர் நாம் நம் சுதேசநாட்டியப்பத்திர வாயிலாய் வெளிப்படுத்தியிருந்த வெளிப்படுத்தற்படி செய்யற்பாலனவற்றைச் செய்யப் பிந்தியமையாலும், விசேடமென அகத்தியம் வெளிப்படுத்தப்படவேண்டிய அனேக பிரபுக்களின் குடும்பக்குறிப்புக்கள் இப்பதிப்பில் வெளிப்படுத்த வசதிப்படாதுபோயின. இங்கே வெளிப்படுத்தியவைகளுள்ளும் ஒவ்வோர்பாலாரின் கல்வி, செல்வம், உத்தியோகம், நாட்டாண்மை, குணச்சிறப்பு, அடிமை குடிமை, வண்மை, புத்தி, நேர்மை ஆதியவைகளையெடுத்து விபரித்து விரித்தெழுதில், எமது புத்தகரூபம் கொடியகாகிதப் பஞ்சத்தைக் கொண்ட இக்காலத்தில் மிகப்பெருத்துப்பெருஞ்செலவைக்கொடுத்து எமது விருப்பைப் பிரதிகூலப்படுத்திவிடுமென்றஞ்சி அவற்றுளதிகமானவற்றையொதுக்கிவிட நேரிட்டது. இனி: ஒவ்வொருவரின் இனையையும் துணிந்து சுட்டி இவர் வேளாளன், இவர் செட்டி, இவர் வன்னிமை, இவர் மடப்பளி என்று அதிகமாய் இங்கே காட்டாது விட்டது: சிலர் இனைப்பெயர் ஆதாரமதிப்பளவிலொன்றாயும், கன்னபரம்பரை வழக்கில் பின்னொன்றாயுமிருத்தலின் அக்குறை நம்மைப்பற்றாதிருக்கட்டுமென்பதுபற்றியேயென்க.

சிலர் குடும்ப பரம்பரையை நம் குறிப்பிற்கண்ட சிலர் நம் புத்தகம் வெளித்தோன்றுமுன் நம்குறிப்பை மறுத்தும், நம்மை வெறுத்தும், "ஓ!! நமக்குள்ள இந்தமுதலியார்வழி அவர்க்கேது? ஏதோ ஒரு வழியிற் சொற்பமிருந்தாலும் நாங்கள் அவர்களோடு சபைசந்தி, உண்டாட்டுக் கொண்டாட்டு ஒன்றுமில்லையே" என்று நம்மேற் குறைபாராட்டவுந்தொடங்கினர். நாம் அவ்வாறானோரை மனப்பூரணப் படுத்துவதோவெனில் இலேசான காரியமன்று. பிரபுத்துவம் விளங்கிய ஒரு உயர்குலமுதலியார்க்குள்ள இரு புத்திரரில் ஒரு புத்திரன் வழித் தோன்றலாயுள்ளார் செல்வம் செல்வாக்கு கல்வி அதிகாரம் உற்றோராயும், மற்றப்புத்திரனின் வழித்தோன்றலாயுள்ளார் தலைமுறை தலைமுறைதோறும் மேற்சுட்டிய வண்மை அற்றோராயும் விளங்கலாம். வண்மையுற்றோர் அற்றோரோடு இனங்கொண்டாடுதல் உ

ண்டாடல் கொண்டாடலாதிய வைகளையொதுக்கி யொழித்துக் கொள்ளுதல் புதுவழக்குமன்று. "கெட்டார்க்குற்றார் கிளையி லுமில்லை" என்பது ஆன்றோர் கூற்றுமாம். இதினால் மேலேசுட்டிய பிரபுத்துவம் விளங்கிய முதலியாரின் உதிரத்தில் தலைமுறை தோறும் தரித்திர தசையைப்பெற்று வந்த மனுஷருக்குப் பங்கில்லை என்று துணிந்து சொல்ல நாம் வல்லமல்லம். கீழ்க்குலப்பெண்ணை மணந்து மதிப்பற்றவராயினும், மதநிலையளவில் பதிதராயிருப்பினும் அவர்க்குள்ள உரிமை யொருசிறுபொழுதும் அவரைவிட்டு நீங்குவதில்லையென்பதை யறியாதவரே இக்குறை யெடுத்தாளுவாராதலின் நாம் அவர் கூற்றை எட்பிளவளவினும் பொருட்படுத்தேம். யதாபூர்வமாய் உயர்மரபோடுற்ற செல்வம் செல்வாக்கு உத்தியோகம் பிரபுத்துவம் அதிகாரம் கல்வியுள்ளாரல்லாரும்: காலவிபற்படி தற்போதைக் கண்ணிய நோக்கிப் பாராட்டப்படல் வழங்கலினும், குலம், சென்மத்திலுள்ள வொன்றன்றென்பது உயர்ந்தோர் சித்தாந்தமாயிருத்தலினும், சிலர் பிறர் இணையை நன்கறியாதவராய் மற்றவரை அதோகதியராயும், தம்மைப்புஷ்கரமுடையராயும் வாளாமதித்து நடப்பதை அபரோக்கமாய் நாம் சில்லுழிக்கண்டதினும், அவரையீண்டொழிதிலம். அன்றியும் "பிறன் பழிகூறுவான்றன் பழியுள்ளுந் திறந்தெரிந்து கூறப்படும்" என்ற மூதுரையும் நண்பர் கவனிக்கத்தக்கது. ஈண்டு வெளிப்படுத்திய குடும்பக் குறிப்புக்களுட் சிலவற்றில் சிலர்பெயர்கள் மாறியும், சிலர் பெயர்கள் குறிக்கப்படாதும் பொச்சாப்பாலுங் கவலையீனத்தாலுந் தவறினவாதலின் இக்குறைகளை எம் நண்பர் மன்னிப்பாராக. மேலேகாட்டப்பட்ட தவறுகளனைத்தும் இனிதுகவனித்துத் திருத்தப்பட்டு ப்விரைவில் இந்நூலின் இரண்டாம்பதிப்பில் வெளிவரும்.

☞ இப்புத்தகத்தை எமது இதயவிசுவாச அன்பராய், எம் இன்ப துன்பங்களைத் தமதெனக்கொண்ட நண்பராய் கிரிமேற்றீபம்போல் விளங்கும் நியாயதுரந்தர சிங்கம், ஸ்ரீ. ஐசக் தம்பையா அவர்களின் கைமாறற்ற நன்றிகளுக்கோர் ஞாபகசின்னமாய் அவர்க்குச்சமர்ப்பித்துப் பிரகடனஞ்செய்கின்றேம்.

இங்ஙனம்

க. வே.

# வெளியீட்டுரை

யாழ்ப்பாணத்தின் வரலாற்றை குறிப்பிடும் நூல்கள் தமிழ் மன்னர்கள் காலத்திலேயே இருந்து வெளிவர ஆரம்பித்தன. அவற்றுள் மிகச் சிலவே இன்று வாழும் எமக்குக் கிடைத்துள்ளன.

"வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள்" நூலை ஆக்கியபோது "யாழ்ப் பாண வைபவ கௌமுதி"என்னும் நூலில் எமது ஊர்பற்றிய தகவல்கள் இருப்ப தாக அறிந்து கொழும்பு தமிழ் சங்கத்துடன் தொடர்பு கொண்டோம். அதன் செயலாளர் அதன் பிரதி தங்களிடம் இல்லை எனவும் பயனுள்ள இப்பனுவலை மீள்பதிப்புச் செய்தால் பலருக்கு உதவும் என்ற செய்தியை அனுப்பியிருந்தார்.

19ம் நூற்றாண்டில் வாழ்ந்த உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர் "வல்வை கலித்துறை" என்னும் பெயருடன் பாடிய செய்யுட்களில் இவ்வூரவர்களை "ஊர்கா வலர்" என்று குறிப்பிட்டமை ஊன்றிக் கவனிக்கற் பாலதொன்றாம். குறிப்பிடு தற்குரிய செய்யுள் ஒன்று இதன்கீழ் இடம்பெறுகிறது.

கார்க்காமர் கண்டத்து நம்
வயித்யேசர் கருணையினாற்
றீர்க்காயுளு மிட்டி சித்தியு
மெய்திச் செறிந்தகுள
நீர்க்காலெலா முத்தச் சங்கின
மூர்ந்து நிறைந்த வல்வை
யூர்க்காவலர் வைகிலெங்களுக்கே
பேரிதூதியமே.

இதற்கு ஆதாரமாக"யாழ்ப்பாண வைபவ கௌமுதி"யில் இந்தியாவில் இருந்து ஆதியில் வந்த யுத்தவீரர்கள் வல்வையில் குடியேறிய விபரம் 65ம், 67ம் பக்கங்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வூருக்கு அருகிலுள்ள இடங்களில் சமரபாகுதேவன் குறிச்சி, கல்லிடைத்தேவன் குறிச்சி, வென்றி பாகுதேவன் குறிச்சி முதலிய பெயர்களால் அழைக்கப் படுவதும் அப்பகுதிகளில் போர் மறவர்கள் வந்து குடியேறியமையை வலியுறுத்துகின்றது. பின்பு அவர்கள் வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டனர்.

மேலும் 272ம் பக்கத்தில் தமிழீழத்தேசியத் தலைவர் திரு. வேலுப் பிள்ளை பிரபாகரன் அவர்களின் மூதாதையர்பற்றி யாழ்பாணத்திலுள்ள முன்ன ணிக் குடும்பங்களில் ஒன்றாக விபரிக்கப்பட்டு அவர்களின் அக்கால சேவைகள் பற்றிய குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன. வல்வை இயற்றமிழ் போதர்காசிரியர் திரு. ச.வயித்தியலிங்கபிள்ளை (1843 - 1901 ) அவர்கள் தமிழுக்கும் சமயத்திற் கும் ஆற்றிய பணிகள் பற்றியும் விபரிக்கப்பட்டுள்ளன.

400வருடங்களுக்கு முற்பட்ட யாழ்பாண வரலாற்றை உள்ளடக்கிய, காலத்தால் அழிந்துபோகும் நிலையிலுள்ள யாழப்பாண வைபவ கௌமுதி என்ற இப்பனுவலை இயன்றவரை புதுப்பித்து வரலாற்றைப் படிக்கும் மாணவர்களுக் கும் வரலாற்று ஆர்வலர்களுக்கும் உதவும் என்ற வகையில் இரண்டாம் பதிப் பாக வெளியிடுவதில் யான் அகமகிழ்வு அடைகின்றேன்.

வரலாற்று ஆவண காப்பகத்திற்கு யாழ்ப்பாண வைபவ கௌமுதியின் மூலப்பிரதியைத் தந்து உதவிய திரு. பொன். சிவகுமாரன் அவர்களுக்கும், இர ண்டாம் பதிப்பாக வெளிவர உதவிய கனடாவாழ் தொழில்சார் பெருமக்க ளுக்கும், இப்பனுவலின் அட்டையை வடிவமைத்து அளித்த Digi graphics & studios பா. அ. ஜயகரன் அவர்களுக்கும், இப்பனுவலை அழகுற அச்சேற்றிய விவேகா அச்சகத்தினருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி வல்வை ந. நகுலசிகாமணி
வல்வெட்டித்துறை ஆவணக் காப்பகம்
தெணியம்பைத்தெரு.வல்வெட்டித்துறை

## இப் புத்தகத்தை முடிக்க ஆதாரமாயெடுத்தாண்ட நூல்களுள் முக்கியமானவை.

1. யாழ்ப்பாண வைபவமாலை.
2. கைலாயமாலை
3. பரராசசேகரனுலா.
4. இராசமுறை.
5. வையாபாடல்.
6. யாழ்ப்பாணக்கல்வெட்டு.
7. யோன்போதகர் "யாழ்ப்பாணச்சரித்திரம்"
8. யோன்போதகர் "இலங்கைச்சரித்திரம்"
9. மகாவமிசம். (Turnour's Mahawanso)
10. இராசாவளி. (Gunasekara's Rajavaliya)
11. நாகணவாய்ப்பட்சித்தூது. (Sella lihini sandesa)
12. கேயிரோஸ்: இலங்கையின் வைதிக லௌகிக செயம். (Queiroz' Conquista Temporal e Espiritual de Çeylao)
13. வாரியா இ சூசா: போத்துக்கீச ஆசியா. (Faria y Sousa: Asia Portuguesa)
14. பர்த்தோலி: ஆசியா. (Bartoli: Dell' Istoria della compagnia di Gesu: L' Asia)
15. கொறேயா: லெண்டாஸ். (Correa: Lendas da 'India' Engl. Trans.)
16. றிபேறு: இலங்கையின் நிர்ப்பாக்கிய சரித்திரம். (Ribeiro's Ceylon, Engl. Trans.)
17. டேபா கூற்றோ: ஆசியா. (Barros' and Couto's Ceylon Engl. Trans.
18. கோல்டிறிச்: சம்பிராஞ்சிஸ்கு சவேரியாரின் நிருபங்கள். Coleridge: Life and Letters of St. Francis Xavier)
19. போல்பீரிஸ்: போர்த்துக்கீசர்கால இலங்கை. (P.E.Pieris: Ceylon, the Portuguese Era.)
20. யேசுசபைவருஷாந்தநிருபங்கள். (Jesuit Annual Letters, Engl. Trans.
21. பால்டேயஸ்இலங்கையின்விபரம். (Baldaeus: Description of the Isle of Ceylon Engl. Trans.)

22. கடலோட்டுக்காதை.

23. கதிரேசு: யாழ்ப்பாணக்குடாநாடு.

24. முத்துத்தம்பிப்பிள்ளை: "யாழ்ப்பாணச் சரித்திரம்"

25. விறிற்றோ யாழ்ப்பாண வைபவமாலை (Brito's Yalpana-Vaipava-Malai )

26. சிங்கள 'நம்பொத்த' (Nam Pota.)

27. ஒல்லாந்த அரசினர் அறிக்கைப்பத்திரங்கள். ( Memoirs and Instructions of Dutch Governors, Commandeurs, &c )

28. காசிச்செட்டி சிலோன் கசற்றியர். (Casie Chitty. Ceylon Gazetteer)

29. காசிச்செட்டி: தமிழ்நாவலர் சரித்திரம். (Casie Chitty: Tamil Plutarch.)

30. தெனெந்து; இலங்கை. (Tennent's Ceylon)

31. தெனெந்து: இலங்கையில் கிறீஸ்துமார்க்கம். (Tennent: Christianity in Ceylon.)

32. காஞ்சமநாதன்: இலங்கைத் தேவ்தாழ்ச்சி உத்தியானம்.

33. ஆனல்ட் சதாசிவம்பிள்ளை: பாவலர்சரித்திரதீபகம்.

34. சக்லிங்; இலங்கை. (Suckling's Ceylon)

35. கோடினர்: இலங்கைவிபரம். (Cordiner's Description of Ceylon.)

36. லூயிஸ்: இலங்கைச் சமாதிக் கல்வெட்டுகள். (Lewis: Ceylon Tombstones and Monuments.)

37. லூயிஸ்: வன்னிக் கைத்துணைநூல் (Lewis: the Vanni District Manual)

38. பச்சேக்கு: யோசேவாஸ்முனிவர் சரித்திரம்.

39. முதல் நூற்றாண்டு. (The First Centenary of St. Mary's Cathedral Jaffna)

40. மானியம்பதியார் சந்ததிமுறை.

41. மாட்டின்: கதிரைவேற்பிள்ளை நீதிவான் சரித்திரமும், அவர்காலமும். (Martyn: The Life and Times of C. W. Cathiravelpillai.)

42. யாழ்ப்பாண குடும்ப ஐக்கியசபை. (The Jaffna Family Union Geneology and Brief sketches.)

43. இலங்கை: ஒருநூற்றாண்டு. (H. I. Root. A Century in Ceylon)

44. கசினெல்லி: யாழ்ப்பாண விக்காரியத்து வரலாறு. (Casinelli: Report on the Jaffna Vicariate.)

45. கிளவ் சிங்கள அகராதி. (Clough's Sinhalese Dictionary)

46. மாக்டொனல் சம்ஸ்கிருத அகராதி. (Mac Donnald's Sanskrit Dictionary)

47. மார்ஸ்டின் மலாய் அகராதி. (Marsden's Malay Dictionary)

48. உவின்சிலோ தமிழ் அகராதி, (Winslow's Tami.-English Dictionary.)

49. கு. கதிரைவேற்பிள்ளை 'தமிழ் அகராதி.'

50. கண்டேற் மலையாள அகராதி (Gundert's Malayalam-English Dictionary)

51. தேர்ஷ்டன் 'தென்னிந்தியகுலகோத்திரங்கள்' (Thurston's Castes and Tribes of Southern India.)

52. இக்கால மக்கள் கணங்கள். (Living Races of Mankind)

53. ஹெக்கல் மநுஷபரம்பரை. (Haeckel's Pedigree of Man)

54. 'இலங்கை கல்விக்களஞ்சியம்' (Ceylon Literary Register)

55. 'இலங்கை மாதாந்தகல்விக்களஞ்சியம்' (Ceylon Monthly Literary Register.)

56. 'கீழ்த்தேய நிபுணன்' (The Orientalist.)

57. இராசாங்க ஆசியாக் கல்விச்சங்க பத்திரிகை. (Royal Asiatic Society's Journals, Ceylon Branch.)

58. மாகாண பரிபாலன அறிக்கைகள். (Ceylon Administration Reports.)

59. "உதயதாரகை"

60. "சத்தியவேத பாதுகாவலன்"

61. "இந்துசாதனம்"

62. "செந்தமிழ்"

63. 'இலங்கைத் தொன்மை ஆராய்ச்சிப்பத்திரிகை' (The Ceylon Antiquary.)

———:o:———

# இப்புத்தகத்தை அச்சிட்டுவெளிப்படுத்தப் பணஉதவிபுரிந்த பிரபுக்களின் நாமஅட்டவணை.

| ஸ்ரீ. | | ரூபா. |
|---|---|---|
| ... | மார்க்கண்டபிள்ளை குத்த கைகாரன் சங்குவேலி | ௨௱௰ |
| ... | வேலுப்பிள்ளை கோல-வயா | ௨௱ |
| ... | நமசிவாயம் சிறுப்பு கொழு | ௱௯௫ |
| ... | ஆறுமுகம் புறோக். கொழு. | ௱௯௫ |
| ... | கதிர்த்தம்பி மேமியோ | ௱௰ |
| ... | வயித்திலிங்கம் தொல்புரம் | ௱ |
| ... | சிவலிங்கம்பிறக்றர் கொழு | ௱ |
| ... | இ.ராசரத்தினம் பிறக்றர் " | ௱ |
| ... | சிதம்பரப்பிள்ளை நல்லூர் | ௱ |
| ... | சேனாதிராஜா பரிஸ்றர் | ௭௫ |
| ... | சிதம்பரப்பிள்ளை இஞ்சினீர் குருநாகல் | ௭௫ |
| ... | பொன்னையா புங்குடுதீவு | ௭௫ |
| ... | முத்துக்குமாரசூரியர் உடுப்- | ௭௫ |
| ... | உவில்லியம் பிளாய்க்கு இஞ்சினீர் சங்கானை | ௫௰ |
| ... | காசிப்பிள்ளை பிறக்றர் | ௫௰ |
| ... | கௌரவ. பாலசிங்கம் அப்புக்காத்து கொழும்பு | ௫௰ |
| ... | ஆறுமுகமாப்பாணர் நல்லூர் | ௫௰ |
| ... | நாகநாதமுதலியார் நுவரேலி | ௫௰ |
| ... | கந்தையா டக்றர் அக்கரைப் | ௫௰ |
| ... | வேன்முருகுமுதலியார் மட். | ௨௰ |

| ஸ்ரீ. | | ரூபா. |
|---|---|---|
| ... | தாமோதரம்பிள்ளை பிறக்றர் உடுப்பிட்டி | ௫௰ |
| ... | இரத்தினம் டக்றர் கொழும்பு | ௫௰ |
| ... | பொன்னம்பலம் உருப்பராய் | ௫௰ |
| ... | சபாபதிப்பிள்ளை தொல்புரம் | ௫௰ |
| ... | மெக்கின்றையர் டக்றர் கோலலம்பூர் | ௫௰ |
| ... | வயித்திலிங்கம் தொல்புரம் | ௫௰ |
| ... | ஐங்கிற்றல் ஸ்றேசன்மாஸ்றர்- | ௫௰ |
| ... | தம்மையா கொம்மேஷல்கொம்பனி கொழும்பு | ௫௰ |
| ... | இளையதம்பி அளவெட்டி | ௫௰ |
| ... | மயில்வாகனம் வியாபாரி | ௫௰ |
| ... | சின்னத்துரை மாதகல் | ௫௰ |
| ... | தம்பாபிள்ளை முதலியார் கோலலம்பூர் | ௫௰ |
| ... | சுப்பிரமணியம் கவாலி | ௫௰ |
| ... | சபாரத்தினம் ஊரெழு | ௫௰ |
| ... | முருகேசபிள்ளை சிந்தன்கே- | ௫௰ |
| ... | சோமசுந்தரம் கொழும்பு. | ௫௰ |
| ... | வேலுப்பிள்ளை சண்டிருப்- | ௫௰ |
| ... | சண்முகராஜா கொழும்பு | ௪௰ |
| ... | சின்னத்தம்பி கொழும்பு | ௩௰ |
| ... | நாகநாதன் அப்புக் " | ௩௰ |

| ஸ்ரீ. | | ரூபா. |
|---|---|---|
| ... | சிற்றம்பலம் மணியகாரன் கரவெட்டி, | ௩௰ |
| ... | சீனிவாசகம் கொட்டடி | ௩௰ |
| ... | சரவணமுத்து டக்றர் கொழு- | ௩௰ |
| ... | இராசரத்தினம் புறோ-மானி. | ௩௰ |
| ... | இராமநாதன் கண்டாக்கு மானிப்பாய்— | ௩௫ |
| ... | சுந்தரம்பிள்ளை அராலி | ௩௰ |
| ... | வல்லிபுரம் வைத்தியர் அன்- | ௩௫ |
| ... | தம்பையாபிள்ளை பிறக் வண்- | ௨௫ |
| ... | காரளபிள்ளை கொழும்பு | ௩௫ |
| ... | தியாகராஜா " | ௨௫ |
| ... | செல்லையாபிள்ளை மேமியோ | ௨௫ |
| ... | இளையதம்பி மேமியோ | ௨௫ |
| ... | சின்னத்தம்பி மணியகாரன் கரவெட்டி | ௨௫ |
| ... | முத்துக்குமாரு வயித்தியர் வண்ணை | ௨௫ |
| ... | தென்ஸ்மன் சண்டிருப்பாய் | ௨௫ |
| ... | தம்பிமுத்து தெருடவில் | ௨௫ |
| ... | தம்பு ஓவசியர் வட்டுக்கோ— | ௨௫ |
| ... | வேலுப்பிள்ளை தொல்புரம் | ௨௫ |
| ... | இராமசுவாமி மூளாய் | ௨௫ |
| ... | விதானை மண்டைதீவு | ௨௫ |

| ஸ்ரீ. | | ரூபா. |
|---|---|---|
| ... | இளையதம்பி மேமியோ | உரு |
| ... | சோமசுந்தரம் மணியம் வேல்லணை | உரு |
| ... | காசிப்பிள்ளை உரும்பராய் | உரு |
| ... | தம்பிராஜா றப்பேட் உடுவில் | உரு |
| ... | தம்பிராஜா பிறக்றர் கற்றன் | உரு |
| ... | ஐயாத்துரை " " | உரு |
| ... | குமாரசுவாமி கந்தர்மடம் | உரு |
| ... | சு. க. குருக்கள் அராலி | உரு |
| ... | பரராசசிங்கமுதலியார் சண், | உரு |
| ... | இளையதம்பி அப்புக்காத்து | உய |
| ... | செல்லையர் கண்டா. புலோ. | உரு |
| ... | வேலுப்பிள்ளை வட்டு | உரு |
| ... | சிவக்கொழுந்து புரோ மானி. | உரு |
| ... | கதிரேசு பிறக்றர் சீதாரி | உய |
| ... | சந்திரசேகரம் மணியகாரன் மாதகல் | உய |
| ... | முத்துக்குமாரு (தந்தி) இஞ்சினீர் அராலி— | உய |
| ... | தம்பிராஜா உரும்பராய் | யரு |
| ... | சுந்தரபிள்ளை புரோ-கொழு- | யரு |
| ... | செல்லையா உரும்பராய் | யரு |
| ... | கதிரேசபிள்ளை கொட்டடி | யரு |
| ... | சோமசுந்தரம் டக்றர் மட்டுக் | யரு |
| ... | கயிலாயபிள்ளை டக்-துணை-வி | யரு |
| ... | வோட் விசயரத்தினம் சீதாரி- | யரு |
| ... | விசாகேசுஉபாத்தியார் நல்லூர் | ய |

| ஸ்ரீ. | | ரூபா |
|---|---|---|
| ... | நல்லைபா இருபாலை | எரு |
| ... | செல்லையா கெருடாவில் | எய |
| ... | அம்பலவாணர் புரோக். உரு- | உய |
| ... | கந்தையா பீ-டபிள்யு-டீ- | உய |
| ... | அப்பாக்குட்டி கடை மஸ்கே- | உய |
| ... | பெருமாள்பிள்ளை பிறக்றர் | கய |
| ... | ஐயாத்துரை ஓவசியர் சங்கா. | யரு |
| ... | சின்னத்தம்பி புரோ மானி. | யரு |
| ... | அரு.அரு.சோமசெட். வண் | யரு |
| ... | பி.கு.பி.அ. செட். வண் | யரு |
| ... | பி.கு.கா.செட். வண். | யரு |
| ... | ரு.ம.அரு.அரு ரு.ம.செட்டி. | யரு |
| ... | மதனு சீதாரி | யரு |
| ... | பொன்னுச்சாமிசெட். வண்- | யரு |
| ... | மு.க. பெருமாள்செட். " | யரு |
| ... | பரிகாரி ஐயர் மூளாய் | ய |
| ... | செல்லப்பா விக்ரோகல். சுழி. | ய |
| ... | கார்த்திகேசு வயித்தியர், நல். | ய |
| ... | இராமசுவாமிப்பிள்ளை புலோ. | உய |
| ... | கணபதிப்பிள்ளை " வது. | ய |
| ... | கணபதிப்பிள்ளை " டிக் | ய |
| ... | வீரசிங்கம் சண்டிருப்பாய் | ய |
| ... | மாரிமுத்து கடை பண்டாரு— | ய |
| ... | அம்பலவாணர் பீ-டபிள்யு-டீ- | ய |
| ... | ஐயாத்துரை வண-கிழ | ய |
| ... | இராமலிங்கம் கொத். ஆனைக்— | ய |
| ... | முத்துச்சாமி விதானை புத்தூர்- | ய |

| ஸ்ரீ. | | ரூபா. |
|---|---|---|
| ... | பேரம்பலம் கடை வதுளை | ய |
| ... | நவரத்தினம் வைத் மூளாய் | ய |
| ... | மில்ஸ் மானிப்பாய் | ய |
| ... | வேலாயுதபிள்ளை வண்ணை | ய |
| ... | கணபதிப்பிள்ளை ஓவசியர் சங்- | ய |
| ... | வேலுப்பிள்ளை பிறாறி வட். | ய |
| ... | சிற்றம்பலம் " " | ய |
| ... | முத்துக்குமாரு மணிய-யாழ்- | உய |
| ... | கனகசபை ரேவு யாழ்ப்பாண - | ய |
| ... | விஸ்வலிங்கம்டக்றர் ஊரெழு | ய |
| ... | துரையப்பா ஓட்டுமடம் | ய |
| ... | கணபதிப்பிள்ளை வட்டு | ய |
| ... | கனகசபை சாய்ப்பு கொழும்— | ய |
| ... | தில்லைநாதர் வட்டு | ய |
| ... | சின்னப்பாபிள்ளை கந்-மடம | ய |
| ... | சிதம்பரப்பிள்ளை புலோலி | ய |
| ... | கதிரைவேற்பிள்ளை மூளாய் | ரு |
| ... | அம்பலவாணர் தெல்லி-மே. | ரு |
| ... | கந்தப்பு வட்டு | ரு |
| ... | நல்லசேகரம்பிள்ளை தொல்பு- | ரு |
| ... | சங்கரப்பிள்ளை கடை வதுளை- | ரு |
| ... | பொன்னையா பீ.டபிள்யு-டீ. | ரு |
| ... | யோசேப் கண்டாக்கு மஸ். | ரு |
| ... | நாகலிங்கம் " " | ரு |
| ... | நாகலிங்கம் கடை " | ரு |
| ... | முருகேசு ஊவாவக்கி | ரு |
| ... | ஆசைப்பிள்ளை வைத்.சில்லாலை, | ரு |

உ

சிவமயம்.

# யாழ்ப்பாண
# வைபவ கௌமுதி

## புராதனகாலம்.

நாம்வசிக்கும் யாழ்ப்பாணம் என்னும் இச்சிறுநாடு பரந்த ஆசியாக்கண்டத்தின் தென்பாகத்திலே இந்துசமுத்திரத்தில் இலங்கித்துலங்கும் இலங்காதுவீபத்தின் வடபாகத்திலே அதன்சிரமாய்ச் சிறந்துவிளங்கும் ஓர் சிறு குடாநாடாம்.

**நிலயம்.**— இந்நாடு உருவத்தின மிகச்சிறிதாயிருப்பினும் "கடுகுசிறிது காரம்பெரிது" என்றபான்மையாய் சரித்திரசம்பந்தமாய் நடந்த சம்பவங்களால் மிக்க சீர்த்திபெற்றுச் சிறந்தவிடமாய் விளங்கிவருகின்றது.

**எல்லை.**— இத்தீபகற்பம், வடக்கே பாக்குநீரிணையையும், வங்காள விரிகுடாவையும், தெற்கே பூநகரிக்கடலையும், மேற்கே பாக்குநீரிணையையும் எல்லையாகக்கொண்டு, தென்கீழ்ப்பகுதியிலுள்ள கோவில்வயல் என்னும் பூசந்தியினால் இலங்கையுடன் இணைக்கப்பட்டிருக்கின்றது. இதன் அயலில் விளங்கும் காரைதீவு, வேலணைதீவு, புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவுஎன்னுஞ் சத்ததீவுகளும் இந்நாட்டைச் சேர்ந்தனவாம்.

**உற்பத்தி.**— இந்துசமுத்திரத்தின் திடர்களையடைந்த மிக நுண்ணிய எண்ணற்ற பவளப்பூச்சிகளின் இடைவிடாத நெடுங்காலப் பிரயாசத்தினால் தமது வாசஸ்தானமாய்க் கட்டியெழுப்பிய முரிகைக்கற்பார், திரையால் மோதுண்டு தகர்ந்துவிழவிழப் பின்னரும் அத்ததிலிருந்து கட்டியெழுப்பியவைகள் அலையாலும் நீரோட்டத்தாலும் செப்பனிடப்பட்டுத் துகளாயும், பின்னர் மணலாயும், அப்பால் மணல்நாடாயும் இந்நாடு உற்பத்தியாயினதென்பது அறிஞர் துணிபாம்.

இந்நாட்டின் அயலில் இவ்வகையாய் உற்பத்திபெற்று விளங்கும் காரைதீவு, எழுவைதீவு ஆதியவைகளின் கரைகளிற் காணப்படும் பவளப்பூச்சிப்பார்களே அதற்குத்தக்கசான்றுகளாம்.

"பூர்வத்திலே இந்நாடு ஒரு சிறந்தநாடாயிருந்து பின்னர்க் கடல்கொள்ளப்பட்டது. அதன்பின்னர்த் திடராகி மணல்கொண்டு காலவடைவில் மீண்டும் நாடாயிற்று" என மெஸ். ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் கூறியகூற்று ஆதாரமற்ற துணிபாம்.

**நிலவியல்பு.—** உப்பாறு இந்நாட்டை யிரண்டாகப்பிரித்து ஓர்பகுதிநிலத்தை உவர்நிலமாக்கச் சிலபாகம் செந்நெல்விளை கழனிகளாகவும், சிலபாகம் இரும்புசெறிந்த செம்மண்நிலமாகவும், சிலபாகம் சொரிகற்பாறையாகவும் இந்நாட்டின் நிலத்தன்மையிருக்கின்றது. இலங்கை இந்தியாவைப்போன்ற மலைவளம் ஆற்றுவளம் இங்கே மிகவரிது. இந்நாட்டின் வடமேற்குக் கரையிலுள்ள கீரிமலையும், அதன் அயலிலிருந்து கடலுட்பாயும் ஓர் நன்னீரருவியுமுண்டு. இத்தேசம் வானம்பார்த்த பூமியாகவிருக்கின்றது. கிணறுகள்மூலமாய் நீர்ப்பாய்ச்சிப் புகையிலை, சிறுதானியங்கள் செய்கைபண்ணப்படும். வேளாண்மைச்செய்கை மழைவளத்துக்குத் தக்கதாயிருக்கும். சிறந்த கற்பகவிருட்சங்கள் என்னப்பட்ட தாலவிருட்சங்களையும், பழங்களுட் சிறந்த முப்பழச்சோலைகளையும், தென்னஞ்சோலைகளையும், இன்னும் பற்பலவகையான தாவரவர்க்கங்களையும் உடையதாய் விளங்கும் இந்நாடு மணற்றிடல் என்னும் பெயருடையதாய் மனுஷசஞ்சாரமற்ற காடாயிருந்தது.

**பெயர்களும், காரணமும்.—** இந்நாட்டுக்குக் காலத்துக்குக் காலம் பலபெயர்கள் வழங்கலாயின. அப்பெயர்கள்: 1. புண்ணியபுரம், 2. கந்தருவநகரம், 3. வீணாகானபுரம், 4. எருமைமுல்லைத்தீவு, 5. நாகத்தீவு, 6. மணற்றிடர், 7. யாழ்ப்பாணம் என்பனவாம். இப்பெயர்க்காரணங்களை அவற்றின் சரித்திரத்துடன் இதன்கீழ்க் குறிக்கின்றோம்.

**புண்ணியபுரம்.—** பூர்வகாலத்திலே சிவன் பார்வதி சமேதராய் இவ்விடம்வந்து இப்பொழுது கீரிமலையென்று அழைக்கப்படும் இடத்துக்குச் சமீபமாயிருந்த திருத்தம்பலைப்பதியில் வாசம்பண்ணினரென்றும், அப்பொழுது தமதுபாரியாகிய உமையவள் ஸ்நானஞ்செய்வதற்காய் கண்டகிதீர்த்தத்தை இவ்விடம் அழைத்து வைத்தனரென்றும், அதில் தேவர்களும் இருடிகளும் பிறரும்வந்து தீர்த்தமாடிப் புண்ணியவான்களாயின

ரென்றும், அக்காரணத்தால் இந்நாடு புண்ணியபுரமென்று அழைக்கப்பட்டதென்றும் கதைகளுள. அவ்விடத்தில் திருத்தம்பலேஸ்வரன், திருத்தம்பலேசுவரி கோவில்களும், கதிரையாண்டவர் கோவிலும் கட்டப்பட்டிருந்தனஎன்ப.

**காந்தருவநகரம். விணுகானபுரம்.** } இலங்காபுரியை அரசாண்ட இராட்சத அரசனுகிய இராவணன் அயோத்திமாநகர அரசனுகிய தசரதச்சக்ரவர்த்தி குமாரராகிய இராமரது மனைவி சீதையைக்கவர்ந்து இலங்காபுரியிற் கொண்டுபோய்ச் சிறைவைத்திருந்தபோது இராமர்தம்பியாகிய இலக்குமணருடனும், வானரவீரருடனும் சென்று இராவணனைச் சங்கரித்தபின் அவனது வீணையைவாசிக்க நெடுங்காலமா யாசித்திருந்த சித்திராங்கதன் என்னும் பேர்உடைய ஓர் கந்தருவன் அவ்வீணையைக் கையாடிக்கொண்டுபோய்க் கீரிமலைச் சாரலில்வந்து தங்கி, வீணையை வாசித்து இன்புற்று ஏகாந்தமா யிருந்தனனென்பதும் பழங்கதை. காந்தருவ னிங்கேவசித்து இவ்விடக்காட்டை வெட்டி நாடாக்கினபடியால் காந்தருவநகரம் என்றும், அவன் வீணுபாணியாய்க் கானம்பாடினபடியால் வீணுகானபுரம் என்றும் இந்நாடு அழைக்கப்பட்டதாம். இப்பெயரும் பெயரைவிளக்க எழுதியகதையும் யாழ்ப்பாடியின் கதையைஒட்டிச் சமஸ்கிருத நூலாசிரியர்களால் எடுத்தோதப்பட்டவைகள் போலும்.

**எருமைமுல்லைத்தீவு** — யாழ்ப்பாணத்தின் வடமேற்குப் பாகத்திலிருக்கும் சிறுத்திடரான மலையும் அதன் பக்கத்திலிருந்து கடலுட்பாயும் நன்னீரருவியும் காலத்துக்குக்காலம் அயற்றேசவாசிகள் பலரை இவ்விடம்வரும்படி கவர்ந்தன. அந்நீரருவியில் ஸ்நானஞ்செய்தும், அச்சலத்தைப் பானஞ்செய்தும் சுகம்பெறும் நோக்கமாய்ப் பலர்வந்தனர். அந்நோயாளரே குடியில்லா இந்நாட்டுக்கு அக்காலத்தில் எருமைமுல்லைத்தீவு எனப் பெயரிட்டனராம்.

**கீரிமலை.** — இராமர் இராவணசங்காரம்முடித்து இவ்விடம் வந்து தீர்த்தமாடிப் போயினுரென்பது பழங்கதை. முசுகுந்தச் சக்கிரவர்த்தியும் இவ்விடத்தில்வந்து தீர்த்தமாடிச்செல்ல, அச்சக்கரவர்த்தியுடன் கூடிவந்த நகுலமுனிவர் அம்மலைக்குகையில் வசித்து அவ்வருவியில் ஸ்நானஞ்செய்துவர; கீரிமுகரோகம் மாறப்பெற்றனரென்றும், அதனுல் அம்மலைக்கு(நகுலம் = கீரி) கீரிமலையென்னும் பெயர் வந்ததென்றுங் கூறப்படும். கீர்த்திபெற்ற நிடதநாட்டரசனுகிய நளச்சக்கரவர்த்தியும், பஞ்சபாண்டவருள் நடுப்பிறந்தோனுகிய அர்ச்சுனனும் இவ்விடம்

ந்து தீர்த்தமாடிச் சென்றாரென்பது இதிகாசர்கூற்று.

**வளவர்கோன்பள்ளம்.**— முன்னாளிற் சிறப்புற்றுவிளங்கிய சோழராசன் ஒருவன் தனது சதுரங்கசேனையோடும் இவ்விடம் வந்து தானும் தன்பரிவாரத்தவரும் தங்குவதற்குத் தக்க கட்டிடங்களுண்டாக்கி அவ்விடம் வாசம்பண்ணி வேட்டையாடியும், அவ்விடத்துள்ள அருவியில் ஸ்நானஞ்செய்தும், சிலகாலந் தங்கிப் பின் தன்னிடத்துக்குச் சென்றனன். அவர்வந்து தங்கினவிடம் வளவர்கோன்பள்ளம் என்று அழைக்கப்பட்டது என்ப.

**நாகத்தீவு.**— இலங்கையின் பூர்வகுடிகளாகிய நாகர் இவ்விடம் வசித்தமையால் சிங்களவர் இந்நாட்டுக்கு நாகத்தீவு என்னும் பெயரிட்டு அழைத்தனர்.

**மணற்றிடல்.**— தமிழர் இந்நாடு மணற்றிடராயிருந்தமையால் மணற்றிஎன்றும், மணற்றிடலென்றும் அழைத்துவந்தனர். மணற்றிடல் பழையபெயர்களுள் ஒன்று என்பது: சிங்களவர் இங்கிருந்தகாலம் யாழ்ப்பாணத்தின் பெரும்பாகத்தை "வலிகம" அதாவது மணலூர் என்றழைத்தமையினாலும் காணக்கிடக்கின்றது. யாழ்ப்பாணம் என்னும் பெயர்வந்தவாறுபின்னர்க் கூறுவாம்.

**விஜயன்வரவு.**— இந்தியாவிலே லாடதேச அரசனாகிய சிங்கவாகுவினாற் றுரத்தப்பட்ட அவன்மகனாகிய விஜயன் தன் தோழன் எழுநூறுபெயருடன் படகிலேறிக் கடலைக்கடந்து புத்தளத்துக்குச் சமீபத்திலிருந்த தம்பபண்ணை என்னுந் துறையிலிறங்கி, கி. மு. 543-ம் ஆண்டு இலங்கையரசை ஆரம்பித்தனன். இவனே இலங்கையிலே சிங்கள அரசை ஸ்தாபித்த முதல் அரசனும்.

**கீரிமலையாலயம் புதுப்பித்தல்.**— இவன் அரசியற்ற ஆரம்பித்தகாலத்திலே தனது இராச்சிய பாதுகாவலுக்காய் இலங்கையின் கீழ்ப்பகுதியில் தம்பலகாமத்தில் கோணேசர்கோவிலையும், மேற்றிசையில் மாதோட்டத்தில் திருக்கேதீச்சுரன் கோவிலையுமெழுப்பி, வடதிசையில் கீரிமலைச்சாரலிற் பழுதுபட்டுக்கிடந்த திருத்தம்பலேசுவரன், திருத்தம்பலேசுவரி, கதிரையாண்டவர் கோவில்களையும் புதுப்பித்தும், காசியிற் பிராமணராகிய நீலகண்டாசாரியாரின் மூன்றாங்குமாரன் வாமதேவாசாரியரையும், அவர் பன்னியாராகிய விசாலாட்சியம்மாளையும் அழைப்பித்து அவ்விடங்குடியிருத்தி நித்தியபூசை நடத்தவேண்டிய பல

உதவிக்ள்புரிந்து மீண்டுந் தன் இராசநகரிசென்றனன். கோவில்கள் புதுப்பிக்கப்பட்டபின் அக்கீரிமலைச்சாரலிற் றங்கித் தவஞ்செய்துவந்த நகுலமுனிவர் அவ்வாலயங்களிற்சென்று வழிபட்டுவந்தமையால், அக்காலத்துள்ளார் திருத்தம்பலேசுவரன் கோவிலை நகுலேசர்கோவிலென்றும், அழைத்துவந்தனர் என்ப.

கோவிற்கடவை.— இக்கோவில்கள் கட்டப்பெற்று விளங்கினமையால் அக்கிராமத்துக்குக் கோவிற்கடவை என்றும் பெயர்வழங்கலாயிற்று.

முற்குகர்— அக்காலத்தில் கீரிமலைப்பக்கத்திலே கடற்கரையோரமாய்க் குகன்சந்ததியார் எனக் கூறப்படும் முற்குகத்தலைவரின்கீழ்ச் சிலவலைஞர் வாசம்பண்ணி மீன்பிடித்து அதனுற் பிழைத்துவந்தனர். உசுமன் சேர்ந்தான் என்னும் முற்குகத்தலைவர் வாசம்பண்ணியவிடங்கள் உசுமன்துறை சேர்ந்தான்களம் எனப் பெயர்பெற்றன. இவ்விடத்தில் இவ்வாறு சிலர் மீன்பிடிக்கச் சிங்களவர் சிலரிவ்விடம்வந்து மீன்களைவாங்கிக் கருவாடாக்கிக் கண்டிமுதலாமிடங்களுக்கு அவற்றைக்கொண்டுபோய் விற்றுவந்தனர். விசயரசன் மரித்தபின் சிங்களவர் நிழல்வசதி நீர்வசதிகளைநோக்கிக் கோவிற் பிராகாரங்களில் மீன்காயப்போடவும், கோவிற்கிணறுகளிற் றண்ணீரள்ளவுந்தொடங்க, கோவிற்பூசையை நிறைவேற்றிவந்த பிராமணர் சிங்களவருக்குப்பயந்தும், அவர்செயலையரோசித்தும் கோவிற்பூசைகளை நிறுத்திக் கதவுகளைப் பூட்டிக்கொண்டு அப்புறம்போய் ஒதுங்கிவிட்டனர். அதனுற் கோவில்களிற் சிலகாலம் பூசைநடைபெறுமலிருந்தது.

பாண்டுவசு— கி. மு. ஐஞ்ஞூறும் வருடம்வரையில் இலங்கையை அரசுபுரிந்த பாண்டுவசு என்பவன் கீரிமலைக்குவந்தபொழுது சிங்களவரால் இவ்விடம்நடத்தப்பெற்ற அநாசாரசெயல்களைக் கண்ணுற்றுச் சிங்களவரைத் தண்டித்தும், முற்குகரை அவ்விடம்விட்டுத் துரத்தியும் விட்டனன். அவ்விடமிருந்து துரத்தப்பட்ட முற்குகரிற் சிலர் மட்டுக்களப்புக்குப்போய்ப் பாணகைபிரவி யென்னுமிடத்தில் வசிக்க, எஞ்சியோர் தொல்புரம், சுழிபுரம் ஆதியவிடங்களிற் சென்று குடியேறினர்.

இவ்வரசன்காலத்திலே மனுநீதிகண்ட சோழராசனின் மகன் குளக்கோட்டரசன் யாத்திரைசெய்து வரும்பொழுது திரிகோணமலைக்குவந்தான். அங்கே கோணேசர்தரிசனம் பண்ணியதுடன் பழுதுற்றிருந்த அக்கோவிற் றிருப்பணிவேலையை

ச் செய்வித்துவந்தனன். இச்செய்தியைப் பாண்டவேசு மகாராசன் மனைவியறிந்து அச்சமயம் அரசனங்கே இல்லாதபடியாற் குளக்கோட்டு மகாராசனை இந்நாட்டினின்றுந் துரத்திவிடும்படி அவ்விராணி தன்சேனாவீரருட் சிலரையனுப்பினாள். அச்சேனாவீரர் திரிகோணமலைசென்று குளக்கோட்டன் செய்விக்கும் விசேடவேலைகளையும் அவனுடைய சேனைத்திரளையுங்கண்டு பயந்து நடுக்கமுற்றுத் தூதாக வந்தவர்கள்போல் மவுனமாகநின்றார்கள். அரசனவர்களைப்பார்த்து நீங்கள் இவ்விடம் வந்தகாரணம் யாதெனவினவ, அவர்கள்பணிந்து மகாராஜனே! தாங்கள்செய்விக்கு மிப்பெரிய வரியதிருப்பணிக்கு வேண்டியபொருள் யாதேனுந் தேவையாவென ஆராய்ந்து அறிந்துவரும்படி எங்களரசி கற்பிக்க இவ்விடம் வந்தோமென்றனர். அரசன் அவர்களைநோக்கித் திருப்பணிக்கு வேண்டியனயாவும் சம்பூரணமாய் எம்மிடத்திலிருக்கின்றன. ஒன்றும் வேண்டியதில்லை; உங்கள் சுகவதிசயங்களை விசாரித்தேனென்று உங்களரசிக்கு அறிவியுங்களென்று சொல்லிச் சேனைக்கு உசிதவிருந்துகொடுத்தனுப்பினன். அச்சேனாவீரர் தம்மிராணியிடஞ்சென்று நடந்த செய்திகளை அறிவித்தவுடன், விருந்திற்பரிமாறிய பதார்த்தங்களின் மதுரத்தையும் வியந்து நயந்து ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர்.

**வன்னியர்.**— குளக்கோட்டு மகாராஜன் கோணேசர்கோவிற் றிருப்பணியைப் பூர்த்தியாய் நிறைவேற்றியபின்னர் அக்கோவிற்பூசையை நடத்துஞ்செலவுக்காய் அடங்காப்பற்றென்னும் ஏழுகிராமங்களில் வயல்களையுந் தோப்புகளையுமுண்டாக்கி, வயல்நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சும்படி ஓர் பெரிய குளத்தையுங் கட்டி, வன்னியரை அழைத்து அவ்விடத்திலே குடியேற்றி அவைகளைப் பராமரிக்கும்படி யொழுங்குசெய்து தன்னூர்சென்று சிலகாலத்துள் மரித்தனன். வன்னியர்கள் இங்கே பெருகிவருகிறகாலத்தில், பாண்டிநாட்டிலிருந்து பின்னும் ஐம்பது வன்னியர்கள்வந்து அவர்களுடன் கூடிக்கொண்டனர். கோவில் வருமானங்களும் குடிகளு மதிகரிக்க வன்னியர் குறுநிலமன்னராயினர். இலங்கைஅரசினர் அவர்களைக் கவனியாதுவிட்டனர். வன்னியர் பலர் தத்தம்பகுதிக்குக் குறுநிலமன்னராகிக் கலகமுமுண்டாக்கி ஒருவர்பின்னொருவராய் மரித்துவிட, எஞ்சிய வன்னியர் சமாதானமாகித் தங்களுக்குள் தலைமையான ஏழுபெயரைத்தெரிந்து அவ்வேழுநாடுகளுக்குந் தலைவராக்கி அவர்கள்கீழ்ச் சமாதானமாய் வாழ்ந்துவந்தனர்.

**வன்னிநாடு.**—வன்னியர் ஆண்டபகுதி வன்னிநாடு எனப்பட்டது. இவ்வன்னிநாடு முற்காலத்தில் மிகச்செழிப்புற்ற செ

ல்வயல்களையுடையதாய் நீர்வளம் பொருந்தியதாய்ச் செந்நெல் விளைந்திட அதிக ஐசுவரியத்தைக்கொடுத்தது. அதனால் வன்னியர் மிகச் செருக்குற்றுவாழ்ந்தனர்.

அக்கிரபோதி— கி. பி. 593-ம் ஆண்டு இலங்காபுரியின் அரசனாகிய அக்கிரபோதி மகாராசன் திக்குவிசயம்பண்ணி வரும்பொழுது இவ்வன்னியரையுந் தன் அதிகாரத்துக்குக் கீழ்ப்படுத்தித் திறைகொடுத்தரசாளும்படி கற்பித்து அதிகாரிகளை நியமித்துவிட்டுத் தன் இராசதானிசென்றனன்.

உக்கிரசிங்கன்.— விசயராசன் மரபிலே உதித்த உக்கிரசிங்கனென்னும் அரசன் இந்தியாவிலேயிருந்து சேனைகளை நடத்திவந்து கி. பி. 796ஆல் இலங்கைஅரசைத் தனதாக்கிக் கதிரைமலையைத் தனது இராசதானியாக்கி அரசுபுரிந்துவந்தான். அவன் இராச்சியபரிபாலனஞ் செய்துவரும்பொழுது தனக்குற்றநோயை நீக்கும்படி யாத்திரைசெய்து நகுலேசர்கோவிலைத் தரிசித்துத் தீர்த்தமாடக் கீரிமலைச்சாரலிலுள்ள வளவர்கோன் பள்ளத்திற் பாளயமிட்டிருந்தனன்.

தொண்டைமான்.— இவனிவ்வாறு வந்திருக்கும்பொழுது தென்னிந்தியாவிலுள்ள தொண்டைமண்டலத்தை அரசாண்ட தொண்டைமான் எனும் அரசனும், தனது பரிவாரங்களுடன் கீரிமலைச்சாரலில் வந்திறங்கி, அரசனைச்சந்தித்து, யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த கரணவாய், வெள்ளப்பரவை யென்னுமிடங்களில் விளையும் நல்லுப்பைத் தனது இராச்சியத்திலுள்ள பிரசைகளின் பாவிப்புக்காய்த் தரவேண்டுமென்று வருந்திக்கேட்டனன்.

தொண்டைமானாறு — உக்கிரசிங்க இராசன் அவ்வரசனின் கேள்விக்கிசைந்து உப்பையெடுத்துக்கொள்ளவும், அதற்கேற்ற ஒழுங்குகளைச் செய்விக்கவும் உத்தரவுகொடுத்தனன். தொண்டைமான் மிகுந்த சந்தோஷமடைந்து வடகடலிலிருந்து உப்புவிளையும் இடத்துக்குத் தனது மரக்கலங்கள்சென்று உப்பேற்றிவரவும், மாரிகாலங்களில் அவைகளுக்கு ஒதுக்கிடமாக இருக்கத்தக்கதாகவும், ஓர் சிற்றாற்றை வெட்டுவித்து உப்பை ஏற்றும்படிபண்ண ஒழுங்குசெய்து தன்பதிசென்றனன். தொண்டைமான் வெட்டுவித்த ஆறு இன்றுந் தொண்டைமானாறெனஅழைக்கப்படுகின்றது. இக்காலத்திலும் இந்நாட்டரசர் கரணவாய், வெள்ளப்பரவையாதிய விடங்களிலுண்டாகும் உப்பைச் சேகரித்து இவ்வாற்றின் மேற்கரையிற் குவிப்பித்துப் பிறவூர் வியாபாரிகளுக்கு விற்றுவருகின்றனர்.

உக்கிரசிங்கராசன் கிரிமலையைவிட்டுத் தன் தலைநகரமாகிய கதிரைமலையைநோக்கி வன்னிநாட்டின்வழியாகச்சென்று வன்னியர்கொடுத்த திறைகளை வாங்கிக்கொண்டு அதன்மேல் அத்திறைகளைக் கோணேசர்கோவிற் செலவுக்காகவிட்டு, அவற்றை ஒழுங்காய் அக்கோவிலதிகாரிகளிடங் கொடுக்கத் திட்டம்பண்ணித் தன்னுளநகையை நிலைப்படுத்திக் கதிரைமலைசேர்ந்து இராச்சியபரிபாலனஞ் செய்துவந்தனன்.

மாருதப்புரவிகவல்லி.— இதுநிகழ்ந்த எட்டாம்வருடத்திலே சோழமண்டலாதிபனாகிய திசையுக்கிரசிங்க சோழனின் அரிய புத்திரியாகிய மாருதப்புரவீகவல்லியென்னுங் கன்னி தனக்குற்ற குன்மநோயால் மிகவருந்தி வைத்தியரின் ஔடதப்பிரயோகத்தால் ஆரோக்கியமடைதல் கூடாதெனக்கண்டு, கிரிமலைச்சாரலில் ஓடும் நன்னீரருவியின் விசேடத்தைக் கேள்வியுற்றுத் தன் பரிவாரத்தவருடன் ஆங்குசென்று பாளயமிட்டுப் பலநாட்களாய் வாசம்பண்ணி, அக்கிரிமலையில் வசித்த நகுல முனிவரினுசிபெற்று அவ்விட மகிமைகளைக்குறித்துக் கேள்விப்பட்டு அச்சிற்றூற்றில் ஸ்நானஞ்செய்துவந்தனள்.

மாவிட்டபுரம்.— சிலகாலத்தால் அவளுடைய குன்மவலிநீங்கிக் குதிரைமுகமு மாறிற்றென்றும், அக்காரணத்தால் அக்குறிச்சிக்கு மாவிட்டபுரமெனப் பெயர்வந்ததென்றும் பழங்கதையாய்ச் சொல்கின்றனர். "மாருதப்புரவீகவல்லி கதை வைபவமாலையிலே விசயனின்பின் வைத்திருக்கிறது. மாருதப்புரவீகவல்லியுடைய குதிரைமுகம் என்பது ஓர்வகை நோய்போலும். சமஸ்கிருதத்திலே "அசுவமுக" என்பது கின்னரருக்குப்பெயர். கின்னரரென்பது குரூபமுள்ளவர்களுக்குப்பெயர். இது உற்றுநோக்கத்தக்கது.,, (ச. வே. பாதுகாவலன்)

காங்கேயன்துறை — அந்த இராசகுமாரி தனக்குற்ற நோய்நீங்கியமையால் நகுலமுனியின் யோசனைப்படி அவ்விடத்தில் ஓர் கந்தசுவாமிகோவில் கட்டுவிக்கநினைத்து வேண்டியபணத்தையும், தளபாடங்களையும் அனுப்பும்படி தன்தந்தைக்குத் திருமுகமனுப்பினள். அத்திருமுகத்தை வாசித்த தந்தை தன்னருமருந்தன்ன குமாரத்தியின் சுகத்தில் அகமிகமகிழ்ந்து ஆனந்தக்கண்ணீர்சொரிந்து, தில்லையிற் பிராமணனாகிய பெரியமனத்துள்ளாரை அழைத்து அவரிடம் வேண்டியபணத்தையும், கந்தசுவாமி, வள்ளியம்மை விக்கிரகங்களையும் கொடுத்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினன். அவர் அவைகளையுங்கொண்டு கசாத்துறையில் வந்திறங்கினர். காங்கேயன் விக்கிரகங்கொண்

டுவந்து அவ்விடத்தில் இறக்கியபடியால் அத்துறை அன்றுமுதல் காங்கேயன்துறை என அழைக்கப்பட்டு வருகின்றது.

**மாவிட்டபுரக் கந்தசுவாமிகோவில்—** தந்தையனுப்பியவைகளை மாருதப்புரவீகவல்லி மகாகளிப்புடன் ஏற்று ஓர் கோவிலை மூப்புவித்து அக்கிராரம், அன்னசத்திரம், மடமாதிய கட்டடங்கள் கட்டுவித்துச் சுற்றுமதிலிட்டுக் கந்தசுவாமிகோவிலெனப் பெயர்சூட்டிப், பெரியமனத்துள்ளாரையே பூசகராகநியமித்து நித்தியபூசை தவறாதுநடக்க ஒழுங்குசெய்து ஆனியுத்தரத்தன்று கும்பாபிஷேகம்பண்ணிக் கொடித்தம்பம்நாட்டி விழாக்கொண்டாட்டம் நடைபெறும்படி செய்தனள். இக்காலத்திலும் அத்தினந்தொடங்கியே விழாக்கொண்டாட்டம் நடைபெற்றுவருகின்றது.

**உக்கிரசிங்கராசனின் விவாகம்—** இக்காலத்திலே உக்கிரசிங்கராசன் மீறுபடியும் நகுலேசர்கோவிலைத் தரிசனஞ்செய்யும்படி வந்து தங்கியிருக்கையில், மாருதப்புரவீகவல்லியின் சவுந்தரிய ரூபத்தைக்கண்டு மயங்கி எப்படியும் அவ்விராசகுமாரியை விவாகஞ்செய்யத் தீர்மானித்து அர்த்தசாமத்தில் அவ்விராசகுமாரி தங்கியிருந்த பாளையத்திற்சென்று ஒருவருமறியாவண்ணம் அவளைத் தன்பாரியாக்கித் தன்பாளையத்திற் கொணர்ந்து வைத்துக்கொண்டான். காலையில் அவளுடைய [illegible]தியர், சேடியர், சேனுவீராதியர் உறக்கம்நீத்து எழுந்து இராசகன்னியைக் காணுது மிகக்கவலைப்பட்டுக் கலங்கி ஆராயும்பொழுது அரசன்பாளையத்தில் அவள் உலாவுவதைக்கண்டு ஆங்குசென்று அரசனை வழிபட்டுநின்றனர். வேந்தன் அவர்களைநோக்கி "இம்மாதை என் பட்டத்துத் தேவியாக்கினேன்" இம்மங்களசெய்தியைச் சோழதேசஞ்சென்று தந்தையாருக்கு அறிவியுங்கள்எனக்கற்பித்து வழிச்செலவுக்கு வேண்டியபணமுங்கொடுத்துஅனுப்பினன். உக்கிரசிங்கன் கந்தசுவாமிகோவிலின் விழாக்கொண்டாட்டம் முடித்துப் பின் மாருதப்புரவீகவல்லியுடன் தனது இராசதானிக்குச்சென்று அங்கே வேதியர்முன் தன் விவாகச்சடங்கை நிறைவேற்றி அவளுடன் இனிதாய் இல்லறத்தை நடத்திச் சுகானுபோகமுற்று வாழ்ந்தனன்.

**பெரியமனத்துள்ளார் விவாகம்.—** கந்தசுவாமிகோவிற் பூசகராகிய பெரியமனத்துள்ளார் கீரிமலைச்சாரலிலிருந்த வாமதேவாசாரியாது வமிசத்திலுதித்த சாம்பசிவஐயரின் மகள் வாலாம்பிகையை விவாகஞ்செய்து, அப்பெண்ணுக்குத் தில்லைநாயகியென்னும் பெயர்சூட்டி, கந்தசுவாமிகோவிலின் தெற்குவீதியி

ளுள்ள தமது அக்கிராரத்தில்வசித்துக் கோவிற்பணிவிடைகளை
ஒழுங்காய் நடத்திவந்தனர். இவ்விவாக சம்பந்தத்தினுல் இக்க
ந்தசுவாமிகோவிலின் பாகத்திலும் கீரிமலைச்சாரலிலும் வசித்த
இருதிறப் பிராமணக்குடும்பங்களும் ஒருகுடும்பமாய் ஐக்கிய
மாய்வாழ்ந்து ஈரிடக்கோவில்களுக்கும் ஒருவரே விசாரணைக்க
ர்த்தாராயினர்.

**செயதுங்கவாராசன்.**— கதிரைமலையை இராசதானியாக்கி
இலங்கையிலே அரசுபுரிந்துவந்த உக்கிரசிங்கராசன் சிலகாலத்
தின்பின் செங்கடகநகரியைத் தனது இராசதானியாக்கி அரசு
புரிந்துவந்தனன். அக்காலத்திலே அரசனுக்கு ஓர்புத்திரனும்
புத்திரியும் பிறந்தனர். புத்திரனுக்கு நரசிங்கனென்றும், புத்
திரிக்குச் சண்பகவதியென்றும் பெயரிட்டு அன்போடுவளர்த்
துவந்தனர். புத்திர புத்திரிகளுக்குத் தக்ககாலத்திலே விவாக
ஞ்செய்து வைத்ததுடன் நரசிங்கனென்னும் பெயர்பெற்ற வா
லசிங்கனுக்குச் செயதுங்கவாராசசிங்கம் என்னும் பெயர்சூட்
டி முடிபுனைந்து தனதிடத்தில் அரசாளவைத்துத் தேகவி
யோகமாயினன்.

**யாழ்ப்பாடி:**— தந்தையின் அரசுரிமையைப்பெற்ற மைந்த
னுகிய செயதுங்கவாராசன் சிறப்புடன் செங்கோல்செலுத்திக்
கீர்த்திப்பிரதாபத்தோடு அரசுபுரிந்துவந்தனன். சோழநாட்டி
லே வசித்த கவிவீரராகவன் என்னும் குருடன் இவ்வரசசிங்க
த்தின் கொடைத்திறனைக் கேள்வியுற்று அவ்வரசன் பேரில்
ஓர் பிரபந்தம்பாடிக் கொணர்ந்து இராசசபையிலே வந்துட்கா
ர்ந்து தனது யாழ்க்கருவியிற் கைபோட்டு நரம்புகளையிறுக்கித்
தொனிபார்த்துச் சுதிகூட்டிக் கையாலும் குரற்றெனியாலும்
சங்கீதசாகித்தியமுறைதவருது யாவரும் அதிசயிக்கப்பாடினன்.
அவையிலுள்ளார் யாழ்ப்பாடியின் அரியதிறமையைப்புகழ்ந்து
அதிசயித்துநிற்க, அரசன் யாழ்ப்பாடிக்குப் பரிசாக மணற்றிட
லென்னும் இந்நாட்டை அதிகமகிழ்ச்சியோடு கொடுத்தனன்.

**யாழ்ப்பாணம்:**— யாழ்ப்பாடி தான் யாழ்பாடிப் பரிசாகப்
பெற்றமையால் இந்நாட்டுக்கு யாழ்ப்பாணமெனப். பெயரிட்டு
வடதேசத்திலிருந்து சிலதமிழ்க்குடிகளை அழைத்துக்கொண்
டு வந்து குடியேற்றிச் சிங்களவரையும் அரசாண்டு வயோதிக
னுய் மரித்தனன் என்ப.

யாழ்ப்பாணத்தைப்பற்றிய இவ்விர்த்தாந்தம் வெகுசந்தேக
த்துக்குரியது. முன்பு யாழ்ப்பாணத்தை யாழ்ப்பாடி என்பது பெ

ருந்தாதெதாகிறது. யாழ்ப்பாணர் என்பவர்கள் மூவகைப் பாண ருள் ஒருசாரார். இப்பாணர் தமிழகத்துப் பழங்குடிகளுள் வைத்து எண்ணப்படுவோ ரென்பதைத் "துடியன் பாணன் ப றையன் கடம்பனென் றிந்நான்கல்லது குடியுமில்லை" என்னும் புறச்செய்யுளாற் (325) காணலாம். பாணருடைய பொதுத் தொழில் மீன்பிடித்தல். இப்பாணருள் ஒருசாராராகிய யாழ் ப்பாணர்கள் ஒருகாலம் குடியிருந்தவிடம் யாழ்ப்பாணம் என ப்பூட்டதென்பதே பொருந்தும் போலும்.

யாழ்ப்பாணனுக்கு மணற்றி எனும் யாழ்ப்பாணத்தைக் கொடுத்தான் எனப்படுகிற அரசன் வைபவமாலையின்படி செ யதுங்கவரராசசிங்கன்(Brito's trans. P. 12)எனப்படுகிறகைலா யமாலையின்படி இவன்தந்தை நரசிங்கராசன் "தனிப்பாடற்றி ரட்டிலே" யுள்ள 'நரைகோட்டிளங்கன்று' எனத்தொடங்கும் கட்டளைக்கலித்துறையின் ஈற்றிலே 'திரைபோட்டு நீயிருந் தா ய்சிங்க பூப சிரோமணியே' என்றிருக்கிறது. இதைப் பாடிய புலவனின் கருத்துப்படியும், யாழ்ப்பாணனைப்பற்றிக் கைலாய மாலை வரைந்துவைத்த கதைப்படியும் நரசிங்கனென்னும் அர சனே குறிக்கப்படுகிறவனுகிறுன் எனலாம். ஆயின் மெஸ். மு த்துத்தம்பிப்பிள்ளை 'திரைபோட் டிருந்தனை யேலேல சிங்க சி ரோமணியே' என்ற ஒருபாடத்தைத் தருகிறுர். பழைய நூல் களில் இதற்கு ஆதாரம் காணுதல் கூடுமா? ஏலேலசிங்கன் கா லமே (கி. மு. 205 வரை) யாழ்ப்பாணன் காலமாயின் அதற்கு ம், பாண்டிமழவன் சென்றழைக்க சிங்கையாரியச் சக்கரவர்த் தி வந்து யாழ்ப்பாண அரசுகைக்கொண்ட காலத்துக்கும்(கி. பி. 950 வரை) இடையில் மிகப்பெரும் இடையீடுகாணப்படுகிறது. இவ்விடையீடுபட்ட காலமெல்லாம் யாழ்ப்பாணநாடு அரசின் றி யிருந்ததெனக் கொள்வது கூடாதுபோலும். (ச. வே. பா)

முன்கூறிய யாழ்ப்பாடியின் விருத்தாந்தத்தின்படி கலிவி ராகவன் தேகவியோகமர்யினபின் சிங்களவர் இந்நாட்டைத் தம்நாட்டாக்கி ஆளுகைபண்ண நினைத்துத் தமிழ்க்குடிகளை வருத்தினர் எனவும், அதனால் தமிழர் மிகவருந்தி யாழ்ப்பாண த்தை விட்டுத் தம்பூர்வநாடுகளை நோக்கிச் சென்றதினால(யாழ்ப் பாணம்அரசனில்லாமையால்) நிலைதளம்பிக்கொண் டிருந்ததென வும் கூறுவர்.

## 2. ஆரியச் சக்கரவர்த்திகள் காலம்.

பாண்டிமழவன்:— யாழ்ப்பாண நாட்டிற் குடியேறிய தமிழர் பலர் இவ்விடத்திலாங்காங்கு குடியேறிய சிங்களவர் மிகநெரு

க்கினமையால் வலசைவாங்கித் தமது முன்னோர் வாசஸ்தான மாகிய வடதேசஞ்சென்றுவிடச் சிலரே சிங்களக்கலகத்துக்கு ச் சற்றும் அஞ்சாமலிருந்து அவர்களை யெதிர்த்துக் காலங்கழி த்துவந்தனர். அவர்களுக்குள் பொன்பற்றியூர் வேளாளன் பா ண்டிமழவன் என்னும் பிரபு ஒருவன். இவன் கவிவீரராகவன் மந்திரியாகிய சேதிராசன் மகளை விவாகம்புரிந்து யாழ்ப்பாண த்தில் வசித்தான் என்பது சிலர்கருத்து. இப்பிரபு யாழ்ப்பாண ம் அரசின்றிக் கெட்டுப்போகும் நிலையைக்கண்டு மிகத்துன்பித் து ஒரிராசகுமாரனைத்தேடிக் கூட்டிக்கொண்டு வரும்படி மது ரைநாட்டுக்குச் சென்றனன். அங்கே இராச உத்தியோகத்துக் கேற்ற கல்வி கற்றுவந்த இராசகுமாரர்களுள் சிறந்தவனும், திசையுக்கிர சிங்கசோழராசாவின் மகன் சிங்ககேதுவின் மரு கனுமாகிய சிங்கையாரியன் என்னும் சூரியகுலத் தோன்றலைக் கண்டு யாழ்ப்பாணத்தின் நிலையையறிவித்து இவ்விடத்தை வந் து அரசுபுரியுமாறு வேண்டிக்கொண்டனன். இராசகுமாரன் அதிகசந்தோஷத்துடன் அவன்கேள்விக்கிசைந்து தந்தையின் அனுமதியையும் பெற்றுக்கொண்டு சர்வகலாவல்லபண்டிதனாகி ய புவனேகவாகுவென்னும் மந்திரியையும் காசிநகர்க்குலோத் துங்கனாகிய கெங்காதர ஐயரென்னுங் குருவையும், வேண்டிய பரிவாரங்களையும் அழைத்துக்கொண்டு யாழ்ப்பாணம் வந்தி றங்கி நல்லூரைத் தனது தலைநகராக்கி அரசிருக்கையை ஸ்தா பித்தான்.

இராசகுமாரன் அங்கே சுபமுகூர்த்தத்திலே அஸ்திபார மிட்டு நான்குமதிலும் எழுப்பி, அரண்மனை, சபாமண்டபம், நியாயமண்டப மாதியவற்றை அமைப்பித்து, மந்திரி பிரதா னி முதலியோர்க்கு வேண்டிய மாளிகைகளை யுண்டாக்குவித் து யானைப்பந்தி குதிரைப்பந்திகளைச்செய்வித்து, கெங்காதரஐ யரும் அவர்பத்தினியாகிய அன்னபூரணியம்மாளும் வசிக்கப ண்ணுதற்கேற்ற அக்கிரகாரம் முதலியவற்றையாக்கி, ஓர் சிற ந்த நந்தவனத்தையுமுண்டாக்கி அதன்மத்தியில் ஓர் முட்டை க்கூபமும் வெட்டுவித்து யமுனாதீர்த்தத்தை எடுப்பித்து, அத னுள்விட்டு யமுனாவரியெனப் பெயருமிட்டுப் பலதிறத்தவருமி ருக்க ஏற்ற இடங்கள்வகுத்து அலங்காரநகரமாக விளங்கச் சி றப்பித்தனன். இவ்வகை நகரத்துக்கு அவசியஞ்செய்யவேண்டி யன யாவற்றையுஞ் செய்வித்தபின் திலகவதியென்னும் பாரி சமேதராய் ஆடம்பரத்துடன் அந்தணர் ஆசிகூற அதிசந்தோ ஷத்துடன் கிரகப்பிரவேசஞ்செய்தனர். அதன்பின் ஓர் சுபதி னத்தில் சிங்கைஆரியச் சக்கிரவர்த்தி முடிசூட்டி அன்னதான ம், சொர்னதானம் முதலாம் பலவகைத்தானங்கள்வழங்கி அதி

சந்துஷ்டியுடன் சதுரங்க சேனைகள்சூழ மந்திரி பிரதானிக ளுடன் நகரப்பிரவேசஞ்செய்து பிரசைகள் வாழ்த்தும் வண க்கமும்பெற்றுச் சிங்காசனமேறிப் பிரசாநயாபேட்சகனாய்த் து ட்டநிக்கிரக சிட்டபரிபாலனஞ் செய்துவந்தான்.

இன்னும் தந்நகரிக்குப் பாதுகாப்பாய்க் கீழ்த்திசைக்கு வெயிலுகந்த பிள்ளையார்கோவிலையும், வடதிசைக்குச் சட்டை நாதசுவாமிகோவில், தையல்நாயகி யம்மைகோவில்களையும், மே ற்றிசைக்கு வீரமாகாளி கோவிலையும், தென்றிசைக்குக் கயி லைவிநாயகர் கோவிலையுங்கட்டி மத்தியில் கந்தசுவாமிகோவிற் திருப்பணியையும் முடிப்பித்துக் கும்பாபிஷேகம் முதலிய கி ருத்தியங்களை முற்றுவித்து நித்தியபூசைக்கும் ஒழுங்குசெய் தான்.

"இலகியசகாப்தமெண்ணூற்றெழுபத்தாமாண்டினெல்லை
யலர்பொலிமாலைமார்பனும்புவனேகவாகு
நலமிகுயாழ்ப்பாணத்தினகரிகட்டுவித்துநல்லைக்
குலவியகந்தவேட்குக்கோவிலும்புரிவித்தானே"

இப்பாட்டின்படி சிங்கையாரியச் சக்கரவர்த்தி நல்லூரைத் த லைநகராக்கினதும், கந்தசுவாமிகோவில் கட்டப்பட்டதும் கி.பி. 950 வரையில். இக்காலமே முதல் ஆரியச்சக்கரவர்த்தியின் கா லமாகப் பலவகையானும்ஒப்புக்கொள்ளப்படத்தக்கது. (ச.பா.)

சிங்கையாரியச் சக்கரவர்த்தி மனுநீதிவழுவாது செங்கோ ல்செலுத்தி வருங்காலத்திலே குடிசனங்குறைந்த இந்நாட்டி லே அனேகபிரசைகள் வாசஞ்செய்யவேண்டுமென்று விரும் பி, ஓர்நாள் மந்திரியாகிய புவனேகவாகுவுடன் யோசனைபண் ணி இன்னுஞ் சில தமிழ்க்குடிகளை யனுப்பவேண்டுமென்று த மிழரசர்களுக்குத் திருமுகமனுப்பினன். அத்தமிழரசர் இவ்வரச னது கேள்விக்கிசைந்து. சிற்சில இடங்களிலிருந்து சில தமிழ் க்குடிகளை யனுப்பினர். அவர்கள் தங்கள் அடிமைகுடிமைகளு டன் யாழ்ப்பாணம்வந்து சேர்ந்தனர்.

திருவேங்கடகிரி.— அவர்களைக்கண்டு ஆனந்தபூர்த்தியடைந்த அரசன்; (வேங்கைப்பருப்பதத்தான்) வேங்கடகிரியைத் தனக் குச் சென்மஸ்தானமாகவுடையவனும்,கங்காகுலதிலகனும், மே ழிக்கொடியுடையவனும், எல்லோர்க்கும் அதிவிருப்போடு அ ன்னமருளும் கொடைவள்ளலுமாகிய பொன்பற்றியூர் வேளா ளன் பாண்டிமழவனையும், அவன்தம்பியையும், மைத்துனரு

கிய செண்பகமழவனையும், அவன்தம்பியையும் பலவளங்களு ஞ்சிறந்து கல்விகாகரீகம்மிகுந்து விளங்கிய திருநெல்வேலியி லிருத்தினன்.

துளுவவேளாளர்குல இரத்தினமும், குவளைமாலையணிந் த மார்பனும், கற்றவர்களுக்குப்பெருநிதிவழங்கும் பெருந்தியா கியும், பலகலைக்கியானங்களையும் படித்துத்தேர்ந்த வித்துவானு ம், மிகுந்த கீர்த்திப்பிரஸ்தாபம் பொருந்தியவனும், காவிரிப்பூ ரைப் பிறந்த ஸ்தானமாக வுடையவனுமாகிய நரசிங்கதேவனை ச் சிறந்த பலவளப்பங்கள் நிறைந்து விளங்கிய மயிலிட்டியிலி ருத்தினன்.

வாவிகர் வேளாண்தலைவனும், அழகுமிக்க மேழிக்கொ டியுடையானும், இயல் இசை நாடகமென்னும் முத்தமிழ்ப்பு லமையிற் சிறந்தவனும், மன்மதன்போன்ற அழகிய சொரூப னுமாகிய செண்பகமாப்பாணனையும், மிகுந்த கீர்த்தியுடையவ னும், (காயனகர்ப்பூப்பாணன்) சிரகமாலையுடையவனும், வைசி யகுலத்தவனுமாகிய கனகராயன் என்னுஞ் செட்டியையும், ப ல மேன்மைகளையுடையதாயும், நீர்வளஞ்சிறந்ததாயும் விளங் குந் தெல்லிப்பழையில் இருத்தினன்.

கோவலூர் வேளாளனும், மேழிக்கொடியோனும், குவ ளைமலர்மாலை சூடுவோனும், சகலகலைகளுங் கற்றறிந்த நிபு ணனும், அதிசௌந்தரிய ரூபனுமாகிய பேராயிரமுடையானைக் கரும்பும், வாழையும், கமுகும், நெல்லுஞ் செழித்தோங்குஞ் சிறந்தவளப்பம்மிகுந்த இணுவிலிலிருத்தினன்.

கச்சூர்வேளாளனும், கற்பகதருவினையொத்த கொடைவ ள்ளலும், குவளைமாலையணிந்தவனும், குபேரனையொத்த செல் வனும், அழகிற் கீர்த்தியுற்றவனும், தனக்கு ஒப்பாருமி மிக் காருமில்லாத பெரும் பராக்கிரமவீரனும், சிவபத்தியுடையவ னுமாகிய நீலகண்டனென்பவனையும், அவன்தம்பிமார் நால்வ ரையும் பச்சிலைப்பள்ளியிலிருத்தினன்.

செரிநகர் வேளாண்தலைவனும், குவளைமலர்மாலைமார்பனு ம், சத்தியவுரை, கல்வி, செல்வம், முயற்சி, கொடை, அழகு, வலிமை என்பவற்றினுற் சிறந்தவனுமாகிய கனகமழவனையும், அவன்தம்பிமார் நால்வரையும் புலோலியிற் குடியிருத்தினன்.

கூப்பகநாட்டு வேளாளனும், குபேரனையொத்த நிறைசெல் வனும், கற்றவர்க்கு மாரிபோல்வழங்குங் கொடைவள்ளலும், குவளைமலர்மாலை தரித்தோனும், மேழிக்கொடியுடையோனுமா கிய கூபகேந்திரனையும், அவன்உறவினனும் பெருந் தருமவா னுமாகிய நராங்கதேவனையும், பலவளங்கள் சிறந்துவிளங்குந் தொல்புரத்தில் குடியேற்றினன்.

புல்லூர் வேளாண்தலைவனும், வில்வித்தையில் அருச்சுன னையும், போரில் வீமனையும், கொடையில் கன்னனையும், பொ றையினுங்கீர்த்தியிலுந் தருமனையும்ஒத்தவனும்,நவரத்தின மழு த்திய முடியணிந்தவனுமாகிய தேவராசேந்திரனைக் கோயிலா க்கண்டியி லிருக்குமாறு கற்பித்தான்.

தொண்டைநாட்டு வேளாண்தலைவனும், குவளைமாலையணி மார்பனும், கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர்பாடிய சிறந்த தமி ழ்ப் பிரபந்தமாகிய ஏரெழுபது கவிக்கு மாரிபோற் கனகம் பொழிந்தவனின் குலத்தவனுமாகிய மண்ணாடுகொண்ட முத லியை இருபாலையிலிருக்கும்படி கற்பித்தனன்.

செய்யூர்வேளாளனும், இந்திரனைப்போன்ற செல்வனும், நீதி, பொறுமையாதிய சுகுணங்களையுடையானும், வாசனைப ரிமளிக்குங் குவளைமாலைதரித்த மார்பனும், மிகுந்த கீர்த்திப் பிரஸ்தாபனும், தனக்கு ஒப்பாரு மிக்காருமில்லாதவனுமாகிய தனிநாயகமுதலியை நெடுந்தீவுக் கதிபதியாக்கினன்.

பல்லவராயன்.— வஞ்சிநகர்வேளாளனும், கல்விமானுமாகி ய பல்லவனையும், அவனுறவினராகிய இருபிரபுக்களையும் செ ந்நெல்விளையும் கழனிகள்விளங்கும் வெளிநாடென்னும் பல்ல வராயன்கட்டு முதலிய இடங்களுக்கு அதிபதியாக்கினன்.

சிங்கையாரியன் இந்தியாவிலிருந்து வந்த பிரபுக்களை அ வரவர் அடிமைகுடிமைகளுடன், மேற்கூறியவிடங்களிற் குடி யிருத்தியபின் நான்குதிசைகளுக்கும் நான்குசேனைகளைக் காவ லாகநிறுத்தி மேற்றிசைச்சேனைக்கு வல்லியமாதாக்கனென்னு ம் பராக்கிரமவீரனையும், கீழ்த்திசைச் சேனைக்குச் சண்பகமா தாக்கனென்னும் வீரசூரனையும், வடதிசைச்சேனைக்கு உத்தண் டகெம்பீர வீரனாகிய இமையாணனென்னும் மாதாக்கனையும், தென்திசைச்சேனைக்கு வெற்றிமாதாக்கன் என்னும் விசயபரா க்கிரமனையும் சேனாபதிகளாக்கி வீரசிகாமணியாகிய வீரசிங்க னைச் சர்வசேனைக்கும் நாயகமாக்கி யின்னும் வேண்டுமிடங்க

டோறும் சுசாததூரக பதாதிகளையிறுத்திப் புற்மதிலுங் கட்டுவித்துச் சுபமுகூர்த்தத்தில் மகுடாபிஷேகம்பெற்று புவனேகவாகு என்னும் மந்திரியுடன் நகர்வலம்வந்து நவரத்தினங்களழுத்திச் செய்யப்பட்ட சிங்காசனமேறி அரசியல்தொடங்கிச் செங்கோன்முறைகுன்றாது நல்லரசுபுரிந்துவந்தான்.

1.விசய கூழங்கைச்சக்கரவர்த்தி— இவ்வரசனதுஎர்கைகூழங்கையாயிருந்ததால் விசய கூழங்கைச் சக்கரவர்த்தியெனப் பின்னொருநாமம் வழங்கப்பட்டது.

இவ்வாறு சக்கரவர்த்தியும் மந்திரியும் ஐக்கியமாய் அரசாட்சிசெய்து குடிகளுக்குவேண்டிய தானியங்களை இங்கே விளைவிக்கும்படி கமக்காரரையேவி அவர்களுக்குவேண்டிய உதவிகள்புரிந்து குளம் வாய்க்கால்களை அமைத்துவைத்தனர். அதனால் யாழ்ப்பாணத்திலே பல செந்நெற்கழனிகளுண்டாகவும், நல்விளைவு அதிகப்படவும் ஏதுவானது. இப்படி அரசாட்சி நடத்திவரும்போது ஓர்முறை சக்கரவர்த்தியும் மந்திரியும் கீரிமலைக்குச்சென்று அங்குள்ள நன்னீரருவியில் தீர்த்தமாடி, சிவாலயதரிசனஞ்செய்து திரும்பிவரும் வழியில் மாவிட்டபுரக் கந்தசுவாமிகோவிலைத் தரிசித்து,பெரியமனத்துள்ளார் பேரனும், சிதம்பரதீக்ஷிதரின் மகனுமாகிய சின்னமனத்துள்ளாரிட்ட,விருந்தருந்தி யிளைப்பாறினர். அவ்விருந்து மிக உச்சிதமாயிருந்தமையால் புவனேகவாகுவென்னும் மந்திரி தமது கலைத்திறத்தினால் அவ்விருந்திற் பரிமாறிய ஒவ்வொரு பதார்த்தத்திற்கும் ஒவ்வொரு பாட்டுப்பாடினரென்ப. அவர்பாடியவற்றுள் இருபாக்களை இதன்கீழ்த்தருகின்றேம்.

வெண்பா.

இன்னமுதம் விண்டுவிண்ணோர்க் கீந்த செயலிதுவாம்
மன்னவனுந் தொக்க வருதினியு—நன்னருண
அன்னமளித் திந்நாளிவ் வாதரவு தந்துநின்ற
சின்ன மனத்தான் செயல்.

சின்ன,மனத்தான் செயும்விருந்திற் சாற்றுரிசி
அன்னதனை விண்ணோ ரறிந்திருந்தால்—முன்னலைவாய்
வெற்பதனைக் காவியுய்த்து வேலைகடைந் தேயலைத
லற்பமெனத் தள்ளுவரோ யாம்.

இப்பாட்டுகளைக் கேட்டுச் சக்கரவர்த்தியும் மிகமகிழ்ந்து அக்கோவிலைப்பற்றிய ஒழுங்குகளையும் நிறைவேற்றிக்கொண்டு

தனது அரசிருக்கை ஸ்தானமாகிய நல்லூர்ப்பதிசேர்ந்தனன். சிலநாட்களின்பின்னர் கயிலைப்பதியென்று அழைக்கப்பட்ட அவ்விடத்திலேயிருந்த கயிலைவிநாயகர் கோவிலுக்குப் பக்கத்திலே கயிலைநாதர், கயிலைநாயகியம்மை கோவில்களை மிகவிசேடமாய் விளங்கக் கட்டுவித்து முச்சபைகளையும், தேவர்களிருப்பிடங்களையும், உக்கிராணசாலை, யாகசாலை, அக்கிராரம், தேரோடும்வீதி, அன்னசத்திரம், சுற்றுமதிற் கோபுரங்களாதியயாவற்றையும் இயற்றுவித்து, கேதாரத்திலே மன்மதன்பூசித்த ஆதாரலிங்கத்தை அழைப்பித்துவைத்துப் பாண்டியஅரசரின் கீழ் முதற்பாளையத் தலைவனுகவிருந்து இராமநாதபுரத்தை யரசாண்ட சேதுபதியுஞ் சமுகமாயிருக்கப் பிரதிட்டைசெய்து கங்காதர ஐயரையே பூசைசெய்ய ஏற்படுத்தி நித்தியநைமித்திக பூசைகள் ஒழுங்காய் நடைபெறச்செய்தனன். இவ்வரசன் மதாபிமானியுஞ் சனேபகாரியுமாய் நல்லூரிலேவசித்து நெடுங்காலம் அரசாண்டு தன்குமாரனுகிய குலசேகர சிங்கையாரியனுக்கு இராச்சியத்தை ஒப்புவித்து முடிசூட்டி அரசாளவைத்து நல்ல விருத்தாப்பியவயசில் இச்சீவியஓட்டத்தை முடித்தனன்.

2. குலசேகரசிங்கையாரியச்சக்கரவர்த்தி— விசய கூழங்கைச்சக்கரவர்த்தியின் மரணகாலத்தையும், அவன்மகனுகிய குலசேகரச் சிங்கையாரியச்சக்கரவர்த்தி காலத்தையும், சரியாய்க் குறிக்கப் போதிய நிச்சயமான ஆதாரம் இன்னும் எங்கைக்கெட்டவில்லை. ஆயினும் 'இலகியசகாப்தம் எண்ணூற்றெழுபதாம்' என்ற பாட்டின்படியும், நாம் மேலேகுறித்தபடியும் விசய கூழங்கைச்சக்கரவர்த்தி யாழ்ப்பாணம்வந்து நல்லூரைத் தலைநகராக்கி அரசாளத்தொடங்கியகாலம் கி. பி. 950 என நிதானித்தல் சரியாகும். ஆயின் மெல். முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் தம்மதுசரித்திரத்திலே அப்பாட்டிற்கு விபரீதார்த்தங்கூறி சிங்கையாரியச்சக்கரவர்த்தி கி. மு. 60இல் மரித்ததாகக் குறிக்கின்றனர்.* அவர்குறிப்பு முழுப்பிழையென்பதையும், எமதுநிதானிப்புச் சரியென்பதையும் பின்வருவனவற்றுற் றெளிக.

* சிங்கையாரியன்காலம் கி. மு. 101 முதல், கி. மு. 60வரையிலெனக் காட்டியிருக்கிறது. ஆயின் கயிலாசமாலையிற்கண்ட பாசுரத்தின்படியும், வைபவமாலையின்படியும் "யாழ்ப்பாணச் சரித்திரத்திலே"யே எடுத்தாளப்பட்ட அரசர்வரிசையின் கணக்குப்படியும், அவன்காலம் அவ்வளவு பின்னிட்டாதல்கூடாது. முன்சொல்லியபடி கி. பி. 950 வரையிலே சிங்கையாரியன் காலமென்பது பொருந்தும். பறங்கிக்காரர் காலத்துக்கு முற்பட்ட

யாழ்ப்பாண அரசர்களின் வரிசை பின்வருவதுஎனத் தோற்றுகின்றது.

1. சிங்கைஆரியன் அல்லது கூழங்கைச்சக்கரவர்த்தி கி. பி.950 வரை.
2. குலசேகர சிங்கைஆரியன்.
3. குலோத்துங்க சிங்கைஆரியன்.
4. விக்கிரம சிங்கைஆரியன்.
5. வரோதய சிங்கைஆரியன்.
6. மார்த்தாண்ட சிங்கைஆரியன்.
7. குணபூஷண சிங்கைஆரியன்.
8. வீரோதய சிங்கைஆரியன் 1458 வரை.
9. செயவீர சிங்கைஆரியன்.
10. குணவீர சிங்கைஆரியன்.
11. சப்புமால்குமாரன் 1527 வரை.
12. கனகசூரிய சிங்கைஆரியன்.
13. சிங்க பராாசசேகரன் 1530 வரை.

சிங்கைஆரியன்காலம் 950 வரையிலென்றும், சிங்க பராாசசேகரன்காலம் 1530 வரையிலென்றும் வைத்துக்கொள்ளும்போது, இக்காலத்துள் 13 அரசர்கள் ஆண்டார்களென்பது: இடையீடுபட்டுக் கழிந்தகாலமும் சிறிது இருந்ததெனில்,நம்பத்தக்கது." (ச. பா.)

இவற்றால் சிங்கையாரியச்சக்கரவர்த்தி கி. பி. 950ல் அரசாளத் தொடங்கினனென்பது தெளிவாகும். அவன் நீண்டகால அரசுசெய்தவன். ஏறக்குறைய கி. பி. 1000 ம் ஆண்டில் அவன்மகன் இராசாவாகியிருக்கலாமென்பது நாம் அறிந்த சம்பவக்காலங்களினல் ஒப்புக்கொள்ளப்படக் கூடியதாம்.

குலசேகர சிங்கையாரியன் அரசாட்சிமுறைகளை யின்னுந் திருத்திக் குடிகள் பிரியப்படத்தக்கதாய் நடந்து சமாதான அரசாட்சிசெய்து தேசநன்மைக்கேதுவான பலகாரியங்களை நடப்பித்துத் தன்மகன் குலோத்துங்க சிங்கைஆரியனுக்கு அரசாட்சியை ஒப்பித்துச் சிலகாலம் நோயினல்வருந்தித் தேகவியோகமாயினன்.

3. குலோத்துங்கசிங்கையாரியன்.— இவன் அரசாட்சியை யேற்று தந்தைநடந்த வழியில்நடந்து சனங்கள் சந்தோஷங்கொள்ளத்தக்கதாய்ச் சமாதானம்பெருக எவரையும் அன்னைபோலாதரித்து நல்லரசுநடத்திவந்தனன். இவனது காலத்தில்

காடுகள்பல திருத்தப்பட்டு நல்ல வயனிலங்களாகப் பண்படுத்தப்பட்டன. அதனுல் தேசவருமானமும், அரசிறையும் அதிகரிக்கும்படி செய்தான். இப்படியே பலவருடங்களாய்ச் செங்கோல்செலுத்திய இவ்வரசன் நல்லமுதிர்வயசில் இச்சீவியவோட்டத்தைமுடிக்க, அவன்மகன் விக்கிரமசிங்கையாரியன் பட்டாபிஷேகம்பெற்றுச் சக்கரவர்த்தியாயினன்.

4. விக்கிரமசிங்கையாரியன்—இவன் இராச்சியபரிபாலனஞ் செய்து வருங்காலத்திலே குடியேறியிருந்த சிங்களவருக்குந் தமிழருக்குஞ் சமயகாரியங்களையிட்டு ஓர் பெரும் கலகமுண்டானது. அக்கலகத்தில் சிங்களவர் மூர்க்கவெறிகொண்டு தமிழருள் இருவரைக்கொலைசெய்தும், பலரைக் காயப்படுத்தியும் முரட்டுக்குணங்காட்டி நின்றனர். அதையறிந்தஅரசன் சேனுவீரரையனுப்பிச் சிங்களவரைப்பிடித்து விசாரணைபண்ணி அக்கலகத்துக்குத் தலைவனுயிருந்த புஞ்சிவண்டாவென்பவனையும, அவன்கூட்டாளிகள் அறுபத்தேழுபேரையுங் கொலைசெய்வித்துப் பின்னுஞ்சிலரைச் சிறையிலிடுவித்தான். அப்பொழுது இங்கேவாசம்பண்ணிய சிங்களவரிற் சிலர் ஒழித்து இந்நாட்டைவிட்டு வலசைவாங்க, எஞ்சியோர் அரசன் தமிழரில் அதிகம் பட்சங்காட்டி நடந்தமையால் அவன்மீது வெறுப்புடையராயிருந்தும் ஒருவாறு அடங்கிநடந்தனர். இவனுக்குப்பின் இவன்மகன் வரோதய சிங்கையாரியன் சக்கரவர்த்தியாயினுன்.

5. வரோதயசிங்கையாரியன்—இவன் சிங்காசனமேறிச் சிங்களவர் தமிழர் இருபாலார்க்குஞ் சமயஇட்டங்கொடுத்து மார்க்கவழிபாடுகளைக்குறித்துச் சில பிரமாணங்களேற்படுத்தி, பிறர் சமயதூஷணஞ்செய்து கலகம்புரிவோர் எவரும் கடுந்தண்டனை பெறுவரெனவிதித்து, இருதிறக்குடிகளையுஞ் சமாதானப்படுத்திப் பட்சமாய் அரசாண்டுவந்தனன். இவன் அரசாண்டு தேகவியோகமாக இவன்மகன் மார்த்தாண்ட சிங்கையாரியச்சக்கரவர்த்தி அரசியற்ற ஆரம்பித்தனன்.

6. மார்த்தாண்டசிங்கையாரியன்— இச்சக்கரவர்த்தி கல்விவிருத்திக்கும், வேளாண்மைவிருத்திக்கும் ஏற்ற பல நன்முயற்சிகளைச் செய்தனன். தன்காலத்தில் வன்னியரால்வந்த கலகங்களையடக்கிச் சமாதானப்படுத்தினன்.

வன்னிநாடு— குளக்கோட்டன் வன்னியர்சிலரைக் கொணர்ந்து குடியேற்றிய வரலாற்றை முன்கூறினேம். காலத்துக்குக்காலம் இன்னும் பலவன்னியர்வந்து குடியேறினர். இவ்வன்

னியர் குடியேறியநாடு வன்னிநாடெனப்பட்டது. வன்னியருடன் அவர்களுக்குக்கீழ் ஏவற்காரரும், உதவிக்காரருமாய்ப் பலர்வந்து அந்நாடுகளில் குடியேறினர். அவ்வன்னியருட் சிலர் தலைமைபெற்று அந்நாட்டைத் தமக்குள்ளேபிரித்து அரசாண்டுவந்தனர். இந்த வன்னியருக்கும் ஆரியச்சக்கரவர்த்திகளுக்குமிடையில் காலத்துக்குக்காலம் யுத்தம் நடந்துவந்ததை இச்சரித்திரம் தெளிவாகவிளக்கும். இக்காலத்தில் காடாயிருக்கும் இந்நாடு முற்காலத்தில் செந்நெற்கழனிகளாய்ச் சிறந்துவிளங்கிற்று. கழனிகளுக்கு இடையிலிருக்கும் பலகுளங்களினால் நீர்ப்பாய்ச்சப்பட்டு நல்விளைவைக்கொடுத்தது. அதனால் வன்னியர் நற்பலன்பெற்று ஐசுவரியமடைந்து செருக்குற்று ஆரியச்சக்கரவர்த்திகளுடனும், சிலவேளை சிங்கள அரசருடனும் செருச்செய்துவந்தனர். தயாளகுண பூபதியாய்விளங்கிய இவ்வரசன் பிரசைகளைத் தாய்போலாதரித்து நல்லரசாட்சிபுரிந்து மரணமடைந்தனன். இவன் மரித்ததினத்தில் தமிழர் சிங்களவராகிய இருதிறக்குடிகளும் துக்கசாகரத்தில் மூழ்கி, அன்னைபோல் எம்மையாதரித்துக்காப்பாற்றிய அன்புடைய அரசனை எப்போதுகாண்போமென்று மிகநொந்து யாவரும்புலம்பினர். இவன் முத்துக்குளிக்கும் கடலையும், தனதாக்கி முத்துக்குளிப்பித்து வந்தானென்று மெல். முத்துத்தம்பிப்பிள்ளை கூறுவதற்கு ஆதாரங்காணோம்.

மார்த்தாண்ட சிங்கைஆரியச்சச்கரவர்த்திதன்காலத்திலே ஓர் கடற்படைவைத்து நெடுந்தீவில் வெடியரசனை அமைத்தானெனவும், இக்காலத்தில் மீகாமன் நாகஇரத்தினம் எடுக்கவந்தபொழுது அவனுக்கும் இவனுக்கும் யுத்தம்நடந்ததாகவும் மெல். ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை குறிப்பது சரித்திரத்தோடு முன்பின் தொடர்புடையதாய்ச் சற்றும் ஒத்துப்போகவில்லை. அவர்புத்தகத்து 20-ம் பக்கத்திலே தனிநாயகமுதலியை நெடுந்தீவுக் கதிபதியாக்கினனென்று சொன்னவர், 25-ம் பக்கத்தில் வெடியரசனைக் கடற்படைக் கதிபனாக நெடுந்தீவிலே வைத்தானென்பது ஒன்றற்கொன்று மாறன்றோ. நாம் முன்காட்டியபடி ஆரியச்சக்கரவர்த்தி அரசாளத் தொடங்கியகாலம், கி. மு. 101 இல் அல்ல. கி. பி. 950 இல். ஆதலால், மீகாமன் சரித்திரம் இச்சக்கரவர்த்திகாலத்திலல்ல முன்னர் வரவேண்டுமென்பது தெளிவு. அச்சரித்திரம் ஆரியச்சக்கரவர்த்திகளின் அரசுக்குமுன் நடந்ததென ஒப்புக்கொள்ளுதலே சரியாம்.

7. குணபூஷணசிங்கைஆரியச்சக்கரவர்த்தி— இவன் முடிதரித்துத் தன் நாமகரணப்படி நற்குணங்களையே தனக்கு விசேட

ஆபரணமாகப்பூண்டு, தன்பிதாவிலும் அதி தயாளகுணமுள்ள வனுகக் குடிகளைப் பாரபட்சமின்றிச் செவ்வையாய் அரசாண்டுவந்தான். இவன்காலத்திலே கல்வி, செல்வம் விருத்தியடைய விசேஷமுயற்சிகள் செய்யப்பட்டன. செல்வவிருத்திக்கேதுவான பயிர்த்தொழில், கைத்தொழில், வர்த்தகம் என்பன இக்காலத்தில் முன்னையிலும்பார்க்க அதிகமாய் நடைபெற்றன. காஞ்சிபுரத்திலிருந்து கைக்கோளரை யாழ்ப்பாணம் வரவழைத்து அவர்களைக் குடியிருத்தி அவர்கள்மூலம் வேண்டிய வஸ்திரங்கள்செய்யுமாறு செய்தவன் இவனென்பர். கைக்கோளர் யாழ்ப்பாணத்திற் குடியேறியது பெரும்பாலும் ஒல்லாந்தர்காலத்திலேயே என்பது சரித்திர நூற்றுணிபு. நெய்தற்றொழில்வரவே அதற்கேதுவாய பருத்திச்செய்கையும், இந்த அரசன் மூலம் இவ்விடத்தில் ஆரம்பமானதுஎன்பர். இவ்வாறு கூறுவோர் சாயவேலைக்காரர், சித்திரவேலைக்காரரையும் இந்தியாவிலிருந்து இவனேயழைத்து அவர்கள்மூலம் அத்தொழில்களை இங்கே விருத்தியாக்கினுன் என்பர். அச்சித்திரக்காரர் தோகைவிரித்தாடும் மயில்வடிவச் சிங்காசனமொன்றியற்றி வைத்தனர் என்பர். இக்காலத்திற்தான் ஆரியகுளம் வெட்டப்பட்டது.

இந்தஅரசன் பலவருடங்களாய்ச் செங்கோல் செலுத்திய பின் கடுமுயற்சியினுலுஞ் சடப்பெலன் குன்றியதினுலும் இராச்சியம்புரியவியலாது தனதுமகன் வீரோதய சிங்கையாரியனுக்குச் சிங்காசனத்தை ஒப்பித்துச் சிலகாலம் ஆறியிருந்து பூரணஆயுசுபெற்றுத் தேகவியோகமடைந்தான்.

8. **வீரோதயசிங்கையாரியச்சக்கரவர்த்தி.**— வீரோதய சிங்கையாரியன் அரசியலைச் செவ்வையாய் நடத்திவருங்காலத்திலே வன்னியர் சிங்களவரைக் கலகஞ்செய்யுமாறு தூண்டிவிட்டனர். அவ்வாறு அடிக்கடி கலகமெழுப்பிவந்த சிங்களவரைத் தன்து பராக்கிரமத்தினுல் அடக்கி, அக்கலகத்தை எழுப்பிவிட்ட வன்னியர்மீது படையெடுத்துச்சென்று ஏழுவன்னியையுங் கொள்ளையடித்து அவர்கள்கர்வத்தை அடக்கித் தனது இராசதானிக்குத்திரும்பினுன். ஆணவங்கொண்டு கலகம்பண்ணிய சிங்களவர் இடியேற்றைக்கேட்ட நாகம்போல் அஞ்சி அவனதுபாதத்தில் வீழ்ந்து கிடந்து அபயமிட்டதால் அரசன் அவர்களுக்கு மன்னிப்பருளி நன்முகங்காட்டிப் பட்சமாய்ப் பரிபாலித்துவந்தான். இவன்காலத்திலே மதுராபுரியிலிருந்து அரசியற்றிய சந்திரசேகரபாண்டியன் சத்துருக்களுக்குத்தோற்று அரசிழந்து யாழ்ப்பாணம்வந்து வீரோதயனைச் சரணடைந்து தனதுஇராச்சியத்தை மீண்டும்பிடித்து அரசாட்சிபுரிய உதவி

செய்யும்படி வேண்டினன். இவ்வாரியச்சக்கரவர்த்தியும் அவன் வேண்டுதற்படி இணங்கித் தனது சேனைகளைத்திரட்டிச் சேதுபதிமுதலாய வீரரோடு மதுரைநகர்சென்று அதனைவளைந்து பாண்டியனுடைய சத்துருக்களை எதிர்த்துப்போராடி அவர்கள் புறங்காட்டியோடும்படி பெரும்போர்புரிந்து ஜெயபேரிகைமுழக்கிப்பாண்டியனை மீண்டும் அரசுபுரியவைத்து யாழ்ப்பாணந்திரும்பினன்.

பாண்டியன் இந்தஉபகாரத்துக்குப் பதிலாகப் பெருந்திரவியத்துடன் மல்யுத்தத்தில்வல்ல சில கன்னடரையும், மறவரையும், வில்வித்தையிற்சிறந்த சிலவீரரையும், சிலவேடரையும் ஆரியச்சக்கரவர்த்திக்கு அருளினன்.

மறவன்புலம்.—ஆரியச்சக்கரவர்த்தி அம்மறவரை மறவன்புலவிலிருத்தினன். வேடரை வேடுவன்கண்டியி லிருத்தினன். இவன் அவ்விடமிருந்து பல தொழிலாளரையுங் கொணர்ந்து நாட்டுக்கு அவசியமான தொழில்களை இங்கே பயிற்றும்படி ஒழுங்குசெய்தான். கன்னடர் மாவிட்டபுரத்திலே யிருந்தனர். இவ்வரசன் பாண்டியதேசஞ் சென்றிருந்ததை வன்னியரறிந்து அவன் தங்கள்மேல் இன்னும் படையெடுத்துவரக் கூடுமென்றஞ்சி யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றத்துணிந்து சிங்களவரசனிடஞ்சென்று தங்கள்நோக்கம் சரியாய்நிறைவேறத் துணைசெய்யவேண்டுமென்று கெஞ்சினர். அவனோ என்முன்னோர் ஓர் குருடனுக்குப் பரிசாகக்கொடுத்த அந்நாட்டுக்கு விரோதமாய்ப் படையெடுத்து அந்நாட்டையழித்து எங்குலத்துக்கு அபகீர்த்திவருவிக்கமாட்டேனென்றுகூறி மறுத்தனன். இதைக்கேள்வியுற்ற வன்னியர் தாமெண்ணியகருமம் சித்தியடையாததைக்கண்டு மிகக்கவலையுற்று விரோதயனுடன் சமாதானமாய் வாழ்வதே தமக்குப் பாக்கியமெனயோசித்து அவனைச் சாந்திசெய்யும்படி அதிக திரவியங்கொண்டுவந்து கொடுத்து அவன் கடாட்சம்பெற்றுத் திரும்பினர். இந்த வெற்றிவேந்தன் தூரிகையில் போசனஞ்செய்து சப்பிரமஞ்சத்தில் நித்திரைசெய்கையில் சடுதியாய் ஆடவப்பிராயத்தில் மரித்தனன். அவன் மரணகாரணம் ஒருவருக்குந் தெரிந்திலது. அவன் மரித்தபின் அவன்மகன் செயவீரசிங்கையாரியன் சிறுவயசிலே முடிசூட்டப்பெற்றனன்.

9. **செயவீரசிங்கையாரியச்சக்கரவர்த்தி.**— சிறுவயசிலே முடிதரிக்கப்பெற்று அரசுரிமையடைந்த இச்சக்கரவர்த்தி மிகுந்த விவேகசாமார்த்தியத்துடன் அரசியல்நடத்திச் சத்துருபய

மின்றிப், பிரசைகளினன்புற்றுச் சந்தோஷமாய்வாழ்ந்து செங்கோல்புரிந்துவந்தனன். இவ்வரசனுக்கும், இலங்கையரசனாகிய புவனேகவாகுவுக்கும் முத்துக்குளிப்பையிட்டு ஓர் விவாதமுண்டானது. அதனால் ஆரியச்சக்கரவர்த்தி தன்சேனைகளைச்சேர்த்து புவனேகவாகுவுடன் யுத்தம்பண்ணி அவன்சேனைகளையடக்கி வெற்றியடைந்து கி. பி. 1458இல் இலங்கைமுழுவதையும் தன்னரசுக்குளாக்கி ஒருகுடைக்கீழ் பன்னிரண்டுவருஷகாலமாய் அரசுபுரிந்துவந்தனன்.

இந்தஅரசனுடன் யுத்தஞ்செய்த புவனேகவாகு ஆறும்புவனேகவாகுவாயிருக்கலாம். பன்னிரண்டாம் வருஷமுடிவில் பராக்கிரமவாகுவென்னும் அரசன் வருடந்தோறும் ஒழுங்காய்த்திறைதருவேனென்று வாக்குப்பண்ணிப் பாண்டியஅரசனைப் பிணைவைத்து, செயவீரசிங்கையாரியனிடம் இலங்கை இராச்சியத்தைப்பெற்று வருடந்தோறும் ஒழுங்காய்த் திறைகொடுத்துவந்தான். இவன் நெடுங்காலம் மிகுந்த கீர்த்திப்பிரஸ்தாபத்தோடு நல்லரசைநடத்தித் தனதுகுமாரன் குணவீரசிங்கையாரியனிடத்தில் இராச்சியத்தைஒப்பித்துப் பூலோகசீவியத்தை முடித்தனன்.

10. **குணவீரசிங்கையாரியச்சக்கரவர்த்தி.**—குணவீர சிங்கையாரியச்சக்கரவர்த்தி இராச்சியப்பொறுப்பையேற்று மக்கட்பயிர்செழிக்கவும், யாவரும் மெய்ச்சிக்கொள்ளவுந் தக்கதாய்த் தன்பிதாவிலும் அதிகவிசேஷமாய் அரசுபுரிந்தனன். இவன்பிதா மரித்தபின் இலங்கையரசனாகிய பராக்கிரமவாகு முன் ஒழுங்காய்க் கொடுத்துவந்த திறையைக்கொடாது நிறுத்தினன். அதனால் இச்சக்கரவர்த்தி மிகுந்த வீரதீரத்துடன் அவனோடு சமராடிச் சிலபகுதிகளைப்பிடித்துத் தமிழ்க்குடிகளை அங்கேயிருத்தித் தன்னாணையைச்செலுத்தினான். மதுரையில் அரசாட்சிபுரிந்த நாயக்கர்களுக்கும் வேண்டிய பலஉதவிகளைப் புரிந்துவந்தான். இவன் தனதுநகரத்து வீதிகளைத் தினந்தோறுஞ் சுத்திசெயயும்பொருட்டுத் துரும்பரையழைத்து நகர்ப்புறத்தே குடியிருத்தி அவர்கள்மூலம் நகரத்தை நாள்தோறும் இராவிலே சுத்திசெய்வித்தானென்றும் சிலர்கூறுகின்றனர். நல்லூரிலே அக்காலத்திலே அந்தணர், செட்டிகள், வேளாளர், கன்னார், தட்டார், கைக்கோளர், சாயக்காரர், உப்புவாணிகர், சிவிகையாராதிய வகுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருதெருவாக அறுபத்துநாலு தெருக்கள் இருந்தன. அம்பட்டர், வண்ணார், நளவர், பள்ளர், பறையர். துரும்பராதியோர் நகருக்குப்புறத்தே வசிக்க இடம்பெற்றனர். இவ்வகையாய் நல்லரசுபுரிந்து

வந்த இச்சக்கரவர்த்தி வயோதிககாலத்தில் தன்மகன் கனக சூரிய சிங்கையாரியனுக்குப் பட்டத்தைச்சூட்டி மரணமடைந் தனன்.

**11. கனகசூரியசிங்கையாரியச்சக்கரவர்த்தி.**— இவ்வரசன் சிங்களவருக்கு அதிக இட்டத்தைக்கொடுத்து மேன்மையாக நடத்தினான். அதனால் சிங்களவர் மிகஅகங்காரங்கொண்டு வன்னியர்களின் உதவியையும்பெற்றுக் கலகஞ்செய்தனர். அரசன் இரவிலே தன்மனைவிமக்களுடன் அரண்மனைப் புறக்கதவாலோடித் தோணியேறிப்போய் தொண்டைநாட்டிலுள்ள திருக்கோவிலூரையடைந்து தனதிருகண்விழிகளொத்த புத்திரராகிய பரராசசேகரனையும் செகராசசேகரனையும் அங்கே கலைபயிலவைத்துத் தன்தேவியுடன் காசிநகர்பரியந்தஞ்சென்று ஸ்தலதரிசனஞ்செய்து தீர்த்தமாடிப் பின் திரும்பிவந்து கோகர்ணத்திற்றங்கி சிவராத்திரிவிரதம் அனுட்டித்து முடித்தபின் மைந்தரைக் காணத் திருக்கோவிலூருக்கு வந்தான்.

அரசனோடியதையறிந்து விஜயவாகுவென்னுஞ் சிங்களவன் யாழ்ப்பாணத்துக்குத் தானே அரசனென்று சொல்லிப் பதினேழுவருடம் யாழ்ப்பாணத்தை அரசாண்டு தமிழ்க்குடிகளைவருத்தி அவர்கள் உடைபாவனை ஆராதனையாவற்றிலுந் தன்சாதியாரைப் போலாகவேண்டுமென்று கட்டாயம்பண்ணி அதற்குக் கீழ்ப்படியாதவர்களைத் தண்டித்துவந்தனன். இக்காலத்தில் இவ்விடத்திற் பல புத்தாலயங்களுண்டாயின. அதனால் யாழ்ப்பாணத்தின் பலவிடங்கள் புத்தர்கோவிலடியென அழைக்கப்படுகின்றன. சிலவிடங்களிலே பிற்காலத்திலே புத்தவிக்கிரகங்களும் கண்டெடுக்கப்பட்டன. சிலகாலத்துக்குமுன் கந்தரோடையில் புதைந்துகிடந்த புத்தவிக்கிரகமொன்று வெளிப்பட்டது இக்காலத்தார் அறிந்தஉண்மையாம்.

யாழ்ப்பாணத்தின் பலவிடங்கள் சிங்களப்பெயரால் வழங்கப்படுகின்றன. உடுவில், கொக்குவில், கோண்டாவில், மிருசுவில், மானிப்பாய், சண்டிருப்பாய், கோப்பாய், மல்லாகம், சுன்னாகம், கொடிகாமம், முதலியனவாம். இந்நாமங்கள் இக்காலத்தில் சிங்களவராலிடப்பட்ட பெயர்களாம். இவைகளைக்குறித்த விபரங்கள் பின்னாற்காட்டப்படும்.

இவ்வகையாக விஜயவாகு அரசியற்றி வரும்பொழுது தமிழர் தமக்கு எப்போது நற்காலம்வருமெனக் காத்திருந்தனர்.

[குறிப்பு— கனகசூரிய சிங்கைஆரியனின்காலச் சம்பவங்கள் சில சிங்களச்சரித்திரத்தின் மூலமாய் அறியக்கிடக்கின்றன. அவற்றை ஈண்டுக்குறிப்போம். புவனேகவாகு 1347–ம் ஆண்டில் சிம்மாசனமேறியவன். இவன் இலங்கைத் தென்புறத்திலே சீனரால் தாக்குண்டு வலியிழந்திருக்க ''அளகேஸ்வர மந்திரி''யே முக்கியமாய் வடபாகத்தை ஆண்டுவந்தனன். புவனேகவாகு கம்பளை நுவரையில் தென்பாகங்களை ஆண்டுவந்தான். புவனேகவாகுவின் மெலிவைக்கண்டுபோலும் ஆரியச்சக்கரவர்த்தியின்கீழ் யாழ்ப்பாணத்தார் சிங்களவரைச்சருவி அவர் நாடுகளிற் பலபிடுங்கிக்கொண்டு மேலும் சிங்களவரை ஒடுக்கப் பிரயத்தனஞ்செய்தனர். (ராஜாவளி) அளகேஸ்வரமந்திரி தமிழரை அடக்கக்கருதி ஜயவர்த்தனகோட்டையை அரண்செய்து புதுக்கிவைத்தான். அப்பால் சிங்களநகர்களிற் திறை அறவிடப்போயிருந்த தமிழரைத் துரத்திவிட்டான். ஆரியச்சக்கரவர்த்தி இதுகண்டு சோழநாட்டினின்றும் பலஆயிரம் சேனுவீரரைவரித்துக்கொண்டு கம்பளைநுவரையையும் ஜயவர்த்தனகோட்டையையும் ஒருங்கே எதிர்த்தான். கடலாற்சென்ற சேனை கொறக்கானைக்கும் ஜயவர்த்தன கோட்டைக்குமிடையிற் பாளையமிட, கரையாற்சென்றசேனை மாத்தளையிற்றங்கிற்று. புவனேகவாகு வெருண்டுவலசைவாங்கினுன். ஆயினும் அவன்சேனுவீரர் திடன்கொண்டு தமிழரைச்சருவி ஆயிரவரை இயமலோகம்போக்கினுர். அளகேஸ்வர மந்திரியும் யானைமீதிவர்ந்து தன் சேனுசமுத்திரத்தோடுசென்று தமிழரை முதுகுகாட்டச்செய்து கொல்லம்தோட்டை (இது கொழும்பின் பழையபெயர்)யிலும் பாணந்துறைத்தோட்டையிலும், கிடந்த தமிழரின் கப்பற்படையையும் பரிநாசஞ்செய்துவிட்டான்.

1415இல் ஶ்ரீபராக்கிரமவாகு (6–வது) அரசனுனன். இவன் முன் றுகமத்திலும், பின் ஜயவர்த்தன கோட்டையிலும் அரசியற்றினவன். இவன்மக்கள் சப்புமால்குமாரன்; அம்புலுகலகுமாரன், உலகுடையதேவி என்பவர்கள். (செல்விகினிசந்தேசம்) சப்புமால்குமாரன் பதினெட்டுவன்னியரும் பராக்கிரமவாகுவுக்குத் திறைகொடுத்தாளச்செய்து அப்பால் யாழ்ப்பாணத்திற் படையெடுத்து பலநகர்களை அழித்துவிட்டுத் திரும்பினுன். பின்னொருகால் அவன் தமிழரையொடுக்கப் படையெடுத்து யாழ்ப்பாணப்பட்டினத்திற் புகுந்தான். புகுதலும் வடகரைச்சோனகரும், ஆரியச்சக்கரவர்த்தி புறமாய் யாழ்ப்பாணத்தமிழரோடு அணிவகுத்துநின்று போராடினர். வடகரைச்சோனகனொருவன் பதிவிருந்து சப்புமால்குமாரனையும் அவன் ஏறிவந்த புரவியையும் ஒருங்கே கொல்லஎத்தனித்திருக்க கு

மாரன்' இதை ஊகித்துக்கொண்டு சோனகனைத் தன் ஈட்டியா ற்குத்தித் துவசம்போற் பிடித்தபடி யாழ்ப்பாணநகரின் நாலு வீதிகளையுஞ்சுற்றிப் பவனிவர ஆரியச்சக்கரவர்த்தியின் வீரர் கள் அல்லோல கல்லோலப்பட்டோடினர். வீரர்கள்யாவரையும் அங்கங்கே வலையிற்படுத்தும் மான்கூட்டங்களென்னப் பிடித்து "ஆரியவேட்டையாடும் பெருமான்" என்னும் பெயரைத்தரித் தவனும் ஆரியச்சக்கரவர்த்தியின் தங்கைமாரையும் வெற்றிவி ருதாக இட்டுக்கொண்டு யானை, குதிரை இன்னும்பல திரவி யங்களோடு பராக்கிரமவாகு மகாராசன் சமுகஞ்சென்றான். பி ன் யாழ்ப்பாணத்துக்குமீண்டு சிங்காசனமேறி அரசியற்றினன். யாழ்ப்பாண வைபவமாலையின்படி குணவீர சிங்கையாரியன்ம கன். கனகசூரிய சிங்கையாரியன் சிங்களவரால் முரியடிக்கப்ப ட்டு வடகரைக்கு ஒளித்தோடினவனாகக் காணப்படுகிறான். ரா ஜாவளியின் சரித்திரம், சப்புமால்குமாரன் ஆரியச்சக்கிரவர்த் தியைவென்ற சம்பவத்தையன்றி அவனைக்கொன்றதாகக் கூறு தொழிந்தது. ஆதலால் கனகசூரிய சிங்கையாரியனே சப்புமா ல்குமாரனால் வலியிழந்து தோற்றோடியவனென நாம் கொள் ளக்கிடக்கின்றது. அப்பால் சப்புமால்குமாரன் தன்பிதாமரிக்க ஜயவர்த்தன் கோட்டையரசைக் கைக்கொள்ளப் போயினன். (1460 அளவில்) அப்போதே யாழ்ப்பாண வைபவமாலைகூறும் விஜயவாகு என்னும் சிங்களவன் பிரதிராசனாய் யாழ்ப்பாண அரசை நடத்தியிருக்கலாம். (சா. ஞா.)]

11. **கனகசூரியசிங்கையாரியச்சக்காவர்த்தி.**— யாழ்ப்பாணநி லை இவ்வாறிருக்கத் திருக்கோவிலூரிலே தன்மைந்தரைக் கா ணும்படி வந்தஅரசன் தன்புத்திரர் தேகவளர்ச்சியிலும், கலை ப்பயிர்ச்சியிலும், போர்வலியிலும், புயபல பராக்கிரமத்திலும் வளர்பிறைபோல் வளர்ந்திருப்பதைக்கண்டு அவர்களைக் கட்டி த்தழுவி முத்தமிட்டு மிகுந்த சந்தோஷங்கொண்டாடினன். அ ன்னைதந்தையரைக்கண்ட பிள்ளைகளின்முகங்கள் சூரியனைக்கண் ட தாமரைமலர்கள்போல் மலர்ந்து பிரபைவீசின. சத்துருவை ச்செயிக்கவும், இராச்சியத்தை மீட்டுக்கொள்ளவுந் தனபுத்திர ர்கள்செய்த பிரயத்தனங்களைத் தந்தைகண்டு மிகக்களிப்புற்று த் தன்பிள்ளைகளுக்கு அவ்விடத்திலே அதிக உதவியாயிருந்த இராசகுடும்பத்தாருக்கும், கல்விகற்பித்த ஆசிரியர்களுக்கும் வேண்டிய விசேட உபசாரங்கள்புரிந்து விடைபெற்றுக்கொண் டு மனைவிமக்களுடன் மதுராபுரிக்குச்சென்றனன். அவ்விடமி ருந்து அரசுபுரிந்த சிற்றரசர்கள் அவனுக்குவேண்டிய சேனைக ளையும், ஆயுதங்களையும் சம்பாதித்துக்கொடுக்க அகமகிழ் ச்சியுடன் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு நன்றிகூறி அரசன்

மனைவிமக்களோடும், ஆயுதமணிந்த சேனைவீரருடனும் யாழ்ப்பாணம்வந்து மேற்குவாசல்வழியாக உள்ளேபுகுந்தான்.

கனகசூரிய சிங்கையாரியன் வரவைக்கண்ட தமிழ்க்குடிகள் ஆர்ப்பரித்து இதுவரைக்கும் விசயவாகுவினால் பட்டகஷ்டங்கள் இன்றோடு ஒழிந்தனவென்று சந்தோஷங்கொண்டு அரசன்படைக்குத் துணைநிற்கலாயினர். மின்னுமல் முழங்காமல் இடியிடித்தாற்போலக் காத்திராப்பிரகாரம் இவர்கள்வர விசயவாகுவுந் தன்சேனைகளைச் சடுதியாய்ச்சேர்த்து அஞ்சாநெஞ்சனாய் அணிவகுத்து வீரதீரத்தோடு எதிர்த்துச்சமராடினன். இருதிறவீரரும் நெருங்கிப் பெருஞ்சமராடிவரும்பொழுது பரராசசேகரனுஞ் செகராசசேகரனும் விசயவாகுவின் துணிவையும், அவன்புரியும் போர்வீரத்தையுங்கண்டு மிகவெகுண்டு வாட்படையுடனே போர்முனையில் சிங்கம்போற்பாய்ந்து விசயவாகுவின் சேனைகளை வெட்டிவருகையில், விசயவாகுவும் வாளாயுதங் காத்தேந்திப் பகைவர்சேனையைச் சங்கரித்தான். அதுகண்ட பரராசசேகரன் தன்னைவளைந்த சத்துருசேனையைப் பின்னிடச்செய்து விசயவாகுவுடன் யுத்தந்தொடுத்து அவனைத் தன்வாளாயுதத்திற்கு இரையாக்கித் தென்புலஞ்சாரவிட்டனன். விசயவாகுவின் வீழ்ச்சியைக்கண்ட சிங்களச்சேனை பின்னிட்டுச்சிதறி வேறுகவோடினர். யுத்தகளத்தில் ஆண்மையோடு போர்புரிந்து வெற்றிபெற்ற பரராசசேகரன் தன்பிதா அரசியற்றச் சிங்காசனபதியாக்கினான். தமிழ்க்குடிகள்யாவரும் மிகுந்த சந்தோஷமடைந்து இச்சக்கரவர்த்தியை வாழ்த்தி வணங்கி இன்புற்றிருந்தனர். பரராசசேகரன் தன்பிதாவை அரசியற்ற நிலைப்படுத்தியபின் விசயவாகுவுடன்கூடிய கலகக்காரரான சிங்களவர் சிலரைக்கொல்ல எஞ்சிய சிங்களவரிற் பலர் மிகப்பயந்து கண்டிக்குஓடினர். இவ்விடமிருந்த சிங்களவர் தமிழரசர்க்குப்பயந்து மிகுபத்திவிநயத்துடன் அவருக்குக் கீழ்ப்படிந்துநடந்தனர். சிங்களவருக்கு உதவியாயிருந்த வன்னியரும் இவ்வூரைவிட்டகன்று வன்னிநாடுசென்றனர்.

கனகசூரிய சிங்கையாரியச்சக்கரவர்த்தி சிலகாலம் செங்கோல்செலுத்தியபின் பரராசசேகரனுக்கு முடிதரித்து அவனைச் சிங்காசனத்தில்வைத்த. இளையகுமாரனாகிய செகராசசேகரனுக்கு இளவரசுப்பட்டஞ் சூட்டிவைத்துத் தான் சிலகாலம் இளைப்பாறிப் பின்னர் தேகவியோகமாயினன்.

12. **சிங்கைப் பரராசசேகரச் சக்கரவர்த்தி.**— பரராசசேகரன் குடிகளையாதரித்து அதி விவேகசாமார்த்தியத்துடன் நல்ல

ரசாட்சிபுரிந்துவந்தனன். இவன் முடிசூடுமுன் சோழவமிசத்தைச்சேர்ந்த இராசலட்சுமியென்னும் பெண்ணைத் தனது பட்டத்துத்தேவியாக மணம்புரிந்தனன். பின்னர் பாண்டிமழவன் மரபிற்பிறந்த அரசகேசரியின்புதல்வி வள்ளியம்மையெனும்பெண்ணை இரண்டாம்பத்தினியாக விவாகஞ்செய்தனன். மணக்குடியிற்பிறந்த மங்கத்தம்மாளை வைப்பாட்டியாக வைத்துக்கொண்டான். இவனுக்குப் பட்டத்துத்தேவியிடம் சிங்கவாகு, பண்டாரம் என்னும் இருபுத்திரர் பிறந்தனர். வள்ளியம்மையிடம் பரநிருபசிங்கனும், அவன்தம்பிமார் இருவரும், ஒருபெண்ணும் பிறந்தனர். அரசன் தன்குமாரர் கலைப்பயிற்சியிலும், யுத்தப்பயிர்ச்சியிலுஞ் சிறந்து நன்னிலையடையச்செய்தான். அவர்களுட் சங்கிலியென்பவன் ஆண்மையிலும், யுத்தவித்தையிலுந் தேர்ந்து கபடோபாயமும், துட்டநடையும், கபடம்விவேகமுமுடையவனாய் விளங்கினன்.

செகராசசேகரன் வித்தியாவிநோதனாய்க் கலைகளைக்கற்று கல்வியறிவிற்சிறந்த பண்டிதனாய் விளங்கினன். அவன் யாழ்ப்பாணத்திலே கல்வியை விருத்தியாக்கப் பலமுயற்சிகள்செய்தான். வடநாட்டிலுந் தென்னாட்டிலுமிருந்துகொண்டு சகலசாத்திரங்களையும் பிரபலப்படுத்தும்பொருட்டு வித்துவான்கள் பலர்சேர்ந்த ஒரு வித்துவசபையைக்கூட்டிப் பலநூல்களையாக்குவித்துத் தானுஞ் சோதிடஞ் செகராசசேகரமென்னும் நூல்களையியற்றினன். பரநிருபசிங்கத்தின் மைத்துனனும், பரராசசேகரனின் மருமகனுமாகிய அரசகேசரியென்னும் வித்துவசிரோமணி வடமொழியிலே காளிதாச மகாகவியியற்றிய இரகுவமிசமென்னும் நூலை வடமொழியிலிருந்து மொழிபெயர்த்துப் புராணநடையாகவியற்றி அந்நூலைத் திருவாரூருக்குக் கொண்டுபோய் அவ்விடத்திலேயுள்ள வித்துவசபையிலரங்கேற்றி அருங்கீர்த்திபெற்று விளங்கினன். செகராசசேகரன் தனது தமையன்பெயரைநாட்ட அவன்பெயரால் பரராசசேகரம் என ஓர்வைத்தியநூலையும் இயற்றினனெனச் சிலர்கூறுவர். இக்காலத்திற் கல்விப்பயிர் அதிகமாய்த்தழைத்தது.

அங்குமிங்கும் பலவித்துவான்கள் ஒருவர்பின்னொருவராய் எழும்பினர். செகராசசேகரன் பின்னும் பாண்டிநாட்டிலும், மற்றைய ஆதீனங்களிலுமிருந்து பல சாஸ்திரநூல்களை எடுப்பித்துச் சேதுக்கரையிலிருந்து எழுதுவோர்க்குப் படிகட்டி எழுதுவித்துக்கொண்டுவந்து அந்நூல்களை இந்நாட்டில் அதிகமாய் விருத்தியாக்கினன். இவற்றால் இந்நாட்டில் கல்வி விருத்தியடைந்துவந்தது.

இவர்கள் தம்முன்னோர்பாவித்துவந்த சிங்கையாரியனென்னும் பட்டப்பெயரைக்குறைத்துத் தம்பெயர்களின்முன் சிங்கையென்னும் பெயரைச்சேர்த்துச் சிங்கைப்பரராசசேகரன், சிங்கைச்செகராசசேகரன் என வழங்கிவந்தனர்.

இவ்வகையாகப் பரராசசேகரன் நல்லரசுபுரிந்து வரும்பொழுது சுபதிஷ்டமுனிவர் அவர்சபைக்கு வந்தாரென ஓர்பழங்கதைகூறுவர். அக்கதையை யாழ்ப்பாணவைபவம் கூறுகிறபடி இதன்கீழ்த்தருகின்றோம்.— ஒருநாள் அகத்தியமுனிவர்பௌத்திரருஞ், சித்தமுனிவரின் புத்திரருமாகிய சுபதிட்டமுனிவர் பரராசசேகரனைக் காணும்படிவர, அரசன் அவ்விருஷிக்குத் தான்செய்யவேண்டிய ஆசாரவுபசாரங்கள் அனைத்தையுஞ்செய்து, ஆசனத்திருத்தித் தேவரீர் வரும் காலசம்பவங்களை என் பிதாவுக்கு அறிவித்திருந்தும் அவைகள் அடியேனுக்குப் புலப்படாமையால் அவைகளையும், இனிமே லிவ்வரசாட்சிக்கு வருஞ் சம்பவங்களையுந் தெரிவிக்கவேண்டுமென்று அஞ்சலிசெய்துநின்றான். சுபதிட்டமுனிவர் அரசனைநோக்கி: உன்னரசாட்சி இன்னுஞ்சிலகாலம் சிறப்பாய்நடந்துவரும். முன்முடிசூட்டிய முகூர்த்தந் தப்பிப்போனதினால் உன்னிற்பின் முடியைச்சூட்டுதற்குப் பிள்ளைகளில்லை என்றுசொல்ல, அரசன் பட்டத்துத்தேவிபெற்ற பிள்ளைகளும், இரண்டாந்தேவிபெற்ற பிள்ளைகளுமிருக்கப் பிள்ளையில்லையென்ற தென்னையென, ஓ அரசனே இத்தனைபிள்ளைக ளுண்டென்பதுமெய்யே! அவர்களுள் பட்டத்துத்தேவிபெற்ற மூத்தகுமாரன் விஷத்தினலிறப்பான். இளையகுமாரன் வாளினல்வெட்டுண் டிறப்பான். உன்னிரண்டாந்தேவியின் மூத்தகுமாரன் அரசியற்றிவருங்காலத்தில், உன் வைப்புப்பெண்ணின்மகன் அவனை வாய்ப்பேச்சினல் மயக்கி அரசாட்சியைக் கவர்ந்துகொண்டு கொடுங்கோலரசுசெலுத்துவதைக் குடிகள் தாங்கமாட்டாது பொறுமைகொள்வதினாலும், இரண்டாந் தேவியின்குமாரனை வெறுத்துப் பகைகொள்வதினாலும், இராச்சியம் அந்நியர்கைக்கீழாகுமென்றார். அரசன் இராச்சியம் எப்பொழுது மீளுமென்றுகேட்க: இராச்சியம் முதற்பறங்கிக்காரர்கையி லகப்படும். அவர்கள் சிவாலயங்களையிடித்துத்தள்ளிக் கத்தோலிக்கவேதத்தைப்பரப்பும்படி குடிகளைநெருக்கி நாற்பது வருஷகாலம் அரசாண்டபின், ஒலாந்தேசமன்னர் பறங்கிக்காரரைஉபாயமாகப்பிடித்து இறப்பிறமாது சத்தியவேதத்தைப் பரப்பும்படி தம்சமயகோவில்களைக்கட்டுவித்துச் சமயகாரியங்களில் நெருக்கிடைபண்ணி அனேகவரிகளைவைத்துக் குடிகளை நூற்றிருபதுவருடத்துக்கு மேற்பட அரசாட்சிசெய்வார். அப்பால் இங்கிலீஷ்மன்னர்கள் அவரிடத்தி லிராச்சியத்தைக்கவர்ந்து சம

யதாரியங்களிற் பலவந்தஞ்செய்யாமல் எவர்களுந் தங்களிஷ்டப்படி சிவாலயச்சேவை முதலியவற்றையுஞ் செய்துமுடிக்கத் தடைசெய்யாது நீதியாய்நடத்தி எழுபத்தொன்பதுவருஷம் அரசுசெய்வார்கள். இவர்கள் முற்கூற்றில் நீதியாயரசாண்டு பிற்கூற்றில் சிலவிஷயங்களில் அநீதியாய் அரசுசெலுத்துவரென்றும், தம்மரசாட்சியை இழந்துபோகுமுன்னமே சிங்கையாரியமகாராசன் கட்டுவித்த கோவிற்றிருப்பணிகளும், விசயராசன் செய்ததிருப்பணிகளும் நிறைவேற்றமாகுமென்றும், அவ்வாலயங்களிலே அநேகர் புகழைநாட்டிக்கொள்வதற்காகக் கட்டத் தொடங்கிக் கட்டும் நிலையந்தவறிப்போவார்களென்றும், அவ்வாலயங்களில் வடமதில்வாயிற்பாதுகாப்பாய்நின்ற சிவாலயமொன்றுமாத்திரம் சிவகடாட்சம்பெற்ற ஒருவனால் முதல்முதல் நிறைவேறுமென்றும், மற்றஆலயங்கள் ஒன்றின்பின்னொன்றாய் நிறைவேற்றமாகுமென்றும், எல்லாவாலயங்களிலும் அதிவிசேஷமான கைலாயநாதர்கோவிலும், கைலைநாயகியம்மன் கோவிலும், கைலைவிநாயகர்கோவிலும் முன்னிருந்தபடி கட்டியெழுப்புதற்குக் கைலைநாதராற் பூரணகடாட்சம்பெற்றவர்களே முயல்வார்களென்றும், இங்கிலீஷ்மன்னன் எழுபத்தொன்பதுவருஷம் அரசாண்டபின் உலாந்தேஸ்மன்னனும் பிராஞ்சுஇராசனுங் கூடி இராச்சியத்தைக் கபடதந்திரமாகப்பிடித்துக் கொழும்பிலிருந்து அரசாளுவார்களென்றும், அப்பொழுது அவர்களிடத்தில் வெளிப்பட்டுவரும் வாலசிங்கமென்பவன்கையில் இலங்கையரசாட்சி முழுவதையுமொப்பித்துவிட்டுத் தங்கள்நாட்டுக்குப் போவார்களென்றும், கேதாபுரியை அரசாளும் பூலோகசிங்க சக்கரவர்த்தியின்மகன் ஆரியசிங்க சக்கரவர்த்தி கன்னியாகுமரிதொடங்கி இமயமலைபரியந்தமுள்ள ஐம்பத்தாறு தேசங்களையும் ஒருகுடைக்கீழ் அரசாளுவானென்றும், உன்சந்ததியாருக்குள் இனிஒருபோதும் அரசாட்சி வருவதில்லையென்றுஞ்சொல்லிச் சுபதிட்டமுனி எழுந்துபோனார்.

இப்படி உறுதிவாக்காக இருஷிசொன்னவைகளை நம்பியும் நம்பாமலுமிருக்கச், சிலகாலத்தில் மூத்தகுமாரன் சடுதிமரணமடையத், தன் இளையகுமாரனாகிய பண்டாரமென்பவனுக்குப் பட்டஞ்சூட்டிவைத்துத் தான் யாத்திராதரிசனஞ்செய்யும்படி பரிவாரங்களுடனே கும்பகோணத்திற்குச்செல்ல, அங்கு சோழதேசத்தரசன் பட்டத்துத்தேவியோடு வந்திருக்கக்கண்டு சந்தோஷங்கொண்டாடிக் கொண்டிருந்தான். இராசாவின் மூத்தகுமாரனைச் சங்கிலி நஞ்சூட்டிக்கொன்றானென்பது ஒருவருக்குந் தெரியாமற்போயிற்று. அங்கு சங்கிலிசெய்த குழப்பத்தினால் அவனையும் பராசசேகரனையும் பரிவாரங்களையு

ஞ் சோழஇராசன்பிடித்துச் சிறையில்வைக்க, சேனைகளுடன் பின்னாகப்போன பரநிருபசிங்கம் அதைக்கேள்விப்பட்டு அட்டகாசஞ்செய்து யுத்தஞ்செய்கையிற் சடுதிமரணமடையத்தக்க மூன்றுகாயங்கள்பட்டும் அதைக்கவனியாது வீராவேசங்கொண்டு போராடிச் சோழஇராசனைச் சிறையிலிட்டு அவன் சேனைகளைத் தன்வசப்படுத்திக்கொண்டு, தகப்பன்முதலிய சகலரையுஞ் சிறைச்சாலையினின்றுநீக்கி மூன்றுமாச மங்கிருந்து காரியங்களையுமாற்றினான். அப்பொழுது சோழராசன் தனதிராச்சியத்தைத் தான் இறைதந்து ஆளுகிறேனென்று கேட்டுக்கொள்ள அதற்கேற்ற பிணைவாங்கிக்கொண்டு இராச்சியத்தை ஒப்பித்துவிட்டு யாழ்ப்பாணத்திற்குத் திரும்பினான்.

[குறிப்பு.— வைபவமாலை எழுதியவர் ஒல்லாந்தர்காலத்திலே 1736 வரையில் இருந்தவரென்பது மெஸ். பிறிற்றோ ஆதியோரது துணிபு. சுபதிஷ்டமுனிவரின் தீர்க்கதரிசனவாக்கில் ஒருபாகத்தை ஆக்கியோன்தாமே எழுதியிருக்கலாம். ஒல்லாந்தரைக் கொடியவர்களென்று காட்டியும் இங்கிலீசரைச் சிறிதுகாலமட்டுமே ஆள்வோரெனவும் எழுதியவர் 1870-ம் ஆண்டு வரையிலேயே தங்கொள்கையை வைபவமாலையிற் புகுத்தியிருத்தல்வேண்டும். அப்பால் "தீர்க்கதரிசனம்" பிழையாய்வருதலைக் காண்க. மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை அங்கிலேயரைப்பற்றிய பிழையான "தீர்க்கதரிசனத்தை" மறைத்துவிட்டு வைபவமாலைத் "தீர்க்கதரிசன"த்தைப் புரட்டிஎழுதித் தற்காலச்சீருக்கு இயையப்பண்ணிவிட்டிருக்கின்றார். இவற்றால் சுபதிஷ்டமுனிவர் "தீர்க்கதரிசன"மென்பது முழுதும் பிற்காலத்தாரால் சரித்திரத்துள் நுழைவிக்கப்பட்ட கற்பனையேயென்பது சொல்லாமலேஅமையும்.

திரிகோணமலைக் கல்வெட்டும் இங்கிலீசர்காலவரையிலே புதுப்புதுவிஷயங்கள் கூட்டி எழுதிவிடப்பட்டதாகக் கிடக்கின்றது. அதின் பழையவரிகள்சில புராதனமானவை யென்பதில் மயக்கமில்லை. குளக்கோட்டன் ஈசுவரன்கோயிலைப் புதுக்கிய சம்பவத்தைச்சார்ந்த குறிப்புகள் இவ்வாறானவை. ஆயின் மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை சற்றேதிரித்து எடுத்தோதும் பின்வரும்வரிகள் மிகப் பிற்பட்டனவேயென்பது தேற்றம்.

முன்னைக் குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னைப் பறங்கி பிடிப்பனே—மன்னாகேள்
பூனைக்கண் செங்கண் புகைக்கண்ண னண்டபின்பு
மானே வடுகாய் விடும்.

பிள்ளையவர்கள் பிருகத்தீசுவரன்கோயிற்றூபியிலே அமைக்கப்பட்டுள்ள வடிவங்களையும் காலவரிசையறியாது புராதனவமைப்பாக எண்ணி முட்டுறுகின்றனர். (யாழ்ப்பாணச்சரித்திரம் 2-ம் பதிப்பு 50-ம் பக்கம்) சரித்திராசிரியர் காலவரையறை ஞானமின்றி எழுதுந்தோறும் இவ்வாறே இடர்ப்படுவரென்பது பின்னும் தெளிவிக்கப்படும். (சா. ஞா.)]

யாழப்பாணம்வந்தவுடன் பராசசேகரன் பரநிருபசிங்கத்தையழைத்துக் கனவரிசைகள்கொடுத்து மிகவுங்கனப்படுத்திக் கஞ்ளியங்காடு, அச்சுவேலி, சண்டிருப்பாய், அராலி, உடுப்பிட்டி, மல்லாகம், கச்சாய் முதலிய ஏழுகிராமங்களையும் சொந்தமாகச் செப்புத்தகட்டிற் பட்டயமெழுதிக்கொடுத்து, அரசாட்சியின் இரண்டாமதிகார முடையவனுகவுமாக்கினன். அது சங்கிலிக்கு மனவருத்தமாயிருந்தும் வெளிக்குக்காட்டாம லடக்கிக்கொண்டான்.

**கண்டிஅரசன்தேவி நோய்தீரல்.**— அக்காலத்திலே பரநிருபசிங்கனின் வைத்தியத்திறமையைத் தெளிவாய் வெளிப்படுத்தத்தக்கதாய் ஓர்சம்பவம் நிகழ்ந்தது. கண்டியாசனின் மனைவி அனேகவைத்தியரால் மாற்றமுடியாத வயிற்றுவலியால் (சிலர் சூலைநோயென்பர்) வருந்தினள். அதனல் கண்டியரசன் பராசசேகரனுக்குப் பாசுரமனுப்பித் தன்மனைவியின் வயிற்றுவலியை நீக்கத்தக்க வைத்தியபண்டிதரை அனுப்பவேண்டுமென்று கேட்க, பராசசேகரன் வைத்தியசிரோன்மணியாகிய பரநிருபசிங்கத்தைக் கண்டிக்கனுப்பினன். பரநிருபசிங்கம் கண்டிக்குச்சென்று அரசன்தேவியின் நோயை ஓரேமருந்தினல்மாற்றித் தன்வைத்தியசாமார்த்தியத்தை நிலைநாட்ட அரசன் பெரிதுமனமுவந்து அவனுக்குத் தக்கஉபசரணைகள்செய்து அனுப்பப், பரநிருபசிங்கமுஞ் சந்தோஷத்தோடு திரும்பி யாழ்ப்பாணம்வந்து சேர்ந்தனன்.

**சங்கிலி பண்டாரத்தைக்கொன்று அரசனுதல்.**— கண்டிக்குச் சென்ற பாநிருபசிங்கம் வாமுன்னர் யாழ்ப்பாணஅரசை எப்படியுந் தான் கவர்ந்தாளுகை செய்யவேண்டுமென்று உள்ளத்திலெண்ணிய கள்ளமனத்தனுகிய சங்கிலி முன் இராசகுமாரனுகிய சிங்கவாகுவைக் கொன்றவாறு அவன்தம்பி பண்டாரத்தையுங்கொன்று அரசைக்கவர எண்ணியிருந்தனன். ஒருநாள் பண்டாரம் நந்தனவனத்திலேசென்று வேட்டைடாடி வரும்பொழுது சங்கிலி மறைந்துநின்று அவனை வாளினல்வெட்டிக் கொலைசெய்து அரசைக் கவர்ந்துகொண்டான். பராசச

சேகரன் சங்கிலியுடன் எதிர்த்துப்பேசினால் இரு இராசகுமாரரையுங்கொன்ற அப்பாதகன் தன் உயிரையும் மாய்ப்பானென்றெண்ணி யாதும்பேசாது இருந்துவிட்டான்.

**பரநிருபசிங்கம் மந்திரியாதல்.**— பரநிருபசிங்கம் கண்டியிலிருந்து யாழ்ப்பாணம்வந்து சேர்ந்தவுடன் சங்கிலியின் செய்கைகளைக் கேள்வியுற்றுத் தன்பரிசனங்களைக்கூட்டிச் சங்கிலியுடன் யுத்தஞ்செய்ய எழுந்தனன். அதையறிந்த சங்கிலி அவனிடஞ்சென்று கேளுமண்ணா! யான் அரசைக்கவர்ந்துகொண்டது பிழையாயினும் அதைக்கவர்ந்துகொண்டதற்கு ஓர் நியாயமிருக்கின்றது. நீர் இவ்விடமில்லாதிருந்தபொழுது வன்னியர்கள் என்அண்ணனாரை (பண்டாரத்தை)க் கொலைசெய்து என்னையும் என்தந்தையையும் சிறைசெய்ய ஆயத்தஞ்செய்ததை யானறிந்து அண்ணனாரை எச்சரிப்பாயிருக்கும்படி வேண்டியபுத்திமதிகூற அவர் அதைநம்பாதுநடந்து அவர்களாற் கொலையுண்டார். பின் தந்தையைச் சிறைசெய்யமுயன்றபொழுது யானவர்களையெதிர்த்துத் தந்தையாரின் தாழ்வைக்கண்டல்லவோ இவ்வாறு அரசுரிமைபெறத் துணிந்தனர் எனச்சிந்தித்து அரசைக்கைக்கொண்டேன். நீரில்லாததருணத்தில் வஞ்சவன்னியர்வந்து இவ்வரசைக் கைக்கொள்ளாதபடி காத்துக்கொள்ளவே நான் அரசனாயினேன். உம்நன்மையும் எம் அரசகுடும்பநன்மையும் நோக்கியே இதைநான்செய்தேன். இதுஉம்பார்வையில் பிழையெனக்கண்டால் அதனைப் பொறுத்தருள்வீராக. இனி நாமிருவருமொத்து அரசுபுரிவோமாக. ஐக்கியமாய் அரசுபுரிந்தால் பகைவருக்கு அஞ்சவேண்டியதில்லை. "அடம்பன்கொடியுந் திரண்டால் மிடுக்"கல்லவா? நாமிருவரும் இச்சமயத்தில் ஒருவரையொருவர் விரோதித்தால் வஞ்சவன்னியர் அஞ்சாமல்வந்து அரசைக்கைக்கொள்ள வகைபார்ப்பர்.

**சங்கிலி பரநிருபசிங்கத்தை மந்திரியாக்கல்.**— அதனால் நாம் அரசருக்குரிய சாம, பேத, தான, தண்டமென்னுஞ் சத்[illegible]யங்களில் முதலாவதாகிய சமாதானத்தைக்கையாடி இப்போதைக்கு நான் இராசாவாகவும் நீர் மந்திரியாகவுமிருந்து இராக்சியம்பண்ணுவோம். இனிமேல் வேறு நல்லொழுங்குகள் செய்துகொள்ளுவோம். என்பிதா உமக்குத்தந்த அதிகாரத்தை உமதுமகன் பரராசசிங்கத்துக்குக் கொடுத்து என்னுடன் இணங்கிநடந்தால் இராச்சியத்திலே பெரியகாரியங்களைச் செய்யலாமென்று அடிநாக்கிலேநஞ்சும் நுனிநாக்கிலே அமிர்தமும்வைத்துப் பலநயவசனங்களைச்சொல்லி அவனை வசப்படுத்தினன். பரநிருபசிங்கமும் அவன் நயவசனங்களில்மயங்கி அவன்கே

ள்விக்கிசைந்து தன்மகன் பரராசசிங்கத்துக்குத் தன்பிதா உபகரித்த ஏழூர்களையுங்கொடுத்து அப்பகுதிகளுக்கு அவனை அரசனாக்கித் தான் சங்கிலிக்கு மந்திரியானான்.

**சங்கிலிமாறுபாடு.**— இந்தமுறையாக சிலகாலம் அரசு நடைபெற்றுவரச் சங்கிலி பேராசையுற்று சேனைகளைத் தன்வசப்படுத்திக்கொண்டு பரநிருபசிங்கத்திற்குக் கொடுத்துக்கொண்டு வந்த வருமானப்பங்கையும், பரராசசிங்கத்தின் அதிகாரத்தலைமையையும் நிறுத்தி மந்திரிஉத்தியோகத்துக்குச் சம்பளமாத்திரம் கொடுக்கத்தீர்மானித்து அப்படியேசெய்ய ஆரம்பித்தான். சங்கிலியின் வஞ்சகத்தைக்கண்ட பரராசசேகர இராசாவும், பரநிருபசிங்கமும், அவன்மகன் பரராசசிங்கமும் சங்கிலியின் மாறுபாட்டையுந் தங்களுக்குச்செய்த பெரியநட்டத்தையு மெண்ணியெண்ணி மிகத்துக்கமுற்றார். சங்கிலி சேனாபதிகளையும், சேனாவீரரையும் அதிகதிரவியங்கொடுத்துத் தன்வசமாக்கிக்கொண்டதால் அவர்கள் அவனுடன் முன்போல் எதிர்த்துப்பேசும் ஆற்றலில்லாதவர்களாயிருந்தனர். பரநிருபசிங்கம் முன்னே தான்வெற்றிகொண்டு கப்பங்கட்டும்படி செய்த சோழஅரசனுக்குக் கடிதம்போக்கி நீரனுப்பிவந்ததிறையை இனிமேலனுப்பவேண்டாமென்று தடைசெய்து சங்கிலியை அரசால் விலக்குவதற்குச் சமயம்நோக்கிக்கொண்டிருந்தான்.

**வன்னியர்.**— இக்காலத்தில் பாண்டிநாட்டிலிருந்து ஐம்பதுவன்னியர் தமது மனைமக்களோடு யாழ்ப்பாணம்வரப் புறப்பட்டனர். அவர்களுள் நாற்பத்தொன்பதுவன்னியர் மரக்கலமேறி யாழ்ப்பாணம்வருகையில் நெடுந்தீவுக்கடலில் சட்டெனவடித்தவோர் சுழல்காற்றால் மரக்கலங்கவிழ நாற்பத்தொன்பது வன்னியருங் கடலுளாழ்ந்தனர். அவர்கள்மனைவிமாரும் எஞ்சியவன்னியனும் அம்மைச்சிநாச்சியும் அவன் ஏவலாட்களும் வேறுமரக்கலத்திலேறிச் சேமமாக யாழ்ப்பாணத்தையடைந்தனர். இறந்தவன்னியரின் மனைவிமார் தங்கள்வன்னியர் வரும்பொழுது கூடிக்கொண்டு வன்னிநாட்டுக்குப் போகலாமென்று பலமாசங்களாகக் காத்திருந்தனர். அவ்வன்னியர் வாராதபடியால் அவர்கள் யாழ்ப்பாணத்திற் பலவிடங்களில் வீடுகளைக்கட்டி வேலைக்காரிகளின் உதவியோடு வசித்தனர். எஞ்சிய கரைப்பிட்டி வன்னியன் கந்தரோடைக்குவந்து அங்கே குடிபதியாகினான். அறுபது கத்திக்காரநம்பிகள் அவனுக்குச் சேவைசெய்துவந்தனர். அவ்வன்னியன் தனதுநம்பிகளிற் றலைநம்பியினதுமகளைக் கற்பழித்ததினால் அந்நம்பி உக்கிராவேசங்கொண்டு வன்னியனைக்கொன்றான். அச்சோகத்தால் அவன்மனைவி அம்மைநாச்சி.

யார் வயல்வெளியிலோடித்திரிந்து தானெங்கேபோகலாமென்று அறியாதவளாய்த் தற்கொலைசெய்தனள். நம்பிதலைவன் இராசவிசாரணையடைந்து கொலையுண்டிறந்தனன். கரைப்பிட்டிவன்னியனுக்குப் புத்திரபுத்திரிகளில்லாதபடியால் அவன்திரவியம் முழுதும் சங்கிலியரசனுக்காயின. மற்றநம்பிகள் சாளுரக்கும்பமென்னும் அயற்கிராமம்போய் அவர்களுக்குப் பணிவிடைசெய்வாராகிப் பனையேறுந்தொழில்பயின்று அதே தங்கள் சுயதொழிலாகக் கொண்டனர். இவர்கள் தங்கள்குலத்தைவிட்டு நழுவியபடியால் நழுவர்என்றும்ப் பிற்காலத்தில் நழவரென அழைக்கப்படுவாராயினர். (நம்பி ஆண்டிகளுள் ஓர்சாதியென்பர்.)

மறவர்.— இக்காலத்தில் இராமநாதபுரத்திலேயிருந்து சில மறவர்வந்து மறவன்புலவிற் குடியிருந்து உள்நாடுகளிற் பெருங்கள்வுநடத்தியதைச் சங்கிலியரசன் கேள்விப்பட்டு அவர்களைப்பிடித்துக் கொலைசெய்விக்க: எஞ்சியகுடிகள் பண்டியுன்தாழ்வு என்னும் காட்டிற்போய்க் குடியிருந்தனர். மறவர் வாசம்பண்ணினதால் மறவன்புலமென அழைக்கப்பட்டது. இப்படியே சங்கிலியாசன் குடிகளுடையதுன்பத்தைக்களையச்சிறுமுயற்சிசெய்தாலும்; அவனரசியல் கொடுமையாலும், அகங்காரத்தாலும், வஞ்சனையினாலும் நிறைந்துவிளங்கினது.

பலதுடிகள்வரல்.— இப்படியானகாலத்திலே பாண்டிநாடு முதலியதேசங்களிலே பெரும் பஞ்சம்நிகழ்ந்தமையால் பஞ்சத்தால்வருந்திய பலவருணத்தவரும் எடுபட்டு யாழ்ப்பாணம் வந்து அரசனனுமதிபெற்று ஆங்காங்கே தங்களுக்கு வசதியானஇடங்களிற் குடியேறினார்கள். இச்சமயத்தில் தொண்டைநாட்டிலிருந்து பன்னிரண்டு கருணீகரர் தங்குடும்பங்களுடன்வந்து கரணவாயில் வசித்தனர். இவர்கள் அரசனால் உடுப்பிட்டியைச் சேர்ந்து பன்னிருகுறிச்சிகளுக்கும் கணக்காய் நியமிக்கப்பட்டனரென்றும், தமிழரசு முடிந்தபின் அவரும் அவர்மரபினரும் சைவகுருமாராய் விளங்கிவருகின்றனரென்றும் சிலர்கூறுவார்.

வடமராட்சிக் கலகத்தையடக்கல்.— அந்நாட்களில் வடமராட்சிச் சனங்களுக்குள்ளே ஓர் கலகமுண்டானது. சங்கிலிராசனவ்விடஞ்சென்று அக்கலகத்தையடக்கி அரசருக்குரிய வரிசைவாத்தியங்களுடன் வருகையில் இருபாலை எல்லைகடந்தவுடன் வாத்தியக்காரர் வாத்தியத்தொனியை நிறுத்தினார்கள். உடனே சங்கிலி வாத்தியத்தொனியை நிறுத்தியகாரண மியாதெனவிசாரிக்க, வாத்தியக்காரர் இது பாகிருபசில்கத்தின் இடமீழ

ள்விக்கிசைந்து தன்மகன் பராசசிங்கத்துக்குத் தன்பிதா உபகரித்த ஏழூர்களையுங்கொடுத்து அப்பகுதிகளுக்கு அவனை அரசனாக்கித் தான் சங்கிலிக்கு மந்திரியானான்.

**சங்கிலிமாறுபாடு.**— இந்தமுறையாக சிலகாலம் அரசு நடைபெற்றுவரச் சங்கிலி பேராசையுற்று சேனைகளைத் தன்வசப்படுத்திக்கொண்டு பரநிருபசிங்கத்திற்குக் கொடுத்துக்கொண்டுவந்த வருமானப்பங்கையும், பராசசிங்கத்தின் அதிகாரத்தலைமையையும் நிறுத்தி மந்திரிஉத்தியோகத்துக்குச் சம்பளமாத்திரம் கொடுக்கத்தீர்மானித்து அப்படியேசெய்ய ஆரம்பித்தான். சங்கிலியின் வஞ்சகத்தைக்கண்ட பராசசேகர இராசனும், பரநிருபசிங்கமும், அவன்மகன் பராசசிங்கமும் சங்கிலியின் மாறுபாட்டையுந் தங்களுக்குச்செய்த பெரியநட்டத்தையு மெண்ணியெண்ணி மிகத்துக்கமுற்றார். சங்கிலி சேனாபதிகளையும், சேனாவீரரையும் அதிகதிரவியங்கொடுத்துத் தன்வசமாக்கிக்கொண்டதால் அவர்கள் அவனுடன் முன்போல் எதிர்த்துப்பேசும் ஆற்றலில்லாதவர்களா யிருந்தனர். பரநிருபசிங்கம் முன்னே தான்வெற்றிகொண்டு கப்பங்கட்டும்படி செய்த சோழஅரசனுக்குக் கடிதம்போக்கி நீரனுப்பிவந்ததிறையை இனிமேலனுப்பவேண்டாமென்று தடைசெய்து சங்கிலியை அரசால் விலக்குவதற்குச் சமயம்நோக்கிக்கொண்டிருந்தான்.

**வன்னியர்.**— இக்காலத்தில் பாண்டிநாட்டிலிருந்து ஐம்பதுவன்னியர் தமது மனைமக்களோடு யாழ்ப்பாணம்வரப் புறப்பட்டனர். அவர்களுள் நாற்பத்தொன்பதுவன்னியர் மரக்கலமேறி யாழ்ப்பாணம்வருகையில் நெடுந்தீவுக்கடலில் சட்டெனவடித்தவோர் சுழல்காற்றால் மரக்கலங்கவிழ் நாற்பத்தொன்பது வன்னியருங் கடலுளாழ்ந்தனர். அவர்கள்மனைவிமாரும் எஞ்சியவன்னியனும் அம்மைச்சிநாச்சியும் அவன் ஏவலாட்களுஞ் வேறுமரக்கலத்திலேறிச் சேமமாக யாழ்ப்பாணத்தையடைந்தனர். இறந்தவன்னியரின் மனைவிமார் தங்கள்வன்னியர் வரும்பொழுது கூடிக்கொண்டு வன்னிநாட்டுக்குப் போகலாமென்று பலமாசங்களாகக் காத்திருந்தனர். அவ்வன்னியர் வராதபடியால் அவர்கள் யாழ்ப்பாணத்திற் பலவிடங்களில் வீடுகளைக்கட்டி வேலைக்காரிகளின்* உதவியோடு வசித்தனர். எஞ்சிய கரைப்பிட்டி வன்னியன் கந்தரோடைக்குவந்து அங்கே குடிபதியாகினான். அறுபது கத்திக்காரநம்பிகள் அவனுக்குச் சேவைசெய்துவந்தனர். அவ்வன்னியன் தனதுநம்பிகளிற் றலைநம்பியினதுமகளைக் கற்பழித்ததினால் அந்நம்பி உக்கிராவேசங்கொண்டு வன்னியனைக்கொன்றான். அச்சோகத்தால் அவன்மனைவி அம்மைநாச்சி.

யார் வயல்வெளியிலோடித்திரிந்து தானெங்கேபோகலாமென்று அறியாதவளாய்த் தற்கொலைசெய்தனள். நம்பிதலைவன் இராசவிசாரணையடைந்து கொலையுண்டிறந்தனன். கரைப்பிட்டிவன்னியனுக்குப் புத்திரபுத்திரிகளில்லாதபடியால் அவன்திரவியம் முழுதும் சங்கிலியரசனுக்காயின. மற்றநம்பிகள் சாணாரக்கும்பமென்னும் அயற்கிராமம்போய் அவர்களுக்குப் பணிவிடைசெய்வாராகிப் பனையேறுந்தொழில்பயின்று அதே தங்கள் சுயதொழிலாகக் கொண்டனர். இவர்கள் தங்கள்குலத்தைவிட்டு நழுவியபடியால் நழுவர்என்றுய்ப் பிற்காலத்தில் நழவரென அழைக்கப்படுவாராயினர். (நம்பி ஆண்டிகளுள் ஓர்சாதியென்பர்.)

மறவர்.— இக்காலத்தில் இராமநாதபுரத்திலேயிருந்து சில மறவர்வந்து மறவன்புலவிற் குடியிருந்து உள்நாடுகளிற் பெருங்களவுநடத்தியதைச் சங்கிலியரசன் கேள்விப்பட்டு அவர்களைப்பிடித்துக்கொலைசெய்விக்க: எஞ்சியகுடிகள் பண்டியன்தாழ்வு என்னும் காட்டிற்போய்க் குடியிருந்தனர். மறவர் வாசம்பண்ணினதால் மறவன்புலமென அழைக்கப்பட்டது. இப்படியே சங்கிலியரசன் குடிகளுடையதுன்பத்தைக்களையச்சிறுமுயற்சிசெய்தாலும்; அவனரசியல் கொடுமையாலும், அகங்காரத்தாலும், வஞ்சனையினாலும் நிறைந்துவிளங்கினது.

பலதுடிகள்வரல்.— இப்படியானகாலத்திலே பாண்டிநாடு முதலியதேசங்களிலே பெரும் பஞ்சம்நிகழ்ந்தமையால் பஞ்சத்தால்வருந்திய பலவருணத்தவரும் எடுபட்டு யாழ்ப்பாணம் வந்து அரசனனுமதிபெற்று ஆங்காங்கே தங்களுக்கு வசதியானஇடங்களிற் குடியேறினார்கள். இச்சமயத்தில் தொண்டைநாட்டிலிருந்து பன்னிரண்டு கருணீகரர் தங்குடும்பங்களுடன்வந்து கரணவாயில் வசித்தனர். இவர்கள் அரசனால் உடுப்பிட்டியைச் சேர்ந்து பன்னிருகுறிச்சிகளுக்கும் கணக்கராய் நியமிக்கப்பட்டனரென்றும், தமிழரசு முடிந்தபின் அவரும் அவர்மரபினரும் சைவகுருமாராய் விளங்கிவருகின்றனரென்றும் சிலர்கூறுவார்.

வடமராட்சிக் கலகத்தையடக்கல்.— அந்நாட்களில் வடமராட்சிச் சனங்களுக்குள்ளே ஓர் கலகமுண்டானது. சங்கிலிராசனவ்விடஞ்சென்று அக்கலகத்தையடக்கி அரசருக்குரிய வரிசைவாத்தியங்களுடன் வருகையில் இருபாலை எல்லைகடந்தவுடன் வாத்தியக்காரர் வாத்தியத்தொனியை நிறுத்தினார்கள். உடனே சங்கிலி வாத்தியத்தொனியை நிறுத்தியகாரண மியாதெனவிசாரிக்க, வாத்தியக்காரர் இது பரநிருபசிங்கத்தின் இடமீழ

ருப்பதால் உத்தரவின்றித் தொனிசெய்யாது பயந்து விட்டோ மென்றனர். அதனாற் சங்கிலியரசன் பரநிருபத்திற்குரிய கள்ளியங்காடு முதலிய ஏழுகிராமங்களையும் கவர்ந்துகொள்ள நினைத்துப் பலசூழ்ச்சிகள்செய்தும் அவன்கையிற் செப்புப்பட்டயமிருந்தமையால் சங்கிலியின் உபாயங்கள் சித்திக்கவில்லை. சங்கிலி இராசஅதிகாரம் செலுத்தியும், முடியும் செங்கோலும் பராசசேகரனிட மிருந்தமையால் தனக்கு ஒரு முடியும் செங்கோலும் தேடப் பிரயாசப்பட்டும் காரியம் அனுகூலமாய் முடியவில்லை.

பரராசசேகரன் வன்னியரைத் துணைப்பிடித்துத் தன்மகன் பரநிருபசிங்கத்திற்கு முடிசூட்ட வன்னியருடன் கொண்டாடித்திரிகிறதாகச் சங்கிலி கேள்விப்பட்டுத் தான்நிறுத்திவைத்திருந்த வருமானப்பங்கைப் பரநிருபசிங்கத்துக்கும், கிராம அதிகாரத்தைப் பரராசசிங்கத்துக்கும் கொடுக்கச் சம்மதித்து அவர்களைச் சமாதானப்படுத்தியதுடன்பரநிருபசிங்கத்திற்கும் மகனுக்குமுள்ள இராசநாமங்களைமாற்றி வேறுபட்டத்தைச்சூட்டி வைக்கவேண்டுமென்று ஆலோசித்து வடதிசைவேளாளரின் முதலிப்பட்டத்தை அவர்கள்பெயரி னிறுதியிற்சேர்த்துப் பரநிருபசிங்கமுதலி, பரராசசிங்கமுதலியெனத் தான்எழுதிவைத்துக்கொண்டான்.

மடப்பளியார்.— சங்கிலி ஒருநாள் பரநிருபசிங்கன் மகன் பரராசசிங்கனையழைத்து உன்பிதாவுக்கும் உனக்கும் சகலகிராமங்களும் மேலதிகாரங்களும் கிடைத்திருக்கின்றன. உங்கள்பின் உங்கள்சந்ததியாருக்குத் தலைமுறைதலைமுறையாக இவ்வதிகாரம் நிலையாக நிற்குமாகையால் உங்கள்சந்ததியாருக்கு ஓர் பட்டஞ்சூட்டிவைக்க விரும்புகிறேனென்றுகூறிஐஞ்ஞூறுகிராமத்துக்குத் தலைமைபெற்றுக் காப்பாற்றுதல் என்னும் கருத்துடைய (மடப்பம் = ஐஞ்ஞூறுகிராமத்திற்குத் தலைமைபெற்றது. அளித்தல் = காத்தல்) மடப்பளியெனும் பட்டத்தை அவனுக்குச்சூட்டினன். தற்கால முயர்குடிமடப்பளியாரா யாங்காங்குவிளங்குவோர் தாம் இந்த இராசமடப்பளியைச் சேர்ந்தவரென்று பாராட்டுவர்.

[மடப்பளியர்ரைப்பற்றிய இவ்வரலாறு மாதகல் வேளாளர்திலகரும் பண்டிதரத்தினமுமாகிய மயில்வாகனப் புலவரவர்களாலே வையாபாடல், இராசமுறை, பரராசசேகரனுலா முதலிய பழைய பனுவல்களைத் தழுவிச்செய்த யாழ்ப்பாண வைபவமாலையின்கண்ணே எழுதப்பட்டுள்ளது. புலவர்வாய்மொழி ஒல்லாந்தக்காரர் காலத்தும் அதன்முன்னரும் நம்நாட்

டிமில கல்வி கேள்வி முதலிய ஒழுக்கங்களாற் சிறந்துவிளங்கிய உயர்ந்தோராது வாக்கைப்போற்றுது புகன்ற புன்மொழியன்று. ஆகலான் அதைத் தள்ளிவிடுதற்குத் தகுந்த நியாயம்வேண்டும். மயில்வாகனப்புலவர் காலத்தே சுன்னாகத்தில்வசித்த பிராமணோத்தமரும் கவிராயருமாகிய வரதபண்டிதரவர்களாற் குருநாதசுவாமிபேரிற் பாடப்பட்ட கிள்ளைவிடுதூது என்னும் நூலிலே "வெற்றிவிடைக்கொடியார் மேலாரியகுலத்தினுற்றமடப்பளியிலுள்ளோர்" என்று உற்பத்திதோன்ற உரைக்கப்பட்டுள்ளாரும் இம்மடப்பளிச்சாதியாரே.

மடப்பளி என்னுஞ் சாதிதோன்றிய காலத்துக்கு அதிதூரப்படாததும் சரித்திரவாராய்ச்சிக்கு வேண்டிய வசதிகளெல்லாம் அமையப்பெற்றதுமான உலாந்தாக்காரர்காலத்தே விளங்கிய விற்பன்னரிருவர் கூற்றையும் ஒருங்கே ஒதுக்கிவிட்டாரும் அதிதூரகாலத்துக் கன்ன பரம்பரையையும் தமது அறிவையும் சரித்திரவாதாரங்களென மதித்துள்ளாருமாகிய ஸ்ரீ. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையென்பவர் தம்மாலியற்றப்பட்ட யாழ்ப்பாணச் சரித்திரத்தினகத்தே இதன்கீழ் கவிலப்படும் கவினகதையைப் பொதிந்துள்ளார்:—

"பரநிருபசிங்கன் தன்னைச் சங்கிலி நஞ்சிட்டுக்கொல்லச் சூழ்ச்சிசெய்திருக்கிறு னெனக் கேட்டுத் தனது மடைப்பள்ளிக்குச் சங்கிலி அரண்மனையிலிருந்து எவரும் செல்லலாகாதெனக் கட்டளையிட்டான். இராசபந்திக்குரிய உயர்குல வேளாளருள்ளே விசுவாசமுள்ளவர்களைத் தெரிந்தெடுத்து மடைப்பள்ளி யதிகாரிகள் உக்கிராணகாரர்களாக நியமித்து முன்னிருந்தவர்களையெல்லாம் நீக்கினுன். அம்மடைப்பள்ளி அதிகாரிகள் உக்கிராணகாரர்களுக்கு இராசமடைப்பள்ளியாரென்றும் தனது குமாரனுடைய மடைப்பள்ளியாருக்குக் குமாரமடைப்பள்ளியாரென்றும் மந்திரசங்கத்தாருடைய மடைப்பள்ளி உத்தியோகருக்குஞ் சர்வ மடைப்பள்ளியாரென்றும் பட்டமளித்தான். இராசமடைப்பள்ளியாரும் குமாரமடைப்பள்ளியாருமே பரநிருபசிங்கனுக்கும் அவன்மகன் பரராசசிங்கனுக்கும் உறுதிச்சுற்றமாய் விளங்கினுர்கள்."

பிள்ளையவர்களது முடிபைப் பரதேசிகள் ஒருபோது உண்மையென ஒப்புக்கொள்ளினும் சுதேச அறிஞர் அங்கீகரித்தல் ஐயமாம்.

மடைப்பள்ளியாரென்ற நாமஞ்சூடிய ஒருசாதி இவ்வீழ

நாட்டின் எப்பகுதியினும் இல்லையேயில்லை. இப்பெயர்ச்சாதி பிள்ளையவர்களோச்சும் மனோரதத்திலேயுள்ளதன்றி உண்மையிலுள்ளதன்று. மடைப்பள்ளி என்றகுலத்தைக் கருதினரேல் தம்மாட்டு மரபு வழுவை ஏற்றுபவராவர். என்னை?

"எப்பொருளெச்சொலி னெவ்வாறுயர்ந்தோர் செப்பினரப்படிச் செப்புதன்மரபே" என்பது சான்றோர் ஒத்து ஆகலின், "குலத்தாலும் செல்வத்தாலும் ஈகையாலும் சிறந்துவிளங்கியவில்வராயமுதலியார்" எனப் பிள்ளையவர்கள் சொல்லும் வித்துவசிரோன்மணியேனும், அவர்குமாரர் சின்னத்தம்பிப் புலவரேனுங் கவீந்திரரேனும், மாதகல் மனப்புலிமுதலியாரேனும், அவர்மகன் சரவணமுத்துப்புலவரேனும் தங்குலப்பெயரை மடைப்பள்ளியென்று எப்போழ்தாவது வழங்கினரல்லர். மறுவருணத்தைச்சேர்ந்த பண்டைநாட் பாவலர் நாவலர் எவரேனும் இங்ஙனம் வழங்கலாயினருமல்லர். உலாந்தாக்காரர்காலத்து உறுதிச் சாசனங்களிலேனும் கோவிற்கணக்கிலேனும் வேறெவ்வகைச் சாசனங்களிலேனும் பிள்ளையவர்களது மடைசேர்ந்த பள்ளி இல்லாமையும் ஈங்கு நோக்கத்தகும்.

இனி பரநிருபசிங்கன் முன்னர் இராச்சியத்தையும் பின்னர் அரசிறையிற் பாதியையும் இழந்து சங்கிலியிடம் படிச்சம்பளம்பெற்று இழிந்ததசையி லிருந்தபோதே உயர்குல வேளாளரைத் தெரிந்தெடுத்துத் தனக்கு உக்கிராணகாரர்களாகவும் மடைப்பள்ளி யதிகாரிகளாகவும் நியமித்து அவர்கட்கு மடைப்பள்ளியார் (அட்டிற்காரர்) என்னும் பட்டங்கட்டினன் என்பதும், அரசமகிமையிலும் பரிவாரத்திலும் யாதுங்குறைபடாதுவாழ்ந்த பரராசசேகரன் முதலிய முடிமன்னர்மாட்டு மடைத்தொழிலிலே அமர்ந்திருந்த மக்கட்கு மடைப்பள்ளிப் பட்டம் அளிக்கப்படாமையும் வெகுவிந்தையேயாம்.

மேலும் பிள்ளையவர்கள், குமாரனுடைய மடைப்பள்ளியார் யாதுவருணத்தவரென்றும், மந்திரசங்கத்தாருடைய மடைப்பள்ளியார் யாவரென்றும், பொதுமடைப்பள்ளியார் யாதுகுலத்தவர் யாவர்க்குப் பொதுவானவரென்றும், சர்வ மடைப்பள்ளியாரென்னுஞ் சொற்றொடர்க்குப் பொருளென்னவென்றும்; இம்மடைப்பள்ளியாரெல்லா மெவ்விடங்களிலே இருக்கின்றார்களென்றுங் கூறுதுவிட்டது அவர்பேரறிவிற்கு மாராய்ச்சிக்கும் அழகன்று. எந்நூலி னுதாரங்கொண்டு பிள்ளையவர்கள் இப்படிவகுத்துப் பொருள்கூறினரென்பதும் அவரிடம் நாம் கேட்டறியவேண்டிய விஷயமே.

இந்தியாவிலே அரசாட்டிலிலே அமர்ந்திருக்கும் தொழிலாளர் என்னவருணத்தைச் சேர்ந்தவரெனவும் அடுதொழிலிலுற் சுயவருணம் அற்றுப்போனது அங்கும் வழக்கமோவெனவும் பிள்ளையவர்கள் விளம்புவாராக.

இதுநிற்க, பரநிருபசிங்கன் மகன் பரராசசிங்கனுடைய ஏழு புத்திரர்வழியும் ஏகபுத்திரிவழியும் தோன்றிய பின்னோரும் பரநிருபசிங்கன் தம்பிமார் இருவர்வழித்தோன்றினோரும், சகோதரி அரசகேசரி மனையாளுடைய சந்ததியாரும் மடப்பளியாரென்று இன்றுவரையும் அறியப்படுகின்றனர் என்பதூஉம், பரராசசிங்கன் சந்ததியாரே குமாரமடப்பளியாரென்று மதிக்கப்படுகின்றனரென்பதூஉம், அவர்கள் நல்லூர், கள்ளியங்காடு, மல்லாகம், மாதகல், சண்டிருப்பாய், அராலி, அச்சுவேலி, உடுப்பிட்டி, கச்சாய் முதலிய கிராமங்களிலும் அயற்கிராமங்களிலும் இருக்கின்றார்களென்பதூஉம் உலகப்பிரசித்தமாம். சங்கமர், சீலியர், பரதேசிகள், பாணர், அகம்படியாராதிய அற்பசனங்களும் உலாந்தாக்காரர்காலத்தே தம்மை மடப்பளியாரென்று எழுதுவித்து வந்தமையால் அவர்கள் சங்கு மடப்பளியார், சருகு (சிறு) மடப்பளியாரென்று இழித்துக்கூறப்பட்டனரென்பதூஉம்உற்றுநோக்கத்தகும். அன்னோர் தம்மை வேளாளரென்று எழுதுவிக்காதுவிட்டது வேளாளர் அக்காலத்து இறுக்கவேண்டியதாயிருந்த அதிகாரிவரியென்னும் இறைக்கு அஞ்சியேபோலும்.

அரசகுலத்துற்பவித்தவருள் குமார மடப்பளியாரொழிந்த ஏனை மடப்பளியாரை இராச மடப்பளியாரென்று சொல்லுவது வழக்கமாம். தக்க நூலாதாரமின்றிச் சரித்திர சம்பந்தமான ஒருகாரியத்தைத் தம்மனம்போனபோக்கில் முடிவுசெய்துகொள்ளல் தக்கார்செயலன்று. மடப்பளி என்னுஞ்சொல்லே பிள்ளையவர்களை மயக்கியதுபோலும்.

வெவ்வேறு உற்பத்தியையுடைய பதங்கள் ஒரேவடிவாய்த்தோன்றுதல் மொழிநூலுணர்ச்சியுள்ளோ ரறிந்தவொரு விஷயமே (மண்டலத்தையும்) (மாண்டாரையும்) மடப்பளியோடு ஒப்பநோக்குதல் உசிதமாம்.

சொற்பொருள் விளக்கத் தாழ்ச்சியாலேயன்றோ பிள்ளையவர்கள் இணுவில், நாரந்தனை, தெல்லிப்பழை, காரணவாய், வேலணை, பன்றியன்தாழ்வு முதலிய ஊர்ப்பெயர்கட்கும் நவீனார்த்தம் நவின்றுள்ளார். இத்தாழ்ச்சியே அவரைத் தமது அக

ராதியின்கண்ணே Timil என்னும் ஆங்கிலேயபதத்திற்கு பயங்கரமான என்று சற்றுமொவ்வாத அர்த்தத்தை உரைக்கச் செய்ததுமாம். (இந்துசாதனத்தில் 9–9–11. தனபாலசிங்கன்.)]

பரராசசேகரன் திரவியசேமிப்பு.— அதன்பின் சங்கிலி சேனைகளையும் ஆயுதங்களையும் வரவர அதிகப்படுத்திக்கொண்டு வரும் நிலையைக்கண்டு பரராசசேகரன் தன்னிடத்திலிருந்த திரவியம் முழுவதையும் யானைகளிலேற்றி இரவிற் பிரயாணஞ் செய்து வன்னிநாட்டையடைந்து தங்கள்முன்னோர் திரவியம் சேமித்துவைத்த குகையிலே தன் முடி செங்கோல் திரவியம் யாவற்றையும் சேமித்துவைத்துவிட்டுத் திரும்பி யாழ்ப்பாணம்வந்து தன்மாளிகையில் வசித்தனன்.

[குறிப்பு.— பரராசசேகரன் மாளிகைக்கு மீண்டுவருமுன் ஒருதொகைத் திரவியத்தோடு திருக்கேதீச்சரஞ்சென்று அங்கே சுவாமிதரிசனம்பண்ணிக்கொண்டு இராமேச்சரஞ்சென்றான் எனவும், அங்கே சித்திரக்கான்மண்டபமும், கர்ப்பக்கிருகமும் பழுதுற்றிருப்பதைக்கண்டு அவைகளைப் புதுக்குமாறு அத்திரவியத்தைத் தன்மந்திரியிடங்கொடுத்து அவனை அங்கேவைத்துவிட்டு மீண்டான் எனவும், அப்பால் இவன்மீளுமுன் திருக்கேதீச்சராலயத்தையும், பாலாவியின் மேற்குக்கரையையும் கடல்கொண்டழித்தது, இதுநிகழ்ந்தது 1540-ல் என்பர் எனவும், அதன்மேலும் பூசை ஒருவாறு நடந்துவந்தது, A. D. 1589-ல் பூசைநிறுத்தப்பட்டது. (விசுவநாதசாஸ்திரியார் குறிப்பு) எனவும் மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை தமது யாழ்ப்பாணச்சரித்திரத்திற் கூறியுள்ளார்.

திருக்கேதீச்சுர ஆலயத்தைச் சுட்டி மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை கூறியன யதார்த்தமல்ல. பறங்கியர் 1560-ம் ஆண்டினீற்றில் மன்னாரிற் கோட்டைகட்டத் தொடங்கியகாலையில் அதன்முன் இலமடைந்துகிடந்ததாகிய திருக்கேதீச்சுரக் கோவிலில்நின்று அதற்குக் கற்களையெடுப்பித்ததைக் காண்கின்றோம். ஆகவே 1586-ல் பூசை நிறுத்தப்பட்டதென்பது பொருந்தாமற்போகின்றது. திருக்கேதீச்சுரமும் அதன்புறங்களும் கடலலைமோதி அழியத்தொடங்கியது பறங்கிக்காரர்காலத்துக்கு முற்பட்டேயாதல்வேண்டும். கீழ்தேச வர்த்தகங்களுக்கு மாதோட்டத்துறைமுகம் ஓர் மத்தியஸ்தானமா யிருந்தகாலமே திருக்கேதீச்சுரமும் புழக்கமுற்றிருந்தகாலம். அது பறங்கியர் வருகைக்கு முற்பட்டகாலமென்பது மலையிலக்கு.

யாழ்ப்பாணஅரசர் மாதோட்டநாடுகளைத் தாமாயன்று தமக்குத் திறைகொடுத்த சில தலைவர்கள்மூலமாகவே பரிபாலித்தனர். திருக்கேதீச்சுரம், திரிகோணமலை, இராமேச்சுரம் எனும் மூன்றுதலங்களையும் யாழ்ப்பாணஅரசர்கள் ஓர் யந்திர அன்னப்பறவையில் இவர்ந்து தரிசித்துவந்தனரென்னும் கட்டுக்கதையையும் மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை நம்பினார்போல் எழுதுகிறார். இவையெல்லாம் சரித்திரக்கண்ணில்லாதோர் கூற்று.

திருக்கேதீச்சுர ஆலயம் வெகு பழமையுடையதென்பதில் மயக்கமில்லை. ஆயினும் விஜயன்காலத்தின்முன் அது கட்டப்பட்டிருந்ததெனவும் விஜயனால் சீர்ணோத்தாரணஞ் செய்யப்பட்டதெனவும் வைபவமாலைகூறியது மிகைபட்டகூற்றேயாம். வைபவமாலைக்கூற்றை மேற்கொண்டு "திருக்கேதீச்சரம் பூர்வம் சேதுவென்னும் நாகராசனால் நிருமிக்கப்பட்டது" என மெஸ், முத்துத்தம்பிப்பிள்ளை கூறியது கேதீச்சுரம்என்னும் மொழிவந்தவித மறியாமையினாலாம். நாம் திருக்கேதீச்சுரத்தைச் சில்லாண்டுகளின்முன் தரிசித்தபோது அங்குநவமாய மைக்கப்பட்டிருக்கும் புதுச்சிவாலயத்தின் அருச்சகராயிருந்த ஓர் வடமொழிவல்ல பிராமணர் கேதுஎன்னும் கிரகம் சிவனைப் பூசித்தமையால் கேதீச்சுரம் என வந்ததென்றார். இவ்வாறே சப்தோற்பத்திசெய்யும் முகத்தாலே சரித்திரம் கற்பிப்போர் பலர். அப்பால், விஜயன்காலத்தில் இந்தியாவிலாதல் இலங்கையிலாதல் கல்லால் சிவாலயங்களை எடுக்கும் வழக்கமே ஏற்பட்டிருக்கவில்லை. புத்தர்காலத்தின்பின்னே இந்தியாவிலேயும் ஆலயங்களை நிர்மாணிக்கும்வழக்கம் தலையெடுத்தது. புத்தசமயிகள் தாம் முதன்முதல் கல்லில் குகாலயங்களைக்குடைந்து வெட்டத்தொடங்கினவர்கள். இது அசோகராசன்காலத்தையண்டியநாட்களிலாம். (கிறீஸ்துவுக்குமுன் 3-ம் நூற்றாண்டுவரையில்) ஆதலால் திருக்கேதீச்சுரமும் இலங்கையின் பிறஆலயங்களும் கி. மு. 3-ம் நூற்றாண்டின்பின்னன்றி முன்னர்வைக்கப்பட்ட அமையா. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் காலத்தில் திருக்கேதீச்சுரம் இருந்தமையினால்மட்டும் அதன்பழமை அதிகதூரம் எட்டுவதாகாது. எங்ஙனமெனில் திருஞானசம்பந்தரின்காலம் கிறீஸ்துவுக்குப்பின் 7-ம் நூற்றாண்டுதானென்பது இந்தியஅரசர்களின் கல்வெட்டு முதலிய சாசனங்களால் நன்றாக நிச்சயிக்கப்பட்டதொன்று. (Hindu Iconography Vol. 1.P. 56.) இற்றைக்கு ஆயிரத்திருநூறு வருஷங்களின்முன்னிருந்த திருஞானசம்பந்தமூர்த்தியை நாலாயிரம்வருஷத்துக்கு முன்னிருந்தாரென்றார் மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை. இந்தத் தவறான ஏதுவைக்கொண்டுதான் திருக்கேதீச்சுரத்துக்கும் ப

வ்லாயிரவருஷப் பழமையை அமைக்கப்புகுந்தார். அது உள்ளபடி இலங்கையிலுள்ள சிவாலயங்களுள் அதிக பழமைவாய்ந்தவைகளு ளொன்றென்பதே துணிபாகலாமன்றிச் சிவாலயங்களைக்கட்ட எவராவது நினைத்துமிராத அத்துணைப் பூர்வகாலத்தை அதற்குக் கொடுத்தோதுவதிற் பயனின்றே.

திருக்கேதீச்சுரத்தின் அழிவுகளைப் பரிசோதிக்குமிடத்து அது ஓர் பண்டைக்காலத்து நகருக்குரிய சகல அங்கங்களோடும் விளங்குவதாகக் காணப்படுகின்றது. பண்டகசாலைகள் வணிகர்மனைகள் முதலியவைகளே பெரும்பாலும் அந்நகரில் இருந்தனபோலும். சுந்தரமூர்த்திநாயனார்,

அங்கம்மொழியன்னாரவரமரர்தொழுதேத்த
வங்கம்மலிகின்றகடன்மாதோட்டநன்னகரில்
பங்கஞ்செய்தபிறைசூடினன்பாலாவியின்கரைமேல்
செங்கண்ணரவசைத்தான்திருக்கேதீச்சரத்தானே.

எனப்பாடியதற்கிலக்கியமாய் அந்நகர் வாணிகத்தின் பொருட்டு வந்து நெருங்கிக்கிடக்கும் மரக்கலங்களை யுடையதாயிருந்ததெனக் காண்கிறோம். இது விஜயராசனின்முன் யக்கர் நாகர் ஆண்டகாலத்தின் சிறாதல் கூடாதென்பதையும், இலங்கை செழிப்புற்றோங்கிய ஓர்காலத்தையே சுட்டுகின்றதென்பதையும் கண்டுகொள்க. (சா. ஞா.)]

பரநிருபசிங்கமும் சங்கிலியும் உள்ளத்தில் ஒருவரையொருவர் சந்திக்குஞ் சிந்தையுடையவராயிருந்தும் தருணம்வாயாமையாற் றம்பகையை வெளியிற்காட்டாது அடங்கினராயிருந்துவந்தனர்.

## 3. பறங்கியர் காலம்.

பறங்கியர் இலங்கையை அடைதல்.— யாழ்ப்பாணநாடு முழுதும் அன்னியர்கைப்பட்டகாலம் 1620-ம் ஆண்டேயாயினும் அதற்கு ஒரு நூறாண்டின்முன்னரே பறங்கியர் நம்நாட்டின் அரசுநிலையோடு சம்பந்தப்படத் தொடங்கிக்கொண்டனர். ஆதலால் பறங்கியர் இலங்கைக்கரையை அடைந்தநாட்டொட்டு நடந்த வரலாறுகளைச் சங்கிரகமாகக்கூறி அப்பாற்செல்வாம்.

போர்த்துக்கால்தேசம் ஐரோப்பாவின் தென்மேல் கோணத்திலுள்ளது. போர்த்துக்கால் தேசத்தவர்களைப் போர்த்து

க்கீசரென அழைத்தலே மரபாயினும், பறங்கியர் எனும் நாமகரணந்தான் அவர்களுக்குப் பெருவழக்காகிவிட்டது. பறங்கி எனும் மொழி இந்தியாவிலே ஆதியில் பிராஞ்சியருக்கு (Frank) வழங்கிற்று. அப்பால் பிராஞ்சியருக்குப் பின் அவரைப்போலும் அந்நியரும் வெண்ணிறமாக்களுமாய்வந்த போர்த்துக்கீசரும் அந்நாமத்தைப் பெற்றனர். இக்காலம் இம்மொழி போர்த்துக்கீசர் சந்ததியிலும் ஒல்லாந்தர் சந்ததியிலுமுள்ள கலப்புற்ற "சட்டைக்காரருக்"கே உரியபெயராய் வழங்குகிறது. இந்நூலில் வசதியின்பொருட்டு போர்த்துக்கீசரைப் பறங்கியர் என்றே பெரும்பாலும் வழங்குவோம்.

**கீழ்தேசவர்த்தகம்.**— பதினைந்தாம் நூற்றாண்டுவரையும் ஐரோப்பிய தேசங்களுக்கும் இந்தியாவுக்குமிடையில் நேரே கப்பற்போக்குவரவு செய்யும் மார்க்கம் அறியப்படாதிருந்தது. அக்காலம் செங்கடலையடுத்த தேசங்களூடாய்க் கரைமார்க்கமாகவே பிறதேசவர்த்தகம் நடைபெற்றது. ஐரோப்பாவுக்கும் கீழ்தேசங்களுக்குமிடையில் ஓர் கடற்பாதையை முதன் முதற் கண்டுபிடித்தவர் பர்த்தலோமியு டியாஸ் எனும் ஓர் பறங்கிமாலுமி. இவர் 1488-ம் ஆண்டு ஆபிரிக்காவின் தென்முனை (நன்னம்பிக்கைமுனை)யைச் சுற்றியோடி இந்துசமுத்திரத்தின்வழியாய் இந்தியாவையடையும் மார்க்கத்தைக் கண்டுபிடித்தார். இவருக்குப்பின் 1497-ம் ஆண்டில் வாஸ்கோடிகமா எனும் பறங்கிமாலுமி இந்தியாமட்டுமோடி வைகாசிமீ 22உ கள்ளிக்கோட்டையை அடைந்தார். விரைவிலே கீழ்திசைச் சமுத்திரவர்த்தகம் முழுதும் பறங்கியர் கைப்பட்டது. இதனால் அவர்க்குமுன் கீழ்திசை வர்த்தகத்தைக் கையாடியிருந்த மூர்ஸ் என்றும் துலுக்கரென்றும் சொல்லப்படும் அராபியர் பறங்கியருக்குச் *சென்ம சத்துருக்களாயினர். அப்பால் பறங்கியர், சிகலம் அல்லது சேயிலம் எனப்பட்ட இலங்கையையும், அதற்குக் கிழக்கேயுள்ள தேசங்களையும் கண்டுபிடித்துத் தமது வர்த்தகத்துக்கு உபகரணமாய் ஆங்காங்கே வங்கசாலைகளைக்கட்ட ஆரம்பித்தனர்.

இலங்கை கண்டுபிடிக்கப்பட்டமை எவ்வாறெனில், 1506ம் ஆண்டில் மாலைதீவுத்திசையில் உலாவித்திரிந்த துலுக்கரின் கப்பல்களைத் துரத்திக்கொண்டு சென்ற லூறென்சோ தே அல்மேதா என்னும் கப்பற்தளபதி அகஸ்மாத்தாய் எதிர்காற்றாற் தள்ளுண்டு இலங்கையைநோக்கி ஓடி, அக்காலம் கொல்லந்தோட்டை அல்லது கொல்லம்புரம் எனப்பட்ட கொழும்பில் கரைபிடித்தான். பிடித்து, கோட்டையிலரசாண்ட தர்ம ப

ராக்கிரமவாகுவோடு சமாதான உடன்படிக்கைசெய்து கொழும்புக்கரையில் ஓர் வங்கசாலைகட்ட உத்தரவும்பெற்றுக்கொண்டு தான் அக்கரையையடைந்த ஞாபகமாய் போர்த்துக்கால்தேச இராசமுத்திரைபொறித்த ஓர் தம்பத்தைநாட்டிவிட்டு மீண்டான்.

பறங்கியரை முதன்முதற்கண்ட சிங்களவர் அவர்பாற்கொண்ட எண்ணத்தை ராஜாவளி குறித்துவைத்திருக்கின்றது. இருப்புக்கவசங்களைத்தரித்து இருப்புக்குல்லாக்களை அணிந்துகொண்டிருக்கும் இம்மனிதர் ஓரிடத்திற் சணமேனும் தரித்திரார். அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருப்பர். இவர் கற்களைக்கடித்து மென்றுதின்று இரத்தத்தைப் பானம்பண்ணுவர் என்று தூதவர்போய்த் தர்மபராக்கிரம இராசனுக் கறிவித்தனராம். லூறென்சோ தே அல்மேதா இலங்கையைக் கண்டுபிடித்தபின் பறங்கியர் காலத்துக்குக்காலம் தர்மபராக்கிரமவாகு கொடுக்கும் இறையைப் பெற்றுக்கொள்ளவும் வர்த்தகப்பொருட்களை வாங்கவும் கொழும்பைநாடி வருவர். அக்காலம் இலங்கையின் வர்த்தகத்தைக் கைப்பற்றியிருந்த துலுக்கர் பறங்கியரை மீண்டும்மீண்டும் எதிர்த்துத் தாக்கிவந்தமையால் அவரைஒடுக்கித் தமது வர்த்தகமுதன்மையை நாட்டுவதற்கு வழியாய்ப் பறங்கியர் 1518–ல் தமக்கு நிலையான ஓர்கோட்டையை முன் களிமண்ணாலும், பின் கல்லாலும் கட்டிக்கொண்டனர்.

**யாழ்ப்பாணத்திற் பறங்கியர்.**— 1518 அல்லது 20 வரையில் பறங்கியர் யாழ்ப்பாணநாட்டிலும் வர்த்தகநோக்கமாகவோ சமயபோதக நோக்கமாகவோ நுழைவோராயினர். போர்த்துக்கால்தேச அரசனின் ஆஞ்ஞைப்படி பறங்கியதளபதிகள் எங்கெங்குபோய்ப் புதுப்புதுத் தேசங்களைக் கண்டுபிடித்தனரோ அங்கங்கெல்லாம் அத்தேசத்து மார்க்கமாகிய கத்தோலிக்கசமயத்தைப் பரப்பப் பிரயத்தனஞ்செய்யவேண்டுமென் றிருந்தது. ஆதலால் பிறதேச வர்த்தகத்தின்பொருட்டுப் புறம்போகத்து செல்லும் கப்பல் ஒவ்வொன்றிலும் வேதபோதக குருமாரும் உடன்செல்லுவர். ஆதியில் பறங்கியர் கொண்டுவந்தவர்கள் பிரான்சிஸ்கன்சபையார் எனப்படுகிற குருமார். இவர்களே லூறென்சோ தே அல்மேதாவோடு முதன்முதல் இலங்கையைத்தரிசித்த பறங்கிக்குருமாராவர். அப்பால் பறங்கியர் கொழும்பில் கோட்டைகட்டி வசிக்கத்தொடங்குதலும், குருமாரும் வர்த்தகரும் யாழ்ப்பாணநாட்டி லுட்படத்தொடங்கினர்.

**இலங்கை அரசியற்செய்திகள்.**— ஜயவர்த்தன கோட்டையிலிருந்து அரசியற்றிய தர்மபராக்கிரமவாகு 1527-ம் ஆண்டு இறக்க 7-ம் விஜயவாகுஎன்போன் அரசனுனன். இவனுடைய இரண்டாம்மகன் புவனேகவாகு என்போன் 1534-ம் ஆண்டு கோட்டைச்சிம்மாசனத்தை வகிக்க, இளையமகனுன மாயாதுன்னை சீதவாக்கையைக் கட்டியெழுப்பிக்கொண்டு புவனேகவாகுவுக்கு மாற்றுனய்ப் போர்பொருதத் தலைப்பட்டான். இந்தச் சந்தர்ப்பத்தில் புவனேகவாகு பறங்கியருடைய உதவியை நாடுவதே இயல்பாயிற்று. இதனுல் இலங்கையில் பறங்கியருடைய செல்வாக்கும் உறுதிப்படுவதாயிற்று.

புவனேகவாகு தன்புத்திரியை வீதியேபண்டாரம் அல்லது தெருவேபண்டாரம் எனும் தன்மருகனுக்கு மணமுடித்திருந்தான். அப்புத்திரியின் மைந்தன் தர்மபாலன். இவனுக்கே அரசுரிமையை நிச்சயப்படுத்திக்கொள்ளல் வேண்டுமென்னும் விருப்பினுல் புவனேகவாகு தன்பேரனுன சிறுவனின் பிரதிமையாய் ஓர் உருவத்தையும் பொன்னுற்செய்வித்து அதற்குச் சூட்டும்படியான ஓர் கிரீடத்தையுமியற்றுவித்து, அவற்றை ஓர் தானுபதியின்மூலமாய் போர்த்துக்கால்தேசத் தலைநகராகிய லிஸ்போனுக்கு அனுப்பி, போர்த்துக்கீச மகாராசாதாமே அப்பிரதிமைக்கு முடிசூட்டி அனுப்பல்வேண்டுமெனப் பிரார்த்தித்தான். இராசதூதன் பிரதிமையோடும்சென்று 1541-ம் ஆண்டு ஆவணிமாசம் லிஸ்போன்நகரையடைய அங்கு வெகுகொண்டாட்டமாய்த் தர்மபாலனின் பிரதிமைக்கு முடிசூட்டி அனுப்பப்பட்டது. இவ்வினேதச்சடங்கினுல் புவனேகவாகு தன்பேரனுக்கு அரசுரிமையை நிச்சயப்படுத்துவதோடு பறங்கியரின் அடைக்கலத்தையும் பெறுவித்துக்கொள்ள முயன்றுன். பின்னும் இலங்கைமுழுவதிலும் பறங்கியருடைய மார்க்கமாகிய "கத்தோலிக்கவேதத்தை"ப் பரப்பக் குருக்களை அனுப்பவேண்டுமென்றும் புவனேகவாகு கேட்டுக்கொண்டபடி தானுபதி மீண்டுவந்த கப்பலாலேயே சில பிரான்சீஸ்கன்சபைக் குருமாரும் வந்து 1543-ம் ஆண்டு இலங்கையைஅடைந்தனர். அந்நாட்டொட்டுப் புவனேகவாகுவின் யுத்தங்களைப் பறங்கியரே ஆடிவந்தனர். 1551ல் மாயாதுன்னைக்கெதிராக, புவனேகவாகுவும் பறங்கியரும் போர்முனைந்துநின்றகாலையில் ஓர்நாள் புவனேகவாகு மேல்மாடியினின்று பலகணிவழியாய்ப்பார்க்கையில் யாரோ ஒரு புறுவைச்சுடப் பொறித்த துப்பாக்கியால் சூடுபட்டு இறந்தான். (Couto) அப்பால் தர்மபாலன் அரசனுக அவன்தந்தை வீதியேபண்டாரம் பரிபாலகனுனன்.

மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை "பறங்கியர் தம்மெண்ணமெல்லாம் முடிக்கும்பொருட்டு, புவனேகவாகுவைத் தற்செயலாய்ச் சுட்டபாவனையாய்ச் சுட்டுக்கொன்றனர்" என்றது சரித்திரவிரோதம். தர்மபாலனையும் பறங்கியர் வலிந்து கிறீஸ்துவனாக்கினரல்லர். அவன் 1557–ம் ஆண்டு தன்சுயவிருப்பப்படியே கத்தோலிக்கவேதத்திலுட்பட்டு ஞானஸ்நானம் பெறுவோனானன். தர்மபாலன் கிறீஸ்துவனானது முற்றாய் மனந்திரும்பியோ அன்றிப் பறங்கியரால் நன்மையடையும் நோக்கமாகவோவென அறியோம். ஆயின் அவன் சுயாதீனமாகவே சமயம் மாறினனென்பதற்குப் போதிய சாட்சியிருக்கிறது.

யாழ்ப்பாணத்திற் பரராசசேகரன்மகன் சங்கிலி அரசியற்றிவந்தான். இவனைப் பறங்கியர்நூல்கள் சகராசன்என அழைக்கின்றன. ஒல்லாந்தரின் சாட்சிப்படி இவன் சியங்கரி (சங்கரி?) என்னப்படுவன். இவன் 1519–ம் ஆண்டு தொடக்கம் 1561–ம் ஆண்டுவரையில் யாழ்ப்பாணஅரசு கைக்கொண்டவனுக்க் காணப்படுகின்றான். (Instruction from Governor General and Council of India.)

**மன்னாரிற் கிறீஸ்துசமயம்பரவுதல்.**— 1544–ல் மன்னார்ச்சனங்களுள் பெரும்பாலானோர் கிறீஸ்துசமயத்தைத் தழுவுவோராயினர். அதெங்ஙனமெனில், 1542–ல் போர்த்துக்காலினின்று அர்ச்சியசிஷ்ட பிரான்சிஸ்கு சவேரியார் எனும் ஒரு மாதவமுனிவர் இந்தியாவில் வந்திறங்கிக் கத்தோலிக்கவேதத்தைப் போதித்தனர். அவருடைய போதனையால் தூத்துக்குடியில் திரளான மீன்பிடிச்சாதிகள் கத்தோலிக்கவேதத்தைச் சேர்ந்துகொண்டு, பறங்கியருடைய அடைக்கலத்தினால் நாயக்க அரசர்கள்முதலாம் கொடுங்கோலர்களுக்குத் தப்பிச் சுகமாய் வாழத்தொடங்கினர். இதைக்கேள்வியுற்ற மன்னாரிலுள்ள கரையரும் பரவரும் தம்மத்தியிலும் சவேரியார்வந்து தம்மைக் கிறீஸ்துவர்களாக்க வேண்டுமென்னப் பரிந்து அவருக்குத் தூது போக்க, சவேரியார் தாமே அவ்விடம்வரச் சந்தர்ப்பமின்றியிருந்தமையால் தமது பெயர்கொண்ட ஓர் சுதேசகுருவானவரை அங்கு அனுப்பிவைத்தனர். அக்குருவானவரின் முயற்சியால் மன்னார்த்தீவார் 600க்கும் 700க்குமிடையில் ஞானஸ்நானம்பெற்றுக் கிறீஸ்துவர்களானார்கள். இதனைக் கேள்வியுற்ற சங்கிலிராசன் 5000 வீரர்கொண்ட ஒருசேனையையனுப்பிக் கிறீஸ்துவர்களைச் சங்கரிப்பித்தான். கிறீஸ்துவர்கள் தாங்கள்தழுவிய புதியமார்க்கத்தைக் கைவிடுவதிலும் சீவனைவிடுவது தானன்றென்று எண்ணி மடிந்தார்கள். அவர்களைக் கத்தோலிக்

கவேதத்திற் சேர்த்த குருவானவரும் தமது மந்தையோடு கடைசிபரியந்தம்நின்று ஆறுதல்சொல்லி அவர்களோடே சீவனை விட்டார். (Queiroz) மன்னாரார் கொலையுண்டசெய்தியைக் குருவானவர் தப்பியோடிச் சவேரியாருக்கறிவித்தாரென மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை வரைந்தது தவறு.

**சங்கிலியின்மகன் கிறீஸ்தவனாதல்.**— விரைவிலே சங்கிலியின் அரண்மனையிலும் கத்தோலிக்கவேதம் புகுந்துகொண்டது. பிதா பட்டத்துக்குமாரனை எவ்விதம் அச்சுறுத்தியும் பயன்படாமையால் அவனைச் சிரச்சேதஞ்செய்வித்தான். பின் அக்குமாரனை அடக்கஞ்செய்தவிடத்தில் பூமிபிளந்து சிலுவையடையாளமொன்றைக் காண்பித்ததென்றும், அதை மண்ணால் மூடிவிட்டபோது அந்தரத்தில் பிரகாசமயமான ஒருசிலுவை தோன்றியதென்றும், அதைக்கண்டோர் பலர் கிறீஸ்துவர்களானார்களென்றும், அக்காலத்துப் போர்த்துக்கீச சரித்திரங்கள் கூறும். அப்பால் சங்கிலியின் இளையமகனும் சகோதரியின் மகனும் கிறீஸ்துவர்களாகிக் கோவைக்கு ஓட்டம்பிடித்தனர். அங்கு அவர்கள் சம்பாவுனாகல்லூரியில் போஷிக்கவும் கல்விபயிற்றவும்பட்டு வருகையில் 1545—ம்ஆண்டு கோவையில்நடந்த வைசூரியால் இருகுமாரரும்மடிந்து போர்த்துக்கீசரால் இராசமரியாதையோடு அடக்கஞ்செய்யப்பட்டார். (Correa)

**சவேரியார் மன்னாருக்குவால்.**— சங்கிலியின்செய்திகள் பறங்கியரைக் கோபமூட்டிக்கொண்டிருந்தன. அவன் கிறிஸ்துவர்களைச் சங்கரிப்பித்தமையால் அவனைப் பழிவாங்கவேண்டுமெனப் போர்த்துக்கால் அரசனால் உத்தரவாவதாயிற்று. இதற்கிடையில் சவேரியார் மன்னார்த்தீவை 1545-ல் தரிசித்தார். அவ்வேளை அங்கு பெருவாரிநோயொன்று நாடோறும் நூறுபேருக்குமேல் மடியும்படியான மீசுரத்தோடு நடந்துகொண்டிருந்தது. சவேரியார் வருகிறாரென்றறிந்த மன்னார்வாசிகள் மூவாயிரர்யாத்திரையில் அவரை எதிர்கொண்டுபோய் அப்பெருவியத்துத்தீரக் கடவுளைப்பிரார்த்திக்கவேண்டுமென விண்ணப்பிக்க அவரது வேண்டுதலினால் மூன்றுநாளில் கொள்ளைநோய் நின்றுவிட்டது. இதைக்கண்ட மன்னார்வாசிகள் யாவரும் கிறீஸ்துவர்களானார்கள். சங்கிலிராசா பறங்கியர் தன்னிற் படையெடுக்க முயலுகிறாரெனவுணர்ந்து பேசாதிருந்துவிட்டான். (Bartoli)

ஆயினும் தான் பயந்திருந்தபடி பறங்கியர் தன்னை எதிர்த்துப் போருக்கெழாதிருந்ததைக் கண்ட சங்கிலி முன்னிலும் அதிகதுணிவோடு யாழ்ப்பாணத்திற் கொடுங்கோலோச்சிக்கொ

ண்டு வந்தான். சிங்களரும் பறங்கியருக்கெதிராய் அவனுடைய சகாயத்தை நாடுவாராயினர். 1547-ல் சங்கிலி தென்னிந்தியாவினின்றும் ஓர் சேனையைவரித்து அதன் உதவியோடு மாயாதுன்னையின் பக்கத்தைச்சேர்ந்து ஜயவர்த்தனகோட்டையைச் சருவினன். பறங்கியருக்குத் தர்மபாலனின் பிதாவாகிய வீதியேபண்டாரம் உபபலமாய்நின்றமையால் சங்கிலியின்பக்கம் தோல்வியடைந்து பின்னிட்டது.

**பரநிருபசிங்கன்.**— இதற்கிடையில் சங்கிலிராசனுக்கு எதிராய் யாழ்ப்பாணத்திலே அவன்சகோதரன் எழுந்தான். இவனைப் பரநிருபசிங்கன் என வைபவமாலையும் வக்று துகிரி பண்டாரம் எனப் போர்த்துக்கீசநூல்களும் (Queiroz) கூறும். சங்கிலி இவனது ஆலோசனையை அறிந்து இவனை நாட்டைவிட்டோட்ட இவன் சில பிரதானிகளோடு போர்த்துக்கீசரைச் சரணடையக் கோவைக்குச்சென்றான். வைபவமாலை இதனை வேறுவகையாய்க் கூறும். அக்கூற்றை மெஸ். முத்துத்தம்பிப் பிள்ளை எழுதியவாறு பின்வருவது.

"சங்கிலி தனது மந்திரிகளுள் ஒருவனாகிய அப்பாமுதலியினது புத்திரியுடைய வடிவழகுகளைக் கேள்வியுற்று அவளைக் களவிற்கவரக் காலம்பார்த்தும் தூதுபோக்கியுமிருந்தான். அதனை அவள் தனது தந்தைக்குஅறிவிக்க, அவன் அவளைப் பரநிருபசிங்கனுடைய அரமனைக்குக் கொண்டுபோய் அடைக்கலம்வைத்து, அவனைநோக்கி 'வேந்த! என்னையும் இக்கன்னிகையையும் அவள்கற்பையும் எனது குடும்பத்தின் பெருமையையும் காத்தருள்' என் றழுது விண்ணப்பஞ்செய்தான். பரநிருபசிங்கன் அப்பாமுதலிக்கு அபயங்கொடுத்துச் 'சங்கிலியினது கொடுமையெல்லாம் பொறுத்தேன், இக்கொடுமை சிறிதும் பொறுக்கமாட்டேன். அவனை அடக்கத்துணிந்தேன். இது செய்யேனாயின் அடைக்கலத் துரோகஞ்செய்தோர்புகும் நரகம் புகுவேன்' என்று சத்தியமுஞ்செய்தான். உடனே ஒரு நிருபமெழுதி 'இதனை ஊர்காவற்றுறைக் காவல்பூண்டிருக்கும் காக்கைவன்னியனிடம் சேர்ப்பி' என்றுகூறி அப்பா னிகையிற்கொடுத்தான். அப்பாவும் அதனைத் தனக்கு விசுவாசமுள்ள ஒரு தூதனிடங் கொடுத்தனுப்பினன். காக்கைவன்னியன் அதனைவாங்கி வாசித்துப் பரநிருபசிங்கனுக்கு உத்தாரமனுப்பிவிட்டு, அடுத்தநாளுதயத்தில் மரக்கலமேறித் தரங்கம்பாடியையடைந்து பறங்கிப் பிரதிநிதியைக்கண்டு கலந்து அவர்கள்வருதற்குக் காலநிச்சயம்பண்ணிக்கொண்டு மீண்டுவந்து யாதுமறியாதான்போன்று தன் அதிகாரத்தில் அமர்ந்தான்."

யாழ்ப்பாண வைபவமாலைக் கூற்றுகிய இச்சம்பவம் திரித்துக் கூறப்பட்டிருத்தலைச். சங்கிலிகாலத்துப் பறங்கியர் நூல்களா லறிகின்றோம். சங்கிலி தன் சகோதரனுக்குரியதாயிருந்த அரசுரிமையைக் கவர்ந்து அவனைக் காவலில்வைத்தானெனவும், அச்சகோதரனே சில பிரதானிகளோடு கோவையை அடைந்தனனெனவும் அந்நூல்கள் கூறுகின்றன. பரநிருபசிங்கனே அச்சகோதரனுமென்பது தெளிவு. அவனோடு அப்பாவும் கோவைக்குச் சென்றனனுகலாம்.

போர்த்துக்கீசர் சங்கிலியைச் சிங்காசனத்தா லிறக்கிவிட்டுக் கோவையில் தம்மைச் சரணடைந்த அவன்சகோதரனைக் கிறீஸ்துவனுக்கிப் பின் அரசாளவைக்க எண்ணமிட்டுக்கொண்டிருந்தனர். முன்கூறியபடி போர்த்துக்கீசஅரசரும் சங்கிலியை மன்னார்க்கிறிஸ்தவர்களின் சங்காரத்தினிமித்தம் தண்டிக்கவேண்டுமெனப் பணித்திருந்தார். ஆயினும் பறங்கியருக்கு அவ்வேளை இந்தியாவிலும் கொழும்புத்திசையிலும் நடந்துகொண்டுவந்தயுத்தங்களினிமித்தம் யாழ்ப்பாணஅலுவலில் தலையிடச் சமயம்வாயாது போய்விட்டது. பறங்கியர் சங்கிலியனை நெருக்காதுவிட வேறொரு காரணமுமிருந்தது. அதேதெனில் இதற்குமுன் சிலகாலமாய்ச் சங்கிலி யாழ்ப்பாணக்கரையையண்டிப் பாய்விரித்தோடும் போர்த்துக்கீசருடைய கப்பல்களைக் கொள்ளையடிப்பித்துப் பொருட்களையும் துப்பாக்கிகளையும் கவர்ந்துகொண்டுவந்தான். பறங்கியர் அவனைஒடுக்கிப் பாடம்படிப்பிக்க வலியின்றி யிருந்துவிட்டனர். ஈற்றில் சூசாஎனும் பறங்கியதேசாதிபதி 1543-ம் ஆண்டளவில் அவனோடு ஒரு சமாதான உடன்படிக்கைசெய்வானுயினுன். சங்கிலி பறித்தெடுத்த பீரங்கிகளை அவனே வைத்துக்கொள்ளவும் பறங்கியருக்கு வருடமொன்றுக்குச் சங்கிலி 5000 செறபின் நாணயமும் இரண்டு கொம்பன்யானையும் திறைகொடுக்கவும் ஏற்பாடுசெய்யப்பட்டது. இந்தப் பொருத்தத்தின்நிமித்தமே முக்கியமாய் மேல்அரசர் சங்கிலியைப் பழிவாங்கக்கேட்டும் போர்த்துக்கீசர் அலட்சியம்செய்துவிட்டனர். 1545-இலும் ஒரு போர்த்துக்கீசகப்பல் யாழ்ப்பாணப்புறங்களில் ஆழ அதிலேற்றியிருந்த விலையுயர்ந்த சரக்குகளைச் சங்கிலி அப்பிக்கொண்டான். அச்சரக்குகளை அவனிடம் உபாயமாய் வாங்கிக்கொள்ளும் நோக்கமும் போர்த்துக்கீசரைச் சங்கிலிமேற் போரெடாமற் றடுத்தது. (Letters of St. Francis Xavier)

**சவேரியார் யாழ்ப்பாணம்வரல்.—** பறங்கியாசாட்சியார் சங்கிலிய அச்சுறுத்திக் கிறீஸ்தவர்களுக்குச் சனுவுசெய்விக்க

முடியாதிருந்ததைச் சவேரியார்கண்டு தாமே நல்லூரிலிருந்த அவன் அரண்மனைக்குச்சென்று அவனோடு கிறீஸ்தவர்களைப் பற்றிய ஒரு சமாதான உடன்படிக்கையைப் பண்ணுவாரானார். இதுநடந்தது 1548—ல். சவேரியார் சங்கிலியைக்கண்டு சென்றபோது பருத்தித்துறைவழியாக வந்தாரெனவும் பருத்தித்துறைச் சந்தையடியில் இன்றைக்கும் காணப்படும் ஓர் புளியமரத்தின்கீழ்ப் பிரசங்கித்தாரெனவும் ஓர் கர்ணபரம்பரை உளது. இப்பரம்பரையை அனுசரித்து ஒல்லாந்தரோடு யாழ்ப்பாணத்துக்குவந்த பல்டேயஸ் பாதிரியாரும் அம்மரத்தின்கீழ்ப் பிரசங்கித்தார். இவருடைய நாமமே இப்புளிக்கு இன்றைக்கும் வழங்குகிறது. (Baldæus tree)

மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை சவேரியார் யாழ்ப்பாணம்வந்ததைக் குறித்தபின் எழுதுவது:— "சில்காலங்கழித்துப் பறங்கிகள் ஒருகோயில்கட்ட இடங்கேட்டனர். சங்கிலி அதுகூடாதென அவரை ஓட்டிவிட்டான். சவேரியார் அவ்வளவில் மனஞ்சலித்து இலங்கையைவிட்டுச் சீனதேசஞ்சென்று அங்கே காந்தன்பட்டினத்தில் 1552-ல் தேகவியோகமாயினர். அதன் பின்னர்ப் பறங்கிகள் நெடுங்காலம் பேசாதிருந்து 1546—ல் ஒருபடையோடு யாழ்ப்பாணத்தையடைந்தனர். சங்கிலி சமாதானம்பேசிப் பதினோராயிரம்பவுணும் சில அரியநிதிகளுங்கொடுத்தான். அவ்வளவிற் பறங்கிகள் மீண்டனர்" என்கின்றார்.

பறங்கியரசாட்சியார் அந்நாளில் சங்கிலியனோடு ஒன்றுஞ்செய்யோமென் றிருந்துவிட்டாரேயன்றிக் கோயில்கட்ட இடங்கேட்டாரில்லை. முதன்முதல் பறங்கியரசாட்சியார் மூலமாய் யாழ்ப்பாணத்திற் கத்தோலிக்க கோவில்கட்டப்பட்டது 1580-இல் எனப் பின்னுற்காண்போம். சவேரியார் அவ்வளவில் மனஞ்சலித்துச் சீனதேசஞ் சென்றுறென்றதும் பொய். அவர் இலங்கையிலிருந்து கோவைக்குப்போய் இன்னும் இரண்டுவருடம் பலவிடங்களிற் கத்தோலிக்கசமயத்தைப்போதித்தபின் 1552 இலேயே சீனம்நோக்கிச்சென்று காந்தன்பட்டணத்திலல்ல சான்சியன்தீவில் மரித்தார். அவர் திருச்சரீரம் கோவைக்குக் கொண்டுவரப்பட்டு இன்றைக்கும் அழியாதிருக்கிறது. அய்யால் பறங்கியர் யாழ்ப்பாணத்திற் படையெடுத்துவந்ததும் சங்கிலி சமாதானம்பேசியதும் 1564-ல் அல்ல, 1560-லாம் என்றறிக. இச்சம்பவம் மேலே விரித்தெழுதப்படும்.

**வீதியேபண்டாரம்.**— இஃதிவ்வாறாக ஜெயவர்த்தனகோட்டையில் வீதியேபண்டாரம் போர்த்துக்கீசர் தமக்கும் எதிரியா

 இ 1552-ல் மறியலாக்கப்பட்டிருந்தான். மறியலால் ஒழித்தோடி அவர்க்கெதிராய்ப் போர்முனைந்துகொண்டு மாயாதுன்னை பக்கத்தில் நின்று 1556-ல் மாயாதுன்னையாலும் துரத்துண்டு யாழ்ப்பாணத்தையடைந்து சங்கிலியின் யுடைக்கலத்திலிருந்தான். அவனுக்கு உபபலமாய்ப் போருக்கெழ வாக்குப்பண்ணி அந்தவாக்கை உறுதிப்பண்ணுமாறு நல்லூர்க் கோவிலில் ஓர் விழாக்கொண்டாடுவித்தான். விழாநேரத்தில் சங்கிலியும் வீதியேபண்டாரமும் உடன்படிக்கைசெய்யக் கூடியபோது தற்செயலாய்வெடித்த ஓர் துப்பாக்கிச்சத்தத்தால் வீதியேபண்டாரம் தன்சீவனுக்கெதிராய் ஓர் சூழ்ச்சிசெய்யப்படுகிறதென எண்ணி வாளையுருவி அங்குமிங்கும் வீசத்தொடங்கினன். அவன்சேனுபதி விசயகுமாரனும் பலதமிழரைத் தென்புலஞ்சாய்த்தான். தமிழரும் வெகுண்டு சிங்களரைத்தாக்கினர். இக்கலிபிலியில் வீதியேபண்டாரமும் மகனும் கொல்லப்பட அவன் திரவியங்களும் (புத்ததந்தமுட்பட) மனைவி ஆதியபெண்களும் சங்கிலிகைப்பட்டார்.

சங்கிலி முன்னிலும் அதிக கொடுமையுள்ளவனானன். நாள்தோறும் அவன் பல பிரதானிகள் குடியானவர்களைத் தன் அரண்மனையின் முற்றத்திலிருந்த ஓர் பெருங்கல்லின்மேற் கிடத்திச் சிரச்சேதம் செய்வித்துவருவானென அக்காலத்துப் பறங்கியரின் நூல்கள் கூறும். (Couto)

வைபவமாலை கூறுகின்ற சிலசெய்திகள் அவனது கொடுங்கோன்மையை விளக்கும். தன்குடைக்கீழ் வாழ்ந்த சிங்களர் சாவகர் வன்னியர்களைத் துரத்தி விட்டமையும், தன் சுய குடும்பத்திலேயே அவன்செய்த அநியாயங்களும் இதற்குச்சான்றும். ஆயினும் சங்கிலியின்காலத்தில் சில திருத்தங்களும் நடந்தன.

**யாழ்ப்பாணத்திற் படையேற்றம்.**— ஆயின் சங்கிலியின்கொடுமைகளும் அவன் வீதியேபண்டாரத்துக்கு உதவிசெய்தமையும் கத்தோலிக்கருக்கு அவன்காட்டிவந்த எதிரிடையும் எனும் இவைகள் அவனைப் போர்த்துக்கீசர் கவனிக்கும்படி செய்தன. ஈற்றில் லிஸ்போனில்நின்று வந்த கட்டளையின்படி கொன்ஸ்தந்தீனு பிறகன்சா எனும் கோவைப் பிரதிராசா (Viceroy) அவன்மேற் படையெடுத்துவரலானர். இது நடந்தது 1560-ல். பறங்கியர் 99 கப்பல்களோடு கொச்சியினின்றும் புறப்பட்டு கன்னியாகுமரியைச் சுற்றியோடி ஐப்பசிமாசத் தொடக்கத்திலே மன்னரில் வந்துசேர்ந்தனர். கொச்சி மேற்றிரா

ணியாரும் இக் கப்பற்படையோடு வந்தார். அப்பால் ஐப்பசி மாசம் 20-ந் திகதி கொழும்புத்துறையில் சேர்ந்து நங்கூரம் போட்டனர். ஆயின், கொழும்புத்துறையிலும் பண்ணைத்துறையே இறக்குதற்கு வசதியெனத் தீர்மானித்து முதற் சிறுத்தீவிலிறங்கி மேற்றிராணியார் பூசைபண்ணிப் பிரசங்கிக்க 1200 பேர் மாத்திரங்கொண்ட போர்த்துக்கீச சேனையானது யுத்த சந்நத்தமாயிற்று. பின் பண்ணைத்துறையிலிறங்கி நல்லூரை நாடிச்சென்றூர். தமிழர் தவளக்கேடயமுள்ள ஓர் இளவரசன் தலைமையின்கீழ் உடனே காணப்படப் பறங்கியர் குண்டுமாரிபொழிந்து அவர்களைப் பின்னிடச்செய்தனர். மாலையாய்விட்டமையால் பறங்கியர் வீதிகளை அரணுக்கிக்கொண்டு இராக்கழித்த பின் காலையில் நகரைநோக்கி விரைந்துசெல்லுதலும், தமிழர் சிலர் கழிமண்ணும் கல்லும் கலந்து கட்டிய சிவர்களினின்றும் சிலர் அகழ்களினின்றும் துப்பாக்கிப்பிரயோகஞ் செய்தனர். பறங்கியர் இவற்றைச் சட்டைபண்ணுது நெருங்கிப்போய் நல்லூர்க்கோட்டை மதில்களைஉடைத்து அதின் அகன்ற உள்வீதியால் நடந்துசென்றூர். அங்கே ஓலைகளின்கீழ் மறைத்துவைத்திருந்த ஓர் பீரங்கிவெடித்துச் சிலரைக் கொன்றுவிட்டது. ஆயினும் முதுகிடாமல் முன்னடிச்சென்று தமிழரை ஒருபாற்றுரத்தப் பின்னணியைத் தமிழர்மொய்த்துத்தாக்கிச் சரமாரிசொரிந்துகொண்டிருந்தார். பிரதிராசாவும் அருந்தப்பாய்ச் சீவனேடு ஓடிவந்து முன்னணியைச்சேர்ந்தான். ஆயினும் தமிழ் இளவரசனல் நடத்தப்பட்ட பின்னணியுத்தம் நாள்முழுதும் உக்கிரமாய் நடந்துகொண்டிருந்தது. ஈற்றில் இளவரசன் அரசனுடையகோட்டைக்குள் ஓடிமறையப் பறங்கியர் அவன்சேனையை முரியவடித்துத் திரவியங்களையும் அவனது அழகியமனைவியையும் கைப்பற்றிக்கொண்டார். இதற்கிடையில் இராச்சென்றுபோயினமையால் பறங்கியர் சிலவீடுகளைப் பிடுங்கிவிட்டிட்டு வீதிகளையே அரணுக்கிக்கொண்டு இளைப்பாறச்சென்றூர்.

ஆயின் சங்கிலி தன் அரண்மனைக்குத் தீயிட்டு, மனைவியையும் பிற இராச ஸ்திரீகளையும் இளவரசனின் காவலில்வைத்துவிட்டுக், கொண்டுபோகக்கூடிய திரவியங்களோடும் ஓடிக் கோப்பாயிலிருந்த வேறொரு கோட்டைக்குச்சென்றான். இளவரசனும் சிறிதுநேரத்துள் சங்கிலியின் பின்போவானுயினன். பறங்கியர்விடிந்தபின்னே எரிகின்ற மாளிகையினுட்புகுந்தார். அவர்கள்கையிலகப்பட்ட பொருட்களிலொன்று மாளிகையோடுசேர்ந்த ஓராலயத்திலே கண்டெடுத்த புத்ததந்தம். அது வீதியேபண்டாரம் தன்னுடன்கொணர்ந்த திரவியங்களுளொன்று. பறங்கியர் அதை வெகுசாக்கிரதையாக எடுத்துவைத்துக்

கொண்டனர். அப்பால் பயந்தோடிவிட்ட நகரவாசிகளுக்குப் பறைசாற்றுவித்து அழைக்க, அவர்கள் மாற்றான்படைக்கஞ்சி க் கோழிகள், நெய், பால், கிழங்குவகைக ளாதியவற்றோடுவந் து பறங்கியரைப்பணிந்து தத்தம் மனைகளிற் புகுந்துகொண் டார். கொச்சி மேற்றிராணியாரும் குருமாரும் கோட்டையி லேயே வசித்துச் சனங்களைக் கத்தோலிக்கசமயத்திற் சேர்க் கத் தலைப்பட்டனர்.

பின் கொன்ஸ்தந்தீனு பிறகன்சா கோட்டையை ஓர் சே னபதிகையில் விட்டுச் சங்கிலியைத் தூத்திக்கொண்டு சென் றான். கோப்பாய்க் கோட்டையைச் சேர்ந்தபோது அரசன் அதைவிட்டோடிவிட்டதாகக் கண்டு பிறகன்சா அதைத் தனது தலைத்தானமாக்கிக்கொண்டு அங்கு தங்கிவிட பறங்கிச்சேனை அரசனை அப்பாற் தேடிச்சென்று அவனுடைய வேறொரு ஒ ழிப்பிடத்தை அடைந்தது. அங்கு அரசனில்லாமையால் வே று பலவிடங்களிலும் தேடி ஈற்றில் சங்கிலியை ஆனைபிறவுச் சலசந்திக்கப்பாற் கண்டனர். இதற்கிடையில் சங்கிலியின் சே னபதிகளுள் ஒருவனான வீரசிங்கம் என்பான் 1500 பேரோ டு பறங்கியர் பக்கமாகிவிட்டான். ஆயினும், சங்கிலி சலியாது திரிகோணமலை வன்னியனனுப்பிய உபபலத்தோடு பறங்கிய ரை எதிர்த்தான். பறங்கியர் சலசந்தியைக்கடந்து சங்கிலியை வெகுதூரம் வன்னிக்குட் தூத்திக்கொண்டுசென்று பசியாலு ம் நோயாலும் வருந்திக்கொண்டிருந்தனர். ஈற்றில் சங்கிலி யைப் பிடிப்பதரிதெனக்கண்டு திரும்பிப்போக ஆலோசனை செ ய்துகொண்டிருக்கையில் சங்கிலியும் பறங்கியரோடு சமாதா னம்பண்ணவிரும்பித் தூதர்களையனுப்பினான்.

**சங்கிலியோடு உடன்படிக்கை.**— கார்த்திகைக்கடைசியில் ச மாதானஉடன்படிக்கை நடப்பதாயிற்று. அவ்வுடன்படிக்கையி ன்படி சங்கிலியே யாழ்ப்பாணஅரசை ஒப்புக்கொண்டு ஆண் டுவரவும், பறங்கியருக்கு 12 கொம்பன்யானையும், 1200 "ப தக்க"மும் இறைகொடுத்துவரவும், கிறிஸ்துவர்களை ஒடுக்காதி ருக்கவும், வீதியேபண்டாரம் கொண்டுவந்த திரவியங்களையெ ல்லாம் பறங்கியருக்குக் கையளித்துப்போடவும், பறங்கியர் இ ந்தப் படையெழுச்சியிலே செய்த செலவைக் கொடுத்துப் போடவும், கத்தோலிக்க ஆலயங்களுக்காக அரசிறையிலே ஒருபகுதி கட்டவும், ஈற்றில் பட்டத்துக்குமாரனை அவனது முதலிமார் இருவரோடும் பிணையாகப் பறங்கியரிடம் ஒப்புவி க்கவும் ஒழுங்குசெய்யப்பட்டது. பொருத்தமானது இரண்டு பாஷைகளிலும் வரையப்பட்டு முடிந்து, பிணையாட்களும் ஓர்

தோணிமூலமாய் ஆனையிறவில்நின்று கடற்படைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். சங்கிலி அரசாளத்தொடங்கப் பிரதிராசாவும் நல்லூருக்குத்திரும்பினன்.

தமிழரின் எழுச்சி.— ஆயின் சிலநாட்களுள் திடீரென்று தமிழர் அவ்வவ்விடங்களிலே பறங்கியருக்கெதிராய் எழுந்து பறங்கியரையும், குருமாரையும், கிறீஸ்துவர்களையும் கண்டகண்டவிடமெல்லாம் கொல்லத் தலைப்பட்டனர். பறங்கிச்சேனை நோயாலும் மரணத்தாலும் பெலமற்றுச் சடுதியாயுண்டுபட்ட இந்தஎழுச்சியை அடக்கமுடியாமல் திகைத்துக்கொண்டிருந்தது. பிரதிராசா அருமையாய்த் தப்பிஓடினன். கொச்சி மேற்றிராணியாரும் புதுமையாய்த் தமிழர்கையிலகப்படாது பண்ணைத்துறைக்குக் கொண்டுபோகப்பட்டார். தமிழர் கோப்பாய்க் கோட்டையைப் பிடித்துக்கொண்டு நல்லூரையும் மொய்த்து வளைந்தனர். சமயோசிதமாய் நாகபட்டணத்திலிருந்தும் பறங்கியருக்கு ஒரு உபபலம் வந்திராவிட்டால் நல்லூரிலிருந்த பறங்கியரெல்லாம் நாசமாய்ப்போயிருப்பர். உபபலம்வரவே சங்கிலி தன்மகனைப் பிணையாலெடுக்கும் நோக்கமாகக் கொன்ஸ்தந்தீனுவோடு சமாதானம் பேசுவித்தான். பிரதிராசா சம்மதியாமல் வெகுகஷ்டத்தோடேயே நல்லூரிலிருந்த பறங்கிச்சேனையை விடுவித்துக்கொண்டு யாழ்ப்பாணத்தைவிட்டுப் பயணமானன். போம்போது சங்கிலியினுடைய முத்துப்பந்தரின் மேற்பாகத்தையும் கொண்டுபோனன். பிணையாக விடப்பட்டிருந்த இளவரசன் கோவைக்கனுப்பப்பட்டு அங்கு 1571-ம்வரு கிறீஸ்துவனுகி மரித்தான். வீதியேபண்டாரத்தோடு வந்த ஸ்திரீகள் கோட்டைக்கு அனுப்பப்பட்டனர். புத்ததந்தத்தைப் பறங்கியர் பைகோவை அரசன் 400000 ரூபா கொடுப்பதாகக்கேட்டும் கொடாமல் கோவையிலே எரித்துச் சாம்பராக்கிவிட்டனர். (Couto, Queiroz)

மன்னார்க்கோட்டை.— யாழ்ப்பாணத்தினின்றும் தோற்றோடிய பறங்கியர் மன்னாரிலிறங்கிஅங்கு ஓர் கோட்டையைக்கட்டி அதைத் தமதாக்கிக்கொண்டனர். கோட்டைகட்டுங்காலையில் மாதோட்டத்தை ஆண்டுவந்த மகத்தன் என்பவன் 3000 வீரரோடு பறங்கியரைச்சருவிக்கட்டடத்தை முற்றுப்பெறுவிக்கவிடாமல் தடுத்தும் அதுவாய்க்கவில்லை. மன்னார்க்கோட்டைக்குத் திருக்கேதீச்சுரத்தினின்று கல்லெடுத்துக் கொண்டுவரப்பட்டது. அக்காலம் அக்கோவில் சிரணமடைந்துகிடந்தது.

பறங்கியர்கீழ்ப் பிரதியாகூ.—அப்பால் யாழ்ப்பாணச்சரித்திரம் தெளிவாய்க் காணப்படவில்லை. சங்கிலியின்பின் கொங்கிர

பிறு (அல்லது கச்சிநயினு) எனப்பட்ட ஒருவன் சிங்காசன த்தை அபகரித்திருந்தான். இவன்பெயர் இவனைத் துலுக்கனெ னக் காட்டுகின்றது. வடகரைச்சோனகர் பன்முறையும் யாழ் ப்பாண அரசர்களின் சேனையிற் பிரபலவீரர்களாய் விளங்கிய துண்டு. அவர்களுள் ஒருவனே சங்கிலியிறக்க அரசை அபகரி க்கொண்டவனுதல்வேண்டும். இதுவும் பின்வரும் விபரங்களு ம் பறங்கியர்நூல்களிற் கண்டவை. யாழ்ப்பாணஅரசு இவ்வா று பராதீனப்பட்டு அதனுல் உள்ளூர்க்கலகம் எழுந்திருப்பதை ஜோர்ஜ் தெ மேலோ எனும் பறங்கிச்சேனுபதி அறிந்து யா ழ்ப்பாணத்திற் படையேற்றி அரசனைச் சிங்காசனத்தாலிறக்கி வேறெருஅரசனை நியமித்துச் சென்றுன். இவன்பெயர் விள ங்கவில்லை. இவனைக் கொங்கிநயினு சிறிதுகாலத்துட் சதிமான மாய் உயிர்போக்கிவிட்டு மீண்டும் அரசாளத்தொடங்கினுன். அப்பால் கொங்கிநயினுவைத் தெமேலோ பிடித்துக் கொல்லு வித்து இராசகுடும்பத்திலுள்ள பெரியபிள்ளை எனும் ஒருவ னை அரசனுக்கிச்சென்றுன். பெரியபிள்ளை காலத்திலேயே க த்தோலிக்க ஆலயங்கள் யாழ்ப்பாணத்தில் முதன்முதற் கட்ட ப்படலாயின. பெரியபிள்ளை உட்கலகமின்றி அரசாண்டிறக்க, "ராசராசதேசமகராசசேகரம்" என்பவன் 1590 வரையில் அ ரசனுனுன். இவன் சங்கிலியின்மகன்போலும். இவன் 1591—ல் சிலதமிழரையும் வடகரையாரையும் அணிவகுத்து மாதோட் டவழியாய்ச்சென்று மன்னுர்க்கோட்டையைத் தாக்கினுன். ப றங்கியர் நூனே பேணுண்டெஸ் தெ அத்தேட் என்பவன்கீழ் வீரமாய்ப்பொருது அரசனைமடக்கி ஒடுக்கினர். ஆயினும் அவ ன் தோற்றேடாது குஞ்ஞாலே மரக்காயர் எனும் கீழக்கரை த்தலைவ னெருவனுடைய உபபலத்தை எதிர்பார்த்துக்கொண்டு போர்கொடுத்தபடியே நின்றுன். குஞ்ஞாலே வருவதையறிந் த பறங்கியர் கொழும்பினின்றும் அவனைப் பின்தொடர்ந்து சிலாபத்துறைக் கணித்தாயுள்ள காரைதீவுக்கடலில் அவனை மு றியவடித்து ஓடிவிட்டனர். யாழ்ப்பாணஅரசனும் வலியிழந்து முதுகிட்டான்.

இரண்டாம் படையேற்றம்.— யாழ்ப்பாண அரசனின் இவ்வா றன சத்துருஒழுக்கத்தைக்கண்ட பறங்கியர் இனி அவனை அ டக்காதொழிவது தமக்குக் கேடெனஉணர்ந்து அந்திரே தெ பூர்த்தாடோ என்பவனைச் சேனைநாயகமாய்க்கொண்ட ஓர் ப லத்த கடற்படையோடு ஐப்பசிமீ 26—ந் திகதி கொழும்புத்து றையில் வந்திறங்கினுர். தமிழர் பறங்கியரை எதிர்பார்த்து அ ணிவகுத்துநிற்கப் பறங்கியர் வெடிதீர்ந்து தமிழரைத் தாக்கி க்கொண்டு கரைமார்க்கமாய்ச் சென்று பண்ணைத்துறைவரை

க்கும்போய் அங்கு சோனகர் கட்டியிருந்த பண்டகசாலைகளை க் கைப்பற்றிக்கொண்டு இராத்தங்கினர். விடிந்தவுடன் தமிழ ரைத்தாக்கிச் "சங்கிநயினர்" எனுமிடத்தில் போர்தொடுக்க, தமிழர் அம்புகளையும் குண்டுகளையும்பொழிந்தும் ஆற்றாது தோற்றோடினர். அரசனின் மருகனான "காக்கோ" என்பவ னும் மாண்டான். அவனது சங்குக்கேடயத்தைப் பறங்கியர் கைப்பற்றினர். அப்பால் பத்துமணியளவில் நல்லூரையடைந் தனர். அங்கு இருகோவில்களுக்கிடையில் தமிழர் பறங்கியரை எதிர்த்து உயிர்போகுமளவும் விடோமெனப் பொருதினர். வெகுமும்முரமான போர்நடந்தது. அன்று போர்கொடுத்த த மிழரெல்லாம் மாண்டனர். கோயிற்பிராமணனும் இறந்தோரு ள் ஒருவனானன். பறங்கியர் அரசனைத் தேடிப்பிடித்து அவன் சிரசைக்கொய்து ஓர் தண்டத்திற் தொங்கவைத்தனர். சிறை யாக்கப்பட்டோருள் காக்கோ இளவரசனின் சகோதரன் "எ ந்தர்மன்னசிங்க" குமாரனும், இருவர் இராணிமாரும் பிள்ளை களும், காக்கோ இளவரசனின் மனைவியும், அவன் மக்களான சங்கிலிகுமாரனும் அவனுடன்பிறந்த இரட்டைப்பிள்ளையும் இ ருந்தனர்.

வைபவமாலை மாறுபாடு.— இதுகாறும் எடுத்துச்சொல்லி யவை கண்கண்ட சாட்சிகளான பறங்கியரால் வரைந்து வை க்கப்பட்டவை. வைபமாலை இச்சம்பவங்களை முற்றாக திரிபுப டுத்திக் கூறுவதாயிற்று. சோனகர் பண்ணைத்துறையிற் கட் டிய பண்டகசாலைகளைப் பறங்கியர் கட்டியவை எனவும், பறங் கியர் அவற்றை அழிக்க, சங்கிலி அழித்தானெனவும் "காக் கோ" (அல்லது காக்கா) எனுமிளவரசனைக் காக்கைவன்னியனெ னவும் கூறிப் பல மாறுதலான கதைகளை வரைந்ததோடமை யாது பலவருஷங்களின்முன் இறந்துவிட்ட சங்கிலியை 1591-இனும் அரசாளுவோனாகக்காட்டிற்று. சங்கிலி காலத்துப் பற ங்கியரின் போரையும், அவனுக்குப்பின் நான்காவதாய் ஆண் டவனுடைய காலத்துப் போரையும் ஒன்றாக்கி விநோதமான யுத்தசரித்திரமொன்றை ஏற்படுத்திவிட்டது. இத்தவறு பின் பிரதிராசாவாய் அரசாண்ட சங்கிலிகுமாரனையும் பாராசசேக ரன்மகன் சங்கிலியையும் ஒருவனெனக் கருதியதினால் எழு ந்ததுபோலும்.

பாராசசேகர பண்டாரம்.—அதுநிற்க தெபூர்த்தாடோ யாழ் ப்பாண அரசைப் பறங்கியர் கைக்கொள்ளின் தமிழர் ஒப்பா ரென ஊகித்து இராசவம்மிசத்தில் ஒருவனை அரசாள வை க்க எண்ணி "எந்தர் மன்ன சிங்ககுமாரனை" சிங்காசனத்தில்

ஏற்றிவிட்டான். இவன் பராராசசேகரபண்டாரம் எனும் பெ
யரோடு 1591 தொடக்கம் அரசாண்டான். தெபூர்த்தாடோ
முன்னைய கலகத்திற் சேர்ந்திருந்த 880 வடகரையாரையும்
சோனகரையும் கொல்லுவித்தபின் அரசனுக்குக் காவலாக
நூறுபறங்கியர் கொண்ட ஒரு சேனையையும் வைத்துப் போயி
னன்.

ஆயின் பராராச சேகரனுடைய அரசை யாழ்ப்பாணத்தா
ருட் சிலகட்சியார் ஏற்றுக்கில்லை. இன்னோர் தஞ்சாவூர் அரச
னோடு ஆலோசனைசெய்து தொகைப்பட்ட வடகரையாரும் ம
றவரும்கொண்ட ஒரு சேனையை அழைப்பித்து ராமேசுரத்தி
னின்றும் ஓர் அரசனை வரித்துச் சிங்காசனத்திலிருத்தப் பிரயத்
தனப்பட்டனர். இதனையறிந்த பராராசசேகரன் மன்னாரிலிரு
ந்த பறங்கிக் கொம்மாண்டோருக்கு ஓலமிட்டான். கொம்மா
ண்டோர் அரசனுக்குப் பக்கத்துணையாய் ஓர் பறங்கிச் சேனை
யை அனுப்பிவிட்டு வடகரைச் சேனையைத் தலைமன்னாருக்கப்
பாற் துரத்தி முறியவடித்தான்.

அப்பால் பறங்கியர் பராராசசேகரனில் சமுசயங்கொள்ள
நேரிட்டது. இவன் கண்டியரசனான விமலதர்மன் பக்கமாய்
நிற்கிறானெனவும், யோகிவேஷமிட்டுக்கொண்டுவரும் வடகரை
யாரை யாழ்ப்பாணத்தினூடாய்ச் சிங்களருக்கு அனுப்பிக்கொ
ண்டிருக்கிறானெனவும் வதந்தியாயிற்று. ஆயின் மன்னார்க்
கொம்மாண்டோரின் கேள்விப்படி பர்ராசசேகரன் யோகிகள்
இனி யாழ்ப்பாணத்துக்குள் வரப்படாதென ஏற்பாடு செய்
தமையால் பறங்கியர் பேசாதிருந்தனர்.

**பராசசேகரன் மரணம்.**—பராராச சேகரனைப்பற்றிய சமுச
யங்கள் அம்மட்டில் அடங்கினவல்ல. 1607-ல் இவன் மன்னா
ரைத்தாக்க உன்னுகிறானெனவும், கிறீஸ்துவர்களைத் துன்புறு
த்துகிறானெனவும் சங்கதிபரவிப் பறங்கியர் மனதைக் கொதிக்க
ப்பண்ணிற்று. இவன் 1612–ல் வடகரைக்கு ஆலயதரிசனஞ்
செய்வான்போலச் சென்றபோது படைவீரரை வருவிக்கச் செ
ன்றானெனப்பட்டது. ஆதலால் இவனை ஆசனத்தால் இறக்கி
விடக் கட்டளையாயிற்று. ஆயினும் மன்னார்க் கொம்மாண்டோ
ரின் சனுவாலும் இவனால் பல உதவியடைந்திருந்த கிறீஸ்த
குருமாரின் சலுகையாலும் தப்பினான். பிற்கூற்றில் பராராசசே
கரன் கிறீஸ்த குருமாரோடு முன்னினும் அதி ஐக்கியமாகி அ
வர்களது சமயத்தையும் தழுவி விடுவான்போலக் காணப்பட்ட
ான். 1615-ல் அவன் மரணப்படுக்கையில் கிடந்தபோது அ

வனைக் குருமார் தரிசித்துக் கிறீஸ்துசமயத்திலுட்படுத்தச்சென்றனர். ஆயினும் சங்கிலி குமாரனின் தடையால் அது நிறைவேறாது போயிற்று.

**சங்கிலி குமாரன்.**—பரராசசேகரனிறக்க அவனது மூன்று வயசுக்குமாரன் அரசுரிமைக்காரனானான். சிறுவன் வாலதசையடையுமட்டும் அரசகேசரி எனும் அவன் மாமன் (அல்லது சிறிய தந்தை) யைப் பறங்கியர் பரிபாலகனாக்கினர். சங்கிலி குமாரன் இதுகண்டு கலகம் விளைப்பானாயினான். அரசகேசரி ஒருநாள் பகல்வேளை அரண்மனையில் சயனித்திருக்க "பெரியமிக்கப்பிள்ளை" ஆராய்ச்சி காலுருவிக்கொண்டிருந்தான். சங்கிலிகுமாரன் சூழ்ச்சியாய்ச் சில வீரர்களோடும் உட்புகுந்து அரசகேசரியைக் கொன்று அரமனைக்கதிபதியானான். விரைவில் இராசகுடும்பத்தின் அங்கத்தவர்களெல்லாம் தென்புலம் சாய்க்கப்பட்டனர். தன் மைத்துனன் "லுக்குகுமார"னை உயிர் போக்காது அவன் கண்களை அகழ்ந்துவிட்டான். மிக்கப்பிள்ளை ஆராய்ச்சி தப்பிஓடி மன்னாரிற் பறங்கியரைச் சரணடைந்தான். பறங்கியர் சங்கிலி குமாரனின் பெலத்தை உணர்ந்துபோலும் அவனை அவ்வேளை அடக்கத்துணிந்தாரில்லை. ஆதலாற் சங்கிலிகுமாரனே அரசுரிமைபூண்ட இளவரசனைத் தன்னோடு வைத்துக்கொண்டு பிரதிகாவலனாய் அரசாளுவோனானான். இச்சம்பவங்களும் இளவரசனுக்குச் சீவ அபாயம் நடக்குமோ எனும்பயமும் சங்கிலி குமாரன் ஓர் தேவடியாளை வைத்திருந்தமையும் சனங்களுள் திருப்தியீனத்தை விளைத்து விரைவிலே தேசகலகஞ்செய்ய அவர்களைக் கிள்ளி யருட்டிவிட்டன.

**உள்நாட்டுக்கலகம்.**—கலகக்காரர் கரையாரச் சனங்களைச் சேர்த்துக்கொண்டு ஆயுதபாணிகளாய்ச் சங்கிலியின் அரமனையை முற்றுகையிட்டனர். சங்கிலி வெளியில் வரல்வேண்டுமென்றும்பால அரசனைத்தம்மிடம்ஒப்புவித்து, மற்றைய அரசகுமாரர்களைக் கொன்ற பாதகர்களையும் பழிவாங்கத் தரல்வேண்டுமென்றும், சனக்கூட்டம் கூக்குரலிட்டுக்கொண்டிருந்தது. மேலும் அவன் வைத்திருந்த தேவடியாளைத் தள்ளிவிட்டு இராசஸ்திரீகளுள் ஒருத்தியை மணமுடித்துக்கொள்ளாதிருப்பின் இராச்சியத்தைப் பரிபாலிக்க விடோமெனவும் பயமுறுத்தினர். சங்கிலி சனத்திரளின்முன் எதிர்த்துநிற்க மாட்டாமல் அரசகுடும்பத்துக் கொலையாளிகளை ஒளித்தோடச் செய்தபின், ஒரு பலகணிவழியாய் அரசகுமாரனைக் கையிலேந்திப் பிரசைகளுக்குக் காட்டினான். சனத்திரள் திருப்திப்படாமல் அரண்மனையினுட்புகுந்து லுக்குகுமாரனைக் குருடாக்கினவனான அம

ரக்கோன் என்பவனைப் பிடித்து வீதிகளில் இழுத்துச்சென்று கொன்றுவிட்டனர். இதற்கிடையில் மன்னார் கொம்மாண்டோரும் சங்கிலிக்கு உதவியாய்ச் சிலரை அனுப்பியிருந்தான். ஆயினும் கலகம் நாடோறும் மும்முரமாகச் சங்கிலி நல்லூரை விட்டோடிப் பண்ணைத்துறையருகிற் குருமார் கட்டியிருந்த கோவிலில் அடைக்கலம் புகலானான். பின் தஞ்சாவூரினின்றும் ஓர் சேனையை அழைத்துக்கொண்டு முதலிமாருக்கெதிராய்ப் பொருது வென்று கலகத்தை ஒருவாறு அமர்த்தினான்.

பிலிப்தே ஒலிவேற.—அப்பால் சங்கிலியின் நடபடி பறங்கியருக்கு உவப்பாகாது போயிற்று. நிகபித்தியன் எனும் ஓர் சிங்கள இராசதுரோகிக்கு அவன் அடைக்கலம் கொடுத்தானெனவும், செனறற் எனும் கண்டியரசனைப் பறங்கியருக்கு மாறாய் எழத் தூண்டி விட்டானெனவும், ஈற்றில் ஒல்லாந்தரைத் தனது இராச்சியத்துக்கு அழைத்தானெனவும், பறங்கியர் கேள்வியுற்று அவனை அரசுபத்தியத்தினின்று நீக்கக் கருதிக்கொண்டிருந்தனர். பறங்கியருக்குக் கொடுக்கும் திறையையும் சங்கிலி மறுத்துவிட்டான். ஆகவே பறங்கியர் பிலிப்தெ ஒலிவேறு என்பவனை ஓர் கரைப்படைக்குத் தலைவனாக்கிச் சங்கிலிக்கெதிராய்ப் படையேற்றுமாறு கொழும்பினின்றும் 1618-ம் ஆண்டு அனுப்பிவிட்டனர். ஒலிவேறு திறைகொள்ள வருவதாகக் கதை பரம்பியிருந்தமையால் சங்கிலி சமுசயப்படவில்லை. சங்கிலியை அடக்கி, அவன் எதிர்த்தானாயின் கொன்றுவிட்டு அரசுரிமையைக் கைப்பற்றுமாறு ஒலிவேறுவுக்கு இரகசியமான கட்டளையிருந்தபோதிலும் திறைகொள்ளும் நோக்கத்தையே வெளியிற் காட்டவேண்டியவனானான். அவன்சேனை 150 பறங்கியரும் 3000 "லஸ்கறீன்" களும் கொண்டதாயிருந்தது. இச்சேனையோடு அவன் கரைமார்க்கமாய்ச்சென்று பூநகரியைச்சேர்ந்து, யாழ்ப்பாணத்தினின்றும் சங்கிலி தானே அனுப்பிய தோணிகளிலேறிக் கடல்கடந்து பண்ணைத்துறையிலிருந்த பறங்கியரின் குடியேற்றத்தை அடைந்தான்.

அடுத்தநாள் பிரதான குருவானவர் மூலமாய்ச் சங்கிலிக்குச் செய்தியனுப்பித் திறைப்பணத்தைக் கேட்பிக்க, இவன் போக்குச் சொல்லிக்கொண்டிருந்தமையால், பறங்கியர் போருக்கணிவகுத்து எழுந்தனர். மன்னார் கொம்மாண்டோரும் இதற்கிடையில் ஓர் சேனையோடுவந்து ஒலிவேறுவைச் சேர்ந்துகொண்டனன். சங்கிலியின் சேனையொன்று கரையாரின் தலைவனின்கீழ்ப் பறங்கியரை வண்ணார்பண்ணையெனும் வயற்பு

றத்திலிருந்த பனங்கூடலில் எதிர்த்துச் சருவிற்று. பறங்கியர் அதைத்தாக்கி முரியவடித்தனர். தமிழர் கோட்டைக்கு வெளியரணாய் நிரைத்திருந்த நாகதாளி முட்களின்மேல்விழுந்தோடிமறைந்தனர். சங்கிலி இனி ஆற்றாதெனக்கண்டு இராச்சென்றபின் மறைவாய்த் தோணியேறி வடகரையை நாடிப் போகையில் எதிர்காற்றுலல்லுண்டு பருத்தித்துறையை அடைந்தான். மறுநாள் மீண்டு வேறொருதோணியில் ஒளித்தோடுகிறானெனக் கேள்வியுற்ற பறங்கிகள் தம்தோணிகளைப் பாய்விரித்தோடிச். சங்கிலியையும் இராணிகள் இளவரசர்கள், இளவரசிகளையும் அவர் திரவியங்களோடு குடாக்கடலிற் பிடித்துக்கொண்டு மீண்டனர், கைதிகளை ஒலிவேறாவிடம் கொண்டு வந்தபோது சங்கிலியும் கூட்டாளிகளும் விசாரிக்கப்பட்டு கூட்டாளிகளுட்பலர் தூக்கிக்கொலலப்பட்டனர். இராணியும் அரசகுமாரத்திகளும் குருமாருடைய அடைக்கலத்தில் விடப்பட்டனர். சங்கிலி நல்லூரில் மறியல் வைக்கப்பட்டான். இவற்றின்பின் யாழ்ப்பாணநாடு சமாதானமாய் வாழத்தொடங்கிற்று. அப்பால் ஒலிவேறாவே பால அரசனுக்காக யாழ்ப்பாண அரசைக் கையேற்று நடத்தினன். சங்கிலியும் மனைவியும் சிறிதுகாலம் தாழ்த்துக் கொழும்புவழியாகக் கோவைக்கனுப்பப்பட்டனர்.

**சங்கிலிதுமாரனின்கதி.**— அங்கு பேணும் தெ அல்புகேக் என்னும் பிரதிராசாவின்கீழ் அவனுடைய நடபடிகள் விசாரணை செய்யப்பட்டுக் கொலைத்தண்டத்துக் குள்ளானன். கொலையுண்ணுமுன் சங்கிலி கிறீஸ்துவனாகி டொன்பிலிப் என்னும் நாமஞ்சூடிக்கொண்டனன். அவன்மனைவியும் டோனு மகறிட்டா தெ அஸ்திரியா என்னும் பெயர்சூடி ஞானஸ்நானம்பெற்றாள். சங்கிலியைக் கோவையிலே அலபண்டேகா என்னுஞ் சந்தைவீதியிலே சிரச்சேதஞ்செய்யக் கொண்டுபோயினர். ஓர் ரத்தினக்கம்பளத்தின்நடுவே சிவந்த பட்டுமெத்தையொன்றிட்டு அதன்மேலே அவனைவைத்துச் சிரங்கொய்தனர். சங்கிலி தன்கைகளைப் பின்கட்டாகக் கட்டவிடுதல் தன் அரசபதவிக்கு ஈனமெனமறுத்துத் துணிவோடு சிரச்சேததண்டனையைப் பெற்றனன்.

**சரித்திர மாறுபாடுகள்.**— போர்த்துக்கீசருடைய அக்காலத்து நூல்களிற் கண்ட இச்சம்பவங்களை யாழ்ப்பாண வைபவமாலை மிகவும் திரித்துக் கூறிப்போயிற்று. வைபவமாலையின் கூற்றை மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை மேலும் திரித்து எழுதியிருக்கின்றார். சங்கிலியையும் சங்கிலிகுமாரனையும் ஒருவனெ

ன மயங்கிய இவர் சங்கிலி பிடிபட்டபின் நடந்தசெய்திகளை வரையுமாறு பின்வருவது.

“பறங்கிகள் செயபேரி முழக்கிக் கோட்டையினுள்ளே புகுந்து கொடியுயர்த்தினர். இதனையறிந்த பரராசசேகர சக்கரவர்த்தி பறங்கிகளுக்குட்பட்டு அரசாளுவதிலும் காடாளுவதே நன்றெனத்துணிந்து வன்னிக்காட்டுக்கோடி ஒளித்தான். பறங்கிகள் அவனைத்தேடிக் காணாமையால் அவனிருக்குமிடத்தை அறிந்து சொல்பவர்க்கு இறைசால் இருபத்தையாயிரம் பரிசாகக்கொடுக்கப்படுமென்று பறையறைவித்தனர். அதுகேட்டு அவனிடத்து முன்மந்திரியாயிருந்த ஒரு கன்னெஞ்சப்பார்ப்பான் பொருளவாவென்னும் கொடிய பேய்வாய்ப்பட்டு வன்னிக்காட்டுக்குச்சென்று ஓரிளநீரும் எலுமிச்சம்பழமுங் கையிற் கொண்டு தேடித்திரிந்து வருகையில், அரசன் அவனைக்கண்டு கூவி அழைத்தான். பார்ப்பான் தேடியபொருள் தானே சிக்கியதென்று மனம்பூரித்து அரசனிடம்போய் ஆசீர்வாதஞ்சொல்லிச் சுகம்விசாரித்து இவ்விளநீரை உண்ணுமென்று நீட்டினான். அரசன் இருகையாலும் ஏற்றுத் தன் உடைவாளால் அதனைத் திறந்து பருகத்தொடங்கினான். எலுமிச்சம் பழமிருக்கின்றது வாளைத்தாரும் வெட்டிப்பிழிந்து இளநீரில் விடுவேன் என்று பார்ப்பான்கூற, அரசன் வாளை அவன் கையிற்கொடுத்தான். அவன் அதனைவாங்கிப் பழத்தை வெட்டிப் பிழிந்துவிட அரசன் இருகையாலுமேந்தி இளநீரைக் குனிந்து பருகினான். குனிந்துபருகக் காதகப் புலையனான அப்பார்ப்பான் அவ்வாள்கொண்டு அரசன் சிரசைக்கொய்து எடுத்துப் பொதிசெய்துகொண்டுவந்து பறங்கித்தலைவன் கையிற்கொடுத்தான். அவன் அதனைவாங்கி அவிழ்த்துப்பார்த்துப் பிரமித்து ‘யாதுசெய்தாய் புலையா’, வென்று பெருஞ்சினங்கொண்டு ‘நீ சிறிதுங்கூசாது செய்த இப்புலைத்தொழிலுக்குத் தரத்தக்க பரிசு இதுவே’ எனக்கூறி உடைவாளையிழுத்து அங்கிலையிலேதானே அவன்சிரசைக்கொய்தான்.

“அதன்பின்னர் பறங்கிகள் சங்கிலியை நீதாசனத்தின் முன்னேயிட்டு ‘நீ முடிசூட்டப்படாது இராசாதிகாரஞ்செய்தது முதற்குற்றம். தந்தைக்குரிய அரசைக் கிரமந்தவறிக்கவர்ந்தது இரண்டாங்குற்றம். இராசகுமாரர்களைக் கொலைபுரிந்தது மூன்றாங்குற்றம். சனங்களைவருத்தியதும், அறுநூறுபேரை வன்கொலைபுரிந்ததும் நான்காங்குற்றம்.’ எனக் குற்றநிரூபணஞ்செய்து அவனைச் சிரச்சேதஞ்செய்து கொல்லுமாறு தீர்ப்பிட்

டனர். அவ்வாறே காளிகோயிற்சந்நிதியில் பறங்கிகள் அவனை ச் சிரச்சேதஞ்செய்து கொன்றனர். அதுகேட்டுச் சங்கிலிதே வி தீவளர்த்து அதிற்பாய்ந் துயிர்விட்டாள். சங்கிலியினதுதே வி தீப்பாயுமுன் இத்தீவினைவிளைத்த காக்கைவன்னியன் மனைவி யும் தன்னைப்போலத் துயரடைதல் வேண்டுமென்றெண்ணி ஒரு தூதனையனுப்பிச் சங்கிலியோடு காக்கைவன்னியனும் பற ங்கிகளால் மடிந்தானென் றவளுக்கு அறிவித்தாள். அதுகே ட்டுக் காக்கைவன்னியன்மனைவியும் தீப்பாய்ந்து உயிர்விட்டா ள்.பறங்கிகள்சங்கிலிபுத்திரரைத் தரங்கம்பாடிக்கனுப்பி அங்கே வைத்துப் பரிபாலித்துவந்தார்கள்.'' இதுவரையும் மேற்கோள்.

பராசசேகர சக்கரவர்த்தி சங்கிலிகுமாரன் நாள்மட்டும் சீவந்தராயிருந்திலனென்பது சொல்லாமலே விளங்கும். 1519 முதல் 1561 வரையிலாண்ட சகராசசேகரன் எனும் சங்கிலி யையும் 1618–ல் அதாவது ஒருநூறு வருஷங்களின்பின் ஆ ண்ட சங்கிலிகுமாரனையும் ஒருவனென மயங்கியதே வைபவ மாலை இவ்வாறு தவறியதற்கு நியாயமாகலாம். பராசசேகர னின் சிரசைக் கொய்தகதை அந்திரெ தெ பூர்த்தாடோ எ ன்னும் பறங்கிச் சேனுபதியின்கீழ் கொல்லப்பட்ட ''ராசராச தேசமகராச சேகரம்'' எனப் பறங்கியர்நூல்கள் அழைக்கின் றவனின் சரித்திரமேயன்றி வேறன்று. சங்கிலிகுமாரனைக் கா ளிகோவிற் சந்நிதியிற் கொல்லுவித்தமை சிறிதும் பொருந் தாக்கதை. கோவையில்நடந்த சம்பவமே இவ்வாறு திரித்துக் கூறப்பட்டது. சங்கிலிகுமாரன் மனைவியல்ல மகாராசசேகரத் தின் மனைவி தற்கொலைசெய் திறந்திருக்கலாம். வைபவமாலை தற்கொலையென்றதை மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை தீவளர்த் துத் தீப்பாய்ந் துயிர்விட்டதென்கின்றார். காக்கோ இளவரச னைக் காக்கைவன்னியனென வைபவமாலை மாற்றிவிட பிள் ளையவர்கள் அவன்மனைவியும் தீப்பாய்ந்து உயிர்விட்டாளென யாதோர் ஆதாரமுமின்றிக் கூறுகின்றார். அதுநிற்க:

*சில இடைக்காலச்சம்பவங்கள்.*— வைபவமாலையில் காணப் படும் வேறு சிலவிபரங்களும் உண்மைச் சம்பவங்களாகலாம். ஆயின் அவை சிக்கறுக்கக்கூடாத பான்மையாய் அடிதலைமா றிச் சரித்திர வரன்முறைதப்பிக் கிடக்கின்றன. அவற்றுட் ப ல 1618–க்குப்பின் அன்று அதற்குமுன் பறங்கியர் யாழ்ப்பா ணத்தைத் திறையரசரைக்கொண்டு ஆண்டகாலமாகிய 1591 –க்கும் 1618–க்கும் இடைப்பட்ட காலத்தனவாதல்வேண்டும். வைபவமாலைசொல்வது:— ''காலயுத்திவருஷம் ஆனிமாசம் யாழ்ப்பாணம் பறங்கியாசாட்சிக்குள்ளாயிற்று. [இங்குசுட்டிய

காலவுத்திவருஷம் ஒன்றில் 1558 அல்லது 1618 ஆதல்வேண்டும். முந்தியவாண்டு முழுதும்தவறு. பறங்கியர் 1560 இலேயே யாழ்ப்பாணத்திற் படையேற்றித் தோற்றோடினர்.]

"பறங்கிகள் நல்லூரிலிருந்துகொண்டு புறக்கோட்டைமதிலை இடிப்பித்துக் கற்களைக்கொண்டுபோய் இடிபட்ட தங்கள் கோட்டையை மறுபடி கற்கோட்டையாகக்கட்டி அதன் கீழ்ப்புறத்தில் வீடுகளையும் அரசாட்சி மண்டபங்களையும் கட்டுவித்துச்" சுற்றுப்புறங்களில் காடுகளையும் வெட்டுவித்துச் சமீபத்தில் பிரசைகள் குடியிருக்க வசதிபண்ணினார்கள். அரசாட்சிகிடைக்கும்படி பரநிருபசிங்கம் தங்களுக்குச்செய்த உதவிக்காக அவருக்குள்ள ஏழுகிராமங்களுடன் நல்லூர் மாதகல் என்னும் இரண்டுகிராமங்களையும் பெருந்தொகையான திரவியத்தையும், முன்னிருந்த மந்திரியுத்தியோகத்தையுங் கொடுத்து அவன்மகன் பரராசசிங்கத்துக்குக் கிராம அதிகாரத்தையுங்கொடுத்துப் பறங்கிகள் அவ்விருவரையும் கனப்படுத்தி வந்தார்கள். அவர்களாற்பறங்கியரசாட்சிபெலத்துக்கொண்டது.

[இச்சம்பவமும் பின்வருவனசிலவும் ஜோஜ்தெமெலோ யாழ்ப்பாணத்திற் பறங்கியரின்கீழ் பிரதிராசா ஒருவனை வைத்தகாலத்துக்குச் சேர்ந்தனவாகலாம். பரநிருபசிங்கனே சகராசசேகர சங்கிலியின் தமையனும் கோவையிற் பறங்கியரைச் சரணடைந்தவனுமெனில், அவன் யாழ்ப்பாணத்துக்கு மீண்டானல்லன். 1560-ல் அவன் பிறகன்சாவோடு வந்திலன். ஆகவே அதன்முன் இறந்தவனாதல்வேண்டும்.]

"அதன்பின் பறங்கிகள் சமயகாரியங்களிற் கையிட்டுச் சிவாலயங்களையிடித்துக் கத்தோலிக்கரின்சத்தியவேதம் பரம்பச் செய்தார்கள். நல்லூரிலும் கீரிமலைச்சார்பிலும் இருந்த கோவில்களைப் பரநிருபசிங்கம் இருக்கிறவரைக்கும் வழங்கிவந்தபடியே வழங்கலாமென்று உத்தரவுசெய்தார்கள். பறங்கியரசாட்சிசெய்யத்துவங்கி ஒன்பதாம்வருஷத்திலே பரநிருபசிங்கம் சிவபதமடைந்தான். பறங்கிகள் அவன்மரணத்துக்குத் துக்கங்கொண்டாடி, பிரேதத்துக்குச் சிவசமயமுறைப்படி சடங்குசெய்து தகனம்பண்ண இடங்கொடுத்தார்கள்.

"அதன்பின் பரராசசிங்கத்தை அரசாட்சியின் ஆலோசனைத் தலைவனாக்கிச் சங்கிலி எழுதிவைத்தபடியே அவனுக்குப் பரராசசிங்கமுதலியென்றும், அவன்குலத்துக்கு மடப்பளியென்றும் பட்டஞ்சூட்டி அவனையும் பிதாவை நடத்தினதுபோலக்

கனப்படுத்தி நடத்திவந்தார்கள். பாராசசிங்கமுதலிக்கு மரண காலங் கிட்டினபோது அவன் தன் ஏழு குமாரர்களையும் வரவழைத்துத் தன்னுஸ்திகளைப் பங்கிட்டுக்கொடுத்தான். அழகாண்மை வல்லமுதலிக்கு நல்லூரையுங் கள்ளியங்காட்டையுங்கொடுத்து நல்லூரிலுள்ள தன்மாளிகையில் இருத்தினுன். ["அவ்வரண்மனையின் மேற்குவாயிற் கோபுரமாத்திரம் இன்றும் அழியாதிருக்கின்றது" என்பர் மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை. இவ்விஷயத்தில் வைபவமாலை ஆக்கியோன் பிள்ளையவர்களிலும் அதிகம் அறிந்தவராய்க் காணப்படுகின்றார். சங்கிலிராசனுடைய கட்டிடம் எனச் சனங்கள் அறியாதுகூறும் அவ்வாயிற்கட்டிடம் உள்ளபடி ஒல்லாந்த காலத்ததேயாம். பறங்கியர் நல்லூர்க்கட்டிடங்கள் யாவற்றையும் அழித்துவிட்டுக் கோவில் கலாசாலைமுதலிய வேறுகட்டிடங்கள் அமைத்தனர். ஒல்லாந்தர்காலத்தில் சங்கிலிதோப்பு அரசினர் நந்தவனமாயிருந்தது. அதன்முகப்பே இன்னும் அழியாதிருக்கின்றது. Administr. Rep. N. P. 1903] தனபாலசிங்கமுதலிக்கு மல்லாகத்தைக்கொடுத்து அதிலிருத்தினுன். வெற்றிவேலாயுத முதலிக்குச் சண்டிருப்பாயைக் கொடுத்தான். விசய தெய்வேந்திரமுதலிக்கு அராலியைக்கொடுத்தான். திடவீரசிங்க முதலிக்கு அச்சுவேலியைக்கொடுத்தான். சந்திரசேகர மாப்பாணமுதலிக்கு உடுப்பிட்டியைக்கொடுத்தான். இராயரெத்தினமுதலிக்குக் கச்சாயைக்கொடுத்தான். இவர்களன்றி வேதவல்லியெனும் ஓர்மகளும் இருந்தாள். அவளுக்கு வேளாளகுலத்தில் விவாகஞ் செய்வித்து மாதகலைக்கொடுத்தான்.

"பாராசசிங்கம் இறந்தபின் பறங்கிக்காரர் இடியாமல்விட்டிருந்த கோவிலையெல்லாம் இடிப்பித்தார்கள். அக்காலத்தில் நகுலேசர்கோவிலிருந்த பாசுபாணிஐயர் கோவிற்சாமான்களையும் விக்கிரகங்களையும் கிணறுகளிற்போட்டு மூடிவைத்தார். கந்தசுவாமிகோயிற் பணிவிடைக்காரனுயிருந்த பண்டாரம் அத்திசையிலுள்ள ஆலயங்களைக்குறித்துச் சம்பவங்களும் ஒழுங்குத்திட்டங்களுஞ்செய்து அடக்கியதான செப்புப்பட்டயத்தைக்கொண்டு மட்டக்களப்புக்கு ஓடிப்போனுன். ["அங்கிருந்த சில விக்கிரகங்கள் தாமிர விக்கிரகங்களையெல்லாம் அக்கோயிற் குருக்கள்மார் பூதராயர் கோவிலுக்குச் சமீபத்தேயுள்ள குளத்திலே புதைத்துவிட்டு நீர்வேலிப்பகுதிக்கு ஓடினர்" என்பர் மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை. ஆதாரங்காணேம்.]

"பாராசசிங்கமுதலி மரணமடைந்தவுடன் கெங்காதரஐயர் வமிசத்துப் பிராமணக்குடிகள் நல்லூரைவிட்டு நீர்வேலியிலும்

வடமிருச்சிப்பகுதியினும் போய்க் குடியிருந்தார்கள். அக்காலத்திலே பறங்கிகள் தமிழ்ராசாக்களைப்போல் மாதாக்களை வைக்கக்கருதி ராயரத்தினமுதலி மகன் சோழசிங்க சேனுதிராய முதலியைக் கீழ்ப்பற்றுக்கு மாதாக்களுகவும், விசய தெய்வேந்திரமுதலியை மேற்பற்றுக்கு மாதாக்களுகவும், அழகாண்மைவல்ல முதலிமகன் இராசவல்லமுதலியைத் தென்பற்றுக்கு மாதாக்களுகவுமாக்கினன். அழகாண்மை முதலியை வடபற்றுக்குமாதாக்களுக்கி அரசாட்சியை நடத்திவந்தார்கள்."

தமிழரின்புதுஎழுச்சி.— 1619-ம் ஆண்டுத் தொடக்கத்தில் யாழ்ப்பாணத்தில் மீண்டும் கலகங்களும் போர்க்குரலொலியும் எழுந்தன. யாழ்ப்பாணத்துப் புராதனமனுஷர் தம்நாடு பறங்கியரின்கீழ் இருக்கப் பொருராய்த் தஞ்சாவூரிலிருந்து ஓர் பெலத்தசேனையை அழைத்துக்கொண்டு பறங்கியரைச் சருவமுயன்றனர். வடகரையினின்றே ஒரு அரசகுமாரனும் வரிக்கப்பட்டான். கரையார்தலைவன் ஒருவன் தமிழர்பக்கத்துச் சேனுநாயகமாகிப் பறங்கியரைப் பண்ணைத்துறைக் கோவிலிற்சருவினுன். பறங்கியர் திரண்டெழுந்து தமிழரை ஓட்டிவிட, மறுநாள் ஒலிவேரு அரண்செய்துகொண்டிருந்த ஒரு சிவாலயத்தைத் தமிழர் தாக்கினர். இங்கும் தமிழர் வலியிழந்து முதுகிட்டனர். இதற்கிடையில் வடகரையினின்றுவந்த அரசகுமாரன் 800 மறவவீரர் சகிதமாய் நல்லூரிலேபுகுந்து ஒரு ஆலயத்தில் கரந்துறைந்தனன். ஒலிவேரு இதனையறிந்து மறுநாட்காலை ஆலயத்தைத்தாக்கி அதின்வாயில்களைத் தீமூட்டிஎரித்து உட்செல்ல, மறவர்சேனை உயிரைத் துரும்பாகமதித்துப் பறங்கியர் படையுட்புகுந்து அமராடிற்று. அன்று வெளிப்பட்ட மறவருள் ஒருவனும் எஞ்சாது அனைவரும் பறங்கியர்வாளுக்கிரையாயினர், அரசகுமாரனும் அவனுக்கு மெய்க்காவலனுய்நின்ற பிராமணனுமே உயிர்தப்பினர். ஒலிவேரு ஆலயத்தைச்சூறையாடிக்கொண்டு அரசகுமாரன்கையில் இரத்தாம்பரப்பட்டால்மூடிய விலங்கிட்டுக் குருமார்வசத்தி லொப்புவித்து வெற்றியாளனுய் மீண்டனன்.

மிக்கப்பிள்ளையின்கலகம்.— இதுநிகழ்ந்து முடிந்தும் முடியாமுன்னரே மன்னருக்கோடிப் பறங்கியரைச் சரணடைந்திருந்த மிக்கப்பிள்ளை ஆராய்ச்சி அவர்களுக்கும் விரோதியாகித் தஞ்சாவூருக்கோடி அங்கிருந்து ஆயிரம் படைவீரரோடு தொண்டைமானுற்றில் தோற்றினுன். விரைவில் தஞ்சாவூர்ச்சேனை அராலியையடைந்து அணிவகுத்துநின்றது. யாழ்ப்பாணிகள்எங்கெங்கும் பறங்கியருக்குவிரோதமா யெழத்தொடங்கினர். ஒலிவேருவின்சேனை தமிழருக்கு ஈடுசொல்லமாட்டாது தியங்கிக்கொண்

யிருந்தது. இதற்கிடையில் கொழும்பிலிருந்து தெயிக்சேறு என்னும் ஓர் கொம்மாண்டோரின்கீழ் ஒரு உபபலம்வந்தமையால் ஒலிவேரு ஒருபுசம் இருபுசமாகித் தமிழரை எதிர்த்துப் போர்தொடுத்தான். விரைவில் தமிழர் பண்ணைத்துறையைச் சூழ்ந்து சருவத்தொடங்கினர். ஆயினும் பறங்கியரின் குண்டுமாரிக்காற்றாது முதுகிடவேண்டினோராயினர்.

**கரையாரத்தலைவன்.**— 1619-ம் ஆண்டு கார்த்திகைத்தொடக்கத்தில் மீண்டும் தஞ்சாவூர்நாயக்கனின் தூண்டுதலால் கரையார்தலைவன் ஓர் பெலத்தசேனையோடு யாழ்ப்பாணத்தில் படையேற்ற வருகிறானென்ன வதந்திபிறந்தது. ஒலிவேரு பண்ணைத்துறைக்கோவிலை நன்றாக அரண்செய்துகொண்டு மாற்றானுக்கு ஒரு ஓலைவிடுத்து "நீவிர் குளக்கரைகளில் பாளையமிட்டு வருந்துவதிலும் நமது நல்லூர்ப்பட்டணத்தில் அல்லது கரையாருடைய பனந்தோப்பில் (இது தற்காலக் கரையூரைக்குறிக்கும்) வந்து குசாலாய்த்தங்குவது நன்று" என அறிவித்தான். அதற்குக் கரையார்தலைவன் மறுமொழியாய் "தஞ்சாவூர் நாயக்கனின் பேரால் யாழ்ப்பாண அரசு கைக்கொள்ளவந்தோம். படைப்பயிற்சியிற் சிறந்தவராகிய தம்மை எதிர்த்து கண்டு பரிசோதனைபார்க்க விரும்புகிறோம்" என ஓலைவிடுத்தனன். மறுநாட்காலை ஒலிவேரு நல்லூரில் தமிழரைக் காத்துநின்றும் வந்தாரில்லை. ஆதலால் உச்சிவேளையில் போசனமருந்துமாறு பட்டினத்துக்குமீண்டு, போசனஞ்செய்துகொண்டிருக்கையிலேயே தஞ்சாவூர்ச்சேனை தலைகாட்டத் தொடங்கிற்று. தமிழர் கடற்கரைப்புறமாய்ப் பண்ணைத்துறை அரண்களைச் சருவ வருவதைக்கண்ட ஒலிவேரு சிலபறங்கியரைக் கடலிற்குதித்து மாற்றானைக் காத்துநிற்கச்செய்து தானும் அரையளவு வெள்ளத்தில் பதிவிருந்தான். கடலிலும் கரையிலும் கடும்போர்நடந்தது. கடலில் ஒலிவேருவும் வேறுசிலரும் காயப்பட்டார்கள். ஆயினும் சற்றுநேரத்துக்கெல்லாம் தமிழர் ஓட்டம்பிடிக்கத் தொடங்கினர். கலைந்தோடிய தமிழரைப் பறங்கியர் நல்லூர்த்திசையாய்த் துரத்தி ஓர் ஆலயத்தையடைந்து அதை அரணாக்கிக்கொண்டு குண்டுமாரிபொழிந்தனர். பாளையத்தினின்றுகொண்டிருந்த ஒலிவேரு மீண்டுவரும் பறங்கியரின் அரவத்தைக்கேட்டு இதேதென உசாவ, வெற்றியாளராய் மீண்ட பறங்கிவீரர் தாம் கொய்துகொண்டுவந்த தமிழரின் சிரங்களை அவன்முன் குவித்துவைத்து ஆனந்தநிருத்தமாடினர். பறங்கியர்பக்கமாய்நின்ற சிங்களப்படைவீரர் தமிழரை அப்பாலும் துரத்திச்சென்று மறுநாட்காலை அளவிறந்த கொள்ளைப்பொருட்களோடு மீண்டனர்.

1621-ம் ஆண்டு மாசிமாசம் 2-ந் திகதி ஒலிவேரு பண்ணைத்துறையில் வசிப்பதைவிட்டு நல்லூர்நகரத்தைத் தனது அரண்மனையாக்கிக்கொண்டான். அங்கிருந்த பிரதான ஆலயத்தையும் இடிப்பித்தான். சனங்களுக்கு இச்செய்கை வெகு மனஸ்தாபகாரணமாயிற்று. அவர்கள் எவ்வாறு இரந்துகேட்டும், எத்தனை திரவியம் வேண்டுமாயினும் தருவோமென விண்ணப்பஞ்செய்தும் பலிக்கவில்லை.

தமிழரின் கடைசிக்கலகம்,— தஞ்சாவூர் நாயக்கன் யாழ்ப்பாணத்தைச்செயிக்க இன்னுமொரு கடைசிப்பிரயத்தனஞ் செய்வானாயினன். அவனனுப்பிய சேனை பருத்தித்துறையில் இறங்கவிருக்கிறதெனக் கேள்வியுற்ற ஒலிவேரு, தெமோற்ரு என்பவனோடு ஒருபறங்கியர் சேனையை அங்கனுப்பினன். ஆயின் தஞ்சாவூர்ச் சேனை வல்லுவெட்டித்துறைக் கரையிலிறங்கி ஓர்குளக்கரையிலுள்ள பனந்தோப்பிற் பாளையமிட்டிருக்கிறதென அறிந்து தெமோற்ரு அங்கு இரகசியமாய்ச்சென்று பதிவிருந்து மூன்றுஞ்சாமமாகும்போது போர்ப்பறை யறைந்து கூக்குரலிடத் தமிழர் திகிலடிபட்டுக் குதிரைகளிலேறி ஓடிப்போவோரும், திசைதப்பி அலைவோருமாய்க் கலைவுறப் பறங்கியர் பின்தொடர்ந்து 1200 பேரைச் சிரங்கொய்தனர். விழுந்துபட்டவர்களுள் யாழ்ப்பாணச் சிங்காசனம் வகிக்கும் நோக்கமாய் வந்திருந்தவனான சேனாநாயகமும் ஒருவனானன். இரண்டு நாட்களுள் தேமோற்ரு கம்பங்களிற் குற்றிய பகைவர் சிரங்களோடும், பறித்தெடுத்தவாள், அம்பு வில், துப்பாக்கி யாதியவற்றோடும் தஞ்சாவூரினின்றும் பரிவாரமாய் வந்த ஸ்திரிகள், குதிரை, நாய், குரங்கு, கிளிப்பிள்ளை முதலியனவோடும், திரளான கைதிகளோடும் நல்லூரில் வந்துசேர்ந்தான். சிரங்கள் அடக்கஞ்செய்யவும் கைதிகள் அக்கால வழக்கப்படி வலத்திற்கூறிவிற்கவும்பட்டனர்.

பறங்கியருக்கு இராசவிசுவாச சத்தியம்.—தஞ்சாவூர் அரசன் ஆடுவித்த போர்களினால் யாழ்ப்பாணத்தில் உதிரவெள்ளம் பெருக்கெடுத்துக் குடிகள்சுருங்கி இடர்ப்படுவோராயினர். முதலிமாரும் இனித் தமிழரசு தழையாதெனவருந்திப் பறங்கியர்க்கு இராசவிசுவாச சத்தியஞ்செய்து கொடுத்தனர். இதனால் யாழ்ப்பாணம் 1620-ம் ஆண்டுதொடங்கிப் பறங்கியருடைய நாடுகளு ளொன்றாயிற்று. ஒலிவேரு யாழ்ப்பாணத்துக்கு முதற்கவனராயினன். ஆயினும் யாழ்ப்பாணம் பறங்கியர்கைப்பட்டபின்னும் இராச்சியம் என்னும்பெயரையே உடையதாயிருந்தது.

**பறங்கியரின்கீழ் யாழ்ப்பாணநிலை.—** யாழ்ப்பாணநாட்டில் நடந்த நெடும்யுத்தங்களில் கமச்செய்கையின்றித் தரை பாழ்பட்டுக்கிடந்தது. பறங்கியர் குடாநாட்டிலும் தீவுகளிலும் தமக்கு விருப்பமான பாகங்களைத் தமக்காக்கிக்கொண்டிருந்தனரன்றிக் கமச்செய்கையை ஊக்கித்தாரில்லை. 1623-ம் ஆண்டு காணிகளின் தோம்புப்பதிவு முதன்முதற் செய்யப்பட்டது. ஆயினும் அதைச்செய்வித்த உத்தியோகஸ்தரின் அசட்டைத்தனத்தால் அது மிக அபூரணமான ஓர் பதிவாயிற்று. அப்பால் தொன்பிலிப்பு மஸ்கறிஞ்ஞா எனும் கோவைப் பிரதிராசா யாழ்ப்பாணத்தைத் தரிசித்தகாலையில் திருத்தமான ஓர் தோம்பு பதியப்பட்டது. சற்றுச்சற்றாய் மன்னார்க் கொம்மாண்டோரின் தத்துவம் அருகிஅருகி ஒலிவேறாவின் பராமரிப்பிலேயே அத்தீவும் தங்குவதாயிற்று. ஆயினும் மன்னார் நெடுங்காலம் பிரத்தியேகமான ஓர் அரசிறைப் பிரிவாயேயிருந்தது.

**பெரும்புயலும் வெள்ளப்பிரவாகமும்.—** யாழ்ப்பாணத்தனதவருத்திய இடையீடின்றிய யுத்தங்களின்பயனாய்க் கொடிய வைசூரிநோயொன்று தலைகாட்டி அநேககிராமங்களை இடுகாடுபோலாக்கிவிட்டது. பஞ்சமும் கொள்ளைநோயைப் பின்தொடர்ந்து வந்தது. அப்பால் 1627-ம் ஆண்டு மாசிமாசம் முன்னோர் போதும் எவரும் கண்டுகேட்டறியாப் பெரும் புசலொன்று வீசக் கடலணைகடந்து மீறிப் புரண்டோட வெள்ளப்பிரவாகமானது கரைப்பட்டணங்களுட்புகுந்து வீடுகளை வீழ்த்தியும் உயிர்ச்சேதம்விளைத்தும் பயங்கர விபத்துண்டாக்கியது. பட்டினத்துச் சனமெல்லாம் கத்தோலிக்க ஆலயத்துள் அடைக்கலம்புகுவோராயினர். ஒலிவேறா அத்தருணம் திகிலடிபட்ட சனங்களுக்குக் காட்டியதயவு பெரிதும் பாராட்டப்பட்டது. அவன் ஆபத்துக்குள்ளான இடங்கடோறும் தானாகச்சென்று உடுகூறையற்றோருக்கு உடையளித்தும், பசியால் வாடியோருக்கு உணவீந்தும், குற்றுயிராய்க் கிடந்தோருக்குச் சிகிச்சை செய்துங் கொண்டு திரிந்தனன்.

**ஒலிவேறவின் மரணம்.—** இப்பிறர்சினேக கிரியைகளிலே தன்சுகத்தைப்பாராது ஒழுகியமையினால் ஒலிவேறா நோயுற்றுப் பிரசைகளெல்லாம் புலம்ப 1627-ம் ஆண்டு பங்குனிமாசம் 22-ந் திகதி இவ்வுலகவாழ்வை ஒருவினான். ஒலிவேறாவைத் தமிழ்முதலிமார் எவ்வளவாக மதித்திருந்தாரெனில், அவன் தேகவியோகத்தின்பின் யாழ்ப்பாணத்துக்கு வேறொருதலைவன் வேண்டுவதில்லையென்றும், பிலிப்பு இராசாவின் பிரதிமையொன்றே இனி யாழ்ப்பாணத்தை அரசாளப் போதியதாகு

மென்றும் கூறினர். ஒலிவேருவின் பிரேதம் மகா சம்பிரமமாகப் பண்ணைத்துறையின் ஆலயத்திலேயே அடக்கஞ்செய்ப்பட்டது. இவ்வாலயத்தை ஒலிவேரு புதுக்கிக் கட்டியிருந்தான். யாழ்ப்பாணக்கோட்டை இதனை உள்ளடக்கி எழுப்பப்பட்டது. கோட்டையின்கற்கள் தமிழரசன் கோட்டையினின்று கொண்டுவரப்பட்டனவென மெல். முத்துத்தம்பிப்பிள்ளை கூறியது தவறு. யாழ்ப்பாணத்தரசரின் நல்லூர்க்கோட்டை முருகைக்கல்லாற் கட்டப்பட்டிருந்ததற் கேதுவில்லை. அது செங்கற்கட்டிடமேயாம். இன்றைக்கும் சங்கிலித்தோப்பிலிருக்குங் கட்டிடமுகப்புதமிழரசர்காலத்ததன்று ஒல்லாந்தர்காலத்ததாம்.

**கத்தோலிக்கவேதம்பரவுதல்.**— ஒலிவேரு யாழ்ப்பாணத்தைப் பறங்கியருக்காக்கின நாள்முதல் கத்தோலிக்கவேதம் இங்கு முன்னிலும் அதிகவிரைவாய்ப் பரவுவதாயிற்று. பல்லாண்டுகளின்முன் பண்ணைத்துறைப்பக்கத்தில் ஓர் சிறு கத்தோலிக்க ஆலயமிருந்தது. அதனைக் கண்ணாடிப்பாதிரியென்னும் குருவானவர் பெலப்பித்துக் கட்டமுயன்றபோது அதன்அருகாமையில் சோனகரிருந்தமையால் அவர்களை எழுப்பிவிடுமாறு அரசனைக்கேட்டனர். சோனகர் மறுத்துநின்றும் அரசன்கட்டளைப்படி அவ்விடத்தைவிட்டுச் சோனகதெரு என இதுகாறும் அழைக்கப்படுமிடத்துக்குச் செல்வோராயினர். இச்சம்பவம்வைபவமாலையில் வேறுவிதமாய்த் திரித்துக்கூறியிருத்தல் காண்க.

கண்ணாடிப்பாதிரியார் கட்டியகோவில் இருந்தவிடமே ஒலிவேருகாலத்துப் "புதுமைமாதாகோவி"லாகவும் அப்பாற் கோட்டைக்குட்பட்ட ஆலயமாகவும் வந்ததுஎன்ப. பரராசசேகரன்காலத்தில் பிரான்சிஸ்கன்சபைக் குருமார் நல்லூரிலும் ஓர் கோவில்கட்டியிருந்தனர். ஊர்காவற்றுறை, மாதோட்டம், மன்னார்; அரிப்பு, பெருங்களி, பூநகரி ஆதியவிடங்களில் ஒலிவேருவின் முன்னரே கத்தோலிக்கஆலயங்க ளிருந்தன.

ஒலிவேருவின்முன் பிரான்சிஸ்கன்சபைக் குருமார் யாழ்ப்பாணத்தில் 12000 பேரைக் கத்தோலிக்கராக்கி யிருந்தனரென்பு. ஆயின் ஒலிவேரு இந்நாட்டைப் பறங்கியருக்காக்கிய பின்னே கத்தோலிக்கசமயம் வெகுவிரைவாய்ப் பரவுவதாயிற்று. ஒலிவேரு யாழ்ப்பாண அரசைக் கைக்கொண்டவுடன் இந்நாட்டவர்கள் தம்சயத்திற் சேர்ந்துகொள்வதே போர்த்துக்கால் அரசருக்கு அதிக உவப்பாகுமென முரசறைவித்தான். இதற் தலையரிமாரின் சகாயத்தையும் அடைந்துகொண்டான். விரை

விலே பண்டுதொட்டுச் சைவராயிருந்த நம்யாழ்ப்பாணத்தார் பறங்கியருடைய சனுவை அடைவதற்குக் கத்தோலிக்கராவதே உத்தமவழியெனக் கண்டுகொண்டு கும்பல்கும்பலாய் அச்சமயத்திற் சேருவோராயினர். முதல் இரண்டு வருஷங்களிலேயும் 52000 பேர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர். இவர்களுள் மூவர் முதலிமாரும், ஆராய்ச்சிமார் சகலரும், கோவிற்பிராமணருள் 150 பேர்வரையிலு மிருந்தனர். இருவர் வன்னியரும், இருவர் அதிகாரிகளும், இருபதின்மர் அரசகுமாரர்களும், நானூறு கரையாரோடு ஒன்பதின்மர் பட்டங்கட்டிகளும் அவ்வாறே கிறீஸ்துவர்களானர்கள். (Queiroz)

பிரான்சீஸ்கன்சபைக் குருமாரோடு யேசுசபைக் குருமாரும் யாழ்ப்பாணத்தில் வேதபோதகஞ்செய்ய வந்தனர். அப்பால் டோமினிக்கன் சபையாரும் பட்டினத்தில் உட்பட்டனர். பிரான்சீஸ்கன்சபைக் குருமாரே முன்பு யாழ்ப்பாண இராச்சியத்தில் பிரவேசித்தோர் என்றமையினுல் அவர்களே கரைதுறை ஊர்களில் வேதத்தைப்போதிக்கவும், யேசுசபைக்குருமார் உள்நாடுகளில் ஊழியஞ்செய்யவும் நியமிக்கப்பட்டனர். கத்தோலிக்ககுருமார் தொகை அக்காலம் இங்கு எவ்வளவாயிருந்ததென்பது ஒலிவேறுவின் பிரேதசேமத்தில் நாற்பதின்மர் குருமார் இருந்தனரென்றதனுல் விளங்கும்.

**இராசகுடும்பத்தவரின்செய்தி.**— யாழ்ப்பாணத்துக் கடைசி இராசகுடும்பத்தாரின் செய்தி இவ்விடத்திற் கூறத்தக்கது. பரராசசேகரனின் வாலமனைவியர் இருவரும் பிரான்சீஸ்கன்சபைக் கன்னியாஸ்திரீகள்வசம் ஒப்புவிக்கப்பட்டுக் கிறீஸ்துவேதத்திற் சேர்ந்துகொண்டார்கள். இராணிமாரிருவருக்கும் முறையே டோனு கிளாறு டா சில்வா என்றும், டோனு அந்தோனியா றப்போசா என்றும் பெயர்தரிக்கப்பட்டது. அவர்களுளொருத்தியின்மகளான 12 வயதுள்ள இளவரசிக்கு டோனு கத்தறினு டெசா எனும் நாமஞ்சூட்டப்பட்டது. ஒலிவேறுவே இவர்கள்மூவருக்கும் ஞானப்பிதாவாய்நின்றுன். இராணியாரின் சகோதரனும் மனைவியும் புதல்வர்களும் அப்படியே ஞானஸ்நானம்பெற்றுர்கள். அப்பால் முதலியார் பிறங்கோ டொம் பேதுறு தெ பெற்றன்கோர் என்பவனின் மனைவியும் இருவர் புதல்வரும் ஒருத்திபுதல்வியும் கிறீஸ்தவர்களாயினுர். இவர்களின்பின் டொம் பிறன்சீஸ்கோ தெ பெற்றன்கோர் ஆராய்ச்சி அல்லது தனபுலிஆராய்ச்சியின் மனைவியும் நளினியின் (நவாலி?) தலையாரியும் கிறீஸ்தவர்களானர்கள். இராசகுடும்பத்திலே யாழ்ப்பாணத்தில் ஒலிவேறுகாலத்தில் ஞானஸ்நானம்

பெற்றோர் முந்நூறு பேரெனப் பறங்கியர் நூல்கள் கூறுகின்றன.

**யாழ்ப்பாணத்துக் கடைசிஅரச தோன்றல்கள்.**— பராசசேகர பண்டாரத்தின்மகனும் அரசுரிமை பூண்டவனுமாகிய இளவரசன் சங்கிலிகுமாரனிடத்திலிருந்து விடுவிக்கப்பட்டபின் பிரான்சீஸ்கன்சபைக் குருமார் மனையில்வைத்துப் பராமரிக்கப்பட்டுவந்தான். அக்காலம் ஏழுவயசுக் குழந்தையாயிருந்த அவ்விளவரசனைக் குருமார் வெகுசாக்கிரதையாய்க் காவல்பண்ணிவந்தனர். இதனால் "மிக்கப்பிள்ளை ஆராய்ச்சி"யின் கலககாலத்தில் இளவரசனை அப்பிக்கொள்ள யாழ்ப்பாணத்தார் முயன்றும் முடியாமற்போயிற்று. ஆயின் அப்பாலும் அரசபாலனை யாழ்ப்பாணத்தில் வைத்திருப்பது ஆபத்கரமாகுமெனப் பறங்கியர் அஞ்சி அவனை அவன்தாயாகிய இராணியோடும் இதுவரையிற் கிறீஸ்தவர்களாய்விட்ட இராணிமார் இளவரசியோடுங்கூடக் கொழும்புக்கு அனுப்பிவைத்தனர். அங்கு இளவரசன் சந்தந்தோனியோ என்னும் மடத்தில் கல்விபயிற்றப்படுவானாயினான். இதற்கிடையில் செனறற் எனும் இலங்கையாசன் யாழ்ப்பாண இளவரசியைத் தன்மகனான ஊவா இளவரசனுக்கு மனைவியாக்கக்கருதித் தூதுபோக்கினான். இச்சம்பந்தம் தமக்குப் பழுதாகுமென்றுணர்ந்த பறங்கியர் அதற்குடன்பட்டாரில்லை. செனறற்றின் குமாரன் யாழ்ப்பாண இளவரசியை மணந்தானாயின் யாழ்ப்பாண அரசுரிமைப்பங்கு அவனுக்குளதாகிவிடுமென்று பறங்கியர் நன்றாயறிந்திருந்தனர்.

இளவரசனின் ஞானஸ்நானச்சடங்கு 1623௵ ஆனிமீ 18உ கொழும்பில் நடந்தது. பட்டணத்து ஆலயங்களின் மணிகளெல்லாம் ஆரவாரிக்க, பிரான்சீஸ்கசபைக் குருமார் பறங்கித்தேசாதிபதியும் சேனாபதி சேனாவீராதியோரும் சகிதமாய் நடுத்தெருவால் சுற்றுப்பிரகாரஞ்செய்து இளவரசனும் இராணித்தாயும், இன்னும் எழுபத்தைந்து பரிவாரத்தவர்களும் இருந்த மாளிகைக்குச் சென்றனர். அங்கு இளவரசன் அலங்காரமும் விலையுயர்ந்ததுமான ஆடையாபரண[illegible]னியனாய்நிற்கத் தேசாதிபதி அவன்கழுத்தில் ஓர் பொற்சங்கிலியும் பதக்கமும் போட்டு உபசரித்தபின் ஊர்வலஞ்செய்து பலவர்ணக் கம்பளங்களாலும் துவசதோரணங்களாலும் விசித்திரமாய்ச் சிறப்பித்திருந்த வீதிகளால்நடந்து, தேசோமயமாய் ஒளிரிடும்படி நிர்மாணித்திருந்த சந்தந்தோனியோ ஆலயபீடத்தண்டை வந்து சேர்ந்தனர். அங்கு தேசாதிபதி தன்நாமமாகிய டொம் கொன்ஸ்தந்தீனே எனும்பெயரை இராசகுமாரனுக்குச்சூட்டி அவ

னுக்கு ஞானப்பிதாவாய்நிற்க, பிரான்சிஸ்கசபையின். முதற்குரு அவனுக்கு ஞானத்திட்சைஅளித்தார். இராணித்தாய் டோனு கிளாரு எனும் நாமத்தைப்பெற்றுள். இளவரசியின் இரு சகோதரிகளும் டோனு இசபேல் என்றும், டோனு மரியா என்றும் முறையே நாமகரணஞ்செய்யப்பட்டனர். சங்கிலி குருடாக்குவித்தவனுகிய பராசசிங்கனின் மைத்துனன் டொம் தியோகு என்றும், அவ்வரசனின் சகோதரியாகிய இவன்மனைவி டொனு மரியா என்றும், இவர்கள் புத்திரர்கள் மூவரும் முறையே டொம்பிலிப்பு, டொம்பிரான்சீஸ்கோ, டொம் பேணடினுே என்றும், புத்திரி டோனு ஈனெஸ் என்றும் பெயர்தரித்தார்கள். இவர்களோடு இவர்கள் பரிவாரம்முழுதும் ஸ்நாபிக்கப்பட்டது.

அப்பால் பராசசேகரனின் மகனுன டொம் கொன்ஸ்தந்தீனுேவும், சகோதரிமகனுன டொம் பேணடினுேவும் கோவைக்கனுப்பப்பட்டு அங்கு லத்தீன்பாஷையும் சித்துவசாஸ்திரமுங் கற்றபின் போர்த்துக்கால்தேசஞ் சென்றனர். டொம் பேணடினுே அங்கு ஓர் பிரான்சீஸ்க சந்நியாசியாகி, சாகுமுன் யாழ்ப்பாண அரசுரிமையைப் பறங்கியருக்கே கையளித்து மரித்தான். (Queiroz) டொம் கொன்ஸ்தந்தீனுேவும் சாகுமுன் இவ்வாறேசெய்தனன். (Faryay Sousa) இங்ஙனமே நம்நாட்டின் அரசும் அரசுரிமையும் சம்பூரணமாய்ப் பறங்கியர்கைப்படலானது.

**சிங்களரின் படையெழுச்சி.**— ஒலிவேருவின் மாணத்தின்பின் லாங்கரோட் தெ செயிக்சால் என்பவன் யாழ்ப்பாணத்துக் கொம்மாண்டோராயினன். இவன் யாழ்ப்பாணத்தைப் பரிபாலித்துவருகையில் செனறற் எனும் சிங்கள அரசனோடு கொழும்பிலுள்ள பறங்கியர் போர்முனைந்துகொண்டு நின்றனர். 1629-ம் ஆண்டு செனறற்றின் அத்தப்பத்துமுதலியார் பறங்கியரைத் திகிலுறுத்துமாறு யாழ்ப்பாணத்தை நாடிவந்தான். செனறற் தன்குடும்பத்தின் தமிழ் இராணிமார்போரால் யாழ்ப்பாண அரசுரிமையை வாதாடியதும் இந்தப் படையெழுச்சிக்கு ஒரு நியாயமாயிற்று. அத்தப்பத்து முதலியாரோடு வடகரையினின்று அனுப்பப்பட்ட சேனையுமொன்று சேர்ந்த்கொண்டது. யாழ்ப்பாணத்துப் பறங்கியர் சிங்களருடைய சேனைவெள்ளத்தின்முன் எதிர்த்து நிற்கமாட்டாமல் முதுகுகொடுத்துத் தாங்கள் இருந்தவிடங்களை விட்டோடிக் கோட்டைக்குட் புகுந்துகொண்டனர். சிலநாட்களாய்ச் சிங்களரே யாழ்ப்பாணத்தில் இறைசேர்த்து அதைக் கட்டியாண்டனர். இதற்கிடை

யில் சிங்களர் கோட்டையையும் பிடிக்கவருகிறார்களென்ற வதந்தி பறங்கியரைப் பயப்பிராந்திக் குட்படுத்திக்கொண்டிருந்தது. தெ செயிக்சால் கோட்டையிற் பேசாது பதுங்கியிருந்துவிட்டான். ஆயின் பறங்கியருக்கு அதிஷ்டகாலமாய்க் கொழும்புத் தேசாதிபதியாகிய டெசா என்பவன் காம், தெயிக்சேரு எனும் இரு "திசாவை"மாரின்கீழ் ஓர் பெலத்தசேனையை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினன். இதையறிந்த சிங்களர் பச்சிலைப்பளியில் அணிவகுத்துநின்றார்கள். பறங்கியர் சூழ்ச்சியாய்ப் போர்முறையை ஒழுங்குபடுத்தி தெயிக்சேரு என்பவன் சிங்களரின் முன்னணியையும்,காம் என்பவன் பக்கத்தையும், தெசேயிக்சால் எனும் யாழ்ப்பாணக்கொம்மாண்டோர் கோட்டையினின்று புறம்போந்து பின்னணியையும் சருவும்படிசெய்தனர். சிங்களர் நடுவில் அகப்பட்டுக்கொண்டு பரிகாசமடைந்தனர். முதலியாரும் பிடித்துக் கொல்லப்பட்டார். கைதிகளாக்கப்பட்டோருட் பலர் குரூரமாய் வதைக்கப்பட்டனர். சிலர் அடிமையாய் விற்கப்பட்டனர். இவ்வெழுச்சியில் தமிழர் பொதுவாய்ப் பங்குபற்றியிராவிட்டாலும் பறங்கியர் அவர்களில் ஐயுறவுகொண்டு மீண்டும் ஒருமுறை அவர்களிடம் இராசவிசுவாசசத்தியங் கேட்டுக்கொண்டனர்.

அப்பால் ஒல்லாந்தர் வரும்வரையில் யாழ்ப்பாணத்தில் போர்க்குரலின்றி எல்லாம் சமாதானமாய் நடைபெற்றது. இவையிவ்வாறாக, இனிப் பறங்கியர் யாழ்ப்பாணத்தை அரசுபுரிந்த விதத்தையும் அவர்களால் தேசத்துக்குவிளைந்த நன்மை தீமைகளைப்பற்றியும் சிறிது சொல்லுவாம்.

**தேசப்பிரிவுகள்.**— பறங்கியர் தமிழரசர்களின் பரம்பரையான முறைகளைப் பெரும்பாலும் மாற்றாது கைக்கொண்டனர். அரசாட்சிவிஷயத்தில் யாழ்ப்பாணநாடு முன்போலவே வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, பச்சிலைப்பளிஎனும் நான்குபிரிவுகளை யுடையதாயிருந்தது. இவற்றோடு தீவுபற்றும்ஒன்று. காரைதீவு, டனதீவு (ஊர்காவற்றுறை,) புங்குடுதீவு, பசுத்தீவு (நெடுந்தீவு,) பிராமணர்தீவு (நயினதீவு,) டோனகிளாரு (அனலைதீவு,) இரணைதீவுகள் எனும் எட்டும் குடியேறியவைகளாயும், எழுவைதீவு, காட்டுத்தீவு (பறவைதீவு,) பாலைதீவு, கெச்சைத்தீவு (நெடுந்தீவுக்குத் தென்மேற்கு) காக்கைதீவு எனும் ஐந்தும் குடியேறாதவைகளாயு மிருந்தன. இரணைதீவில் பறங்கியர்காலத்தி னீற்றிலேயே நெடுந்தீவினின்றும் பறையர்வந்து குடியேறினர் என்ப.

இலங்கைப்பகுதியிலே (பாலியிறவுக்கப்பால்) வன்னியர்தேசமிருந்தது. இவ்வன்னியர்கள் பெயரளவிலன்றிப் பறங்கியருக்காவது ஒல்லாந்தருக்காவது முற்றும் கீழ்ப்படிந்திருந்தவர்களல்லர். வன்னி கிழக்கே திரிகோணமலையையும் மேற்கே மாதோட்டத்தையும் எல்லையாகக்கொண்டிருந்த விஸ்தாரமான ஒருபிரிவு. யாழ்ப்பாண அரசரும் வன்னியில் எப்போதும் இராசரீகம் செலுத்தினரில்லை. ஆயினும் சில ஆரியச்சக்ரவர்த்திகள்காலத்தில் வன்னிமுழுதும்மட்டுமல்ல புத்தளமீருக மேற்குத்திசையின் கரைதுறைகளும் யாழ்ப்பாண அரசிற் சேர்ந்திருந்ததை "இபன் பற்றுற்று" எழுதிய வரலாறுகளால் அறிகிறோம். இம்மகமதியபிரயாணி புத்தளத்திசையிற் கண்டு உபசரித்த ஆரியச்சக்கரவர்த்தி அரபிப்பாஷையிலும் வல்லவனுயிருந்தவனுகத் தோன்றுகின்றுன். அதுநிற்க, பறங்கிக்காரர்காலத்தில் வன்னி பின்வருமாறு பிரிக்கப்பட்டிருந்தது.

1. தென்னமரவாடி. இது ஒரு அழகான நாடு. ஆயின் பறங்கியர் சேனைகள் பலகாலும் இதனூடாய்ப் போய் வந்தமையால் ஏறக்குறைய மனுஷசஞ்சாரமற்றதாய்ப் போயிற்று.

2. முள்ளியவளை. இதிலே 'வற்கம்' 'வலடிடி' மேல்பற்று எனும்பிரிவுகள் அடங்கியிருந்தன. இது வன்னிப் பிரிவுகளுள் அதிவிசேஷம் பெற்றதும் செழிப்புள்ளதுமானது. ஆயினும் பறங்கியரின் யுத்தங்களினுல் பாழ்பட்டுப்போய்க்கிடந்தது. இடத்தின் அசௌக்கியத்தினுல்சனக்குறைவுள்ளதாயுமிருந்தது.

3. கருநாவற்பற்று.

4. பனங்காமம். இதில் 'உறுகறை' 'வல்வி' எனும் பற்றுக்கள் அடங்கும். இது மாதோட்டத்துக்கணித்தா யுள்ளது.

5. பெருங்களி, வேரவில்லு, பூநகரி என்னும் ஊர்களைச் சுற்றிய கரை துறைப்பற்று இவைகளாம்.

யாழ்ப்பாண இராச்சியத்திலே மன்னுரும் அடங்கியிருந்தது. மன்னுர்ப்பிரிவிலே மாதோட்டமும் முசலிப்பற்றும் (இது குதிரைமலைவரைக்கும் விரிந்து கிடந்தது) செட்டிக்குளத்தின் ஒருபங்கும் சேர்ந்திருந்தன.

சனங்களின் நிலைமை.— ஒருநூறு வருஷத்தின்மேல் இடையறுமல் நடந்து கொண்டுவந்த உள்நாட்டுக் கலகங்களாலும்,

முக்கியமாய்ப் பறங்கியரோடு செய்த யுத்தங்களாலும் யாழ்ப்பாணநாடு மிகவும் வலியிழந்து கிடந்தது. சனங்கள் மிக ஏழைகளாய்ச் சீவனோபாயத்துக்கு வழியின்றி இடர்ப்பட்டனர். பனங்கிழங்கு, பனாட்டு முதலிய நாட்டுப் பொருட்களிலேயே பெரும்பாலும் சீவித்தனர். நெல்வேளாண்மை அருகி அருகிக்கொண்டு வந்தது. பறங்கியர் நெற்செய்கையைச் சற்றும் ஊக்கித்தாரில்லை. அவர்களுட் சில உத்தியோகஸ்தர்செய்த கொடுமைகளால் சனங்கள் மேலும் மேலும் மிடியுற்றனர். குருமார் எவ்வளவாக்ப் புத்திபுகட்டியும் அவ்வுத்தியோகஸ்தர் செவி மடுத்தாரில்லை. யாழ்ப்பாணத்தில் தண்ணீரின்மை வேளாண்மைக்குப் பெரும் குறைபாடாயிற்று. வன்னிநாடுகளும் உட்கலகங்களாலும் பறங்கியர் சேனை சென்றழித்தமையினாலும் பாழ்பட்டு விளைநிலங்கள் செடிபற்றிக்கிடந்தன. குளக்கட்டுகள் பறங்கியர் காலத்துக்கு முன்னரே பழுதுபடத்தொடங்கிக்கொண்டன. மேலுத்தியோகங்கள் பறங்கியருக்கே கொடுக்கப்பட்டன. பிற உத்தியோகங்களில் வேளாளரும் அகம்படியார் மடப்பளியாரும் அமர்த்தப்பட்டனர். வேளாள முதலிமார் தமிழரசர் காலத்திற்போலவே கீழ்சாதிகளை இறுமாப்பாய் ஒடுக்கிக்கொண்டுவந்தனர். நழவரும் பள்ளரும் அவர்களுக்கு அடிமைகளாயும் கோவியர் வீட்டடிமைகளாயுமிருந்தனர். பறையர் மிகத் தாழ்ந்த தொழில்களுக்கு விடப்பட்டனர். ஆயினும் கிறிஸ்தவர்களாகும் கீழ்ச்சாதிகளுக்கு விசேஷ சுயாதீனங்கள் சில கொடுக்கப்பட்டன.

**தோம்பு.**— யாழ்ப்பாணநாட்டின் சகல காணிகளையும் விரிவாய்ப் பதிவுசெய்து ஒல்லாந்தருக்கும் தற்காலப் பிரிட்டிஷ் அரசினருக்கும் காணிப்பதிவு விஷயத்தில் முன்மாதிரி காட்டிவிட்டவர்கள் பறங்கியரேயாகும். இதற்குப் பறங்கி உத்தியோகஸ்தர் ஊரூராய்ச்சென்று காணிப்பதிவுசெய்தார்கள். பழையதோம்பு ஓலையிலேயே எழுதப்பட்டது என்ப. எம்நாட்டில் அக்காலம் பிரித்துக் கூறப்பட்ட நாற்பது சாதிகளின்பெயரும் அவ்வவர் நாட்டாண்மைக்காரருக்குச் செய்யவேண்டிய ஊழிய வகையும், ஆண்பிள்ளைகள் சகலரும் செலுத்தவேண்டிய "கடமை","அதிகாரிவரி" முதலியவைகளும் தோம்பிலேகண்டெழுதப்பட்டன. இவ்வரிகள் தமிழரசர்காலத்தில் இருந்தபடியே குறிக்கப்பட்டன. அரசனால் கிராமங்களை ஆளநியமிக்கப்படும் அதிகாரிகள் அக்காலம் அரசவேதனம் பெறாமல், அதிகாரி வரியாலேயே சம்பளமிறுக்கப்பட்டனர். அதிகாரிவரியும் வேளாளர், சாண்டார், தனக்காரர் ஆதிய சாதிகளுக்கே உரியதாயிருந்ததுமன்றி, அதையிறுப்போர்க்கு ஓர்வகை

விசேஷ பாத்தியதையைப் பெறுவிப்பதுமாயிருந்தது. பண்டாரப்பிள்ளைகள் என்போர் இவ்வரிகளை அறவிடுவார்கள். பலசாதிகள் அரசஊழியத்துக் குட்பட்டவைகளாயிருந்தன. இதுவே "இராசகாரியம்" எனப்படுவது. இவ்வூழியங்களின் வகையும் சாதிகளின் பிரிவும் ஒல்லாந்தர் பறங்கியரைத் தரத்தியவுடனே வரைந்துவைத்த அறிக்கைப்பத்திரத்திற் காணக்கிடக்கின்றன. அவற்றை ஒல்லாந்தர்கால வரலாற்றோடு தருவோம்.

**தேசவழமை.**— பறங்கியர் யாழ்ப்பாணத்தைத் தேச்வழமையின்படியே பரிபாலித்தனர். இத்தேசவழமையே ஒல்லாந்தர் காலத்தில் விபரமாய் எழுதிவைக்கப்படுவதாயிற்று. முதுசொம், சீதனம், தேடிய தேட்டம் என்பனவற்றைப்பற்றிய ஒழுங்குகள் தமிழ் வழமையை அனுசரித்துப் பறங்கியராற் சட்டமாக்கப்பட்டவைகள். வலிகாமத்திலும் தென்மராட்சியிலுமுள்ள சில இடங்களில் தமிழரசர்காலத்தில் வடதேசத்தவர் சிலர்வந்து குடியேறியிருந்தனர். இவர்கள் பரதேசிகள் (பிறதேசிகள்) என்னப்பட்டார். பறங்கியர் காலத்தில் இவர்களுக்கு வரி, ஊழியம் முதலியன புறம்பாய் விதிக்கப்பட்டன. தமிழரசர்காலத்தில் இவர்கள் இறக்கும்போது இவர்கள் பொருட்கள் அரசனுடையவைகளாகிப்போம். ஆயினும் இப்பரதேசிகளும் சற்றுச்சற்றாய் வேளாளருள் மணமுடித்துக் கலந்து தேசவழமையின்படியே ஆளப்படுவோராயினர். (Peiris)

**அரசிறைவருமானம்.**— புகையிலைவரியாற் பெருந்தொகை அரசிறை வந்துகொண்டிருந்தது. யானைகள் விற்றுவரும் ஊதியமும் ஒரு பெரும் வருவாயாயிற்று. ஆயின் யானை பிடித்து ஒப்புவிக்கும் கடனுள்ளோராயிருந்த வன்னியர்கள் பல முறையும் பறங்கியருக்கடங்காது யானை பிடித்தனுப்ப மறுத்துவிடுவர். வன்னியில் நின்றுவரும் யானைகள் எழுதுமட்டுவாளில் நிறுத்தப்பட்டு, பின் காரைதீவிலிருந்து ஏற்றி அனுப்பப்படும். சாயவேர் இன்னுமொரு அரசிறை வருமானமாயிருந்தது. காரைதீவிலும் மன்னாரிலும் அவ்வேர் பள்ளரினற் கிண்டியெடுக்கப்பட்டது. சிங்கள நாடுகளோடு உப்புவியாபாரமும் நடந்தது. இவற்றோடு ஆயம், அதிகாரிவரி, தலைவரி, கடமை எனும் வரிகளும் சேர்ந்து அரசினர்க்கு வருமானமாயின.

தமிழரசர் காலத்தில் மீன்குத்தகை யிருந்ததில்லையெனவும், பறங்கியரே முதன்முதல் அதனை வைத்தனரெனவும் மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை கூறுவர். அவர் இக்குத்தகையைச்சுட்டிப் பின்வருமாறு வரைகின்றார். "பறங்கிகள் மீன்குத்தகையை

விற்று அரசிறையைப் பெருக்க வெண்ணினான். இக்குத்த கையை வாங்குவதற்கு வேளாளர் பின்னிட்டார்கள். அதைக ண்டு கரையார் அனேகர்திரண்டு தம்முள்ளே ஒருவனை அதி காரியாக்கி அவன்பெயரில் வாங்கிப் பணத்தைச் சேர்த்துக் கொடுத்தார்கள். ஆயினும் பறங்கிகள் எண்ணப்படி பெருந் தொகைக்கு விற்கவில்லை. வேளாளர் அக்குத்தகையை ஏற்றி ருந்தால், அவருள்ளே தனவந்தர் அனேகரிருந்தமையால் 'எ னக்கெனக்கென்று விலையேறியிருக்குமென வெண்ணிப் பறங் கிகள் வேளாண்மந்திரியிடத்துச் சிறிது வெறுப்புடையராகிக் கரையாருள்ளும் ஒருவனை மந்திரியாக்கி அவனுக்குத் தொன் பிலிப்பு குருகுலநாயகமுதலி என்று பட்டமுங்கொடுத்தார்கள். கடற்றுறை அதிகாரமுழுதும் அவனுக்கே கொடுத்தார்கள். அவன் தனக்குக்கீழுள்ள அதிகாரங்கள், கணக்குவேலைகள், க ங்காணிவேலைகளை எல்லாம் தன்குலத்தவர்க்கேகொடுத்தான். அதுகாறும் „வேளாளரது அதிகாரத்தால் கீழ்ப்பட்டுக்கிடந்த அக்குலம் இவன்காரணமாகச் சிறப்படையத்தொடங்கிற்று. அ வர்களும் அச்சிறப்பினால் தமது கிளையினின்றும் பிரிந்து தா மொருகிளையாகப் பறங்கிகளுடைய போக்குகளுக்கெல்லாம் இ ணங்க நடந்துவந்தனர். முதலியென்னுஞ் சிறப்புப்பெயர் ப ண்டைக்காலமுதல் வேளாளருக்கே உரியதாயிருந்தது. பறங் கிகள் அதனைக் கரையாருக்குமாக்கினர். தமிழரசர்காலத்தில் மந்திரி, இலிகிதர் முதலிய உத்தியோகங்களி லிருந்தவர்கள் பெரும்பாலும் வேளாண்முதலிகள். அதுவுமன்றிப் பறங்கியரசு ஒல்லாந்தவரசுகளிலும் அவ்வுத்தியோக முடையவரெல்லாம் முதலியாரெனப்பட்டனர். பின் அவ்வுத்தியோகமும் முதலி யுத்தியோகமெனப்பட்டது. வன்னியர் ஆண்டவிடத்துக்கு வ ன்னியென்னும் பெயர்வந்தது. அவ்வன்னியரையடக்கி அவ்வ ன்னியைக் கைக்கொண்ட வேளாளர் வன்னியனாரெனப்பட்டா ர்கள். இதுவே வன்னியருக்கும் வன்னியனாருக்குமுள்ள வே ற்றுமை."

**பிரசாபரிபாலனம்.**— பறங்கியர் பொதுவாக மற்றைய ஐ ரோப்பிய சாதியாரைப்போலாது சுதேசிகளுட் பெரியோரா யிருந்தோரை வெகு கண்ணியமாய்நடத்தினர். தமக்கென வை த்துக்கொண்ட உயர்ந்த உத்தியோகங்களையொழிந்த பிற உ த்தியோகங்களை நாட்டிலே விசேஷித்தோராயிருந்த மனுஷரு க்குக் கொடுத்தனர். யாழ்ப்பாணத்தில் அன்றுதொட்டிருந்த அடிமையாட்சியை அவர்கள் அழித்துவிடாதிருந்தாலும், கிறீ ஸ்துமார்க்கத்தைத்தழுவிய அடிமைகளுக்குப் பல சௌகரிய

ங்களைச்செய்வித்துத் தங்கள் சமயபோதனையின்படி சுதேசிக ள் சகலரையும் சமயவிஷயத்தளவில் தங்களோடு ஒருபடியி ல் வைத்துநோக்கினர். சுதேசிகளோடு விவாகசம்பந்தம் கல க்கவும் பின்னிட்டாரில்லை. பெரிய உத்தியோகஸ்தரான பறங் கியர் சிலர் யாழ்ப்பாண உயர்குலவேளாளருட் பெண்ணெடுத் ததுமுண்டு. உயர்குலவேளாளரும் சிலர் பறங்கியர்பெண்களை வதுவைசெய்துகொண்டனர். பறங்கியர் ஈற்றில் வலியிழந்து போனமைக்கு இதனை ஓர்காரணமாக எடுத்தோதுவாருமுண் டு. யாழ்ப்பாணப்பட்டினத்தில் ஒலிவேரு தன்செலவிற் ஓர் த ருமசாலை (Misericordia) அமைத்திருந்தான். அது கிரகஸ்த ர்களான சில "சகோதரர்கள்" பொறுப்பில் விடப்பட்டிருந்த து. இவர்கள் ஏழைஎளியவர்களுக்கு உதவியும் கைம்மைகளுக் கு ஆதரவும் அநாதர்களுக்கு உடை உணவுகளும் அளித்து வந்தார்கள்.

ஆயினும் பொருளாசைகொண்ட சில பறங்கியுத்தியோ கஸ்தர்களால் ஏகதேசம் சனங்களுக்கு இடர்வருவிக்கப்பட்ட துமுண்டு. இவர்களால்வந்த இடர்களைக் குருமார் மேலதிகாரி களுக்கு ஓலமிட்டு ஒருவாறு தீர்த்துக்கொண்டிருந்தனர். பற ங்கியர் ஆதியில் யாழ்ப்பாணநாட்டாரால் மிகத் துவேஷிக்க ப்பட்டாரேயாயினும் அவர்கள் ஆளுகையினீற்றில் அத்துணைத் துவேஷத்துக்குக் காரணமிருக்கவில்லை. ஆயினும் மிகக் குறு கியகாலவெல்லையுள் அவர்கள் இராச்சியத்தையிழந்து நீங்கிவி ட்டமையினுற்போலும் அவர்கள் பெயர்மேல் இன்றைக்கும் ஆங்காங்கு அபவாதம் நிகழ்த்தப்படுவதாகின்றது.

இவ்விதமே யாழ்ப்பாணச்சரித்திர நூலாசிரியர் எழுதிய தாவது. "அவர்கள் இராச்சியஅவாவும் பொருளாசையும் கி றீஸ்துசமயாபிமானமுமன்றி மற்று நீதியும் கருணையும் சிறி துமில்லாது தமிழ்க்குடிகளையும் சிங்களக்குடிகளையும் வனமி ருகங்களைப்போலமதித் தரசுசெய்யத் தலைப்பட்டார்கள்" என் றார். இதைச்சுட்டிச் சத்தியவேதபாதுகாவலனிற் பின்வருமா று எழுதப்பட்டது. "இக்கூற்றை மெஸ். முத்துத்தம்பிப்பிள் ளை பிற ஆசிரியர்களிடமிருந்து ஆராய்வின்றி யெடுத்திருக்க வேண்டும். தாமே பறங்கியர்சரித்திரத்தை ஆராய்ந்து எழுதி யவரென்றால் இப்படி எழுதியிருக்கமாட்டார். பறங்கியருள் உள்ளபடியே பொருளாசை முதலியவுள்ளோர் சிலர் இருந் தார்களென்றால் அதுஒக்கும். எல்லாரும் அப்படிப்பட்டவர்க ளென நாம் விளங்கவைத்தெழுதுவது உண்மைக்கு ஒவ்வாது. எல்லாரும் பொருளாசைக்காரராயிருந்தால் கிறீஸ்தவரானோரு

க்குப் பொன்னைவாரியிறைத்தவர்கள் யார்? அப்பால் தமிழ்க் குடிகளை வனமிருகங்களைப்போல் மதித்தவர்களென்றால் அவர்களைக் கிறீஸ்தவர்களாக்கவேண்டுமென்று அபிமானங்கொண்டதெப்படி? தமிழரசரின்கீழன்றோ சிலசாதிகள் வனமிருகங்களைப்போல் மதிக்கப்பட்டன. எல்லாச்சாதியாரும் சகோதரர்கள் தாம் என்றும், எல்லாக்குடிகளும் தங்களோடு ஒருவேதமும் ஒருவழிபாடும் உள்ளவர்களாக வேண்டுமென்றுங்கூறி, பிள்ளையவர்கள் தாமேயும் சொல்லியிருக்கிறபடி சாதியொற்றுமையையும் சமயவொற்றுமையையும் உண்டாக்க உழைத்த பறங்கியர் நம்மவரை வனமிருகங்களைப்போல நடத்தினரெனில் அதுபொருந்துமா? பறங்கியர் கொண்டுவந்த கத்தோலிக்கவேதம் தமக்கு வெறுப்பாகையாலோ பிள்ளையவர்கள் அவர்களது ஆளுகையிற் குறைகூறுகிறார். ஒரு சிறிதுவேளைக்கு 'நியாயம் பேசுவதற்கு மாத்திரம்' பிள்ளையவர்கள் கதலிக்கவேதந்தான் மெய்யானமார்க்கமென்று வைத்துக்கொண்டு அந்தஎண்ணத்தோடே பறங்கியர்செய்தவைகளைப் பார்ப்பாராயின், உடனே அவர்கள் மெய்யானவேதம் உலகமெங்கும் பரம்பவேண்டுமென்ற அவாவும், அதன்பொருட்டுத் தணியாத உதாரகுணமும், அபிமானமும் உள்ளவர்களாகி, தம்குடிகளை நீதியோடும் கருணையோடும் பரிபாலித்துத் தம்சகோதரரைப்போல மதித்து நடத்தத் தலைப்பட்டார்கள் என்றுகண்டு அவ்விதமே எழுதியுமிருப்பார்." இதுவரையும் மேற்கோள்.

சமயத்தைப்பரப்பியமுறை.— ஆயின் பறங்கியர் தம்சமயத்தை வலிந்து பரப்பினாரன்றோவெனில் இவ்விஷயத்தில் அக்காலச்சாட்சிகளை ஆராய்ந்துபார்த்து முடிப்போம். புறங்கியர் வேதத்தைப்பரப்பினமுறை இது. தாம் ஓர்பட்டணத்தைப் பிடித்துக்கொண்டவுடன், அதற்கு ஓர் எல்லைகுறித்து, அவ்வெல்லைக்குள் "மகமதியர்" "விக்கிரகாராதனைக்காரர்" ஆதியோருள் ஒருவரும் இருக்கப்படாதென்று பறைசாற்றுவிப்பர். எல்லைக்குளிருக்க விரும்புவோர் கிறீஸ்தவர்களேயாகவேண்டியது. தம்நாடுகளுள் பிறசமய ஆலயங்களையும் விடார். அப்பால் தமதாளுகைக்குட்பட்ட நாடெல்லாம் பிறசமயத்தவர்களுடைய பிரசித்த கொண்டாட்டங்களை விலக்குவாரேயன்றித் தனித்தனியே பிரசைகளின் மனச்சாட்சியைக் கண்டிமைப்படுத்தார். ஆயின் தமது ஆலயங்களுக்கு ஞாயிற்றுக்கிழமைதோறும் சென்று பிரசங்கங்கேட்கும்படி சகலருக்கும் கட்டளை பண்ணுவர். சனங்களைப் பிரசங்கங்கேட்கக் கவர்ந்திழுக்குமாறு குருமார் பல சூழ்ச்சிகளைக் கையாடிவருவர். "வசனம்" "வாசகப்பா" "நாடகம்" "பாசு" எனத் தற்காலம்வழங்கும்

சாட்சிகள் அக்காலத்தில் இதற்காக ஆரம்பிக்கப்பட்டன. நம் கைக்கெட்டிய சகல சாட்சிகளின்படியேயும் பறங்கியர் போதகத்தினாலேயே சனங்களைப் பெரும்பாலும் கிறீஸ்தவராக்கத் தேடினர். வாயினாற்செய்த போதகத்தோடு அச்சிட்ட நூல்கள்மூலமாயும் கிறீஸ்துசமயம் பரப்பப்பட்டது. இத்தமிழ்நூல்கள் கொச்சியில் பறங்கியர் ஸ்தாபித்த இயந்திரசாலையில் அச்சிடப்பட்டன. சிறுபான்மை உத்தியோகங்களையும், கிறீஸ்தவராவோருக்கு வரிகள் குறைக்கப்படுதலாதிய வேறு சிலாக்கியங்களையும் அளித்து இவற்றாலும் சனங்களின் மனங்களைக் கவரப்பார்த்தனர். பள்ளிக்கூடங்களிலும் வேதம் கற்பிக்கப்பட்டது. மூன்று வெவ்வேறுகூட்டமான கத்தோலிக்கக்குருமார் ஓயாது பிரயாசப்பட்டு உழைத்துச் சனங்களைத் தம்சமயத்திற் சேர்த்துக்கொண்டிருந்தனர். இவையே உண்மைச்சம்பவங்கள். இவ்விஷயத்திற் பறங்கியர் செய்தமையையெல்லாம் எல்லாரும் ஒப்பார். ஆயினும் இதிலே தற்கால நூலாசிரியர்கள் சிலர்கூறும் அத்துணைப்பழியைப் பறங்கியர்மேற் போடுவது நீதியாகாது. மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை கூறுவது:—

"பறங்கியர் சனங்களையெல்லாம் கிறீஸ்தவர்களாகுமாறு நெருக்கினர். அதுசெய்யாதாரை ஒறுத்தனர். அவர்கள் பொருளைக் கவர்ந்தனர். கிறீஸ்தவராயினாருக்குப் பலவித உத்தியோகங்களைக் கொடுத்தனர். அவர்கள் தண்டத்துக்கஞ்சி அகத்தே சைவராகவும் புறத்தே கிறீஸ்தவராகவும் நடிப்பார் பலராயினர். கிறீஸ்தசமயப் பிரவேசஞ்செய்யோமென உயிர்விடுத்தாரும் அநேகர். அந்நியதேசஞ்சென்றாரும் அனேகர்" என்கின்றார். இக்கூற்றைப் பரிசோதித்துச் சத்தியவேதபாதுகாவலன் பின்வருமாறு எழுதிற்று. "இது மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளையின் கூற்று. இக்கூற்றுக்கு ஆதாரங்காணோம். வைபவமாலை பறங்கியர் தங்கள் ஆதீனப்பட்ட நாட்டிலிருந்த கோயில்களை இடிப்பித்தனரென்பதையன்றி யாரையாவது கிறீஸ்தவராகும்படி நெருக்கியதாகக் கூறவில்லை. பறங்கியர் தங்கள் சமயமே மெய்யான கடவுள்வழிபாடென்றும் பிறவழிபாடெல்லாம் பொய்த்தெய்வ வழிபாடென்றும் எண்ணியிருந்தனர். அன்றியும் அடிப்படுத்தப்பட்ட நாடுமுழுதும் தங்கள் ஆதீனமென்றதின்போல் அதிலே பொய்த்தெய்வங்கள் [எனத்தாம் மதித்தவைகளுக்குப்] பிரசித்தமாய் ஆராதனை நடத்தவும் அவ்வாராதனைக்குரிய பிரசித்த தலங்களிருக்கவும் இடங்கொடாதொழிந்தனர். இது அவர்கள் தேசக்கட்டுப்பாடுகளில் ஒன்று. மனச்சாட்சிவிஷயத்திலோ எவரையும் நெருக்கினாரில்லர். இங்ஙனமிருக்க 'கிறீஸ்தவராகாதாரை ஒறுத்தனர். அவர்கள்பொரு

ளேக் கவர்ந்தனர்' என மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை கூறிய து பறங்கியர்மேற் பழிபோடுகிற ஒருகூற்று. இக்கூற்றை ஸ்தாபிக்கப் பிள்ளையவர்களா லியலுமா? வேறோரிடத்தில் ஒல்லாந்தரைப்பற்றிப் பேசும்போது பிள்ளையவர்கள் அவர்கள் 'பறங்கிகளைப்போல அச்சுறுத்தியாயினும் மதஸ்தாபனஞ்செய்யாது குடிகளாயுள்ளவர் வலிந்து போய்ச்சேர்ந்து கிறீஸ்தவராதற் கேதுவான கொலைத்தண்டனையும் பிற துன்பங்களுமாகிய தீயஉபாயங்களால் தம்மதத்தைப் பரவச்செய்தார்கள்' என்கின்றார். (84—ம் பக்.) ஆகவே பறங்கியர் சமயத்துக்காகக் கொல்லவில்லை, தண்டிக்கவுமில்லை என்றதாயிற்று. இது சற்றே வாசி. ஆயினும் பறங்கியர் எவரையாவது கிறீஸ்தவராகும்படி அச்சுறுத்தியதையும் அக்காலத்துச் சரித்திரங்களிற் காணேம். 'கிறிஸ்தவராயினுருக்குப் பலவித உத்தியோகங்களைக்கொடுத்தனர்' என்றது முழுதும் மெய். டொம் யுவாம் எனும் போர்த்துக்கீச அரசர் பறங்கியருக்கிட்ட கட்டளையிலே, எவரையாவது அவர்கள் வலிந்து கண்டனை தண்டனைகளினுல் கிறீஸ்தவராக்கப்படாதென்றும்கிறீஸ்தவராவோருக்கு உத்தியோகங்களும் பொன்னும் ஏராளமாய்க் கொடுக்கலாமென்றும் சொல்லியிருக்கிறது. கோவையிலே கூடிய திருச்சபைச் சங்கங்களும் எவரையும் வலிந்து வேதத்திற் சேர்க்கப்படாதென்று மீட்டும் மீட்டும் விதித்திருக்கின்றன. சேர் தென்னெறும் இதை ஒப்பியிருக்கிறுர் (Christianty in Ceylon p 7, 8) பொன்னேயும் உத்தியோகங்களேயும் கிறீஸ்துவராவோருக்கு வழங்கும்படி கட்டளையிருந்ததென்றேம். அப்பொன்னேயும் உத்தியோகத்தையும் தேடியே சகல அபிமானத்துக்கும் மேலாகப் பொன்னை அபிமானிக்கும் குணமுடையோராகிய தமிழருள் 'அகத்தே சைவராகவும் புறத்தேகிறீஸ்தவராகவும் நடிப்பார்பலராயினர்'என்றுதோற்றுகிறது. இதற்கு இன்றைக்கும் சிலவிடங்களிலே உதாரணம் காணலாம். ஆயின், 'கிறீஸ்தசமயப் பிரவேசஞ் செய்யோமென உயிர்விடுத்தாரும் அனேகர்' என்றது உண்மையல்ல. ஏனெனில் மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை தாமே ஒத்துக்கொண்டபடி [84 பக்] பறங்கியர் கொலைத்தண்டனையும் பிறதுன்பங்களுமாகிய தீயவுபாயங்களால் தம்மதத்தைப் பரவச்செய்தார் இல்லை. கொல்வாரில்லாதபோது கொலையுண்பாருமில்லையன்றே."

"யாழ்ப்பாணச் சரித்திர"த்தைப்பற்றிச் சத்தியவேதபாதுகாவலனில் மேற்காட்டியவை எழுதப்பட்டன என்றேம். நூலாசிரியர் தம் இரண்டாம் பதிப்பிலாதல் சுட்டிய குறைகளைத் திருத்தாதொழிந்தமையால் அவற்றை இங்கு எடுத்துக்காட்டல் அவசியமாயிற்று என்க.

**சைவ ஆலயங்கள்.**—சமய அலுவலிற் பறங்கியர் யாழ்ப்பாணத்தாரைத் துன்புறுத்தாவிடினும் நம்மவரின் மனதைத் தீடீரெனப் புண்படச்செய்த வேறொரு கருமத்தை இழைத்துவிட்டார்கள். அதியாதெனில், இந்நாட்டில் ஆங்காங்கு விளங்கிய சைவசமய ஆலயங்களை ஒன்றும்விடாது இடிப்பித்தமையாம். ஒலிவேறு யாழ்ப்பாணத்தில் பெரிதும் சிறிதுமான 500-சைவ ஆலயங்களை இடிப்பித்தானென்றதை அவனுக்கோர் புகழ்ச்செய்தியாகப் பறங்கியர் எழுதிவைத்திருக்கின்றனர். இதனைச்சுட்டி மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை எழுதுவது:

"இவ்வளவிலே இடங்கொடாதும் உந்நத விசித்திர கோபுரங்களோடும் மதில்களோடும் விளங்கி யாழ்ப்பாணநாட்டைச் சிறப்பித்து நின்றனவும், 1,500 வருஷகாலமாகத் தமிழரசரும் பிரபுக்களும் பெருநிதிகொண்டு நிருமித்துப் பாதுகாத்துவந்தனவுமாகிய ஆலயங்களையெல்லாம் பறங்கிகள் கைசிறிதுங் கூசாது தகர்த்துச் சித்திரமணுஞ் சிறிதுமில்லாத நாடாக்கிவிட்டார்கள்.

"அவர்களால் இடிபட்ட விசித்திராலங்காரமான் பெரியஆலயங்கள் இவைமாத்திரமா? 1622 ல் திரிகோணமலையிலே சுவாமிமலைமேலிருந்த மகோந்நதமானதும் அதிவிநோதசித்திர சிற்பாலங்காரங்கள் அமைந்ததுமாகிய கோபுரத்தோடுகூடிய எழுமதிலும் அனேக மண்டபங்களுமடங்கிய சிவாலயத்தையுந் தகர்த்துவிட்டார்கள். 1552-ல் சீதாவாக்கையில் தினமொன்றுக்கு இரண்டாயிரஞ் சிற்பர்கூடி வேலைசெய்தால் இருபதுவருஷத்திலும் முடித்தற்கரிய மகத்தான அற்புதாலங்காரமான கருங்கல்லுத் திருப்பணியுடையதென்று பறங்கிச்சரித்திரகாரன் தானேபாராட்டிய சிவாலயத்தையும் இடித்தொழித்தார்கள். தேவேந்திரபுரமெனக் காவிக்கப்பாலுள்ள இடத்தில் (Dondra) பொன்மயமான சிகரங்களோடு கூடி உயர்ந்து வானளாவிய கோபுரங்களையும், மூடுபாவுடைய தோரணமண்டபங்களையும், அனேக விசித்திரமான உள்மண்டபங்களையும் உடையதாய்க் கடல்மேற் செல்வோர் கண்களையுங் கவர்ந்து இலங்கையைச் சிறப்பித்துநின்ற விஷ்ணுவாலயத்தையுங் கைகூசாது இடித்தழித்து விட்டார்கள். அவர்கள் இலங்கையிலுள்ள செல்வத்தைக் கவர்ந்ததுமன்றி இலங்கையின் செயற்கை யழகெல்லாவற்றையும், அழகைக்கண்டதிசயித்துக் கண்ணினால் ஆனந்தங்கொள்ள அறியாத பிசாசுகள்போல அழித்து மகிழ்ந்தார்கள்."

மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை இவ்வாறு எழுதியது சத்

றே அதிசய உக்கிரமாய்க் கூறப்பட்ட கூற்றெனச் "சத்திய வேதபாதுகாவலன்" பின்வருமாறு காட்டிற்று.

"பறங்கியர் உள்ளபடி ஆயிரக்கணக்கான தமிழரையும் சிங்களரையும் கொன்றும், சித்திரவதைசெய்தும், சைவப்புத் தாலயங்களை இடித்தும் அநாசாரப்படுத்தியு முள்ளவர்களன்றோ எனில், அதுவும் மெய். இப்படி அவர்கள் செய்ததற்குக் காரணம்யார்? தமிழரும் சிங்களருமே காரணர். பறங்கியர் முதன்முதல் இலங்கைக்குவந்தது தற்செயலாக. தர்மபராக்கிரமவாகு எனும் கோட்டைஅரசன் அவர்களோடு உடன்படிக்கைசெய்துகொண்டு அவர்கள் கொழும்பில் ஓர் பண்டகசாலைகட்ட இடங்கொடுத்தமையினாலேயே பறங்கியர்வந்து கொழும்பிற் றங்கினர். பின்பு பட்டத்துக்குவந்த புவனேகவாகுவும் அவன்பின் தர்மபாலனும் தங்கள் சத்துருக்களான மாயாதுன்னை இராசசிங்கன் என்றவர்களுடைய எதிரிடைக்காற்றாமல் போர்த்துக்கீச அரசைச் சரணடைந்தமையினாலேயே பறங்கியர் கொழும்பில் கோட்டையொன்றுகட்டத் தூண்டப்பட்டார்கள். தர்மபாலன் சந்ததியின்றியிருந்தமையால் மரிக்குமுன் தன் இராச்சியத்தை அதுவரைக்கும் தன்னைப் பாதுகாத்துவந்த போர்த்துக்கீச அரசர்க்குத் தத்தம்பண்ணி இறந்தான். இதனால் கோட்டை இராச்சியம் பறங்கியருக்காயிற்று. மாயாதுன்னையும் அவன்மகன் இராசசிங்கனும், இவர்களின்பின் விமலதர்மனும் பறங்கியரை அவர்கள் ஆதீனத்தினின்று துரத்திவிடும்படியாகத் தொடுத்த போர்களினிமித்தமே சிங்களர் ஆயிரக்கணக்காக மடியலாயினர். பறங்கியரைக் கண்டியார் பலமுறை சதிமானமாக அகப்படுத்திக் கொல்ல, பறங்கியரும் கண்டியாரைக் கண்டவிடமெல்லாம் துண்டித்தனர். கண்டியார் பறங்கியரைச் சித்திரவதைசெய்யப் பறங்கியரும் அகப்பட்ட கண்டியாரைச் சித்திரவதைசெய்தனர். இது அக்காலமட்டுமல்ல இன்றைக்கும் நடந்துவருகிற போரொழுக்கம். இவ்வொழுக்கம் தீயதென்று சொல்லிற் சொல்லலாம். ஆயின் இராச்சியங்களுக்குள்ளே அன்றுதொட்டு இருந்துவந்த ஓர் ஒழுக்கத்தின்படிமட்டும் செய்த பறங்கியரை அதற்காகத் தூற்றுவது தகாது. இங்கிலீசர்தாமும் இப்படியும் இதிலும்மோசமாயும் இலங்கையிலே செய்ததை Marshall's Ceylon 200-ம் பக்கமுதற்காண்க. மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை எடுத்துக் கூறியிருக்கிற பெறெண்டிகோவில் (வைரவஆண்டி) அழிக்கப்பட்டது மாயாதுன்னையோடு பறங்கியரும் கோட்டையரசனும் கூடிச்செய்த போரிலாம். தேவாந்தரமுனையிலிருந்த (Dondra) ஆலயம் அழிக்கப்பட்டது இராசசிங்கன் கொழும்பை முற்று

கைவிட்டிருந்தபோதாம். அந்நாட்களில் அவனைத் துன்புறுத்தும் நோக்கமாகவும் சனங்களுள் திகிலை உண்டுபண்ணும்படியும் பறங்கிச்சேனைகள் பலமுறை முற்றுகையிடப்பட்டிருந்த கோட்டையினின்று தென்திசையாற் புறம்போந்து அக்கரைதுறைகளில் அகப்பட்டவைகளையெல்லாம் வாரி அள்ளிக்கொண்டும் கட்டிடங்களைத் தரைமட்டமாக்கியும் சென்றனர். உலகத்தில்நடந்த பெரும் போர்களிலெல்லாம் இதற்கொத்த ஒழுக்கமே நிகழ்ந்தது. வெற்றியாளர் பட்டணங்களை எரியூட்டுவதும், கட்டிடங்களைத் தரைமட்டமாக்குவதும், நிலத்தில் உப்புவிதைப்பதும் முதலியவரலாறுகள் பழஞ்சரித்திரம்படித்தோர் அறிந்தவை. போரிலேசேர்ந்த வரலாறுகளாகப் பறங்கியர் செய்தவைகளின் நிமித்தம் அவர்கள்குணத்தை ஒருங்கே குறைகூறுவது மரபாகாது. புத்தர் சைவாலயங்களை இடித்துத் தரைமட்டமாக்கிச் சைவருக்குச்செய்த கொடுமைகள் கொஞ்சமா? சைவர் புத்தாலயங்களை இடித்துத் தரைமட்டமாக்கிப் புத்தருக்குச் செய்தகொடுமைகள் கொஞ்சமா? சிங்களச்சரித்திரத்திலே இவைகளைப் பரக்கக்காணலாம். சகோதர சமயங்களுக்குள்ளே இவ்வளவு குத்துமல்லிருப்பதை யறிந்து யோசித்தால் பறங்கியர்செய்தவை இவ்வளவுபெரிதாகத் தோற்றமாட்டா.

"யாழ்ப்பாணத்தில் பறங்கியர் உட்பட்டவிதமும் கவனிக்கப்படத் தக்கது. அவர்கள் இராச்சியஅவாவின்பொருட்டு இங்குவந்தாரில்லை. சங்கிலியனே அவர்களுக்குக் கோபமூட்டினவனுனன். அவர்களுடைய கப்பல்களைக் கொள்ளையடித்தது ஒருகாரணம். மன்னாரிற் கிறிஸ்தவரானோரில் அறுநூற்றுவருக்கு மேற்பட்டோரையும் தன்சொந்தக்குமாரனையும் கொன்றது விசேஷித்தகாரணம். இராச்சியத்திற்குரியவனுன பரநிருபசிங்கன் அவர்களைச் சென்றழைத்தது மேலும்விசேஷித்தகாரணம். யாழ்ப்பாண அரசனை அவர்கள் 1590—ல் வென்றபோதிலும் திறையரசனொருவனை வைத்தார்களேயன்றித் தாமாக யாழ்ப்பாணத்தை ஆளவில்லை. இவ்வரசன்மகனைச் சங்கிலிகுமாரன் வலிந்து சிங்காசனத்தாற் றள்ளியபோதே பறங்கியர்வந்து அவனைப்பிடித்துக் கோவைக்கனுப்பிவிட்டு யாழ்ப்பாணநாட்டை ஏற்றார்கள். சங்கிலியன் கொடுமையாலும், சங்கிலிகுமாரனின் வஞ்சனையாலும் மடிந்த தமிழருக்குப் பறங்கியர் பாத்தியக்காரரல்ல. இனி, போரின்பின் நாடு தமதானபோதும், சைவ ஆலயங்களை இடித்தார்களேயெனில், அவர்களுடைய மனச்சாட்சிப்படி அச்செயல் புண்ணியச்செயலாகவேயிருந்தது. நம் நாட்டுத் தேவர்களெல்லாம் பொய்த்தெய்வங்களென்றும் பொ

யத்தெய்வ வழிபாடு கடவுளுக்குப்பொருந்தாத மகா துரோகமாகையால் அவருக்குப் பயப்படும் அரசரெல்லாம் தம்நாடுகளில் அவ்வழிபாடும் அவ்வழிபாட்டுக்குரிய தலங்களும் பிரசித்தமா யிருக்கவிடா தொழிக்கவேண்டுமென்றும் எண்ணியே பறங்கியர் சைவஆலயங்களை இடித்தழித்தமையால் அதன்நிமித்தம் அவர்களைக் கொடியவர்களென்பது பொருந்தாது. சரித்திரமெழுதுவோர் சமயதாக்கத்தில் புகுதல் சரியன்று. ஆதலால் அவரவர்செய்தவைகளை அவ்வவர் கருத்தோடொட்டி எழுதிகாட்டுவதோ டமைத்துவிடுவதே தர்மமாகும். நடுநிலையுள்ள சரித்திராசிரியர் பின்வருமாறு கருத்தமைத்து எழுதுவரென்று எண்ணுகிறேன். 'பறங்கியருடைய சமயகொள்கைகளைப்பற்றி ஆராய்வதற்கு இடம் இதுவன்று. ஆயினும் அவர் தஞ்சமயமேமெய்ச்சமயமென் றெண்ணிக்கொண்டவளவில் அச்சமயத்தைப்பற்றிய அபிமானத்தை வியப்புக்குரியவிதமாய்க் காட்டிக்கொண்டுவந்தனர். பொய்ச்சமயத் தளிகளெனத் தாம் மதித்த சைவஆலயங்களையெல்லாம் தரைமட்டமாக்கி அவற்றினிடமாகப் பல கத்தோலிக்கவேத ஆலயங்களையும, குருமனைகளையும், பாடசாலைகளையும் அமைத்து, குடிகளனைவரும் பேதமின்றித் தமது சமயத்திலே சேர்ந்தொழுகவேண்டுமென்னும் பேரவாவினால் உந்தப்பெற்றுப் பொருள்விரயத்தைப்பாராது பொன்னை அள்ளிஇறைத்தும் சுதேசிகளென்றுபாராது மேல்தர அரசாட்சிஉத்தியோகங்களையும் கருணையோடு கொடுத்தும் கிறீஸ்துவரானோரை ஊக்கித்துவந்தனர்.' என்று இவ்வாறு எழுதிக்காட்டிப் பின் வேண்டுமானால் சைவாலயங்கள் அழிந்தொழிந்தமையைப்பற்றியும் ஒருவராவது எதிர்த்துநின்று சைவத்துக்காகச் சிவனைவிடாமல் ஊரெல்லாம் கத்தோலிக்கராகியதைப்பற்றியும் பிரலாபித்து, பூர்வ சைவாலயங்களின் அழகுகளை மனம்போல் எடுத்துச்சொல்லுவது குறையாகாது." இதுவரையும் "சத்தியவேத பாதுகாவலனிற்"கண்டது.

பறங்கியர் நம்தேசத்துச் சமயங்களுக்குத் தீராக்கேட்டையும் அச்சமயங்களைக் கைக்கொண்டொழுக விரும்பியோருக்கு மாறாத்துயரையும் வருவித்தார்களென்பது நிச்சயம். ஆயினும் மேற்கண்டபடி அவர்கள்நடபடிக்கைகளை அவர்கள்கொண்ட கொள்கைகளோடொட்டி நோக்கும்போது நமக்குப்பெரும் கொடுமைபோல இக்காலந்தோற்றும் ஒழுக்கத்திற்கும் ஓர் தக்கநியாயம் இருந்ததெனக் கண்டுகொள்வோம்.

**கத்தோலிக்க ஆலயங்கள்.**— பறங்கியர் சைவாலயங்களை இ

டித்தொழித்ததின்பின் தம்சமயஆலயங்களை ஆங்காங்கு மிகஅ ழகாக அமைப்பித்தனர். பல்டேயஸ்பாதிரியார் 1658-ம் ஆண் டுவரையில் தாம் யாழ்ப்பாணத்திற்கண்ட பறங்கியர்கோவில் களிற் சிலவற்றைத் தமது இலங்கைச்சரித்திரத்திலே சித்திரி த்துக் காட்டியிருக்கின்றார். அவை யாழ்ப்பாணத்தில் எங்கு மில்லாத அழகுவாய்ந்தவைகள். அவற்றின் அருகில் இருந்த குருமனைகள் ஏறக்குறைய எல்லாம் இரு மெத்தைவீடுகளாய் வெகுஅலங்காரமானவைகளாய்க் காணப்படுகின்றன.

பறங்கியர் யாழ்ப்பாணநாட்டை 32 கோவிற்பற்றுக்களாக வகுத்து ஊருக்கொவ்வொரு கோவிலெழுப்பியிருந்தனர். ஒவ் வோர் கோவிலிருந்த பிரிவைக் குறிக்கும்படியே "கோவிற்ப ற்று" எனும் பெயருண்டாகி இக்காலம்வரையில் வழங்கப்படு கிறது. அக்கோவிற்பற்றுக்கள் பின்வருவன.

**வலிகாமப்பற்றில்,**

| | | |
|---|---|---|
| தெல்லிப்பழை | வட்டுக்கோட்டை | வண்ணார்பண்ணை |
| மல்லாகம் | பண்டத்தரிப்பு | சுண்டிக்குளி |
| மயிலிட்டி | சங்கானை | கோப்பாய் |
| அச்சுவேலி | மானிப்பாய் | புத்தூர் |
| உடுவில் | நல்லூர் | ஆக...14 |

**தென்மாட்சிப்பற்றில்,**

| | | |
|---|---|---|
| நாவற்குளி | கச்சாய் | எழுதுமட்டுவாள் |
| சாவகச்சேரி | வரணி | ஆக...5 |

**வடமராட்சிப்பற்றில்.**

| | | |
|---|---|---|
| கட்டைவேலி | உடுப்பிட்டி | பருத்தித்துறை |
| | | ஆக...3 |

**பச்சிலைப்பள்ளிப்பற்றில்,**

| | | |
|---|---|---|
| புலோப்பளை | தம்பகாமம் | முள்ளிப்பற்று |
| முகமாலை | | ஆக...4 |

**தீவுபற்றுக்களில்**

| | | |
|---|---|---|
| ஊர்காவற்றுறை | வேலணை | புங்குடுதீவு |
| அல்லைப்பிட்டி | காரைதீவு | நயினாதீவு |
| | | ஆக...6 |

ஆகத்தொகை...32

இவையன்றி வன்னிநாட்டைச்சார்ந்த பூநகரி, பல்லவராயன்கட்டு, பெருங்களி, மாந்தை, நானாட்டான், அரிப்பு முதலியவிடங்களிலும், ஊருக்கொருகோவில் இருந்தது. மன்னார் ஏழுகோயிற்பற்றாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை சீதாதி, (இது பட்டினம் என்றர்த்தமுள்ள ஒரு பறங்கிப்பாஷைச்சொல்) தோட்டவெளி, கரிசல், எருக்கலம்பிட்டி, சம்பேதுரு, பேசாலை, தலைமன்னார் என்பவைகள். இவையொவ்வொன்றிலும் ஒவ்வொரு கோவிலிருந்தது. கோவிற்பற்றுக்குரிய ஆலயங்களைத்தவிர (Parish Church) அவ்வவ்வூரில் வேறு பல சிறு ஆலயங்களுமிருந்தன. மாதியப்பிட்டி, தொண்டைமானாறு, கிளாலி முதலியவிடங்களின் ஆலயங்கள் இப்படியானவை. 1650-ம் ஆண்டுவரையில் யாழ்ப்பாணத்தில் ஒரு பிறமதஸ்தருமில்லாமல் சகலரும் பெயரளவில் கிறீஸ்தவர்களாகிவிட்டார்கள். (இலங்கைத் தேவதாழ்ச்சிஉத்தியானம், Jesuits' Annual Letters.)

கத்தோலிக்கஆலயங்களுட் பல முன்னிருந்த சைவஆலயங்களின் நிலையத்தில் எழுந்தன. இவ்வாறே மானிப்பாய்க் கத்தோலிக்கஆலயம் அவ்விடத்திருந்த மிகப்பழைய சைவஆலயத்தைஇடித்துக் கட்டப்பட்டது. ஆயினும் ஒல்லாந்தர்வந்தகாலையில் அக்கட்டிடம் முற்றுப்பெற்றிருக்கவில்லை. சாவகச்சேரியிலும் இப்படியே. சாவகச்சேரிக் கத்தோலிக்ககோவில் அத்திபாரங்கள் சந்தையின் மேற்புறத்தில் இன்றைக்குங் காணப்படுகின்றன. கோப்பாயில் சங்கிலிராசனுடைய கோட்டையையிடித்து அதனுள் பறங்கியர் தம் ஆலயத்தைக்கட்டினர். அதின்நிலையம் இப்போதைச்சந்தைக்கும் வீதிக்கும் கிழக்கே இடாய்க் காணப்படுகின்றது. அச்சுவேலி சங்கானை வரணி எனுங் கோவிற்பற்று ஆலயங்கள் இன்றைக்கும் அழிந்தபடி கிடக்கின்றன. வட்டுக்கோட்டைக்கோவில் அமெரிக்கன்மிஷன் ஆலயமாய்த் திருத்தப்பட்டிருக்கின்றது. தெல்லிப்பழை அமெரிக்கன்மிஷன் கோவிலிலே பறங்கியரின்கோவிலில் கட்டியிருந்த இருதூண்கள் சேர்ந்திருக்கின்றன. தற்காலப் பெருஞ்சந்தைகள் எல்லாம் பறங்கியருடைய ஆலயங்களுக் கணித்தாகவே எழுந்தன. ஆலயத்தைத் தரிசிப்போர் பண்டமாற்றுச்செய்யத்தொடங்கியே சந்தைகூடும்வழக்கம் தலைப்பட்டது. பிற்காலம் சிலசந்தைகள் அழிந்துபோன கோவில்வளவுகளினுள்ளேயே கூடுவனவாயின.

**கல்விவிருத்தி.**—தம்சமய ஆலயங்களை ஊர்கடோறும் கட்டியதோடமையாது பறங்கியர் அவ்வாலயங்களுக்கணித்தாய்ப் பள்ளிக்கூடங்களையும் தாபித்து சிறுவருக்குக் 'கல்வியூட்டுவித்

தனர். பட்டணத்தில் உயர்தரக் கல்வியூட்டும் பெரிய வித்தியாசாலையொன்றிருந்தது. போர்த்துக்கீஸ்பாஷையில் மேற்கல்வி கற்போர் கொழும்புக்கும் அப்பால் கோவைக்கும் அனுப்பப்பட்டனர். "கடதாசி" "பேனை" முதலிய எழுதுங்கருவிகள் பறங்கியராலேயே முதன்முதல் இங்கு கொண்டுவரப்பட்டன. அச்சியந்திரோபாயத்தையும் பறங்கியரே இந்தியா இலங்கையாதிய கீழ்ச்சீமைகளுக்கு அறிவித்தார். கொச்சியில் தமிழ்நூல்களை அச்சிடும் இயந்திரமொன்று 1577-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. அதற்குத் தமிழெழுத்துகள் ஐரோப்பாவில் செய்விக்கப்பட்டன. அவ்வச்சியந்திரத்தில் "ஞானோபதேசம்" முதலிய சிலபுத்தகங்கள் அச்சிட்டு யாழ்ப்பாணத்திலும் பரப்பப்பட்டன. தமிழரசர்காலத்தில் தமிழுக்கிருந்த அபிமானம் பறங்கியர்காலத்தில் எவ்வாற்றானும் குறைந்திருந்ததென்றெண்ண நியாயமில்லை. முன்னிலுமதிக கல்விவிருத்தியே காணப்பட்டது. தமிழரசர்காலத்தில் தருமப் பள்ளிக்கூடங்கள் எவ்விதமானவையென்பதும் அறியப்படாதிருந்தது. பறங்கியரே இவற்றை ஊரெங்கும் தாபித்து சிறுவர்க்கெல்லாம் கல்வியூட்ட வருந்தினார்கள். தம் சமயவிருத்திக்கு இவை சிறந்த உபாயமென்பதும் அவர்கள் கருத்துப்போலும்.

**தமிழ்வசனநடை.**— (இது) கிறீஸ்தகுருமார் தமிழ்கற்பதில் வெகு சிரத்தையெடுத்துக்கொண்டிருந்தார்கள். தமிழில் வசனரூபமாய் (கத்தியரூபமாய்) நூலெழுதும் வழக்கத்தை உண்டுபண்ணியவரான ரோமைப் பிராமணனெனும் தத்துவபோதகசுவாமிகள் (Robert de Nobili) அக்காலத்திருந்த யேசுசபைக்குரு. தமிழிலும் சமஸ்கிருதத்திலும் வெகு பாண்டித்தியம்படைத்தவரான இவருக்குமுன் தமிழில் கத்தியரூபமான நூல்களே கிடையா. பத்தியரூப நூல்களில் ஆங்காங்குவந்த வசனபாகங்களும் "உரைச்செய்யுள்" என ஒருவகைப்பாவாகவேயிருந்தன. தத்துவபோதகரை அறியாதோர் வீரமாமுனிவரே (C. Beschi) வசனநடைக்குப் பிதாஎன்பர். வீரமாமுனிவர் தத்துவபோதகருக்குப்பின்னே இந்தியாவுக்கெழுந்தருளிய ரோமைக்குருவானவர். இவரியற்றிய "தேம்பாவணி" முதலிய இலக்கியங்களின் விசேஷத்தால் இவரது கீர்த்திப்பிரதாபம் முந்தியவருடையதை மறைத்துப்போட்டதுபோலும். வீரமாமுனிவரே நிகண்டை அகராதிவரிசையாய் எழுதும்முறையையும் தமிழ்க் குற்றெழுத்துக்களுக்குப் புள்ளியிடுதல், குற்றோடு கூடிய எகாரத்துக்குப் புறம்பான குறியீடுமுதலிய திருத்தங்களையும் செய்தவர்.

தத்துவபோதகர் மதுரைராச்சியத்தில் வெகுநாள் ஊழி

யஞ்செய்தபின் தமது வயோதிகதசையில் யாழ்ப்பாணப் பட்டினத்தில்வந்து தங்குவோராயினர். கண்தெரியாதவராய் வீட்டினின்றும் ஆலயத்துக்குக் கைலாகுகொடுத்து அழைத்துக்கொண்டு போகவேண்டியவராய் இங்கு வசித்திருந்து பின் மதுரைக்குமீண்டார். இவரியற்றிய பெரும் பிரபந்தங்கள் ஆத்துமநிர்ணயம், ஞானோபதேசகாண்டம் முதலியன. புறானோ சுவாமிகள் எனும் செயோப்போலித்தரும், பேர்குஈின் சுவாமிகள் எனும் பிராஞ்சியரும் இவ்வாறே தமிழில் அனேக கிரந்தங்களையியற்றிப் பிரசுரித்தனர்.

புலவர்கள்.— அக்காலம் யாழ்ப்பாணநாடெல்லாம் பெயரளவில் கிறீஸ்துநாடாயிருந்தமையால் கிறீஸ்துசமய நூல்களே இயற்றப்பட்டன. ஆங்காங்கு யாழ்ப்பாணத்தாருள் புலமைவாசய்ந்தோரும் விளங்கினார்கள். இப்புலவர்களின் செய்யுட்களில் மிகப் பழமையானது

இலங்காபுரியிருக்கும் யாழ்ப்பாண ராச்சியத்தில்
துலங்குமெண்ணல்பதிக்கும் துங்கமுடிபோலுயர்ந்த
வல்லிக்கிராமமதில் வளர்ந்ததிருநகராம்
தெல்லிக்கிராமமெனும் சீர்சிறந்தபேரூரில்

பேதுருப்புலவன் என்பவர் 1647-ம் ஆண்டு இயற்றியது "சந்தியோகுமையோர் அம்மானை" என்பது. அம்மானைநூல்களே பெரும்பாலும் பறங்கியர்காலத்தினின்று நமக்குக் கிடைத்திருக்கின்றன, "பேதுருப்புலவன்" தெல்லிப்பழைவாசர். அந்நாட்களில் யாழ்ப்பாணத்தில் வலிகாமப்பற்றும், அதில் தெல்லிப்பழையுமே சிறந்தவிடமாய் விளங்கியது. மேற்சுட்டிய "அம்மானை" கிளாலி என்னுமிடத்திருந்த கத்தோலிக்க ஆலயத்தைச் சிறப்பித்துப் பாடப்பட்டது. இந்நாட்காலத்தில் அங்கு சைவஆலயங்களிற்போல தேரிழுத்தலும் வழக்கமாயிருந்தது. கிளாலியிலே பழைய ஆலயமிருந்தவிடத்தில் இன்றைக்கும் ஒரு சிறு ஆலயம் வழங்குகிறது. "சந்தியோகுமையோர் அம்மானை"யில் பொலிந்துவரும் விருத்தப்பாக்களில் ஒன்று பின்வருவது:

சிலைவளர்த்தடலெதிர்த் தேயிரண்டருகுதேசைமுற்பட்
வளைத்தனர்கள்தேரிலுள்
கலையறுத்திடவுதிர்ந்தது சரங்களோடுகவசமற்றிட
வுடர்ந்ததுகஞ்சமர்கள்

தலையறுத்திடவிழுந்தது சிரங்கள்பலகரமறுத்திட
வுதிர்ந்ததுதகர்ந்துஇரு
மலையெதிர்ப்பெனவிடிப்பென வெதிர்ப்புலிகள்வயணமென்ன
மண்மடிந்தனர்மதித்தரசர்.

பின் நம்காலவரையி லெட்டியிருக்கும் நூல் "ஞானப்பள்ளு" எனப் பெயரியது. அதுவும் பறங்கியர்காலத்திலே 1640க்கும் 1658க்கும் இடையில் செய்யப்பட்டதென அகச்சாட்சிகளால் விளங்குகிறது. பாடியபுலவர் யாரெனத் தெரியவில்லை. மாதிரிக்கு ஒரு கலிப்பா பின்வருகிறது.

அண்டகோளமுமப்பாலே கண்கட்கடங்கிடாதொளிர்ரூபலங்காரமும் — துண்டவெண்பிறைச்சூரியனும்மண்ணும் தோற்றவேமுன்னந்தானயிருந்தோன் — பண்டங்நாளினிலைம்பூதமும்செய்து பணிந்தலோகத்தைப்பாலித்தகர்த்தனைத் — தெண்டனிட்டுப்பரவத்தெரிந்த செருசலைத்திருநாடெங்கள்நாடே.

**பறங்கியரின் செல்வாக்கு.**— பறங்கியருடைய 38 வருஷ அரசாட்சி யாழ்ப்பாணத்தை எவ்வளவாக மாற்றிப்போட்டதெனில், அவர்கள் இராசரீகம் அழிந்தொழிந்து இற்றைக்கு 250 வருஷங்களுக்கு மேலாகியும் அவர்களால் கொண்டுவரப்பட்ட பல பழக்கவழக்கங்களும் அவர்கள் பாஷைமணமும் இன்னும் ஆங்காங்கு நிலைத்திருக்கின்றன. பறங்கியர் சிங்களருள்வைத்த சில்வா, பீரிஸ், பேணண்டோ, சொயிசா ஆதியபெயர்களும், தமிழருள்வைத்த பிகுறுதோ, பின்றோ ஆதியபெயர்களும், அவர்கள்கொடுத்த முதலிப்பட்டப் பெயர்களும் இன்றைக்கும் வழங்குகின்றன. குருசுத்தலைப்பாகை, "கொந்தல்" மணி, (அதாவது செபமாலை) வசலிக்கூடு, (சுவிசேஷமெழுதியகூடு) என்பனவைகளும், பொலியளக்குமுன் சிலுவைபோர்டுதல், புதுவீடுகளின்மேற் கொடிதூக்குதல், ஆலயங்களிற் பீரங்கிவெடிதீருதல் முதலிய வழக்கங்களும் இன்றைக்கும் காணப்படுகின்றன. அவர்கள் தோம்புப்பெயர்கள் இன்னும் மறக்கப்படவில்லை. "மாங்கதை"ச்சட்டை, கமிசு, களிசான், சால்வை முதலிய உடைவிசேஷங்களும், "பேனிச்சி" "கவுத்தோர்" முதலிய நகைவிசேஷங்களும், "மேசை" "கதிரை" "வாங்கு" "கவிச்சி" "காத்தை" முதலிய தளபாடங்களும், "கடதாசி" "பேனை" முதலிய நாளாந்தப் பிரயோகப்பொருட்களும் அவர்களை நினைப்பூட்டுகின்றன. இன்றைக்கும் நாட்டவர்கள்தாமும் "கொடுதார்" பண்ணுகிறது (துண்டுதுண்டாய் வெட்டுவது) "பிறேசர்" கொண்டாடுகிறது (கலந்து சிற்றுண்வருக்

துவது) ''பிந்தாரிக்கிறது'' (சித்திரம்வரைவது). ''கந்தாரிக்கிறது'' (பாடுவது) ''மேஸ்திரி'' ''இறெசிதோர்'', ''அமிறூல்'' ''கப்பித்தான்'' ஆதிய நூற்றுக்கணக்கான பறங்கிச்சொற்களை உபயோகிக்கக் காண்கிறோம்.

ஒல்லாந்தரின் சந்ததியாராய் யாழ்ப்பாணம் மன்னார் ஆதியவிடங்களிலுள்ளோரும் பறங்கிப்பாஷையையே பேசுவாரன்றி, ஒல்லாந்தப்பாஷையை யறியார். அவ் ஒல்லாந்தரும் பறங்கியரென்றே அழைக்கப்படுகின்றனர். யாழ்ப்பாணப்பட்டினம் பறங்கிப்பாஷையிலேயே ''சிதாரி'' என்றும் அங்குள்ள ஒல்லாந்தருங்கூட வசிக்குமிடம் ''பறங்கித்தெரு'' என்றுமே இன்றுவரைக்கும் நடைபெறுகிறது.

ஒல்லாந்தர்காலப் பழங்கதைகளிலும் பறங்கியர்காலத்துப் பழங்கதைகளே இன்றைக்கும் வீடுகளில் பெண்பேதையர்கள் சிறுவர்களாலும் சொல்லப்படக் கேட்கின்றோம்.

சுண்ணாகச்சந்தையிலே—பறங்கியர்
சுங்காணைப்போட்டுவிட்டார்
பார்த்தெடுத்தவர்க்குப்—பறங்கியர்
பாதிச்சுங்கான்கொடுப்பர் . என்றும்,

மாட்டிறைச்சியாம்—பறங்கிக்கு
மானுமிணங்காதாம்
சுட்டகருவாடாம்—பறங்கிக்குச்
சோறுமிணங்காதாம் என்றும்,

என்னபிடிக்கிறாய் அந்தோனி—நானும்
எலிப்பிடிக்கிறேன்சிஞ்ஞோரே
பொத்திப்பொத்திப்பிடி அந்தோனி—அது
பிட்டுப்போட்டோடுதுசிஞ்ஞோரே என்றும்,

வரும் மழலைப்பாட்டுக்களையும் காண்க. சிஞ்ஞோர் என்றது ''நயினார்'' என்றதுபோலக் கீழானோர் மேலோரைவிழிக்கும் பறங்கிச்சொல்லு.

அக்காலம் நாடுமுழுதும் கிறீஸ்துவநாடாய்ப் போயிருந்தமையால் சில தமிழ்ச்சொற்களின் அர்த்தங்களும் பறங்கியர்காலத்தில் திரிபுபட்டு அப்படியே இன்றைக்கும் வழங்குகின்றன். உதாரணம்; வேதம் என்னும்சொல் முற்காலம் ஆரிய

ருடைய "இருக்கு" முதலிய நால்வேதங்களையே குறித்தது. ஆயின் பறங்கியர்காலத்தில் அது கிறீஸ்துசமயத்துக்குமுரியதாகி நால்வேதங்களை உடையோராயிருந்தோர் "அஞ்ஞானிகள்" என்றோ "தமிழர்" என்றோ குறிக்கப்பட, அவ்வேதங்கள் இல்லாதோராகிய கிறீஸ்தவர்களே "வேதக்காரர்" எனப்பட்டார்கள். "சத்தியவேதம்" என்ற சொற்றொடரும் கிறீஸ்துமார்க்கத்தையே குறிப்பதாயிற்று. இதனால் யாழ்ப்பாணத்து வைபவமாலையை ஒல்லாந்தர்காலத்தில் எழுதிய மயில்வாகனப்புலவர் தாமும் (நமக்குத்தோற்றுகிறபடி) சைவராயிருந்துகொண்டு கிறீஸ்துமார்க்கத்தைச் "சத்தியவேதம்" என்றும் ஒல்லாந்தர் கொண்டுவந்த சற்றேமாற்றமுடைய அம்மார்க்கத்தை "இறப்பிறமாது (திருத்திய) சத்தியவேதம்" என்றும் அழைப்பவராயினர். இவ்வழக்குகளே இன்றைக்கும் பெரும்பான்மை நிலைபெற்றிருக்கின்றன.

பறங்கியர்பின் இலங்கையையாண்ட ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தில் 137 வருஷம் ஆண்டாரேயாயினும் அவர்கள்பாஷையும் வழக்கங்களும் ஏறக்குறைய அழிந்துபோய் அவர்க்குமுன் 38 வருஷம்மட்டும் ஆண்ட பறங்கியரின் பாஷையும் பழக்கவழக்கங்களுமே நமதுநாட்டில் நிலைத்துவிட்டமை ஊன்றி யோசிக்கத்தக்கது. (சா. ஞா.)

**இலங்கையில் ஒல்லாந்தர்.**—ஒல்லாந்து எனும் தேசத்தார் ஓர்காலம் போர்த்துக்கால்—ஸ்பானிய தேசங்களின்கீழ் வர்த்தகஞ்செய்து பின் அத்தேசங்களோடு போரிகட்டிக்கொண்டு பறங்கியருடைய கீழ்த்திசை வர்த்தகத்தையும் குடியேற்றநாடுகளையும் கைப்பற்ற வழிபார்த்திருந்தார். ஒல்லாந்தர் முதன்முதல் இலங்கையைத் தரிசித்தது 1602-லாம். அட்மிறல் யோரிஸ்வன் ஸ்பில்பேகன் என்பவனே 3 போர்க்கப்பலுக்குத் தளபதியாய் வந்து மட்டக்களப்பில் வைகாசி மாசம் 30-ந் திகதி இறங்கினன். கண்டியரசனான டொம் சுவான் விமலதர்மன் என்பவன் இவனை ஏற்றுபசரித்து கறுவாப்பட்டையும் தொகையாகக்கொடுத்து ஒல்லாந்தரோடு ஓர் பொருத்தஞ்செய்து கோட்டைகட்டவும் உத்தரவளித்தான். ஸ்பில்பேகனின்பின் டிவீட் என்பவன் கண்டியரசனைத்தரிசிக்கவந்து இவன்பரிசாரகர்சிலரால் ஓர் பூசலில் தற்செயலாய்க் கொல்லப்பட்டான். அப்பால் மார்செல்லஸ் டி பொஸ்குவர் எனும் ஒல்லாந்த தானபதி 1612-இல் அக்காலம் கண்டியையாண்ட செனறற் எனும் சிங்கள அரசனிடம் அனுப்பப்பட்டு பறங்கியருக்கெதிராய்ச் சமாதான உடன்படிக்கைபண்ணி 1615-இல் மீண்டான். இதற்கிடையில்

பறங்கியர் ஒல்லாந்தரை உட்செல்லவிடாது தடுக்கும்பொருட்டுத் திரிகோணமலையிலும் மட்டக்களப்பிலும் கோட்டைகளைக்கட்டி அவ்விடங்களைப் பிடித்துக்கொண்டிருந்தனர். ஆயின் 1638-ல் ஒல்லாந்தர் கண்டியரசனுன் ராசசிங்கனுல் அழைக்கப்பட்டுவந்து மட்டக்களப்புக்கோட்டையைக் கைப்பற்றினர். அப்பால் திரிகோணமலை 1639-லும், நீர்கொழும்பும் காலியும் 1640-லும் ஒல்லாந்தர்கைப்பட்டன. அவ்வருஷமே பறங்கியர் நீர்கொழும்பைப் போரில்மீட்டும் 1644-ல் ஒல்லாந்தர் அதை மறுபடியும் பிடித்துக்கொண்டனர். பறங்கியர் 1637-ல் கேரவைக்கணித்தாய்க் கடற்சண்டையிற்பட்ட பெரிய அபசெயமும் கன்னேறுவாவில் இராசசிங்கனுல் அடைந்த பெருந்தோல்வியும், ஒல்லாந்தரால் மட்டக்களப்பு ஆதியவிடங்களில் சகித்த நட்டமும் அவர்களை மிக வலியிழந்துபோகச் செய்திருந்தன. ராசசிங்கன் ஒல்லாந்தரைக்கொண்டு பறங்கியரை ஓட்டுவித்துத் தானரசுசெய்யலாமென மனப்பால் குடித்துக்கொண்டு அவர்கள் கொழும்பையும் பிடித்துக்கொள்ள உதவி செய்தனன். கொழும்பு 1656-ல் ஏழுமாச முற்றுகையின்பின் ஒல்லாந்தர் கைப்பட்டது. தனக்கு வாக்குப்பண்ணியபடி ஒல்லாந்தர் கொழும்பைத் தரவில்லையெனக்கண்ட கண்டியரசன் அவர்களையெதிர்க்கப் பிரயத்தனப்பட்டும் வாய்க்காது போயிற்று. ஒல்லாந்தர் நாளுக்குநாள் வலிமிகுந்து யாழ்ப்பாண இராச்சியத்தையும் அப்பிக்கொள்ளத் தலைப்பட்டனர்.

**மன்னர் ஒல்லாந்தர்கைப்படல்.**— 1658-ம் ஆண்டு மாசிமாசத் தொடக்கத்தில் றிக்லோவ் வன் ஜென்ஸ் எனும் ஒல்லாந்ததளபதி 1500 வீரர்களைக்கொண்ட ஒன்பது கப்பல்களோடும் பல சிறு மரக்கலங்களோடும் மன்னரின்முன்னே காணப்பட்டான். மன்னர் 1560-ம் ஆண்டுதொட்டு முழுதும் கிறீஸ்தநாடாயும், பறங்கியருடைய கைக்கீழ் மிகச் செழிப்புற்றோங்கியு மிருந்தது. பறங்கியர் அதை ஏறக்குறைய முழுதும் செய்கைப்படுத்திப் பெருந்தோட்டங்களை ஆங்காங்குவகுத்து, பல சிறு நகரிகளை நிர்மானித்து, ஏழு பெரிய ஆலயங்களாலும் பல சன்னியாசவீடுகளாலும் அலங்கரித்திருந்தனர். இப்போது காடாய்க்கிடக்கும் மன்னரின் வடமேற்குப்பகுதி அக்காலம் நாடாய்ச் சிறந்திருந்தது. பேசாலைக்கணித்தாய்க் காட்டினுள்நிற்கும் கோபுரமானது ஓர் பறங்கிப்பிரபுவின் ஆதீனத்துள் எழுப்பப்பட்டிருந்த ஓர் காவற்கட்டிடமேயென்பது பொருத்தமான ஒரு துணிபு. சிலர் எண்ணுகிறபடி அதைச் சோனகர் கட்டினரென்று துணிவதற்கு ஏதுவில்லை. ஆயின்

1658 அளவில் மன்னாரின் சீர்குலைந்து செல்வம் மங்கிக்கொண்டுவந்திருந்தது. பத்துவருஷம்வரையில் முத்துக்குளிப்பில்லாமற் போயினமையால் சனங்களுள் தரித்திரம் தலைகாட்டியிருந்தது. பறங்கியரும் துன்மார்க்கத்தாலும் சோம்பலினாலும் வலியிழந்து அதோகதிப்பட்டிருந்தனர்.

மன்னார்க்கடலிற் றோற்றிய ஒல்லாந்தர் அங்கு சத்துருக்களையெதிர்க்க ஆயத்தமாய்நின்ற பன்னிரண்டு மரக்கலங்களையும் அகஸ்மாத்தாய்ச் சருவிச் சிலவற்றைக் கடலிலமிழ்த்தியும் சிலவற்றைக் கைப்பற்றியுங்கொண்டு நாட்டிலிறங்கத் தலைப்பட்டனர். பறங்கியர் ஒல்லாந்தர் வருவாரெனப் பயந்து கடற்கரையில் அகழ்களைப்பொறித்துப் பதிவிருந்து அவரிறங்கவிடாது பொருதினர். ஒல்லாந்தர் தங் குண்டுமாரியின் மறைவிலிறங்கி ஆயிரத்துக்கு மேற்பட்டோராய் அணிவகுத்துநின்ற பறங்கியரைச் சிதறவடித்தும் பலரைக் கொன்றும் வெற்றியாளராய் விளங்கினர். அன்றைப்போர் எத்துணைக் குரூரமுள்ளதா யிருந்ததெனில் "இரத்தமுழுக்கு"என அதற்குப் பேரிடப்பட்டது. யாழ்ப்பாணத்துக் கப்பித்தானாகிய அந்தோனியோ தெ மெனசேசும் அன்று போரில்மடிந்தான். நெறிகெட்டோடிய பறங்கியர் கடலாலும் கரையாலும் யாழ்ப்பாணம்நோக்கிப் போயினர். நல்லதிஷ்டமாய் அன்று சொரிந்த மழையினால் இவர்களை ஒல்லாந்தர் பின்தொடர்ந்து செல்லக் கூடாமற் போயிற்று.

அப்பால் ஒல்லாந்தர் கோட்டையினுள் இருந்த பறங்கிச்சேனையை முற்றுகையால் வெல்லும்பொருட்டு அதற்கணித்தாயிருந்த இருகோவில்களையும் சந்நியாசவீடுகளையும் அரண் செய்துகொண்டிருந்தனர். அம் யோஜ் எனப் பெயரிடப்பட்ட மன்னார்க்கோட்டை தற்காலக் கோட்டையிருக்குமிடத்திலேயே இருந்தது. ஒல்லாந்தர் ஓயாது சொரிந்துகொண்டிருந்த குண்டுமாரிக்காற்றாது கோட்டையுளிருந்த பறங்கியர் நாலாநாளினீற்றில் தம்மை ஒல்லாந்தருக்கு ஒப்புக்கொடுத்து யுத்தமரியாதைகளோடு வெளிப்போந்தனர். இதுநிகழ்ந்தது மாசிமாசம் 22-ந் திகதி. அடுத்த ஞாயிறுவாரம் வெற்றியாளர் பட்டணத்தின் பெரியகோவிலில் ஓர் ஸ்தோத்திர ஆராதனைநடத்தி விழாக்கொண்டாடினர். பின் தாமதமின்றிப் பறங்கியர் முத்துச்சிப்பிப்பார்களை அழித்துவிடாவண்ணம் ஓர் கடற்படையை வைத்துவிட்டு யாழ்ப்பாணத்தைநாடிச் சென்றனர். ஒல்லாந்தர் இவ்வாறு முத்துச்சிப்பிப்பார்களைக் காவல்பண்ணியும் எட்டுவருஷங்களாய் அவர்களால் முத்துக்குளிப்புநடத்த இயலாதிருந்தது.

**யாழ்ப்பாணத்திற் படையேற்றல்.**— பங்குனிமாசத் தொடக்கத்தில் ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைநோக்கி மாதோட்டவழியாய்நடந்து வன்னிக்காடுகளை ஊடறுத்துப் பூநகரியைச்சேர்ந்தனர். பூநகரியில்நின்று கடல்கடந்து யாழ்ப்பாணத்தில் இறங்குவது வெகு கஷ்டமாயிருந்தது. அங்கிருந்த மரக்கலங்களில் ஒருதடவைக்கு 300 பேருக்கு மேற்கொண்டு செல்வது கூடாததாயும் ஒருமுறைபோக ஒன்றரைமணித்தியாலத்துக்கு மேற் செல்லுவதாயுமிருந்ததால் சேனையை இக்கரைப்படுத்துதல் ஆபத்கரமாயிருந்தது. ஆயினும் பறங்கியர் சத்துருக்கள் பூநகரிமார்க்கமாய் வருவரென ஊகியாமல் ஆனையிறவிலேயே தம்மைக் காத்துநிற்கின்றாரென அறிந்தமையால் இவர்கள் யாதும் விக்கினமின்றிச் சேமமாய் இக்கரைப்பட்டுச் சாவுகச்சேரியிற் சேர்ந்தனர். இவையனைத்திலும் தென்மராட்சியின் தலைவனான ஓர்வன்னியனின் பெருந்துணை ஒல்லாந்தருக்கிருந்தது. இவன் தனக்கு ஓர் வெள்ளைமனைவியைத் தரும்படி யாழ்ப்பாணத்துப் பறங்கியரிடம் கேட்டபோது அவர்கள் ஓர் வெள்ளைப் பெட்டைநாய்க்குப் பொற்சங்கிலி கழுத்திற்றரித்துப் பல்லக்கிலேற்றி அவனுக்கு அனுப்பிவிட்டிருந்தனர். இதனாற் பறங்கியரில் தீராத வன்மமுற்றிருந்து அவர்களைப் பிடித்துக்கொடுக்கச் சன்னத்தனாய்நின்று ஒல்லாந்தருக்குப் பக்கத்துணையானான்.

சாவுகச்சேரிக்கோவிலின் அழகையும் அதன் சுற்றுப்புறங்களின் வனப்பையுங்கண்டு ஒல்லாந்தர் வெகுபிரீதியுற்றார்கள். சனங்கள் பயமின்றி உணவுப்பொருட்களைக் கொண்டுவரலாமெனவும் வாங்கும் பொருட்களுக்கெல்லாம் காசு உடனே கொடுத்துவிடப்படுமெனவும் பறைசாற்றுவிக்கவே ஊரவர்களும் அவர்களை நன்றாய் உபசரித்தனர். பகல் போசனமருந்தியபின் நாவற்குளியையடைந்து அங்கு இராத்தங்கினர். பங்குனிமாசம் 3-ந் திகதியாகிய மறுநாட்காலை "காலைச்ஜெபத்தின்பின்" உப்பாற்றைக்கடந்து சுண்டிக்குளிவரையிலும் வந்தபோதிலும் எதிர்ப்போர் யாரும் காணப்படவில்லை. ஆயின் சுண்டிக்குளிக்கோவிலை அடையுமுன் பறங்கியர் எதிர்த்துநின்றனர். அங்குநடந்த ஓர் சிறு யுத்தத்தில் ஒல்லாந்தரே வெற்றியாளராகி கோவில்வளவை அரணாக்கிக்கொண்டு இராத்தங்கி, பின் மறுநாட்காலை தாங்கள் கொண்டுவந்த இரு பீரங்கிகளினின்றும் குண்டுமாரிபொழிந்து தெருவைச் சோதித்துக்கொண்டே கோட்டைக் கருகாமையில்வந்து சேர்ந்தார்கள். ஒல்லாந்தரின் மரக்கலங்களும் கோட்டைக்கெதிரேவந்து நின்றன. பின் கோட்டையைச் சருவுதற்கு ஆயத்தமாய்

அகழ்தோண்டிக் கொண்டிருக்கையில் பக்கத்திலிருந்த கிணற்றில் தண்ணீர்பருகிய முப்பதின்மர் ஒல்லாந்தர் உடனேஇறந்தனர். இக்கிணறு பறங்கியரினல் நஞ்சூட்டப்பட்டிருந்தது. ஒல்லாந்தர் கோட்டையைப்பிடித்தபின், இச்சதிமானத்தைப் பழிவாங்கும்படி பறங்கிய கைதிகளில் எழுபதின்மரை அக்கிணற்றிற் குடித்துச் சாகும்படிசெய்தபின்னே கிணறு தூர்த்துவிடப்பட்டது.

கோட்டையுள் அடைக்கலம்புகுந்த பறங்கியர்போக, எஞ்சியோர் பட்டணத்தின் ஆலயங்களைச்சார்ந்த வீடுகளை அரணாக்கிக்கொண்டு போராடினர். ஒன்பதாந்திகதி பட்டணத்தின் மேற்குப்புறத்திலிருந்த யேசுசபைக்கல்லூரியும் மடமும் பிடிக்கப்பட்டன. ஒன்பதுநாட்சென்று கிழக்கு அந்தத்தில் நின்ற டொமினிக்கன்சபை ஆலயமும் மடமும் ஒல்லாந்தர் கைப்பட்டன. பங்குனிமாசம் 20-ந் திகதி கோட்டையின் முற்றுகை ஆரம்பிக்கப்பட்டது. இதற்கிடையில் பறங்கியருடைய பெண்களும் பிள்ளைகளும் அனேகர் ஊர்காவற்றுறை மார்க்கமாய் நாகபட்டினத்துக்கோடித் தப்பிவிட்டனர். ஆயினும் கோட்டைக்குள் போர்வீரரும் கிரகஸ்தருமாய் 3000 சனங்கள் அடைக்கலம்புகுந்திருந்தார்கள். யாழ்ப்பாணக்கோட்டை இப்போதிருப்பதிலும் அக்காலம் அதிக விசாலமாயிருந்தது என்பர். அது 1624-ம் ஆண்டு கட்ட ஆரம்பித்து எட்டுவருஷத்தின் பின்னே முற்றுப்பெற்றது. உள்ளே கப்பித்தானின் வீடு சேனுபதிகளின் மனைகளும், கோயிலும் கன்னியாஸ்திரி மடமும், பெரிய உத்தியோகஸ்தர் மனைகளும், வைத்தியசாலையும், தருமசாலைச் சகோதரர்வீடும், மறியற் கட்டடங்களுமிருந்தன. அடைமதில் செய்கையானது ஒல்லாந்தரால் வெகு சாக்கிரதையாய் நடத்தப்பெற்றது. இரவில்மட்டும் உணவுப்பொருட்களைத் தேடும்படி தீவுபற்றுகளுக்கு வெளிப்போந்து செல்லப் பறங்கியருக்கு வசதியிருந்தது. ஆயினும் விரைவில் ஒல்லாந்தரது சாக்கிரதையால் இவ்வாறு செய்தலும் கூடாமற் போயிற்று.

பறங்கியரும் ஒல்லாந்தர் வருவாரெனக் காத்திருந்து யாழ்ப்பாணக்கோட்டையை நன்ருய்த் தயார்படுத்தி வைத்திருந்தனர். யாழ்ப்பாணத்துக்கு ஓர்கதவு என்னத்தக்க ஊர்காவற்றுறைச் சலசந்தியைக் காத்துக்கொள்ளும்படி இரண்டு வருடத்திற்கு முன்னரே அப்போது "கயிஸ்" கோட்டை என்னப்பட்ட கடற்கோட்டை ஓர் மலைமேற் கட்டப்பட்டது. "கயிஸ்" என்றது துறைமுகம் எனப்பொருள்படும் ஓர் போர்த்துக்கீஸ்

சொல். அப்பெயரே இப்போது பிறபாஷைகளில் ஊர்காவற்று றைக்கு Kayts என வழங்குகின்றது. ஒல்லாந்தர் கடற்கோட்டையைக் "கமனியேல்" (பன்றியின்தொடை) யென அழைத்தனர். இக்கோட்டைக்குள் ஓர் கோவிலும், வாசல்தானங்களும் குண்டு ஊடுருவக்கூடாமற்செய்த மூடுசாந்து அறைகளுமிருந்தன. கடற்கோட்டைக்கு எதிரே ஊர்காவற்றுறையில் வேறொரு கோட்டைகட்டி இருகோட்டைகளினின்றும் இவற்றினூடாய் உட்படும் கப்பல்களைச்சருவ ஆயத்தஞ் செய்திருந்தது. ஆயின் ஒல்லாந்தர் வந்தபோது கரைக்கோட்டை முற்றாய் நிறைவேறியிருக்கவில்லை. யாழ்ப்பாணக் கடவின் கீழ்வாசலைக் காப்பதற்கு கல்முனையிலும் பறங்கியர் ஓர் கோட்டைகட்ட எத்தனித்திருந்தும் கைவிடாது விட்டிருந்தனர். அப்பால் போர்வீரர் தொகையிலும் யாழ்ப்பாணத்திற் பறங்கியரின்பெலம் பெரிதாயிருந்தது. மன்னாரிலிருந்து ஓடிவந்தவர்களோடு கொழும்பிலிருந்தோருள்ளுஞ்சிலர் நாகபட்டணமூலமாய்த் தப்பியோடிவந்திருந்தனர். இவற்றோடு கோவையினின்று விரைவில் தங்களுக்கு உபபலம் வருமென்றநம்பிக்கையும் பறங்கியருக்கிருந்தது.

கடற்கோட்டையைப் பிடித்தல்.—முற்றுகை யிடப்பட்டோர் ஊர்காவற்றுறைக் கடல்மார்க்கமாய் இந்திய கரையோடு சம்பந்தம் பூண்டிருப்பதையும் உணவுப்பொருட்கள் ஆதியன வருவித்துக் கொள்வதையும் கண்ட ஒல்லாந்தர் கடற்கோட்டையையும் தீவுகளையும் அடிப்படுத்தாது யாழ்ப்பாணக்கோட்டையைப் பிடிப்பது அரிதென யோசித்து முற்றுகையை விடாமலே கடற்கோட்டையைத்தாக்கக் காரைதீவுக்குச் சென்றனர். அங்கு அகழ்கள் பொறித்துக் குண்டுப்பிரயோகஞ்செய்தும் குண்டுகள் கோட்டைமட்டுஞ் செல்லாததினால் வள்ளங்களில் மரவேலையால் அரண்கள் இயற்றிக்கொண்டுபோய் அதைச் சருவமுயன்றனர். இவ்வேலைகள் முற்றுப்பெறுமுன்னரே கோட்டையுள்ளிருந்த யெரோணிமோ தே பாய்வ, என்பவனும் சேனையும் தண்ணீரின்மையால் தவித்து வெண்கொடி யுயர்த்தி ஒல்லாந்தரைச் சரணடைவோராயினர். கடற்கோட்டை முற்றுகை பதினைந்துநாள் வரையுமே நீடித்தது. சித்திரைமாச நடுக்கூற்றில் ஒல்லாந்தர் அக்கோட்டைக்கு அதிபர்களாயினர். பறங்கியர் பீப்பாக்களில் வைத்துக்கொண்டிருந்த தண்ணீர் போதாதென்று கண்டு வேண்டியசலத்தை வைத்துக்கொள்ளுமாறு இவர்களாலேயே அக்கீ இற்றைக்குக் காணப்படும் தண்ணீர்த் தொட்டிகள் கட்டுவிக்கப்பட்டன. ஒல்லாந்தர் கடற்கோட்டையைப் பிடித்துக்கொண்டு கப்பித்தானையும் குடும்பத்தையும் இந்தியாவுக்கு அனுப்பிவிட்டனர்.

**யாழ்ப்பாணக் கோட்டைபிடிபடல்.**—இதற்கிடையில் யாழ்ப்பாணத்தில் கோட்டை வெகு சாக்கிரதையாய் அடைமதில் செய்யப்பட்டுவந்தது. கோவையிலிருந்து அனுப்பப்பட்டஉதவியும் யாழ்ப்பாணம்வந்துசேராது ஒல்லாந்தரின்கடற்படைகளால் தடுக்கப்பட்டது. ஒல்லாந்தருக்கோ அவர்களது கப்பலொன்றினால் நான்கு பெரும்பீரங்கிகளும் வேறு பலபொருட்களும் கொண்டுவரப்பட்டன. ஆயினும் குண்டுகள் குறைந்து போயினமையால் ஒல்லாந்தர் கோவில்களின் பித்தளை வெண்கல தளபாடங்களை நொருக்கியும், சவக்காலைகளின் கல்வெட்டுப்பலகைகளை உடைத்தும் பீரங்கிகளிற்போட்டுச் சுட்டுக்கொண்டிருந்தனர். இதனாற்போலும் பறங்கியருடைய சமாதிமேலெழுத்துக்கள் யாழ்ப்பாணத்திலில்லாது போயின. கோட்டையுள்ளிருந்தார் ஓயாமற் சொரிந்துகொண்டிருந்த குண்டுமாரியால் காயம்பட்டோரும், மடிந்தோரும், பட்டினியால் வாடி இறந்தோருமாய் வெகு அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தனர். இறந்தோர்தொகை ஆயிரத்தறுநூறெனக் கணக்கேற்றப்பட்டது. மூன்றரைமாத முற்றுகையின்பின் சனங்கள் அப்பால் போசனத்துக்கு வழியின்றி அம்பாயப்பட்டனர். பழுதுபட்ட அரிசியே மீந்திருந்தது. உப்பு இல்லாமற் போய்விட்டது. பட்டினியாற் சனங்கள் நாய்களையும் பூனைகளையும் பிடித்துத் தின்றார்கள். ஈற்றில் கொள்ளைநோயுமொன்று தலைகாட்டிற்று. ஆதலால் இனி ஆற்றாதெனக்கண்ட பறங்கியர் ஆனிமாசம் 21-ந் திகதி தென்கிழக்கு அலங்கத்திலே வெண்கொடியுயர்த்திச்சமாதானங்கேட்டனர். அடுத்தநாள் உடன்படிக்கைக்குக் கைச்சாத்திடப்பட்டது. கோட்டைச்சேனை யுத்தமகிமைகளோடு முரசதிரக் கொடிகள்பறக்க வெளிப்போந்து ஒல்லாந்த கொடித்தம்பத்தின்முன் தங்கொடிகளைத் தாழ்த்தவும், ஒரு பீரங்கியைத் தம்முடன் கொண்டுசெல்லவும், குருமாரும் கிரகஸ்தருமான பறங்கியர் இந்தியாவுக்கு அனுப்பப்படவும், எவராயினும் தமக்கு உரிய உடைகளையும் அவசியமான உணவுப் பொருட்களையுமேயன்றி மற்றொன்றையும் கொண்டுபோகாதிருக்கவும், அவர்கள் சகல பொருள் பண்டங்களும் ஒல்லாந்த சேனைக்கு வெற்றிப்பொருட்களாய் விடப்படவும் பொருத்தனை செய்யப்பட்டது.

**உலகுகாவலமுதலி.**—இங்கு வைபவமாலைகூற யாழ்ப்பாணச்சரித்திரக்காரர் விரித்துக்கூறும் உலககாவலமுதலியின் வரலாறு வரத்தக்கது. "யாழ்ப்பாணத்துக் கோட்டையை ஒல்லாந்தர் எளிதிற் பிடித்தமைக்கு அனுகூலியாயிருந்தவன் உலகுகாவலமுதலியென்பவன். அவன் சோழநாட்டில் இராசதுரோக குற்றத்துக்குத் தப்பியோடி யாழ்ப்பாணம் வந்து காரைதீவிலே

தன் குடும்பத்தோடு வாழ்ந்தவன். பெருஞ்செல்வமும் அதிகாரமுமுடையவன். பறங்கியதிகாரிகளோடு நண்புபூண்டிருந்தவன். ஆயினும் அவன் அவர்களுடைய கொடுங்கோன்மைகண்டு பொருளுக்கி அவ்வரசைநீக்கச் சமயம்பார்த்திருந்தான். அவனை ஒல்லாந்தர் துணையாகும்படி கேட்க அவனும் உடன்பட்டான். சமயம்பார்த்து ஓரிரவு 'அவன் ஒல்லாந்த தளபதியைக்கொண்டுபோய் புழைக்கதவால் கோட்டையினுள்ளே பிரவேசிக்கும்படி செய்தான். அச்சமயம் பறங்கிகள் காவல்விழிப்பின்பொருட்டு ஓரிடத்திற்கூடி ஆடல்பாடல்களிற் பொழுதுகழிப்பாராயினர். அதுகண்டு ஒல்லாந்தசேனை முழுதும் கோட்டைக்குள் நுழைந்தது. விடியுமுன் ஒல்லாந்தர் தங்கொடியுயர்த்தி உள்ளிருந்த பறங்கிவீரர் அநேகரைவெட்டி அகழிகளிலிட்டனர். எஞ்சினோர் சரணடைந்தனர்" (யாழ்ப்பாணச்சரித்திரம்) இது பொருந்தாக்கதையென்பது தெளிவு. உலகுகாவலமுதலி காரைதீவில் ஒல்லாந்தருக்கு உதவிசெய்திருப்பின் இருக்கலாம். அவன்வரலாறு தென்மராட்சி வன்னியனின் வரலாற்றோடு மருவித் திரிபுற்றதுபோலும்.

பறங்கியர் புறப்படல்.— இதுநிற்க, கோட்டையி னுள்ளிருந்தோரெல்லாம் வெளியேற மூன்றுநாட்சென்றது. ரொட்றிகோ பொறெய்யோ எனும் யாழ்ப்பாணக் கப்பித்தான் வன்டெலான் எனும் ஒல்லாந்த சேனைத்தளவாய்க்குக் கோட்டைத் திறவுகோல்களை ஒப்பித்தான். பின் கோட்டைச்சேனை வெளிப்போந்தது. பொருத்தனையிற் கண்டபடி பீரங்கியை இழுத்துக்கொண்டுபோகப் பெலமில்லாமையால் அதைவிட்டுச் சென்றனர். சேனையின்பின் குருமாராதிய பிறர் வந்தனர். ஒல்லாந்தர் சற்றும் இரக்கமாவது மரியாதையாவது இல்லாமல் ஆண் பெண் வாலர் விருத்தர் கன்னியர் துறவிகள் சகலரையும் வஸ்திரமுரிந்து பரிசோதித்ததைக்கண்டு பறங்கியர்கொண்ட சீற்றஞ் சிறிதல்ல. ஒல்லாந்தரின் பொருளாசை அவ்வளவிலிருந்தது. சனங்கள் வெளிப்போந்தபின் ஒருநாள் இராணுவஉத்தியோகஸ்தர் கோட்டையைக் கொள்ளையடிக்க விடப்பட்டார்கள். மறுநாள் போர்வீரர்கள் அங்கு எடுக்கவிரும்பிய பொருட்களை எடுக்கவிடப்பட்டது. கோட்டையினுள்ளே பிணநாற்றமும் அலங்கோலமும் சகிக்கக்கூடாதிருந்தமையால் சிலநாட்கழித்தே ஒல்லாந்தர் அதனைச் சுத்திசெய்துகொண்டுட்பட்டனர். அதின் மதில்கள் குண்டுகளால் வெகு சேதப்பட்டுக்கிடந்து பின் திருத்திக்கட்டப்பட்டன. அப்பால் யாதுகருதியோ கோட்டைக்குள் முந்நூறு தென்னைகளையும்நாட்டினர்.

அதுநிற்க, பறங்கியரெல்லாம் கப்பல்களிற்போட்டு மிரு

களை அடைப்பதுபோலடைத்து வத்தாவியா மார்க்கமாய் ஐரோப்பாவுக்கோ தாம்தாம் விரும்பியவிடத்துக்கோ அனுப்பப்பட்டனர். இளம்விதவைகளும் கன்னியர்களும் வெற்றியாளருக்கேயென்று வைத்துக்கொள்ளப்பட்டார்கள். ஆதியில் வந்த ஒல்லாந்தர் போர்வீரராய் மனைவிமக்களின்றி வந்திருந்தமையால் பெரும்பாலும் பறங்கிப்பெண்களையே மணந்தனர். பறங்கிச்சேனைவீரரில் சிலர் ஒல்லாந்தரின்கீழ் உத்தியோகத் தமர்ந்துகொண்டனர்.

ஒல்லாந்தர் பறங்கியரை எவ்வளவு குரூரமாய் நடத்தினார்களோ அவ்வளவில் யாழ்ப்பாணச் சுதேசிகளைச் சனுவாய் நடத்துவார்போலக் காட்டவிரும்பி அவர்களுக்கு அனேக நல்வாக்குகளைப்பண்ணினர். புகையிலைவரி உடனே நீக்கிவிடப்பட்டது. மார்க்கவிஷயத்திலும் அவரவர் இஷ்டம்போல் நடக்கலாமென ஆதியிலே நயவசனம்கூறினர்.

## 4. ஒல்லாந்தர்காலம்,

**சதியாலோசனை.**— ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தாரைத் தம் பக்கமாக்கிவிடப் பிரயாசித்தும் பறங்கியரில் இவ்விராச்சியத்தாருள் தலைமைபெற்றோர் பலர்கொண்ட பிரீதி அத்தனைவிரைவில் மங்கியொழியாதிருந்தது. அன்னோருட் செல்வாக்குள்ளார் சிலர் ஒல்லாந்தரைச் சதிமானமாய்க்கொன்று தொலைத்துவிட ஓர் சூழ்ச்சிசெய்யத் தலைப்பட்டனர். இதில் யாழ்ப்பாணத்து டொம் லூயிஸ் பூதத்தம்பியென்னும் முதலியும்,மன்னாருள் ஒருதலைவனும் இராசவிசுவாச சத்தியஞ்செய்துகொடுத்து இங்கு நின்றுவிட்ட பறங்கியரில் ஐவரும் முக்கியஸ்தராய் நின்றனர். இச்சதிமானம் மனுவேல் அந்திராடோ என்னும் ஓர் சிங்களமுதலியால் கண்டுபிடிக்கப்பட்டு அரசினரால் விளங்கிக் குற்றவாளிகள்நெஞ்சந் திடுக்கிடத்தக்க மகாகொடூரமாய்க் கொல்லப்பட்டனர். பல்டேயஸ் பாதிரியார் இக்கொலைத்தண்டத்தைச் சித்திரசகிதமாய் வரைந்துவைத்திருக்கின்றார். குற்றவாளிகளைச் சிலுவைகளிற்கட்டி நெஞ்சைப்பிளந்து ஈரலைப்பிடுங்கி அவர்கள்முகத்தில் எறிந்துவிடப்பட்டது. இவர்களது சதிமானச்சூழ்ச்சியை மலாக்காவில் பிறந்தவரும் வியாதிநிமித்தமாய் மற்றைய பறங்கிக்குருமாரோடு அனுப்பிவிடப்படாது யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தவருமாகிய கல்தேரோ எனும் யேசுசபைக் குருவானவர் அறிந்திருந்தும் அவ்விரகசியம் "பாவசங்கீர்த்தனம்" எனும் சமய ஆசாரசம்பந்தமாய் மட்டும் அவர்க்குத் தெரிந்திருந்தமையால் அரசினர்க்கு அதை வெளிப்

படுத்தாதிருந்துவிட்டார். கத்தோலிக்ககுருமார் தாம் "பாவசங்கீர்த்தன" இரகசியமாயறிந்தவைகளை உயிர்போகினும் சொல்லார். ஆகவே இவர் அவ்வாறு ஒழுகுவோராயினர். அரசினர் இவரையும்பிடித்துச் சிரச்சேதம்செய்வித்தனர். சதிமானத்திற் சேர்ந்திருந்த வேறு பதினொருவர் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டு யாவர்பிணங்களும் பருந்துகள் விருந்துகொள்ள மரங்களில் தூக்கப்பட்டன.

**பூதத்தம்பிகதை.**— டொம் லூயிஸ் பூதத்தம்பி கைலாயவன்னியனின் சகோதரியை மணமுடித்திருந்தவனென வைபவமாலை கூறுகின்றது. ஆயின் அந்நூல் பூதத்தம்பியின் சரித்திரத்தை மிக மாறுபாடாக்கி வரைந்து பூதத்தம்பிமனைவியை அந்திராடோ இச்சித்து அதினாற் சதிமானக்காகிதம் எழுதி அவனுயிரைத் தானே போக்குவித்தானென் றுக்கிவிட்டிருக்கின்றது. வைபவமாலை சுருங்கச்சொல்லிய இவ்விபரீதகதையை மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை கற்பனாலங்காரமாய் விரித்துப் பின்வருமாறு எழுதினர்.

"ஒல்லாந்தர் அரசுசெய்யத் தொடங்கியபோது அரசிறைப்பகுதிக்கு அதிகாரியாக வேளாண்டலைவனாகிய பூதத்தம்பி முதலியையும், நிருபப்பகுதிக்கு அதிகாரியாகக் கரையார்தலைவன் (குருகுலத்தலைவன்) ஆகிய மனுவல் அந்திராசியையும் நியமித்து அவனுக்குப் பறங்கிக்காரர்போல முதலிப்பட்டமளித்தார்கள். இருவரையும் ஒல்லாந்தர் மந்திரிமாராகப்பாவித்து அவர்களைவினவியே அரசுசெய்துவந்தார்கள். தமது கிறீஸ்துசமயத்தைப் பரவச்செய்வதும் கறுவாப்பட்டை முதலிய வியாபாரவஸ்துக்களை விருத்திசெய்வதும் போக்குவரவுக்கேற்ற சாதனங்களைச்செய்வதுமே அவர்களுடைய அரசுநெறியாகவிருந்தது.

"பூதத்தம்பிமுதலியும் அந்திராசிமுதலியும் பெருநட்புடையராய்த் தத்தம்பகுதி அதிகாரத்தைச் செய்துவரும்போது ஒருநாள் பூதத்தம்பி தனது மாளிகையில்நடந்த விருந்துக்கு அந்திராசியையும் அழைத்தான். அந்திராசிசெல்லுதலும் அவனைப் பூதத்தம்பி உபசரித்தழைத்துத் தனிமையான வோரறையிலே போசனம்படைப்பித்து அவனுண்ணும்வரையும் பக்கத்தில்நின் றுபசாரம்பண்ணுமாறு இரண்டு ஏவலாளரை வைத்துவிட்டு மற்றவிருந்தினரை உபசரிக்குமாறு சென்றான். பூதத்தம்பிமனைவி பந்தி மேல்விசாரணைசெய்துகொண்டு போ

கும்போது அந்திராசி இருந்துண்ணும் அறையினுஞ்சென்று பிரசாரகரையழைத்து வேண்டிய உண்டிவகைகளைக் குறைவின்றிப் படையுங்களெனத் தூண்டிப்போனாள். அந்திராசி பிறர்மனைவியரைப் பெற்றதாயெனமதிக்கும் விரதமில்லாதவனாதலின் அவள் முகத்தழகைக்கண்டான். இனிய குரலழகையுங் கேட்டான். அவள்நடையழகையும் நோக்கினான். அவன்நோக்கோடு உள்ளமும் அவள்பாற் செல்லப்பெற்றான். தணியாப் பெருங்காதல் மூளப்பெற்றான். அவனருந்திய விருந்தெல்லாம் அவனுக்கு வேம்பாயிற்று. பரிசாரகர்வினவுக்கு அவன் யாதுங்கூறாது மரமாயிருந்தான். பலகாற் கேட்டபின்னர் அவன் உணர்வுவந்து போதுமெனக்கூறி எழுந்து வாய்சுத்திசெய்து கொண்டுபோய் ஆசாரமண்டபத்திலிருந்து பூதத்தம்பியோடு பேசிக் கருத்தொருபாலிருக்கத் தாம்பூலந்தரித்து விடைபெற்று வீட்டுக்குமீண்டனன்.

"அவன் வீடுபோய்ச்சேர்ந்தவுடன் தங்கக்காசுகளும் வாசனைத்திரவியமும் ஒருபட்டாடையும் ஒரு சந்தனப்பெட்டியில்வைத்து 'இதனைக் கொண்டுபோய்ப் பூதத்தம்பிமனைவி அழகவல்லிகையில் யாருமறியாவகைகொடுத்து, யான்வந்து கொண்டாடுவதற்கு ஏற்றகாலம் யாது' என்று கேட்டுவாவென ஒரு தூதனிடங்கொடுத்து அவனையனுப்பினான். அவன்சென்று பூதத்தம்பியில்லாத சமயம்பார்த்து அவள்கையிற்கொடுத்துத் தன்தூதைச்சொன்னான். அஃது அவள்செவியில் உருகிய ஈயநீர்போலப் பாய்ந்தது. அவள் கொடுஞ்சினங்கொண்டு ஒரு செருப்பையெடுத்து அப்பெட்டிமீதுவைத்துக் கட்டுவித்து இதனைக்கொண்டுபோய் அப்பாதகன்கையிற் கொடுத்திடுகவென்று அத்தூதனையுங் கண்டித்தனுப்பினாள். தூதன் நடந்ததைச்சொல்லிப் பெட்டியையுங் கொடுத்தான். அந்திராசி 'உலகமெல்லாம் என்னடிவணங்க அழகவல்லிக்குமாத்திரம் மதிப்பில்லாதவனானேன், என்தூதனும் என்னை மதிக்கமாட்டானே' என வெட்கமும் துக்கமும் மானமுந்தூண்ட, ஆறாக் கோபமுடையனாகி இவள்செருக்கை அடக்குவேனெனச் சபதமிட்டுச் சமயம்பார்த்திருந்தான். அழகவல்லி அச்செய்தியைத் தனதுநாயகனுக்கு உடனேசொல்லின் பெரும்பகை விளையுமென்றஞ்சிச் சாந்தமான காலம்பார்த்தறிவிக்க எண்ணியிருந்தாள். இரண்டுமூன்றுதினத்தில் அந்திராசி பூதத்தம்பியிடத்திற்சென்று ஒரு வெள்ளைக்காகிதத்தைநீட்டி, 'கச்சாய்த்துறைக்குச் சிலபாரங்களுக்குக் கட்டளையனுப்பவேண்டும், மரம் இத்தனையென்று கணக்குப்பார்த்து உட்ல்வாசகம் எழுதிக்கொள்ளுவேன், பின்பு உமக்குச் சாவகாசமிருக்காது, இதிற் கை

யெழுத்திட்டுத்தாரும்' என்றான். பூதத்தம்பி அதனைச் சாதமென்றெண்ணிக் கையெழுத்திட்டுக்கொடுத்தான். அந்திராசி தன்னெண்ணம் முடிந்ததென்று மகிழ்ந்துகொண்டுபோய் மறு காலிகிதத்தில் உடல்வாசகத்தைப் பறங்கித்தலைவனுக்கு ஒல்லாந்தரைவெல்லத் துணைபுரிவதாகவெழுதி ஒரு தூதனிடமனுப்பிய பாவனைசெய்து, அதனைத் தான் ஐயுற்றுப் பிடித்தான்போலநடித்து ஒல்லாந்த தேசாதிபதிக்குக் காட்டினான். தேசாதிபதி அதனுண்மையை ஆராய்ந்து பொய்யெனக்கண்டு அதனைத்தள்ளினான். அந்திராசி இதனுண்மையை நானறிவேன் இதுசெய்த பூதத்தம்பியைத் தப்பவிட்டால் ஒல்லாந்தவரசுக்குப் பழுதுண்டாம். என்னுயிரும் தப்பாதென்றான். அதற்குத் தேசாதிபதி இணங்கிக் கொலைத்தீர்ப்பிட்டான். ஊர்காவற்றுறையிலே கடற்கோட்டை கட்டுவித்துக்கொண்டிருக்குந் தேசாதிபதி தம்பி பூதத்தம்பிக் குற்றநட்பினனாதலின், அவனறியின் இத்தீர்ப்பு நிறைவேறாதெனவெண்ணி, அந்திராசி காலதாமதஞ்செய்யாது அவ்விரவிற்றானே அநியாயமாகப் பூதத்தம்பியைக் கொல்லுவித்தான். உடனே அழகவல்லியும் உயிர்விட்டாள். பூதத்தம்பி மைத்துனனான கைலாயவன்னியன் அதனையறிந்து கொழும்புக்குச்சென்று பெரியதேசாதிபதிக்கு நடந்தவைகளைக் கூறினான். உடனே அவன் யாழ்ப்பாணத்தேசாதிபதியையும் அந்திராசியையும் பிடித்துவருமாறு சேவகரையனுப்ப, அவர்கள் தேசாதிபதியைக் கப்பல்மார்க்கமாகவும் அந்திராசியைக் கரைமார்க்கமாகவும் கொண்டுசென்றார்கள். செல்லும்போது தேசாதிபதி கடலிற்பாய்ந்துயிர்விட்டான். அந்திராசி பண்டாரத்தார்தோப்பென முசலிக்குச் சமீபத்திலுள்ள காட்டில் யானையடித் தரைத்துக்கொல்லப்பட்டான்."

**பூதத்தம்பிநாடகம்.**— பிள்ளையவர்கள் பூதத்தம்பிநாடகத்தைத் தமக்காதாரமாகக்காட்டி "பூதத்தம்பிநாடகஞ்செய்த மாதோட்டத்துச் சுவான் கொஸ்தான்மகன் தாவீது என்பவன் இச்சம்பவத்துக்குச் சமீபகாலத்தவனாதலால் அவனுண்மையாராய்ந்தே பாடியிருத்தல்வேண்டுமென்பதும், பாடியவன் தானும் கிறீஸ்தவனாதலின் கிறீஸ்தவனாகிய அந்திராசிமேல் அபவாதஞ்சுமத்த மனம்பொருந்தானென்பதும், உண்மையொருபக்கமும் பழியொருபக்கமுமாக அரியசம்பவம் எக்காலத்தும் எவ்விடத்தும் நிகழ்வது இயல்பேயென்பதும் துணியப்படும்" என்கிறார். இக்கூற்றைக்குறித்துச் சத்தியவேத பாதுகாவலன் கூறியதுஇது. "'தாவீதுஎன்பவனின்காலம் யாது? மெஸ். விருத்துத்துரையுடைய குறிப்புகளின்படி (Vaipavamalai XXXIV) தாவீது கிறீஸ்தவரென்பதும் நிச்சயமல்ல. ஏனெனில்,

ஒருசைவனைப்போல கடவுள்வணக்கஞ் செய்திருக்கிறார். அன்றியும் அப்புலவர் சரித்திரமறியாதவர். அவர் யாழ்ப்பாண ஒல்லாந்த கவர்ணர் அந்தோனி அமிறால் என்கிறார். அந்தோனியோ அமிறால் தெமெனெசெஸ் என்பவன் யாழ்ப்பாணத்துப் பறங்கிக் கைப்பிடித்தான். ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைப் பிடிக்குமுன்னே மன்னாரில் அவர்களாற் கொல்லப்பட்டவன். (Peiris Ribeiro p. 384,5) கண்டியரசன்பெயரும் பிழை. அந்திராடோவை ஓர் தமிழ்க் குருகுலத்தவனென்றதுந் தவறு. அவன் ஒரு சிங்களனெனப் பல்டேயஸ்பாதிரியார் காட்டியிருக்கிறார். இப்படிப் பலதவறுகள் காணப்படுகின்றமையால் தாவீதுவுடையநாடகம் சரித்திரமாக எடுத்தாளப்படத் தக்கதல்ல. தாவீது மயில்வாகனப்புலவருடைய வைபவமாலையைப் பார்த்து தமதுநாடகத்தை எழுதியிருக்கவேண்டியது. மயில்வாகனப்புலவர் தமக்கிருந்த வேளாளஅபிமானத்தைத்தழுவிக் கர்ணபரம்பரையால்வந்த ஒருகதையை மெய்யென்றெண்ணி எழுதிவைத்துப்போயினார். அவரெழுதியகாலத்துக்கும் சம்பவத்துக்குமிடையிற் சென்றகாலம் எழுபத்தைந்துவருஷத்துக்கு மேலாகின்றமையால் அதற்கிடையிற் கதைமருவி வழங்கிவரத்தொடங்கியது அதிசயமல்ல. ஈற்றில் தாவீது கிறீஸ்தவராகையால் கிறீஸ்தவரான அந்திராசிமேல் அபவாதஞ்சுமத்த மனம்பொருந்தியிருத்தல் கூடாது என்றாரே பிள்ளையவர்கள். இந்தநியாயம் பொருந்தாதென்றது இதுவரையிற்றெளிவு. அந்திராடோமட்டுமல்ல பூதத்தம்பியுமே கிறீஸ்தவர். மேலும் அந்திராடோவைக் கரையானென்று இகழ்ந்து பூதத்தம்பிநாடகக்காரர் பாடியதும்வீண். நம்யாழ்ப்பாணத்துக் குருகுலத்தவர்கள் கொந்தளித்ததும்வீண். ஏனெனில் அந்திராடோ யாழ்ப்பாணத்தவரல்லர். ஒரு சிங்களர்."

பூதனாராய்ச்சி.— "பூதத்தம்பிக்கு ஏகபுத்திரனேயிருந்தான். அவன்பெயர் சோதிநாதன். அவன்மகன் பூதனாராய்ச்சி. பூதத்தம்பியினுடைய முன்னோரிடத்தில் புவனேகவாகுவினுடைய பதக்கமொன்றிருந்தது. அப்பதக்கம் அச்சந்ததியார்க்குப் பிரார்ச்சிதமாகவந்து பூதனாராய்ச்சியார்காலத்தில் அவரால் கந்தசுவாமிகோவிலுக்குக் கொடுக்கப்பட்டது. அப்பதக்கம் இன்னும் நல்லூர்க் கந்தசுவாமிகோவிலி லிருக்கின்றது. பூதத்தம்பியிருந்தவிடம் பூதனாராய்ச்சிவளவென நல்லூர்க் கந்தசுவாமிகோவிலுக்குக் கீழ்ப்பாலிருக்கின்றது" (யாழ்ப்பாணச்சரித்திரம்.)

இராசதுங்கமுதலி.— முன்கூறிய "உலகுகாவலமுதலியை ஒல்லாந்தவரசினர் மந்திரியாக்கினர். அவனுக்கு மரபாலுயர்ந்

த முதலியினது சகோதரியை விவாகஞ்செய்துவைத்தனர். மரபானுபர்ந்தமுதலி பறங்கியாசனிடத்துத் தனுதிகாரியாயிருந்தவன். ஒல்லாந்தர் அந்தவதிகாரத்தை அவனுக்குக்கொடுத்தனர். உலகுகாவலமுதலி சிலகாலத்தில் இறந்தான். ஒல்லாந்தவரசினர் அவனிடத்து மிக்க மதிப்புடையராயிருந்தமையால் அவனுடைய அதிகாரத்தையும் அவனுக்குரிய வரிசைகளையும் அவன்மகன் இராசதுங்கமுதலிக்குக் கொடுத்தனர். அவன் தன்மாதுலனுகிய மரபானுயர்ந்த முதலியினது எழுபுத்திரிகளுள்ளே ஒருத்தியை விவாகஞ்செய்தான். அவ்விவாகத்தை ஒல்லாந்தமேதசாதிபதியும் பிரதானிகளும் சமுகமாயிருந்து சிறப்போடுநடத்தினர்" (யாழ்ப்பாணச்சரித்திரம்)

சோனகர்வரல்.— அப்பால் வைபவமாலை அடிதலைமாறி வரைந்திருக்கும் சிலவரலாறுகளை ஈண்டுத்தருவோம். "அக்காலத்திலே சந்தச்சாய்பு என்பவனால் மகமதுவின் மார்க்கத்திற்சேர்ந்த தமிழ்ப்பேசும் சில சோனகக்குடிகள் காயலிபட்டணமுதலிய இடங்களிலிருந்துவந்து தென்மிருசுவில் என்னும் ஊரிலே குடியிருந்து சாவுகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள், முகாவில் என்னும் இடங்களிலுள்ள சந்தைகளில் வியாபாரம்பண்ணிக்கொண்டு தாங்கள் குடியிருந்தவிடமாகிய மிருசுவிலுக்கு உசனென்று பெயரிட்டார்கள். சிலகாலத்தின்பின் அவ்விடம் வசதிப்படாததினுல் நல்லூர்க் கந்தசுவாமிகோவிலிருந்த இடத்தில்வந்து குடியிருந்தார்கள். சோனகர் குடியிருந்தால் கோயில்கட்டுங்காலம் தடையாயிருக்குமென்றுநினைத்து, தமிழர்கூடி அவர்களையப்புறப்படுத்தத் தெண்டித்துங் கூடாமற்போயிற்று. அந்தநிலங்களுக்கு அதிகவிலைதருவோம் தாருங்களெனச் சம்மதிக்கவில்லை. ஒன்றுக்கு மிணங்காததினுல் தமிழர் பன்றியிறைச்சியைச் சோனகருடைய கிணறுகளிற் போடுவித்தார்கள். அதைக்கண்டவுடன் சோனகர் அழுதுபுலம்பிப் பட்டினிகிடந்து ஆற்றுமல் தங்கள்பெருநாட்களில் தாங்கள்வந்து தங்கள் சமயவழிபாடுகளைச்செய்துகொள்ளத் தடைபண்ணுதிருப்பதற்குத் தமிழரைக்கொண்டு உடன்படிக்கையெழுதுவித்துக் கிடைத்தவிலையையும் வாங்கிக்கொண்டு நாவாந்துறைக்குக் கிழக்குப்பக்கமாய்க் குடியேறினார்கள். [இதைப்பற்றி 69-ம் பக்கம்காண்க.] அக்காலத்தில் உத்தரகோசமங்கையிலே ஓர் பெருங்கலகம் மூண்டதினுல் அதற்குப்பயந்து [பலவேளாளரும்] சில விஷ்ணுசமய சிவசமய பிராமணக்குடிகளெல்லாம் அங்கிருந்துவந்து காரைதீவிலே குடியிருந்தார்கள்.

"சோளநாட்டிலிருந்து சிலபட்குடிகள் வேளாளரின்கீழ்ப்

பயிர்க்குடிகளாயிருந்து பிழைக்கலாமென்றெண்ணிவந்து அவ்வெண்ணப்படி பிழைக்க இடங்காணாததினால் சிலகுடிகள் தம்மூருக்குத் திரும்பினார்கள். சிலர் சான்றாரைப்போலப் பனையேறுந்தொழிலைப் பழகினார்கள். மேற்கூறிய நழவரும் [நழவர்வந்தது சகராசசேகர சங்கிலிகாலத்திலென்பது வைபவமாலை. இந்நூல் 35-ம் பக்கங்காண்க. நழவரின் ஆதிப்பெயர் நம்பிகள் என்ப.] பள்ளரும் பனையேறத் தொடங்கிக்கொண்டதினால் சான்றாருக்குப் பிழைப்புக்குறைந்தது. அதினாற் சில சான்றார்கள் வெள்ளைக்காரவீடுகளில் ஆணும்பெண்ணுமாகப் பணிவிடைகளிலேற்பட்டுச் சீவனஞ்செய்தார்கள். சிலர் வலைவீசிப் பிழைத்தார்கள்.

“முற்கூறிய நழவர்பள்ளரிற் சிலர் பிழைப்புக்கு வழியில்லாமையாற் தங்களை வேளாளர் முதலானவர்களுக்கு அடிமைகளாக எழுதிக்கொடுத்தார்கள். முந்நாட்களிற் சிலவறியவர்கள் தங்களைக் கோவில்களுக்கு அடிமைகளாக எழுதிக்கொடுத்துக் கோவிற்பணிவிடைசெய்து சீவனஞ்செய்தார்கள். அதினாற் கோவிலாரென்று அழைக்கப்பட்டுக் கோவியரெனப் பேர்பெற்றார்கள். [இவையெல்லாம் தமிழரசர்காலத்தில்] பறங்கிகள் அரசாட்சியைக் கைப்பற்றிக் கோவில்களை யிடித்தபின் எசமான்கள் கோவியரைப் பிறருக்கு விற்பனைபண்ணினார்கள். பிற்காலத்தில் வடதேசத்திலிருந்து சிலசிறைகள் வடசிறைக் கோவியமென்னும் (பெயரால்) விலைப்பட்டார்கள். இப்படியே சிறைவிற்பனவு கொள்வனவு அதிகப்பட்டதுகண்டு உலாந்தேச அரசாட்சியார் அவ்விற்பனவைத் தங்கள் அதிகாரத்தின்கீழாக்கி தங்களுக்கு வருமானத்தை உண்டாக்கினார்கள்.

“இறப்பிறமாது சத்தியவேதமேயன்றி வேறுசமயங்கள் வழங்கப்படாதெனத் தங்கள் அதிகாரத்தாற்றடுத்து யாழ்ப்பாணத்தை முப்பத்திரண்டுபற்றாக்கிஒவ்வொருபற்றுக்கும்ஒவ்வொரு கோயிலைக்கட்டுவித்து [இது பறங்கியர்காலத்தில்] ஒவ்வொருகோவிலுக்கும் தங்கள் குருமாரைநியமித்து அனைவரும் அந்தக்கோவில்களிற்போய் அறிவுகேட்கவும் கலியாணங்கைப்பிடிக்கவும் மற்றுஞ்சடங்குகளையும் தங்கள் சமயவிதிப்படிதான் செய்யவேண்டுமென்றும் பலவந்தம்பண்ணி வந்தார்கள். பல பலவரிகளை ஏற்படுத்தி அரசாட்சிக்கு வருமானத்தைப் பெருக்கிக்கொண்டார்கள்.

“போகிச்சாதியாரிற் பலகுடிகள் தமிழரைச் சிவிகையில் வைத்துக் காவிவந்தார்கள். அவர்கள் சிவியாரென்று ஒருசா

தியானார்கள். அவர்கள் சிவிகைகாவவும் கோவியரும் குடிமைகளும் தங்கள் ஒழுங்குப்படி சிறப்புச்செய்யவும் வரிசைஏற்படுத்தவும் அவ்வரிசைகளை வரிசைப்பத்திரம் பெற்றவர்களன்றி மற்றொருவருஞ் செய்யக்கூடாதென்று கட்டளைபண்ணி, வரிசைப்பத்திரம் பட்டக்கடதாசி இவைகளாலும் அதிகவருமானங்களைக் கட்டளைபண்ணித் தங்கள்சமயமே எங்கும் நிறைவேறவேணுமென்று கட்டளைசெய்து உலாந்தேசர் இதுவரைக்கும் அரசாட்சிசெலுத்தி வருகிறார்கள்" இதுவரையும் யாழ்ப்பாணவைபவமாலை.

**தமிழ்ச்சாதிகள்.**— வைபவமாலைகுறித்த இத்தமிழ்ச்சாதிகளின் வரலாற்றோடு ஒல்லாந்தர் வரைந்துவைத்த விரிவான சாதிவரலாற்றையும் அவ்வவற்றின் ஊழியம் ஆதியவற்றையும் ஈண்டுதருவாம். இவ்விபரங்கள் தொமஸ் வன்றீ எனும் ஒல்லாந்த கொம்மாண்டோர் 1697-ம் ஆண்டு எழுதிய அறிக்கைப்பத்திரத்தில் வருகின்றனவாயினும், பறங்கியர் காலத்திலும் பெரும்பாலும் தமிழரசர்காலந்தொட்டும் இருந்த சீரையே விளக்குகின்றன:—

"யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த நாடுகளின் குடிசனங்களுள் 40 சாதிப்பிரிவுகளிருக்கின்றன. அவ்வச்சாதியார் பின்காட்டப்படும் ஊழியங்களையும் சில்லறைவரிகளையும் கம்பனிக்குச் செலுத்துவதோடு நிலவரி, சோலைவரி, வீட்டுவரி, தோட்டவரிகளையும் இறுக்கவேண்டியவர்களாம்.

"1. வேளாளர். இவர்களே சகலசாதிகளுள்ளும் தொகையால்மிகுத்தவர்கள். இவர்கள் கம்பனிக்காக வருஷத்தில் 12 நாள் வேலைசெய்வதும், 2 பணம் தலைவரியும், 1 பணம் அதிகாரிவரியும் இறுப்பதும் கடன்.

"2. சாண்டார். தொகையிற்குறைந்தவர்கள். இவர்களுக்கும் வேளாளருடைய கடமைகளேயுண்டு.

"3. தனக்காரர். இவர்களும் மேற்படி.

"4. பரதேசிகள். இவர்கள் யாழ்ப்பாணப்பட்டணத்தாரின் பின் வருவர். வேளாளரோடு சமத்துவமாய் வைக்கப்படுவர். இவர்கள் தாங்களிருக்கும் காணிக்காரனுக்காக வருஷம் 12 நாள் வேலைசெய்து 2 பணம் தலைவரிமாத்திரம் இறுக்கவேண்டியது. வேறுகடமையில்லை.

"5. மடப்பளியும் மேற்படியே. அஞ்ஞானிகள் காலத்திலே இவர்கள் பிராமணருடைய அடுக்களையில் உதவிசெய்யும்படி வேலைகொள்ளப்பட்டார்கள்.

"6. மலையாளி அகம்படியார். 12 நாள் ஊழியஞ்செய்து 2 பணம் தலைவரியிறுக்கக் கடனாளிகள்.

"7. மீன்பிடிகாரர் ஆறு வெவ்வேறு வகுப்பாயுள்ளவர்கள். அவை: கரையார், முக்கியர், பரவர், செம்படவர், கடையர், திமிலர் என்பவை. இவர்கள் வருஷத்தில் 12 நாள் கம்பனியின் மரக்கலங்களிலே "கிலாசு"களாய் ஊழியஞ்செய்யவேண்டும். ஆயின் கொழும்புத்துறையிலிருப்போர் கம்பனியின் வேலையாட்களைக் கல்முனைக்குக்கொண்டுபோய்க் கொண்டுவருவதும், அராலியார் தீவுபற்றுகளுக்குக் கொண்டுபோய் வருவதுமான ஊழியத்தையே உடையவர்கள். இதற்கு இவர்கள் தங்கள் சொந்தத்தோணிகளையே உபயோகிக்கவேண்டும். இதனோடு இவர்களெல்லாருக்கும் 2 பணம் தலைவரியுமாம்.

"8. சோனகர் அல்லது மகமதியர். 2 பணம் தலைவரியும் 8 பணம் ஒப்பீசிக்காசும் கொடுக்கவேண்டும். [ஒப்பீசி அல்லது கடமைக்காசு ஊழியத்துக்குப்பதிலாயிறுப்பது] இவர்களைத் தோணிகளைக் கடலிலிறக்கவோ கரைக்கிழுக்கவோ கூப்பிடும்போதெல்லாம் இவர்கள் போகவேண்டியது. மேலும் கடைகளிலிருப்போர் கோட்டைக்குட் செப்புக்காசெண்ணப் பொக்கிஷகாரனுக்கு உதவிசெய்யவேண்டியது. இவர்களுக்கு வேறுகடமையில்லை.

"9. செட்டிகளுக்குத் தலைவரி 2 பணம். அஞ்ஞானிகளாயுள்ளோருக்கு 4 பணம். இவர்களுள்ளும் கடையில் வியாபாரஞ்செய்வோர் பொக்ஷகாரனுக்குக் காசு எண்ண உதவிசெய்யவேண்டும்.

"10. தட்டார். தலைவரி 2 பணமும், ஒப்பீசிக்காசு 3½ பணமும் இறுக்கவேண்டும். வேறுகடமையில்லை.

"11. வண்ணாருக்குத் தலைவரி 2 பணமும், ஒப்பீசிக்காசு 4 பணமும், காணியாட்சிக்காரர் கேட்கும்போது கோவில்களுக்கும் வீடுகளுக்கும் வெள்ளைகட்டுவதும், கம்பனியின் உத்தியோகஸ்தர்கள் ஊர்ச் சுற்றோட்டத்துக்குச் செல்லும்வேளைகளில் வீடுகளை வெள்ளைகட்டி அலங்கரிப்பதும் இவர்களுக்குக்கடன்.

"12. நெசவுகாரர். 2 பணம் தலைவரியும்; ஒப்பிசிக்காசு 5-9/20 பணமும் இறுப்பர். வேறொன்றுமில்லை.

"13. பறையருக்குத் தலைவரி 2 பணமும்; ஒப்பிசிக்காசு 4 பணமும். இவர்களுக்கு ஊழியமில்லை. ஆயின் தங்கள் சொந்தக்கோயில்களுக்குச் சனங்களைக்கூட்டத் "தம்பேறு" அடிக்கவேண்டும். பறையடிக்குந் தொழிலுள்ளோருக்கு மாத்திரமே இந்தக்கடமை.

"14. கிறீஸ்ததச்சர் தலைவரி 2 பணமும்; ஒப்பிசிக்காசு 2 பணமும், இறுப்பர். காணிக்காரனுக்கு அவர்கள் ஒருநாள் சம்பளத்தோடும் ஒருநாட் சம்பளமில்லாமலுமாக 2 நாள் வேலையுஞ் செய்யவேண்டும். அஞ்ஞானத்தச்சர் தலைவரி 2 பணமும்; ஒப்பிசிக்காசு 3 பணமும் இறுப்பர். மேலும் இவர்கள் கம்பனியுடையவும்; பிற ஆட்களுடையவும்; மரக்கலங்களைச் சம்பளத்துக்குப் பழுதுபார்க்கவேண்டும். இவர்கள் தொகை மிகச்சிறிது.

"15. கிறீஸ்தகொல்லர் கிறீஸ்த் தச்சரைப்போலவே செய்யவேண்டியவர்கள். அஞ்ஞானக்கொல்லரும் அஞ்ஞானத் தச்சரைப்போலவே. இவர்கள்தொகை மிகச்சிறிது.

"16. குசவர் 2 பணம் தலைவரியும், 4 பணம் ஒப்பிசிக்காசும் இறுத்து கோட்டை கொத்தள வேலைக்குரிய மட்கலங்களும் "திறெசெல்லன" என்னும் ஓடுகளும் கொடுக்கவேண்டியவர்கள்.

"17. பள்ளர் அல்லது சாயவேர் பிடுங்குவோர் 2 பணம்தலைவரியும், 9-13/16 பணம்ஒப்பிசிக்காசும் இறுத்துக் காணிக்காரனுக்குச் சாயவேர் பிடுங்கிக்கொடுத்துக் கூலிவாங்கிக் கொள்ளக் கடனாளிகள்.

"18. சாயக்காரருக்குத் தலைவரி 2 பணம். ஒப்பிசிக்காசு 4 பணம். இவர்கள் காணிக்காரனுக்குச் சிலைகாய்ச்சிக்கொடுக்கக் கடனாளிகள்.

"19. எண்ணெய்க்காரர் மேற்கூறியபடி வரிகொடுத்துக் கம்பனிக்காக எண்ணெய் வாங்கிக்கொண்டுவந்து கொள்விலைப்படி கொடுக்கவேண்டும்.

"20. துரும்பர். நழவருடைய வண்ணராம். இவர்கள் 2 பணம் தலைவரியும் 9¼ "தம்மக்காசும்" இறுப்பர். வேறொன்றுமில்லை.

"21. சிவியார் கொம்மாண்டோருடையவும், திசாவையுடையவும் பல்லக்குகளைக்காவவும், இவர்கள் வீடுகளுக்கும் காவல்வீடுகளுக்கும் தண்ணீர் கொடுக்கவும் கடனாளிகள். மேலும் கொம்மாண்டோர்வீட்டிலும் திசாவைவீட்டிலும் முறைமாறி வேலைகாரராய் நிற்கவும், வருஷவீதம் 2 பணம் தலைவரியிறுக்கவும் கடன்.

"22. கன்னருக்கு ஊழியமில்லை. ஆயின் கம்பனிக்குச் செம்புச்சாமான் செய்துகொடுத்து தலைவரி 2 பணமும் இறுத்துவரவேண்டும்.

"23. பெட்டிசெய்வோர் வருஷத்தில் 2 பணம் தலைவரி கொடுப்பதொழிய இவர்களுக்கு வேறுகடமையில்லை.

"24. கேடயஞ்செய்வோர் கம்பெனிக்கு "றொண்டெல்லன்" எனும் கேடயங்கள் செய்து கொடுக்கவேண்டும். இவர்களுக்கு 2 பணம் தலைவரி.

25. மேசன்மார் வருஷம் 2 பணம் தலைவரிகொடுத்து கம்பனி கேட்கும்போதெல்லாம் சம்பளத்துக்கு வேலைசெய்யவும் வேண்டும்.

"26. தையற்காரருக்கு ஊழியமில்லை. ஆயின் யாழ்ப்பாணத்துக்கு வருகிற பெரிய உத்தியோகஸ்தர் வீடுகளை வெள்ளை கட்டி யலங்கரிக்கக் கடனாளிகள். இவர்களுக்குத் தலைவரி 2 பணம்.

"27. செருப்புக்காரருக்கு ஊழியமில்லை. ஆயின் தலைவரி வருஷம் 2 பணம் கொடுக்கவும், கேட்டநேரமெல்லாம் தம் தொழிலைச் சம்பளத்துக்குச் செய்யவும் வேண்டும்.

"28. சித்திரகாரர் தலைவரி 2 பணமும், 8½ இறைசால் ஒப்பீசிக்காசும் கொடுக்கவேண்டும். வேறு ஊழியமில்லை.

"29. நாவிதருக்கு ஊழியமில்லை. தலைவரி மாத்திரம் வருஷம் 2 பணம்.

"30. பிராமணருக்கும் அப்படியே. இவர்களும் வருஷம் 2 பணம் தலைவரியிறுப்பர்.

"31. தவசிகள். மேற்படி.

"32. பள்ளிவிலிகளுக்கு கம்பனியின் மரக்கலங்களைக் கடலில் தள்ளியும், கரையிலிழுத்தும் விடுவதைத்தவிர, வேறு ஊழியமில்லை. இவர்கள் கோட்டையிலுள்ள கோயிலையும் கொம்மாண்டோர்வீடு திசாவையின் வீடுகளையும் சுத்திசெய்து வெள்ளையடிக்கவும் கடனாளிகள். முன்னே இவர்கள் கற்பிட்டிக்கு அனுப்பப்படும் மீன்பிடிகாரருக்குப் பதிலாய் இடையிடையே போகவும் கடன்பூண்டோராயிருந்தனர். ஆயின் இப்போது இவ்வழக்கம் நின்றுவிட்டது. இன்றைக்கும் இவர்கள் தலைவரி 2 பணம் இறுக்கவேண்டியவர்கள்.

"33. பரவருக்கு ஊழியமில்லை. ஆயின் கடையில் வியாபாரஞ்செய்வோர் கோட்டைக்குட் பொக்ஷகாரனுக்குக் காசெண்ண உதவிசெய்யவேண்டும். இவர்களுக்குத் தலைவரி 2 பணம்.

"34. மறவர் கம்பனிக்குப் போர்ச்சேவகராய் ஊழியஞ்செய்து தலைவரியும் 2 பணம் இறுக்கவேண்டும். வேறு ஒன்றுமில்லை.

"35. சனங்களுடைய அடிமைகளாயுள்ள பள்ளர், மாதமொருநாள் கம்பனியின் யானைகளுக்கு ஓலைகொண்டுவந்து கொடுக்கவும், கம்பனிக்காக அங்கிங்குபோகும் உத்தியோகஸ்தருடைய பல்லக்குகளையும் சாமான்களையும் சுமந்துசெல்லவும் கடனாளிகள். இவர்களுக்கும் தலைவரி 2 பணம்.

"36. மேற்படி சனங்களுடைய அடிமைகளான நழவரும் மேற்கண்ட பள்ளரைப்போலவே ஊழியமும் வரியுமுள்ளவர்கள். வலிகாமத்திலிருக்கும் பள்ள அடிமைகள் கம்பனிக்குச் சிறையாம். இவர்கள் வெடிமருந்துத் திரிகைகளில் மாதம் 3 முதல் 6 நாள்வரையும் வேலைசெய்யவும், குதிரைகளுக்குப் புல் கொண்டுவரவும் வேண்டியவர்கள். இவர்களுக்குத் தலைவரியும் 2 பணம். இப்படியே கம்பனியின் நழச்சிறைகளுக்கும் சொல்லிக்கொள்க.

"37. "காலிக்காற" [கோலியப்பறையரா?] பறையரும் கம்பனியின் அடிமைகள். இவர்களும் வெடிமருந்துத் திரிகை

ளில் மாதந்தோறும் 3 முதல் 6 நாள் வேலைசெய்யவும், குதிரைகளுக்குப் புல் கொண்டுவரவும், தலைவரி 2 பணம் இறுக்கவும் வேண்டியவர்கள்.

"38. கொட்டுக்காறப்பறையரும் [கொட்டக்காரப்பறையரா?] கம்பனியின்சிறை. இவர்களும் மாதம் 3 நாள்முதல் 6 நாள் வெடிமருந்துத் திரிகைகளில் வேலைசெய்யவும், குதிரைக்குப் புல்கொண்டுவரவும், 2 பணம் தலைவரி இறுக்கவும் வேண்டியவர்கள்.

"39. சாண்டார் "வெலெலபேட்றெ" என்போர் கொம்மாண்டோர் சுற்றோட்டஞ்செய்கையில், சாமான் சுமக்கவும், இராவைக்குப் பந்தம்பிடிக்கவும் கடனாளிகள். இவர்கள் தலைவரி 2 பணம் இறுப்பர்.

"40. வலையர் அல்லது "வெற்றிலைக்காரர்" தலைவரி 2 பணம் இறுக்கவும், கொம்மாண்டோருடைய அடுக்களைக்கு முசல்வேட்டையாடிக்கொண்டுவந்து கொடுக்கவும் வேண்டியவர்கள்.

"கோடிக்கரையினின்றுவரும் ஞானஸ்நானம் பெறாத அடிமைகள் கம்பனிக்கு ஒரு ஊழியமும் செய்யாமல் தலைவரி 1 பணம் இறுப்பர்.

"இங்கு பிறந்த சனங்களின் அடிமைகளான கோவியரும், கம்பனிக்கு ஊழியஞ்செய்யாமல் தலைவரி 1 பணம் மாத்திரம் கொடுப்பர்."

இதுவரையும் ஒல்லாந்த தேசாதிபதியின் அறிக்கைப்பத்திரத்திற் கண்டது. அக்காலத்திருந்த சாதிப்பிரிவுகளையும், ஊழியமாதியவற்றையும் இங்கு எடுத்தோதியது, தமிழ்ச்சாதிகளின் உயர்வு தாழ்வுகளைக் காட்டும் பொருட்டன்று. சரித்திர விநோதத்தின் பொருட்டேயென்பதை வாசிப்போர் மனத்திலிருத்திக்கொள்ளவேண்டும். இப்பழஞ் சாதிப்பிரிவுகளைப்பற்றி நூல்களிற்கண்ட வேறு சில குறிப்புகளையும் ஈண்டுத்தருவோம்.

வேளாளர்.—வேளாளரைச்சுட்டி அதிகம் சொல்லுதல் வேண்டப்படாது வேளாளர் வேளிர் என இலக்கியங்களுட் கூறப்படுவோரோடு தொடர்புடையவர்கள்போலும். வேளிர்

"குலத்தவர்களுள் வேள் ஆய், வேள் அண்டிரன், வேள் எவ்வி; வேள்பாரி ஆதியோர் புறநானூற்றினுட் புகழப்பட்டிருக்கின்றனர். பத்துப்பாட்டு முதலிய பிற இலக்கியங்களிலும் இப்பெயர்கள் வருகின்றன. தொல்காப்பியத்துக்கு நச்சினார்க்கினியர்செய்த உரையிலே வேளிரைச்சுட்டிப் பின்வருவது குறிக்கப்பட்டிருக்கின்றது. அகஸ்தியர் துவராபதிப்போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்கோடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையுங் கொண்டுபோந்து காடுகெடுத்து நாடாக்கிப் பொதியின்கண்ணிருந்தனர்" பின்னுமோரிடத்தில் வேந்து வினையியற்கை எனுஞ் சூத்திர அவதாரிகையில் "இது மலயமாதவன் நிலங்கடந்த நெடுமுடியண்ணலுழைநரபதியருடன் கொணர்ந்த பதினெண்வகைக் குடிப்பிறந்த வேளிர்க்கும் வேந்தன்றொழிலுரித்தென்கின்றது" எனவுரைந்தனர். வேளிர் துவரைநாட்டினின்று தென்னாட்டிற் குடியேறினரென்பது புறநானூற்றிலே இருங்கோளனும் வேளைக் கபிலர்நோக்கி; நீயே

வடபான்முனிவன் றடவினிற்றோன்றிச்
செம்புபுனைந்தியற்றிய சேணெடும்புரிசை
யுவராவீகைத் துவரையாண்டு
நாற்பத்தொன்பது வழிமுறைவந்த
வேளிருள் வேளே

என்றதிலேயும் தொனிக்கின்றது. இங்ஙனம் கூறப்பட்டுள்ள வேளிர் என்னும் குலத்தவர் யாதவரோடு ஒற்றுமையுடையவரென்பதும், மைசூரின் ஒய்சளயாதவர் இவர்களடியேயாமென்பதும் "செந்தமிழ்" பத்திராசிரியர்கருத்து. யாதவர் ஓர்காலம் தென்னாட்டின்கண்வந்து குடியேறினமையை மெஸ். தத்தர் 'ஆதிய சரித்திராசிரியர்களும் குறித்திருக்கின்றனர். ஒய்சளயாதவர் தம்மை பேலாலரென அழைத்துவந்தமையும் அவர்கள் பட்டணங்களுளொன்று வேலூர் அல்லது வேளாளபுரமெனப் பெயர்தங்கியதும் பிரசித்தம். இங்ஙனம் யாதவரோடு சிலர் ஒற்றுமைப்படுத்திப் பேசுகின்ற இவ்வேளிர் இருபகுப்பினரெனத் தோன்றுகின்றது. ஒருசாரார் நிரைமேய்க்குந் தொழிலுள்ளோராய் ஆயரெனவும், பொதுவரெனவும் அழைக்கப்பட்டனர். இவர்களே கலித்தொகை 104-ல் குறிக்கப்பட்டோர்போலும். இவ்வாயர்கள் பெரும்பாலும் கண்ணனை வழிபடுவோராயிருந்தனர். மற்றவகுப்பார் ஏராண்மைத்தொழில் பூண்டவர்கள். இவர்களுள் நாட்டாண்மையுள்ளோர் தாம் வேளிரென் விசேடித்துக் கூறப்பட்டனரென்ப. மற்றையோர் வே

ளாளரெனும் பொதுப்பெயர் கொண்டனரென் றெண்ணலாம்" (தமிழரின் பூர்வசரித்திரமும் சமயமும்) இவ் வேளாளர் சிங்கையாரியன்காலத்தில் மட்டுமன்று அதன்பின்னும் இடையிடையே தொண்டை, பாண்டி, சோழமண்டலங்களினின்றும்வந்து யாழ்ப்பாணத்திற் குடியேறினரென்பது இச்சரித்திரத்தில் ஆங்காங்கு வெளிப்படும்.

**வேளாளரும் மடப்பளியாரும்.**—வன்றீயின் பத்திரத்தில் முந்திய 6 சாதிகளும் சமனாக வைக்கப்பட்டிருக்கின்றமை கவனிக்கப்படத்தக்கது. சாண்டாருள் இருவகுப்பாரிருந்ததாக 2-ம் 39-ம் பிரிவுகளால் விளங்குகிறது. மடப்பளியாரைப்பற்றி வன்றீசொல்லும் குறிப்பு தவறுபோலும். அந்த அறிக்கைப்பத்திரத்திலேயே இவர்களைப்பற்றிப் பின்வருமாறு எழுதியிருக்கிறது. "வேளாளர் மடப்பளியார் எனும் இருசாதியாருக்குமிடையிலே மிகப்பெரிய தீராப்பகையொன்றிருக்கிறதென்பதை இங்கு நான்குறிப்பது அவசியமென்று எண்ணுகிறேன். இதினால் யாழ்ப்பாணப்பட்டணத்தில் ஒரு சாதியை மற்றச்சாதியின் மேலாக வைத்துப் போடாதபடி எப்போதும் கவனஞ்செலுத்தி வரப்பட்டது. ஆகையினாலே கொம்மாண்டோருடைய கணக்கப்பிள்ளைகள் எனப்படும் இருலிகிதர்மாரும் சாதிக்கொரு ஆளாக இந்த இருசாதியிலிருந்தும் எடுக்கப்படுகிறார்கள். முன்சொல்லிய பகையின் நிமித்தமாய் இக்கணக்கப்பிள்ளைகளிருவரும் ஒருவரோடொருவர் சந்தோஷமாயிருப்பது அரிது. ஒருவரையொருவர் நம்புவதுமில்லை. சாதிக்கொரு லிகிதர் வைத்திருப்பதினால் சமநிலையைக் காத்துக்கொள்ளலாம். இதற்கு மாறாய் இருவரும் ஒரேசாதியாராயிருப்பின் கொம்மாண்டோரின் தத்துவத்தைக்கொண்டு தங்கள் சாதிக்குச் சனுவாகவும், மற்றச்சாதிக்கு மாறாகவும், அனேககாரியங்களைச் செய்துபோடுவார்கள். (English Trans p. 12) மடப்பளியார் எதுவிதத்திலும் அட்டிற்காரர் அல்லரென்பது இந்நூலின் 36-ம் 40-ம் பக்கங்களிற் சொல்லப்பட்டவற்றால் விளங்கும். வன்றீயின் வேளாளலிகிதரே தனது எதிரியான மடப்பளி லிகிதருக்கு மாறாய் இக்கதையை உண்டாக்கிச் சொல்லினரோ என்பதும் ஓர் சந்தேகம். வேளாளரின் எரிச்சலினாலேதான் மடப்பளியாருக்கு அட்டிற்கார உற்பத்தி கொடுக்கப்பட்டது என்பதும், சுத்தமான மடப்பளியாராயிருந்தோர் தமிழ் அரசர்களின் அந்தப்புரத்துஸ்திரீகளிடம் பிறந்த அரசமைந்தர்களே என்பதும் ஆராய்ச்சிவல்லோர்கருத்து. (Ceylon Gazetteer p. 229. 30)

**பறையர்.**—பறையரைப்பற்றிய பின்வரும் குறிப்புகள் கா

ம்பான்குலவிளக்கத்தில் வருகின்றன. "இச்சாதியாருக்குப் பறையர் என்றபேர் பறையடித்தற்றொழிலால் உண்டாயிற்றென்று சாதாரணமாய்ச் சொல்வதுண்டு. ஆனால், இத்தொழிலைப் பறையர்கள்தவிர இன்னும் அனேகசாதியார் செய்கையாலும், பறையர்கள் எல்லாருக்கும் அது சீவனோபாயமல்லாமையாலும் பறையர்களில் முரசுப்பறை என்ற ஓர் பிரிவார்மாத்திரம் முற்காலத்திற் பறையடித்துக் காலங்கழித்தமையாலும், இச்சாதியார் முழுமைக்கும் இப்பேர்வந்ததெனெ நம்பவிடமில்லை. மேலும் பறையர்களுக்குப் பூர்வீகமான தொழில்கள் நெசவும், உழவும், வேட்டையாடுதலுமாம். அன்றியும் பறையர்களுக்குச் சமானமாயுள்ள வடுகமாலனென்றபதமும், மலையாளப் புலையனென்றபதமும், கன்னட ஒலியனென்றபதமும் பறையடித்தற்பொருளைத் தராமையால் பறையன் என்பது பறையடித்தலா லுண்டாயிற்றென்று சொல்லுவது தவறு. "பர்வதியன்" "பகறியன்" எனும் வடமொழிப்பதம் மருவிப் பறையனென ஆயிற்றென்றது க்ன்னிங்காம், ஆபர்ட் (Col. Cunningham, Dr. Oppert) ஆசிரியருடைய கொள்கை. அது எமக்கும் இசைந்ததாகத் தோன்றுகிறது. பறையன் என்பதற்குப் பொருள் குறிஞ்சி அல்லது மலைநிலத்தைச் சார்ந்து வசிப்பவன். வடுக மாலன் என்பதற்கும் அர்த்தமதுவே."

பறையன் என்னும் பதமும், பழந்தமிழ் இலக்கியங்களில் இல்லாததொன்று. இச்சாதியாரைப்பற்றிய பின்வரும் வரலாறு சரித்திர சம்மதமாய்த் துணியப்பட்டது. "திராவிடர்கள் ஆரியர் வருமுன்னமே காடுகளை வெட்டியும், நகரங்களைக் கட்டியும், நாகரீகத்துடன் வாழ்ந்தவர்களாகவும், அவர்களில் ஜாதிவித்தியாசங்கள் பிறகு உண்டாயிருந்தபோதிலும், அவைகள் ஐந்து திணைகளுக்குத் தகுந்தபடி ஏற்படுத்தப்பட்டிருந்ததாகவும் தெரிகிறது. நெய்தல் நிலத்தில் வசித்தவர்கள் யாவரும் நுளையர் வலையரென்றும், மருதநிலத்தையடுத்தவர்கள் மள்ளர் கடைஞரென்றும், முல்லைநிலத்தில் இருந்தவர்கள் இடையர் தொதுவர் கொல்லரென்றும், பாலைநிலத்தைச் சேர்ந்தவர்கள் வேடர் வில்லியர் எயினரென்றும், குறிஞ்சிநிலமாக்கள் குறவர் சவரர் என்றும் சொல்லப்படுகிறார்கள். ஆரியப்பிராமணர் தக்ஷிணத்தில் குடியேறிய பிறகு கிராமங்களை உண்டுபண்ணுவதில் மேற்சொன்ன ஏற்பாடுகளை அநுசரித்தே தெருக்கள் அமைக்கப்பட்டிருந்தன. அக்காலங்களில் கிராமத்தைச் சுற்றி எங்கும் காடாயிருந்தமையால், குடிகளை துஷ்டமிருகங்கள் வருத்தாதபடி அவைகளை வேட்டையாடிக் கொல்லும்பொருட்டு அத்தொழிலைச் செய்யும் எயினர் வேடர் முதலிய காடுவாழ் ஜாதி

யார் கிராமங்களுக்குப் புறம்பே வசிக்கவேண்டியது அவசிய மாயிருந்தது. இவ்வாறு காடுகள் கிராமங்களில் வசித்தசாதிக் ள் இருளர் எயினர் வேடர் முதலானோர். இவர்கள் காட்டுமிருக ங்களைக்கொன்று தின்றமையால், புலையர், கவண்டர், சண்டாள ரென்ற பேர்களும் உண்டாயின. திராவிட அரசர்களால் அழை க்கப்பட்டு ஆரியர் தென்னாடுகளில் குடியேறியபின் காட்டி லே வாழும் வேடர் முதலானவர்களைத்தவிர, கிராமங்களையடு த்து ஊரிலும் காட்டிலும் சீவனம்செய்த எயினர் முதலான குறிஞ்சி பாலைநில மாக்களுக்கு அவரவர்தொழில் காரணமாக மே மிக்க தாழ்மையும் அவமதிப்பும் உண்டானது. இவர்களி ன் வம்சத்தார்தான் தற்காலத்திய பறையன், புலையன், சிறுமி யன், ஒலியன், மள்ளன் (பள்ளன்) மாதிகன் அல்லது சக்கிலிய ன்'' என்ப.

இச்சாதியார்ருள் அக்கினிப்பறையர், கோலியப்பறையர், கோட்டைப்பறையர், சாம்பான்பறையர், சங்கிமேபறையர், தங் கலான்பறையர், பச்சைப்பறையர், வலங்கமுக்தார், வள்ளுவ ப்பறையர், கொட்டகாரப்பறையர், தச்சப்பறையர், தாதப்பறை யர், சாலியப்பறையர், செங்குந்தப்பறையர், தோட்டிப்பறைய ர், வெட்டியான்பறையர் எனப் பலபிரிவுகளுண்டு. யாழ்ப்பாண த்தி லிப்பெயர்கள் பெரும்பாலும் வழங்காதொழிந்தன. இ வற்றிற்குப் பதில் கைதடியாகிளை, கோவியனகிளை, நல்வரா கிளை, அகம்படியாகிளை, தொண்டமனகிளை ஆதிய பதினெட் டுக் கிளைகளாகப்பிரித்துச் சொல்லுவர். தம்மைக் குடிமக்க ளாய்க்கொணர்ந்த பெரிய வேளாளருடைய நாமங்களினால் இ ற்றைவரைக்கும் அறியப்படுங் கிளைகளும் உள. கந்தனை கன் கனை கனகசேகரமெச்சன், குலசேகரமெச்சன் ஆதிய பறை யரின்பட்டங்கள் அன்னோரின் எசமான்களையே சுட்டுகின்றன.

**பள்ளர் நழவர்** — பள்ளரில் ஒருபிரிவார் (17) சுயாதீ னமுள்ளோராயும் ஒருபிரிவாரே (35) அடிமைகளாயுமிருந்த தைக் காண்கின்றோம். பறையருள்ளும் இப்படியே. நழவரில் சுயாதீனமுள்ளோர் அக்காலம் இல்லைப்போலும். ஆயின் கோ ட்டைவாசல் நழவர் தாம் அந்நாட்டெட்டுக் கத்திக்கார வ குப்பாரேயாய் அடிமைச்சாதனம் எழுதிக்கொடாதிருந்தனர் என்பர். ஒல்லாந்தரின் சிறையாயிருந்தோர் இன்றைக்கும் கம் பனிக்காரரென்று அழைக்கப்படுகிறார்கள்.

**சிவியார்.**— இச்சாதியார் மேல் உத்தியோகஸ்தர்களுக்குச் சிவிகைதாங்குவோராகக் காணப்படுகின்றனர், பிறருக்குச் சிறை

ப்பள்ளரே பல்லக்குக்காவுவோராயிருந்தனர். தமிழரசர்காலந்தொட்டுச் சிவியாருள் முதன்மைபெற்ற மனுஷருமிருந்தனரென்பது யாழ்ப்பாணச்சரித்திரக்காரர் கூற்றினால் விளங்குகிறது. அது பின்வருமாறு: பரராசசேகரன் தான் "பகைவருக்கஞ்சி இராவிலோடமுயன்றபோது தன்னையும் மனைவியையும் புத்திரரையும் பகைவர்கைப்படாவண்ணம் காத்துப் பல்லக்கிலிட்டு மிகவிரைவிற்கொண்டுபோய்க் களவிற் றோணியேற்றிய சிவிகைத்தலைவனை வரவழைத்து 'நீ எம்மிடத்து மிக்கவிசுவாசமுடையவனாயிருந்தமையால் உன்னை எமதுபுத்திரனாகப் பாவித்தோம். அதற்கறிகுறியாக அப்புத்திரன்பெயரை உனக்குப் பட்டமாகத்தந்தோம். இனிமேல் உன்பெயர் பரராசசேகரக் கூறியானென வழங்குவதாக' என்று ஆஞ்ஞாபித்து நீ ஒருமுச்சிலோடி எல்லையிடுமிடத்தையும் உனக்கு மானியமாக வழங்கினோமென்றான். அவனவ்வாறோடிப் பெற்றவிடமே சிவியாதெருவென்பர். கூறியான் இராசவரவுகூறிச் சிவிகைமுன்செல்லுங் கட்டியக்காரன்" தற்காலச்சிவியாருட் பலபிரிவுகளுள.

**ஊழியம் அல்லது இராசகாரியம்.**— அக்காலத்தில் ஊழியப்பட்டமை ஓர்மகிமையாகவே நோக்கப்பட்டது. கீழ்சாதிகளென எண்ணப்பட்டோருக்கு ஒரு ஊழியமுமின்றியிருந்தது. இராசகாரியம் ஒல்லாந்தர்கால முழுமையும்நடந்து நம் இங்கிலீஷ் அரசுத் தொடக்கத்திலும் செல்லுவதாயிருந்து 1832-ம் ஆண்டு சித்திரைமாசம் 12-ந் திகதி பிரித்தானிய அரசரின் ஓர் சட்டத்தினால் அழிக்கப்பட்டது. வரிகளுட்பல நெடுங்காலம் நின்று பின்னரே நீக்கப்பட்டன. தலைவரிமுதலிய சிலவரிகள் இன்றைக்கும் நடைபெறுகின்றன.

**ஒல்லாந்தர் குடியேறல்.**— இவைநிற்க, இனி யாழ்ப்பாண அரசு கைக்கொண்டோரின் செய்திகளை விசாரிப்பாம். தொடக்கத்தில் ஒல்லாந்தப்படைவீரர் பெரும்பாலும் மனைவிமக்களின்றி இலங்கையிலும் யாழ்ப்பாணத்திலும் வந்திருந்தனர். ஆயின் விரைவிலே பெருந்தொகையான ஒல்லாந்தகுடும்பங்களும் ஐரோப்பாவின் பிறவிடங்களினின்றும் ஒல்லாந்தரோடு ஒற்றுமைப்பட்டு அவர்கள்பாஷையைப் பேசிவந்த குடும்பங்களும் அரசினர் அழைக்கவந்து பட்டணங்களிற் குடியேறினர். இவர்கள் கப்பற்செலவின்றி இங்குகொண்டுவந்து விடப்பட்டு அவரவர் செய்கைபண்ணுவிக்கத் தக்கநிலமும் இனாமாகக் கொடுக்கப்பட்டது. ஆயின் நிலத்தைச் செய்கைபண்ணுவதிலே அதிக ஆதாயம்வாராமையைக்கண்டு இவரெல்லாம் இலங்

கையின் பலபட்டணங்களிலும்தங்கித் தத்தமக்கியன்ற கைத்தொழில்களிலேயே அமர்வோராயினர். ஐரோப்பாவினின்றும் வந்தோர் 15 வருஷங்களுள் மீண்டு தம் சுயநாட்டுக்குப் போகப்படாதென்பது பொருத்தம். அக்கெடுவுக்குப் பின்போவோரும் தஞ்செலவிலே போகவேண்டியோராயினார்கள். இங்ஙனமே ஒல்லாந்தர் நம்நாட்டைத் தமது குடியேற்றநாடுகளுளொன்றாக்க வருந்தினர்.

காலஞ்செல்லச்செல்ல ஒல்லாந்தருள் இரு புதுவகுப்புக்கள் ஏற்பட்டன. ஒன்று "துப்பாசி" என்னப்படுவது. மற்றது "விபெட்டீனி" என்னப்படுவது. துப்பாசியென்போர் யாரெனில் பறங்கிகளும் சுதேசிகளும் சேர்ந்துபிறந்த கலப்புப்பிள்ளைகளாம். விபெட்டீனிகள் முன் ஒல்லாந்தரின் அடிமைகளாயிருந்து விடுதலையாக்கப்பட்டவர்கள். இப்பிந்தியவகுப்பார் காலகதியிலே துப்பாசிகளோடு ஒன்றாய்விடத் துப்பாசியெனும் சட்டைக்காரர்வகுப்பே எஞ்சிநின்றது. இவர்கள் சுத்த ஒல்லாந்தருக்குக்கீழான ஓர் வரிசையிலுள்ளோராய் "தம்பேறு" அடித்தல், பல கைத்தொழில்கள்புரிதல் ஆதியமுயற்சிகளை மேற்கொண்டு தற்காலத்தில் ஓர் புறம்பான சாதியாராய் விளங்குகின்றார்.

அரசியல்.— ஒல்லாந்தரின் மாகாணப்பிரிவுகள் பழையபடியேயிருந்தன. யாழ்ப்பாணத்தை ஓர்கொம்மாண்டோர் அரசியற்சங்கத்தின் உதவியோடு கொழும்புக் கவணரின்கீழ் ஆண்டுவந்தான். இப்படியே காலியிலும் ஓர்கொம்மாண்டோர் இருந்தனன். ஆயின் அதிகாரவரிசையின்படி கொழும்புக்குப்பின் யாழ்ப்பாணமும் அதன்பின்னரே காலியும்வந்தன. பலமுறையும் கொழும்புக்கவணர் மாற்றம்பெறும்போது யாழ்ப்பாணக் கொம்மாண்டோரே கவணராகியும்வந்தான். பறங்கியர்காலத்திற்போலவே கொம்மாண்டோரின்கீழ் ஒல்லாந்தசாதியானேயாகிய ஒரு "திசாவை" வைக்கப்பட்டிருந்தான். திசாவையின்கீழே ஒப்பர்கூப்மன், கூப்மன் ஒண்டர் கூப்மன் ஆதிய உத்தியோகஸ்தர்களும் இவரின்கீழேயே முதலிமாராதியோரும் இருந்தனர்.

கூப்மன் முதலான உத்தியோகங்கள் வர்த்தகர்களைக் குறிக்கின்றவைகளாயிருந்தன. கூப்மன் என்பதன்கருத்து வர்த்தகன். ஒப்பர்கூப்மன் மேல்வர்த்தகன். ஒண்டர்கூப்மன் உப வர்த்தகன். ஒல்லாந்த அரசினரல்ல அவ்வரசின்கீழ் உண்டான "கிழக்கிந்திய வியாபாரசமுதாயம்" எனும் ஓர் "கம்பனி"யே

இலங்கையைப்பிடித்து அரசுசெய்தமையால் இவ்வாறான உத்தியோகங்கள் எழுந்தன. அரசியலும் வியாபாரப் போக்காகவே நடைபெற்றது.

**நீதிபரிபாலனம்.**— ஒல்லாந்த அரசின்கீழ்க் கொழும்பிலே "ரூட்வன்யஸ்றில்" எனும் சுப்பிரீங்கோடும் அதற்குமேலான கோடு வத்தாவியாவிலுமிருந்தன. யாழ்ப்பாணத்தில் "ரூட்வன்யஸ்றில்" எனும் பெரியகோட்டுக்குக் கொம்மாண்டோரே நீதிபதியாயிருந்தான். "லாண்டிரூட்" எனும் கீழ்க்கோட்டுக்கு யாழ்ப்பாணத்துத் திசாவை நீதிபதி. மன்னாரிற் கீழ்க்கோர்டுமாத்திரமிருந்தது. "கந்தோர்" எனுஞ்சொல்லு ஒல்லாந்தரினின்றே தமிழில் இக்காலம் வழங்குகின்றது. ஒல்லாந்த கம்பனியாருடைய நீதிப்பரிபாலனமும் பெரும்பாலும் வியாபாரமுறையாயிருந்தது. இதிற் பலதாறுமாறுகளும் நடந்தன. பலதடவைகளில் ஒல்லாந்தநீதி ஒருவீட்டுக் கருமம்போல ஒழுங்கின்றி நடந்ததுமுண்டு. இதற்குப் பின்வரும் கர்ண பாரம்பரியம் சாட்சி.

"உலாந்தாக்காரர் யாழ்ப்பாணத்தைப்பிடித்து அரசுசெய்யவந்த தொடக்கத்திலே பட்டணத்தின் மத்தியிலேயுள்ள கிறயில்ற்சேட்சுக்கு வடபக்கமாகவுள்ள டச்ஹவுஸ் எனப்படுவது நீதித்தலமாயிருந்துவந்தது. உலாந்தவரசு நீதிபதி அம்மனைவிருந்தையிலே நின்றுகொண்டெழுத்துக்கிறுக்கில்லாதுவாய்ப்பிறப்பிலே வழக்குகளை விசாரித்துத் தீர்வையிட்டுக்கொண்டு வருவார். பூதனென்பவன் வந்து ஆண்டவனே என்னைக் கந்தன் அடித்துப்போட்டானென்று முறையிட்டால் நீதிபதி கந்தனைக்கூப்பிட்டு அடேகந்தா நீயேன் பூதனை அடித்தாயென்று கேட்க, கந்தன் ஐயோ ஆண்டவனே நான் அடிக்கவில்லையென்பான். நீதிபதி என்னடா நீயேன் பொய்பேசுகிறாய். நீ அடித்ததுமெய்தான். போ மூன்றுமாச மறியலுக்கு என்று சொல்லி மறியற்கூடத்துக்கு அனுப்பிவைப்பார். அன்று சாயந்தரமோ மற்றநாளோ ஒருத்தி ஒரு பெட்டிக்குள்ளே ஏதோ வைத்துக்கொண்டு நீதிபதியின் விறாந்தையில் வந்தேறுவாள். நீதிபதி அவளைப்பார்த்து நீயார்? இந்தப்பெட்டிக்குள்ளே என்ன? என்றுகேட்பார். அவள் ஆண்டவனே நான் நேற்று மறியலுக்குப்போன கந்தனுடையதாய். நோணாவுக்குக் கோப்பிக்காகப் பனங்கட்டி கொண்டுவந்திருக்கிறேன் என்பாள். நல்லதும் அதை யன்னலிலே வைத்துவிட்டுப்போ என்பார். அவள்போனபின் அந்தப் பனங்கட்டிக்குட்டான்களை உடைத்துப்பார்த்தால் அவற்றுளே பூவராகன்களிருக்குமாம். நீதிபதி

சந்தோஷப்பட்டுக்கொண்டு மற்றநாட்காலே ஜெயிலரை அழைத்து நேற்று நான் மூன்றுமாசமறியலுக்கு அனுப்பின கந்தன் என்பவன் பூதனை அடித்ததில்லையெனச் சொல்லுகிறார்கள். அவன்மேலே வைத்தவழக்குப் பொய்யென்கிறார்கள்! அவனை இங்கே அனுப்பிவிடு என்பார். கந்தன் வந்தவுடனே போடா போ உன்வீட்டுக்கு ஓடு என்றுசொல்லித் துரத்திவிடுவாராம். இதுவே அக்காலத்துநடந்த நீதிப்பரிபாலனமென்று மூத்தோர்சொல்லக் கேட்டிருக்கிறோம். அக்காலத்திலும் அவ்வரசிலும் நடந்தமாதிரியான பரிபாலனம் இக்காலத்திலே இங்கிலீஷ் அரசிலே நடந்துவருகிறதென்று சொன்னால் யாராவது நம்புவார்களா?'' (சத்தியவேத பாதுகாவலன்)

**சுதேச நீதிபதிகள்.**— ஒல்லாந்தர் அரசுகைப்பற்றிய வுடன்கையில் யாழ்ப்பாணத்தின் நாலுபிரிவுகளுக்கும் தீவுப்பற்றுக்களுக்கும் ஒவ்வோர் முதலியாரும் இறைசுவதோரும் (Recebedore இறெசிதோர்) கிளாக்கும் நியமிக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தவரசை நாட்டினவனை றிக்லோவ் வன்ஜென்ஸ் என்பவன் 1658-ம் ஆண்டு ஐப்பசிமாசம் 31-ந் திகதி வரைந்த கட்டளையிலே பின்வருமாறு எழுதியிருக்கக் காண்கின்றோம். ''பறங்கியர்தாமே வகித்த பல அரசிறை உத்தியோகங்களும் நீதிபரிபாலன உத்தியோகங்களும் சுதேசிகளுள் மேல்சாதியினுள்ளோருக்குக் கொடுக்கப்படவேண்டும். கடனைப்பற்றிய ''சீவில்'' வழக்குகளெல்லாம் சுதேசிகள்சேர்ந்த ஓர் கோட்டிலே விளங்கப்படும். இக்கோட்டுக்கு ஓர் ஒல்லாந்த உத்தியோகஸ்தர் தலைவராயும் வேறொருவர் ''சக்கிடுத்தா''ராகவுமிருப்பார். யாழ்ப்பாணத்திலுள்ள இக்கோட்டின் அங்கத்தவர்களான ஐவர் முதலிமாரும் நால்வர் இறைசுவதோர்களும் நால்வர் கிளாக்குமாரும் பின்வருமாறு நியமிக்கப்படுகின்றனர்:

வலிகாமப்பிரிவுக்கும் தீவுகளுக்கும், இராசகாரியர், தீவுகளுக்குக் கம்பனியின்முதலியார். ''வெறிவிலன்தூஜன்'' [இவ்வாறு குறித்தபேர்கள் விளங்கவில்லை] வலிகாமப்பற்றுக்குக் கம்பனியின்முதலியார் டொன்பிலிப்புஇறைசுவதோர். கவுரியேல் கிளாக்கு அல்லது சக்கிடுத்தார்.

வடமராட்சிப்பிரிவுக்கு, கனகராயர், இப்பற்றுக் கம்பனியின்முதலியார். டொன்மனுவல் சேனாட்ன, முதலியாரும் இறைசுவதோரும். ''திறெவெற் வொரந்தூன மாப்பாண''கிளாக்கு.

தென்மராட்சிப்பிரிவுக்கு, "கோன்சியகுமார" இப்பற்றுக் கொம்பனியின் முதலியார். "செவேடகடல்லே" முதலியாரும் இறைசுவதோரும். அம்பலவாணர். கிளாக்கு.

பச்சிலைப்பள்ளிப்பிரிவுக்கு "சித்தியூரிய" இப்பற்றுக் கம்பனியின்முதலியார். டொன்கஸ்பார் இறைசுவதோர். அம்பகர் கிளாக்கு.

தீவுகளுக்கு "யோவசன்பூண்தே" இறைசுவதோரும் கிளாககும். பறங்கியருடைய இறைப்பகுதிக்கு (இவைகள் தோம்பில் சேர்க்கப்படுமட்டும்) "சிங்ககாவல", கம்பெனியின் முதலியார். "பிளாண்டிய" கிளாக்கு.

"மடப்பளி அகம்படி எனும்சாதிகளுக்கு ஓர் சனுவுபண்ணும் பொருட்டும் இவர்கள் கோபியாதபடி சாந்திசெய்யும்பொருட்டும் இவர்கள்சாதியிலிருந்தே இவர்களுக்கோர் தலைவனை நியமிப்பது அவசியமாயினமையால் இவ்வுத்தியோகத்துக்குக் கம்பனியின் முதலியாராகிய மனப்புலி அந்திராடோ நியமிக்கப்பட்டிருக்கிறான். இவன் தன்சனத்தினால் மிகவும் கண்ணியமடைந்தவனும் கம்பனிக்கு விசுவாசமுள்ளவனுமென்று எண்ணுகிறேன்.

"இவர்கள் பதினறுபேரும் தேவையானபோதெல்லாம் கூடிவரத்தக்கதாகப் பட்டணத்திலேயே வசிக்கவேண்டும். முதலியார்மாருள்ளும் இறைசுவதோர்மாருள்ளும் வருஷந்தோறும் தெரியப்படும் நால்வர் 100 பணத்துக்கு மேற்படாத "சிவில்" வழக்குகளைத் தீர்க்கும்படி நீதிபதிகளாய்த் தெரிவுசெய்யப்படுவார்கள். முதலிமாரும் இறைசுவதோர்மாரும் மாசவிதம் 10 பணமும் ஒருபறை அரிசியும் வேதனம்பெறுவர். கிளாக்குமாருக்கு 8 பணமும் முற்கூறியளவு அரிசியும் கிடைக்கும்.

"முதலிமாரின்கடமை யாதெனில், தத்தம்பிரிவுகளில் நடக்கும் சங்கதிகளைவிசாரித்து காலத்துக்குக்காலம் "றிப்போட்டுச்" செய்தலாம். அவ்வப்பிரிவில்நடக்கும் சகலவேலைகளும் (உதாரணமாய் கூலியாட்கள் அல்லது வேலைகாரர் வேண்டியபோது) அவர்கள்மூலமாகவே நடக்கும். இறைசுவதோர்மாரின் கடமை யாதெனில், தோம்பின்படி வரிகளையறவிட்டு மூன்றுமாசத்துக்கொருமுறை கொம்மாண்டோரின் உத்தரவுப்படி பொக்ஷகாரனிடம் ஒப்பிப்பதாம். கிளாக்குமார் அவற்றின் வரையுறைகளைப் பதிந்துவைத்துத் தோம்புக்காரனின் கணக்

கோடு அவை ஒத்துவருகின்றனவோவெனப் பார்த்துக்கொள்ளவேண்டும்'' இதுவரை வன்ஜென்சின்கட்டளையிற் கண்டது.

இவ்வாறு கீழ்வழக்குகளைத்தீர்க்கும் பொறுப்பு ஆதியிற் பெரும்பான்மை சுதேசிகள்கையில் விடப்பட்டிருந்தும் விரைவில் ஒல்லாந்தர் பறங்கியர்காலத்திற்போலவே செய்யத் தலைப்பட்டனர். 1661-ம் ஆண்டில் முதலிமாருக்கிருந்த இவ்வுத்தியோகம் நிறுத்தப்பட்டு யாழ்ப்பாணத் திசாவையினுத்தியோகத்தோடு ஒன்றுகூட்டப்பட்டது. ஆயினும் தீவுப்பற்றுக்களின் முதலியாராயிருந்த இராசகாரிய முதலியாரும், மடப்பளியாரின் முதலிமாராயிருந்த நிற்சிங்கம், டொம்சுவாம், அந்திராடோ என்போரும் காட்டியிருந்த இராசவிசுவாசத்தினிமித்தம் தத்தம் உத்தியோகத்தில் விடப்பட்டிருந்தனர்.

**வருமானங்கள்.**— ஒல்லாந்தர் முக்கியமாய் வர்த்தகத்தின் பொருட்டே இலங்கையையடைந்தாராதலால் தமது அரசிறை வருமானத்தைப் பெருக்குவதற்கே ஆதிதொட்டுக் கண்ணாயிருந்தனர். முன்பு நெல்வேளாண்மையைச் சனங்களுள் ஊக்கித்தும் பறங்கியரசுக்குரியதாயிருந்த விஸ்தாரமான வயல்களில் அரசினர்பொறுப்பில் நெற்பயிர் செய்வித்தும்வர முயற்சிபண்ணப்பட்டது. பூநகரியில் ஆயிரக்கணக்கான பரப்புநிலத்தைச் செய்கைபண்ணத்தேடினர். மாதோட்டத்திலுள்ள இராட்சதகுளத்தைத் திருத்தயோசித்தும் அம்முயற்சி ஒப்பேறவில்லை. இராட்சதகுளத்தைக் கட்டுவதற்கு ஒல்லாந்தர் கூப்மன் வோஸ்ச் என்பவனின்கீழ் வடகரையிலிருந்துவந்த 100 அடிமைகளை அனுப்பியிருந்தனர். அதனால் 112 மைல் சுற்றளவுள்ள தேசம் நீர்ப்பாய்ச்சப்படுமென மதிப்பிடப்பட்டிருந்தது. நாடெல்லாம் அரசினருக்காயிருந்த வயல்களில் வேலைசெய்து நெல்லை அரசினருக்குக் கோடிக்கரையினின்றுவரும் நெல்விலைப்படி விற்றுவிடச் சுதேசகமக்காருக்கு உத்தரவுகொடுக்கப்பட்டது. தாமாக இவ்வாறு வேளாண்மைசெய்ய விரும்பாதோர் அரசினர்பொறுப்பில் தமக்குக் குறிக்கப்பட்ட நாள்வீதம் ஊழியஞ்செய்து வேளாண்மைக் குதவிசெய்யவேண்டியோராயினர். இவ்வாறு முயற்சித்தும் சனங்களுக்குப் போதியநெல் யாழ்ப்பாணத்தில் இல்லாமையால் பிறதேசங்களிலிருந்து அரசினர்பொறுப்பாகவே நெல் வருவிக்கப்பட்டது. திரிகோணமலை மட்டக்களப்பிலிருந்து நெல் வருவிக்கப்படாதென முன் கட்டளைசெய்திருந்தும் பின் இக்கட்டளை நீக்கப்பட்டது. பிற்காலம் அரசினர் வயல்கள் சனங்களுக்கு விற்கப்பட்டன.

பருத்திச்செய்கை.— பறங்கியர்காலத்திலும் அதிகமாய் ஒல்லாந்தர்காலத்திலேயே பருத்திச்செய்கை யாழ்ப்பாணத்தில் ஊக்கப்பட்டது. மன்னாரிலும் பூநகரியிலும் இது மிகுதியாய் நடைபெற்றது. தென்மராட்சியினின்று சனங்களைக்கொண்டுபோய்ப் பருத்திநாட்டுவித்தனர். கிழக்குமூலை வன்னியனின்கீழும் பருத்தி அதிகமாய்ச் செய்கைபண்ணப்பட்டமையால் ஒல்லாந்தர் அவனிடம் திறைரூபமாகப் பஞ்சு பெற்றுக்கொண்டுவந்தார்கள். ஆயினும் ஏனைய வன்னியரைப்போலவே இவனும் பலமுறைகளில் ஒல்லாந்தருக்கடங்காமலும் கண்டியரசன்பக்கமாய்ப் போய்விடுவேனென அவர்களைப் பயமுறுத்தியும்கொண்டு வந்தமையால் அவனாலனுப்பப்பட்ட பஞ்சுவரவு நிச்சயமற்றதாயிருந்தது.

சீலைநேசவும், சாயமும்.— ஒல்லாந்தர் தாம் செய்கைபண்ணுவித்த பஞ்சை இவ்விடத்திலேயே ஆடையாக்கமாற்ற முயன்று சேணியர் கைக்கோளர்பலரை இந்தியாவினின்றுமழைத்துத் தம்பொறுப்பில் நெசவுபண்ணுவித்தனர். சாயக்காரரும் இவவாறே அழைக்கப்பட்டனர். ஒல்லாந்தரின்முன் யாழ்ப்பாணத்திற் சீலைநெசவு பெரும்பாலும் பறையராலும் சிறுபான்மையே பிறராலும் செய்யப்பட்டது. முக்கியமாய்க் கோடிக்கரையில் 1665–ம் ஆண்டின்முன் நிகழ்ந்த ஓர் பஞ்சத்தினால் பல நெசவுகாரர் யாழ்ப்பாணத்தில்வந்து குடியேறினர். மேற்குறித்தவருஷத்தின் ஒல்லாந்த அறிக்கைப்பத்திரத்தின்படி அந்நாளில் இங்கு மூன்றுவகுப்பான நெசவுகாரர் இருந்தனர். அவர்கள்தொகை 125 பேர். சாயக்காரரில் நான்குவகுப்பு இருந்தது. அவர்கள்தொகை ஆண் பெண் சிறுபிள்ளைகளுட்பட 762 பேர். கோடிக்கரையினின்றுவந்த நெசவுகாரருக்கும் சாயக்காரருக்கும் அரசினரே முற்பணங்கொடுத்துதவினர். 1665–ம் ஆண்டின் கணக்கும்படி நெசவுகாரர் கம்பனிக்கு 2813 இறைசாலும், சாயக்காரர் 5820 இறைசாலும் கடன்கொடுக்க வேண்டியோராகக் குறிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு முற்பணங்கொடுத்துக் கடனேறிவிட்டமையைக் கண்ட ஒல்லாந்தர் அப்பாற் பணங்கொடாது, சீலையை நெய்துகொண்டுவந்து கொடுப்போருக்கு வேண்டிய நூலைக்கொடுத்துக் கூலியிலே முன்கடனுக்காக ஐந்திலொன்று பிடித்துக்கொண்டுவந்தனர். சாயக்காரர் தாங்கள்பெற்ற சீலைக்குச் சாயங்காய்ச்சிக்கொண்டு வரும்போது மேலும் காய்ச்சுதற்குச் சீலைசாயவேர் நீலம் மெழுகு ஆதியவைகொடுத்துக் கூலியில் எட்டிலொன்று கடனுக்காக எடுக்கப்பட்டது. ஒல்லாந்த உத்தியோகஸ்தரின்கீழே நெசவும், சாயவேலைகளும் நடத்தப்பட்ட

ண. ஆனைக்கோட்டையில் 1665-ம் ஆண்டு வரையிலிருந்த ம் னூமேவலென்பவன் சாயங்காய்ச்சுவதில் விசேஷித்தவனுகைப் புக ழப்பட்டிருக்கிறான். இவன் அந்நாளிற் சாயக்காரருக்குத் தலை வனுயிருந்தவன். பரம்பரையான தொழிலாளிகள்மட்டுமல்ல கம்பனியின் சிறைகள் சிலரும் நெசவும் சாயவேலையும் பழ க்கப்பட்டனர். ஒல்லாந்தரின்கீழ் இவ்விருதொழில்களும் அர சினர் சொந்தமாயிருந்தமையால் பிறவிடங்களிலிருந்து சீலை இறக்குமதியாகாமலும் இவ்விடத்திலிருந்து பிறர் ஏற்றுமதி செய்யாமலும் வெகு சாக்கிரதையெடுத்துக்கொள்ளப்பட்டது. விற்கப்படும் சீலையெல்லாம் இராசமுத்திரையோடேயே விற் கப்படவேண்டுமென்றிருந்தது. சீலைக்கு முத்திரைகுத்தும் வ ரியினுலும் ஏற்றுமதி இறக்குமதி வரியினுலும் 1697-ம் ஆண் டு அரசினரடைந்த வருமானம் 4733 1/3 இறைசாலென அவ்வருஷ அறிக்கைப்பத்திரம் காட்டுகிறது. சாயச்சீலைகள் பெரும்பாலும் கோடிக்கரைக்கும் இடையிடையே வத்தாவியா வுக்கும் அனுப்பப்பட்டன. சிலவருஷங்களில் சீலைகாய்ச்சுதற்கு யாழ்ப்பாணத்திற்கிடைத்த சாயவேர் போதாமல் மதுரையில் நின்று அவ்வேர் வருவிக்கப்பட்டது. சாயச்சீலையால் தம்வரு மானத்தை விருத்தியாக்கும்பொருட்டு அரசினர் பெரும் பிர யாசையெடுத்துக்கொண்டனர். சில சாயக்காரர் அரசினர்கொ டுத்த சாயவேரைக்கொண்டு சீலைகாய்ச்சிச் சனங்களுக்குக் க ளவாய் விற்றுவந்தமையால், இனி யாழ்ப்பாணத்தார் ஒருவ ரும் சாயச்சீலை தரிக்கப்படாதென ஓர் கட்டளைச்சட்டமும் 1697-ம் ஆண்டுவரையில் பிறப்பிக்கப்பட்டது.

**சாயவேர்.**—சாயங்காய்ச்சுவதுபோலவே சாயவேர்வியாபா ரமும் ஒருகாலம் அரசினர்கையிலிருந்தது. இதனைப் பிடுங்கி க்கொடுப்பது வேர்க்குத்திப் பள்ளருடைய தொழில். மன்னா ரில் இதைக் கடையர்செய்தனர். காரைதீவு நெடுந்தீவு எனு மிடங்களின் வேரே முதற்றரமானதாயும், மன்னாரிற்கிடைத்த வேர் இரண்டாவதாயும், வன்னி முதலியவிடங்களின் வேர் மூன்றாவதாயும், மற்றவிடங்களிற் கிண்டியவேர் கடைசித்தினி சாகவுங் கொள்ளப்பட்டது. வருஷந்தோறும் யாழ்ப்பாணத்தி ல் எடுக்கப்பட்ட வேர் 80 அல்லது 90 பகார் [ஒருபகார் 480 ஒல்லாந்த இருத்தல்கொண்டது] எனக் கணக்கிடப்பட் டது. யாழ்ப்பாணத்தில்நடந்த சாயவேலைக்குப் பலமுறையும் இத்தொகையான சாயவேர் போதாதிருந்ததென முன் குறி ப்பிட்டோம்.

**பட்டுநூல்.**— இவற்றோடமையாது ஒல்லாந்தர் யாழ்ப்பா ணத்திற் பட்டுப்பூச்சிகளைக்கொணர்ந்து பட்டுநூல் வியாபார

மும் உண்டாக்கத் தேடினர். இத்தொழிலுக்குத் தலைவனாய் வங்காளத்திலிருந்து ஒருவன் அழைக்கப்பட்டான். வேளா ளர் ஆதிய சிலர் செய்யும் ஊழியங்களுள் பட்டுப் பூச்சிகளுக் கென நாட்டப்பட்ட "றுற்பூம்சி" என்னும் மரங்களுக்குத் தண் ணீரூற்றுவதும் ஒன்றாயிருந்தது. இவை அரசமரங்கள்போ லும். ஆயின் பட்டுநூற் றொழில் சித்திபெய்தாமற் போய்வி ட்டது.

யானைவியாபாரம்.—ஒல்லாந்தருடைய வியாபாரங்களுள் வி சேஷித்தது யானை வியாபாரமே. இவை காலி மாத்துறை எ ன்றுமிடங்களிலும், முக்கியமாய் வன்னிக்காட்டிலும் மாதோ ட்டம், முசலி, பெருங்களி, பூநகரி என்னுமிடங்களிலும் அக ப்படுத்தி யாழ்ப்பாண மூலமாய்க் காரைதீவிலேற்றி வடதேச த்துக்கு அனுப்பப்பட்டன. கொல்கொண்டா, தஞ்சாவூர், வ ங்காளம், ஆதியவிடங்களினின்று வியாபாரிகள் யாழ்ப்பாண ம் வந்து யானைகளை வாங்கிப்போவர். யாழ்ப்பாணத்து யானை கள் பெரும்பான்மை வன்னியர்களால் ஒல்லாந்தருக்குத் திறை யாகக் கொடுக்கப்பட்டன. பூநகரி முதலிய இடங்களில் ஒல் லாந்தர் முன் வன்னியர்களையும், பின் அதிகாரிகளையும் தம்கீ ழ் அமைத்து யானைபிடித்தனர். வன்னியர் பலகாலும் திறை கொடுப்பதிற் சுணக்கமாகி, ஒல்லாந்தரைத் தொல்லைப்படுத் திக்கொண்டிருந்தனர். பலகாலும் ஒல்லாந்தரின் மேலரசை யும் ஒப்பாது கர்வித்து ஒழுகினர். இதனால் வன்னியர் எல் லாம் மாறிமாறி மூன்றுமாதத்துக்கு ஒருவனாக யாழ்ப்பாணக் கோட்டைக்குள் இருக்கவேண்டுமென ஓர் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. கண்டியரசன் பக்கமாய்த் திரும்பிவிடுவார்களெ ன்றபயத்தினால் ஒல்லாந்தர் வன்னியருக்கு இதன்மேல் வேறு தண்டனைசெய்ய இயலாதிருந்தனர். 1697-ம் ஆண்டில் ஒல்லா ந்தருக்கு யானை கொடுக்கச் சுணங்கினோர் பனங்காமம், பனை பவிழாங்குளம், [பறையனாலங்குளம்?]புதுக்குடியிருப்பு எனுமி டத்து வன்னியர்களான டொன்பிலிப் கல்லமாப்பாணன் டொன் கஸ்பார் கவுசயினார் (அல்லது கொஞ்சயினார்) இலங்கை நாராய ணமுதலியார் என்போரும், கரிக்கட்டுமூலை மேற்பற்று என்னு மிடங்களின் டொன் தீயோகு புவிநல்லமாப்பாண வன்னியனும் முள்ளியவளையின் பெரிய மெயினார் உடையாரும் எனக்குறித் திருக்கிறது. கரைச்சி நெல்வயல்கள் நல்லமாப்பாணன் பொறு ப்பில் விடப்பட்டிருந்தன. இவ்வயல்களின் பத்தில் ஒன்றை அவன் அனுபவிப்பதற்குப் பதிலாகவே யானைத்திறை கொடு க்கவேண்டியவனானான். இவ்வாறே ஏனைய வன்னியர்கள் ஆ

ண்ட பகுதிகளையும் தம்முடையவையெனக்கொண்டு ஒல்லாந்தர் இஃறகேட்டனர். அந்நாட்களில் இவர்களோடு வருகின்ற வேறு சில வன்னியர்களின் நாமங்களையும் தருவோம். கருநாவற்பற்றில் அம்பல வன்னியனும், தென்னமரவாடியில் சேதுகாவல வன்னியனும் திறைகொடுத்தாண்டுவந்தனர். டொன் பிலிப்பு நல்லமாப்பாணன் மகன் டொன் கஸ்பார் நிச்செய சேதிராயன் பூநகரியில் யானைவேட்டைத் தலைவனுயிருந்தனன். இவன் இலங்கை நாராயண வன்னியனுக்கு மருகன்போலும்.

**டொன் பிலிப்பு நல்லமாப்பாணன்.**—வன்னியரின் அடங்காத்தன்மையைப்பற்றி ஒல்லாந்த கொம்மாண்டோர்மாரின் அறிக்கைப் பத்திரங்களெல்லாம் பேசுகின்றன. கென்றிக் சுவாடக் குறூன் என்பவன் (1694-97) எழுதியிருப்பது இது;– "இவ்வன்னியர்கள் கம்பனியின் பிரசைகளாய்ப் பிறந்திருப்பினும், சாதியில் நடைபடியான வேளாளரேயானுலும், காலகதியிலே மிகவும் செருக்குற்றோராய் வன்னியன் எனும் தங்கள் பட்டம் ஏதோ பயங்கரமும் முக்கியமுமான ஒரு பட்டமென எண்ணிக்கொண்டிருக்கின்றனர். இப்பட்டத்தை அவர்கள் கம்பனியில் நின்றே பெற்றுக்கொண்ட போதிலும், கம்பனியையாவது அதன் மேலுத்தியோகஸ்தர்களையாவது சங்கிக்க வேண்டுமேயென்று சிறிதும் கருதுகின்றாரில்லை. உத்தியோகஸ்தர்முன் வந்து செய்யவேண்டிய மரியாதையையும் மறந்து போகிறார்கள்" என்று எழுதியிருக்கின்றான். நல்லமாப்பாணன், நிச்செயசேனதிராயன், இலங்கை நாராயணன் எனும் வன்னியர்கள் மூவரும் ஒருமுறை சுவாடக்குறூனோடு பிணங்கிக்கொண்டு கொழும்பிலே கவணரைக் காணப்போய் அங்கு விசேஷ மரியாதைகளும் பெற்றுத் திரும்பினமையே அவன் இவ்வாறெழுதினமைக்குக் காரணம்போலும். இவ்வன்னியர் மூவரும் யாழ்ப்பாணத்திலும் மேற்குறித்த கொம்மாண்டோரில்லாவேளையில் அரசியற் சங்கத்தாரால் மிகக்கண்ணியமடைந்து சிலவழக்குகளை விசாரணை செய்வதற்கும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவ்விருத்தாந்தமெல்லாம் சுவாடக்குறூன் மனதைப் புண்படச்செய்தன. ஆயினும் ஒல்லாந்தர் இவர்களைத் தமக்குப் பகைவராக்கிவிடத் துணியாதிருந்தனர். இதனுலேயே, நிச்செய சேனதிராயன் தன் மாமனின் சேவகனொருவனுக்கு ஓர் அரசன் செய்வதுபோலக் கொலைத்தண்டம் விதித்தபோது ஒல்லாந்தர் மனம் புழுங்கியும், யாதும் செய்யாது விட்டுவிட்டனர். பின் கொழும்புக் கவணர் 1697-ம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்து நல்லூர் அரசினர் நந்தன வனத்தில் தங்கியிருந்தபோது, அவ்வேளை பட்டினத்தில் வந்திருந்த நல்லமாப்பாணனையும் ஏனைய வன்னியர்களையும

பேட்டிக்கு அழைத்தவிடத்தில், வழக்கப்படி தங்களைக் கூட்டிக்கொண்டு செல்லப் பறைமேளகாரர் அனுப்புப்படாமையால், இவர்கள் தாம் வரோமென்றிருந்துவிட்டு வேறொருநாளிற் கவனரைக் காணப்போயினர். இதற்கு கவனரும் ஒன்றும் பேசாதிருந்துவிட்டான். ஆயின் நல்லமாப்பாணனும் மகனும் கொடுக்கக் கடனாகிய யானைத் திறையை நெடுங்காலஞ் செலுத்தாதிருந்தமையால், அவர்களை நேரில் அப்புறப்படுத்தத் துணியாது பூநகரி, பல்லவராயன்கட்டு, இலுப்பைக்கடவை எனுமிடங்களில் யானை பிடிப்பதற்கு ஓர் ஒல்லாந்தனை அதிகாரியாக நியமித்தான்.

வன்னியர்களெல்லாம் அந்நாட்களிலிருந்த ஏனைய யாழ்ப்பாணிகள் பலரைப்போலவே நாமத்தளவில் கிறீஸ்தவர்களாயிருந்தனர். ஆயின் நெஞ்சத்தில் அநேகர் கள்ள விசுவாசிகளாயினர் என்பது நல்லமாப்பாணனின் இளைய மகனுடைய செய்தியால் விளங்கும். நல்லமாப்பாணன் அக்காலம் யாழ்ப்பாணத்திலிருந்த மிட்ஜெற் எனும் கொம்மாண்டோரின் சலுவைப் பெறும்பொருட்டுத் தனதுமக்களுள் ஒருவனைப் பாதிரி உத்தியோகத்துக்குப் பயிற்றுங் களகமாகிய "செமினேரி"யில சேர்ப்பித்திருந்தான். அக்கொம்மாண்டோர் மாறினவுடன் சில வீண் போக்குகளைச்சொல்லி மகனைச் செமினேரியில் நின்றும் எடுப்பித்துக்கொண்டான். பின் ஒருகால் அம்மகன் ஒரு ஒல்லாந்த உத்தியோகஸ்தனோடு நாகபட்டினம் போயிருந்தபோது சைவஆலயங்களிலே வேஷம்மாறிநின்று அருச்சனை செய்வித்துக்கொண்டிருக்கக் காணப்பட்டான். இவன் "குருமடத்தில்" இருந்த பின்னும் இவ்வொழுக்கத்தைக் காட்டினமையால், தகப்பன் வீட்டில் சைவ வழிபாட்டையே என்றும் பழகினவனாகவேண்டும் என ஒல்லாந்தர்நூல் கூறுகின்றது. அந்நூலே காட்டுகிறபடி வன்னியர்கள் ஒருபோதும் தங்கள் வீடுகளில் ஒல்லாந்தர் வரவிடாதிருந்தமைக்கு அன்னோர் இரகசியமாய்த் தம் இல்லங்களில் நடத்திவந்த தம்பழைய சமய ஆசாரமே நியாயமாயிருந்தது.

**யானைத்தரகர்கள்.**—யானை வியாபாரத்தில் வடகரைச்சோனகர் ஆதியாம் வர்த்தகர்களுக்கு யாழ்ப்பாணத்திற் சிலர் தரகராய் நின்றும் யானை வாங்கிக்கொடுப்பர். இவர்களுள் 1695-ம் ஆண்டுவரையிலிருந்த "திம்மர்சாநாயிக்" எனும் பிராமணனின் நாமமும், டொன் பிலிப்பு சங்கரப்பிள்ளையின் நாமமும் நமக் கெட்டியிருக்கின்றன. திம்மர்சா (திம்மராசா?) தரகில் வெகு சமர்த்தன். ஆனைவாங்க வருவோரிடம் 100 இறைசால் 150 இ

றைசால் வரையில் பெற்றுக்கொண்டே ஒல்லாந்த கொம்மாண்டோரோடு விலைபேசப்போவான். இவனும் இவனைச்சேர்ந்த சில "நாடோடிகளும்" கிறீஸ்தவர்களாகாதிருந்தமையால் இவர்கள் பறங்கியர் நாட்களின்பின் கோடிக்கரையினின்றும் இங்குவந்தோராதல் வேண்டும். திம்மர்சா வரணியில் சில பாசாங்குக் கிறீஸ்தவர்கள் இரகசியமாய் சைவவழிபாடுகள் பண்ணியதைக்கண்டு அரசினருக்கு அறிவித்ததினால் அதற்குச் சன்மானமாக 1679-ம் ஆண்டு கார்த்திகைமாசம் 7-ந் திகதி ஒரு கண்ணியப் பட்டத்தைப் பெற்றான். கொல்கொண்டாவின் வர்த்தகர்கள் இவன்பெயருக்கே பணச்சீட்டுகள் அனுப்பி ஒல்லாந்தருக்குக் காசுகட்டுவார்கள். ஆயின் இவன் வர்த்தகர்களிடம் அபரிமிதமாய்க் கைக்கூலிவாங்கித் தமக்கு நட்டம்வருவிக்கிறானென ஒல்லாந்தர்கண்டு 1697-ம் ஆண்டுமுதல் இவனது தாகுவேலையை நிறுத்திவிட்டனர். வேறுசில பிராமணர்களும் அரசினரின்கீழ் உத்தியோகத்தமர்ந்திருந்தனர். இவர்கள் பெயரளவில் கிறீஸ்தவர்கள்.

டோன் பிலிப் சங்கரப்பிள்ளை.— இவனதுபிறப்பிடம் "கன்னெங்கிராய்" எனக் கூறப்பட்டிருக்கிறது. இவன் 1680-ம் ஆண்டளவில் பிரசித்திபெற்றிருந்த ஓர் வேளாண்குலத்தலைவன். இவன்முயற்சியால் ஆதியிலே ஒல்லாந்தர் ஏற்பாட்டுக்குமாறாக இறைசுவதோர், கணக்கப்பிள்ளை, ஆராய்ச்சி எனும் உத்தியோகங்கள் எல்லாம் இவன்குடும்பத்தாரான வேளாளர் கையிலேயேயிருந்தன. இதனால் பிறசாதிகளுக்கும் இவர்களுக்குமிடையில் ஓர் குழப்பம்நடந்து காரியம் கொழும்புத்தேசாதிபதிவரையிற் சென்றமையால், டோன் சங்கரப்பிள்ளையையும் கூட்டாளிகளையும் விலங்குமாட்டிக் கொழும்புக்கு அனுப்பும்படி 1687-ம் ஆண்டு ஆனிமீ 16-ந் திகதி கட்டளைபிறந்தது. ஆயின் சங்கரப்பிள்ளை ஒழித்தோடி நாகபட்டணத்தையடைந்து அங்கு தனக்கறிமுகமாயிருந்த "பாபாபோர்பூ" எனும் வர்த்தகனின் உதவியால் ஒல்லாந்தரோடு மீண்டும் சினேகமாகி 1689-ம் ஆண்டளவில் தான்விரும்பிய விருப்பின்படியெல்லாம் தன்சாதியாருக்கே உத்தியோகங்களைப் பெறுவிப்போனாயினன். பள்ளிக்கூடம்விட்டு வெளிப்பட்ட வாலிபர்களாயினும் சங்கரப்பிள்ளையுடைய ஆட்களுக்கே உத்தியோகங்கள் கிடைத்தன. ஆயின் 1690-ம் ஆண்டு எதிர்காற்றுவீசத்தொடங்கிற்று. இச்சம்பவங்கள் கொழும்பிற்கு எட்டவே தேசாதிபதி இனிமேல் சற்றுச்சற்றாய்ப் பிறசாதிகளுக்கும் "மயோறால்" இறைசுவதோர் முதலிய உத்தியோகங்களைக் கொடுக்கவேண்டுமென கொம்மாண்டோருக்குக் கற்பித்தனன்.

**வேளாளர்கலகம்.**— அரசினர் இதுவரையில் வேளாளருக்கே பெரும்பான்மை சொந்தமாயிருந்த உத்தியோகங்களைப் பிறசாதியாருக்குங் கொடுக்க ஏற்பாடுசெய்தமையினால் சங்கரப்பிள்ளையின் கட்சியார் கலகம்விளைக்கத்தொடங்கினர். இவர்களுள் முன் மேற்சொல்லிய தலைவனுக்கு வெற்றிலை கொண்டுபோவோனாயிருந்து பின் பாபாபோர்பூவின் வேலைகாரனும் அப்பால் அரசினர்கீழ் ஓர் கணக்கப்பிள்ளையுமாயிருந்த முதலித்தம்பி என்பவனும், சங்கரப்பிள்ளைக்குச் சகோதரமுறையினனான டொன்சுவான் மண்டலநாயகமுதலி எனும் "வாசல்" கணக்கப்பிள்ளையும் தலையாட்களாயினர். இவ்விருவரும் கணக்கப்பிள்ளை உத்தியோகத்தினின்று தள்ளிவிடப்பட்டதே கலகத்துக்கு முக்கியகாரணமாயிற்று. இவர்களோடு வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி எனுமிடங்களின் இறைசுவதோர்மாரும் மாற்றிவிடப்படவே இவர்களும் கலகத்துக்கு உதவியாயினர். அப்பால் டொன்பிலிப்பு நல்லமாப்பாண வன்னியனும், டொன் கஸ்பார் இலங்கைநாராயணமுதலி வன்னியனும் கலகக்காரரை ஆதரிப்போராயினர். இவ்வன்னியர்களிருவரும் 1694-ம் ஸ்ல முதலித்தம்பிக் கெதிராய்ப் பிராது கொண்டுவந்திருந்தவர்கள். இப்பிராதில் சாட்சியாய் அழைக்கப்பட்ட டொன்பிலிப்பு வில்லவேதராயனும், டொன் அந்தோனி நாராயணமுதலியும் பெயரளவில கிறீஸ்தவர்களாயிருந்தும் சைவமுறைப்படி சத்தியஞ்செய்துகொடுத்தமை கவனிக்கப்படத்தக்கது. இப்பிராது யாழ்ப்பாணத்தில் நடந்துகொண்டிருக்கையில் முதலித்தம்பி கொழும்புக்கு ஓர் மனுவெழுதிக் கொம்மாண்டோரை அறியாமலே வழக்கைத் தள்ளுவித்துக்கொண்டு கோட்டாரால் பலவரிசைகளோடு சங்கைசெய்தும் அனுப்பிவிடப்பட்டிருந்தான். இவ்வாறு முன் முதலித்தம்பிக்குச் சத்துருக்களாயிருந்த வன்னியர்களும் தாமும் வேளாளரே என்ற அபிமானத்தினால் அவனோடுகூடிக் கலகத்துக்கு உதவிசெய்வோராயினர். கொழும்பில் முதலித்தம்பிக்கு ஆதர்வு இடைத்துவிட்டமையாலும் வன்னியரும் அவனோடு கூடிக்கொண்டமையினாலும் யாழ்ப்பாணக் கொம்மாண்டோர் ஒன்றுஞ் செய்யமாட்டா திருந்துவிட்டான்.

**சங்கரப்பிள்ளையின்மகன்.**— சங்கரப்பிள்ளை 1695-ம்ஆண்டு இறந்துவிட அவ்வேளாண் தலைவன் அரசினருக்குச்செய்த உதவிக்குக் கைமாறாகவோ அன்றி உயர்குலத்தலைவ னென்றமைபாலோ அவன்மகனுக்கு தோமஸ் வன்றீ எனும் கொழும்புத்தேசாதிபதி 1695-ம் ஆண்டு இரு ஒல்லாந்த உத்தியோகத்தர்மூலமாய் ஓர் குதிரையும் குடையும் பரிசிலாக அனுப்

பினன். யாழ்ப்பாணத்தில் டொன் சங்கரப்பிள்ளைக்கு மாறாய்ப் பல குற்றச்சாட்டுகளிருந்தமையால் அவன் மகனுக்கு அனுப்பிய பரிசில்களைக் கொம்மாண்டோர் பறித்தெடுத்துவிட்டான். ஆயின்,ஜெறிற் டி கீர் தேசாதிபதி 1697-ம் ஆண்டு ஆவணிமீ 2-ந் திகதி பண்ணின கட்டளையால் அவைகள் மீண்டும் அவனுக்குக் கொடுக்கப்படவேண்டுமென விதிக்கப்பட்டது.

**சாதியுடைமுதலியன.**— சுவாடக்குறான் எனும் கொம்மாண்டோர் உத்தியோகங்களை வேளாளரல்லாத பிறசாதிகளுக்கும் கொடுக்க முயன்றனனாயினும் தமிழரசர் காலவழக்கப்படி நடைபெற்ற சாதிஉடைகளை மாற்றத்தேடவில்லை. எளிய சாதிகள் தத்தம் உடைநடைகளை மாற்றத்தொடங்கியதைப்பற்றி அவன் பின்வருமாறு யாழ்ப்பாண அரசியற்சங்கத்தாருக்கு எழுதியிருக்கின்றான். "கீழ்சாதிகள் தங்கள் உடைமுதலியவைகளைப்பற்றிய ஒழுங்குகளை அனுசரிக்கும்படி செய்யுவேண்டும். இதிற் சில ஒழுங்கீனங்கள் உண்டாகியிருக்கிறதாகக் கேள்வி. இவர்கள் சரியானமாதிரியாய்ச் சீலை கட்டிக்கொள்ளுகிறார்களில்லை. தலைமயிரைவெட்டாமலும், காதிற் பொன்கம்பிகள்போடாமலும் திரிகிறார்கள். இதினால் இவர்களை யாரென்று தெரியாமற் போகிறதென்றும் இது தங்களுக்கு ஒரு அவமானமென்றும் சாதியாளரான 'கொனேறுடால்' [இவர்கள் மேல்சாதியார்போலும்] முறைப்படுகிறார்கள். இவ்விஷயமாய் இலங்கைத்தேசாதிபதியாகிய லோறென்ஸ் பில் கவணரால் 1686-ம் ஆண்டு ஆவணிமீ 18-ந் திகதி ஓர் 'பிளக்காற்' கட்டளை பிறப்பிக்கப்பட்டது" கீழ்சாதிகள் போட்டுவந்த கம்பிகள் சவடியென்னப்பட்டன. நாமறியவும் சிலர் இதைத்தரித்தனர். சிரமுண்டிதம் அக்காலம் எளியசாதிக்கு அடையாளமாயிருந்து இக்காலம் உயர்குலசாதிக்கே உரித்தாகிவருகிறது.

**குதிரைவியாபாரம்.**— பறங்கியர் நெடுந்தீவிலே குதிரைவளர்த்துவந்திருந்தனர். அத்தொழிலை ஒல்லாந்தர் மிகவும்விருத்திபண்ணி நெடுந்தீவோடு இரணைதீவிலும் குதிரைகளை வளர்ப்பித்தனர். இவ்விருதீவுகளிலும் ஒவ்வோர் ஒல்லாந்ததலைவனும் நிறுத்தப்பட்டான். நெடுந்தீவிலே சனங்கள் அமோகமாய்ச் செய்துகொண்டுவந்த பருத்திச்செய்கை இதனால் தடைப்பட்டது. அவர்களுடைய ஆடுமாடுகளின் தொகையும் சுருக்கிவிடப்பட்டது. இரணைதீவு ஆதியிலே குடியேறியிருந்ததாகத் தோன்றவில்லை. பறங்கியர்காலத்திலேயே அது நெடுந்தீவினின்றும் வந்த பறையாற் குடியேறத்தொடங்கிற்று. ஒல்லாந்தர் குதிரைவியாபாரத்தை விருத்தியாக்கும்பொருட்டு ந

ல்ல இனக்குதிரைகளை பாரசீகம் யாவா எனுமிடங்களிலிருந்து வருவித்துப் பட்டியடைப்பித்தனர். 1697-ம் ஆண்டில் நெடுந்தீவில்மட்டும் 500 குட்டிகள்வரையில்நின்று வளர்ந்தன. பருவமான குதிரைகளைக் கயிறெறிந்து பிடிப்பித்து வடதேசத்துக்குஅனுப்பி விற்றுவந்தனர். ஒல்லாந்த போர்வீரராலும் இக்குதிரைகள் உபயோகிக்கப்பட்டன. தஞ்சாவூர் அரசனுக்குக் கம்பனியார் உபசாரமாய் அனுப்பிவந்த இரு அராபிய குதிரைக்குப்பதிலாய் நெடுந்தீவுக்குதிரைகளும் சிலவேளை அனுப்பப்பட்டனவென்றால் இக்குதிரைகள் அக்காலம் விசேடித்தனவாயே யிருந்தனவென்பது தோன்றும். விலையைநோக்கின் குதிரை ஒன்று 25 இறைசால்வரையிலே விற்கப்பட்டது. யானைகளின்விலை 300 இறைசால்வரையில். இவ்விலை நம் காலத்தாருக்கு மிகக் குறைவுபோற் றோற்றினும் நெல்விலை அக்காலம் பறையொன்று ஆறுபணம் [அரைஇறைசால்]வரையில்; மாத்திரமே என்பதனால் அக்காலப் பணத்தின்பெறுமதி எவ்வளவென்பது விளங்கும்.

**முத்தும், சங்கும்.**— பறங்கியர்காலத்திற்போலவே ஒல்லாந்தரும் முத்துக்குளிப்புநடத்தி அதனால் பெரும் லாபமடைந்தனர். 1697-ம் ஆண்டின்முன் நடந்த ஆறுகுளிப்பிலும் கிடைத்தஆதாயம் பின்வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| 1666-ம் ஆண்டு | | 19,655 | இறைசால்சொச்சம். |
| 1667 | ,, | 24,641 | ,, |
| 1694 | ,, | 21,019 | ,, |
| 1695 | ,, | 24,708 | ,, |
| 1696 | ,, | 25,327 | ,, |

இக்காலப் பணப்பெறுமதியின்படி பார்த்தால் இத்தொகைகள் பத்துமடங்காகப் பெருக்கப்படவேண்டியன. முத்துக்குளிப்பு கம்பனிக்கு அபரிமிதமான ஆதாயத்தைக் கொடுத்ததேயாயினும் அது வருஷாவருஷம் நடைபெறக்கூடாமற் போய்விட்டது.

சங்குகுளிப்பினால் அதிகலாபம் வரவில்லை. மன்னாருக்கும் கற்பிட்டிக்குமிடையிலேயே இக்குளிப்புநடந்தது. 1697-ம் ஆண்டு பெரியதம்பி எனும் சோனகன் இக்குளிப்பை 8000 இறைசாலுக்குக் குத்தகையாய்க்கேட்டும் அரசினர் கொடாது மறுத்துவிட்டனர். முத்துக்குளிப்பைப்போலவே சங்குக்குளிப்பும் அரசினர்கையிலிருந்துவந்தது.

பிறபொருட்கள்.— ஒல்லாந்தர் வியாபாரிகளாகவே இங்கு வந்தமையால் தம்மாலானமட்டும் யாழ்ப்பாணநாட்டின் திரவியங்களால் தாம் செல்வர்களாகத் தேடினர். முத்து சங்கு என்னும் கடல்படுதிரவியங்களாலும் யானை குதிரை என்னும் நிலம்படுதிரவியங்களாலும் மிக ஆதாயமடைந்ததோடு உப்பு மரம் இவற்றாலும் செல்வத்தைஈட்டினர். உப்பு இக்காலத்திற்போலவே அரசினர்சொந்தமாயிருந்தது. ஆயினும் யாழ்ப்பாணத்தின் தன்படுவனுப்பைக் காவல்பண்ணிக்கொள்வது ஒல்லாந்தருக்கு வெகு பிரயாசையைக் கொடுத்ததோர் முயற்சியாயிற்று. அப்பால் வன்னிக்காடுகளின் இராட்சதமரங்களைத் திரளாய்த்தறிப்பித்துத் தமது கோட்டைகொத்தளம் வீடுவாசல்களுக் குபயோகித்ததோடு இந்தியாவுக்குமனுப்பி வியாபாரஞ்செய்தனர். காட்டுமரங்கள் அவர்க்கு வெகு சொற்பசெலவிலே தறித்துக் கொடுக்கப்பட்டன.

ஒல்லாந்தர் மரந்தறிப்பித்த விதத்தைக் காட்டும்படி 1679-ம் ஆண்டின் அறிக்கைப்பத்திரத்திலே இதற்குச் செய்யப்பட்டிருக்கும் ஒழுங்கை மொழிபெயர்த்து இதன்கீழ்த் தருகின்றோம்.

"மரந்தறிக்கும் ஊழியம் திசாவையின்கீழே நடக்கவேண்டியது. இதற்குக் கம்பனியின் அடிமைகள் 293 பேர் குறிக்கப்பட்டிருக்கின்றனர். அதெவ்வாறெனில்:—

145 பேர் "சிவலவந்தன் கோவி"ல் நின்று வருவர். இவர்கள் 20, 25 அல்லது 30 பேர் சேர்ந்த கூட்டமாய்க் காட்டிற் சென்று தறிப்பர். இவர்களுக்கு மாதம் ஒருபறை அரிசியும், கொஞ்சம் கருவாடும், சிலவேளைகளில் கொஞ்சம் புகையிலையும் கொடுக்கப்படும். புகையிலைக்குக் காசு குற்றக்காசிலிருந்து எடுக்கப்படும்.

148 அடிமைகள் தறித்த மரங்களைக் கரையாருடைய உதவியோடு எடுத்துக்கொண்டு வரவேண்டும். கரையாரின் விபரம் பின்வருகிறது:—

73 பேர் "மாய் வலகோவி"ல் நின்று வருவர். 38 பேர் "அட்டென் கிட்டென் கோவி"ல்நின்றுவருவர். 37 பேர் நழவரும் பள்ளரும். தொகை 148 பேர். இவ்வளவு பேரும் முன்னே பறங்கியருக்குச் சேர்ந்திருந்து இப்போது கம்பனிக்காக வேலைகொள்ளப் படுகிறார்கள். இவர்களுக்கு அரிசி கொடுப்பதில்லை. தாங்களே தங்கள் தீனைப் பொறுக்கவேண்டும்.

ஒவ்வொருவருஷமும் 738 கரையார் மரத்தறிப்புக்குவர்து மரம்கொண்டுபோவார்கள், இவர்களும் தமதுதீனைத் தாங்களே பொறுப்பர். ஒருதடவையில் இத்தனைபேர் வரவேண்டுமென்பது இருக்கிறவேலைக்குத் தக்கபடி நியமிக்கப்படவேண்டும். இவர்கள் பின்வருமிடங்களிலிருந்துவருவர்.

173 பேர் கரையார்நாகர்கோயிலிலிருந்து. 349பேர் வடமராட்சியிலிருந்து. (பழைய மன்னாரிலிருந்தும் வல்லுவெட்டித்துறையிலிருந்தும் வருவோர் கோட்டையில் வேலைசெய்பவர்) 276 பேர் பச்சிலைப்பளியிலிருந்து. தொகை 738 கரையார் மரம்கொண்டு போகவேண்டியவர்கள். திசாவையானவர் இவ்வளவு பேரோடுமட்டும் வேலையைநடப்பித்து முடித்துப்போடவேண்டும். ஏனெனில் இதற்குமேல் நாம் ஓர்போதும் வேலை கொள்ளவில்லை. மரம் கோடையில் அமாவாசி காலத்தில் தறித்து மாரியிலே ஏற்றவேண்டும்"

. தோல், கயிறு, கோட்டை, கரி—சனங்களிடத்தில் மான்தோலும் அறவுபண்ணினர். பின்வரும் கணக்குப்படி அவ்வவ்வூரால் அத்தனை அத்தனை தோல் கொடுக்கவேண்டுமென்றிருந்தது.

| | மான்தோல் |
|---|---|
| பனங்காமவன்னியர் பழையவிளாங்குளக்கணக்கில் ... | 40 |
| மேற்படி கரிக்கட்டுமூலைக்கணக்கில் ... ... | 20 |
| ஷை முள்ளிப்பற்று முள்ளியவளைக்கணக்கில் ... | 20 |
| கருநாவற்பற்றும் புதுக்குடியிருப்பும் ... ... | 20 |
| இலுப்பைக்கடவை ... ... ... | 10 |
| பல்லவராயன்கட்டு ... ... ... | 10 |
| பூநகரி ... ... ... ... | 18 |
| வலிகாமம் ... ... ... ... | 15 |
| தென்மராட்சி ... ... ... ... | 10 |
| வடமராட்சி ... ... ... ... | 10 |
| பச்சிலைப்பளி ... ... ... ... | 10 |
| தீவுபற்றுகள் ... ... ... ... | 20 |
| தொகை— | 203 |

அப்பால் வன்னிக்குப் போய்வருவோர் எல்லாம் தலைக்கு நாலுபாக மரவுரிக்கயிறு (ஆத்திநார்) ஆயம் இறுக்கவேண்டும். மாடு அல்லது எருமைகொண்டு வருவோர் ஒவ்வொரு மிருகத்துக்கும்நான்குநான்குபாகம் கொடுக்கவேண்டும். வருஷந்தோ

றும் விதைப்பு அறுப்புக்காலங்களில் வன்னிக்கு யாழ்ப்பாணத்தார் 10,000 பேர் வரையில் போய்வருவதுண்டு. இவரெல்லாம் வன்னியருக்குத் தலைக்குப் பத்துப்பத்துக்கயிறு கொடுத்து வந்தனர். ஒல்லாந்தரும் இவர்களிடம் தலைக்கொன்றாகவாங்கி 60,000 கயிறுவரையிற் சேர்த்துப்போடுவார்கள். இவைகளிற் சில கோட்டைகளின் உபயோகத்துக்குக் கண்டு மிஞ்சியவை நாகபட்டினத்துக்கு அனுப்பப்பட்டன. இதை அறவுபண்ணுவதற்கு ஆனையிறவில் ஓர் ஆயமிருந்தது. அவ்வாயத்தைப்பற்றிப் பின்பேசப்படும்.

மேலும் வயதுசென்று அல்லது அங்கவூறுபாட்டின் நிமித்தம் கழிவுசெய்யப்பட்ட சகலரும் அரசினருக்கு இறுக்கவேண்டியவை பின்வரும் மேற்கோளால் விளங்கும். "வயோதிகர்களும் நொண்டிகளாதியோரும் இராசகாரியத்துக்குக் கழிவு செய்யப்படுவர். ஆயினும் இவர்களெல்லாம் தம்மாலியன்றளவில் ஏதாவது கொடுக்கவேண்டும். உதாரணமாய் வலிகாமம், வடமராட்சி, தீவுபற்றுக்கள் என்னுமிடங்களில் ஒவ்வொரு ஆடவனும் வருஷந்தோறும் ஒருகுறித்த அளவு "தகரைவிரை" [சுழல் ஆவரசு?] கொட்டை கொடுக்கவேண்டும். ஆயின் தென்மராட்சியிலும் பச்சிலைப்பளியிலுமுளோர் பாய்களும் கடகங்களும் கொடுப்பர். இதன் இடாப்பு உதவித்திசாவையிடமும் அதிகாரிகளிடமுமிருக்கிறது. பின்னும் 236 பேர் இராசஊழியமின்றி விடப்பட்டிருக்கிறார்கள்.

அதன்விபரம்.

| | | |
|---|---|---|
| 123 | ஆட்கள் | வலிகாமத்தில் |
| 32 | " | வடமராட்சியில் |
| 22 | " | தீவுகளில் |
| 59 | " | தென்மராட்சியில் |
| தொகை—236 | ஆட்கள். | |

இவர்கள் மாதந்தோறும் ஐந்துகூடை ஐமற்கரி சுட்டு கம்பனியின் கம்மாலைகளுக்குக் கொடுப்பர். ஆகவே 1180 பறை கரி மாதந்தோறும் கிடைக்கவேண்டியது.

கிழவர்கள் கொடுக்கவேண்டிய "தகரைவிரை" கொட்டையைத் தவிர சில கோவிற்பற்றுக்களும் ஓர் சொல்லப்பட்டதோகை ஒப்படைக்கவேண்டியது. இதைப் பள்ளிக்கூடப்பையர்கள் பொறுக்கிச்சேர்க்கவும் உபாத்திமார் கவனிக்கவும்வேண்

டியது. 'இதன் இடாப்பும் உதவித்திசாவையிடமிருக்கிறது" (1679-ம் ஆண்டு அறிக்கை).

பனைமரம்.— இவற்றோடு சனங்களிடம் பனைமரமும் தாம்நியமித்த ஒரு குறைந்தவிலைக்குக் கட்டாயமாய்வாங்கிக் கொழும்பு, நாகபட்டணம் முதலியவிடங்களுக்கேற்றி வியாபாரம் பண்ணினர். யாழ்ப்பாணத்தார் (விசேஷமாய்த் தென்மராட்சியிலும் பச்சிலைப்பளியிலுமுள்ளார்) கம்பனியார் கேட்டநேரமெல்லாம் பனைதறித்து மரமாக்கிக் கொண்டுபோய்த் துறைமுகத்தில் அல்லது ஆற்றுஅருகாமையிற் கொடுக்கக் கடமைபூண்டிருந்தனர். மூன்றுவருஷத்துக் கொருமுறையே நிலத்தோம்பு திருத்தஞ் செய்யப்பட்டமையால் பலமுறையும் தறித்தபனைக்கு மூன்றுவருஷமும் வரிக்காசும் அறவிடப்பட்டேவிடும். கொடுத்த மரங்களுக்குரிய அற்பவிலையையும் பலகாலும் இறைசுவதோர்மார் அப்பிக்கொள்வர். இவ்வாறு சனங்களை நட்டப்படுத்தி இங்கிருந்து எவ்வளவுபனை தறித்து ஏற்றப்பட்டதெனில் 1677ம்- ஆண்டுக் கணக்குப்படி 50,687 கைமரம் முதலியவைகளும் 26,040 சலாகைகளும் ஏற்றப்பட்டன. அரசினருக்குமட்டுமல்ல, உத்தியோகஸ்தர்களுக்கும் சனங்கள் குறித்தவிலைக்கு மரம் கொண்டுபோய்க் கொடுக்க நெருக்கப்பட்டனர். இக்கொடுமையை ஒல்லாந்தர் பிற்காலம் ஒருவாறு குறைத்துவிட்டு யாழ்ப்பாணத்தில் அரசினருக்குத் தேவையான மரங்களைமட்டும் அரசினர்குறித்த குறைந்தவிலைக்குக் கொடுத்தாற் போதுமென ஏற்பாடுசெய்தனர்.

கல்லு, சுண்ணம், கட்டடவேலை.— யாழ்ப்பாணத்தின் கரைகளிலுள்ள முருகைக்கற்களும், அவற்றால் சுட்ட சுண்ணம்பும் ஆமோகமாய்ப் பிறவூர்களுக்குஅனுப்பி விற்கப்பட்டன. இங்கு எழுப்பப்பட்ட கட்டிடங்களுக்கும் பெரும்பான்மை இக்கற்களே உபயோகிக்கப்பட்டன. பலகட்டிடங்கள் செங்கல்லாலும் கட்டப்பட்டன. இருபாலையிலே செங்கல்லும் ஓடும் செய்யும் தொழிற்சாலையொன்றிருந்தது. அந்நாளின் பழக்கத்தாலேயே இந்நாள்வரையினும் இருபாலையில் ஓடுகள் தளவரிசைக்கற்கள் செய்யப்படுகின்றன. கல்கிளப்பிக்கொடுப்பதும் சுண்ணம்பும் செங்கல்லும் சுடுவதும் ஒல்லாந்தருக்குச் செலவின்றிச் சனங்களாலேயேசெய்யப்பட்டது. பருத்தித்துறையிலும் காங்கேசன்துறையிலும் சுண்ணம்புச்சூளைகள் அதிகமாய் வைக்கப்பட்டன. கட்டிடங்களுக்கு "மேசன்" தச்சன், கொல்லனென்போருக்குக் கொடுக்கும் சொற்ப சம்பளமொழிப வேறுசெலவு பிடிக்கவில்லை. இச்செலவும் ஊழியஞ்செய்யத் தவறினோ

ர் இறுத்த "சிக்கோ"காசு எனும் குற்றங்களிலிருந்தே கொடுக்கப்பட்டது. இவ்வாறே கோட்டை கொத்தளங்களும், கோவில், உத்தியோகஸ்தர்மனைகளும் கட்டுவிக்கப்பட்டன.

ஊழியவிபரம்.—ஊழியஞ்செய்வோர் புதன் வியாழக்கிழமைகளில் மாற்றிவிடப்பட்டனர். ஒவ்வொரு ஊழியனும் மூன்று மாதத்துக்கொருதடவை வேலைகொள்ளப்பட்டான். அவ்வக் கெடுவின் ஊழியம்முடிந்ததற்கு அடையாளமாய் கம்பனி முத்திரைபதித்த ஒவ்வொரு ஓலைச்சிட்டுக் கொடுக்கப்படும். ஊழியத்துக்குப் போகாதோர் நாமங்கள் கணக்கப்பிள்ளையாலும் மயோராலாலும் வரைந்து வைக்கப்பட்டு, அன்னோர் வாராத ஒவ்வோர் நாளுக்கும் மூன்றுநாள் ஊழியம் அல்லது ஒவ்வொரு பணம் குற்றமிறுக்கும்படி நெருக்கப்படுவர். நாட்சென்றுவிட்டால் குற்றமே இறுக்கவேண்டும். இக்குற்றக்காசுகளால் வெகுதொகை வந்தபடியால் அரசினர் மேலும் குற்றவீதத்தை அதிகரிக்கத்தேடினர். ஊழியர்கள் கட்டிடங்களில் மட்டுமல்ல, தென்னம்பிள்ளைநடுதல், தண்ணீர்வார்த்தல், கல்உடைத்தல் முதலிய பல வேலைகளிலும் விடப்பட்டனர். இவர்களைப் பதினறு தொடக்கம் முப்பதுபேர் வரையில் ஒவ்வோர் கூட்டமாகப்பிரித்து, பதினெட்டுப் "பண்டாரப்பிள்ளை" களின் கீழே விட்டிருந்தது; பண்டாரப்பிள்ளைகளே கங்காணிமாராய்நின்று வேலை நடப்பிப்பர். தொடக்கத்தில் ஒல்லாந்தர் வேளாளர் ஆகியோருடைய அடிமைகளையும் ஊழியத்துக்கழைத்தனர். இது தமிழரசர்கால ஒழுங்குக்குமாறு. இவ்வடிமைகள் கம்பனியின் யானைகளுக்குத் தீன்கொண்டுவருதல், மரந்தறித்தல், பாதிரிமாரையும் உத்தியோகஸ்தரையும் அவர்கள் சாமான்களையும் காவுதல், பற்பல சுமைகளைச் சுமத்தல் ஆதியவேலைகொடுத்து வெகு கொடுமையாய் நடத்தப்பட்டனர். பிற்காலம் இது நிறுத்தப்பட்டது.

1679-ம் ஆண்டில் ஊழியங் கொள்ளப்பட்டோர் தொகை பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| வலிகாமத்தில் | 346 | பேர். |
| தென்மராட்சியில் | 139 | " |
| வடமராட்சியில் | 99 | " |
| தீவுகளில் | 82 | " |
| பச்சிலைப்பளியில் | 59 | " |
| ஆக— | 722 | பேர். |

பச்சிலைப்பளியிலுள்ள ஊழியர் பெரும்பாலும் ஆனையிறவு ப்பக்கத்திலுள்ள சிறுக்கோட்டைகளிலும் மரந்தறித்தலாதிய வற்றிலுமே வேலைகொள்ளப்பட்டனர்.

வரிகள்: பத்திலொன்று.—யாழ்ப்பாணநாட்டார் "சாம்பரை த்தின்று வெண்ணெயைப்பூசும்" குணமுடையோராயிருந்ததினாற்போலும் அக்காலத்திலும் அரசினரால் அதிக செல்வமுள்ளோராய் எண்ணப்பட்டிருந்தனர். இன்றைக்கும் இவ்வாறே எண்ணப்படுகின்றனர். இதனால் யாழ்ப்பாணத்துச் சனங்கள் மேல் எவ்வளவுவரிகளைச் சுமத்திலும் அநீதியாகாதென தங்கள் அறிக்கைப்பத்திரங்களில் கொம்மாண்டோர்மார் எல்லாம் கூறியிருக்கின்றனர். இவ்வரிகளுள் தானியவரி விசேஷித்தது. இது விளைந்த தானியத்துக்கெல்லாம் பத்திலொன்று காசாய்க் கொடுக்கப்பட்டது. 1697-ம் ஆண்டில் இப்பத்திலொன்று 8,632 இறைசாலுக்கு விலைப்பட்டது.

தலைவரி, நிலவரி.—பள்ளிக்கூடம்விட்ட சகல ஆண்பிள்ளைகளும் தலைவரியிறுக்கக் கடமைபூண்டிருந்தார்கள். வயது சென்றோரும் அங்கவீனருமே கழிக்கப்பட்டனர். இவ்வரி அறவுபண்ணுவதற்கு ஆட்தோம்பு என ஒரு இடாப்பும், நிலவரிக்கு நிலத்தோம்பு என ஒரு இடாப்பும் மூன்றுவருஷத்துக்கொருமுறை எழுதப்பட்டது. தென்மராட்சி, வடமராட்சி, பச்சிலைப்பளி எனும் மூன்று ஊரவர்களும் சிலகாலம் தலைவரியையும் நிலவரியையும் கொடாது மறுத்து நின்று, இதற்காக ஒல்லாந்தர் தம்மை நெருக்கியபோது பலர் வன்னிக்கோடி கண்டியரசனின் உதவியையடைந்துகொள்ளத் தேடினர். ஆயின் ஒல்லாந்தர் உபாயமாய் அவர்களை அமர்த்தித் தாம் விரும்பிய வரிகளை வைத்து ஆண்டுவந்தனர். நிலவரியோடு நிலத்திலுள்ள கனிதரும்விருட்சங்களுக்கும் வரியிருந்தது. பனைமரங்கள்தானும் கணக்கிட்டு வரி குறிக்கப்பட்டன. 1697-ம் ஆண்டு மன்னாரைவிட யாழ்ப்பாணத்தில்மட்டும் நிலவரி ஆதியவற்றால் 16348 இறைசாலும், தலைவரியால் 5,998 இறைசாலும் அரசினர்க்குக் கிடைத்தது.

தென்னைவரி.—தென்னைமரங்களுக்குப் புறம்பான வரி விதிக்கப்பட்டது. இவற்றின் ஓலை யானைகளுக்காக வெட்டப்பட்ட தோடு மரங்களுக்கும் வரி வைக்கப்பட்டது. அப்பால் வருஷத்தில் இன்னின்ன பிரிவார் இத்தனை இத்தனை "பீப்பா" எண்ணெய் கம்பனிக்குக் கொடுக்கவேண்டுமென ஏற்பாடுமிருந்தது. தேங்காயை உத்தரவின்றி யாழ்ப்பாணத்துக்கப்பால் ஏற்

றமதிசெய்வாரும் தண்டிக்கப்பட்டனர். பிற்காலம் தென்னை வரி நீக்கப்பட்டு ஓலை முதலியவை கொடுக்கும் கடமையே ஈட்டப்பட்டது.

புகையிலைவரி.—தொடக்கத்தில் ஒல்லாந்தர் சனங்களைத் திருத்திபண்ணும்பொருட்டு புகையிலை வரியை நீக்கிவிட்டிருந்தும், பின் சற்றுச்சற்றாய் அதனை உட்படுத்தி விட்டனர். இவ்வரியினால் அரசினருக்கு வருஷாவருஷம் 6,000 அல்லது 7.000 இறைசால் சேர்ந்தது. நாட்டுப்புகையிலைக்கு அவ்வத் தோட்டத்துக்கு இவ்வளவென ஓர் குறித்த வரி வைக்கப்பட்டது. பிறநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் புகையிலைக்கு நூற்றுக்கு 30 வீத வரியிட்டு அறவாக்கினர்.

சீலைவரி.—முன்கூறியபடி இங்கு நெய்யப்படும் சீலைக்கெல்லாம் வரி வைக்கப்பட்டது. இவ்வரி முன் நூற்றுக்கு 25 வீதமென விருந்து பின் நூற்றுக்கு 20ஆகக் குறைக்கப்பட்டது. இறக்குமதிசெய்யும் சீலைக்கு நூற்றுக்கு 20 வீதவரி. ஒல்லாந்தர் தம்கணக்கிலே சீலைநெய்வித்துப் பெரும்பொருளீட்டினர். சீலைகளுக்கெல்லாம் முத்திரை குத்தப்பட்டது. சீலைக்குமுத்திரை குத்தினவிடமே முத்திரைச்சந்தை எனப்பட்டது என்ப. 1697-ம் ஆண்டில் முத்திரை குத்தியும் இறக்குமதியான சீலைக்கு வரிவாங்கியும் பெற்ற வருமானம் 4,733 இறைசால். உள்நாட்டுச் சீலைவரியைச் சரியாய்ச் சேர்க்கும்பொருட்டு தம்கணக்கில் நெசவுசெய்யும் பறையரையெல்லாம் நல்லூர் சுன்னாகம் எனும் இருவிடங்களிலும் வசிக்கவேண்டுமெனக் கட்டளைபிறப்பிக்கப்பட்டது. நெசவுத்தொழிலாளிகளல்லாத கீழ்தரப்பறையரே அவ்வக் கோயிற்பற்றுக்களிலுள்ள கிறீஸ்தகோவில்களுக்குச் சேவினை செய்யவும் வேறு அடிமைவேலைகள் செய்யவும் விடப்பட்டனர்.

ஆபரணவரி.— "அப்பால் உயர்ந்தவஸ்திரங்கள் ஆபரணங்களுக்கு வரிவிதித்தார்கள். புதிதாகப் பொன்னகை அணிபவர்கள் அரசுக்கு ஒருபகுதிகொடுத்து அணியவேண்டுமெனச் சட்டஞ்செய்தார்கள். அதனால் அனேகர் பொன்னகையைவிடுத்து வெள்ளிநகைகளை அணிவோராயினர். பலர் காதுகளைக்குத்தித் துவாரஞ்செய்துவிட்டுத் பூஷணமின்றித் திரிவாராயினர். பெண்களிற் பெரும்பாலார் கீழ்க்காதன்றி மேற்காதிலே கொப்பு முருகு கன்னப்பூத்துவாரங்களைக் குத்தாது விடுத்தார்கள். மூக்குத்தி நத்து முதலிய துவாரங்களையும் குத்தாதுவிட்டார்கள். சனங்கள் வரிக்கஞ்சி விலையுயர்ந்த வஸ்திரங்க

த்தரியர்து விடுத்தார்கள். அதனால் யாழ்ப்பாணத்தில் செ
ல்காலம் நல்ல வஸ்திராபரணங்கள் அறியாப்பொருட்களாயி
ன. நாகரிகமும் குடிபோவதாயிற்று. வரியொருபக்கம் வருத்
துவதாயிற்று. கிறீஸ்தவரல்லாதார் தலைச்சீராத் தரித்தலாகா
து. அதனால் [அகத்தே சைவராயிருந்த] சைவசமயிகளும் சி
லுவைவடிவத் தலைச்சீராவே தரிக்கவேண்டியவர்களாயினர். வ
யல்களிலே விளைந்தநெல்லைக் களத்திற்குவித்து அரசினர் ப
குதிகொள்ள வரும்வரைக்கும் அக்காலத்துக்குடிகள் அக்குவி
யல்மேல் சிலுவைக்குறியிட்டு வைக்கவேண்டியவராயினர்.

கல்யாணவரி.— "மேளவாத்தியத்தோடு நடக்கும் கல்யா
ணச்சடங்கு முதலியவைகளுக்கும் பல்லக்குத் தண்டிகையில்
மாக்கோலம் போவதற்கும் வரிவைத்தார்கள். சனங்கள் கல்
யாணச்சடங்கு சாச்சடங்குகளுக்கு வேண்டுமானால் அரசினர்
க்குப் பணங்கொடுத்து அனுமதிபெற்றே மேளவாத்தியம்வை
க்கவேண்டுமென்று ஒல்லாந்தர் சட்டஞ்செய்தார்கள். இவ்வ
ரிசைகளைப் பண்டுதொட் டனுபவித்துவந்த வேளாளர் முதலி
யசாதியார் அச்சட்டத்தைக் கண்டவுடன் மனம்புண்பட்டு ஒ
ல்லாந்தவரசுக்கு மாறாகவெழும்பவும் சூழ்ச்சிசெய்திருந்தார்க
ள். அதற்குத் தங்களுக்குத் துணைசெய்யும்படி கண்டியரச
னிடம் இரகசியமாகத் தூதனுப்பினார்கள். அதனைக்கேள்வி
யுற்ற ஒல்லாந்த தேசாதிபதி அச்சட்டத்தை அழித்துவிட்டு
எந்தச்சாதியாரும் தத்தமக்குரிய பண்டைவரிசையோடு வாழ
லாமென அனுமதிகொடுத்தான்.

"பண்டைக்காலத்தில் பிராமணர் விவாகத்துக்கு மேளவா
த்திய வுரிமையுடையவர். வேளாளர் செட்டிகள் விவாகத்துக்
கு மேளவாத்தியமும், சாவுக்குப் பறைமேளமும், இருசடங்கு
க்கும் நிலபாவாடையும் சங்குதாரை குடமுழவும் மேற்கட்
டியும் உரிமையாகவுடையர். கோவியர் சாவுக்குமாத்திரம் ப
றைமேள வுரிமையுடையர். மறவர், அகம்படியார், இடைய
ர், சிவியார் விவாகத்துக்கு மேளவாத்தியமும் சாவுக்குப் ப
றைமேளமும் உரிமையாகவுடையர். ஆண்டிகள் சங்குவாத்தி
யமுடையவர். முக்கியர், கரையார் ஒற்றைச்சங்கவாத்திய வு
ரிமையுடையர். கம்மாளர் சேகண்டியும் குடமுழவுமுடையர்.
குயவர் குடமுழவுடையர். அம்பட்டர், வண்ணார் தாரையுடை
யர். மற்றச்சாதிகளுக்கு ஒருவகை வாத்தியவுரிமையுமில்லை.

"முன்னேகூறப்பட்ட கல்யாணவரிக்கஞ்சி வேதியர், வே
ளாளர், செட்டியர் முதலியவர்களுள்ளும் வறியராயிருந்தவர்க

ளும் மற்றைச்சாதிகளும் கல்யாணச்சடங்குகளை யாதொரு மங்கல வாத்தியமுமின்றி இரகசியமாகச் செய்யத் தலைப்பட்டார்கள். பிள்ளையாரைப் பிடித்துவைத்துத் தேங்காயுடைத்துக் கர்ப்பூர தீபங்காட்டித் தமக்கு ஐக்கியமான பந்துக்களைமாத்திரம் அழைத்து அவர்முன்பாகக் கூறைகொடுத்துத் தாலிகட்டி விவாகத்தை நடத்திக்கொள்வார்கள். தாலிகட்டுமுரிமை எல்லாச்சாதிக்கு முண்டேயாயினும் பூஷணவரிக்கொடுமையு மொன்றிருந்தமையால் அதற்கஞ்சி ஏழைச்சனங்கள் அஃதில்லாமலும் கூறையோடுமாத்திரம் விவாகத்தை முடித்துக்கொள்வோராயினர். பள்ளர், பறையர், துரும்பர்கள்மாத்திரம் விடிய ஐந்துநாழிகை யுண்டென்னுமளவில் விவாகச்சடங்கு செய்துகொள்ளல் வேண்டுமென்னும் கட்டுப்பாடு பண்டைக்காலந்தொட் டிருந்தது. அவ்வழக்கம் இன்றும் அவர்களுள்ளே காரணந்தெரியாது பலவிடங்களில் நடந்துவருகின்றது" [யா. ச.]

**அதிகாரிவரி, ஒப்பீசிக்காசு.**—சிற்சில சாதியார்மட்டும் இறக்கவேண்டிய சிலவரிகளுமிருந்தன. இவற்றுள் விசேஷித்தது அதிகாரிவரி. மற்றது ஊழியம் விதிக்கப்படாத சிலசாதிகள் இறுக்கவேண்டிய "ஒப்பீசி" எனும் கடமைக்காசு. அதிகாரிவரி தமிழரசர்காலத்திலும் பறங்கியர்நாட்களிலுமிருந்த நாட்டு அதிகாரிகளுக்கு வேதனம் கொடுக்கும்பொருட்டுச் சேர்க்கப்பட்டது. ஒல்லாந்தர்காலத்தில் யாழ்ப்பாணத்தின் நான்குபிரிவுகளிலும் தீவுப்பற்றுகளிலுமிருந்த அதிகாரிகள் நீக்கப்பட்டு பூநகரி, மாதோட்டம், மன்னார் எனுமிடங்களில் மாத்திரம் வைக்கப்படுவோராயினர். அதிகாரிவரியிறுத்தோர் வேளாளர், சாண்டார், தனக்காரர் எனும் மூன்றுசாதியாருமே. இச்சாண்டார் 107-ம் பக்கத்திற்குறித்த 2-வது சாதியாரேயாவர். 39-வது இலக்கச் சாண்டாரை [112-ம் பக்] ஒல்லாந்த நூல் "வெலெபேட்றெ" என அடைகொடுத்தழைத்தது. வேளூர் ஒல்லாந்த அறிக்கைப்பத்திரத்தில் நாம் காண்கின்றபடி இவ்வடை "விலைபறி" என்றிருக்கவேண்டும். விலைபறிச்சாண்டார், விலைபறிக்கோவியர் ஆதியசொற்கள் இன்றைக்கும் தென்மராட்சியில் வழங்குகின்றன. இவ்வதிகாரிவரியைச்சுட்டிச் சுவாடக்குறான் எனும் கொம்மாண்டோர் எழுதிய பின்வருங்குறிப்பு சரித்திரவினோதர்களுக்குப் பிரீதிதரக்கூடியது. அவன்எழுதுவது:— "இவ்வரி அன்றுதொட்டு இச்சாதிகள் மூன்றுக்குமே உரியதாயிருந்தது. இன்றைக்கும் இவர்களே இதை இறுத்துவருகிறார்கள். இதைப்பற்றி எவரும் முறைப்படுவாரில்லை. முறைப்படுத்தற்குமாறாய் இம்மூன்று சாதியாளரும் தாங்களே ஆகப்பழைய சாதிகளென்றும் இது பிறசாதிகளி

வ்மேற் தங்களுக்கு அளிக்கப்பட்ட ஓர் மகிமைச் சுதந்திரமெ ன்றும், தாங்கள்மட்டுமே இராசாவின் அதிகாரிகளைத் தாபரிப் பதற்குதவி செய்யப் பாத்திரரென்றும் எண்ணிக்கொள்ளுகி றார்கள். இம் மூன்றுசாதியாருக்கும் தாமும் ஒப்பானவர்களெ ன்று எண்ணிக்கொள்ளுகின்ற மடப்பளி, அகம்படி, பரதேசி ஆதிய சாதியாரும் இவ்வாறே எண்ணுகிறார்கள். ஆதலால், எமது கம்பனியானது இந்தச்சங்கை விஷயத்தை ஆதாயப்படு த்திக்கொண்டு: இயல்புள்ள பிறசாதிகளுக்கு இவ்வரியை விதி க்கலாமென்றெண்ணுகிறேன். இப்பிறசாதிகள் தமக்குள்ளிருக் கும் சாதிப்பேரரியின் நிமித்தம் சந்தோஷமாய் இவ்வரியை இறுப்பார்களென்பது நிச்சயம்." இதுவரையும் மேற்கோள்.

ஆயவரி.—தோணிகள் உத்தரவின்றிப் போக்கு வரவுபண் ணுதபடிக்குத் துறைமுகங்களிலும் உள்நாட்டார் வன்னிப்பக் கங்களுக்கு மறைவாய்ச் செல்லாமல் ஆனையிறவிலும் காவற்சே வகர்கள்வைக்கப்பட்டனர். ஊர்காவற்றுறைக் கடற்கோட்டையி லும் பருத்தித்துறையிலும் கடற்போக்குவரவு செய்வோருக்கு ச் சீட்டுக்கொடுக்கப்பட்டது. கச்சாய், கொழும்புத்துறைகளிலு ம் இப்படியே. பூநகரியிலும் ஓர் ஆயமிருந்தது. ஆனையிறவில் "பில்", "பெல்சுற்றர்" எனும் இரண்டு துறைகளுக்கிடையில் இருமைல் தூரத்துக்கு ஆங்காங்கு மண்குவித்துச் சனங்கள் "கையொப்பம்" எனும் உத்தரவுச்சீட்டுப் பெற்றன்றி போக்கு வரவு செய்யாதபடி தடுக்கப்பட்டனர். மண்கும்பங்கள் போதி ய அரணல்ல எனக்கண்டு பின் இருமைல்தூரத்துக்கும் அடர்த் தியாய்ப் பனைகளை நட்டு முள்வேலியும் அடைத்தார்கள். இத்து றைகளிலெல்லாம் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் பொருட்களு க்குத் தீர்வை விதித்து அறவாக்கப்பட்டது. கடற்துறைகளில் அறவிட்ட தீர்வை "அல்பந்தகோ" எனப்பட்டது. இப்பறங்கி ச்சொல்லே அலுப்பாந்தி என இன்றைக்கும் ஆயத்துறைக்கு வழங்கி வருகின்றது. 1697-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் பல துறைகளிலும் வந்த வருமானம் 3150 இறைசால். இவற்றைத் தவிர கொழும்புத்துறையிலும் பச்சிலைப்பளிக்குமேலுள்ள சுங் கச்சாவடிகளிலும் கிடைத்த தொகை 506 இறைசால்.

மீன்வரி.—இவ்வரியாலும் பெரும் லாபம்வந்தது. இது இங்கிலீஷ் அரசர்காலத்திலுமிருந்து 1840-ம்ஆண்டே நீக்கப்ப ட்டது. 1697-ம் ஆண்டு யாழ்ப்பாணத்து மீன்குத்தகை வரு மானக்கணக்கு பின்வருமாறு:—

| | | இறைசால். |
|---|---|---|
| கோட்டையின் முன்னுள்ள மீன்கடையின் | | |
| (பெரியகடைக்) குத்தகை | ... | 2066 |
| நாவாந்துறைக்குத்தகை | ... | 446 |
| காக்கைதீவுக்குத்தகை | ... | 126 |
| அராலிக்குத்தகை | ... | 166 |
| கோவிலாக்கண்டிக்குத்தகை | ... | 390 |
| ஒன்பது உப்புக்குளங்களிலும் | ... | 256 |
| வன்னிக்கரைமீன்குத்தகை | ... | 2600 |

**சந்தைவரி, தவறணைவரி, தரகு.**—சந்தைகளின் குத்தகையும் கள்ளுத்தவறணைகளின் குத்தகையும் சாராயக் குத்தகையும் இவ்வாறே விற்கப்பட்டன. தரகுக்குப் புறம்பானவரி வைக்கப்பட்டது. மேற்சொல்லிய ஆண்டில்,

| | | இறைசால் |
|---|---|---|
| ஊர்காவற்றுறைக் கள்ளுக்குத்தகை | ... | 180 |
| பட்டணக்கள்ளுக்குத்தகை | ... | 50 |
| பட்டணத்தின் கள்ளுச்சாராயத்தவறணைகள் | ... | 500 |
| ஐரோப்பிய குடிவகைவரி | ... | 26 |
| பெரியகடையிலும் பிறசிறுச்சந்தைகளிலும் | ... | 346 |
| தரகுவரி | ... | 3150 |

எனும் தொகைகள் சேர்ந்தன.

**அடிமைவியாபாரம்.**—அக்காலம் யாழ்ப்பாணத்து வியாபாரிகள் நெல், அரிசி முதலியவைகளில் வியாபாரஞ்செய்வதுபோல, அடிமைகளிலும் வியாபாரஞ் செய்து வருவார்கள். கோடிக்கரையில் நெல் ஒறுத்து அடிமைகளே மலிந்திருந்தனர். கொம்மாண்டோர் சுவாடக்குறூன் எழுதியிருக்கிறபடி அக்காலம் "ஒருபிடி அரிசிக்கு ஒரு அடிமை" வாங்கக்கூடியதா யிருந்ததாம். 1694-ம் ஆண்டு மார்கழிமாதந்தொட்டு 1696-ம் ஆண்டு கார்த்திகை வரையில் அதாவது, இரண்டுவருஷத்துள்மாத்திரம் 3589 அடிமைகள் யாழ்ப்பாணத்திற் கொண்டுவந்து விற்கப்பட்டனர் என்றால் இவ்வியாபாரத்தின் தன்மையை நாம் ஒருவாறு கண்டுகொள்ளக்கிடக்கிறதன்றோ. ஒல்லாந்தர் அடிமைகளுக்கு தலைக்குப் பதினொருபணம் வரிவாங்கித் தாங்களும் தம் செல்வத்தைப் பெருக்கினர். ஆயின் இவ்வடிமைகளெல்லாம் யாதுக்காக இங்கு விலைக்கு வாங்கப்பட்டனரென்றால் பெரும்

பாலும் பணமுள்ளோரெல்லாம் இராசகாரியத்துக்கு இவர்களையே தங்களுக்குப் பதிலாக அனுப்பிக்கொண்டிருந்தனர். ஏனெனில், அடிமைகளுக்கு ஊழியமில்லை. அன்றியும் இரகசியமாய் இவர்களை வன்னியர்களுக்கு விற்று ஊதியமடைந்தும் வந்தனர். வன்னியர்கள் அடிமைகளைக்கொண்டு நெல்வயல்களில் வேலைசெய்வித்தும் அவர்களைப் போர்வீரருக்கு உதவியாக அமைத்தும் வந்தனர். ஏராளமான அடிமைகள் கண்டிராச்சியத்துள்ளும் விலைப்பட்டுச் சென்றுவிடுவர். அடிமைகளை விற்கவிரும்புவோர் மிருகங்களைக்கொண்டுசெல்வதுபோலவே அவ்வெளிய பிறப்புக்களையும் கந்திற் பிணைத்துக்கொண்டுபோய்ச் சந்தையில் விற்பர். அடிமைகள் சுயாதீனமடைவது அக்காலம் வெகுகஷ்டமாயிருக்கும். கிறீஸ்துமார்க்கத்திலுட்படுவோருக்கே பறங்கியர்காலந்தொட்டுப் பலசௌகரியங்களிருந்தன. இதனால் அடிமைகள் கிறீஸ்துமார்க்கத்திற் சேரப்படாதென்றும் ஒல்லாந்தர் விதித்தனர். ஒல்லாந்தபாதிரிமார் கட்டளைச்சட்டத்துக்குப் பயந்து அடிமைகளுக்கு ஞானஸ்நானங் கொடாதொழிய ஆங்காங்கு கரந்துறைந்த கத்தோலிக்க குருமார்மட்டும் இடையிடையில் சில அடிமைகளைக் கிறீஸ்தவர்களாக்கினர்.

அடிமைகள் அருமையாய் இஷ்டம்போனதுமுண்டு. இதற்கு அரசாட்சியாரின் விசேஷ உத்தரவு வேண்டியதாயிருந்தது. வயதுசென்றவர்களும் பிள்ளையில்லாதவர்களுமே சிலவேளைகளில் இஷ்டம்போகவிடப்பட்டார்கள்.

ஒல்லாந்த கம்பனியாருடைய சிறைகளைப்பற்றி 1670-ம் ஆண்டின் அறிக்கைப்பத்திரத்தில் சிலவிபரங்கள் காணப்படுகின்றன. பறங்கியருடைய சிறையெல்லாம் ஒல்லாந்தருக்கேயாய்ப்போய்விட்டது. இடையில் ஊர்ச்சனங்களும் சில கவண்மேந்துச் சிறைகளைப் பிடித்துக்கொண்டார்கள். குறித்த ஆண்டில் கம்பனியாருடைய 348 அடிமைகள் வேர்க்குத்துவோராயிருந்தனர். சில அடிமைகள் பட்டணத்திலே வேலைசெய்தனர். இவர்களுள் கோட்டைவாசலார் எனப்பட்ட அடிமைகள் 44 பேர். (மேலே 116-ம் பக்கங்காண்க) இவருள் அரைவாசிப்பேர் வெடிமருந்துத் திரிகையில் வேலைசெய்ய அரைவாசிப்பேர் குதிரைகளுக்குப் புல்தேடிக்கொண்டிருந்தனர். பின்னும் வெடிமருந்துச்சாலையில் 8 சிவியாரும் 2 விலைபறிச்சாண்டாரும் வேலைசெய்தனர். வேறுவிலைபறிச்சாண்டார் கொம்மாண்டோரின் சாமான்களைச் சுமந்துகொண்டுபோவதற்கு நியமிக்கப்பட்டிருந்தனர். பெண்களுடையவும் சிறுபிள்ளைகளு

டையவும் கணக்கு இதிற் சேரவில்லை. கம்பனியின் அடிமைகள் தங்கள் சொந்த உழைப்பாலேயே சீவித்து கேட்டநேரமெல்லாம் கம்பனிக்கு செலவின்றி வேலைசெய்து கொடுக்கக் கடனாளிகளாயிருந்தார்கள்.

தமிழரசர்காலத்திலிருந்த கொடிய வழக்கங்களுளொன்றாகிய அடிமைவியாபாரம் இங்கிலீசர் காலவரையிலும் நடந்து வந்தது. 1824-ம் ஆண்டின் சனக்கணக்கின்படி யாழ்ப்பாணத்தில் கோவிய, நழவ பட்சிறைகள் 15341 பேரும், டிறங்கிச்சிறைகள் 18 பேரும், கம்பனிச்சிறைகள் 78 பேரும் இருந்தார்கள். அடிமைவியாபாரமும் அடிமைச்சட்டமும் 1844-ம் ஆண்டிலேயே முற்றாக நீக்கப்பட்டது.

**ஒல்லாந்தர் வியாபாரம்.**—அப்பால் ஒல்லாந்தர் தாமே பலவகைச் சரக்குகளை வருவித்துச் சனங்களுக்கு லாபத்துக்குவிற்றுப் பொருளீட்டினர். இச்சரக்குகளுட் பிரதானமானது மிளகு. வருஷந்தோறும் 40,000 இறாத்தல் முதல் 50,000 இறாத்தல் மிளகுவரையில் யாழ்ப்பாணத்திலே விலைப்பட்டது. செம்பு, துத்தநாகம், பித்தளை, சீனி, பாக்கு இவற்றிலும் வியாபாரம் நடத்தினர். பாக்குவியாபாரம் பறங்கிக்காரர் காலத்திலும் அரசினர் சொந்தமாயிருந்தது. கமச்செய்கைக்குரிய இரும்பு ஆயுதங்களையும் கோடிக்கரையினின்று தொகையாய் இறக்குமதிசெய்வித்து சனங்களுக்கு விற்கப்பிரயசித்தும் இவற்றின்விலை யதிகமெனக்கண்ட சனங்கள் வாங்காமல் விட்டமையினால், பின் சனங்கள் நேரே கோடிக்கரையிலிருந்து தாமாக இவ்வாயுதங்களை வாங்கிக்கொள்ள உத்தரவு செய்தனர். (சுவடிக்குறள் 13, 34)

**பேட்டிகள், பயணங்கள்.**—சற்றில் தமிழரசர் காலத்திலிருந்த ஒழுக்கத்தின்படியே ஒல்லாந்தரும் சனங்களின் பிரதானிகள் தம்மை வருஷத்திற் சில முறைவந்து காணிக்கைகள் வைத்து உபசரித்தும் தம் குறைமுறைகளை அறிவித்துப் போகும்படி செய்தனர். "மயோறல்" மார் எனும் அதிகாரிகள் கையிற் கோழிகளோடு போகவேண்டும். முதலிமார் இறைசுவதோர்மார் தத்தமக்குரிய வெகுமதிகளும் சாதித்தலைவர்கள் அவ்வச்சாதித்தொழிற் பிரயோசனங்களும் கொண்டுபோகவேண்டும். யாழ்ப்பாணக்கோட்டையிலே இப்பேட்டி வருஷம் இருமுறை நடந்தது. வன்னிநாட்டார் வருஷம் ஒருமுறைமாத்திரம் பேட்டிக்குவரவும், இருமுறை தங்கள் உபகாரப்பொ

ருளாகிய கோழி நெய் என்பவற்றைக் கோட்டைக்கு அனுப்பிவைக்கவும் உத்தரவிருந்தது. சிலவிடங்களில் ஒல்லாந்த உத்தியோகஸ்தர் சனங்களை வருஷத்தில் அநேக தடவை பேட்டிக்கழைத்து அவர்களிடம் உபகாரங்களைக் கவரத்தேடினர். இவ்வாறே மன்னாரிலிருந்த ஒண்டர்கூப்மன் எனும் உத்தியோகஸ்தன் தன்கீழுள்ள பட்டங்கட்டிகளை மாதமொருமுறை பேட்டிக்கழைப்பவனானான். ஆயின் இவ்வொழுக்கம் விரைவிலேயே மூத்தியோகஸ்தர்களால் தடுத்துவிடப்பட்டது.

ஒல்லாந்த உத்தியோகஸ்தரும் குருமாரும் பயணம்பண்ணும்வேளைகளில் அவ்வவ்வூரிலுள்ளாரே இவர்களுக்கு வேண்டிய உணவு ஆதியவற்றைக் கொடுக்கவேண்டியோராயிருந்தனர். இதுவும் தமிழரசர்காலத்து வழக்கங்களுளொன்று. பறங்கியர் நாட்களில் முக்கியமாய்ப் போர்ச்சேவகர் விஷயமாய் இவ்வழக்கம் நடைபெற்றது. ஓர் போர்ச்சேவகன் ஓர் ஊரை விட்டு வேறூருக்குப் போம்போது தன் உடைவாளன்றி வேறொன்றும் கொண்டுபோகான். அவன் எவ்வூரில் எவ்வீட்டிற் போய்த் தங்குவானோ அவ்வீட்டார் அவனுக்குரிய மரியாதைகள் செய்து வேண்டிய போசனபானாதிகளெல்லாம் வேளைக்கு வேளை கொடுத்துப்போடவேண்டியது. அங்ஙனம்செய்ய மறுத்தாருக்கு அரசசட்டத்தின்படி தண்டனை விதிக்கப்படும். ஒல்லாந்தர் காலத்தில் எவ்வகை உத்தியோகஸ்தருக்கும் இக்கடமை செய்யவேண்டுமென்றிருந்தமையாற் சனங்களுக்குப் பேரிடராயிற்று. தேசவிசாரணையோ, ஆத்துமவிசாரணையோ செய்யப்போகும் உத்தியோகஸ்தர்மட்டுமல்ல ஊர்சுற்றிப்பார்க்கச் செல்லும் ஒல்லாந்தர்களும் சனங்களை நெருக்கிடைபண்ணி உணவுப்பொருட்களைக் கவர்ந்துகொண்டிருந்தனர். இவ்வொழுங்கீனம் பலமுறை கண்டிக்கப்பட்டபோதிலும் ஆங்காங்கு நடந்துகொண்டேயிருந்தது. (றிக்லோவ் வன் ஜன்ஸ் 32)

**அரசரும் பிரசைகளும்.**—ஒல்லாந்தர் வர்த்தகஞ்செய்யும் ஓர் கம்பனியாராகவே இங்கு அரசுசெய்ய வெளிப்பட்டுவந்தனர் என்றோம். அதனால், அவர்கள் சனங்களிடத்தில் பிடுங்கிக்கொள்ளக்கூடியவற்றையெல்லாம் பிடுங்கிக்கொள்ளப் பார்த்தமையுமியல்பே. ஆயின் கொள்கைகளளவில் கிறீஸ்தவர்களாயும் கிறீஸ்த நாகரீகமுள்ள தேசத்தினின்றும் வந்தவர்களாயுமிருந்தமையால், அவர்கள் அரசு பலவிஷயங்களில் திருத்தமுள்ளதாகவும் பிரசைகளுக்கு பல சௌகரியங்களைச் செய்வதாகவுமே விளங்கிற்று. வரிமுதலியன இறுக்குமளவிற் சனங்களுக்கெய்திய நெருக்கிடையைமட்டும் நாம் பார்த்துக்கொண்டு,

அவ்வரியாதியவற்றைப்பெற்ருேர் இவர்களுக்குச்செய்த நன்மை களை மறந்து பேசுதல் ஒருபோதும் தருமமாகாது. ஒல்லாந் தர் சனங்களுள் முக்கியமாய்க் கைத்தொழில்களைப் பரப்பினர். தச்சுவேலை, கம்மாளவேலை, சாயவேலை, நெசவுவேலை, கட் டடவேலை, ஓடு, செங்கல் ஆதியன பண்ணும்வேலை இவை யெல்லாம் ஒல்லாந்தராலேயே யாழ்ப்பாணத்தில் அதிகவிரு த்தியாக்கப்பட்டன. பட்டணங்கள் பல சிறந்த கட்டடங்களா லும் நாடுகள் ருேட்டுகளாலும் அலங்கரித்துத் திருத்தப்ப ட்டன. பறங்கியரைப்போலவே ஒல்லாந்தரும் ஏழை எளிய வர்களுக்குப் பலதருமங்களைச் செய்துவந்தார்கள். பட்டணத் தில் "ஆர்மன் ஹவுஸ்" எனும் ஓர் ஏழைகள் சாலையும், "வீஸ் காமர்" எனும் ஓர் அநாதசாலையுமிருந்தன. இவைகளில் பல வறியவர்களும் அநாதபிள்ளைகளும் சேர்த்துத் தாபரிக்கப்பட் டார்கள். பறங்கியர்காலத்தில் நடந்த பல யுத்தங்களாலும் குழப்பங்களாலும் பாழாய்ப்போயிருந்ததாகிய நம் யாழ் ப்பாணநாடு ஒல்லாந்தர்காலத்தில் யுத்த பயமின்றி வாழ்ந்து செழித்தோங்கத் தொடங்கிற்று. அரசினர் தாம் தமக்குச் சொந்தமென வைத்திருந்த சிறு வியாபார உரிமைகளைக் கை விட்ட காலத்தில், யாழ்ப்பாணத்தார் வடகரையோடு சிறு வர் த்தகங்கள்செய்து அதிகலாபமடையலாயினர். பருத்தித்துறை யிலும் ஊர்காவற்றுறையிலும் முன்னிலும் மும்மடங்கான தோ ணிகள் நின்றன. வியாபாரிகள் கோடிக்கரைக்கு பனாட்டு கி ழங்கு, பாய், எண்ணெய், தேங்காய், கயிறு, பனைமரம் ஆதிய னகொண்டுபோய் விற்று வருவர். கம்பனிக்காக நெல் ஆதிய ன ஏற்றியும் ஊதியம் பெறுவர்.

**ஓர் ஆட்டுக்கடா.**—யாழ்ப்பாணம் இந்நாட்களிற்போலவே அந்நாட்களிலும் உயரத்தாற் பெரிய ஆட்டுக்கடாக்களுக்குப் பேர்போனதாயிருந்தது. கண்டியரசன் ஒல்லாந்தரிடம் ஓர் தி றமான ஆட்டுக்கடாகேட்டிருந்தமையால், கொழும்பு ஒல்லாந் த கவணர் 1697-ம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்திருந்தபோது இங்கு மிகப் பெரியதோர் அழகிய கடாவைக்கண்டு அத னைக் கண்டியரசனுக்கு அனுப்புவித்தான். பட்டணத்திலே அது வெள்ளைகட்டிப் பச்சைநிறம் பூசிய அடைப்பினுள் விட ப்பட்டிருந்தது. அதன் கொம்புகளிலும் கால்களிலும் வெள் ளிச் சலங்கைகள் தொங்கின. அதன் கயிறு பச்சை வெல்வெ ற்பட்டாலே மூடியிருந்தது. அதை முன்பு கவணருக்குக் கா ட்டும்பொருட்டு மூன்று பெரிய உத்தியோகஸ்தரும் ஓர் ஒல் லாந்த சேனையும் அதைப் புடைசூழ்ந்து நல்லூருக்குக் கொ ண்டுசெல்லுகையில் 13 பீரங்கிகள் தீரப்பட்டன. சேனுவீரர்

மும்முறை துவக்குவெடி தீர்ந்தார்கள். பறையர் வழிநீளம் மேளமடித்துச் சென்றனர். இவ்வாறே நல்லூரினின்று ஆட்டைக் கொழும்புத்துறைக்குக் கொண்டுபோய் அங்கு தோணியேற்றிப் புத்தளமூலமாய் கண்டி ராசஉத்தியோகஸ்தர்கள் சமுகத்துக்கு அனுப்பப்பட்டது. (ஜெரிட் டிகீர் 22-ம் பக்.)

பல்டேயஸ் பாதிரியாரும் யாழ்ப்பாணச்சாதிகளும்.—1658-ம்ஆண்டுமுதல் 1665-ம் ஆண்டு வரையில் யாழ்ப்பாணத்திலிருந்தவரான பல்டேயஸ் எனும் ஒல்லாந்த குரு யாழ்ப்பாணத்தாரைப்பற்றி எழுதிய சில குறிப்புக்களை இங்கு மொழிபெயர்த்துத் தருகின்றோம். அவற்றுட் சில நமக்குப் பிரீதியைத் தராவிடினும், நம் முற்கால நிலையை ஒருவாறுகாட்ட மிகவும் உதவும். வேளாளரைச்சுட்டி அவர் சொல்வது:—கிறீஸ்துமார்க்கம் இங்கு உண்டான நாட்டொட்டு வேளாளச்சாதியே தமிழருட்தலையிடத்தை வகித்துக்கொண்டிருக்கிறது. முற்காலம் பிராமணர் தம்மை முதற்சாதியென்பார்கள். வேளாளர் சீலையை இடுப்பிற்கட்டிக் கால்களுக்கூடாக இழுத்துச் சொருகிக்கொள்ளுவார்கள். [அதாவது தாறுபாய்ச்சிக்கட்டுதல்] காலிற் செருப்புத் தொடுப்பார்கள். மேற்சொல்லிய அரைச்சீலையிலேயே மடிவிட்டு அதிலே வெற்றிலைபாக்கும் தேவையானபோது பாவிப்பதற்காகக் கொஞ்சம் கடதாசியும் வைத்துக்கொள்வார்கள். இடையிலே ஓர் வெள்ளிகட்டிய உறைக்குள்ளே ஒரு கத்தி தொங்க விட்டுக்கொள்வார்கள். இதனோடு ஓர் வெள்ளிகட்டிய எழுத்தாணியும் வைத்திருப்பதுண்டு. காது இளமையிலேயே குற்றிக் கடுக்கன் இடப்படுகின்றமையால் துளைபெருத்துக் காதுவளர்ந்து தோளிற் தட்டிக்கொண்டிருக்கும். இவர்கள்தொழில் கமமே. அநேக மாடாடுகளை வைத்திருப்பார்கள். இவர்கள் வீடு வளவுகள் சிறப்பும் புனிதமுமாயிருக்கும். கொல்லைகளில் வெற்றிலை முதலியன நாட்டப்பட்டிருக்கும். வேளாளர் தங்கள் குடும்பத்திலேயே விவாகஞ்செய்வார்கள். வழக்குப்பேசுவதிலே இவர்கள் வெகுகெட்டிக்காரர். ஒருவர் ஒருவரிலே எப்போதும் எரிச்சலுள்ளவர்களாயிருப்பதால் ஓர் அற்பகாரியத்துக்கும் கோட்டுக்குப் போய்விடுவார்கள்.

யாழ்ப்பாணத்திலும் இந்தியாவின் பிறவிடங்களிலும் வசிக்கும் பிராமணர் பெரும்பாலும் அதிக சன்மார்க்கமுள்ளவர்களும் அடக்கம், புனிதம், சுறுசுறுப்பு, மரியாதை, மட்டசனம் முதலிய சுகுணங்களுள்ளவர்களுமாகக் காணப்படுகிறார்கள். இவர்கள் குடிவகை பாவிப்பதில்லை. நாள்தோறும் இருதரம் ஸ்நானஞ்செய்வார்கள். உயிருள்ளதொன்றையும் உண்

ணர்கள். ஆயினும் மற்ற இந்தியர்களைப்போலவே இவர்களும் சுகபோகங்களிலே அமிழ்ந்தியுள்ளவர்கள். இவர்கள் கிறீஸ்தவர்களாயிருந்தாலும் ஓர் வகை செபமாலையைக் கொண்டு திரிகிறார்கள். கிறீஸ்தவர்களாயிருக்கிறவர்கள் ஊண்விஷயத்திலே பிரியம்போல நடக்கலாமே என்று இவர்களுக்குச் சொன்னால், தாங்கள் சிறுப்பம்தொடங்கி உண்டறியாத போசனத்தை கிறிஸ்தவர்களாய் விட்டமையினால் உண்ண அவசியமில்லையே என்பார்கள். இவர்கள் தங்கள் குலத்திற் கொள்ளாமல் விவாகஞ்செய்யார்கள். பெரும்பாலும் தங்கள் சகோதரர் சகோதரிகளின் பிள்ளைகளுக்கே விவாகஞ்செய்வார்கள்.

சிவியார் முற்காலம் யாழ்ப்பாண அரசரின் அரண்மனை ஊழியர்களாயிருந்தவர்கள். ஆனால், இப்போது, ஒல்லாந்தருக்கு தண்ணீர் விறகு ஆதியன கொண்டுவருதல், பல்லக்குச் சுமத்தல் ஆதியபலதொண்டுகளும் செய்துவருகிறார்கள். ஒரு பருத்த ஒல்லாந்தனைக்காவுதற்கு 10 அல்லது 12 சிவியார் போவதுண்டு. தாங்கள் அரண்மனை ஊழியர்களின் சந்ததியானதால் ஒல்லாந்த உத்தியோகஸ்தரையேயன்றி வேறொருவரையும் காவமாட்டோமென்று இவர்கள் கர்வம் பேசுகின்றமையால் நடபடியான ஆட்கள் ஊரெங்கும் பிடிக்கக்கூடிய கூலியாட்களைக்கொண்டே தங்கள் பல்லக்குகளைச் சுமப்பிப்பார்கள்.

பரவர் யாழ்ப்பாணத்திற் சிறுதொகையினரேயுண்டு. இவர்கள முத்துக்குளிப்பு முதலிய கடற்தொழில்கள் செய்வார்கள். பொதுவாக பறங்கிப்பாஷையே பேசுகிறார்கள்.

செட்டிகள் சீலை நெய்விப்பதிலும் வியாபாரத்திலுமே கையிட்டிருக்கிறார்கள். செட்டி தன்மகனைச் செட்டித்தொழிலுக்கே பயிற்றுவான்.

கரையார் மீன்பிடித்துச்சீவியம் பண்ணுகிறார்கள். இவர்கள் கையாளுகிறவலைகள் பிரமாண்டமானவை. இவர்கள் யாழ்ப்பாணக்கரையிலும் உப்பாற்றுக்கரைகளிலும் வசிக்கிறார்கள். முக்குவரும் மீன்பிடிகாரரே.

நழவர் பெரும்பாலும் வேளாளரின் அடிமைகளாம். இவர்கள் பிறசாதியாரெல்லாரிலும் அதிக கறுத்தமேனியுள்ளவர்கள். வெகுதூரத்தில் இவர்களுடைய சிணியை மணக்கலாம்.

பறையர் மலஞ் சுமந்துகொண்டுபோதல் முதலிய நிசித மான தொழில்களைச் செய்கிறவர்கள். இவர்கள் ஆகக்கீழாக மதிக்கப்படுகிறார்கள்.

மேல்சாதிகள் கீழ்சாதிகளை வெகுமேட்டிமையோடு அடக்கி நடத்திவருகிறார்கள். இப்படியே ஆண்களெல்லாம் பெண்களைக் கீழாகமதித்து நடத்துவதினால் பெண்கள் அருமையாகவே ஆண்களோடு கூட ஒருபந்தியிலிருந்து சாப்பிட விடப்படுவார்கள். பொதுவாய்ச் சொல்லுகில் யாழ்ப்பாணப்பட்டணத்தின் குடிசனங்கள் விவேகிகளும் நல்ல ஞாபகசத்தியுள்ளவர்களும் உண்ணல் குடித்தலிலே மட்டுத்திட்டமுள்ளவர்களும் (நழவரையும் பறையரையும் நீக்கிப்பார்த்தால்) உடைநடைகளில் மிகவும் சுத்தமானவர்களும் சண்டைசள்ளுகளில்லாதவர்களுமென்று சொல்லலாம். ஆயின், தங்கள் நாக்கையோ சரியாய் அடக்கியாளுவோரல்ல. அவர்களுடைய பிரதான துர்ப்பழக்கம் காமாதுரமும் குருட்டுப்பத்தியுமாம்.

யாழ்ப்பாணத்தாருடைய சுதேச தாணிமார் மிக நெடும் பாஷியங்களைச் செய்வதிலே சமத்தர். அவர்களுடைய வைத்தியர்களுள் அநேகர் வெறுங்கற்றுக்குட்டிகளல்ல. அங்காதிபாதம்முதலிய சாஸ்திரங்களை யறியாதிருந்தும் மூலிகளைக்கொண்டு மருந்து செய்கிறார்கள். நாவிதர் எப்போதும் தங்கள் பருக்கனான கத்தியோடு ஓர் கண்ணாடியுங் கொண்டுதிரிவார்கள். இவர்கள் மயிரைச் சவரம்பண்ணுவதோடு கால் கை நகங்களையும் களைந்து காதையும் சுத்திசெய்துவிடுவார்கள். நெசவுகாரர் இங்கு ஏராளமாயுண்டு. சாயக்காரர் இங்கு தீட்டுஞ்சாயம் ஒருக்காலும் அழியாது. ஆயினும் கோடிக்கரையின், முக்கியமாய் மசிலிப்பட்டணத்தின் சாயம் இவர்களுடையதிலும் விசேஷித்தது. தந்தம், கருங்காலி முதலியவைகளிலும் பொன்வெள்ளிகளிலும் வேலைசெய்வோர் ஒல்லாந்தருடைய வீடுகளில் வந்திருந்து வேலைசெய்துகொடுப்பார்கள். இவர்களுக்கு ஆயுதங்கள் மிகச்சொற்பம். ஆயினும் திறமான வேலைசெய்வார்கள். (Baldaeus' Description of Ceylon p 812-818)

சைவசமயநிலை.—பறங்கியர் நாட்களில் யாழ்ப்பாணநாடெல்லாம் பெயரளவில் கிறீஸ்தநாடாய் விட்டதென்றும் சைவ ஆலயங்களெல்லாம் தகர்த்துவிடப் பட்டனவென்றும் முன்னர்க் கூறியுள்ளோம். ஒல்லாந்தர் வந்து அரசு கைக்கொண்டபின் புறத்தே கிறீஸ்தவர்களாகப் பாசாங்கு பண்ணிக்கொண்டு அ

கத்தே சைவராயிருந்த சிலர் தாம் தமது சமயத்தைப் பிரசித்தமாய் அநுசரிக்க இடந்தரவேண்டுமென ஒல்லாந்த கொம்மாண்டோருக்கு விண்ணப்பஞ் செய்தனர். (Instructions &c p—92) ஒல்லாந்தர் தொடக்கத்திலே சகலருக்கும் மனச்சாட்சிச் சுதந்திரம் கொடுப்போர்போல நடித்தும், பின் தம் சமயமல்லாத சகல பிறசமயங்களையும் இந்நாட்டினின்று களைந்துவிடப் பிரயசித்தனர். இதனாற் பாசாங்குக் கிறீஸ்தவராய் நின்ற சைவர்களெல்லாம் அந்தரங்கத்திலேயே தமது சமய வழிபாடுகளைச் செய்யவேண்டியோராயினர். சிலர் 'அமாவாசை முதலிய விரததினங்களிலே இரகசியமாய் இலையிற்போசனஞ்செய்து அவ்வெச்சில் இலைகளைத் தம் வீட்டுப் புறக்கூரையிலே செருகி மறைத்துவைப்பார்கள்'' (யா. ச.) இதனைப் போலும் விரதநாட் போசனத்தின்பின் இலையைக் கூரையிற் செருகும் வழக்கம் தலைப்பட்டது. ''பிராமணர்கள் தமது பூணூலை மடியினுள் மறைத்துக்கொண்டு திரிவார்கள்'' (யா. ச.) சிலவிடங்களில் அகத்தே சைவராயுள்ளோர் கிறீஸ்த முறைப்படி பிரேதசேமஞ் செய்தபின் இரவில் மறைவாய்ப் பிரேதத்தைத் தோண்டி எடுத்துத் தகனஞ்செய்வார்கள். ஒருமுறை வரணியில் இவ்வாறு செய்த சில சைவசமயிகளை அரசினருக்குக் காட்டிக்கொடுத்த ஒருவனை அன்னோர் ஓர்நாள் இரவிற் பிடித்து உயிரோடு தகனஞ்செய்துவிட்டார்களென கர்ணபாரம்பரியம் கூறுகிறது. ஆங்காங்கு பலர் மரத்தடிகளில் பிள்ளையார் முதலிய உருவங்கள் பிடித்துவைத்து அந்தரங்கத்தில் சைவசமய முறைகளைக் கைக்கொள்வார்கள். ஒல்லாந்தர் ''சைவச்'' சடங்குகளைப் பயிலுவோருக்குத் தண்டனைகள் விதித்திருந்தமையால், மேற்கண்டவாறு ஒழுகினோர் கண்டுபிடிக்கப்பட்ட போதெல்லாம் கடுந்தண்டனை விதிக்கப்பெற்றனர். ''சைவர்''களோடு விவாகஞ்செய்த கிறீஸ்தவர்கள் சிலருக்கு மரணதண்டம் விதிக்கப்பட்டதெனப் பல்டேயஸ் பாதிரியார் வரைந்து வைத்திருக்கிறார். (P, 804) பள்ளிக்கூடங்களிற் படிக்கும் வயதுள்ளோர் சைவாசாரங்களை அநுட்டித்தோராகக் கண்டுபிடிக்கப்படுந்தோறும் பள்ளிக்கூடச் ''சட்டம்பியார்'' அவர்களைத் தோப்புக்கண்டம் முதலிய ஆக்கினைகளிட்டுத் திருத்துவர். ''என்னாலே நான்கெட்டேன் தோப்புக்கண்டம் சட்டம்பியாரென்னசெய்வார் தோப்புக்கண்டம்'' எனும் வாக்கியம் இவ்வாறே எழுந்ததுபோலும்.

கோமாமிசம்.—ஏலவே ஒல்லாந்தர் மாட்டிறைச்சிவிற்க ஓர் இறைச்சிச்சாலை தாபிக்க வேண்டுமென முயன்றனர். அதற்குத் தமிழ் மந்திரிகளும் குடிகளும் மாறாயிருந்தனர். அக்கால

த்தில் நெடுந்தீவிலுள்ள சில பறையரை ஒல்லாந்தர் தம்மதத்திற் சேர்த்து அவர்க்குப் பெரும் வேதனங்கொடுத்துக் கொணர்ந்து அத்தொழிலுக்கு உடன்படுத்தினர். ஒல்லாந்தர் அச்சாலையை ஊரவர்கள் கண்ணுக்குப் புலப்படாமல் கோட்டையினுள்ளே அந்தரங்கமான விடத்தில் வைத்துத் தமது சாதியார்க்கு மாத்திரம் உபயோகப்படுத்தி வந்தனர். ஒல்லாந்தர் இறைச்சிக்கு என்று கேட்டால் ஊர்ச்சனங்கள் மாடுகொடுக்க மாட்டார்களென்று எண்ணிப் பாலுக்கென்று பசுக்களை வாங்கித் தொகையாக வளர்த்து அவை ஈனுங் காளைககன்றுகளை வளர்த்துக் கொன்று தின்றுவந்தார்கள். ஈற்றில் பசுக்களையுங் கொன்றருந்திவந்தனர். (யா.ச.) பறங்கியர் காலத்திலும் அரசினர் பொறுப்பிலேயே இறைச்சிக்குரியமாடுகள் வளர்க்கப்பட்டன. ஒல்லாந்தர் தாம் யாழ்ப்பாணக்கோட்டையை முற்றுகையிட்டிருந்தகாலத்தில் 1500-க்கு மேற்பட்ட பறங்கியரின் மாடுகளை பாரணம் பண்ணி விட்டிட்டார். யாழ்ப்பாணம் அவர்கள் கைப்பட்ட முதல்நாட்களில் நாடெங்கும் உண்டெபட்ட மாட்டுரோகத்தால் அநேக மாடுகள் இறந்தன. இதனால் இறைச்சிக்கு மாடு அருமையாய்ப் போய்விட்டது. கோடிக்கரையினின்றும் இறைச்சி மாடுகளைக் கொண்டுவரத்தேடினர். மேலுத்தியோகஸ்தர்கள் சுதேச கீழுத்தியோகஸ்தரிடம் மாடுகளைக் கேட்டுவாங்கவும் தலைப்பட்டனர்.

**சண்முகநாயகமுதலியார்.**—ஒருநாள் தேசாதிபதியினுடைய வீட்டில் நடந்த ஒரு பெருவிருந்துக்கு ஒரு காளைக்கன்று வேண்டியிருந்தது. தேசாதிபதி அக்காலத்தில் பசுநிரையாலும் ஆளடிமை நெல்விளைநில மிருதியாலும் இராசாங்க உத்தியோகஸ்தாலும் சிறந்து விளங்கிய சண்முகநாயக முதலியாரிடமொரு கன்றுகேட்க முதலியார் இவ்வினைச்செயலுக்கு உடன்படமாட்டேன் இராசாங்க உத்தியோகமும் வேண்டாமெனக்கூறி அத்தேசாதிபதி சமுகம் விட்டகன்றனர். தாம் செய்யாவிடினும் தமக்குப் பாவமாகத் தோற்றின ஒரு செயலுக்கு அனுகூலியாயிருப்பதும் பாவமெனக்கொண்டு தமது அதிகாரத்தையும் இராச பூச்சியத்தையும் துறந்த சண்முகநாயகமுதலியாரது பெருந்தகைமை பெரிதும் பாராட்டத்தக்கது. உயர்குலப்பிறந்தோர் உயிர்போகவரினும் இழிதொழிலுக் குடன்படாரென்பது ஆன்றோர்வாக்கு. இவர்வழியிலிப்போதுள்ளவர்களும் பெருங்குணம்படைத்தவர்களே. [யாழ்ப். சரித்.]

**ஞானப்பிரகாசதேசிகர்.**—நல்லூரைச்சேர்ந்த திருநெல்வேலியின் கண்ணே சிங்கையாரிய மகாராசனால் இருத்தப்பட்ட

கார்காத்த வேளாளரின் முடிதொட்ட வேளாளராகிய பாண்டிமழவர் மரபிற்றோன்றிய ஞானப்பிரகாசரென ஒருவரிருந்தார். இவரும் கோவதைக்கஞ்சி யாழ்ப்பாணத்தைவிட்டோடிச் சோழதேசத்தில் வாழ்ந்தாரென்ப. யாழ்ப்பாணத்தில் அரசுபுரிந்த ஒரு தேசாதிபதி தன்கீழுள்ள கிராமாதிகாரிகள் வருஷமொருவராய் ஒவ்வொரு காளைக்கன்று கொடுத்து வரவேண்டுமென்று கட்டளையிட்டான். அக்கட்டளைப்படி முதன்முறைச்குரியவராயினர் திருநெல்வேலி ஞானப்பிரகாசர். அவர் தேசாதிபதிக்கு இறைச்சிக்கு மாடுகொடுத்து இவ்வூரில் வாழ்வதிலும் இவ்வூரைவிட்டகல்வதே சிறந்த உபாயமெனக்கொண்டு அவ்வாறே தமதூரைவிட்டகன்றனர். [யாழ்ப். சரித்.] இவர் சிதம்பரத்தையடைந்து, பின் ஆகமசாஸ்திரங்களைக் கற்பதற்கு ஆதாரமாய் சமஸ்கிருதம் படிக்கவேண்டுமென்ற அபிப்பிராயமாய்க் கவுடதேயம்போய் அங்கே ஒரு வேதியன் சில மாணவர்க்குத் தர்க்கசாஸ்திரம் முதலானவற்றைப் படிப்பிக்கக்கண்டு, தாம் அவருடன்கூடிப் படிக்க இடம்பெறுமையாற் றூரத்தே நின்று கிரமமாய் அவற்றைக்கேட்டு மனனம்பண்ணிவந்தனர். ஒருநாள் அந்த உபாத்தியாயர் தாம் கற்பித்த மாணவகரைப் பரீட்சைசெய்து பார்த்தமாத்திரத்தில் அவர்கள் தகும்விடை கொடாதிருக்க, அவர், இவரைக்கூவி, அப்பா! நீ தினந்தோறும் இவ்விடம் வந்து நின்றையே, நமது வினுக்களுக்கு உத்தரங் கூறுவாயா என்றுகேட்க இவரோ அவர் வினவிய ஒவ்வொன்றுக்கும் சரியாய் உத்தரங்கூறினர். ஆதலால் அவர் மகிழ்ந்து அதுமுதல் வியாகரணம் முதலியவற்றை இவர்க்குக் கற்பித்தனர். அதனால் இவர் சகல கலைஞானபண்டிதராய் அவ்வூர்விட்டுத் திரும்பி அண்ணாமலை மடத்துக்குவந்து தம்பிரான் பட்டம்பெற்று அங்குள்ளார்க்கு உபகாரமாகச் சமஸ்கிருதத்திற் சித்தாந்த சிகாமணி, பிரமாண தீபிகையாதியாம் பற்பல கிரந்தநூல்கள் செய்தனரன்றிச் சமஸ்கிருதத்திலுள்ள பௌஷ்கராகமம் சிவஞானசித்தி முதலியவற்றிற்கு உரையுஞ்செய்தனர். இவரது கல்விப்பேரறிவைக்கண்டு அழுக்காறுற்றோர் பலர், இவர் ஆரியத்திலன்றித் தமிழில் வல்லவரல்லரென்று இகழ்ந்து சொல்லியதை இவர் கேள்வியுற்று அவர் கொண்ட கர்வத்தை அடக்கற்காகச் சிவஞானசித்தியார் சுபட்சத்துக்கு உரை எழுதினர். மற்றைய சிலரது உரையினின்று இவர்செய்த உரைமிகப்புகழ்பெற்றதும் ஆழமுற்றதுமாம். இந்தவுரைக்கு விரோதமாய்ச் சிவஞான தம்பிரான் என்பவர் சிவசமவாத மறுப்பு எனப்பெயரிய ஓர் மறுப்புரையை எழுத, அதற்குமாறாக இவரது மாணாக்கருள் ஒருவர் மறுப்பின்மேற் கண்டனம் அல்லது வச்சிரதண்டம் எனும் மறுப்பு எழுதினர். சிதம்பரத்

திலேயுள்ள ஞானப்பிரகாசமெனும் தீர்த்தக்குளத்தை வெட்டினரும் இம்மகானே. யாழ்ப்பாணத்தவராற் சிதம்பரத்தின்கண்ணே கட்டுவிக்கப்பெற்ற மடங்களெல்லாம் இத்திருக்குளத்தின் வடகரை கீழ்க்கரைகளிலேயேயுள்ளன. தெப்போற்சவமுதலிய சில உற்சவங்களுக்குச் சிதம்பராலயத்துச் சுவாமிகள் எழுந்தருளுவது இத்திருக்குளத்துக்கே. இக்குளத்துப் படிக்கட்டுகள் கிலயடைந்துவிட்டமையால் அவற்றைப் புதுக்க இப்போது யாழ்ப்பாணிகளே பணமுதவி முயற்சிசெய்து வருகின்றனர். [இந்துசாதனம்]

**தில்லைநாததம்பிரான்.**—இக்காரணம்பற்றி வரணித்தில்லைநாதர் என்பவரும் ஒல்லாந்தரது கொடுங்கோலின்கீழ் வாழ்தலாகாதெனக்கொண்டு சோழநாட்டையடைந்து ஞானப்பிரகாசரது பெருமைகளைக் கேள்வியுற்று அவர்பாற்சென்று காவிரயம்பெற்றுத் தில்லைநாத தம்பிரான் என்னும் பெயரோடு விளங்கினர் என்பர். அவர் சிவாநுபூதியுடையராய்ச் சோழராசாவின் புத்திரிக்குற்ற குன்மவலியை விபூதி சாத்தித் தீர்த்து வேதாரணியத்திலுள்ள சிவாலயத் திருப்பணிக்காக பெருந்திரவியமும் உப்பளமும் இரேகுச்சுங்கமும் பெற்றவரென்பது கர்ணபரம்பரை. வேதாரணிய தலவிசாரணை உரிமை வரணிச்சைவர்க்குக் கிடைத்தது அவர் மூலமாகவேயாம். வரணிச சைவரே இன்றும் வேதாரணிய ஸ்தலவிசாரணைக் கர்த்தராயிருக்கின்றார்கள். [யாழ்ப். சரித்.]

ஒல்லாந்தர் தமது ஆளுகையின் முற்கூற்றில் இவ்வாறே சைவசமயிகளைத் துன்புறுத்தி அவர் வெளியே கிறீஸ்தவர்கள்போலே நடக்கச்செய்தாராயினும் சற்றுச்சற்றாக இக் கட்டுப்பாட்டை நெகிழ விட்டிட்டார்கள். விடவே சைவசமயமும் ஆங்காங்கு தலையுயர்த்தி அரங்கத்தில் வெளிப்படலாயிற்று. ஒல்லாந்தருடைய இளக்கத்துக்குக் காரணம் அவர்களது பொருளாசையேயெனக் காண்கின்றோம். வடகரையினின்றும் சிலை நெசவுக்காக வரித்துவைத்த சேணியர்களே முன்பு இந்துசமயத்தை வெளியாய் அனுசரிக்க விடப்பட்டார்கள். பாதிரிமார் இவ்விளக்காரத்துக்காக அரசினரைக் குறைகூறியும் இவர்கள் தம் வியாபாரத்திலேயே கண்ணாயிருந்தமையால் அதைப் பொருட்படுத்தினாரில்லை. அன்றியும் குருமாரின் குறைவாலும் கீழுத்தியோகஸ்தரின் அசட்டைத்தனத்தினாலும் யாழ்ப்பாணத்துக் கிறீஸ்தவருட் பலர் பழையபடியே உள்ளுக்குச்சைவராகவும் வெளியில்மட்டும் பெயரளவில் கிறீஸ்தவராகவும் நடிக்கத்தொடங்கியதை நன்றாகக் கண்டுகொண்ட ஒல்லாந்தமே

உத்தியோகஸ்தர்கள் பலவந்தத்தினால் அவர்களைக் கிறீஸ்தவர்களாக வைப்பதினாற் பயனில்லையெனத் துணிந்து சைவசமய ஆசாரங்கள் பிரசித்தமாய் நடக்கவும் இடங்கொடுப்போராயினர். இதனால் இச்சமயம் முன்போல நிலையூன்றிப் பெலத்துக் கொண்டு வருவதாயிற்று.

**கத்தோலிக்கசமயநிலை.**—இதுநிற்க பறங்கியர்காலத்தில் நாடெங்கும் பரப்பப்பட்டிருந்தாகிய கத்தோலிக்கசமயத்தின் பாடென்னவெனவும் கூறுவாம். பறங்கியருடைய கத்தோலிக்கசமயமும் ஒல்லாந்தருடைய "இறப்பிறமாது" சமயமும் எனும் இரண்டும் கிறீஸ்துசமயமேயானாலும் தம்முட் சிறிது மாறுபட்டவைகளாயிருந்தன. பறங்கியர் போதித்த "சத்தியவேதம்" என்னப்பட்ட கத்தோலிக்கு சமயமானது கிறீஸ்துவின் காலந்தொட்டு அப்போஸ்தலர்களுடைய பாரம்பரியத்தைப் பின்பற்றிச் சம்பிரதாய முறையாய் வருவது என்பர். அதற்கு ரோமாபுரியிலே சிரேஷ்ட குருபீடமுண்டு. இச்சிரேஷ்ட குருவுக்கு அதிபிதா எனப்பொருள்படும். "பாப்பு" எனும் நாமமுளது. இச்சிரேஷ்ட குருவுக்கு உலகம் முழுதிலுமுள்ள கத்தோலிக்க குருமாரும் இவர்களுக்குமேல் அத்தியக்ஷர்களாயிருக்கும் "பிஷப்பு" மாரும் சமய விஷயங்களிலெல்லாம் அடங்கிநடப்பர். "இறப்பிறமாது சத்தியவேதம்" என்னப்பட்ட ஒல்லாந்து கிறீஸ்துசமயம் கத்தோலிக்க சபையினின்றே பிரிந்துபோன சிலரால் கிறீஸ்துவுக்குப்பின் 16-ம் நூற்றாண்டிலே "திருத்தஞ்செய்யப்பட்டது" என்பர். இறப்பிறமாது (Reformed) என்பதன் பொருள் இதுவே. இச்சமயம் பலபிரிவுகளாய்ப் பிரிந்திருக்கும். இதற்குப் பொதுவான ஓர் சிரேஷ்டகுரு இல்லை. கத்தோலிக்கரும் இறப்பிறமாது கிறீஸ்தவர்களும் சில ஆசாரமுறைகளிலும் போதனைகளிலும் வேறுபட்டிருப்பினும், கடவுளானவர் உலகத்தை ஈடேற்றும்பொருட்டு யேசுக்கிறீஸ்து என மானுடச்சட்டைசாத்தி வந்தவராம் எனும் கிறீஸ்துசமய மூலசத்தியத்தில் ஒன்றுபட்டொழுகுவர். ஆயினும் இடைக்காலத்தெழுந்ததாகிய "சீர்திருத்த" சமயம் முந்தியதாகிய கத்தோலிக்க சமயத்தை ஐரோப்பாவில் மிகவிரோதித்துக்கொண்டிருந்தமையால், அதனைக் கைப்பற்றியோராகிய ஒல்லாந்தர் இதனை இங்கும் விரோதித்தனர். மேலும், ஒல்லாந்தர் பறங்கியர்மேல் கொண்ட பகை பெரிதாயிருந்தமையால் அப்பகை அவர்களது சமயத்தையும் சாருவதாயிற்று. ஆகவே. இலங்கையிலுள்ளார் புத்தராய் அல்லது சைவராய் இருப்பதைக் காண்பதிலும் கத்தோலிக்காரயிருப்பதைக் காண்பதுதான் ஒல்லாந்தருக்கு அதிக கோபாவேசத்தை ஊட்டுவதாயிற்று.

ஒல்லாந்தர் யாழ்ப்பாணநாட்டைக் கைப்பற்றினவுடனே இங்கிருந்த பறங்கியரில் தமது சேனையிற்சேர்ந்தும் தமக்குஊழியராயும் போனவர்களைத்தவிர ஏனையோரையெல்லாம் பிறதேசப்படுத்திவைத்தனர். பட்டணத்திலிருந்துமட்டும் 4000 பறங்கியர் வெளியேற்றப்பட்டனர். (Instructions p 96) "பறங்கியருடைய ஞாபகந்தானும் வேரோடேகளையப்படவேண்டும்" என்பது ஒல்லாந்தருடைய துணிபாயிற்று. (ஷை p. 95) கத்தோலிக்கசமயம் நாட்டிலிருப்பதும் பறங்கியரின் செல்வாக்கு உறைத்துத் தடிப்பதும் ஒன்றேயாம் என்னும் எண்ணத்தால் கத்தோலிக்க சமயத்தையும் சட்டதிட்டங்களினால் அழிக்கப்பார்த்தனர். முதல் கத்தோலிக்கரின் ஆலயங்களையெல்லாம் கவர்ந்துகொண்டு அவற்றில் தம் குருமாரையே வைத்ததுமன்றிக் கத்தோலிக்க பாதிரிமார் நாட்டிற் காணப்படக்கூடாது எனவும் ஆக்கியாபித்து குருமாரை ஆதரிப்போருக்குத் தண்டமும் விதித்தனர். அந்நாட்களில் கத்தோலிக்கருடைய ஆலயங்கள் ஒல்லாந்த குருமாருக்காய் விட்டதுபோலவே, அவர்களுடைய குருமாருக்கிருந்த பாதிரி அதாவது பிதா எனும் பட்டமும் இப்புதுக்குருமாருக்கே யுண்டாகி, இந்நாள்வரையில் புரோட்டெஸ்தாந்த குருமாருள் நிலைத்திருக்கிறது கத்தோலிக்க குருமார் இக்காலம் சைவமுறையை அநுசரித்து "சுவாமி" எனப்படுகின்றனர். இது நிற்க, ஒல்லாந்த அரசினர் கத்தோலிக்கர் சமயச்சடங்குகளையெல்லாம் இறப்பிறமாது குருமாரைக்கொண்டே நிறைவேற்றுவிக்கவேண்டுமென நியமித்தனர். பலகாலும் கத்தோலிக்கர் இச்சட்டதிட்டங்களைப் பொருட்படுத்தாது ஒழுகியபோது கடூரமாய் வதைக்கப்பட்டனர்.

**யோசேவாஸ்முனிவர்.**—இவ்வாறு நிகழ்ந்துவருகையில் கோவைப்பட்டணத்திலுள்ள "தியானசம்பிரதாயம்" எனும் சபைக்குச் சேர்ந்தவரான யோசேவாஸ் எனும் கத்தோலிக்ககுருவானவர் ஒருவர் இலங்கையில் கத்தோலிக்க சமயிகள் தம்சமயக் குருமாரின்றி இடர்ப்படுவதை அறிந்து, ஒல்லாந்தரது கட்டளையையும் தம்சிரசுக்கே நேரக்கூடிய அபாயத்தையும் பொருட்படுத்தாது 1687-ம் ஆண்டு ஒல்லாந்த அடிமைகளுக்குரிய வேஷத்தினால் தம்மை யாரென்று காட்டாது மறைத்துக்கொண்டு கரைதுறைக் காவலாளர் கண்ணுக்கு அருமையாய்த் தப்பிவந்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்து சில்லாலையிற் கரந்துறைந்து தமது சமய கைங்கிரியங்களை இரகசியமாகவே ஊருராய்த்திரிந்து புரிந்துகொண்டுவந்தார். குலத்தாற் பிராமணராகிய இவர் அருந்தவமுனிவரர்க்குரிய அருள்வாக்குக் கைவரப்பெற்ற ஓர் குருவாய் விளங்கியமையால் இவரால் கத்தோலிக்கசமயம் து

ன்பகாலத்திலும் மிக உறுதியடைந்து சவிகொண்டு பரவுவதர யிற்று. யோசேவாஸ்முனிவர் இவ்வாறு கத்தோலிக்கரை ஊ க்கித்துக்கொண்டு வருவதை அறிந்த அரசினர் அவரை எவ்வா ற்றானும் பிடித்துப்போட முயன்று ஆங்காங்கு காவலர்களை அ மைத்து மிகவிழிப்பாய்க் காவல்செய்திருந்தனர். 1690-ம் ஆ ண்டு மார்கழிமாதம் 25-ந் திகதியாகிய "நத்தால்" பண்டிகைய ன்று இரவு முனிவர் மூன்றிடங்களில் பூசைபண்ண நியமித் து வைத்திருந்ததையும், அவற்றுள் ஒன்று யாழ்ப்பாணம் பற ங்கித்தெருவிலுள்ள ஒருவீடென்பதையும் அறிந்த சேவகர்கள் அவ்வீட்டை வளைந்துகொண்டு அவரைத் தேடியுங் காணமை யால் அவர் வருகையைக் காத்துக்கொண்டு அவ்விடத்திற் கு ழுமியிருந்த மூன்னூற்றுச் சில்வான ஆண்பெண் சிறுவர்களைக் கைதிகளாக்கிக்கொண்டுபோயினர். மறுநாட்காலை வன்றிஎனு ம்கொம்மாண்டோர் கைதிகளுள் ஸ்திரீபாலரையெல்லாம் போ க்கிவிட்டு ஆடவர்களுக்குத் தெண்டமிட்டதுமன்றி அவர்களு ட் கண்ணியமுள்ளோரான எண்மரைச் சாட்டைகளாலடிப்பித் தான். இவ்வாதையினால் அவர்களுள் டொன் பேதுருவென்ப வர் சீவனையிழந்தார். ஏனை எழுவரும் விலங்குபூண்டு கல் மண் சுமந்து கடினசிறையிருக்கத் தீர்ப்பிடப்பட்டுக் கடைசிமட்டும் தமது சமயத்தை மாற்றாரென்றிருந்து சிறைச்சாலையிற்றானே உயிர்நீத்தனர். யோசேவாஸ்முனிவர் ஒல்லாந்தருடைய கோ பாவேசத்துக்குக் கரந்தோடிக் கண்டியிராச்சியத்திற் சேர்ந்து அங்கு மறியலிடப்பட்டும் வேறு அநேக உபத்திரவங்களையடை ந்தும், பின் அந்நாட்டிற் கொள்ளைநோய்பரவியிருந்த சமயத்தில் தாம்செய்த பரோபகார கிருத்தியங்களின் பொருட்டு கண்டிய ரசனாற் சன்மானிக்கப்பட்டும், அச்சன்மானத்தால் இலங்கை முற்றும் சுற்றோட்டஞ்செய்து கத்தோலிக்கசமயத்தைப் பரப் புகிறவராகியும் இருபத்துநாலுவருஷம் உழைத்தபின் 1711-ம் ஆண்டு கிறீஸ்த இலங்கைமுழுதும் புலம்ப மரித்தார். அவருக்கு ப்பின் 1834-ம் ஆண்டுவரையில் கோவையில் நின்றே கத்தோ லிக்க குருமார் இங்கனுப்பப்பட்டு வந்து அச்சமயத்தை விருத் திசெய்தார்கள். இக்குருமாருள் யோசேவாஸ்முனிவருக்குப்பி ன் இலங்கையிற் சிரேஷ்ட குருவாய் விளங்கிய யாக்கோமேதே கொன்சால்வேஸ் என்பவரும், பிற்கூற்றில் விளங்கிய கபிரியே ல் பச்சேக்கு என்பவரும் தாங்கள் தமிழில் இயற்றிவைத்த அ நேக சொற்சுவை பொருட்சுவை வாய்ந்த கிரந்தங்களினால் பிர சித்திபெற்றவர்கள். கபிரியேல் பச்சேக்குச் சுவாமியார் கூழ ங்கைத் தம்பிரானிடம் தமிழ்ப்பாடங் கேட்டவர். இவரைச்சுட் டிப் பின்னாற் சில சொல்லுவோம்.

மருதமடு.—ஒல்லாந்தர் கத்தோலிக்கரின் அழகிய ஆலயங்களைக் கிரகித்துக்கொண்டு அன்னோர் தம்சமய வழிபாடுகளை நடத்தாது தடுத்துவந்தும் கத்தோலிக்கர் அரசினர் தண்டத்துக்கஞ்சாது ஆங்காங்கே வேறு ஆலயங்களை எழுப்பி தேவ ஆராதனை செய்ய முயன்றனர். இவ்வாலயங்களுள் ஒன்று சில்லாலையில் இருந்தது. அரசினர் இச்சிற்றாலயரை அடக்க மாட்டாது போயினர். வேறுபலவிடங்களில் வீடுகளே ஆலயங்களாக்கப்பட்டிருந்தன. இன்னும் சிலவிடங்களில் கத்தோலிக்கர் கண்டியரசனின் எல்லையை அண்டித் தம் புது ஆலயங்களைக் கட்டிக்கொண்டு ஒல்லாந்தரின் பயமற்றுத் தம்சமய வழிபாடுகளைப் பயின்றனர். இவ்வாறே மாந்தைக் கிறீஸ்தவர்கள் சிலர் ஒல்லாந்தர் கையாடிய தம் ஆலயத்திலிருந்த கன்னிமரியம்மாளின் சுரூபத்தோடு சிலனு மருதமடு எனப்படும் இடத்தைச்சேர்ந்து அங்கு ஓர் சிறு ஆலயத்தைக் களிமண்ணாற் சமைத்துவைத்தனர். இதுவே பிற்காலம் மருதமடுச் செபமாலைமாதாகோவில் எனும் பிரசித்திபெற்ற யாத்திரைத்தலமாவதாயிற்று. மாந்தையில் பறங்கியராற் கட்டப்பட்டிருந்த ஆலயம் திருக்கேதீச்சுரத்தின் கற்கள்கொண்டு அமைக்கப்பட்டது போலும். இது அதற்கு மிகு சமீபத்திலிருந்தது. மாந்தை "றெஸ்ற் அவுஸ்" இப்போது அதனிடத்தைக் கொள்ளுகின்றது. ஆலயத்தின் பழைய சுவர் ஒன்று இன்னும் இராசவீதிக்குப் புறத்தே காணப்படுகிறது.

யாழ்ப்பாணப்பட்டணத்திலும் கத்தோலிக்கர் பல சிறுக்கோவில்களை ஒல்லாந்தருக்கஞ்சாது கட்டிவைத்தனர். இவற்றுள் தற்காலம் பெரியகோவில் என்னப்படும் ஆலயம் விசேஷித்தது. இது அந்நாட்களில் ஐரோப்பியருடைய "சிதாரி"க்கப்பாலிருந்ததாகிய ஓர் புறம்போக்கான பாகத்தில் மண்ணால் எழுப்பியிருந்து பின் 1789-ம் ஆண்டிலேயே கற்கட்டடமாக எடுக்கப்பட்டது. முந்திய மண்கோவில் இப்போதிருக்கும் ஆலயத்தின் முகப்பில் நின்ற ஓர் புளியமரத்தின்கீழிருந்தது. (First Centenary—p 3.)

இறப்பிறமாது சமயநிலை.—அரசினரது "கோறணமேந்து மார்க்கம்" என்னப்பட்ட இறப்பிறமாது சமயநிலையைப்பற்றியும் சிறிது சொல்லுவாம். ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை அடைந்தவுடனேயே தமது "உண்மையான, சீர்திருத்த" மார்க்கத்தைப் பரப்பத்தேடினர். அவர்களோடு ஆதியில்வந்த குருவானவர் பிலிப்பு பல்டேயஸ் பாதிரியார். இவர் அதிக கல்வித்

திறனும் தேவபத்தியும் உள்ளவர். இவர் மூலமாகவே முதன் முதல் தமிழ் அட்சரங்கள் ஐரோப்பாவிலே அச்சிடப்பட்டன. இவர் இயற்றிய "கொறமண்டலும் இலங்கையும்" எனும் பெரிய சரித்திர நூல் அக்காலத்துச் சம்பவங்கள் பலவற்றிற்கு ஓர் பிரமாணமாயுள்ளது. இவர் இங்கிருந்த நாளெல்லாம் ஒல்லாந்த சமயம் யாழ்ப்பாணத்தில் ஒருவாறு தழைத்துவந்தது. வேதபோதகவிஷயத்தில் தாம் சவேரியாரின் அடிச்சுவடுகளில் நடக்க ஆசித்தவராக எழுதிவைத்திருக்கிறார். ஆயின் இவர்நாட்களின் பின் குருமாரின் குறைவாலும் கொம்மாண்டோர்மாரின் சமயாபிமானத்தாழ்ச்சியாலும் அச்சமயம் அருகி அருகிக்கொண்டேவந்தது. இதனால் யாழ்ப்பாணத்திற் பறங்கியரால் நிருமாணிக்கவும் ஒல்லாந்தராற் கைப்பற்றவும்பட்டிருந்த ஆலயங்களுள் ஒன்றிரண்டு தவிர ஏனையவெல்லாம் ஒல்லாந்த அரசு இந்நாட்டால் நீங்குமுன்னரே கிலமாய்ப்போய் விட்டன. இவற்றுள் இங்கிலீசரின் கீழ்ப் பின்னும் பாழடையவிடப்பட்டு முற்றாக அழிந்தொழிந்தவைகள் நீங்க, சங்கானை அச்சுவேலி ஆதிய சிலவிடங்களில்மட்டும் இற்றைவரைக்கும் நிற்கும் பழஞ்சுவர்களால் இவ்வாலயங்களின் ஞாபகம் ஒருவாறு காக்கப்பட்டு வருகிறது.

ஒல்லாந்தர் ஐரோப்பிய பாதிரிமாரின்கீழ் அவ்வவ்விடங்களில் சுதேச "போதகர்" களையும் வைத்திருந்தனர். இவர்களே வழக்கமான சகல சமயகிரியைகளையுஞ்செய்வர். இவர்களைப் பயிற்றிவிடும்பொருட்டு கொழும்பிற்போல யாழ்ப்பாணப்பட்டணத்திலும் 1690-ம் ஆண்டில் ஓர் குருமடம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. குருமடத்தில் அதிக புத்திசாதுரியம் காண்பித்தோர் சிலர் ஒல்லாந்துதேசத்துக்கனுப்பி பாதிரிமாராகக் கல்விபயிற்றி இங்கனுப்பப்பட்டதுண்டு. ஆயின் ஒல்லாந்தர் முக்கியமாய்ப் பள்ளிக்கூடங்கள் மூலமாகவே தம்மதத்தைப் பரப்பத்தேடினர். கோயிற்பற்றுக்களிலெல்லாம் ஒவ்வோர் பெரிய பாடசாலையிருந்தது. இவற்றிற்குப் பிள்ளைகள் கட்டாயமாய் அனுப்பப்பட்டுச் சமய அறிவுறுத்தப்பட்டனர். "சட்டம்பி" மாருக்கே அதிக பொறுப்பான அலுவல்களிருந்தன. ஞானஸ்நான இடாப்பு வைத்துக்கொள்பவர்களும், கலியாணம் பதிவாரும், ஊரிலெழும் சகல குறைமுறைகளையும் தீராக்குவாரும் சட்டம்பிமாரேயாயிருந்தனர். இன்றைக்கும் கலியாணப்பதிவுகாரர் சட்டம்பியாரென்றழைக்கப்படுதலையும் நோக்குக. இச்சட்டம்பிமார் பலமுறையும் கள்ள இடாப்புக்கள் பதிந்து நாடெல்லாம் போலிக்கிறீஸ்தவர்கள் அதிகமாவதற்கு உபகாரணமாயினர்.

யாழ்ப்பாணத்துப் பெரியமனுஷர்.—அக்காலம் எமது செல்வ நாட்டில் விளங்கிய கல்விமான்கள் பிரபுக்களாதியோரின் வரலாறு ஓர் நூலாகப் பலகாண்டங்களாய் விரித்தெழுதத்தக்கது. ஆயின் அன்னோரின் விர்த்தாந்தங்களைச் சங்க்ஷேபமாயெனினும் காட்டாத யாழ்ப்பாணச்சரித்திரம் நிரம்பியதாகாதாதலால் இங்கு அவற்றை ஒரு சிறிது காட்டுவோம்.

வரதபண்டிதர்.—இப்பிராமணோத்தமர் சுன்னாகப்பதியிலே ஒல்லாந்தர்கால முற்கூற்றிலே பிறந்தவராவர். அரங்கநாதன் என்பார் இவர்க்குத் தந்தை. சதுர்வேதம் ஆயுள்வேதங்களில் மிகுந்த அனுபவசாலியன்றி இலக்கண இலக்கியங்களில் மிகவும் பயின்று திறமையுற்ற பாவாணருமாகிச் சிவராத்திரிப்புராணம், ஏகாதசிப்புராணம் என்னும் இருபுராணங்களையும் பாடினர். சிவராத்திரிப்புராணத்தில் 715-விருத்தங்களுள. மேற்குறித்த இருபுராணங்களைவிட அமுதாகரம் என்னும் பெரிய ஓர் வைத்தியநூலையும் இவர் செய்தனர். அதிலே 310-விருத்தங்களுள.

"ஐயமின்மூந்நூற் றையிருவிருத்தம்
செய்யசெந்தமிழாற் றெரிந்துரைசெய்தனன்
கங்கைமாநதிசூழ் காசிமாநகரும்
பங்கமில்பங்கயப் பைந்துணர்மாலையும்
ஆதிநான்மறைசே ரந்தணராணையும்
கோதகலோதிமக் கொடியுமிக்குடையோன்
கன்னியங்கமுகிற் கயலினங்குதிக்கும்
துன்னியவளவயற் சுன்னைநன்னுடன்"

என்று அவ்வயித்திய சாஸ்திரத்திற் கூறியிருப்பது இவரது வருணம், பூர்வீகம், ஊராதியவற்றை விளக்கும்.

இம்மூன்று பாடல்களல்லாது பிள்ளையார் கதையையும் இவரேபாடினர். ஆண்டுக்காண்டு இவ்வூர்ச் சைவக் கோயில்களிலே முதல் இருபது தினங்களிலே சொற்பமாயும் 21-ந் தினத்திலே பெருங்கதையென்னும் பெயரோடு முழுவதும் வாசிக்கப்பட்டு வருவதும் இதுவே.

வரதபண்டிதர் அச்சுவேலியிலே விவாகஞ்செய்து அங்கு இருந்தபோதே பிள்ளையார் கதையைப் பாடினர் என்பதும், இவர் இருந்து இறந்தவளவு அச்சுவேலிச் சந்தைக்கு அணித்தாய்ப் புலவனார் வளவு என்று இந்நாள்வரைக்கும் அழைக்க

ப்பட்டு வருகின்றது என்பதும் ஐதிகம். [பாவலர்சரித்திரதீப கம்] அச்சுவேலியில் ஓர்காலம் வெகுதொகையான பிராமணர் இருந்தாரென 1672-ம் ஆண்டின் முன் அங்கிருந்த பல்டேய ஸ் பாதிரியாரால் அறிகின்றோம். பாதிரியார் நாட்களில் பிரா மணர் அனேகர் முன் கிறிஸ்தவர்களெனப் பாசாங்குபண்ணிப் பின் சைவசமயத்தில் பிரவேசித்திருந்தமையால் இவர் அவ ர்களை மீட்டும் கிறீஸ்தவர்களாக்க மிக முயன்றனர். "பிலிப்பு எனும்வயோதிக பிராமணன் நமது வேதத்தின் ஆதார சத்திய ங்களை அறிய விரும்புகின்றானில்லை. சரித்திரங்களையே கேட்க விரும்புகின்றான். இங்கு முன்னிருந்தவர்களுள் ஓர் பண்டித னை பிராமணனோடு நான் அச்சுவேலியில் வசித்த காலையில் பலநாளும் சம்பாஷித்துள்ளேன். இவன் ஈற்றில் தனது 46-ம் வயசில் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான். கொண்டபின் சமஸ்கிருதம் எனப்படுகிற மேலான பாஷையில் மீட்பருடைய சரிதமும் பீடைகளும் என ஓர் காவியத்தைப்பாடினன்" எனப் பல்டேயஸ் வரைந்திருக்கிறார்.

**பூலோகசிங்கமுதலியார்.**—அருளப்பநாவலரென மறுநாமம் பூண்ட செந்தமிழ்வல்லாரும் ஒல்லாந்தர் கால ஆரம்பத்தில் 1680-ம் ஆண்டுவரையில் தெல்லிப்பழையில் பிறந்தவருமான இ வர்செய்த பெரியபிரபந்தம் திருச்செல்வர் காவியம். இது இருப த்தைந்து படலங்களாய் 1946 விருத்தங்களாய் விரியும் ஒரு சரித்திர நூல். சொற்சுவை பொருட்சுவை செறிந்து பல அ லங்காரங்கள் நிறைந்து விளங்குவது. தமிழ் இலக்கியங்களுள் முதன்மையானவைகளோடு வைக்கப்படத்தக்கது. ஆக்கியோ னுடைய பெயர் பின்வரும் விருத்தத்திற் காணப்படுகிறது.

செல்லினருள்பெருகுதவச் செல்வாரயன்கதையைத்
தேர்ந்துநுண்ணூற்
றுல்லிபமோர்ந்திடும்புலவர் மகிழ்தூங்கவிருத்தத்தாற்
சொற்றிட்டானு
னல்லிசைநாடகமியலின் தமிழ்தெரிநாவினன்
சதுரநாகரீகன்
தெல்லிநகாருளப்பன் தென்காரைப்பூலோக
சிங்கன்றானே.

பூலோகசிங்கமுதலியாரின் அடி இன்றைக்கும் தெல்லிப்பழை யில்பத்தாவத்தை எனும் குறிச்சியில் அழியாதிருக்கிறது. பிற்ச ந்ததியாருள் இவர் பெரிய பூலோகசிங்கமுதலியாரென்றும் கா வியப்புலவரென்றும் அழைக்கப்படுவர். இவர் பின்றோன்றல்

களுள் ஒருவர் தலைமன்னாரில் இப்போது கத்தோலிக்ககுரு உத்தியோகம் நடத்துபவராகிய லூயிஸ் பூலோகசிங்கசுவாமியார். இவர் பூலோகசிங்கமுதலியாரிலிருந்து எட்டாவது தலைமுறையிலுள்ள வழித்தோன்றல்.

**திருச்சிற்றம்பலமுதலியார்.**—உயரப்புலத்திலே, காரைக்காலினின்றும் வந்து குடியேறிய முன்னோரையுடையோராகிய திருச்சிற்றம்பலமுதலியார் விளங்கினார். இவர் பிறப்பு 1630-ம் ஆண்டுவரையிலுள்ளது. இவர் அச்சுவேலியில் 1570-ம் ஆண்டளவில் உதித்தவரும் பறங்கியரின்கீழ் இறைசுவம்தார் உத்தியோகம் வகித்திருந்தவருமான சீமான்கணக்கரின் மகன் இன்னாசிக்கணக்கரின் மகளை விவாகஞ்செய்து இப்பதியிலேயே வசிப்பவரானார். இவரது புத்திரன் சிதம்பரநாதமுதலியார். இவர் சுதன் நரசிங்கமாப்பாணமுதலியார். இவர் சூனுவாகும் இரண்டாம் சிதம்பரநாதமுதலியார் மாதகலில் பரநிருபசிங்கனின் மகளான வேதவல்லியின் சந்ததியில் மணம்முடித்துவாழ்ந்தனர். சிதம்பரநாதமுதலியாரின் சந்ததி இங்கிலீசர்காலத்திலும் அரசாட்சியுத்தியோகமேன்மையுடையதாக விளங்கியிருக்கிறது. இச்சந்ததியில் மேற்சொல்லிய முதலியாரின் நாலாம்தலைமுறையிலுள்ள சிற்றம்பலமுதலியார், திருச்செல்வராயர், காராளபிள்ளை சூசைப்பிள்ளை விதானையார் 1911-ம் ஆண்டு எழுபத்தேழுவயசுள்ளவராய் மரித்தார். பிரபல நாட்டாண்மையுடன் விளங்கியமுருகஉடையார் இராசருக்கு இவர்சகோதரமுறையினர்.

**மயில்வாகனப்புலவர்.**—மாதகலிலேயிருந்த கனவான்களில் மயில்வாகனப்புலவர் ஒருவர். திக்கெட்டும் புகழெட்டிய சிற்றம்பலப்புலவரது சகோதரி புத்திரர். வையா என்னும் பேர்பெற்ற கல்விமானின்மரபில் உதித்தவர். இவர் யாழ்ப்பாண வைபவமாலையைக் கத்தியரூபமாக இயற்றினார். இது பின்வரும் சிறப்புப்பாயிரச் செய்யுளால் விளங்கும்.

ஒண்ணலங்கொண்மெக்கென்றூஉமென்றோது
பெயர்பெற்றவுலாந்தேசண்ணல்
பண்ணலங்கொள்யாழ்ப்பாணப்பதிவரலாறுரைத்
தமிழாற்பரிந்துகேட்கத்
திண்ணிலங்குவேற்படைக்கைச்செகராசசேகரன்
றொல்லவையிற்சேர்ந்தோன்
மண்ணிலங்குசீர்த்திவையாமரபின்மயில்
வாகனவேள்வகுத்திட்டானே.

உராசர்தொழுகழன்மேக்செறுனென்றேது
மூலாங்கேதசுமன்னனுரைத்தமிழாற்கேட்க

வராசகைலாயமாலைதொன்னூல்
வரம்புகண்டகவிஞர்பிரான்வையாபாடல்

பராசசேகரன்றன்னுலாவுங்காலப்
படிவழுவாதுற்றசம்பவங்கடீட்டுங்

கிராசமுறைகளுந்தேர்ந்தியாழ்ப்பாணத்தின்
செய்திமயில்வாகனவேள்செப்பினனே.

வண்ணார்பண்ணைச் சிவன்கோயில் ஆதீனக்காரராகிய வைத்திலிங்கச்செட்டியார் கூழங்கைத்தம்பிரானிடம் ஆகமசாஸ்திரங்களிலே பாடங்கேட்க, இவரே துணையாயிருந்தவர். கூழங்கையர் ஒரு பாடத்தை இரண்டாந்தரம் சொல்லிக் கொடார்; செட்டியார் ஒருபாடத்தை ஒருதரத்திலே கிரகித்துக்கொள்ளார். ஆகவே இப்புலவர்முன் தம்பிரானிடம் கேட்டுவிளங்கி நெட்டுருப்பண்ணி வைத்து மீண்டு செட்டியார்க்கு ஓதுவராம். ஞாபகத்தில் வியப்புப்பெற்ற இப்புலவர் மேலே கூறப்பட்டதையன்றி ஞானலங்காரநாடகம், காசியாத்திரை விளக்கமெனஇருபாடல்களையுஞ் செய்தனர் முந்தியது ஆன்மதத்துவங்களை உருவக அலங்காரஞ்செய்து பாடியது. மயில்வாகனப்புலவர் வைபவ மாலையை இயற்றியகாலம் 1736 வரையிலென மெஸ். விருத்துத்துரை கூறிப்போந்தார். ஆயின் வைத்திலிங்கச்செட்டியாரோடு அவரைக் கூழங்கைத் தம்பிரானிடம் பாடங்கேட்டவராகச் சொல்லும் ஐதிகத்தின்படி அந்நூலியற்றியகாலம் இன்னும் ஐம்பதுவருஷம் வரையிலென்கிலும் பிறப்பட்டதேயாகவேண்டும்.

**சிற்றம்பலப்புலவர்.**—மாதகலிலேயே ஒல்லாந்தர்கால விறுதியில் விளங்கிய இச்சைவவேளாளர் வடகரைசென்று பதினேழுவருடம் பஞ்சலக்கணக் கணபதி ஐயரிடம் பாடங்கேட்டுமீண்டனர். இவரிடமே இருபாலைச்சேனாதிராயர் ஆதியோர் பாடங்கேட்டவர்கள்.

**நெல்லைநாதர்.**—சேனாதிராயரின் தந்தையாகிய இவர் தெல்லிப்பழை பொன்னம்பல முதலியார் எதிர்வன்னியசிங்கமுதலியாரின் சூனு. இவர் இருபாலையில் மண்ணாடுகொண்ட முதலி குலதிலகருள் விவாகஞ்செய்திருந்தனர். நெல்லைநாதர் எத்துணைப் பெரிய செய்யுளையு மொரேமுறையிற் கிரகிக்கும் போராற்றலுடையவர். சோழகாட்டிவிருந்து செந்திக்கவி என்பவர்

வைத்தியலிங்கச் செட்டியாருடைய புகழ்கேட்டு அவர்மேல் ஒரு பிரபந்தம் பாடிவந்து ஒருநாள் அரங்கேற்றினர். நெல்லைநாதர் முதற்செய்யுள் கேட்டவுடன் இது பழையபாடலன்றோ, நீர் புதிதாகப்பாடிய பிரபந்தத்தை அரங்கேற்றும் என்று செந்திக்கவியை நோக்கிச் சொல்ல, செந்திக்கவி திகைத்து எப்படியென்றார். நெல்லைநாதர் அச்செய்யுளைச் சபையோர் எல்லாம் பிரமிக்க ஒப்பித்தனர். செந்திக்கவி இப்பெருஞ்செய்யுளை, இவர் அவதானித்து ஒப்பித்தார்: அடுத்த கவியை விரைந்து சொல்வேன் எனமனத்துள்மதித்து இதுவும் பழையகவிதானு என்று என்று கூறிவிரைந்து படித்தார். இதுவும் பழைய கவியேயென்று நெல்லைநாதர் அக்கவியை ஓர் அக்ஷரமும் வழுவாதொப்பித்தார். செந்திக்கவி எழுந்து அவரை வணங்கி அவருடைய அவதான சக்தியைப் புகழ்ந்து பாராட்டினர். நெல்லைநாதர் செட்டியாரைநோக்கிச் செந்திக்கவி பாடிய பிரபந்தம் பழையகவியன்று: புதிதே. என்னுடைய ஆற்றலை அவர்க்குணர்த்துமாறே அச்செய்யுட்களை அவதானம்பண்ணிச் சொன்னேன். ஐயப்பாடொழிந்து அதனைக் கேட்டு அவர்க்குத் தக்க பரிசளித்திடுக என்றார். செட்டியார் அதுகேட்டு மகிழ்ந்து பிரபந்தத்தை அரங்கேற்றுவித்து முன் எண்ணியதிலும் இருமடங்காகப் பரிசில்எடுத்து, "கவீசுரரே! இதிற் பாதியே உமக்கு யான் தரக்கருதியது, நெல்லைநாதபண்டித சிரோமணிபெயரால் ஒருமடங் கதிகமாகத் தருகிறேன். அதனை அவர் தந்ததாகக் கொள்ளு" மென்று கூறிவழங்கினர். நெல்லைநாதர் கம்பருக்குப் பரிசளித்த பெருந்தகையினது மரபிலுள்ளவர். நெல்லைநாதர் புத்திரராகிய சேனுதிராயமுதலியார் ஒல்லாந்த ஆங்கிலபாஷைகளிலும் வல்லதமிழ்ப்பண்டிதர். அவர் ஒல்லாந்தவரசிலும் ஆங்கிலவரசிலும் துவிபாஷிகராயிருந்தவர். நல்லைவெண்பாப் பாடியவர் அவரே. அந்நூல் சொரூபஞ் சிதைந்து வழங்குகின்றது. இவர் வமிசத்தார் இருபாலையில் இன்றுமுளர்.

**கந்தருலோத்துங்க முதலியார்.**—இவர் பறங்கியர்காலவிறுதியில் மாதகற்பதியில் விளங்கியவர். காரைக்கால் கார்காத்தவேளாள மரபினர். இவரது சந்ததி எவ்வளவு பெருக்கமும் செல்வாக்கும் பெற்றிருந்ததெனில் "காவோலைக் கிளைக்கிளைப்பக் கந்தன் கிளைகிளையாய்வரும்" என ஓர் பேச்சு இன்றைக்கும் நடக்கின்றது. இவர் பௌத்திரனை இரத்தினசிங்கமுதலியார், இராசநாயகமுதலியார், அந்தோனிப்பிள்ளை நாவலர் அக்காலத்திற் பெரும்புகழ்படைத்த வித்துவான். இவர் பிறப்பு

1760 வரையிலிருக்கலாம். இவர் புத்திரர் சீமான்கணக்கர் வடதேசஞ்சென்று தஞ்சாவூர் அரசனால் கவீச்சுரன் எனும்பட்டமும் அநேக திரு நாதின்னங்களும் பெற்றுமீண்டார். இவர்க்குப் பௌத்திர முறையினரான சீமாவுடையாரும் கீர்த்திபெற்ற ஓர் தமிழ்வித்துவான். நாடகத்தமிழ் இவர்க்கு அதிகபயிற்சி போலும். இவர்செய்த நூல்களுள் ஞானசவுந்தரி நாடகம் ஒன்று. இவரியற்றிய அநேக தனிப்பாடல்கள் மாதகலில் முதுமொழிபோல இன்றைக்கும் வழங்குகின்றன. யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரித் தமிழ்ப்பண்டிதராயிருக்கின்ற சுபவாக்கியம்பிள்ளை இன்பகவிப்புலவர் இச்சீமாவுடையாரின் சகோதரன் தோமிசுப்பிள்ளையுடையாரின் பௌத்திரன்.

**திசைவீரத்தினமுதலியார், வேந்தர்க்கோன்முதலியார்.**—மேற்குறித்த கந்தகுலோத்துங்க முதலியின் குடும்பத்தோடு விவாகசம்பந்தத்திலுறவுபூண்ட நீக்கிலாக்கணக்கர் என்பவரின் புத்திரருள் பண்டத்தரிப்பு வாசரான திசைவீரத்தின முதலியார் ஒருவர். இவர்பேரில் இயற்றப்பட்ட "கப்பல்பிரபந்தம்" ஒன்று எம் காலவரையில் எட்டியிருக்கிறது. "பண்டநகர் ஆரியகுலம்" எனவும் "தொண்டிநகருய்யவந்த" எனவும் கூறப்பட்டிருக்கின்றமையால் இவர் முன்னோர் தொண்டைமண்டலத்தினின்றும் வந்தவேளாண்மரபினர்போலும். இவர் ஒல்லாந்தரின்கீழ் உத்தியோகம் வகித்திருந்தவரென்பது "உலாந்தரசர்மெய்ச்சும்" எனக் கப்பற்பிரபந்தத்தில் வருகின்றமையாற்றெரிகிறது. இவரது உடன்பிறந்தவர் 'விந்தைசெறிவிதரண விநோத வேந்தர்க்கோன் விளங்கியே வாழ்கின்ற மாதையம்பதி" எனச்சிறப்பித்த மாதகலில் வசித்த வேந்தர்க்கோன்முதலியார் அல்லது டொன் வஸ்தியாம்பிள்ளை. இவர்குமாரன் சூசைப்பிள்ளைமுதலியார் இயற்றிய பாக்களில் திரித்துவ சருவேசுரன்பேரிலும் தேவநாயகி வியாகுலத்தின் பேரிலும் பாடிய வண்ணங்கள் ஏட்டுப்பிரதிகளில் நின்றுலவுகின்றன.

**முத்துக்குமாரசிங்கமுதலியார்.**—ஊர்காவற்றுறையில் டொன் நீக்கொலஸ் முதலியார் என மறுநாமமுள்ள முத்துக்குமாரசிங்கமுதலியார் பழங்கோட்டைக்கணித்தாயுள்ள "ஊருண்டி" எனுமிடத்தில் விசித்திர மாளிகையொன்றில் வசிப்பவராய் விளங்கினர். இவர் பிறப்பு 1730 வரையிலுள்ளது. ஆதியில் அடிமை குடிமைகளோடு மாதகலினின்றும் சென்ற இவர் மடந்தைய முதலியாரின் புத்திரியொருத்தியை மணந்து "ஏழுபண்ணைக்கார" னென வாழ்ந்தவர். வேந்தர்க்கோன் முதலியாரும் இவர்க்கு

நெருங்கிய இனபந்து. இவர் புத்திரிகளுள் ஒருத்தி பரநிருப சிங்கனின் மகள் வேதவல்லியின் வழியில்வந்த டொன்யூசே அளகப்பமுதலியாரை மணந்து யாழ்ப்பாணப்பட்டணத்தில் இன்றைக்கும் பிரசித்திபெற்றோராய் விளங்கும் சந்திரசேகரகுடும்பத்துக்குத் தலைவியாயினள். முத்துக்குமாரசிங்கமுதலியார் புத்திரருள் ஒருவரான மனுவல்தம்பிஉடையார் வழியிலுள்ளோர் பிரதிவக்தர் யோசேப் திருச்செல்வம், பிரதிவக்தர் அல்பிறெட் சுவாம்பிள்ளை, பரீஸ்றர் சேதுபதி ஆதியோர்.

**கணபதி ஐயர்**:—அப்பால் வட்டுக்கோட்டையில் கணபதி ஐயர் விளங்கினர். இவர் தந்தையார் காஞ்சிபுரத்திலிருந்து வட்டுக்கோட்டைக்கு வந்து இல்லறம்பூண்டு, நல்லறஞ்செய்த வாலகிருஷ்ணஐயர். இவர் தம் சுற்றமித்திரரைப்பிரிந்து, வடதேசத்திலுள்ள திருவையாற்று வயிரவசந்நிதியிலே ஓரிராத்திரி இளைத்துக் களைத்துத் தூக்கமற்றோராயிருந்தபோது சுயம்பாடும் சக்தியுண்டாக, உடனே அவ்வயிரவர்பேரிலே பதிகமொன்றைப் பாடினர் என்ப. இவர் வடதேசயாத்திரைசெய்தூர்க்குத் திரும்பினபின்பு· தமது சுற்றத்தவருளொருவராகிய சண்முகஐயர் என்பவர் சில தருக்கள் கீர்த்தனைகளோடே தொடங்கியும் நிறைவேற்றச் சக்தியற்றுவிட்டிருந்த சுந்தரிநாடகத்தை வாளபிமன் நாடகமெனமாற்றி, எவரும் வியக்கப்பாடி முடித்தனர். இந்நாடகம் நாட்டுமாதிரியாயினும் மிகு பளபளப்பும் மளமளப்புங்கொண்டது. இஃதன்றி, வயித்திலிங்கக்குறவஞ்சி, மலையகந்தினிநாடகம், அலங்காரரூபநாடகம், அதிரூபவதிநாடகம் என்பவைகளோடு வட்டுநகர்ப் பிடாரிவயற் பத்திரகாளிபேரில் பதிகமும், ஊஞ்சற்பிரபந்தமும், பருத்தித்துறைக் கணேசர்பேரில் வெண்பா, ஆசிரியம், கலிவஞ்சி, மருள் என்னும் பாவிகற்பம்பெற்ற நூறுகவிதைகளும் பாடினர்.

இவற்றுள் அபிமனுடகம் பாரதசரித்திரத்திலிருந்து எடுக்கப்பட்டது. குறவஞ்சி வண்ணார்பண்ணை வயித்தீஸ்பரர்மேலது. மலையகந்தினிநாடகம் காசிகாண்டக்கதையிலிருந்தெடுத்துப்பாடியது. அதிரூபவதிநாடகம் விக்கிரமாதித்தராசன் வனவாசத்தை யடுத்தது. அலங்காரரூபநாடகம் நவாலியிலிருந்த ஒருவரால் ஆரம்பிக்கப்பட்டும் இப்புலவராற் சிங்காரிக்கப்பட்டு முற்றுப்பெற்றது. இவைகளையன்றி வேறு சில தனிப் பாடல்களும் பாடினர். பிரமசாரி விரதம்பூண்ட இவர் இற்றைக்கு நூறுவருடங்களின்முன் 75 வயதிலே தேகவியோகமாயினர். [பா. ச.]

**லோரேன்ஸ்புலவர்:**—மன்னாருக்குச் சமீபத்திலுள்ள மாதோட்டத்திலே பச்சைக்குளம் என்னுங்கிராமத்திலே பிறந்த வேளாளகுலத்தவர். அர்ச். பிரான்சீஸ்சவேரியார்மூலமாய்க் கத்தோலிக்கவேதம் மன்னாருள் நுழைந்த காலத்தில் இவருடைய பெற்றோர் அம்மதானுசாரிகளானார்கள். கிறீஸ்துநாதர்பேரிலும், அவர் தாயார்பேரிலும், பற்பலகீதங்களைப் பாடினர். புத்தளத்திலே அல்லாப்பிச்சை அண்ணாவியார் எனும் சோனகப்புலவரொருவரோடு கணப்பொருத்தத்தின்பேரில் இவர் வாதாடிச் சயங்கொண்டார்.

ஒருதருணம் கொழும்பிலிருந்து மாதோட்டத்துக்குவந்த புலவர் ஒருவர் இவரிலே தமது யூகத்தைச்செலுத்தும் அபிப்பிராயமுடையவராய் இவரைநோக்கி: ஓய்! மாதோட்டத்தான் கடா மெத்தப்பெரிதாவென, இவர் உத்தரமாய்: ஆமாம்! கொழும்பான் கோவேறுகழுதையைப் பார்க்கக் கொஞ்சம் பெரிது எனச் சொல்லி அவர் மமதையையும் வாய்த்துடிப்பையும் அடக்கினர். இவர் எதாயினும் காத்திரங்கொண்ட புலமையிற் கையிட்டிருந்ததாகக் காணோம். இவர் இருந்த காலம் கிறிஸ்தாப்தம் 1750-ம் ஆண்டுவரையில் இருக்கலாம். (பா. ச.)

**குமாரசிங்கமுதலியார்:**—மாதோட்டத்திலுள்ள நாவற்குளத்தில் இப்புலவர் வாழ்ந்தனர். இவர் பெயர்பெற்ற ஆயுள்வேதபண்டிதருமாயிருந்தமையால் வெகு செல்வாக்குடையராயிருந்தனர். 1800-ம் ஆண்டு நோர்து தேசாதிபதியின்கீழ் ஆபரணவரிக்குத்தகைக்கு மாறாய்க் கலிபிலி யெழுப்பினரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு கசையடி யடிப்பிக்கையில் இவர் உள்ளஞ்சுழந்து கன்னிமரியம்மாள்பேரில் ஆசுகவியாய்ச் சில பாடல்கள் சொல்லினர். (பா. ச)

**நமச்சிவாயப்புலவர்:**—இனி வலிகாமப்பிரிவுக்கு மீண்டுவந்து அங்கு ஒல்லாந்தர் காலத்தில் கிரிதீபம்போல் விளங்கிய பெரியோரிற் சிலரைக்குறிப்பாம். இவருள் நமச்சிவாயப்புலவர் அச்சுவேலி தெற்கிலே வைசியர் குலத்திலே 1740-ம் ஆண்டு பிறந்தவர். இவர் தந்தையார்க்குக் கணபதிப்பிள்ளைச் செட்டியாரென்றுபெயர். கற்பகச்செட்டியாரெனும் வணிகர் திலகரது புத்திரியைப் பாணிக்கிரகணம் பண்ணினர். இவர் பற்பல பாடல்களுக்கு ஆக்கியோன். வரணிக்குறிச்சியிலுள்ள தல்வளை விநாயகர்பேரிற் பாடியவருமிவரே.

**வைத்தியநாதச்செட்டியார்;**—இவரும் நமச்சிவாயப்புலவரைப்போலவே அச்சுவேலியில் வைசியர் குலத்திலே அரிகரபுத்

திரர் என்பார்க்குப் புத்திரராய்ப் பிறந்து 1756-ம் ஆண்டு அங்குள்ள நெல்லியவோடை அம்மாள்கோயிற் பூசகரும் வல்லபாவாணருமாகி, அக்கோயிற் றேவிமேல் பல்பாக்களுடன் பிள்ளைக்கவியுமொன்றை இயற்றினர்.

**மரியாஞ்செட்டியார்:**—முத்துமரியார் எனவும் மறுநாமமுள்ள இவர் வட்டுக்கோட்டை உயர்குலச் செட்டிகள்குலத்தில 1710-ம் ஆண்டுவரையிற்பிறந்து ஆவரங்காலில் வசித்து, அச்சுவேலிச்சந்தையில் வியாபாரஞ்செய்து வருகையில் பத்தைமேனிக்குறிச்சியிலுள்ள ஓர் ரூபலாவண்ணியமுள்ள ஸ்திரியைக் காதலித்து விவாகஞ்செய்துகொண்டிருந்தனர். இவர் சமயத்திற் கத்தோலிக்கக்கிறிஸ்தவராதலால் கிறிஸ்தவரல்லாத ஓர் ஸ்திரியோடு விவாகபந்தனமாயிருத்தல் தகுதியன்றெனயோசித்து, மனைவியையும் காளைகளையும் கூட்டிக்கொண்டு வயாவிளான் கிழக்கிலிருந்த கத்தோலிக்க குருவானவரிடம்போக அவர் இவர்செய்த பிழையை எடுத்துச் சொல்லிக் கோபமுகங்காட்டித் துரத்த இவர் முழந்தாளிட்டுத் தாழ்மையோடு குருவானவரை விண்ணப்பித்து; சுவாமி நான் ஒரு கேள்விகேட்கிறேன்: தயவுசெய்து விடைசொல்லவேணும். ஒரு ஆடு இடையனைவிட்டு விலகிப்போய்விட்டது. அவ்வாடு காட்டிற்றிரிந்து நாலுமூன்று குட்டிகளையுமீன்றுகொண்டு பட்டிக்குத் திரும்பிவரக்கண்டால் இடையன் துரத்திப்போடுவானோ என்று கேட்க, குருவானவர் புன்னகைகொண்டு இவரை ஆசீர்வதித்துப் பிழையைப்பொறுத்து, மனைவி மக்களையுங் கிறிஸ்தவர்களாக்கி முறைப்படி விவாகத்தை நிறைவேற்றுவித்தார். இம்மரியாஞ்செட்டியாரின் அடியும் உயரப்புலத்து திருச்சிற்றம்பலமுதலியாரினடியுமே இன்றைக்கும் அச்சுவேலியிற் கத்தோலிக்கராயிருக்கின்றவர்கள். மரியாஞ்செட்டியார், விசுவநாதஉடையார், இன்னாசித்தம்பிப்புலவர் தம்நாட்டிற் பேர்பெற்ற ஓர் கவிவாணர் விசுவாதநாதவுடையார், சிமாஉடையார், வரோணிக்கம் சந்தியாகுப்பிள்ளை உடையாரின் புத்திரனே சன்மார்க்கபோதினிப் பத்திராதிபராகும் தம்பிமுத்துப்பிள்ளை. சந்தியாகுப்பிள்ளை உடையாரின் தந்தை தெல்லிப்பழை அரசகுல மடப்பளி வமிசத்திலுள்ள குலசேகரமுதலியார் வழியாரான தில்லையம்பலவிதானையார். இவர் சுற்றத்தவர்கள் அச்சுவேலியிலே பத்தைமேனிக்குறிச்சியில் சைவசமயத்தவர்களாயிருக்கிறார்கள்.

**தோன் யுவாம் கனகமாதங்கர்:**—தெல்லிப்பளையில் இப்புகழ்படைத்த சனத்தலைவர் விளங்கினர். இவர் பிறப்பு 1700 வரையிலுள்ளது. இவரிடத்திலிருந்துதித்த மாப்பாணமுதலி,

வன்னியசேகரமுதலி (பத்தாவத்தை) இரகுநாதமுதலி, குலநாயகமுதலி, வைத்தியநாதமுதலி, (சுன்னுகம்) சின்னமாதக்கன், கத்தின், தொமிங்கு (கரவெட்டி) என்போர் பிரசித்தமனுஷராய் வாழ்ந்து கீர்த்திவாய்ந்த குடும்பங்களுக்குத் தலையானுர்கள். இவர் பின்னேரிற் றொன் யுவாம் குலவீரதுங்க கனகராயர் கத்தோலிக்க வேதத்துக்காக விலங்குபூண்டு முற்றவெளியில் அடைத்துவைக்கப்பட்டார் என ஓர் ஐதிகமுண்டு. கனகமாதக்கன் வழித்தோன்றல்களுள் வயாவிளானிலே இன்னும் பலர் கிறீஸ்தவர்களாயும் புத்தூரில் சைவர்களாயுமிருக்கிருர்கள்.

கனகமாதக்கன் காலவரையிலேயே பிறந்தவராகிய குலசேகரமுதலியார் பெரியபுலம் எனப்பட்ட மானிப்பாயில் விவாகம் முடித்துச்சென்று அங்குள்ள பிரதானமனிதருக்குத்தலையானர். யாழ்ப்பாண'ஸ்டேசன்மாஸ்ற'ராகும் கனகசபைப்பிள்ளை,குலசேகரமுதலியார்,புவிராசசிங்கம், கதிரித்தம்பிச்சட்டம்பியார், பொன்னம்பலம், குமரேசர் வயித்தியநாதரின் புத்திரர். (மானியம்பதியார் சந்ததிமுறை)

நீதிபலச்சேனதிராசா:—இவர் வீமன்காமத்தில் 1700 வரையிலேயே உதித்தவர். யுவாம் பப்திஸ்தர் என்பார் குமாரர். இவர் பின்னேர் இன்றைக்கும் இவ்விடத்தில் கத்தோலிக்க கிறிஸ்தவர்களாயிருக்கின்றனர். இவ்வாறே அளவெட்டியில் வீரமணவாளச்சேனதிராயரும், இளவாலையில் இராசரத்தினமுதலியார் ஆதியோரும் பிரபல பிரபுக்களாய் வாழ்ந்தனர்.

கணேசையர்:—இனி யாழ்ப்பாணப் பட்டணத்துக்கருகில் வண்ணர்பண்ணையில் கொச்சிக்கணேசையரென அறியப்பட்ட ஒருவர் ஒல்லாந்தர்காலப் பிற்கூற்றில் வசித்திருந்தார். இவர் ஓர் பிராமணப்பிரபு. யாழ்ப்பாணத்திலிருந்தவர்களும் தென்னிந்தியாவினின்று வருவோருமான தமிழ்ப்புலவர்களைப் போஷித்துத் தமிழை வளர்த்துக்கொண்டு வந்தவர். இவர் யாழ்ப்பாணத்துக் கொம்மாண்டோரின் அரசியற்சங்கத்தில் முதன்மைபூண்டவராயிருந்தமையால் இவரைப் பிராமண முதலியாரென அழைப்பார்கள். இவர் பேரால் பலபிரபந்தங்கள் பாடப்பட்டன. இவர் பௌத்திரன் வண்ணை அனந்த சுப்பைய புலவர்.

கூழங்கைத்தம்பிரான்;—கணேசையர் காலத்திலேயே கூழங்கைத்தம்பிரான் எனும் ஒரு சிறந்த வித்துவான் யாழ்ப்பாணத்துக்கு வந்தனர். இவர் காஞ்சிபுரத்திற் பிறந்தவர். கிறீஸ்தாப்

தத்திற்கு முன்னே தொண்டைமண்டலத்திலே ஆதொண்டைச் சக்கரவர்த்திகாலத்திலே போய்க் குடியேறின ஆதி வேளாளகுலமே இவரது தந்தை தாயரது குலம். தமிழிலன்றி ஆரியத்திலும் பாண்டித்தியம்பெற்ற இவர் திருப்பனந்தாள் மடத்திலிருந்தபோது அம்மடாதிபதி தமது கண்டிகை களவுபோயினமை காரணமாய் இவர்மேற் சந்தேகங்கொண்டு நம்மாற் சூட்டப்பெற்ற குற்றத்தை நீ செய்ததில்லையானல் அழவிற் காய்ந்து சிவந்த இரும்பை உன் வலக்கையிலே எடுத்து நின் நிரபராதத்தை ரூபித்து உன் குற்றத்தால் விலகு என்றனர். நெருப்புத் தன்னைத்தீண்டும் குற்றமுற்றோரையும் அற்றோரையும் சமமே சுடும் என்பதை உணராமலோ, சாகசத்தாலோ இவர் அவ்வாறு செய்கிறோம் என்று உடன்பட்டு வலக்கையால் இரும்பைத்தூக்க அக்கை வெந்து கூழங்கையாயிற்று என்ப. அக்காலந்தொடங்கி கூழங்கையர் எனும் வக்கணைப்பெயர் இவருக்காயிற்று. இச்சம்பவத்தின் பின்பு யாழ்ப்பாணம் வந்து கோபாலச்செட்டியாருக்கும் அவர் குமாரரான வைத்திலிங்கச் செட்டியாருக்கும் நண்பராகி அவர்களுடைய பிள்ளைகளுக்கும் பிறர்க்கும் பாடமோதி காலட்சேபஞ் செய்துவந்தனர். இவரது கல்வியின் ஆழமும் திட்பநுட்பமும் இலங்கை எங்கும் பிரசித்தமானதாற் கொழும்பினுள்ளார் பலர்தாமும் இவரை அழைப்பித்துப் பாடங்கேட்டனர். இவருடைய உதவியால் கபிரிகேல் பச்சேக்கோ எனும் கோவைக்குருவானவர் முதலாம் பலர் தமிழ் வல்லவரரயினர். இவர் நல்ல இலக்கணக்களஞ்சியமாகையால் பவணந்திமுனிவர்செய்த நன்னூலுக்கு வியாக்கியானம் எழுதினர் மாத்திரமல்லாது; பற்பல புலமைகளையும் இயற்றினர். கிறீஸ்தவர்களோடு அதிக கொண்டாட்டஞ் செய்தமையால் எம்மதத்துக்குஞ் சம்மதமான நடையினராகி யோசேப்புப் புராணமென்னும் காவியத்தை இருபத்தொருகாண்டத்தில் ஆயிரத்திருபத்துமூன்று விருத்தத்தாற்பாடி தமது நேசராகிய மெல்லோப்பாதிரியாருக்குப் பிரதிட்டைசெய்தனர். மாதிரிக்காக அப்புராணம் ஆற்றுப்படலத்திலிருந்து ஓர் விருத்தத்தை இவ்விடம் வரைகின்றோம்.

"பயம்புவிக்கருள்பயோதரமிபாவுமந்திரையாற்
பயங்கொள்வேலையிற்பரந்துவாரிதியிடைப்படிந்து
பயங்களானவைபருகியப்பரவையின்வடிவாய்ப்
பயங்கொள்கோரகைகொண்டிடப்பரந்தம்பரமேல்"

இப்புராணமன்றி நல்லைக்கலிவெண்பா கூழங்கையர் வண்ணம் ஆதிய பல பாடல்களைப் பாடியிருக்கின்றார். யாழ்ப்பாணத்துக்கு வந்தபின்பு ஒல்லாந்தம் போர்த்துக்கீஸ் என்னும்

இருபாஷைகளையும் படித்தாராதலாற் "கொம்மாண்டோர்" முதலாம் எந்த உத்தியோகஸ்தருடனுஞ் சம்பாஷிப்பார். மார்க்கவிஷயத்தில் எவரையும் பொருட்பண்ணாது சுவாதீனமாய் நடப்பவர். தமக்கு அன்னதாதாவாயிருந்த வைத்தியலிங்கச் செட்டியார் கட்டிய சிவன்கோயிற் பிரதிட்டைக்குப் போயிருந்தபோது, பூசகர் கொடுத்த விபூதியை வாங்கிச், "சாதிசாதியோடே" என்று சொல்லித் தாம் மாட்டியிருந்த தொடுதோலிற் போட்டனர் என்ற கதை இந்நாளும் உளது. மெல்லோப்பாதிரியார் முதலிய குரவரின் கொண்டாட்டத்தாற் கிறிஸ்த வேதாகம அறிவில் நன்றாய்ப் பயின்றிருந்தார். இவரிடம் இலக்கணம் மதிசாஸ்திரம் முதலாம் நூல்களிற் பாடங்கேட்டபலருள் வைத்தியலிங்கச்செட்டியார் ஒருவர். தம்பிரான் ஒருக்காலுக்கு மேற்படப் பாடம் ஓதார் ஆதலாலும், செட்டியார் அதை விரைவில் மட்டிடல் பிரயாசமாயிருந்ததாலும் மாதகல் மயில்வாகனப் புலவரே இவரிடம் பாடம்கேட்டுச் செட்டியார்க்குச் சொல்லிக்கொடுக்க இரண்டாம் உபாத்தியாயராய் அமைக்கப்பட்டார் என்ப. பிற்காலத்திலே சுண்டிக்குழிக் கோயிற்பற்றைச்சேர்ந்த சிவியாதெரு இவர்க்கு உறைவிடமாயிருந்தது. அதிவிருத்தாப்பிய வயசில் தேகவியோகமாகி நல்லூரைச்சார்ந்த திருநெல்வேலியிற் சமாதிருத்தப்பட்டார். அங்கிலேயர்கையில் யாழ்ப்பாணம் அகப்பட்டகாலத்தில் கிறீஸ்தாப்தம் 1795-ம் வருஷம் இவரது மரணசம்பவம் நடந்தது.

பிலிப்பு தே மேல்லோ:—மெல்லோப் பாதிரியார் என அழைக்கப்படும் இவர் யாழ்ப்பாண நங்கை பயந்த அரிய மைந்தர்களுள் ஒருவர். இவர் 1723-ம் ஆண்டு பிறந்து கொழும்பில் ஒல்லாந்தரின்கீழ் எபிரேயம், கிரேக்கம், லத்தீன், ஒல்லாந்தம், போர்த்துக்கீஸ், தமிழ் எனும் ஆறுபாஷைகளையும் கற்றுத் தேர்ந்த நிபுணராகி, அப்பால் தமது 20-ம் பிராயத்தில் ஒல்லாந்தர் கல்லூரியில் அரங்கேற, அரசினர் இவரை ஒல்லாந்துதேசத்துக்கனுப்பி வேதசாஸ்திரங்களைக் கற்பிக்க விரும்பியும் இவருடன்படாமையால் கொழும்பிற்றானே 1744-ம் ஆண்டு உபதேசிகராக அமைக்கப்பெற்றார். பின் 1750-ம் ஆண்டு குருவபிஷேகம் பெற்று 1753-ம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு ஓர் "மிஷனரி"யாக அனுப்பப்பட்டார். யாழ்ப்பாணத்திலிருந்தபோது இங்குள்ள பல வித்துவான்களோடும் முக்கியமாய்க் கூழங்கைத்தம்பிரானோடும் அளவளாவி மேன்மேலும் செந்தமிழ்ப் பயிற்சிசெய்து சூடாமணிநிகண்டு 2-ம் தொகுதிக்கு அநுபந்தமாக இருபது உவமைப்பாட்டும் 12-ம் தொகுதியோடு நூறுபாட்டும் பின்னும் பல தொகுதிகளோடு வேறு சிலவும்

சேர்த்தார். இப்பாக்களன்றி இராசவாசல் முதலியாராகிய மருதப்பிள்ளையின்பேரில் ஓர் குறவஞ்சியும் வேறு சில பாக்களும் பாடினார். இலங்கையில் முதன்முதல் தமிழில் புதிய ஏற்பாடு முழுமையையும் மொழிபெயர்த்தவர் இவரே. அம்மொழிபெயர்ப்பு 1759-ம் ஆண்டு கொழும்பில் அச்சிடப்பட்டது. இலங்கையில் அச்சிட்ட இப்பழைய புத்தகம் மிக அருமை. நாம் மாதகலில் இதன் ஓர் பிரதியைக்கண்டு விலைக்கு வாங்கி வைத்திருக்கிறோம். மெல்லோப்பாதிரியார் கத்தோலிக்கு சமயத்துக்கு மாறாகச்செய்த "சத்தியசமயம்" எனும் நூலையும் அரசினர் கொழும்பிலே அச்சேற்றினர். ஒல்லாந்தம், போர்த்துக்கீசு தமிழ் எனும் முப்பாஷைகளிலும் பிரசங்க சிங்கமெனப் புகழப்பட்டவராகிய இக்கல்விமான் அறுபத்தேழுவயசில் 1770-ம் ஆண்டு பரமபதமடைந்தனர்.

**கவிரியேல் பச்சேக்கோ:**—இவர் ஓர் கோவைப்பிராமணரும் கத்தோலிக்குசமயக் குருவுமாயிருந்தவர். 1776-ம் ஆண்டுவரையில் இலங்கைக்கு வந்து யாழ்ப்பாணத்தோடு அதிக சம்பந்தம்பூண்டு, தமிழ்ப்பாஷையில் வெகு வல்லுநராகி அநேக பல கத்திய நூல்களைச் செய்தவர். அவை ஐந்து காண்டம்கொண்ட பெரிய பிரபந்தமாகிய தேவப்பிரசையின் திருக்கதை, தேவமாதா அழுகைக்குரவை, நவதின உற்சவம், தனித்த ஆத்துமாக்களுடைய சல்லாபங்களின் நிபந்தனம், யோசேவாஸ்முனிவர் சரித்திர மொழிபெயர்ப்பு ஆதியன. இவர் கூழங்கைத்தம்பிரானோடு நட்பு பூண்டவராகி அவரிடம் செந்தமிழ்ப்பாடங்கேட்டவர். தமிழிலன்றிப் போர்த்துக்கீஸ் ஒல்லாந்தம் என்னும் பாஷைகளிலும் விற்பன்னராகி, இவ்விருபாஷைகளுக்கும் ஓர் அகராதியை இயற்றினார். இவர் நாட்களில் கத்தோலிக்குவேதம் தடையின்றி அனுசரிக்க விடப்பட்டிருந்தது. இவருக்கு 1791-ம் ஆண்டு இலங்கைக் குருமாருக்குச சிரேஷ்டராகும் உத்தியோகம் கிடைத்திருந்தது. இவர் வழிகொண்டு போமிடமெல்லாம் ஒல்லாந்த மேலுத்தியோகஸ்தர்களுக்குப்போல, ஒருவன் குடைபிடித்துப் பக்கத்தே செல்லவும், வேறொருவன் முன்செல்லவும் உத்தரவளிக்கப்பட்டிருந்தது. இவ்வாறே ஒல்லாந்த அரசாட்சியாரைப்போல ஆங்கிலேயராலும் பலவாறு சன்மானிக்கப்பெற்று 1816-ம் ஆண்டுவரையில் இவர் இங்கு சமய கைங்கிரியம் நடத்தி வந்தனர். (இலங்கைத் தேவதாழ்ச்சி உத்தியானம்)

**கோபாலச்செட்டியார்:**—முன்கூறிய கோபாலச்செட்டியார் என்பவர் தமது மனைவியோடும் சோழநாட்டினின்றும் வந்தி

ருந்த ஓர் அகம்படியர். இவர் தொச்சிக்கணேசையரையடுத்து அவருடைய சேவகத்திலிருந்தார். கணேசையர் கோபாலச் செட்டியாரைக் காரணமின்றி ஒருநாட் கண்டித்தபோது செட்டியார் அவர் சேவகத்தினின்றும் விலகிச் சம்பாரவியாபாரஞ்செய்துவந்தனர். இவர் யாழ்ப்பாணம் வந்த நாள்முதலாக ஒரு விநாயகரை ஒரு வேம்பின்கீழ்வைத்துப் பூசித்து வந்தனர். அவ்விநாயகர் கோவில் இப்போது வேம்படிப்பிள்ளையார் கோவிலெனப்படுகின்றது. இவரே ஒல்லாந்த தேசாதிபதிக்குச் சம்பாரங்கொடுக்கும் வழக்கமுடையராயினர். தேசாதிபதி பத்தினியார் கோபாலச்செட்டியாருடைய நேர்மை விசுவாசம் நற்குணம் நல்லொழுக்க முதலியவைகளைக்கண்டு, இவரிடத்தில் மிக்க அபிமானமுடையுராயிருந்தனர். அவர் தமக்கு வேண்டும் எந்த விலையுயர்ந்த பொருளையும் கோபாலச்செட்டியார் மூலமாகவே வாங்குவர். அதனால் கோபாலச்செட்டியாருடைய மதிப்பு ஊரிலும் தேசாதிபதிவீட்டிலும் பெரிதாயிற்று. கோட்டையிலுள்ளவர்களுக்கும் சேனைகளுக்கும் சம்பாரம் வஸ்திரம் உணவு பண்டங்கள் முதலியவெல்லாம் கோபாலச் செட்டியாரே கொடுத்து வந்தார். அதனால் அவருக்கு வருவாய் அதிகப்பட்டது.

கோபாலச்செட்டியாருக்கு ஒரு புத்திரன் பிறந்தான். அதுகேட்டுக் கூழங்கைத்தம்பிரான் கோபாலச்செட்டியாரிடஞ் சென்று உன்புத்திரனைத் தூக்கிக்கொண்டுவா என்றார். செட்டியார் மகிழ்ந்து அப் புத்திரனைத் தூக்கிக்கொண்டுவந்து அவருக்குக் காட்ட, அவர் மிக மகிழ்வோடாசீர்வதித்து, "இப்புத்திரன் பெருங் கருமங்கள் முடிக்கப் பிறந்திருக்கிறான், அவனைச் செவ்வே பாதுகாத்திடக்கடவாய், அவன் பெயர் வைத்தியலிங்கன்" என்று கூறிப்போயினர். அப்புத்திரன் மிக்கவழகும், திடகாத்திரமும், நற்குண நற்செய்கைகளுமுடையனாய் வளர்ந்து பன்னிரண்டு வயசடைந்தான். ஒருநாள் செட்டியார் வைத்தியலிங்கனைக் கடையில் வைத்துவிட்டுப் போசனஞ்செய்யப் போயினர். அப்பொழுது தேசாதிபதி மனைவியார் கோபாலச் செட்டியார் கடைக்கு முன்னே தமது குதிரை வண்டியை நிறுத்திச் செட்டியார் எங்கே என, வைத்தியலிங்கன் எழுந்துபோய் ஒரு மாதுளங்கனியை நீட்டி, "இதனைக் கிருபைகூர்ந்து அங்கீகரிக்கல் வேண்டும்" என்றான். அதற்கிடையில் செட்டியாரும் போசனம் முடித்துக்கொண்டு மீண்டனர். தேசாதிபதிதேவி இச்சிறுவன் யாரென்ன, செட்டியார் சிறியேன் புத்திரன் என்றார். தேவி மகிழ்ந்து அச்சிறுவனைத் தமது வண்டியிலேற்றிக்கொண்டு தமது வீட்டுக்குச்சென்றார்.

அவருக்குப் புத்திரரில்லாமையால் அன்றுமுதல் இச்சிறுவனைத் தமது புத்திரனைப்போலப் பாவித்து நடாத்திவந்தனர். போசன நேரத்துக்கு மாத்திரம் அவனை அவன் வீட்டுக்கு அனுப்பி மற்றக்காலமெல்லாம் தமது வீட்டில் வைத்து அவர்தாமே ஒல்லாந்த பாஷையும் பயிற்றிவந்தனர். பதினெட்டு வயசுவரையும் வைத்தியலிங்கன் தேசாதிபதி வீட்டில் இருந்தான். ஒருநாள் தேசாதிபதி முத்துச்சலாபக் குத்தகை விற்கப்போகிறாரெனக் கேள்விப்பட்ட வைத்தியலிங்கன், தன்னை வளர்த்த தாயாரிடஞ்சென்று, "முத்துக்குத்தகை வாங்க விருப்புடையேன் அதனை வாங்குவதற்கு உதவிபுரியவேண்டும் அம்மா" என்றான். தேவி முகமலர்ந்து அவனை நோக்கி, "அப்பா நீ குத்தகையேற்று நடத்துவாயா" என்ன, அவன் "அம்மாவுடைய தயை எனக்கிருக்கும்போது நடத்தவியலாதோ" வென்றான். அது கேட்ட தேவி ஒரு கடிதம் வரைந்து அவனிடங் கொடுத்து "இதனைக் கொண்டுபோய்க் கச்சேரியில் உனது வளர்த்த தந்தையாகிய தேசாதிபதியிடங் கொடு" என்றார். அதனை வைத்தியலிங்கன் வணக்கத்தோடு வாங்கிக்கொண்டுபோய் வணங்கிநின்று தேசாதிபதியிடங்கொடுத்துப் பக்கத்தே நின்றான். அதனைத் தேசாதிபதி திறந்து வாசித்து முகமலர்ச்சியோடு அவனை நோக்கிக் "குத்தகை வாங்கப்போகிறாயா" வென்ன, அவனும், ஆம், ஐயா என்றான்; பிரதான மந்திரியாராகிய கொச்சிக்கணேசையர் அவனை நோக்கி, "ஏன்னடா நீயுங் குத்தகைக்குத் தக்கவனாய் விட்டாயோ" என்றார். தேசாதிபதி கணேசையர் கேட்டதை அவதானித்து மனசிலே கோபமுடையவனாகி, ஐயரை நோக்கி, "முத்துக்குளிக் குத்தகையை வைத்தியலிங்கச் செட்டிபேருக்கு எழுதி அதற்குப் பிணையாக என் பெயரை எழுதுக என்று கட்டளையிட்டார். ஐயர் தேசாதிபதி கருத்தைக் குறிக்கொண்டு யாதும் எதிர்பேசாது குத்தகையை எழுதிவிட்டார். வைத்தியலிங்கச் செட்டியவர் அக்குத்தகையை யேற்றுக் கிரமமாக நடத்தி ஒரிலக்ஷ ரூபாவுக்குமேல் இலாபம் பெற்றார். இப்படியே மூன்றுமுறை குத்தகைவாங்கிப் பேரிலாபம் படைத்ததுமன்றிக் குணத்தாலும், கொடையாலும், நல்லொழுக்கத்தாலும் ஈசுரபத்தியாலும் சிறந்து பெரும் புகழும்படைத்தார். இவர் சோழநாட்டிலே சங்கந்தி [சங்கேந்தி] யென்னுமூரிலே பெண்கொண்டவர். இவருடைய தாயார் ஒருநாள் முத்துக் காயவைத்துக் கொண்டிருக்கும்போது பிச்சைக்காரனுக்கு ஒருபிடி முத்தள்ளி வழங்கினரென்றால் குழைகொண்டு கோழியெறியும் பெருஞ்செல்வரினும் இவர் பெருஞ் செல்வரென்பது சொல்லவேண்டா.

ஒருநாள் கூழங்கைத்தம்பிரான் வைத்தியலிங்கச்செட்டியாருடைய வீட்டுக்குச் சென்றபோது, செட்டியாருடைய தாயார் அவரை உபசரித்து அவர் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தார். தம்பிரான் அவரை ஆசீர்வதித்து,

"சங்கேந்தி தங்கச்சி தையலென்பா ரிங்கிவளுஞ்
சங்கேந்தி தங்கச்சி தையலே — அங்கவனைக்
கோபாலன் றேவியெனக் கூறுவா ரிங்கிவளுங்
கோபாலன் றேவியெனக் கூறு."

என்னுஞ் செய்யுளைக் கூறினார். கோபாலச்செட்டியார் மனைவி பெயர் தையலாச்சி, அவரும் சங்கேந்தியிற் பிறந்தவரே.

**வண்ணை வைத்தீசுராலயம்:**—வைத்தியலிங்கச்செட்டியார் தமக்கொரு சிறந்த மாளிகை கட்டவெண்ணித் தம்பிரானிடஞ்சென்று தமது கருத்தை வெளியிட்டனர். அவர், "உன்னை இந்நிலைக்குக் கொண்டுவந்தவர் உனது பரம பிதாவாகிய வைத்திலிங்கக்கடவுளும் உலகமாதாவாகிய தையல்நாயகித் தேவியாருமன்றோ. அவர்க்காலயம் வகுத்தபின்னரே நீ உனக்கு மாளிகை கட்டவேண்டுமென்றனர். அது கேட்ட செட்டியார், "அவ்வாறே செய்வேன்" எனக் கூறித் தம்பிரான் வகுத்தவிடத்தை வாங்கி, வண்ணை வைத்தீசுரன்கோவிலென்று இன்றும் இணையற்று விளங்கும் சிவாலயத்தைக்கட்டிக் கும்பாபிஷேகஞ்செய்வித்துப் பறங்கிக்காரரால் அழித்தொழிக்கப்பட்ட சைவப்பயிரை மீளவும் நாட்டினர். இத்திருப்பணிக்கு யாழ்ப்பாணத்துள்ள ஏனைய பிரபுக்களும் சிறிது பொருளும் பூசைக்கு விளைநிலங்களுந் தோட்டங்களு முதவினாராயினும், பெரும்பாலும் வைத்திலிங்கச் செட்டியாரே தமது திரவியங்கொண்டு முடித்தனர். இவரும் தம்பிரானும் யாழ்ப்பாணத்துக்குச் செய்தவுபகாரம் யாழ்ப்பாணமுள்ளவரையும் அவர்பெயரை விளக்கிக்கொண்டேயிருக்கு மியல்பினதாம். செட்டியார் சந்ததியார் யாழ்ப்பாணத்திலும் சோழநாட்டிலுமிருக்கிறார்கள். (யாழ்ப்பாணச்சரித்திரம்.)

வண்ணை வைத்தீசுரன்கோவில் பிரதிட்டை செய்யப்பட்டது 1791-ம் ஆண்டு சித்திரைமாதத்திலாம். (யாழ்ப்பாணவைபவம்.)

**நல்லூர்க் கந்தசுவாமிகோவில்:**— ஒல்லாந்தாகால இறுதியிலேயே இதுவும் "இரகுநாத மாப்பாணமுதலியாரால் கட்டப்பட்டு வெகுசனசமூகஞ்சேர்ந்து ஆராதனைபுரியும் விசேஷ ஸ்தலமாயிருக்கின்றது. பிரமன் மால் முதலாம் பெருந்தகைத் தே

வரும், தெரிவரும் அருணிறை சின்மய வடிவாய், யாவரே யெனினுந் தன்னுண்மலரடிமேவி, மெய் அகம் வாக்கு யாவதும் ஒன்றித்து இடையறா அன்போடு வழிபாடு இயற்றுவாராயின, அவ்வவர் வேண்டும் எவ்வகை வரமும், பச்சைமயில்வாகனப் பரமனாகிக், கலியுகமதனில் வெளிவந்தருளலாற்கலியுகவரதனென் றடியர்களேத்தும் ஆறுமுகக் கடவுள், ஈழமண்டலமெனப் பெயர்மருவிய இலங்கை மத்தியில் யாவருமேத்துங் கதிர்காமப்பதியே. உவந்தருள் பதியாக்கொண்டு முழு அருளுருங்கொண் டெழுந்தருளியபடி எப்படி 'அப்படியே' இந் நல்லைப்பதியின்கண் ஆண்டுதோறும் ஆவணி அமாவாசியே தீர்த்தோற்சவத் தினமெனக்கொண்டு நடாத்தும் இருபத்தைந்துநாட் டிருவுற்சவங்களுள் அதி விசேஷ தினமாகிய பத்தாந்திருநாளிலும், ஏனைய புண்ணிய தினங்களிலும் எழுந்தருளியிருந்து விசேஷாநுக்கிரகம் புரிவர். சுவாமி பச்சைமயிலவாகனத்திலும் அவர் சத்தியர்களாகிய தெய்வநாயகியம்மையார், வள்ளிநாயகியம்மையார் இருவரும் வெள்ளி அன்னவாகனத்திலும் திருவோற்சவகாலங்களில் திருவீதிப்பிரதக்ஷிணம் வருவர். இவ்வாலயத்தில் நாக்கறுத்தல் முதலிய பத்திவைராக்கியக்கிரியைகளை செய்வோர் பலர்." (யாழ்ப்பாணவைபவம்)

**சின்னத்தம்பிப்புலவர்:**—1707-ம் ஆண்டு சிமோன்ஸ் என்னும் கவனரின்கீழ் யாழ்ப்பாணத்தாரது தேசவழமை என்னும் ஓர் சட்டம் சேர்த்துச் செய்யப்பட்டது. இத் தேசவழமையைப் பரிசோதனைபண்ணித் திருத்தும்படி நியமிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பிரபுக்களுள் ஒருவர் வில்லவராயர். இவர் நல்லூரில் வசித்திருந்தவர். இவர் புத்திரனே சின்னத்தம்பிப் புலவர். கூழங்கைத்தம்பிரான் இவ் வில்லவராயமுதலியார் வீட்டிலேயே இராக்காலத்திலே வித்தியாகாலக்ஷேபஞ்செய்துவந்தனர். முதலியார் புத்திரன் தம்பிரான் காலக்ஷேபத்தின் பொருட்டுப் படித்துப் பொருள்சொல்லிவந்த பாட்டுக்களையெல்லாம் ஏழுவயதளவில் அவதானம்பண்ணி உடனே அவ்வாறே ஒப்பித்து வந்தனர் என்றால் அப்புத்திரனுடைய விவேகம் இவ்வளவென்று சொல்லவேண்டுமா! ஒருநாள் அப்புத்திரனார் வீதியிலே நின்று விளையாடிக்கொண்டிருக்கையில், ஒருபுலவர் வில்லவராய முதலியார்வீடு எங்கேயென்று வினவ, அப்புத்திரனார் அவரைப்பார்த்து,

"பொன்பூச் சொரியும் பொலிந்தசெழுந் தாதிறைக்கும்
நன்பூ தலத்தோர்க்கு நன்னிழலாம்—மின்பிரபை
வீசுபுகழ் நல்லூரான் வில்லவரா யன்கனக
வாசலிடைக் கொன்றை மரம்"

என்று கூறினர். அதுகேட்ட புலவர் அப்புத்திரனுரை மெய்ச்சி இச்சிறுபருவத்தே இத்துணைச் சிறந்த கவியினாலே விடைகூறிய நீ வரகவியாதல் வேண்டுமெனக்கூறிக் கட்டித் தழுவி உச்சிமோந்து சென்றனர். அவர் பதினைந்து வயசளவிற் சிதம்பரஞ்சென்று தலயாத்திரைசெய்து மீளும்போது வேதாரணியத்தையடைந்து அங்கே மறைசையந்தாதிபாடி அரங்கேற்றினர்.

செந்தாதியன்மணிப்பூம்புலியூரரைச்சேர்ந்துநிதீச்
சிந்தாதியானஞ்செய்வில்லவராயன்றிருப்புதல்வன்
நந்தாவளஞ்செறிநல்லைச்சின்னத்தம்பிநாவலன்சீர்
அந்தாதிமாலையைவேதாடவிசர்க்கணிந்தனனே.

சின்னத்தம்பிப்புலவர் மறைசையந்தாதி மாத்திரமன்று கல்வளையந்தாதி முதலிய வேறு பல நூல்களுஞ் செய்தனர்.

ஒருமுறை யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையிற் கனேசையர் வீட்டில் அனேக வித்துவசனர் சபைகூடி இராமாயணத்துக்கு அர்த்தம்பண்ணிக்கொண்டிருக்குஞ் சமயம் அவர் சொல்லமுடியாது மலைத்த ஓர் பாட்டிற்கு இளைஞராதலில் ஓர் கோணத்தில் உளுக்கார்ந்திருந்த இப்புலவர் அர்த்தஞ் சொன்ன திறமைக்காக மகா கனவானுன அவ் ஐயர் பண்டாரக்குளம் என்னும் ஓர் வயலை இவர்க்கு வெகுமதி கொடுத்தனர்.

இவர் சிறுமையிலே பாடசாலைக்குச் செல்லாது அசட்டைசெய்து மாடுமேய்க்கும் பிள்ளைகளோடு விளையாடித்திரிவாராதலில் தந்தையார் இவரைத் தண்டிக்க இவர் அவர் கண்ணுக்குத் தென்படாது ஒழித்துப்போய்த் தாயாரிடம் அன்னம்வாங்கி உண்டு கட்டாக்காலிபோல் மறுபடி பாய்ந்துவிடல் வழக்கம். இப்படித் திரியும்போது ஒருநாள் வழக்கம்போலப் பிதா இல்லாத நேரம் வீட்டுக்கு வந்து போசனம் உண்டு அவர் முதலடி எடுத்து எழுதி வைத்துவிட்டுப்போன ஓர் அந்தாதிப்பாட்டை இறப்பிலிருக்கக்கண்டு எடுத்து அதின் 2-ம் 3-ம் 4-ம் அடிகளை எழுதிவைத்துத் தம்பாட்டிற் போயினராம். பிதா வீட்டுக்குவந்து முன் தொடங்கிவிட்டுப்போன பாட்டை முடிக்கும்படி ஓலையைத்தேடி எடுத்துப் பாட்டு முடிந்திருக்கக்கண்டு இங்கே வந்து போனது யாரென்று மனைவியிடம் கேட்க, அவள் அச்சங்கொண்டு மறைத்தும், பின் நாயகன் நெருக்கத்தால் அந்தப் பேய்ப்பையல்தான் உங்கே வந்தானென்று கூறப், பிதா மகிழ்ந்து இவரைத் தேடி அழைத்து நேசம்பாராட்டி அப்புறம் இவர் அந்தாதி பாடிமுடித்தனரென்ப

இவரது சுற்றத்தார் நல்லூரிலும் சண்டிருப்பாயிலும் இளவாலையிலும் இருக்கிறார்கள். [யா. ச.]

கந்தப்பிள்ளை:—நல்லூரில் இலங்கைகாவல முதலியார் பரமானந்தர்க்கு மைந்தரான கந்தப்பிள்ளை ஒல்லாந்தர்காலவிறுதியில் விளங்கினர். இவர் 1766-ம் ஆண்டு பிறந்து ஐந்துவயசிலே வித்தியாரம்பஞ்செய்து, சண்முகச் சட்டம்பியார் என்னும் ஒருவரிடந் தமிழ்க்கல்விகற்று, முன்கூறிய கூழங்கைத் தம்பிரானிடத்திலேயே இலக்கண இலக்கியம் வாசித்து வல்ல புலவராயினர். தமது சுயபாஷையை மாத்திரமல்ல, பறங்கித்தெருவிலிருந்த மெல்லோ பாதிரியாரிடம் உலாந்தா, போர்த்துக்கீஸ் என்னும் இரு பாஷைகளையும், சல்பேட் பறங்கியிடம் ஆங்கில பாஷையையுங் கற்றவர். பதினெட்டு வருஷங்களாக அரசாட்சியாரிடம் ஆராச்சி உத்தியோகத்திலிருந்து வழக்கமாய் ஆராச்சி கந்தர் என்னும் பெயரால் அறியப்பட்ட இவர்க்குத் திருநெல்வேலியில் வதிந்த வேதவனத்தார் புத்திரி சிவகாமிப்பிள்ளையை விவாகஞ்செய்து, தியாகர், சின்னத்தம்பி, பூதத்தம்பி, பரமானந்தர், தம்பு, ஆறுமுகநாவலர் என்னும் ஆறு புத்திரரும், ஆறு புத்திரிகளும் பிறந்தார்கள். ஆராச்சி உத்தியோகத்தோடு வைத்தியமும் கல்வியறிவும் இவரிடத்தில் விளங்கிய காரணத்தால், இவர் சென்றுழியெங்கும் கண்ணியமும் மரியாதையும் இவர்க்கிருந்தன. அரசாட்சியாரின் உத்தியோகத்தைத் தாமாகவே விட்டபின்பு தம் வாணாளை நாடகம்பாடுவதிலே போக்கினர். இவர்பாடிய நாடகங்கள், சந்திரகாசநாடகம், இராமவிலாசம், நல்லைநகர்க்குறவஞ்சி, கண்டிநாடகம், ஏரோதுநாடகம், சம்நீக்கிலார்நாடகம், இரத்தினவல்லி விலாசமாதிய 21 எனக்கேள்வி. இறுதியிற் சொல்லப்பட்டதே இவர் கடைசியாய்ப் பாடத்தொடங்கிய பாடல். அதனைப் பாடிக்கொண்டிருக்குந்தருணம் 1842—ம் ஆண்டு ஆனிமீ 2-ந் திகதி புதன்கிழமை 76-ம் பிராயத்திலே சட்டென யாதோர் நோயுமின்றி இறந்தனராம். இவர்பாடத்தொடங்கி விட்டிருந்த இரத்தினவல்லி விலாசத்தை ஆறுமுகநாவலரே பாடிமுடித்தனர். மேற்கூறப்பட்ட நாடகங்கள்லாது தனிப்பாக்களும் பல பாடினர். உலாந்தா அரசாட்சியாரிடம் வைத்தியராகவிருந்தாரன்றி, சில வைத்திய நூல்களுக்கு உரையும் இயற்றினர். இவரது தௌகித்திர பௌத்திரருள் ஸ்ரீ. பொன்னையாபிள்ளை, ஸ்ரீ. கைலாசபிள்ளை என்பார் பிரேட்டர். சுற்றமித்திரர் அநேகர் சீர்சிறப்பாய் இருக்கின்றார்கள். (பா.ச.தீ.)

துந்துலமேன்மக்கள்:—யாழ்ப்பாணப்பட்டினத்திற் பறங்கியர் காலந்தொட்டு நிலத்தாசர்களாயும் அரசாட்சி உத்தியோ

கங்களிற் பல்வற்றைற வகிப்போராயுமிருந்து வருகின்ற ஒரு சாகியத்தைப்பற்றி இங்கு சில குறித்தல் தகுதியேயாம். இவர்கள் தென்இந்தியாவின் கரைதுறைப் பட்டணங்களினின்று வந்தமைபற்றி "கரையார்" எனும் பொதுப்பெயரிலடக்கிச் சொல்லப்படினும் நுழையர் செம்படவரோடு சமநிலைப்படுத்தி நோக்கப்படக்கூடாத நாட்டாண்மைக்காரரேயாவார்கள். பெரியபுராணத்திற் குறிக்கப்பட்ட தண்டுறைப்பாக்கத்தலைவன் போலும் கரைபட்டணங்களின் முக்கிய மனுஷரே இவர்கள் முன்னோர் என்ப. உள்ளபடி நடுகையினின்று "நாடு" எனப்பட்ட உட்தேசங்களின்முன் கரைதுறைப்பட்டிகளே பட்டினங்களாயின என்பது சரித்திரசம்மதம். இனி நம்பட்டினத்தினுள்ள இவ்விசேஷ சாகியத்தார் பறங்கியர் காலத்தில் தென்னிந்தியாவினின்றும் அடிமை குடிமைகளோடு வந்து அவர்க்கீழ் உத்தியோகம் வகித்துக் குடியேறினர் என்ப. தென் இந்தியாவின் "குருகுல" தலைவர்கள் தமிழரசர்காலத்திலும் யாழ்ப்பாணச் சேனைக்குப் பலகாலும் உபபலமாய் வந்ததுண்டு. இவ்வாறே 1618 அளவில் சங்கிலி குமாரனுக்கு உதவியாய் வருணகுலத்தன் என்பவன் ஓர் சேனையோடு வந்தனனெனச் சரித்திரம் கூறுகின்றது. இச்சேனையையே 59-ம் பக்கத்தில் தஞ்சாவூரினின்று வந்தது என்றோம். அப்பால் பறங்கியருக்கெதிராய் நாயக்கன் 1619-ம் ஆண்டு அனுப்பியசேனையும் ஓர் "குருகுல" தலைவனின் கீழேயே வந்தது எனக்கண்டோம். (66. பக்) இவன்பெயரை செம்நாயக்கன் எனப் பறங்கிநூல கூறும். (Farya y Souza) இவனே வருணகுலத்தன் எனப்பட்டவன் என்பது சிலர்துணிபு.

இச்சாகியத்தார் மூவரசுகளின் கீழும் பிரபலம்பெற்ற தலைவர்களை உடையோராயிருந்தனர். நம்காலவரையில் அறியப்பட்ட பழைய நாமங்களுளொன்று டொம் தீயோகு வால் புவிராசசிங்கமுதலியாருடையது. இவர் மகன் தொம் யுவாம் புவிராசசிங்கமுதலி. இவர் மகன் யாழ்ப்பாணத் தோம்புக்காரனுயிருந்த டொம் நீக்கொலஸ் இசைவீரசிங்கமுதலி. இவர்காலம் 1763 முதல் 1859 வரை. ஆகவே இவர் பேரனர் காலம் 1700 வரையிலெட்டுகின்றது.

யாழ்ப்பாணம் "சிதாரி" யில் இன்றைக்கு விளங்கும் பெரியமனுஷர் பலர் இவரதும் இவரோடு சம்பந்தம்பூண்ட குடும்பத்தவரதும் வழித்தோன்றல்களேயாவர். இவரோடு சம்பந்தம்பூண்ட குடும்பங்களுளொன்று இவர் குமாரத்திகளுளொருத்தி விவிந்தாவை மன்றல்செய்த சூசைப்பிள்ளை அட்டப்பனர், மரியைப்பிள்ளை, தீயோகுப்பிள்ளை யென்பாரது பிதிர்வழி. இத்

தியோகுப்பிள்ளையின் மருகரான மிகேற்பிள்ளை புத்திரர் சூசைப்பிள்ளை. இவரது சிரேஷ்ட புத்திரனே தற்போது பிரபலமுற்று விளங்குபவரும் "சூசைப்பிள்ளை அன்சன்ஸ்" எனும் விலாசத்தோடு பாரிய வர்த்தகம் நடத்துபவரும் பத்திமானுமாகிய ஸ்ரீ. ஞானப்பிரகாசம்.

அக்காலத்தில் யாழ்ப்பாணப்பட்டினத்தில் புவிராசசிங்கமுதலி ஆகியோரே அதிக செல்வமும் செல்வாக்கும் படைத்தோராய் விளங்கினர் என்ப. ஒல்லாந்தர் இருந்த பறங்கித்தெரு நீங்கலாய் மற்று "சிதாரி"யிலும் சுண்டிக்குளி, கொளும்புத்துறையிலும் தொகைப்பட்ட நிலம் புலங்களை ஆள்வோராயிருந்தவர்கள் இவர்களே.

குருகுல மேன்மக்களாய் விளங்கிய கற்றோருள் சில புலவர்களுமிருந்தனர். இன்னோரில் கதிர்காமப்புலவர் நன்கு அறியப்பட்டவர். இவர் ஓர்நாள் தமது மனையைக் கொள்ளையடிக்கவந்த கள்வரைத் தம் கவித்திறனால் ஸ்தம்பனம் பண்ணிவிட்டனரென ஒரு கதையுளது. இவர் வரலாறுகள் சிலவற்றை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இலங்கைநேசன் பத்திரிகையிற் தீட்டியுள்ளார்.

ஒல்லாந்தர்காலப் பிற்கூற்றிலிருந்த இச்சாகியத் தலைவர்களுள் அவ்வரசின்கீழ்விளங்கிய கடைசி "இறைசுவதோர்" எனும் உத்தியோகஸ்தரான டொம் தியோகு வருணகுலசூரிய அரசுநிலையிட்டமுதலியார் தமிழை வளர்ப்போராய் விளங்கினார் என்பது, இவர் கேள்விப்படி ஞானானந்தபுராணம் எனும் ஓர் காவியத்தைப்பாடிய டொம் பிலிப்புப்புலவரின் கவிகளால் தெரிகிறது. இப்புலவர் கூறுவது:—

"அல்லலுறு மஞ்ஞானத் திமிரந்தேய வருள்ஞான விசுவாசம் விளங்கமுந்நூற்—புல்லியசொற் சிறிதெடுத்து விருத்தப்பாவாய் மேபோந்தவுரோர் மாபுரியின் சங்கத்தோரால்—தொல்லுலகி லுயர்ந்தகுரு குலத்துமன்னன் றொன்தீயோ கெனுமுதலி முயற்சியாலே—தெல்லிநகர் வேளாளன் தொம்பிலிப்புச் செந்தமிழாற் காப்பியமாய்ச் செய்தான்மன்னோ"

டொம் தீயோகு முதலியார் காலத்திலேயே யாழ்ப்பாணப் "பெரியமாதா"கோயில் கட்டிடமாகத் தொடங்கியது. இம் மேன்மகன் அக்கட்டிடத்துக்கு மிகு பொருளுதவிக் கத்தோலிக்க சபையின் ஓர் விசேஷித்த ஸ்தம்பம்போல் விளங்கினர்.

டொம் பிலிப்புப்புலவர்:—இத்தொடர்பில் இப்புலவர் இயற்றிய காப்பியத்தைக் குறித்துஞ் சிறிது கூறுவாம். இது கிறீஸ்துவின். சரிதையை எடுத்தோதுவது. உற்பத்திகாண்டம், உபத்திரவகாண்டம், உத்தானகாண்டம் என மூன்றுபிரிவும் பா

யிரத்தோடு இருபத்துநான்கு சருக்கங்களும், 1084-விருத்தப் பாக்களுமாய் அமைந்தது. புலவர் நூலைப்பாடியகாலம் பிரிட்டிஷ் அரசாட்சி காலமே எனத் தற்சிறப்புப்பாயிரச்செய்யுள் ஏழாவதில் வரும் குருவானவர் பெயரால் விளங்குகிறது. இவர் தெல்லிப்பழையைச் செனனஸ்தானமாய்க்கொண்ட சோழவேளாள குலோத்துங்கர். இவர் தற்காலம் பிரபுக்கள்குடியிருப்பு எனப்படும் சுண்டிக்குளி வடபாகத்தில் வசித்தனர் என்ப. இவரைப் புகழ்ந்து மாதோட்டத்து காலிங்கராயரெனும் இவர்மாணுக்கர் 1841-ம் ஆண்டிற் பாடிய குருவணக்கம் பின்வருமாறு:

"ஏர்மேழியின்கொடியோன்-புவி-யெங்தெண்டிசைமகி ழுந்தண்டியலொடு இந்தின்குடைநிகர் சொக்தஞ்சுரர்புக-ழிறைவர்கள்மகிழ்வுயர் துரைப்ரதானிகள் தரவெழுகுவளையின் மலர்க்கொள்மார்பினன் றிரளுறுசபைமணி விளக்கதாகிய தரைதனிலுயர்கவி புகழ்ப்பிரதாபித னெனவருளுறைதொம் பிலிப்புநாவலர்-இருசரணமும்வாழி"

டொம் பிலிப்புப்புலவரின் அடியிலுள்ள மேன்மக்களொருவர் தெல்லிப்பழைவாசரும் ஒருகாலம் கொழும்பில் "புறோக்கர்" உத்தியோகத்திலமர்ந்திருந்தவருமான ஸ்ரீ. அல்பிறெட், மத்தியு, சிற்றம்பலமவர்கள். புலவரை ஆதரித்த குருகுலதிலகர் வழியிலுள்ளோருள் சிலவருஷங்களின்முன் தேகவியோகமான டக்றர் அல்பிறெட், பெனடிற், சந்தியாகுப்பிள்ளையின் குடும்பம் நன்கறியப்பட்டது.

தொன் நல்லதம்பிச்சட்டம்பியார்;— குருகுல மேன்மக்களுள் 1750-ம் ஆண்டு வரையில் வாழ்ந்த குருகுலசூரிய தொன் நல்லதம்பிச்சட்டம்பியாரென்பவரும் ஒருவர். இவர் பெயர்பெற்ற ஒரு வைத்தியர். இவருடைய மகன் தொன் அகுஸ்தீன் மன்னர். இவர் புத்திரன் தொன் அந்தோனி அரசர். அவர் கந்தப்பசேகரமுதலியாரின் மனைவியின் தமக்கையை விவாகஞ்செய்தார். இவர் புத்திரர் தொன் சவிரிமுத்து, தொன்ஆபரணம் என்போர். அந்தோனி அரசரின் இரண்டாந்தாரத்துப்பிள்ளை இறப் பி கே ற் பி ள் ளை ச் ச ட் ட ம் பி ய ா ர். அந்தோனியரசர் காலத்திலேயே அவர் சுற்றத்தார்வசித்த பதிக்கு பிரபுக்கள் குடியிருப்பென்று பெயர் வழங்கலாயிற்றென்ப. இவருக்கு ஒல்லாந்தர் அரசநாயகமுதலியென்ற பட்டத்தை யளித்திருந்தனர். அதெவ்வாறெனில், கொம்மாண்டோரின் மனைவி பெறும் பிள்ளைகளெல்லாம் பிறந்தவுடன் இறந்துபோக அவன் பல வைத்தியங்கள் செய்வித்தும் பயன்படவில்லை. சில மேல் உத்தியோகஸ்தர் அந்தோனி அரசரெனும் பண்டிதர் உமது மனைவியின்

வியாதியைக் குணமாக்குவாரென்று சொல்ல, அவன் இவரை அழைப்பித்து வைத்தியஞ்செய்வித்து, சுகங்கண்டதால் இவருக்கு வெகுமதியுஞ்செய்து அரசநாயக முதலியெனும் பட்டமுங்கொடுத்து மேளவாத்தியங்களோடு சங்கைபண்ணிவைத்தான். இவர் புத்திரர் மூவரும் இவரைப்போல வைத்தியத்திலும் புலமையிலும் கீர்த்திபெற்றனர். இறப்பிகேற்பிள்ளை அரசநாயக பண்டிதர் செபமாலைமாதாவின்பேரில் வாசகப்பா வசனங்களும் மெய்ஞ்ஞானவர்த்தக நாடகமுமியற்றினர். அரசநாயக முதலியின்வழியிற் பிரசித்திபெற்ற மனுஷருள், அவர் சிரேஷ்டபுத்திரன் சவிரிமுத்து, மகன் வஸ்தியாம்பிள்ளை, மகன் நீக்கிலாஸ்பிள்ளை வைத்தியபண்டிதர். இவரது புத்திரன் போல் அரசநாயகம்.

**சந்திரகுலோத்துங்க கந்தப்புச்சட்டம்பியார்:**— இவரும் நல்லூரில் 1749-ம் ஆண்டுவரையில் பிறந்தவர். இவர் சகோதரன் சின்னத்தம்பிப் பண்டிதர். இவர் அழகலட்சுமியை விவாகஞ்செய்து பாவிலுப்பிள்ளையைப் பெற்றனர். இவர் தம் பெரிய தந்தைபுத்திரனாகிய முருகவேள் வைத்தியனையும் அழைத்துக்கொண்டு பாசையூரில் குடிபதியாய் வாழ்ந்தனர். மேற்படி வைத்தியனின் புத்திரன் சுவாம்பிள்ளை. இவர் ஆயுள்வேதபண்டிதராயும், புலமைத்திறமையுள்ளவராயும், பற்பல விஷகடி வித்தைகளில் கீர்த்திபெற்றவராயும் விளங்கி, இந்தியாவிலிருந்து வந்த சோனக பண்டிதனோடு வைத்தியத்திலும் இன்னும்பல வித்தைகளிலும் வாதாடிச் செயத்தம்பம் நாட்டியவர். இவர் அக்காலத்தில் கீர்த்திபெற்ற புலவராயிருந்தமையால் அலேசு நாடகம், ஞானரூபன்நாடகம், அருளானந்தமாலை, அந்தோனியார் வாசகப்பா, வசனம், பஞ்சவர்ணத்தூது, சிந்தாகுலத்திரட்டு, சின்ன ஒப்பாரி, ஞானக்கும்மி முதலான வெத்தனையோ பாக்களைச் செந்தமிழில் இயற்றியவர். மேற்படி பாவிலுப்பிள்ளையின் புத்திரன் சிமியோன் பண்டிதர். இவர் முத்ததம்பி அடப்பனாரின் பௌத்திரியை விவாகஞ்செய்தவர். இவர் வைத்தியத்திலும், கல்வித்திறமையிலும், சித்திரவேலையிலும் வாழையடிவாழையாய்த் தம்முன்னோரிலும் அதிபிரபலமுற்று விளங்கினர். சிமியாம்பிள்ளை வைத்தியர், கிளமேந்து இராசேந்திர பண்டிதருடன் எழுவரைப்பயின்றனர். கிளமேந்துவைத்தியர் நாற்றிசையிலும் வைத்திய சிரோமணியெனப் புகழ்பெற்று தியாகராவுடன் நால்வரைப் பெற்றனர். இவர்களது குடும்பம் தற்காலம் பாசையூரிற் பிரபலமுள்ளவைகளுளொன்று.

**பணங்காமத்து வன்னிச்சி;**— இனி வன்னியர்களைப்பற்றிச் சிறிது கூறுவாம். பணங்காமத்திலே நல்லமாப்பாணமுதலியார்

ஒல்லாந்தருக்கு மாறாக இராசதுரோகச் சூழ்ச்சி செய்கின்றாரென்று கீழ்நாட்டுச் சிங்கள வன்னியனொருவர் எழுதிவிடுத்த நிருபத்தைக்கொண்டு ஒல்லாந்தர் அவரைப்பிடித்துப் பன்னீராயிரம் இறைசால் அபராதம் விதித்து அது கொடுக்கும் வரையும் சிறையிலிருக்குமாறு கொழும்புக்கு அனுப்பினர். அவருடைய நிலங்களையெல்லாம் பிடித்து அந்நிலத்து வரும்படிகளை மூன்றுவருஷத்துக்குக் குத்தகைகூறி விற்றனர். அக்குத்தகையை வாங்கி அதினாற் பெரும்பொருள்படைத்து விளங்கினவர் பெரிய தாமோதரம்பிள்ளை என்பவர். இவ்வீடு சித்திரக்கட்டு வீடெனப் பன்றிக்கோட்டு விநாயகராலயத்துக்கு முன்வளவிலிருந்து இற்றைக்குச் சிலவருஷத்துக்கு முன்னர் அழித்துக்கட்டப்பட்டது. [நவாலிச் சின்னையாவுடையார் இவர் பௌத்திரன்] நல்லமாப்பாணமுதலி மனைவியார், எல்லைகாவேதநல்லநாச்சியார். பனங்காமமுதலிய அந்நககிராமங்களுக்கு அவரே சிற்றரசி. அவ்வரசியை விவாகஞ்செய்த நல்லமாப்பாணர் செல்வமும் அதிகாரமுமுடையராயினர். எல்லைகாவேத என்னும்பெயர் எலிசபேத் காதரினா என்னும் கிறீஸ்துபெயர் என்ப. நல்லமாப்பாணமுதலியார் சிறைப்பட்டுக் கொழும்புக்குச்செல்ல. எல்லைகாவேத நல்லநாச்சியார் யாழ்ப்பாணம்வந்து வண்ணார்பண்ணையில் வசித்தனர். அவர் தமது நாயகனை மீட்டன்றி நீராடுவதும் முப்போதுண்பதுமில்லையென விரதங்கொண்டிருந்தனர். அதுகேட்ட வைத்தியலிங்கச் செட்டியார் கொழும்புக்குச்சென்று பன்னீராயிரமுங்கட்டி முதலியாரை மீட்டுக்கொண்டு மீண்டனர். வன்னியனார் அப்பன்னீராயிரத்துக்கும் இருபத்தையாயிரம் பனைகளும், வைத்தீசுவர சுவாமிக்கும் தையல்நாயகி அம்மையாருக்கும் நித்தியபூசைக்காகத் தேருக்கண்டற்கிராமத்தையுங்கொடுத்தனர். அதுகண்டு அக்காலத்திலே சிறுப்பாகவிருந்த பூலோகசிங்கமுதலியாரும் சில திருப்பணிகள் செய்வித்தனர். (யாழ்ப். சரி.)

மெஸ். நாகநாதமுதலியாரின் குடும்பக் குறிப்புகளின்படி நல்லமாப்பாண வன்னியனும் வன்னிச்சியாரும் மூவர் பிள்ளைகளுமாக ஐவரும் கொழும்புக்கனுப்பப்பட்டனர். வைத்தியலிங்கச்செட்டியார் தேசாதிபதிக்கு மித்திரனாயிருந்தமையால் இவர்களுடைய மீட்சியை இலவசமாகவேயடைந்தனர். வன்னியனாரின் பிள்ளைகளே பூநெரிக்கணித்தாயுள்ள கருங்கண்டல் கிராமத்தை வைத்தீசுரன்கோயிலுக்கு மானியமாக்கினர்.

மரியைசெம்பாத்தையும் பூதநாதாசாச்சியும்:—ஒல்லாந்த வரலாறுகள் மரியை செம்பாத்தை எனும் வன்னிச்சி ஒல்லாந்தருக்கெதிராய்ப் போராடிப் பின் பிடிபட்டுக் கொழும்புக்க

னுப்பப்பட்டனவெனக் கூறுகின்றன. (Teunent) இவ்வன்னிச்சியாரை ஒல்லாந்தர் பிடித்தவிதமே போலும் யாழ்ப்பாணத்துச் சந்திரசேகர குடும்பத்தில் கர்ணபரம்பரையாய் வழங்குகிறது. யாழ்ப்பாணக் கொம்மான்டோர் வன்னிச்சியைக் கைதிசெய்து வருமாறு பூதநாதஆராச்சி என்பவரை ஓர் பட்டாளத்தோடு அனுப்பினன். பூதநாதாராச்சி வழிகொண்டு கிழாலியிலிருந்த ஓர் 'மடத்தில்' இராத்தங்கியிருக்கையில் ஓர் சேவகன் தமது சீவனுக்குத் தீங்கிழைக்கவிருந்ததைத் தேவாதீனமாய் அறிந்துகொண்டு படுத்தவிடத்தைவிட்டெழுந்து விலகியிருக்கையில் இவர் உயிருக்கு மோசஞ்செய்ய எத்தனித்தவன் தன் ஈட்டியை இவர் படுத்தவிடத்திற் குற்றி அபசெயப்படக்கண்டு, அம்மடம் முன் பறங்கியர் காலத்தில் "சந்தியோகுமையோர் கோயில்" எனும் ஓர் ஆலயத்தினிடமாயிருந்தமையால், அவ்வாலயத்தைத் தாம் இனிப் புதுத்தீங்கொன்றுமின்றி வன்னிச்சியையுங் கைதியாக்கிக்கொண்டு மீண்டால், தம்பொறுப்பில் கட்டுவிப்போமென வாக்களித்து அப்பாற் சென்றார். வன்னிச்சியின் இருப்பிடத்தை யடைந்து அவளை சாமவுபாயத்தால் வென்று அவளுக்குத் தீங்குவரா விடோமென நாகபாம்புக்குடத்தின்மேற் கைவைத்துச் சத்தியஞ்செய்து கொடுத்து அவள் பூவராகன்களை அளந்து கொடுக்கப் பெற்றுக்கொண்டு அவளைப் பல்லக்கிலேற்றி யாழ்ப்பாணத்துக் கழைத்துவந்தனர். கோட்டைவாசலில் வந்தவுடன் வன்னிச்சிக்கு பொன்னின்கைமாச்சுக்கள் போட்டு உள்ளே கொண்டுபோகப்பட்டது. பூதநாதாராச்சியார் தம் நேர்த்திக்கடனை நிறைவேற்றிக் கிழாலி சந்தியோகுமையோர்கோவிலைக் கட்டியெழுப்பினர். இவர்மகன் லோறென்ஸ் சமரசேகர என்பார். சமரசேகரரின் பௌத்திரி அனந்தாசிப்பிள்ளை நீக்கொலஸ் சந்திரசேகரரை மணந்து காலஞ்சென்றுபோன இன்சினீர் யுவக்கிம் சந்திரசேகரரையும் செந்தமிழ்ப் பிரசங்க சாதுரிய கத்தோலிக்கக் குருவானவரான சந்திரசேகர சுவாமியையும் பெற்றார். முந்தியவரின் புத்திரன் இலங்கை இராசதானியில் புகழ்படைத்திலங்கும் அத்வக்காத். வச். எ. பி. சந்திரசேகரர்.

**வன்னியர் வரலாறு**:—இந்நூலின் (6-ம் 7-ம்) பக்கங்களில் வன்னியரைப்பற்றிய. சில குறிப்புக்கள் வரையப்பட்டன. துவரெலி சமாதானநீதவானுந் மெஸ். நாகநாதமுதலியாருடைய குடும்பக் குறிப்புக்களிலே இவ்விஷயம் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றமையால் அதை முழுமையாக இங்கு பெயர்த்தெழுதுகிறோம்.

## வன்னிப்பகுதியை அரசாட்சி செய்த வன்னியனூர் வன்னிச்சிமார்.

வன்னிநாயனூர், வன்னிநாச்சியார் என்றதே குறுகி, வன்னியனூர் வன்னிச்சியார் என்று வந்தது. இவர்களைக் குறித்து ஜே. பீ. லூயிஸ்துரை (J. P. Lewis C. C. S.) தமது சரித்திரத்தில் சொல்லியபடி இப்போது வன்னிப்பகுதியில் இருக்கிறவர்களில் அனேகர் பழையகாலத்து வன்னியரைச் சேர்ந்தவர்களல்ல. பண்டார வன்னியனுடைய முல்லைத்தீவிலுள்ள பண்டாரக்குளம் என்ற பெரிய வயல்வெளியைச் செய்கைபண்ணுகிறதற்காக 1785-ம் ஆண்டளவில் அளவெட்டியிலிருந்து சண்முகநாத முதலியாரின் அடிமைக்காரரில் 50 கோவியக்குடிகளையும், 50 பட்குடிகளையும் கொண்டுபோய் வைத்ததாகவும், முல்லைத்தீவிலுள்ள இலங்கைநாராயண வயல்வெளிக்கு, நவாலி பொன்னங்கட்டி என்ற இடத்திலிருந்து கோவியக்குடி பட்குடியாக 50 குடி கொண்டுபோய் வைத்ததென்றும், ஓமந்தைப்பிள்ளையார் கோயிலுக்குச் சமீபமாக, உடுப்பிட்டியிலிருந்து கோவியக்குடி பட்குடி 50 கொண்டுபோய் வைத்ததென்றும், முள்ளியவளை குமாரபுரத்தில், உடுப்பிட்டியிலிருந்து கோவியக்குடி பட்குடி 50 கொண்டுபோய் வைத்ததென்றும், நுவரைகாளாவியில் கச்சாயிலிருந்து 50 குடி கொண்டுபோய் வைத்ததென்றும், பண்டார வன்னியனுடைய சகோதரி தங்கநாச்சியாரை நுவரைத்தலைவனாகிய நுவரைவெவ வன்னியனுடைய மூத்தமகன் முதியான்சை அல்லது குமாரசிங்க வன்னியன் அல்லது, புளாங்குளமுவ கலியாணம் முடித்தபோது, சிறீதனத்தில் ஓர் பகுதியாய்க் கொடுக்கப்பட்ட 25 கோவியக்குடிகளும் நுவரைவெவ தலைவன்வீட்டில் நெடுங்காலம் வேலைகாரர்களாயிருந்தார்களென்றும், இன்னும் வன்னிப்பகுதியில் பலஇடங்களுக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து அனேகம் குடிகளைக் கொண்டுபோய் கதிரைநாச்சன் வன்னிச்சி, கந்தையினூர் வன்னியனூர், பண்டாரவன்னியனூர், செம்பாத்தை வன்னிச்சி, இலங்கைநாராயண குமாரசூரிய வன்னியனூர், பொன்னூர்வன்னிச்சி முதலியவர்களால் 1750-ம் ஆண்டுக்கும், 1800-ம் ஆண்டுக்குமிடையில் குடியேற்றப்பட்டதென்றும் பரம்பரைக் குடும்பசரித்திரங்களால் தெரிகின்றது. ஆகையால் லூயிஸ்துரை அவர்கள் குறித்துப்பேசிய தற்கால வன்னியரெல்லாம் பழைய வன்னிய குடும்பங்களுக்குச் சேர்ந்தவர்களல்லவென்றும் அறியவேண்டியது.

இலங்கை பாலசிங்க இராசா விவாகஞ்செய்ய, மதுரையிலிருந்து சாமத்துதி என்னும் இராசகுமாரத்தியைக்கொண்டு

வந்த 60 வன்னியரும் அவர்கள் தேசத்தில் பாளயப்பட்டுக்க ளாய் இருந்ததென்று லூயிஸ்துரையவர்கள் எழுதினது சரி யல்ல. பாளயப்பட்டுக்களென்றது சிற்றரசர்கள். ஒருபெண்ணை க்கொண்டுவருகிறதற்கு 60 சிற்றரசர்கள் கூடிவந்தார்களென் பது சிறிதேனும் அங்கீகரிக்கப்படத்தக்கதல்ல. குடும்பசரித் திரத்தின்படி இந்த 60 வன்னியர்களும் கத்திகட்டிகள், அல் லது போர்ச்சேவகர்களென்றும், சாதியில் வன்னியர்களென்று ம் சொல்லப்படுகிறது. இவர்களுக்கு பாலசிங்க இராசா அட ங்காப்பற்று என்ற பெரியநாட்டை உபகாரமாய்க்கொடுக்க, அவர்கள் கொஞ்சக்காலம் ஆள, அந்த இடத்துக்கு வன்னியெ ன்று பெயர்வந்தது. இவர்கள் சாதாரணமான போர்ச்சேவகர் களாய்மட்டுமே இருந்தபடியால் அரசாளும் முறைதெரியாமல் வன்னிநாட்டைவிட்டு மதுரைக்குச்சென்று சிங்ககேது இரா சாவுக்கு முறையிட, இராசாவும் மதுரைக்குச்சேர்ந்த மருங்கூர் என்ற இடத்தில் உள்ள கொந்துகவேளாளர் என்னும் சைவவே ளாளரில் சில பிரதானிகளையும், தொண்டைமண்டலத்தில் முத லிவேளாளரில் சில பிரதானிகளையும் குடும்பத்தோடு அனுப்ப அவர்கள் யாழ்ப்பாணத்தில்வந்திறங்கி, முதல் பனங்காமம் எ ன்னும் இடத்திற்போய்த் தங்களுக்குத் தனித்தனியே ஒவ்வொ ரு அரண்மனையும் கிணறுமாக 32 இருப்பிடங்கட்டியிருந்து, அப்பால் படிப்படியாக ஒவ்வொருவரும் வன்னிப்பகுதியில் ஒ வ்வொரு இடத்தை ஆண்டார்கள். ஆகையால் வன்னிப்பகுதி யைக் கடைசியாய் அரசாட்சிபண்ணினவர்கள் சாதியில் வன்னி யரல்ல, கொந்துகவேளாளரும் முதலிவேளாளருமே. அப்படி வந்த வேளாளரின் நாமங்கள் லூயிஸ்துரை, சேர் எமேஷன் றெனென் துரையுடைய சரித்திரப்படி பின்வருமாறு:—திடவீ ரசிங்கம், இளம்சிங்கமாப்பாணன், இராசிங்கமாப்பாணன், நல் லவர்குமெய்தவன், கறுத்தவகலிங்கமாப்பாணன், நீலயினர், திசை ஆண்டார், செற்பையினர், யாப்பையினர், வீரசோதன, அருணகேசன், சிங்கவாகு, நீலயினர் வயிரன், மூக்கையினர் முதலிய முப்பத்திரண்டு பெயர்கள். இதற்கு ஆத்தாட்சியாக, வன்னிப்பகுதியை அரசாட்சிபுரிந்த வன்னியர் சாதிமுறை அ திக நுணுக்கமாய்ப் பார்க்கில், அந்தக்காலத்தில் சம்பந்தஞ்செ ய்து இனசன கொண்டாட்டம் நடத்தியது, யாழ்ப்பாணத்தில் தொண்டைமண்டலத்து மேல்நாட்டு முதலிகளென்று சொல் லப்படும் அராலி, கொட்டைக்காடு, மூளாய், சுளிபுரம், தொ ல்புரம், சங்கானை, தெல்லிப்பழை, கோப்பாய், இருபாலை, உடு ப்பிட்டி, மறவன்புலோ, கோயிலாக்கண்டி என்னுமிடங்களி லுள்ள உயர்குல வேளாள குடும்பங்களிலேயே. கடைசி இரா சாவாகிய பரநிருபசிங்கத்தின் பிள்ளைகளும் இந்தக் குடும்பக்

கலியிலேயே சம்பந்தஞ் செய்தார்கள். மேற்சொல்லிய முப்பத்திரண்டு கிணறுகளும் குமாரத்திகள் கிணறுகளென்று அழைக்கப்படுகிறது.

லூயிஸ்துரை எண்ணி எழுதியபடி வன்னியைக் கடைசியாய் ஆண்ட வன்னிய குடும்பத்தவர்கள், சாதியில் கத்திகட்டிகள் அல்லது போர்ச்சேவகர்களாயுள்ள சாதி வன்னியரல்லவென்பதற்கு இன்னுமோர் அத்தாட்சி யென்னவென்றால், யாழ்ப்பாணத்தில் இந்நாள்வரைக்கும் வன்னியகுடும்பத்தார் என்பவர்கள் எங்கெங்கிருக்கிறார்களோ, அவர்கள் எல்லாரும் தலைமுறை தலைமுறையான ஆசார சைவபோசனஞ் செய்கிறவர்களாகவே யிருக்கிறார்கள். போர்ச்சேவகர் வமிசத்தார் இப்படிப் பரவணிச் சைவ போசனக்காரராயிருப்பது அபூர்வம். இவர்கள் எவ்வளவு நுணுக்கமாய் இந்த ஆசாரத்தைக் கவனித்தார்கள் என்பதை ஒருவாறு காட்டுவதற்காய் "இலங்கைச் சுதேசவர்த்தமானி" (Ceylon National Review) என்னும் புஸ்தகம் 1908-ம் ஆண்டு ஆவணிமீ 31-ந்திகதிப் பதிப்பில் 296-ம் பக்கத்தில் சொல்லியிருப்பதையீண்டுக்கூறுவாம்.

ஆசாரபோசனம்

இதுவிஷயத்தில் பூர்வீக உலாந்தா அரசாட்சி காலத்தில் பிரபல்யமாய் விளங்கினவராகிய, நவாலி சண்முகநாயக முதலியாரவர்கள் இருந்தார்கள். இவர் யாழ்ப்பாண இராசாக்களாகிய ஆரியச்சக்கிரவர்த்தி வமிசத்திலுள்ளவர். வட இலங்கையில் உலாந்தா இராச்சியத்தின் கீழ் உள்ள சுதேசிகள் உத்தியோகத்தில் அதி உன்னதபடியில் உத்தியோகம் அமர்ந்திருந்தார். தமது உத்தியோகக் கடமையின்படி ஓர்முறை அவரை ஆடுமாடுகள் கொல்வதற்கான உத்தரவுப்பத்திரம் (லைசென்ஸ்) ஒன்றுக்குக் கைச்சாத்திடும்படியாய்க் கேட்டார்கள். இவரோ உறுதியாக மறுத்து அவ்விதமான எளிய மார்க்கபேதமானசெயலில் சம்பந்தப்படுவதிலும்பார்க்க தம் உத்தியோகத்தில் நின்று நீங்குவதே விசேஷமென்று தமது உத்தியோக தத்துவம், பெருமை, பவுசு யாவையும் சந்தோஷமாக உடனே விட்டு விலகினார். நுவரெலியாவிலுள்ள சமாதான நீதவானாகிய அ. நாகநாதமுதலியாரே இப்பிரபுவின் வமிசத்திலுள்ள தற்காலத் தோன்றல் என்று எண்ணுகிறோம் என்பதே.

ஏறக்குறைய 300 வருஷங்களுக்குமுன் சூரிய குமார என்று பெயர்கொண்டவரும் ஆரிய சக்கரவர்த்தி குடும்பத்தைச் சேர்ந்த தமிழ் இராச குமாரனுமாகிய ஒருவர் கண்டி இராசா

வுக்கு இராசகுருவாய் இருந்தார். அவர் கொஞ்சக்காலத்தால் மேற்படி இராசாவுக்கு மந்திரியாயிருந்து அதன்பின் அநுராசபுரத்தில் நுவரவெவ என்ற சிற்றரசனை நிறுத்தி அந்த இடத்துக்குச் சூரியகுமார என்றவரை நியமித்து அரசாட்சிசெய்யுங் காலத்தில் சூரியகுமாரவுடைய சனங்களுக்கும் நுவரவெவயினுடைய சனங்களுக்கும் இடையில் உள்நாட்டுச்சண்டைகள் அடிக்கடி உண்டுபட்டது. இந்தச் சண்டையை ஒழிப்பதற்கு கண்டி இராசாவும் மந்திரிமாரும் யோசித்து நுவரவெவயினுடைய மகளை சூரியகுமாரவுடைய மகனுக்கு விவாகஞ்செய்வித்து அவர்களுக்கிடையில் சமாதானத்தை வருவித்தார்கள். இந்தக்குடும்பத்தாருக்குள் பிற்காலத்தில் சம்பந்தங்கள் நடந்தது. இந்தக்குடும்பத்திலிருந்துவந்த சந்ததியாரில் வடக்குப் பக்கமாய்ப்போனவர்கள் தமிழ் வன்னியனார் என்றும், தெற்குப் பக்கமாய்ப் போனவர்கள் சிங்களவன்னியனார் என்றும் அழைக்கப்பட்டனர். நுவரவெவ வன்னியனாருடைய மூத்தமகன் முதியான்செ அல்லது குமாரசிங்க வன்னியன், பண்டாரவன்னியனுடைய சகோதரி தங்கநாச்சியாரை 1785—ம் ஆண்டளவில் விவாகம்செய்ததாகவும் கண்டிப்பகுதி உயர்குலச்சிங்கள குடும்பங்களில் பரம்பரைச்சரித்திரங்கூறும். தற்காலத்திலும் கண்டிப்பகுதியில் இந்தப் பெருங் குடும்பத்துக்குச் சேர்ந்த சிங்களப்பிரபுக்கள் சூரிய குமார என்ற பெயரைக்கொண்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் இந்தக்குடும்பத்தைச்சேர்ந்தவர்கள் குமாரசூரிய என்றபெயரை வழங்குகிறார்கள். இந்த இரண்டுகுடும்பத்தவர்களும் ஆதிகாலத்தில் சூரியகுமார என்ற இராசவம்மிச சந்ததியாரென்பதே பலருடைய விளக்கம். வடமாகாணத்தின் பல பகுதிகளிலும் நாச்சிமார்கோயில் என்று வழங்கப்படும் பலகோயில்களுண்டு. இப்படித்தெய்வங்கள் இருக்கிறதாக இந்துசமயத்தில் சொல்லியிருக்கவில்லையென்றும், இந்தியாவில் எந்தப்பகுதியிலும் இப்படிக்கோயில்கள் இல்லையென்றும் சொல்லுகிறார்கள். வன்னிப்பகுதியை அரசாட்சிசெய்த வன்னிச்சிமாரை அவர்களுடைய அடிமைக்காரர் அழைப்பது நாச்சியார், நாச்சிமார் (ஒருமை பன்மை) என்றபடியேயாம். ஆகையால், இப்படி வணங்கப்பட்டவர்கள் அரசாட்சிசெய்த வன்னிச்சிமார்களேயென்று பலருங்கூறுவார்கள். (Manual of Vanni p. 13.)

அரசாட்சிசெய்த வன்னிய குடும்பத்தாரில் பலர் யாழ்ப்பாணத்திலும் மற்றும் பலவிடங்களிலுமிருந்தார்கள். இவர்களில் அநேகர் வறுமையினாலும், தங்கள் மகத்துவத்துக்குக் குறைந்த கீழ்தரமான குடும்பங்களில் சம்பந்தஞ் செய்ததினாலும் தங்களுக்குரிய மகத்துவத்தையும் மேன்மையையும் இழந்துவிட்டார்கள், அரசாண்ட வன்னியர்களின் சந்ததியில் கடைசியா

ன வன்னிச்சி 1848-இல் கோப்பாயில் இறந்த பொன்னர் வன்னிச்சியே. இவ்வன்னிச்சி வண்ணார்பண்ணையிலும் கோப்பாயிலும் வசித்து வந்தனள். இங்கிலீஷ தேசாதிபதிகள் யாழ்ப்பாணத்துக்கு வரும்வேளைகளில் வண்ணார்பண்ணையில் வசித்து அவர்களைத் தரிசிக்கப்போவது வழக்கம்.

**வன்னியர் பிதிர்வழி;**—இதுவரையும் நாகநாதமுதலியார் குறிப்பு. வன்னியர்களின் விரிவான பிதிர்வழி எமக்கு எட்டவில்லை. பனங்காமத்து வன்னியருள் ஒல்லாந்த நாள்களகுறிக்கும் டொன்பிலிப்பு நல்லமாப்பாணரைச்சுட்டி 126-ம்பக்கத்திற் பேசியுள்ளோம். நாகநாதமுதலியார் குடும்பக் குறிப்பில் காணப்படும் இருமரபுந்துய்ய இலங்கைச் சோமனென புதுநல்லமாப்பாணன் இவரோ அன்றி, இவர் புத்திரனோ அறியோம். இவ்வன்னியனார் குமாரன் நவாலியிலிருந்த பெரிய மயில்வாகன வன்னியனாரென்ப. இவர் பின், பெரிய குமாரசூரிய வன்னியனார், பல்லக்கு நாச்சன், வெற்றிவேலுமணியம், சின்னவன்னிமை அல்லது மயில்வாகனம், குமாரசூரியர் என்பவர்களே சந்தான முறையாய் வருவோர். பிந்தியவர் வடமராட்சி மணியகாரனாயிருந்து சிலவருஷங்களின்முன் காலஞ்சென்றவர்.

பெரிய மயில்வாகன வன்னியனாரின் சகோதரியான புண்ணியநாச்சன் நல்லூரிலும், நவாலியிலும் வசித்தவர். இவர் பேரால் சிதம்பரத்தில் உள்ள ஓர் மடமும், அம்மடத்துக்குச் சண்டிலிப்பாய், நவாலி, அராலி ஆதியவிடங்களில் இவரால் மானியமாய் விடப்பட்ட நிலங்களும் இன்றைக்கும் இவர்பெயரை விளக்குகின்றன. இவர் கணவன் மேல்பற்றுக்கு பஞ்சாய நீதிபதியாயிருந்த சரவணமுத்து முதலியாரெனவும், இவரே யாழ்ப்பாணக் கோட்டைக்குப் புறத்தேயுள்ள மாரியம்மன்கோயிலைக் கட்டி விழாச்செய்ய அந்நாளில் உக்கிரமாய்ப் பரவியிருந்த மசூரிமாரோகம் காகதாலியமாய் அமுர்ந்ததெனவும், தொல்புரத்திலுள்ள மாரியம்மன் கோயிலும இவரால் அமைக்கப்பட்டதெனவும் யாழ்ப்பாணச்சரித்திரங்கூறும்.

பெரிய குமாரசூரிய வன்னியனாருக்கு பல்லக்குநாச்சனோடு இலங்கை நாராயணமுதலியாரும் தங்கநாச்சியாரும் பிள்ளைகள். தங்கநாச்சியார் தெல்லிப்பழை ஒருதண்டிகைக் கெழுதண்டிகைக் கனகராய முதலியாரின் மகனும் கீரிமலையில் தண்டிகைக்கனகநாயகமுதலியார்மடத்தைக்கட்டினவருமாகிய கந்தனை கனகநாயகமுதலியார் அல்லது டொன்சுவாம் செனரத்தின முதலியாரை மணமுடித்தவர். இவ் டொன்சுவாம் செனரத்தி

ணமுதலியார் மகள் வள்ளியம்மைப்பிள்ளை. இவர்மகள் தையல் நாயகியம்மை: இவர்மகள் சிவகாமசுந்தரி நிற்சிங்கச்சேனாதி ராயர் வழியில்வந்த இராமலிங்கமுதலியார் அம்பலவாணமுத லியாரை மணந்து முற்கூறிய நாகநாதமுதலியாரைப் பெற்றார். இச்சீமானின் வள்ளன்மை பரோபகாரச்சிந்தையாதியன இவ் விடத்தெடுத்துப் பாராட்டப்பட வேண்டாதன. கோப்பாயில் பெரியமனுஷனாயிருந்து சிலவாண்டுகளின் முன்னரே காலஞ் சென்ற சமாதான நீதவான் மயில்வாகனந்துரை இவருக்கு நெ ருங்கிய இனபந்து. அவர் தமிழரசர் குலமாகிய மடப்பளியார் வமிசத்திலுள்ளவர். அவர் குமாரருள் ஒருவராகும் அத்வக் காத் இரத்தினமயில்வாகன மணியகாரன் இவர் குமாரத்தி யை வதுவைசெய்த மருகர். பலநூற்றாண்டுகளாய்ச் சிறந்துவா ழும் இக்குடும்பத்துக்குரியவர்கள் தொல்புரம் உருளைகாவல முதலி குடும்பத்திலும், அராலி, நவாலி, உடுப்பிட்டி, வண் ணார்பண்ணைகிழக்கு எனுமிடங்களிலும் இருக்கின்றார்கள்.

## கேசவ நாய்க்கர்

123-ம் 124-ம் பக்கத்திற் குறிக்கப்பட்ட சாயக்காரரைக் குறித்து பிந்திக்கிடைத்த சில குறிப்புகள். ஒல்லாந்த அரசர் காலத்தில் முன் குணபூஷண சிங்கையாரியன் என்னுமரசன் வடதேசத்திலுள்ள மருங்கூரிலிருந்து நாய்க்கரில் ஒருகுடியை யும், கவறைச்சாதியாரில் ஒரு குடியையும் அழைப்பித்து நல் லூரிலுள்ள கோட்டைக்குத் தென்மேற்குப்பாகமாயிருந்த ஆ வணவீதியில் குடியேற்றி வைத்தனரென்றும், அவரீர் மரபி னர் எனினும் ஓர் வினையினராயிருந்தமையின் இருபாலாரும் ஒருபாலரீர்போல் விளங்கினரென்றும், அவர்கள் சித்திர விசி த்திரமான உடற்சாய்கை என்னும் வேலைகளை அரசர்க்குச் செ ய்துகொடுத்துப் பரிசுபெற்றனரென்றும், அரசர் அவைகளைக் கோவிற் திரைகளாகவும், அரண்மனையலங்கார மேற்கட்டிகளா கவும் கட்டிவந்தனரென்றும், இதற்காகவே அரசரால் இச்சா தியார் அழைக்கப்பட்டவரென்றும், இவரிலொருபாலார் வைஷ ணவராயும், ஒருபாலார் சிவசமயிகளாயும் இருந்ததின், இந் தியாவிலிருந்து ஓர் விட்டுணு விக்கிரகமும், ஓர் விநாயக விக்கி ரகமும் இவர்கள் கைங்கரியத்தின்பொருட்டு அழைப்பிக்கப் பட்டு வந்ததென்றும், இவ் விட்டுணு விக்கிரகம் நல்லூரிலிருந் து பின் நாவற்குளிக்குக் கொண்டுபோகப்பட்டதென்றும், பற ங்கியரசு நடந்தபோது பின் இவர்கள் தரித்திரதசையுற்று, மேற்படி தொழிற் கையாடுதலைக் குறைத்துக் கிருஷித்தொழி லிற் தலையிட்டுச் சீவித்தனரென்றும், இவர்களுளொருவர் சுமா ர் ஆயிரம் எக்கர் நெற்காணியை நாவற்குழியில் வாங்கி நல்லூ ரிலிருந்து பின் அங்கு குடியேறிய தம்மவரோடு சம்பிரமமாய்ச

சிவித்து (இப்பொழுது அங்கேயிருக்கும்) கிருஷ்ணன் கோவிலைத் தம் இல்லத்துட்கட்டி வணங்கிவந்தனரென்றும், காலகதியில் அங்குள்ளார் பின் தம் பழம்பதியாகிய நல்லூரைநாடி ஆங்குச் சீவிப்பாராயினரென்றும், இவர்க்குரிய சாயக்காரர் என்னும்வழக்கு, தொழிற்பெயரன்றி மரபுப்பெயரன்றென்றும், இவர்மரபு நாய்க்க, கவறையே என்றும், பறங்கி அரசர்காலத்தில் நல்லூரிலே பிரபல கீர்த்திபெற்று விளங்கிய கோபாலுநாய்க்கர் என்னும் பண்டிதரால் தாலபத்திரத்தில் கரலிபியில் எழுதப்பட்ட "யாழ்ப்பாணவிபவம்" என்னும் பிரதி சாட்சியிடுகின்றது. இவர்களுள் முதியோராயுள்ளார் கூறுங் கர்ணபரம்பரையும் இதை ஸ்திரப்படுத்துகின்றது. தற்காலத்தில் சீவனார்த்தங்கருதி உயர்குலத்தவரும் இழிகுலத்தவருமான இருபாலாருள்ளும் அனேகர் இத்தொழிலைக் கையாடத்தொடங்கியதே மேற்கூறியுள்ளாரின் கௌரவத்தைக் குறைவுறக் கருதச் செய்துவிட்டதுபோலும்.

திருச்சினாப்பள்ளியிலிருந்து இவரைச் சார்ந்துள்ள கா. நாராயணசாமிநாய்க்கர் அங்கிளவரசர்காலத்தில் சுமார் இற்றைக்கு 103, 104 வருடங்களின்முன் குறித்ததெனமதிக்கத்தக்கதாய் எமக்குக் கிடைத்த ஓர் குறிப்பையும் இதன்கீழ்க்காண்க.

இந்திய மருங்கூர் தன்னி லிருந்தொரே வினைஞராகி
வந்தவர் கவறையோடு வன்றிறல் நாய்க்கராவர்
இந்தநற் குடியினோரை யாழ்நக ரழைத்தகோமான்
கொந்தவிழ் கோதைமார்பன் குணபூஷ ணாரியனென்பர்.

வந்திடு குடியினோர்க்கு வளந்தவழ் நல்லூர் தன்னிற்
சொந்தமண் பதிகொடுத்துத் துணைமிகப் புரிந்துவாழ்த்தி
விந்தையாய் வஸ்திரத்தில் விசித்திர மெழுதிவந்து
என்றனக் களிப்பீர்கோவி லரண்மனைக் குதவவென்றார்.

இவ்வழியினருள் ஷடிகேசவநாய்க்கர், திருமலைநாய்க்கர், கிருஷ்ணநாய்க்கர், சுவாமிநாதர், குமாரவேலு, சிதம்பரப்பிள்ளை, சுப்பிரமணியர், கார்த்திகேசு என்ப. இவர் புத்திரரே தற்போது நல்லூரில் வாழையடி வாழையாய் சாயவிச்சித்திர வேலையில் வல்லுநரெனக் காணப்படும் சிதம்பரப்பிள்ளை, சுந்தரம்பிள்ளை என்பர்.

செட்டிசெல்வநாயகமுதலியார்:—இவர் சங்கானையைச் சேர்ந்த பண்ணாகத்திலே செட்டிவம்சத்திலேயுள்ளவர். இவர் வழித்தோன்றலான கதிர்காமச்செட்டியார் சுதுமலையிலே வேளாண்குலதீபமான காசிநாத உடையார் மகளை விவாகஞ்செய்தவர். இவர் மகன் வேலாயுதர். இவர் உடுப்பிட்டியில் சந்திரசேகர

முதலியார் வழியிலுள்ள தினகரம்பிள்ளை மகளை விவாகஞ்செய்தவர். மேற்படி வேலாயுதர் மகன் கந்தர். இவர் சுழிபுரத்திலே தாமோதரம்பிள்ளைமகள் ஞானமுத்துவை விவாகஞ்செய்தவர். இவர் வைத்தியத்திலும் மாந்திரீக வித்தையிலும் பலராலும் நன்குமதிக்கப்பட்டவர். இவர் மகன் கதிரைவேல். இவர் நாலுதிசையிலும் பிரபலகீர்த்திபெற்றுச் சுதுமலையில் விளங்கிய வைத்தியர். குலாசாரம் மதாசாரம் பூண்ட ஒரு பிரபு. இவர் புத்திரனே தற்போது வாழையடி வாழையாய்த் தங்கள் கீர்த்திப்பிரதாப வைத்தியத்தை நடத்திப் புகழோங்கி விளங்கும் முத்துக்குமாரு. மேற்படி கதிர்காமச்செட்டியார் சுதுமலையில் வந்து விவாகஞ்செய்து சீவித்த வளவு சுதுமலை அம்மன் கோவிலின் வடபுறத்திலுள்ளதாம். இவர் வசித்தகாரணம்பற்றி அவ்வளவு இன்றுஞ் செட்டியார் வளவு என வழங்கிவருகின்றது. இவரே தற்போது சுதுமலையிலே பிரஸ்தாபமுற்று விளங்கும் அம்மன்கோவிலை சுமார் 150 வருடங்களின்முன் முதன்முதல் உண்டாக்கியவரென்ப. அன்றுதொட்டின்றளவும் இவ்வாலயப்பொறுப்பும் அதிகாரமும் இவர் சந்ததியுடனேயேயிருக்கிறது.

உலகநாதமுதலியார், மானிப்பாய்:—இவர் மகன் மாதர். இவர்மகன் கதிர்காமக்கணக்கர். இவர்மகன் தில்லையம்பலம். இவர்மகன் சின்னத்தம்பி. இவர்மகன் அருணாசலம். இவர்மகன் பொன்னம்பலமுதலியார். இவர் புத்திரரே தற்போது கொழும்பில் இலங்காதீபம்போற் கீர்த்திபெற்று விளங்கும் குமாரசுவாமி, K. C. C. M. G. இராமநாதன், றிச்சிஸ்ரர் ஜெனறல் அருணாசலம். காலஞ்சென்ற மயிலுப்பிள்ளைச் சிறுப்பர், வணங்காமுடி சண்முகம் இவர்களும் இவ்வழியினரே.

சுவாமிநாதமுதலியார், மானிப்பாய்;—இவர்மகன் குமாரசிங்கமணியம். இவர்மகன் டக்றர் மூத்ததம்பி. இவர்மகன் டக்றர் நவரத்தினசிங்கம். இவர் புத்திரரே தற்போது மானிப்பாய் மருதடி விநாயகாலயகர்த்தாவாயிருக்கும் குமாரசிங்கம் இன்சுயர்கொம்பனி எச்செண்டு.

புவிராசசிங்கமுதலியார்:—இவர் மகன் குலசேகரமுதலியார், இவர்மகன் கதிரித்தம்பிச் சட்டம்பியார், இவர்மகன் அருணாசலம். இவர்மகன் மானிப்பாய் ஆனல் சதாசிவம்பிள்ளை (பத்திராதிபர்) பண்டிதர். இவர் புத்திரரே தற்காலப் பிரபல பிறக்றாயிருந்து காலஞ்சென்ற தம்பையா, கொழும்பு மேஷல் கொப்பறேஷனில் லிகிதராயிருக்கும் சின்னப்பா, தற்

போது அச்சுவேலி பத்தைவேனி சரவணமுத்து மகார் விதானை பொன்னம்பலம், விதானை தம்பு, சின்னக்குட்டி, தாமோதரம்பிள்ளையாதியோரும் இவ்வழிபற்றியவரே.

வேலாயுதர்:—இவர் மகன் இராமர். இவர்மகன் கதிர்காமர். இவர்மகன் முதலித்தம்பி. இவர்மகன் நொத்தாரிசு சின்னத்தம்பி அல்லது மண்டலத்தார். இவர்மகன் சரவணமுத்துச் சிறுப்பர். இவர்மகாரே மானிப்பாயில் தற்போது பிரபல பிரபுவாயிருக்கும் (உவாக்கர்கொம்பனி) சுப்பிரமணியபிள்ளை, கொழும்பில் பிரபலம்பெற்றுவிளங்கும் சோமசுந்தரம்பிள்ளை. மானிப்பாய் அரியகுட்டி சுவாமிநாதபிள்ளை யென்பவரும் இவ்வழியினரே.

செம்பஉடையார்:—இவர்மகன் கந்தர். இவர்மகன் ஆறுமுகம். இவர்மகன் கதிரிப்பிள்ளை, இவர்மகன் மானிப்பாய் தில்லையம்பலம். இவர்மகன் தம்பிப்பிள்ளை. இவர்புத்திரரே அட்டஇக்கிலும் நியாயதுரந்தரசிங்கமெனத் தற்போது புகழ்பெற்றுவிளங்கும் பரீஸ்றர் ஐசக் தம்பையா. இவர் இங்கிலந்திற்பெற்ற சங்கைப்பட்டங்கள்;—1. ருேயற் கைத்தொழிற்சங்க அங்கத்தவர் M.R.A.S., 2. பைபிள் பூவகசாஸ்திர ஆராய்ச்சிச்சங்கத்திலொருவர் M.S.B.A., 3. பெரியபிரித்தானிய தத்துவ கலாஞான சங்கத்தொருவர் A.P.H.S., 4. புலவர்சங்கத்தொருவர் M.P.S., 5. யூதசரித சங்கத்தொருவர் F.J.H.S., 6. சர்வசாதிக் கட்டுக்கதைச் சங்கத்தொருவர் F.I.S.A., 7. நூலாசிரியர் சங்கத்திலொருவர் M.S.A.

செம்பஉடையார்;—இவர்மகன் கோவிந்தஉடையார். இவர்மகன் செம்பர். இவர் மகன் சிதம்பரநாதர். இவர் புத்திரனே தற்போது மானிப்பாயில் பிரசித்த நொத்தாரிசுவாயிருக்கும் முருகேசு.

முருகேசு:—இவர் வட்டுக்கோட்டையிலுள்ளவர். இவர் மகன் எதிர்நாயகமுதலியார். இவர்மகன் குலநாயக முதலியார். இவர் மகன் குணசேகரமுதலியார். இவர்மகன் சுப்பிரமணிய உடையார். இவர்மகன் வேலுப்பிள்ளைமணியம். இவர் மகன் முருகேசு. இவர்மகன் (Mills) எதிர்நாயகம். இவர் மகனே தற்போது மானிப்பாய் மிஷன்வைத்தியசாலையில் வேலையாயிருக்கும் குலநாயகம் Mills.

காராளசிங்கமுதலியார், மானிப்பாய்;—இவர்மகன் யாதவராயமுதலியார். இவர்மகன் நொத்தாரிசு சுப்பிரமணியம், இவர்மகன் கந்தநயினர். இவர்மகன் தம்பையாச்சட்டம்பியார். இவ

ர்மகனே தற்போது P.W.D. கிளாக் உத்தியோகத்திலிருக்கும் சிவக்கொழுந்து.

புவிராசசிங்கம் மானிப்பாய்;—இவர் மகன் குலசேகர முதலியார். இவர்மகன் கதிரித்தம்பிச்சுட்டம்பியார். இவர் மகன் பொன்னம்பலம். இவர்மகன் குமரேசர். இவர்மகன் பேச் உபாத்தியாயர், இவர்மக்களே ஸ்டேசன் மாஸ்டர் கனகசபைப்பிள்ளை, டேவிற்சன்கொம்பனிக் கிளாக் இராசரத்தினம் பிள்ளை.

காராளசிங்கமுதலியார் மானிப்பாய்;—இவர்மகன் சின்னத்தம்பி ஆராய்ச்சியார், மகன் தாமோதரம்பிள்ளை, மகன் சுப்பிரமணியம். இவர் மகனே தற்காலம் கொழும்பில் பிரபல புறோக்கராகவிருக்கும் இராசரத்தினம்பிள்ளை.

வீரநாராயணமுதலியார் ஆனைக்கோட்டை:—இவர்மகன் முருகேசு, மகன் சண்முகம், மகன் தம்பையாமுதலியார். இவர் மக்களே கொழும்பில் தமிழ்ப்பிரபுக்களில் தலைமை பெற்று விளங்கும் சண்முகராஜா, பிறக்றர் முத்துக்குமாரு, முருகேசபிள்ளை.

புவிராசசிங்கம் மானிப்பாய்;—இவர்மகன் குலசேகரமுதலியார், மகன் கதிரித்தம்பிச் சட்டம்பியார், மகன் பொன்னம்பலம், மகன் இராசசிங்கம், மகன் சுவாமிநாதர். இவர்மகனே தற்போது கத்தோலிக்க குருவும் திரயபாஷாபண்டிதருமாய் விளங்கும் வைத்தியலிங்கம் அல்லது வண. சா. ஞானப்பிரகாசர் O.M.I.

குமாரதலசிங்கமுதலியார் தெல்லிப்பழை:—இவர்மகன் இல்லையம்பலம். இவர்மகன் சங்கரப்பிள்ளை. இவர்மகன் சுப்பிரமணியம். இவர்மகன் Barr குமாரகுலசிங்கமுதலியார். இவர் மல்லாகம் பொலீஸ்கோட்டுத் துவிபாஷித முதலியாராகவும், பின் கச்சேரியில் துவிதிய முதலியாராகவுமிருந்தவர். அனேக தனிப் பாக்களை இயற்றியதோடு பதிவிரதை விலாசமென்னும் திவ்விய விலாசத்தையும் இயற்றியவர். இவர் மனைவியார், பண்ணாகம் கதிர்காமச்செட்டியார் மகன் கந்தப்பச்செட்டியார் இவர் மகன் முருகேசு (மாவிட்டபுரம்) இவர்மகன் முத்துக்குமாரு. இவர்மகன் சின்னத்தம்பி, இவர்மகள் சின்னப்பிள்ளை புத்திரி சிவகாமிப்பிள்ளை. இவர்புத்திரரே கொழும்பில் இராசவாசல் முதலியாராயிருந்து காலஞ்சென்ற கனகநாயகம் சாள்ஸ் Barr குமாரகுலசிங்கம், தற்காலம் வலிகாமம் வடக்கு மணியகாரனாயிருக்கும் இராசநாயகம் றிச்செட் Barr குமா

நகுலசிங்கம், கொழும்பில் வேலையாயிருக்கும் சிங்கநாயகம் சாமுவேல் Barr குமாரகுலசிங்கம், திரிகோணமலையில் நீர்ப்பாய்ச்சு வேலைப்பகுதியில் விகிதராக விருக்கும் அரியநாயகம் Barr குமாரகுலசிங்கம், ஒக்ஸ்போட் யூனிவேர்சிற்றியிற் கற்று காலஞ்சென்ற செல்வநாயகம் Barr குமாரகுலசிங்கம்.

**கோமட்டிச்செட்டியார்:**—இவர் காரைக்கால். இவர்மகன் சின்னத்தம்பிச்செட்டியார் வண்ணை. இவர்மகன் மூத்தணைந்த பெருமாள், இவர்மகன் சின்னத்தம்பிச்செட்டியார் சண்டிருப்பாய். இவர்மகன் வேலுப்பிள்ளை சண்டிருப்பாய். இவர்மக்கள் செல்வநாயகம் மல்லாகம், தம்பிராஜா உடுவில்.

**உலகநாயக முதலியார்:**—இவர் நவாலி உயரப்புலத்திலுள்ளவர். கோவலூர் வேளாளன் பேராயிரமுடையான் வழியினர். இவர் மகன் விநாயகர். இவர்மகன் உலகநாயகமுதலியார் (கணக்கர்) இவர்மகன் விநாயகர். இவர்மகன் சின்னத்தம்பி. இவர் மகன் சிதம்பரநாதர். இவர்மகனே புலவர்சிகாமணியாய் கத்திய பத்திய ரூபமாயுள்ள பல புத்தகங்களுக்கு ஆக்கியோனாய்ப் பிரபலமுற்று விளங்கிய ஏரேமியா (சின்னத்தம்பிப்புலவர்). இவர்மகனே தற்போது காங்கேயன்றுறை அரசாட்சி வைத்தியசாலையில் டக்றராயிருக்கும் J. R. இராசரத்தினம் ஜெறிமயா.

**முதலித்தம்பி:**—இவர் வயாவிளானிலே பிரபல குடும்பத்திலேயுள்ளவர். இவர்மகன் சங்கரநாதர். இவர்மகன் தம்பர். இவர்மகன் சங்கரப்பிள்ளை விதானை. இவர்மகன் சின்னக்குட்டி. இவரே தற்போது வயாவிளான் விதானையாயிருப்பவர்.

**தஞ்சஉடையார்:**—இவர் புத்தூர். இவர்மகன் பொன்னம்பலமுதலியார், மகன் மாப்பாண முதலியார், மகன் இராசிங்க உடையார். இவர்மகனே பிரபல சுதேச வைத்தியராயிருந்த தம்பியப்பா. இவர்மகனே தற்போது சுதேச வைத்தியராயிருக்கும் தம்பிமுத்து.

**கத்தஉடையார் மயிலிட்டி:**—இவர் வயாவிளானிலே பிரபல்யமுற்றுக் குலதிலதமென விளங்கிய கறுத்தமாப்பாண முதலியாரின் பௌத்திரியை மணஞ்செய்தவர். இவர் மகன் பூதப்பிள்ளை. இவர்மகன் பிலிப்புப்பிள்ளை. இவர்மக்கள் மூத்ததம்பி உடையார், அப்பாபிள்ளை. அப்பாபிள்ளையென்பவரின் புத்திரரே தற்போது அரசாட்சித் தமிழ்வித்தியாசாலைச் சோதன

ஞர்த்தராய் விளங்கும் தெல்லிப்பழை பொன்னையாபிள்ளை, பிர சித்த நொத்தாரிசும் பிறக்றருமாய் விளங்கும் அப்புத்துரைப் பிள்ளை.

பாதுதேவமுதலியார்:—இவர் மல்லாகத்திலுள்ளவர். இவர் மகன் விநாயகர். இவர்வயாவிளானிலிருந்த கறுத்தயாப்பாணமு தலியார் பௌத்திரியை விவாகஞ் செய்தவரென்பர். இவர்மக ன் பேதுருப்பிள்ளை, மகன் தம்பர். மகன் கவுரிகேற்பிள் ளை. இவரே 1851-ம் ஆண்டளவில் வயாவிளான் கிழக்கிலுள் ள அம்மேலாற்பவநாயகி ஆலயத்தைத் தனது ஆஸ்தியைவிற்றுக் கட்டுவித்தவர். இவர் புத்திரர்களின் மக்களாய்த் தற்போதிருப் பவர் பலர். அவருள் தற்போது F. M. S. பகுதியில் வேலை யாயிருக்கும் S. T. தோமாஸ், சுதேச நாட்டிய யந்திரசா லையில் வேலையாயிருக்கும் வ. மு. சூசைப்பிள்ளை என்பவரு மொருவரே.

புன்னர்:—இவர் வயாவிளானிலுள்ளவர். இவர்மகன் பழு வராயர், மகன் வைர்த்தையர், மகன் நீலப்பிள்ளை, மகன் ஐயம்பி ள்ளை, மகன் கதிர்காமர், மகன் கந்தய்பிள்ளை. இவர் மக்க ளுள் ஒருவரே தற்காலம் "சுதேசநாட்டிய" மனே சரும் பத்திராதிபருமாய்ப் பலராலுமறியப்பட்டவராய் விளங் கும் மேவனுப்பிள்ளை.

கந்தர்:—இவர் குப்பிளானிலுள்ளவர். இவர்மகன் குஞ்சர், இவர்மகன் அம்பலவர், இவர்மகன் சம்பந்தர், இவர்மகன் சி ன்னத்தம்பி இவர்மகன் வேலாயுதர் (உடையார்,) இவர் மக ன் காசிநாதர் (உடையார்.) இவர்மகனே தற்போது கண்டிப்ப குதியில் P. W. D. யில் ஓவசியராயிருக்கும் இராமலிங்கம்.

நகரமுதலியார்:—இவர் வடமராட்சியைச்சேர்ந்த நவிண்டி லிலுள்ளவர். இவர் வன்னிமை மகன் குழந்தையுடையார். மக ன் சிதம்பரநாதர். மகன் அம்பலவாணர். மக்கள் 1. வணிகசேக ரமுதலியார். 2. கயிலாயர். வணிகசேகரமுதலியார் மகன் அம் பலவாணர், மகன் கதிர்காமர், மகன் அம்பலவாணர், மகன் கதிர்காமர். இவர் 2, கயிலாயரின் மகன் தில்லைநாதர், மகன் சித ம்பரநாதர், மகன் கயிலாயரின் மூத்தபுத்திரி கதிராசிப்பிள்ளை யை விவாகஞ் செய்தவர். இவர் ஏகபுத்திரியின் புத்திரனே தற்போது பலாலியில் சாதுகுணம்பூண்டு விளங்கும் பொ. கயி லாயபிள்ளை.

மன்னவராயமுதலியார்:- இவர் புலோலியில் வந்து குடியேறி ய கனகமளவன் வழியினர். இவர்மகன் கனகராயமுதலியார்,

மகன் குலசேகரக் கனகராய முதலியார், மகன் சுப்பிரமணி யமுதலியார், மகன் சின்னத்தம்பி, மகன்மயில்வாகன முதலி யார், இவர்மகனே புலோலியில் பலராலும் அறியப்பட்டவராக ய்ப் பல சீர்த்திகளுமுள்ளவராய் விளங்கிய (புலோலித்தம்பி) சுப்பிரமணியபிள்ளை. இவர் புத்திரரே தற்போது புலோலியில் சீர்த்திபெற்று விளங்கும் மயில்வாகனம்பிள்ளை, முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை.

**பெருவேளாளன் விக்கிரமசிங்கமுதலியார்:—** பெரியமாதகலி லுள்ளவர். மனைவியார் பார்வதிப்பிள்ளை, நல்லூர் பரராசசே கர அரசனின் குமாரத்தி வேதவல்லியின் சந்ததியினர். இவர் மக்கள் சங்கரப்பிள்ளை, வேலாயுதர். வேலாயுதரின் புத்திரர் வயித்தியநாதர், தம்பு. வயித்தியநாதரின் புத்திரனே தற்போ து தேசாதிபதியின் தமிழ்முதலியார் சரவணமுத்துவயித்தி யநாதர்விக்கிரமசிங்கமுதலியார் எனவிளங்குபவர்.

தம்பு என்பவர் தற்போது பலராலும் சன்மானிக்கப் பட்டுக் "கத்தோலிக்குப் பாதுகாவல"னின் தமிழ்ப்பத்திராதி பராய் விளங்குபவர். யாழ்ப்பாண மணியகாரனாயிருந்து கால ஞ்சென்ற கணபதிப்பிள்ளை முதலியாரின் புத்திரி பொன் னம்மாவை விவாகஞ்செய்தவர். இவர் குமாரரே T. M. சிங்கநாயக விக்கிரமசிங்கம், T. J. இராசநாயக விக்கிரம சிங்கம்.

**சங்கரநாதர்;—** இவர் வண்ணார்பண்ணையில் வசித்தவர். இ வர்மகன் குஞ்சுத்தம்பி, அளவெட்டி. இவர்மகன் குமா ரவேலுப்பிள்ளை மதக்கர், வண்ணை. இவர்மகன் குமாரசுவா மி அளவெட்டி. இவர்மகன் முத்தையாபிள்ளை வண்ணை. இவர் புத்திரரே இராசவாசல் முதலியார் வேலுப்பிள்ளை முதலியார் கந்தரோடை. இவர் புத்திரரே தற்போது பலவித சீர்த்திகளுமுற்று விளங்கிய முதலியார் குமாரவேற்பிள்ளை, முதலியார் முத்துவேலுப்பிள்ளை. இவர் அன்னை வழியின ரே கந்தரத்தின முதலியார், மகன் துரைசிங்கமுதலியார், மக ன் அம்பலவாணமுதலியார், மகன் சிங்கைஆரியமுதலியார், ம கன் வீரசேகரமுதலியார், மகன் முருகேசர், மகன் டக்றர் அ ருணாசலம், மகன் இராசகாரிய சிங்கைஆரிய அம்பலவாணமுத லியார் என விளங்கிய (அளவெட்டி) மணியகாரன். மேற்படி முதலியார் குமாரவேற்பிள்ளையின் புத்திரியை விவாகஞ் செய் தவர், சுப்பிரீங்கோட்டு நியாயதுரந்தரர் V. பொன்னம் பலபிள்ளை, முதலியார் முத்துவேற்பிள்ளைபுத்திரியை விவாகஞ் செய்தவர், அப்புக்காத்து கனகசபைப்பிள்ளை.

**இரகுநாத மாப்பாண முதலியார் நல்லூர்;**—இவர் உலாந்தஅரசர்காலத்தில் சிறப்பு உத்தியோகத்திலிருந்தவர். நாம் மேற்காட்டியபடி இவரே பறங்கி அரசரால் முற்றாய் அழிக்கப்பட்டொழிந்த நல்லூர்க் கந்தசுவாமிகோவிலை ஓர் சிறிய கட்டிடமாய்க் கட்டுவித்துப் பூசை நடப்பித்து வந்தவர். இங்கிலீஷ் அரசினர் காலத்தில் இவ்வூருக்கு அதிகாரியாய் வந்த அந்தோனி நோவெல் மேயாட் (Anthony Nocl Mayaart) என்பவரினுதவியால் 1795-ம் ௵ அக்கோவிலைப் பெரிதாய்க் கட்டுவித்துப் பூசை நடப்பித்துவந்தனர். அவர்க்குப் பின் பரம்பரையாக மகன் கந்தமாப்பாண முதலியார், மகன் ஆறுமுகமாப்பாணமுதலியார், மகன் இரண்டாம் இரகுநாதமாப்பாணமுதலியார், இவர் மருமகன் இரண்டாம் கந்தமாப்பாணமுதலியார், இப்பொழுது இரண்டாம் இரகுநாதமாப்பாண முதலியாரின் மகள் வயிற்றுப் பேரனும், இரண்டாங் கந்தமாப்பாணமுதலியாரின் பெருமகனுமாகிய இரண்டாம் ஆறுமுகமாப்பாணமுதலியாரே இக்கோவிலாதீன கர்த்தாவாய், யாவர்க்கும் நன்மையுண்டாக பத்தியோடு இக்கோவிலை நடப்பித்து வருபவர். முதலாம் இரகுநாத மாப்பாண முதலியாரின் பெயர் உற்சவ காலங்களில் இன்றும் கட்டியத்திற் கூறப்பட்டு வருகின்றது. முதலாம் இரகுநாதமாப்பாண முதலியாரையும் அவர் மனைவியாரையும் விக்கிரக வடிவமாகக் கோவிலில் வைத்து விசேட தினங்களிற் பூசைசெய்து வருகின்றனர். இரண்டாம் மாப்பாண முதலியாரின் மரணம் சித்தார்த்தி ௵. இரண்டாம் கந்தமாப்பாண முதலியாரின் மரணம் கர ௵. தி. சங்கரப்பிள்ளை மரணம் 1915-ம் ௵ மார். 11-ம் உ.

**நரங்குபாகமுதலியார்;**—இவர் மயிலிட்டி. இவர் மகன் செயதுங்க முதலியார். மகன் முத்துக்குமாரு [மறவன்புலம்] இவர் மகன் மூத்ததம்பி. மகன் சரவணமுத்து [இழவாலை] இவர்மக்களே தற்போது பலராலும் [அப்பா] என அறியப்பட்டு விளங்கும் 1. சிவஞானபிள்ளை. 2. கனகசபை. 3. சின்னையா. 4. ஆறுமுகசாமி. 5 மூத்ததம்பி. ஆறுமுகசாமியின் புத்திரி கோப்பாய் அம்பலவாணர் அருளம்பலம் [நியாயதுரந்தரர்] மனைவியார் 1. உடுப்பிட்டி குமாரசூரியர் சிவகுமாரசூரியர் மனைவியார் 2.

**பி. ஏ பி. எல் கனகசபைப்பிள்ளை;**—இவர் சென்மஸ்தானம் மல்லாகம். பிரபல கீர்த்தியுற்று விளங்கிய கனகசபைமுதலியாரின் பௌத்திரர். [Kellogg] விசுவநாதபிள்ளையின் புத்திரன். குமாரமடப்பளியைச் சேர்ந்தவர். இளமைப்பருவத்தி

ல் B. A. பரீட்சையிற் சித்தியடைந்து. பின் B. L. பரீட்சையிலும் சித்தியடைந்து சென்னையிற் சிறிதுகாலம் ஞாயதுரந்தரராயிருந்து, பின் அந்நிலையை விடுத்துத் தபாலாபீசில் தலைமையுத்தியோகராயிருந்தவர். "பதினெண்ணூற்றாண்டின் முந்திய தமிழர்" எனப்பெயரிய ஓர் அரிய பெரிய புத்தகத்தை அங்கிலபாஷையில் எழுதி வெளிப்படுத்தியவர். உலக ஆராய்ச்சியின் மிக்க பூரணஸ்திரம் பூண்டவரென்பது இவர் நூல் காட்டும்.

**தோம்பிலிப்பு வைசியர்கோன் முதலியார்:—** இப்பெருமகன் தெல்லிப்பழையிலுள்ள ஒரு பிரபல வைசிய குடும்பத்தைச்சேர்ந்தவர். மெல்லோப் பாதிரியாரிடங் கல்விகற்றுத்தேறியவர்.

1773-ம் ஆண்டிலே நல்லூர்க்கோவிற் சட்டம்புவாக நியமனம்பெற்றுப் பலவருடங்களாக அவ்வுத்தியோகத்தைப் பார்த்துவந்தவர். நல்லூர் வேலாயுத முதலியார் மகன் சம்பந்தப் புலவரையும, மாதகல் தொம் அந்திரேசு மணப்புலி முதலியார் மகன் சரவணமுத்துப்புலவரையும் முறையே மகன் மகனையும் மகன்மகனையும்பெற்றுக்கொண்ட பெரும பேறுடையார். இவர் சந்ததியார் நல்லூரிலும் மாதகலிலும் மற்றுஞ்சிலகிராமங்களிலுமுளர். இவராற் கல்வியறிவூட்டப்பெற்றவரும், இவர்பேரிலே ஒரு பதிகம்பாடிச் சன்மானிக்கப்பட்டவரும், பூனரி பல்லவராயன்கட்டுக் கோவிற் சட்டம்புவாயிருந்து பின்னர் அவ்வூர்ப் பிரசித்த நொத்தாரிசுவாக விளங்கியவருமான நல்லூர் செட்டி கனகசூரியா சுவாம் முருகேசர், இவருடைய சகோதரி புத்திரன்.

முருகேசர் மைந்தனே சங்கானைக் கோவிற்பற்றுப் பிரசித்த நொத்தாரிசுவாயிருந்து சாதுரிய சிங்கமெனப் புகழ்பெற்று வாழ்ந்த் அமரசிங்கம், அன்னார் கனிஷ்ட புத்திரனும் சண்டிருப்பாய் நடுக்குறிச்சியில் வசித்த நொத்தாரிஸ் குலசேகரம்பிள்ளையின் பின்னோனுமான சரவணமுத்துவுடைய ஜேஷ்டகுமாரனே இச்சரித்திரத்துடன் சேர்த்திருக்கும் இடப்பெயர் வரலாற்றை யெழுதியவரான Mr. S. W. குமாரசுவாமி. இவர் சகோதரன் பேரின்பநாயகம்.

**மயோபாணமுதலியார்:—** ஆனைக்கோட்டையிலுள்ளவர். இவர்வழித்தோன்றல் கதிர்காமர். இவர்மகன் மாதவர். மகன் வயிரவநாதர். மகன் சண்முகம். மகன் தர்மாவரதர். இவர்மக்

களே தற்போது ஆனைக்கோட்டையில் பிரசித்த நொத்தாரிசு வாயிருக்கும் இராமலிங்கம். 2. விசுவலிங்கம், 3. தையல்முத்து. இராமலிங்க நொத்தாரிசுவின்மக்கள் சின்னத்தம்பி டக்றர் மனைவியார் பொன்னம்மா. 2. கொழும்பில் Tarrant புரோக்கராயிருக்கும் சண்முகம். 3. நாகம்மா. 4. பாலசுப்பிரமணியம். விசுவலிங்கம் புத்திரர் சதாசிவம். 2. சங்கரப்பிள்ளை. 3. செகராஜசிங்கம். 4. இராசநாயகம். 5. கனகசபை. 6. நவரத்தினம். 7. யோகம்மா. 8. இரத்தினம்.

**கனகதண்டிகைக் கனகராய முதலியார்;**—இவர் குடியேற்றகாலத்தில் யாழ்ப்பாணத்துக்கு முதன்முதல் வந்த பாண்டியன் முடிகொட்ட பதினெண்மரிலொருவராகியும், [வேளாண் செட்டி] வைசியகுல திலகராகியும் தொல்லிப்பழையில் விளங்கியவர். இவர் வழித்தோன்றலாய்வந்த வயிரவநாதன், மயிலிட்டி நரசிங்கதேவனடியிலுதித்த "சேலையரிந்து சிலந்திப் பருத்திந்து - வாலமுடி மன்னர்க்குக் காட்டினோ" னென வரதருலா, குயில்கூவல் முதலிய பாடல்களில் வியந்து கூறப்பட்ட வீரசிங்கமுதலியார் வம்சத்தில் வந்த பெண்ணை மணந்து பெற்றமகன் பூதநாதன். இவர் மகன் சிதம்பரநாதன். இவர்மகனே மேற்படி மரபிலுதித்துப் பிரபுவாயிருந்த உடையார் சுவாமிநாதருக்கும்; ஏரெழுபதென்னும் பிரபந்தம் பாடப்பெற்ற இருபாலை மண்ணாடுகொண்டமுதலி வமிசத்திலுதித்த பொய்யாமொழியருக்கும் இருவழியாலும் முறையே பீட்டனாய்; யாழ்ப்பாணத்துச் சம்பத்திரிசியார் கல்லூரியிலும், காசி மத்திய இந்துக்கல்லூரியிலும், கற்குத்தாவிலும் ஆங்கிளபாஷையைக்கற்று, பீ. ஏ. பட்டம்பெற்று எத்தகையராலும் மதிப்புற்று விளங்கும் மயிலிட்டி சுவாமிநாதன்.

**காலிங்கராயமுதலியார்:**—சண்டிருப்பாய். இவர்மகன் தினகரஉடையார். மகன் பொன்னர், மகன் வேலாயுதர். மகன் வயிரவநாதர். இவர் மகனே கண்டியிற் சிறுப்புவாயிருந்து தற்போது இளைப்பாறும் வீரசிங்கம் என்ப.

**இராசகாரியச் சந்திரசேகர முதலியார்;**—(உரும்பராய்) இவர் மகன் சந்திரசேகர கந்தப்பமுதலியார். இவர் மகன் முருகேசு. இவர் புத்திரரே தற்போது பிரக்கியாதையான அதிகாரப்பட்டம்பெற்றுவிளங்கும் (கொக்குவில்) தம்பாபிள்ளை முதலியார்.

**மாலாணமுதலியார் கேருடாவில்:**—இவர் மகன் குலசேகரம்பிள்ளை, மகன் தினகரம், மகன் கதிர்காமர், மகன் வயிரமுத்

ர, மகன் ஆறுமுகம். இவர்மகனே விதானைமூத்ததம்பி. இவர் புயபல பராக்கிரமசாலியெனப் பலராலும் பேசப்பட்டவர். இவர் சகோதரர் 1 வதுளைப்பகுதியில் தேயிலைத்தோட்டத்தில் வேலையாயிருக்கும் தம்பிமுத்து, 2 கட்சன் பரமசாமி B. A. இவர் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராயும், பின் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் பிறின்சிப்பலாயுமிருந்து காலஞ்சென்றுபோயினர். கதிர்காமர் சுப்பிரமணியம்விதானைமகள் மாணிக்கம் என்னும் மாதரசியே இவர்களரிய அன்னையாம். மேற்படி விதானை மூத்ததம்பியின் மனைவி மீனாட்சி இவர்புத்திரரே தற்போது பிரபலமுற்று விளங்கும் செல்லையாபிள்ளை. இவர் தற்போது மஸ்கேலியாப்பகுதியைச்சேர்ந்த Dollcusie (டல்கோஸ்சி) தோட்டத்துச் சஞ்சாரகரும், சொர்ணல் நீதவானுமாயிருக்கின்றனர். கட்சன் பரமசாமி அவர்களின் புத்திரரே தற்போது தொப்பிதோட்டத்தில் நியாயதுரந்தரராய் விளங்கும் H. தம்பிராஜா.

**மாலாணமுதலியார் பலாலி:**—இவர் மகன் ஐயம்பிள்ளை, மகன் சின்னத்தம்பர், மகன் பொன்னம்பலம். இவர் மக்களில் ஒருவரே தற்போது உரும்பராய் உடையாராயிருக்கும் சுப்பிரமணியம்.

**வேலாயுதஉடையார்:**—இவர் கரவெட்டியிலுள்ளவர். இவர் மகன் வினைதீர்த்தார், மகன் நீலையினார், இவர் அறுமர்கத்தலையில் விவாகஞ்செய்தவர். இவர்மகன் சிற்றம்பலம், மகன் கந்தப்பு. இவர் மனைவியார் கரவெட்டி ஆள்வையினாருடையார்மகன் கதிர்காமர்மகன் ஆள்வார்மகள் தெய்வானைப்பிள்ளை. இவர் மக்களே 1 இலங்கைப்பகுதிகளில் அரசினர் உத்தியோகமாயிருந்து தற்போது வடமராட்சிமேற்கு மணியகாரனாயிருக்கும் சின்னத்தம்பி, 2 அனுராசபுரக் கச்சேரிக் கிளார்க்கு சின்னையா, 3 யாழ்ப்பாணப் பிசுக்கால்கந்தோர்க் கிளாக்கு வேலுப்பிள்ளை, 4 தமிழ் வித்தியாதரிசி இராசசிங்கம், 5 சதாசிவம், 6 யாழ்ப்பாணத் தபாலாபீசில் வேலையாயிருக்கும் ஆள்வையினார் உடையார் மகன் கதிர்காமர், மகன் ஆள்வார், மகன் கந்தப்பர், மகன் சிற்றம்பலத்தின் மனைவி இலட்சுமிப்பிள்ளை.

**சங்கரமுதலியார்:**—இவர் தொண்டமண்டல வேளாளன். இவர் மகன் மல்லாவரதமுதலியார். இவர் வழித்தோன்றல் நீலையினார். இவர்மகன் ஆராய்ச்சியார், மகன் நீலையினார், மகன் முருகேசர், மகன் சிற்றம்பலம், மகன் கதிரேசபிள்ளை. இவர்மகனே தற்போது சாவகச்சேரிப்பொலிஸ்கோட்டுப் பிஸ்கால்

யிருக்கும் அரியகுட்டிப்பிள்ளை. இவர் மக்கள் 1 இரத்தினவதி, 2 மாதர்க்கரசி. இம்மாதை விவாகஞ்செய்தவர் அராலி பரராசசிங்கமுதலியார் வழித்தோன்றலாயுள்ள தெய்வேந்திர முதலியார் மகன் வயித்தியநாதமுதலியார், மகன் தம்பாபிள்ளை உடையார், மகன் பியுவல் வயித்தியநாதர்மகன் (அப்புக்காத்து) இளையதம்பி.

பூலோகமுதலியார்:— இவர் கரவெட்டியிலுள்ளவர். இவர்மகன் கதிர்காமர், மகன் கந்தப்பர். இவர்மக்கள் 1 வீரவாகு முதலியார், 2 முருகேசு. மேற்படி வீரவாகு முதலியார் கரவெட்டி உடையாராயும் பின் மணியகாரனாயுமிருந்தவர். இவர் மனைவி கரவெட்டி இருமரபுந்துய்ய மாப்பாண முதலியார், மகன் கதிர்காமர், மகன் ஐயம்பிள்ளைஉடையார், மகன் வல்லிபுரஉடையார் மகள் பொன்னாச்சிப்பிள்ளை. இவர் புத்திரனே தற்போது வடமராட்சி கிழக்கு மணியகாரனும் பரோபகாரப்பிரபுவாய் விளங்கும் சிற்றம்பலம். கரவெட்டிதெற்கில் விளங்கும் அங்கிளதிராவிட (சைவ) வித்தியாசாலையும் அதன்பாகத்திலிருக்கும் பெண்பாடசாலையும்; அல்வாய் துன்னாலையையும், கரணவாய் துன்னாலையையும் இணைக்கும் றோட்டும் இம்மகான் விடாமுயற்சியாலானதாம் இவர்மகார் 1 முருகேசு, 2 கந்தப்பு. மேற்படி முருகேசுவின் புத்திரனே தற்போது உடுப்பிட்டிக் கோவிற்பற்று றிச்சிஸ்றராகவிருக்கும் சின்னத்தம்பி.

நரபாலசிங்கமுதலியார்;— இவர் வழித்தோன்றலாயுள்ளார் இறசமேதார்.................. மகன்..............மணியம். இவர் மகன் மூத்ததம்பி (மயிலிட்டி) இவர்மகன் விசுவநாதபிள்ளை. இவர் மகனே மட்டுக்களப்புக் கிராமக்கோட்டு நீதவான் வேன் முருகுமுதலியார். இவர்மக்கள் மட்டுக்களப்புக் கோறளைப்பற்று உடையார் 1 பொன்னுச்சாமி, கண்டிப் பொலிஸ்பகுதியின் கிளாக்கு 2 ஐயாத்துரை. வேன்முருகுமுதலியாரின் சகோதரி பார்வதிப்பிள்ளையை விவாகஞ்செய்தவரே, சுப்பிரமணியர் இரண்டாம்மகன் [புலோலி] வெற்றிவேற்பிள்ளையின் மகன் வயிரவநாதரின்மகன் வீரபத்திரரின்மகன் (புலோலிப் பசுபதீஸ்வரன்கோவில் தர்மகர்த்தா) இராமசாமிப்பிள்ளை. இவர் மக்கள் 1 விசுவலிங்கம், 2 தியாகராசபிள்ளை.

காரானசிங்கமுதலியார்;— இவர்மகன் கந்தையா (உரும்பராய்) இவர்மகன் கதிர்காமத்தம்பி (வண்ணை) இவர்மகன் முருகேசு, இவர்புத்திரனே வேலுப்பிள்ளை. இவர்புத்திரர் பீசாய்க்குப்பகுதியில் டக்றராயிருக்கும் 1 நாகலிங்கம், இத்தியு

புகையிரதப்பகுதியில் வேலையாயிருக்கும் 2 சோமசுந்தரம், தொடுவாய்ராச்சியத்தில் ஸ்ரோர்க்கீப்பர்வேலையிலிருக்கும் 3 தம்பிப்பிள்ளை, யாழ்ப்பாணத்தில் நியாயதுரந்தரரா யிருக்கும் 4 இராமலிங்கம், கொழும்பில் புகையிரதப்பகுதியில் வேலையாயிருக்கும் 5 குழந்தைவேல், தொடுவாய் ராச்சியத்தில் பொலிஸ் கிளாக்காயிருக்கும் முருகேசர் சின்னத்தம்பி மகன் கந்தையாவின் மனைவி 6 தங்கம்மா.

இலங்கைநாயகமுதலியார்:—இவர் காரைக்காட்டு வேளாளன் மண்ணாடுகொண்டமுதலி வழியிலுள்ளவர். இவர்வழித்தோன்றல் மயிலிட்டி காசிநாதர் மகன் மூத்ததம்பி, இவர்மகன் அம்பலவாணர். இவர் மகனே இலங்கைச்சட்டநிரூபணசபா அங்கத்தொருவராயிருந்து தற்போது எத்தகையினரும் புகழ்ந்து போற்றிமதிக்கும் Sir பட்டம்பெற்றுவிளங்கும் கனகசபைப்பிள்ளை (அப்புக்காத்து.) காவிரிப்பூம் பட்டணத்திலிருந்துவந்த தண்டிகைக் கனகநாயகமுதலியார் வழித்தோன்றலான சின்னத்தம்பியார் மகன் பூதப்பிள்ளை மகன் வயித்திலிங்கம் (அப்புக்காத்து) இவர்க்கு மருகராயுள்ளவர். பிறக்றர் அப்பாசாமி இவர்க்குச் சகோதரமுறையினர். காசிநாதர் மயிலிட்டியில் பள்ளந்தறையிலுள்ளவரென்பதற்கு இன்றும் அவர்வழியினராட்சியில் அங்குள்ள காணிகளே சாட்சியிடும்.

மழவராயமுதலியார் மாதகல்:—இவர்மகன் சுப்பிரமணியம், (வட். கிழ.) இவர்மகன் வயிரவநாதர். இவர்மகன் கணபதி உடையார். இவர்மகன் விநாசித்தம்பி. இவர்மகனே முருகேசபிள்ளை. இவர் சிங்கப்பூர்ப்பகுதியிலும் பின் யாழ்ப்பாணத்திலும் P. W. D. குறுக்குறோட்டு இஞ்சினீராயிருந்தவர். வித்தியாதானம், கன்னிகாதானம், ஆலயதானங்களுக்குப் பெரும்பொருள் களிப்போடு கொடுத்தவர். வட்டுக்கோட்டை இளந்தலைவ சிங்கமாப்பாணமுதலியார் மரபிலுள்ள ஆறுமுகம்மகன் (காலஞ்சென்ற) வலிகாமம் மேற்கு மணியம்—இரகுநாத முதலியார் மகன் (மணியகாரன்) தில்லைநாதமுதலியாரின் ஏகபுத்திரியான கண்மணியம்மாளை விவாகஞ்செய்தவர்.

மானமுதலியார் (வட்டு கிழக்கு) சித்தங்கேணி:—இவர் வழித்தோன்றல் இளையார். இவர்மகன் சிதம்பரநாதர், மகன் கதிர்காமர், மகன் பெரியதம்பி, மகன் காசிநாதர். இவர்மக்கள் 1 கதிரேசர், 2 சரவணமுத்து, 3 கார்த்திகேசு, 4 அருணாசலம், 5 வயித்தியலிங்கம். வயித்தியலிங்கம் என்பவரே தற்காலம் யாழ்ப்பாணப் பிரபுக்களுள் தர்மோபகாரங்களில் தலையென யா

வராலும் விதந்து பாராட்டப்படுபவர். இவரால் செய்யப்பட்ட தர்மகாரியங்களோ மிகப்பல. சித்தங்கேணி விநாயகராலயத்தை முடிக்கப் பெருந்தனமளித்தனர். வல்லிபுரக்கோவிலிலும் இவர் பங்குபற்றியிருக்கின்றனர். வல்லுவெட்டித்துறைச் சிவன்கோவிலின் வசந்தமண்டபம், கீரிமலைச் சிவன்கோயில் நவக்கிரகங்கள்மண்டபம், வட்டுக்கிழக்கு முத்துமாரிகோவில் நிருத்தமண்டபம், சங்குவேலி விநாயகராலய முழுத்திருத்தங்கள், திருச்செந்தூர்த் திருஞானசம்பந்தர்மடம், கதிர்காமத்தில் விளங்கும் மடம், கீரிமலையில் சிரேட்டமுற்று விளங்கும் மடம் ஆதியன இவர் தமுபகாரத்தால் ஆக்கப்பட்டவையாம். இவையன்றி நாலுதிசையிலுமுள்ள அனேக சிவாலயங்களுக்கு நூறு ரூபா ஐந்நூறு ரூபா என்று மனமகிழ்ச்சியோடு உதவியிருக்கின்றனர். சங்குவேலியில் தற்போது நடைபெறும் தமிழ்ச் சைவ வித்தியாசாலையும் (உடுவிலில்) பிராமணப்பிள்ளைகளை சம்ஸ்கிருதங் கற்பிக்கவாக்கிய வித்தியாசாலையும் இவர்பொறுப்பினதாம். இவையன்றிப் பல வித்தியாசாலைகளுக்கும் பெரும்பொருளுதவியிருக்கின்றனர். மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு 1,000 ரூபாவும், வண்ணை இந்துக்கல்லூரிக்கு 5,000 ரூபாவும் உபகரித்தார். கன்னிகாதானங்களுக்காய் அதிகமான நிதியை இரக்கத்தோடும் அன்போடும் உபகரித்தவருள் இவரே தலையென யாரும் பின்னிடார். கதிர்காம யாத்திரைசெய்வார் யாவராயினும் (விரும்பில்) போகும்போதும் திரும்பும்போதும் ஒவ்வொர்படி அரிசியும் ஒருபணமும் பெறும்படி மட்டுக்களப்பில் தமது கிருகத்தில் ஒழுங்குசெய்திருக்கின்றனர். இவர்பொறுப்பில மாசம் மாசம் மட்டுக்களப்பில் இருபது புஷலுக்கு ஏற்றமான அரிசி பிச்சைக்காரருக்குச் செலவிடப்பட்டுவருகின்றது. இவர் புத்திரரே தற்போது மட்டுக்களப்பில் பிரபலமதிப்புற்று எத்தகையினராலும் போற்றப்படும் 1 மார்க்கண்டு, 2 சுப்பிரமணியம், 3 நடராஜா, 4 குமாரசுவாமி.

"எங்கைதநல் கூர்ந்தா னிரப்பார்க்கொன் றீந்தென்று
மைந்தர்தம் மீகை மறுப்பரோ—பைந்தொடீ
நின்று பயனுதவி நில்லா வரம்பையின்கீழ்க்
கன்று முதவுங் கனி." என்றபடி சீவந்தராயிருக்கும் தந்தையார் தருமத்தை யிவர் மைந்தருஞ் சிறிதும் மனநலிவுறாது செய்துவருகின்றனர்.

ஆறுமுகமுதலியார்;—இவர் எழுதுமட்டுவாளிலுள்ளவர். அங்குள்ள மருதங்குள விநாயகராலய எசமான். இவர்மகன் சிற்றம்பலம், மகன் வயிரவநாதர். மகன் கொக்குவில், பேரின்பநாயகமுதலியார். இவர்மகனே பெரியகோட்டுத் துவிபாஷித

முதலியாராயிருந்து தற்போது உபகாரச் சம்பளம்பெறும் இலங்கைநாயகமுதலியார், இவர்மக்களே முல்லைத்தீவுக்கச்சேரி பிரதம சக்கடத்தாரும் பிசுக்காலுமாயிருந்து காலஞ்சென்ற 1. தம்பியப்பா இலங்கையர். 2. நியாயதுரந்தர கல்விகற்றுப் பின் ஞானவழியை யனுட்டித்துச் சீவிக்கும் சுவாமி கனகரத்தினம்,

**உமைபாகர்;**—தொல்புரம். இவர் மகன் கந்தப்பர், மகன் எதிர்வீரசிங்கமுதலியார், மகன் அம்பலவாணர், மகன் இராமநாதர், மகன் இராசகாரிய பாண்டிமழவராய முதலியார், மகன் கந்தப்பர், மகன் முருகப்பர், மகன் ஆறுமுகம், இவர்புத்திரர் 1, கிருஷ்ணபிள்ளை, 2, செல்லப்பா, 3. சீனிவாசகம், 4, அருணாசலம். காலஞ்சென்ற 1, மேற்படி கிருஷ்ணபிள்ளை அவர்களே தற்போது கீரிமலையின் மேற்பாகத்திற்றுலங்கும் தர்மமடாலயத்தையுருப்பித்தவர். இவர் யாழ்ப்பாண இஞ்சினீர்க்கந்தோரிற் பிரதம கிளாக்காய், 23 வருடம் வேலைபார்த்துச் சமஸ்த துரைமக்களாலும் விதந்து வியந்து பாராட்டப்பட்டவர். ஒரு நைட்டிகப்பிரபு. இவர் மதநைட்டிகத்திலும், சிவபத்தி அடியாரபத்தியிலுஞ் சிறந்த பெருந்தகை வள்ளலாய் விளங்கியவர். இவர் புத்திரர் கயிலாயபிள்ளை P, W, D. ஓவசியர். 2. நவரத்தினம்பிள்ளை. Low student 3. கந்தையாபிள்ளை. சேதுகாவல முதலியார் வழியிலுள்ள முருகேசவுடையார் மகன் விசுவநாதர் புத்திரன் முருகேசரின் புத்திரராய்த் தற்காலஞ் சாதுகுணசம்பன்னராய்ச் சமஸ்தராலும் நன்குமதிக்கப்பட்டு விளங்கும் பழைய P, W, D, ஓவசியர் கனகசபைப்பிள்ளை, 2, தொண்டைமானாற்றுப்பகுதியில் பிரதம ஓவசியராய் விளங்கும் வயித்தியலிங்கம் என்பார் இவரது சகோதரியாரின் புத்திரரே.

**வேளாளமுதலியார்:**—இவர்வழித்தோன்றல் சுவாமிநாதபிள்ளை. இவர்மகன் இராமநாதவுடையார், மகன் சுவாமிநாதபிள்ளை. மகன் சுன்னாகம் [வயித்தியர்] கனகசபைப்பிள்ளை. இவர் [உடுவில்] தெய்வேந்திரமுதலியார் மகன் காசிநாதமுதலியார் மகள் பூதாத்தைப்பிள்ளை மகள் சிதம்பரஆச்சிமகள் தங்கச்சிப்பிள்ளைமகள் சின்னாச்சிப்பிள்ளையை விவாகஞ்செய்தவர். இவர் புத்திரரே அங்கில சுதேசவயித்தியத்திற் பிரபலியகீர்த்தியுற்றுச் சுன்னாகத்தில் விளங்கும் வல்லிபுரநாதபிள்ளை. இவர் புத்திரர் 1 முத்துக்கிருஷ்ணபிள்ளை, 2கனகசபைப்பிள்ளை. முத்துக்கிருஷ்ணபிள்ளையின்மகன் தெய்வேந்த்ரமுதலியார். [Wood] காசிநாதமுதலியார் என [சிங்கள அங்கில சமஸ்கிருத திராவிட] பண்டிதராய்க் கீர்த்திபெற்று விளங்கிய இவர் மேற்படி வல்லிபுரநாதபிள்ளையின் அன்னைவழியினரே.

**குலநாயக மாப்பாண முதலியார்:**—நவாலி. இவர் தொண்ட
நாட்டு இருமரபினுந்துய்ய முதலியார் வழித்தோன்றல். இவர்
மகன் பாலசிங்க மாப்பாண முதலியார். இவர்மகன் குலதீரவல்
லமாப்பாணமுதலியார். இவர் வழித்தோன்றல் பத்தவுடையார்,
மகன் கொற்றவுடையார், மகன் கந்தவுடையார். மகன் குழந்தை
ச்சட்டம்பு. மகன் பொன்னக்கணக்கர், மகன் இராமஉடையார்.
மகன் ஆறுமுகம். மகன் இராமலிங்கம். இவர் இணுவில்பேராயி
ரமுடையான்வழித்தோன்றலான, சந்திரவர், மகன் கதிர்காமர்
மகன் மயில்வாகனம் மகன் முருகேசர் மனைவியும், நவாலி இ
ருமரபுந்துய்ய கதிர்காமமுதலியார் மகன் வன்னியசிங்கமுதலி
யார் மகன்கதிர்காமர் மகன்வன்னியசிங்கமுதலியார் மகன் விநா
சித்தம்பியார் புதல்வியுமான காதலிப்பிள்ளையினது மகள் சிவகா
மிப்பிள்ளையை விவாகஞ்செய்தவர். இவர் புத்திரரே தற்போ
து சாதுசற்பிரபுவாய் கொழும்பில் நியாயதுரந்தரராயிருக்கும்
தர்மலிங்கம், 2 தொடுவாய்ப்பகுதியைச்சேர்ந்த தையிட்டியெ
ன்னுமிடத்தில் போஸ்ற் ஒவ்வீஸ் சுப்பிறின்றனுகவிருக்கும் செ
ல்லையா. 3 தொடுவாய்ப்பகுதியில் P. W. D. ஓவசிகரகவிருந்து
தற்போது உயகாரச்சம்பளம்பெறும் சின்னையா.

**தையிட்டியூர், இராஜவாதுங்கமழவன், இராசிங்கவலத்தவன்:**—
மிகு பண்டைக்காலந் தொடங்கி இவ்விடமெழுந்தருளியிருக்கு
ம் கணேஜ தெய்வத்துக்கு விழாக்கொண்டாடிவந்தமை காரண
ம்பற்றி "தெய்வ—இட்டி—ஊர்" தையிட்டியூரென மருவி வழங்
கப்பெற்றுவருகின்றது. அன்றியும் சிங்களப்பெயர்கள் யாழ்ப்
பாணத்தில் சிலவிடங்களுக்கு அமையப்பெற்றிருக்கின்றமை
யால் இப்பெயரும் அப்படியாகுமோவென்று சொல்லினும்,
தெய்யோ-ஹிற்றிய—தையிட்டியெனக் 'கணேஜ' தெய்வமிருக்கு
மிடமெனப் பொருள்படத் தமிழில் மருவி வழங்கிற்றெனக்கொ
ள்ளினுமமையும்.

இற்றைக்கு ஏறக்குறைய இருநூற்றைம்பது வருஷங்களுக்
குமுன் பிள்ளையார்கதை, சிவராத்திரிபுராணம் முதலிய சிறந்த
பக்திநூல்களைப்பாடிய வரதபண்டிதர் தாம் அம்மூர்த்திமீது
பாடிய திருவூஞ்சலில் அக்கருத்து நன்கு அமையப்பாடியதூஉம்,
கிள்ளைவிடுதூதில் "எண்ணரிய-தன்மமுடன் செல்வமிருந் தையி
ட்டியிவ்வூரிற், சன்மமெடுத்த சனங்களுக்குப்-பொன்னினுடன்,
றுய்யமுப்பா லாறுவிளை சோறுதவி யாங்கவர்க்கு, வெய்யபிணி
நோய் விலக்கியே யையமறக், கேட்டவரநல்குங் கிருபைச் சமு
த்திரமாங், கோட்டமதில் வாழுங் குலதெய்வம்" எனப் பாடிய
தூஉம், இம்மூர்த்தி வீற்றிருந் தருள்புரியுமிடமான 'கணேஜவிற்
கோட்ட' மென்றபெயரா லழைக்கப்படுமிடமே. இதற்கருகா
மையாக மடாலயங்களும் திருக்குளமுமிருக்கின்றன. இவ்வூரி

ல் அரசடியிற்பிள்ளையார், நாகேஸ்பரன், கண்ணகையம்மன் கோயில்களுமிருக்கின்றன. ஒரு தமிழ்ச் சைவவித்தியாசாலையுமிருக்கின்றது.

தமிழரசர்களாகிய ஆரியச் சக்கிரவர்த்திகளால் யாழ்ப்பாணம் குடியேற்றப்பட்டகாலத்தில் தொண்டைநாட்டிலுள்ள மணலூரிலிருந்து ராஜவாதுங்கமளவன் என்னும் பெருவேளாண்டலைவன் ஆளடிமை முதலியவைகளுடன்வந்து தையிட்டியூரிலே குடியேற்றப்பட்டாரென்பர். இவர்முதலில் குடியிருந்ததானமானது கணேஜவிற்கோட்டத்திலிருந்து அரைமைல்தூரம் தென்கீழ்ப்பாகத்திலாகும். அத்தானத்தில் பக்கசவுக்கியமில்லாமையினால் சிலவருஷங்களின்பின் கணேஜவிற்கோட்டத்தை யுறைவிடமாக்கினார்.

இங்ஙனமிருக்க, இன்னும் இற்றைக்கு ஏறக்குறைய 500 வருடங்களின்முன் சோழநாட்டிலிருந்து இராசதுரோகத்துக்கஞ்சிக் காரைக்காலிலிருந்து கார்காத்த வேளாளர் மரபிலுள்ள இராசிங்கவலதவன் என்னும் பிரபுவும் சிலரும், பொன்னன் சாம்பாணெட்டியென்பவனால் படகிலேற்றிக்கொண்டுவரப்பட்டு இவ்விடத்தில் குடியேறினாரென்பர். இவரது ஞாதியர் வமிசத்தவரான ஆயிரமேர்வேளாளன் கனகசபாபிள்ளையென்றொருவர் இற்றைக்கு நூற்றிருபது வருஷங்களின்முன் காரைக்காலிலிருந்து வந்து இவ்வூரில் சிலகாலந்தங்கிப்போயினார். இவர்கள் வமிசபரம்பரையில் வந்தவரான இராம்நாதரென்பவர் பரராசசேகர சிங்கையாரியச் சக்கிரவர்த்தி யாழ்ப்பாணத்தை வட்டங்களாகப் பிரித்து விசாரணைத்தலைவராகப் பஞ்சாயத்தாரை ஏற்படுத்தியபோது, தம்மூர் வட்டவெல்லைக் கல்லை அரசன் நடுவித்தவிடத்தினின்றும் பிடுங்கித் தமதெண்ணப்படியே அரைமைலுக்குமேற்படத் தள்ளி நடுவித்தும் வட்டவிசாரணைத்தலைவர்களுளொருவராகியும் விளங்கினார். பறங்கிக்காரர் இவருக்கு டொன் தீயோகுப்பிள்ளையென்ற பட்டப்பெயர் கொடுத்தார்கள். பஞ்சாய ஏற்பாட்டு முறைப்படி ஊர்வியவகாரவிசாரணைகளை பின்னுமனேகவருஷங்களாகத் தம்முள்ளே சனங்களொத்துக் கணேஜவிற்கோட்டமென்றவிடத்தில் நடத்திவந்தார்கள். அப்படி நடத்திய மடம் குளத்தினது முன்னடிவாரத்திலே இப்போது மழிந்திருக்கின்றது. கணேஜகுளத்துக் கூட்டம்வைக்குமிடமென்பது கருதியே "கணேஜவிற்கோட்டம்" என வழங்கலாயிற்று. இவரதுமகன் செங்கமலநாதரென்பவர் கவித்திறமையுடையவர். இவரொருநாள் தமது ஞாதியரைக்காணும்படி கோப்பாய்க்குச்சென்று அவ்விடம் அனேகநாட் தங்கிவந்தபோது தன்னை அவமதித்த ஒரு சுற்றத்தவர்பேரில் ஓர் கவிபாடியதினால் அவர் வியாதியுற்றுச் சந்நிதியில் மரணமடைந்தாரென்பர்.

இன்னு மிவ்வமிசப்பரம்பரையில் வந்தவர்களான ராஜகாரிய எதிர்வன்னசேகர முதலியார், பறங்கிக்காரரால் தோம்பெழுதப்பட்டபோது தோம்பகிராரியாயிருந்து இராசாங்கத்தாரால் பொற்பட்டயம்முதலிய பரிசுகளும் வரிசைகளுங் கொடுக்கப்பெற்றுரென்பர். பெரிய இராசிங்கமாலாணமுதலியார், சின்ன இராசிங்கமாலாணமுதலியார், இராசகாரிய சந்திரசேகரமுதலியார், ஐயாமுத்தப்பர் முதலியோரும் நற்சீலமுடைய பிரபுக்களாய் விளங்கினுர்கள். இச்சந்ததியினரான பெரியதம்பியார் கதிர்காமப்பிள்ளைஉடையார் நெடுங்காலமாக மயிலிட்டிக்கோவிற்பற்று உடையாருத்தியோகம்பார்த்து இராசாங்கத்தாரால் சன்மானம் பெற்றுப் பொற்பதக்கம் பரிசாகப்பெற்றவர். கணேஜவிற்கோட்டத்திலெழுந்தருளியிருக்கும் விநாயகமூர்த்தி ஆலயத்துச் செங்கற்றிருப்பணியை வெள்ளைவயிரக்கற் றிருப்பணியாகச் செய்வித்த நற்குணசீலமுடையவர். ஒருகருவிகரணங்களும் தன்செயல் குன்றுமலும், ஓர் பல்லுமுதிராமலும், உடம்புதிரையாமலும் நரையின்றி நூற்றுப்பன்னிரண்டு வயதுவரை சுகதேகியாயிருந்து 1905-ம் ஆண்டாகிய விசுவாவசு ஞ மார்கழி மீ தேகவியோகமாயினர். இவர்புத்திரனே தற்போது மயிலிட்டிக்கோவிற்பற்று உடையாராகவிருக்கும் ஆறுமுகம்.

**அம்பலவாணர் கந்தப்பிள்ளை**;—இவர் தையிட்டியூரிலே, இராஜகாரிய சந்திரசேகர முதலியாரது பேரனுகிய முதலிக்குட்டியாருக்குப் பேரனுயுள்ள ஒருபெருமேர்படைத்த வேளாண்டலைவர். தமது கமப்பெருக்கத்தினுல்வந்த செல்வம் முழுவதையும் ஏழைகளுக்கும் அனுதர்களுக்கும் உபகரிப்பதும், சிவகாருண்ணியம், தயை, சாந்தம், பொறை, அடக்கம் முதலிய சீலங்களைக் கொண்டொழுகுவதுமே விரதமாகவுமுடையவர். இவர் 1876-ம் ஞ மாசிமாதம் தமது முதுவயசில் உயிர் துறந்தார். இவரது புத்திரனுகிய மூத்ததம்பி 1910-ம் ஞ ஐப்பசி மாதம் இவ்வுலகவாழ்வை நீங்கினுர். இவர் புத்திரரே தற்போது கொழும்பு Master Attendants' ஆபீசில் உத்தியோகமாகவிருப்பவரும் தையிட்டிக் கணேசவித்தியாசாலை மானேசருமான வன்னியசிங்கம், 2 தொடுவாய்ப்பகுதியில் டக்றர் உத்தியோகமாகவிருக்கும் செல்லப்பா, 3 யாழ்ப்பாணத்தில் எக்சஸ்பகுதி இன்ஸ்பெக்றராகவிருக்கும் கணபதிப்பிள்ளை, 4 கொழும்பு வைத்தியகல்லூரியில் டக்றர்பரீட்சைக்குக் கல்விகற்றுவரும் அரங்கநாதன். 5 கொழும்பில் பிறக்றர்பரீட்சைக்குக் கல்விகற்றுவரும் துரையப்பா.

**இறகுவர் வயித்தியர்**:—இவர் சுழிபுரத்திலுள்ளவர். இவர் மகன் தாமோதரர். இவர்மகன் பொன்னம்பலம், மகன் தில்லையம்பலம் (வட்டு), மகன் ஐயம்பிள்ளை (பிளாய்க்கூ) இவர்

உபாத்தியாயராயிருந்தவர். இவர் பருத்தித்துறை, ச்லோமோன் அம்பலவாணர் மகள் சின்னத்தங்கத்தை விவாகஞ்செய்தவர். இவர் புத்திரரிலொருவரே தற்போது பெரும் பிரக்கியாதையுற்று ஈகை, இன்சொல், தண்ணளியோடு யாழ்ப்பாணத்தில் டிஸ்திரிக் இஞ்சினீராயிருக்கும் இராஜா உவில்லியம்பிளாய்க்கு.

மனப்புலிசிங்க முதலியார்:—மாரியங்கூடல். இவர் வழித்தோன்றலாயுள்ள பெரியதம்பி உடையார். இவர் தம்பி மனப்புலிசிங்கமுதலி. மேற்குறித்த உடையார் ஆங்கில அரசின் தொடக்கத்தில் உடையாராகவிருந்து பிரபலமாக வாழ்ந்தவர். இவர் மகன் சயம்பர். இவர் மகன் வேதாந்த நூலுணர்ச்சியிற் சிறந்த சிவபக்தன் தம்பிநாதன். இவர் மகன் சயம்பர். இவர் திருமருங்கூரினின்றுவந்த கதிர்காமச்செட்டி வமிசத்துதித்த அம்பலவாணச்செட்டியின் குமாரன் சின்னத்தம்பி மகன் விதானை விசுவநாதனின் புத்திரியை மணந்து 1 கந்தையாபிள்ளை, 2 வயிரமுத்து, 3 விசுவநாதன் என்னும் மூன்று புத்திரரைப்பெற்றனர்.

1 கந்தையாபிள்ளை தமிழ் ஆங்கிலம் இரண்டுங்கற்றுத் தமிழ்ப்பாஷையில் நல்ல பாண்டித்தியம்பெற்று தெல்லிப்பழைப்போதனா வித்தியாசாலையின் தலைமையாசிரியராயிருந்தவரும், அவ்வித்தியாசாலைக்கு "வான்முறை" என்னும் நூலைச்செய்தவரும், நொத்தாரிஸ்மாருக்குரிய முதற்பரீட்சையில் முதலாமாளாகத் தேறி, அவ்வுத்தியோகத்திற்குப் படித்துக்கொண்டிருப்பவருமாகிய இவர்; அளவெட்டி சேனாதிராயமுதலியாரின் வழித்தோன்றலாய்வந்த சங்கரப்பிள்ளை-பொன்னம்பலம்-சிதம்பரப்பிள்ளையின் மகளுக்கும், கந்தரோடை நாகநாதர்-சின்னத்தம்பி-கதிரேசபிள்ளைக்கும் புத்திரியாயுதித்த பெண்ணை விவாகஞ்செய்தவர்.

கதிரித்தம்பி;—இவர் டச்சு அரசர்காலத்தில் யாழ்ப்பாணரேவில் வேலையாயிருந்தவர். இவர் பௌத்திரர் ஆறுமுக ஞானியார் (கந்தரோடை.) இவர்புத்திரரிலொருவரே ஊர்காவற்றுறை ரேகுத்துரையாயிருந்து காலஞ்சென்ற சுப்பிரமணியர்(வண்ணை) இவர்புத்திரரே 1 தொடுவாய்ப்பகுதியில் உத்தியோகமாயிருந்து காலஞ்சென்ற சோமசுந்தரம், 2 அரசாட்சிவைத்தியசாலைகளில் பிரபலவைத்தியராயிருந்து தற்போது தமதுபொறுப்பில் வைத்தியம் நடத்தும் டக்டர் ஆறுமுகம், 3 யாழ்ப்பாணரேவில் கிளாக்காய் விளங்கும் சிற்றம்பலம்.

இராமலிங்கபிள்ளை:—இவர் குலதிலகமெனவிளங்கிய இருபாலைச் சேனாதிராஜா முதலியார் புத்திரர். குலத்துக்கேற்ற பிரக்கியாதையும் மதிப்புங்கொண்டுவிளங்கிய இப்பிரபுவின் ஏகச

கோதரியே இருபாலை மண்ணாடுகொண்டமுதலி வமிசத்திலே பிதிர்வழியிலே பெருஞ்செல்வராயிருந்த இராமநாதபிள்ளை என்பாரை விவாகஞ்செய்தனர். இவர் புத்திரரே கோப்பாயில் பெரும் பிரபுவும் கொடைவள்ளலுமாயிருந்த கந்தப்பிள்ளை. இவர் புத்திரரே இருபாலையில் கீர்த்திபெற்ற பிரபுவாய்க் குலத்தை விளக்கும் உயர்குணங்காட்டி விளங்கிய காலஞ்சென்ற (தம்பு) சிவசுப்பிரமணியபிள்ளை. இவர் புத்திரர் 1 சபாபதி, 2 சின்னப்பா, 3 துரை, 4 நடராஜா, 5 இராஜா. தற்போது இலங்கை அரசினர் ஆசிரியர் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராயிருக்கும் கந்தையாபிள்ளை, M. சேனாதிராஜா, V. முத்துக்குமாரு என்பவர்கள் மேற்படி சிவசுப்பிரமணியபிள்ளைக்கு மருகர்.

இளந்தலைவசிங்கமுதலியார்;—இவர் வட்டுக்கோட்டையிலுள்ளவர். இவர் வழித்தோன்றலாயுள்ளார் இராசநாதஉடையார், மகன் சின்னஉடையார், மகன் ஆறுமுகம். இவர் புத்திரரே இளந்தலைவசிங்க ரகுநாதமுதலியார் என்னும்பட்டம் விளங்கிய காலஞ்சென்ற ரகுநாதர் வலிகாமம்மேற்கு மணியகாரன். இவர் புத்திரரிலொருவரே மேற்படி பிரிவின் மணியகாரனாயிருந்து இளைப்பாறுதல் (உபகாரச்சம்பளம்) பெறும் தில்லைநாதர்.

தொம் சுவாம் இராசசிங்கக் கனகராயமுதலியார்:—இவர் தெல்லிப்பழை செட்டிகளுட் சிறந்தவொரு குடும்பத்திலே தோன்றியவர். தெல்லிப்பழையிலே, பறங்கிக்காரர் காலத்திலே, ஒரு பிரபல வர்த்தகராயிருந்து அல்வவாகனாதி ஐஸ்வரியவந்தராய் வாழ்ந்தவரென்று சொல்லப்படும் வீரசிங்கக்குலோத்துங்கமுதலியார் குடும்பத்துக்கும் உரிமையுள்ளவர். தமிழ்க் கல்வியிற் சிறந்திருந்தமையின், ஒல்லாந்தரால் 1772-ம் ஆண்டிலே தெல்லிப்பழைக்கோவிற் கணக்கராகத் தெரிவுசெய்யப்பட்டு, அவ்வுத்தியோகத்தை அநேகவருடங்களாகப்பார்த்துத் தம் தலைமகன் கந்தரத்தின முதலியாரிடம் ஒப்புவித்துவிலகியவர். பண்டத்தரிப்புக்கோவிற் சட்டம்புவாயிருந்த இரத்தின விசுவநாதமுதலியார், பன்னாகம் செட்டிகள் குறிச்சியிலே அதிகாட்டாண்மையுடையவராய் விளங்கிய எதிர்வீரரத்தினமுதலியார், மாதகல் செட்டி இரத்தினவித்தாரமுதலியார் நாயனி ஆதிநாயகம் ஆகிய இவர்களும் இராசிங்கக்கனகராயமுதலியார் மக்களேயாம். இவர்கள் சந்ததியார் தெல்லிப்பழையிலும் பன்னாகஞ் செட்டிகள் குறிச்சியிலுமுளர்.

மேற்படி கனகராய முதலியார் சகோதரன் தெல்லிப்பழை தொம்பிலிப்பு வணிகர்குலசூரிய முதலியார். அவர் புதல்வரிருவர், சுப்பிரமணியரும் கதிர்காமரும், தெல்லிப்பழை குமாரம

டப்பளி தொம் அணி சோமநாத முதலியார்க்கு மைத்துனவுரிமைபூண்டவர். சுப்பிரமணியர்கூது கதிரேசர் குமாரனே தெள்ளிப்பழையிலே பிரக்கியாதிபெற்ற பிரசங்கியாராய் விளங்கிய 'சினெல்' (Snell) சுப்பிரமணியர்.

கதிரைவேற்பிள்ளை:—இவர் உடுப்பிட்டியிலே 1829-ம் வருடம் உயர்வுள்ள பூர்வீக குடும்பத்திலே பிறந்தவர். இவர் ஒக்கலார் பரம்பரையில் வித்துவத்திறமுடையராய் விளங்கினர். இவர் தந்தையார் குமாரசுவாமி முதலியார். இவர் தந்தையார் கதிர்காமபூப்பமுதலியார். இவர் தந்தையார் சந்திரசேகரமாப்பாண முதலியார். மேற்படி குமாரசுவாமிமுதலியாரின் அன்னையார் வள்ளியம்மை. இவருடன் பிறந்த இருசகோதரருள் ஒருவரே குமாரசுவாமிப்புலவர் எனப்பட்டவர். புராந்தர நாடகத்தைப் பாடியவர் இவரே. மற்றவர் முத்துக்குமாரமுதலியார். இவர் பிரபல கீர்த்திபெற்ற கல்விமான். அதிக தனிப்பாக்களை இயற்றியிருக்கின்றனர். மேற்படி வள்ளியம்மையின் தந்தை வைப்பித்தான் சந்திரசேகரமுதலியார். இவர் விறலிவிடுதூது போலும் அலங்கார வர்ணனைகளமைத்து வரவிபரின் மூடச்செயல் விளக்கும் ஓர் நொண்டிச்சிந்தும் நூதனார்த்தங்களையுள்ளடக்கிய பல தனிப்பாக்களுமியற்றியிருக்கின்றனர். ஒல்லாந்த அரசர்காலத்திலே வன்னிப்பகுதியிலே நிகழ்ந்த பெருங்கலகங்களையெல்லாம் அடக்கி மிக்க கீர்த்திபெற்றவர். இவர் 96 வயசிருந்து சீவித்துச் சிவகதிபெற்றார். மேற்படி குமாரசுவாமிமுதலியார் 83 வயசிருந்து சீவித்து 1874-ம் வருடம் சிவபதமடைந்தனர். இவரியற்றியகுறவஞ்சியில் இந்துதேயப்புலவரொருவர் இவரதுகுலபரம்பரையை விபரமாய்க்கூறியிருக்கின்றனர். மேற்படி கதிரைவேற்பிள்ளையின் சகோதரன் சபாபதி முதலியாரின் புத்திரரே காலஞ்சென்ற துரைச்சாமி மணியம். கதிரைவேற்பிள்ளை முன் நியாயதுரந்தரராகவும், பின் ஊர்காவற்றுறைப் பொலிஸ்கோட்டு நீதவானாயுமிருந்து முதுமையில் இளைப்பாறுதல் பெற்றவர். இவர் அங்கிலபாஷையோடு சம்ஸ்கிருதம் தமிழ் என்னும் பாஷைகளிலும் மகா பாண்டித்தியம்படைத்து தமிழில் 'தர்க்கபாஷை' 'அகராதி' ஆதியவைகளை எழுதிவெளிப்படுத்தியவர். இவர் தாமெழுதிய அகராதியைப் பூரணமாய் முடிக்குமுன் சிவபதமடைந்துவிட்டனர்.

இவர் புத்திரரே தற்போது கொழும்பில் ஞாயதுரந்தரசிங்கமாயும், தமிழ்ப்பிரதிநிதியாயும், சில காலங்களில் பொலிஸ் நீதிபதியாயும், டிஸ்திரிக் நீதிபதியாயும் விளங்கும் பாலசிங்கம்.

இவர் மருகரே தற்போது யாழ்ப்பாணத்தில் நியாயதுரந்தர சிங்கங்களாய்க் குலத்துக்கேற்ற வுயர்குணம்பூண்டு விள

க்கும், பிறக்றர் 1 கதிரேசபிள்ளை, 2 இரகுநாதர், 3 அப்புக்காத்து இராசரத்தினம்பிள்ளை, (நொத்தாரிசு) பிறக்றர் M. சிவப்பிரகாசம், K. சிங்காரம்.

ஐயங்கர்:—இவர் வல்லுவெட்டியிலுள்ள பூர்வகுடிகளிலொருவராயும், உயர்குலப் பிரபுக்களு ளொருவராயுமுள்ளவர். இவர்புத்திரர் 1 நீலையினார், 2 வெள்ளையர், 3 வாரியார், 4 பூதர், 5 செல்லர். இவர்களுள் வெள்ளையரின் மகன் சந்திரசேகரமுதலியார், செல்லர் மகன் வாரியார், இவர் மகன் கந்தர். மகன் விசுவநாதர் (நல்லூர்) இவர் புத்திரருளொருவரே தற்போது இலங்கைப்புகையிரதப்பகுதியில் ஸ்ரேசன்மாஸ்றராய்ச் சமஸ்தராலும் நன்குமதிக்கப்பட்டு விளங்கும் சதாசிவம்பிள்ளை. வல்லுவெட்டி மயில்வாகனம் மகன் முருகேசர் மகன் சுப்பிரமணியர் மகன் (நெடுந்தீவுமணியகாரன்) செல்லையா. மேற்படி சதாசிவம்பிள்ளையின் மைத்துனர்.

மயிலர்;—இவர் நல்லூரிலுள்ளவர். இவர்மகன் சுவாம் சுப்பிரமணியம். இவர் வடமராட்சி மேற்கில் நொத்தாரிசுவாயும் பின் மணியகாரனுமிருந்தவர். இவர் மக்கள் 1 சங்கரப்பிள்ளை, நல்லூர்ப்பகுதியில் விதானையாயிருந்தவர், 2 வயித்தியலிங்கம், வடமராட்சி மேற்கின் மணியகாரனுயிருந்தவர். 3 மாணிக்கம், யாழ்ப்பாணமணியகாரனுயிருந்தவர். 4 கந்தப்பசேகரர், நல்லூரில் நொத்தாரிசுவாயிருந்தவர். 5 மயில்வாகனம், உப்புக்கந்தோரில் ஸ்ரோர்க்கீப்பராயிருந்தவர், மேற்கூறிய 1 சங்கரப்பிள்ளை சுப்பிரமணியத்தின் புத்திரரிலொருவரான பொன்னையாவே தற்போது ஐக்கிய மலாய் நாட்டிலுள்ள போட்டீசனில் ஸ்ரேசன்மாஸ்றர், 2 மேற்கூறிய வயித்தியலிங்கமணியகாரனின் புத்திரரே பின் மணியகாரனுயிருந்து காலஞ்சென்ற சிவசிதம்பரம், தற்போது உரும்பராய் அங்கிள சைவவித்தியாசாலைப் பிரதமவாசிரியராயிருக்கும். 2 விசாகேசர். மல்லாகம் அங்கிளவித்தியாசாலை யாசிரியராயிருக்கும் 3 இராமலிங்கம்.

மாதக்க முதலியார்;—இவர் தெல்லிப்பழையிலுள்ள வேளாண்பிரபு. இவரைப்பற்றிய சில குறிப்புகள் இதன்முன் கூறப்பட்டிருக்கிறது. பிரபல பிரபுக்களான இவர் புத்திரர்களுளொருவரே இரகுநாத முதலியாரெனப்படுவார். இவர்மகன் கதிர்காமசேகர முதலியார், இவர் மயிலிட்டி. இவர் மகன் கார்த்திகேய உடையார். இவர் மகனே பிரபல அதிகாரம்படைத்த சங்கரப்பிள்ளை. இவர்மகன்; கனகராயர் (தெல்லிப்பழை) இவர் புத்திரரே சுதேச்சவைத்திய வல்லபத்தாலும் பரம்பரைச் செல்வாக்காலும் பலராலும் அறியப்பட்ட 1 கந்தையா. கண்டிப் பகுதியில் அரசாட்சி யுத்தியோகத்தில் கிளாக்காயிருக்கும் 2 தியாகராஜா. 3 சங்கரப்பிள்ளை.

ஐயம்பிள்ளை:—இவர் வேலணையில் உடையாராயிருந்தவர். மகன் சேதுமாதேவர்; இவருந் தந்தையார்போல் உடையாராகவேயிருந்தனர். மகன் நாகமணியர், மகன் முருகேசு. இவர் கோப்பாயிலே உவெஸ்லியன்மிஷன் பகுதியில் போதகராயிருந்தவர். இவர் மக்கள் 1 தென்னிந்தியாவில் கல்லூரி ஆசிரியராயிருந்து காலஞ்சென்ற சாள்ஸ்கென்ஸ்மன் பி, ஏ. 2 யாழ்ப்பாணத்திலே நியாயதுரந்தராயிருந்து காலஞ்சென்ற அல்விறற் கென்ஸ்மன். 3 யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரியராயிருந்து காலஞ்சென்ற சாமுவேல் கென்ஸ்மன். 4 கும்பகோணக்கல்லூரியில் பிரதமாசிரியராயிருந்து தற்போது உபகாரச்சம்பளம்பெறும் ஜேம்ஸ் கென்ஸ்மன் பீ. ஏ, 5 சென்னை ஐக்கவுன்டன்ஜெனறலாபீசில் சுப்பிறின்டனாயிருந்து தற்போது உபகாரச்சம்பளம்பெறும் எற்வேட் கென்ஸ்மன் பீ. ஏ. 6 மேற்படி ஆபீசில் வேலையாயிருந்து தற்போது உபகாரச்சம்பளம்பெறும் பொன்னையா கென்ஸ்மன். 7 கொழும்புத் தவாற்கந்தோரிற் பிரதமலிகிதராயிருக்கும் இராஜாகென்ஸ்மன். 5 இவர் புத்திரரிலொருவரான இராஜாகென்ஸ்மன் சென்னை நகரசங்கத்தில் ஒரு இஞ்சினீராயும், பீ. ஏ. கென்ஸ்மன் என்னுமொருவர் சென்னையில் ஞாயதுரந்தராயும், கென்றிகென்ஸ்மன் என்னுமொருவர் சென்னையில்டக்றராயுமிருக்கின்றனர். 1 இவர் புத்திரரிலொருவரான பீ. ஏ. செபரத்தினம் கென்ஸ்மன் சென்னைச்சர்வகலாசாலையில் உதவி றிசிஸ்றராயிருக்கின்றனர், 2 இவர் புத்திரரிலொருவரான தோமஸ் கென்ஸ்மன், ஞாயசாஸ்திர மாணவகனும், ஆதர் கென்ஸ்மன் என்பவர் கீழ்மாகாணப்பகுதியில் வோறஸ்டிப்பாட்மென்றில் வேலையாயுமிருக்கின்றனர்.

பரகைதீபமுதலியார்:—மாரியக்கூடல். இவர் உலாந்த அரசர்காலத்துப் பிரபலமுற்று விளங்கியவர். இவர்மகன் ஆங்கில அரசாட்சியில் கொத்தாரிசுவாகவிருந்து சிறப்புடன்வாழ்ந்து சிவித்துப்போன இறப்பிகேற்பிள்ளை. இவர் புத்திரியை பலராலும் அறியப்பட்ட சமரகோன்முதலியார் பவுத்திரன் சவிரிமுத்து விவாகஞ்செய்தனர். இவர்களின் புத்திரருளொருவரே கயித்தாம்பிள்ளை. இவர் பண்டத்தரிப்புக் கோவிற்பற்று டிவிஷன் ஆபீசராக 46 வருடம் வேலைபார்த்தவர்.

இவர் மகன் இராயப்பு. முன் பண்டத்தரிப்புப்பகுதியின் டிவிஷன் ஆபீசராகவும், தற்போது சிறுவிளான் பெரியவிளான் விதானையாராகவும், நன்மதிப்புடன் வேலைபார்த்து வருபவர். இவர் இறகோசுப்பிள்ளை உடையாருக்குப் பீட்டனாகவும், உலாந்த அரசாட்சியில் மணியமாகவிருந்த சின்னத்தம்பிக்குப் பீட்டனாகவும் உள்ளவர்.

**இராமநாதமுதலியார்:**—இவர் ஆவரங்காலிலுள்ளவர். இவர் மகன் விஞுசித்தம்பி உடையார். இவர்மகன் கந்தப்பிள்ளை. இவர் மகனே (Paterson) சுப்பிரமணியம். இவர் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைச் சாஸ்திர வித்தியாசாலையிலே கற்று அரங்கேறியவர். அங்கிளபாஷையில் மாத்திரமல்ல; தமிழ்ப்பாஷையிலும் மிக்க ஸ்திரம்படைத்தவர். அனேக அலங்காரமான தனிப்பாக்களை இயற்றினவர். இவர் புத்திரர் 1 அம்பலவாணபிள்ளை உபாத்தியாயர். 2 நமச்சிவாயம் (நல்லதம்பி) 3 செல்லையா. இவருள் பிற்கூறப்பட்டார் இருவரும் பரகதியடைந்தனர். அவருளொருவரான நமச்சிவாயம் என்பவர் இலக்கண இலக்கியங்களிலும், சங்கீத சாஸ்திரத்திலும் யாழ்ப்பாணம் இலங்கை இந்தியா ஆதியாமிடங்களிலுள்ள பலராலும் வியந்து பாராட்டப்பட்டவர். ஸ்ரீ- சிவசம்புப்புலவரொழிய யாழ்ப்பாணத்திலே நாமறிய இருந்த இருக்கின்ற புலவருள் எவராயினும் தீவிரமாய்ப் பாவியற்றவும், வாக்குவல்லபமாய்த் துணிந்து சபையிற் பேசவும், சத்துருகுழுவஞ்சக் காளமேகம்போல் தீவிரயுத்தியோடுத்தரங்கொடுக்கவும், இவர்க்கொப்பாரயொருவரிருக்கவில்லையென்று பலராலும் பலவமையங்களிற் பாராட்டிப் பேசப்பட்டவர். இவரால் சுப்பிரமணியசுவாமிமேற் பாடப்பெற்ற நூதன கீர்த்தனங்களை யாழ்ப்பாணத்திலே அறியாத பாடகரில்லை. இவருடைய கல்வி விவேகத்தைப்பற்றி யாழ்ப்பாணத்திலே அறியாதொருவனிருப்பானேல் அவனை நிர்மூடனென்க யாரும் பின்னிடார். தற்காலத்திலுள்ள வித்துவான்கள் பலர் உரைகூறிய "அகப்பொருள் விளக்கம்" முதலிய பல நூல்களில் இவர் சாற்றுகவிகள் சொலிப்பதைக் காணலாம். சில காலங்களின்முன் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலார்க்கும் ஸ்ரீ. ஆறுமுகநாவலர் அவர்களுக்கும் நடந்த விவாதத்தில் நாவலர் அவர்கள் பக்கத்துக்காய் நின்று இவர் எழுதி வெற்றிமாலைசூடிய "வெற்றிவேலாயுதம்" என்னும் சிறிய புத்தகமும் இவர் அறிவைக்காட்டும். இவரால் இயற்றப்பட்ட தனிப்பாக்களோபல. ஒருபோதில் கீர்த்திபெற்ற புலவரொருவர் இவர்மனைக்குவந்து இவரைச் சந்தித்தபோது இவரைநோக்கிப் பரிகாசபான்மையாய் நல்லதும் "என்பு என்றெடுத்து புழுக்கொடியல்மா எனமுடிய ஓர் வெண்பாக்கூறு"மென அரைக்கணப்போதுந் தரியாது உடனே இவர்கூறிய வெண்பாவை இதன்கீழ்த் தருகின்றேம்;

என்பில் லதுவு மெளிற்கொம்பி லேறுவது
மன்புறுபெண் ணணையை வாக்குவதும்—முன்புவலி
துன்னுரு ரன்சாபஞ் சூழ்ந்ததுவு மிந்நான்கும்
மன்னு புழுக்கொடியல் மா.

பின்னொருபோதில் ஓர் கவிவாணர் சந்தித்துச் சின்ன முத்துக்குமாரக் கவிராயரிபற்றிய "முடிவிலாதுறை சுன்னாகத்தான்வெளி முந்தித்தாவடி கொக்குவில்மீதுவங்" என்னுங் கவிவைப்பாடி இதற்குப் பொருள் கூறுமென்க; உடனே பொருள்கூறிவிட்டுத் தமதூர்ப்பெயர் ஈற்றில்வர "மட்டுவிலலர்க்கண்டியான்வனைசாசாலை—விட்டவர்க்குமாசிறுப்பிட்டி விதிப்பர்துன்னாலைத்—தட்டனுவிருவாலைப் பெண்கட்குப்பொன்சொரிந்து—முட்டுமொவாங்காலடைத்தாற் கொடார்மூடர்" எனக்கூறித் தம் கவித்திறத்தைக் காட்டினர். ஸ்ரீ. சிவ. சங்கரபண்டிதர் ஸ்ரீ. அ. சிவசம்புப் புலவர் இருவருமே இவர்க்கு ஆசிரியராம். இவர் மரணத்தையறிந்தபோது புலவர் திலதமான ஸ்ரீ. பி. சுபவாக்கியம்பிள்ளை இவரைக்குறித்துக் கூறிய சரமகவிகளுள் ஓர் வெண்பா இதன்கீழது.

"மெச்சு கவிக்காள மேகமோ வீணருள
மச்சமுறச் செய்யு மரியேறோ—மெச்சொன்னு
ராயப் பெருவலிகா லாவராங்கால் வாழ்கமச்சி
வாயப் புலவணிந்த மண்.

சின்னத்தம்பி:—இவர் இருபாலை மண்ணுடுகொண்டமுதலிவழித்தோன்றலான நெல்லைநாதரின் சகோதரன். இவர்மகன் முத்துக்குமாரு. மகன் சண்முகம். இவர்மகனே தற்போது இருபாலையில் பிரபல்யமாய் விளங்கும் 1 வேலாயுதபிள்ளை. 2 (காலஞ்சென்ற) முத்துக்குமாரசுவாமி.

இராமலிங்கம்:—இவர் இருபாலை மேற்படி மண்ணுடுகொண்ட முதலிவழித்தோன்றலான நெல்லைநாதர் சேனுதிராசாவின் மகன். இராமலிங்கம் மகள் பிரபல பிரமுதித ஏழூர்நாயக முதலியார் மனைவி. இவர் மகள் தெய்வானைப்பிள்ளை. இவர்க்கும் தெல்லிப்பழை கதிரேசர் விசுவலிங்கத்துக்கும் புத்திராயுள்ளவரே தற்போது இருபாலையில் சாதுரியகுண சம்பன்னராய் விளங்கும் (சேவையர்) சண்முகலிங்கம்.

சிங்கமாப்பாணமுதலியார்;—இவர் உடுவிற் பதியிலுள்ளவர். இவர்வழித்தோன்றலானுர் கொத்தாரிசு முத்துக்குமாரு. இவர்மகன் அருணசலம். சிறுப்பிட்டி கனகரத்தினமுதலியார் மகன் வேலாயுதர் அப்பாக்குட்டிமகள் தண்டிகைப்பிள்ளையை மேற்படி அருணசலம் விவாகஞ்செய்தவர். இவர் ஏகபுத்திரரே வலிகாமம்கிழக்கு மணியகாரனுயிருந்து சிவபதமடைந்த கனகசபை (பெரியதம்பி) இவர் சீர்த்தியை இவர்மேற் கூறப்பட்ட சரமகவியாலறிக. அக்கவிகளில் ஓர் வெண்பாவையும் ஓர் கவித்துறையையும் இதன்கீழ்த் தருகின்றேம்.

“நாகரிக மானவுடை நாகரிக மானநடை
நாகரிக மானபரி நாட்டமருள்—ஓகையுடன்
தாபித்த வன்பெரிய தம்பிவள்ள லன்றியார்
தாபித்தார் புத்தூர் தனில்”

“கோப்புடன்வாறபிரபுக்களொடுங்குரவர்கவி
நாப்புலவோரையும்நல்குரவார்க்கழைநண்ணிவந்து
கூப்பிடுவாரையுமின்மொழிகூறிக்கைகூப்பியன்பாய்ச்
சாப்பிடுமென்றவர்வேறுமுண்டோவுனைத்தவ்ளிடினே.

**தோம்பிலிப்புச் சந்திரசேகரமுதலியார்:**—இவர் மாதகலிலே பூர்வ பிரபுக்களுளொருவராய் உயர்குல வேளாண் மகிபராய் விளங்கியவர். இவரது பீட்டனே தற்காலம் யாழ்ப்பாணக் கச்சேரியிற்பலவுத்தியோகங்களிலமர்ந்து பின் நெடுந்தீவில் 12 வருடகாலம் மணியகாரனும், கிராமக்கோட்டு நீதாசனபதியாயும், பின் தற்போது வலிகாமம்மேற்கு மணியகாரனுமிருக்கும், J. N. சந்திரசேகர முதலியார். எழுபதுவருடகாலமாய்க் கச்சேரிப் பிரதம முதலித்துவத்துக் குறைவிடமாயிருந்து, கத்தோலிக்கவேத பத்திமானாயிருந்து இதுகாறும் யாழ்ப்பாணத்தாருள் எவரும் பெற்றிராத (திருச்சபை) நயிற்பட்டங்கட்டப்பெற்று, மகிமைதங்கிய பொஞ்ஜீன் மேற்றிராணியாரால் (இலங்கையில்) மேற்பிரபு என்றும், திருச்சபைத் தம்பமென்றும், பரிந்து பாராட்டப்பட்டு, சேர் உவில்லியம் கிறகோரி என்னும் தேசாதிபதிக்குத் தம் கிருகத்திற் சம்பிரம விருந்தளிக்குஞ் சலாக்கியத்தைப்பெற்று, விளங்கிய இராஜமானிப [illegible] ஸ்ரீ ராஜவாசல் முதலியார் சந்திரசேகரர் சவிரிமுத்து முதலியாரது சகோதரரான சின்னத்தம்பி முதலியார் எனும் பிரபுவின் பௌத்திரர்.

நாற்பதுவருட காலமாய் மயிலைறோட்டு இஞ்சினீராயிருந்து காலஞ்சென்ற யுவக்கிம் சந்திரசேகரரும், யாழ்ப்பாணத்திலே சுதேசிகளுள் முதன் முறையாய்க் குருப்பட்டாபிஷேகம் பெற்றவரும், 35 வருடகாலமாய் மன்னார், மாதோட்டம், முல்லைத்தீவு, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய இடங்களில் தேவவூழியஞ் செய்தவருமான எக்ஸ். என். சந்திரசேகரகுருவும் இவரது பேரனின் சகோதரனாகிய நீக்கிலாஸ்பிள்ளை முதலியாரின் பிள்ளைகள். தற்காலம் கொழும்பிற் பிரபலம்பெற்று விளங்கும் அப்புக்காத்து எச். எ. பி. சந்திரசேகரமும், இவர் சகோதரர், ஜே. என். சந்திரசேகரம் அப்புக்காத்தும், இஞ்சினீர் சந்திரசேகரர் புத்திரர். யாழ்ப்பாண றோட்டுக்கொம்மிற்றித் துவிபாஷிதர், இம்மானுவேல் இராஜா சந்திரசேகரர் இவர் சகோதரன். இவரின் தாயார் போர்த்துக்கீசர் காலந்தொட்டுக் கத்தோ

லிக்க வேதவிசுவாசிகளான, இளாலி சந்தியோகுமையோர்கோ விற் காரியகர்த்தரான, தொம்பிலிப்புச் சங்கரப்பிள்ளையின்மகன் செருபின் புத்திரி.

பூதஉடையார்:—இவர் மயிலிட்டியிலுள்ள பள்ளந்தறை என்னுமிடத்தில் இருந்தவர். மகன் சுவாமிநாதர். மகன் அம்பலவாணர். மகன் சின்னத்தம்பி. சின்னத்தம்பியின் மனைவியார் இருபாலை மண்ணாடுகொண்ட முதலிவழித்தோன்றலான சுவாமிநாதர் மகன் சுப்பிரமணியர் மகன் இலங்கையர்மகள் தையல்நாயகம். இவர் புத்திரரே கந்தரோடைச் சைவ அங்கில வித்தியாசாலையின் மானேசராய் விளங்கும் கந்தையாபிள்ளை. இவர் விவாகஞ்செய்தது மறவன்புலம் வயித்தியநாதர்மகன் மூத்ததம்பிமகள் சேதுப்பிள்ளையை.

மேற்கூறிய இலங்கையரின் புத்திரரிலொருவரே நாவலப்பிட்டிப்பகுதியில் தற்போது அரசாட்சி டக்ரராய்க் கீர்த்தியுற்று விளங்கும் சுப்பிரமணியம், 2 விசுவநாதர்.

அரசகுலசூரியமுதலியார்;—இவர் சண்டிருப்பாயிலுள்ள உயர்தரப் பிரபுக்களிலொருவர். (அச்சுவேலி குமாரபடப்பளி) மகன் சிற்றம்பல அரசகுலசூரியர். இவர் மகார் 1 ஆறுமுகம், 2 குமாரசூரியர், 3 நன்னித்தம்பி, சண்டிருப்பாய் வில்லவராயமுதலியார் வழித்தோன்றல் பொன்னம்பலமுதலியார் மகள் மீனாச்சிப்பிள்ளையே நன்னித்தம்பியின் மனைவி. இவர்புத்திரர் 1 கந்தையா, 2 பொன்னம்மா, 3 தையல்நாயகியம்மா. பரராசசிங்கமுதலியார்மரபைத் தன்மரபாக்கொண்ட டக்றர் பரராசசிங்க முதலியாரே பொன்னம்மாவை விவாகஞ்செய்தனர். இவர்க்குப் புத்திரர் 1 கொழும்பு (Eton) கொலீச்சுப் பிறின்சிப்பல் செல்வத்துரை, 2 பொன்னுத்துரை, 3. செகராசசிங்கம். பொன்னுத்துரை விவாகஞ்செய்தது, சுவாமிநாதர் கந்தர் காசிப்பிள்ளைமகன் குலசேகரம்பிள்ளையின் மகளை. மேற்படி கந்தையா புத்திரி சிவபாக்கியத்தை விவாகஞ்செய்தவர் சுதுமலையில் ஆராய்ச்சிச் சட்டம்பியாரென வழங்கும் கனகசபைப்பண்டிதரின் மகன் பிறக்றர் முருகேசபிள்ளை.

மேற்கூறிய அரசகுலசூரிய முதலியாரே யாழ்ப்பாணம் கோட்டையின் மேற்பாகத்தில் விளங்கும் வில்லூன்றிப் பிள்ளையார்கோவிலையாக்குவித்து மடாலயங் கேணி கூபங் தாபித்துப் பெருமாதனங்களைப் பரிபாலனத்திற்காய்க்கொடுத்தவர்.

வேலாயுதர்;—இவர் புன்னாலைக்கட்டுவனிலுள்ளவர். இவர் மகன் கதிரேசர். இவரே முதன்முதல் அமரிக்கன்மிஷனிற் சேர்ந்து ஞானஸ்நாநம்பெற்றுருளொருவர். இவர் ஞானஸ்நா

ன நாமம் நதானியல் நயில்சு. இவர்புத்திரர் 1 யோன்நயில்சு. சேட்சுமிஷனில் மினிஸ்றராய்இருந்தவர். 2 டானியல் (Poor) நயில்சு. 3 சாமுவேல் நயில்சு உவெஸ்லியன்மிஷனில் மினிஸ்றராயிருந்தவர். 2 டானியல் (Poor) நயில்சு என்பவரே வட்டுக்கோட்டைச் செமினரியிற் கற்றரங்கேறியபின், பிறக்கென்றிச் என்பவருடன்கூடி வட்டுக்கோட்டைக் ஹைஸ்கூலைத்தொடக்கியவர். இவர் புத்திரர் 1 உவில்லியம் செல்லப்பா நயில்சு கொழும்பில் கொம்மிஷன் ஏச்சண்டு. 2—W. D. நயில்சு பிரபல அப்புக்காத்து. 3—R. T. நயில்சு தொப்பிதோட்டவங்கிச் சிருப்பு. 4—C. A. நயில்சு நியாயதுரந்தரமாணவர். 5—A. N. நயில்சு கொழும்பில் கொம்மிஷன் ஏசண்டு.

யோசுவா (Joshua):—இவர் சண்டிருப்பாயிலுள்ளவர். இவர்மகன் 1 டானியல் யேசுவா உடுவில். 2 சாமுவேல் யோசுவா திரிகோணமலை மிலிற்றறி ஆஸ்பத்திரியில் டக்றராயிருந்து காலஞ்சென்றவர். 3 யோசேப்பு (வேலுப்பிள்ளை) யோசுவா தமிழ் உபாத்தியாயரா யிருந்தவர். 4 சாள்சு யோசுவா (Koluptnu) தோட்டத்தில் சுப்பிறின்றன்.

1 டானியல் யேசுவா Glentagge தோட்டத்தில் சுப்பிறின்றன். இவர்பிள்ளைகள் 1 மேற்கூறிய காலஞ்சென்ற டக்றர் யோசுவா. 2 A. J. ஐயாத்துரை யோசுவா. இவரே தற்போது தொப்பிதோட்டப்பகுதியில் பலராலும் நம்பிக்கையோடு பாராட்டப்பட்டும் நியாயதுரந்தர சரபமெனத்துதிக்கப்பட்டும் சிலகாலங்களிற் பொலிஸ்நீதிபதியாயும், சமாதான நீதாசனபதியாயும் விளங்கிவருகின்றனர்.

கதிர்காமசேகரமுதலியார்—இவர் வலிகாமம்வடக்கைச்சேர்ந்த பன்னாலையிலுள்ளவர். இவர் பௌத்திரர் முத்தர். இவர்மகனே வேதாரணியர். (உடுவில்) இவர்புத்திரரே கொழும்பில் கீர்த்திபெற்று விளங்கிய 1 டக்றர் சரவணமுத்து. இலங்கைத் தேயிலைத்தோட்டப்பகுதியில் கண்டாக்காயிருந்த 2 முருகேசு. 3 சங்கரப்பிள்ளை.

டக்றர் சரவணமுத்துவின் புத்திரரே தற்போது கொழும்பில் டக்றராயிருக்கும் 1 இராசா சரவணமுத்து. கொழும்பில் கொம்மிஷன் ஏசன்ருயிருக்கும் 2 துரை சரவணமுத்து. எக்சஸ்பகுதிச் சுப்பிறின்றனுயிருக்கும் 3 இராசையா சரவணமுத்து. இங்கிலந்தில் சிவிலுத்தியோக மாணவனுய்ச் சித்தியடைந்த 4 செல்வத்துரை சரவணமுத்து. 5 மாணிக்கம் சரவணமுத்து. 6 தம்பிராசா சரவணமுத்து.

முருகேசுவின் புத்திரரே பேமாப்பகுதியில்வேலையாயிருக்கும் 1 தர்மலிங்கம். சிங்கப்பூர்ப்பகுதியில் வேலையாயிருந்து காலஞ்சென்ற 2 இரத்தினம். றங்கூன்பகுதியில் வேலையாயிருக்கும் 3 துரை. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியராயிருக்கும் 4 சபாரத்தினசிங்கி.

மேற்படி வேதாரணியர் மகள் இராமாசிப்பிள்ளையின்புத்திரரே மேமியோவில் P.W.D. கிளாக்காயிருக்கும் 1 செல்லையா. பேமாப்பகுதியில் வோறஸ் (Forest Department)டிப்பாட்மென்றில் சுப்பிறின்றனுயிருக்கும் 2 கதிரித்தம்பி. றங்கூன் ஒடிற்றுபீசுக் கிளாக்காயிருக்கும் 3 முத்துத்தம்பி. றங்கூனில் வோறஸ்டிப்பாட்மென்றப்பகுதியில்கிளாக்காயிருக்கும் 4 சின்னத்தம்பி. 5 இரகுப்பிள்ளை. இவர்களின் மைத்துனரே றங்கூன்பகுதியில் Tonnaserrim circle சுப்பிறின்றனுயிருந்து தற்போது உபகாரச்சம்பளம் பெறுபவரும், தமிழ் இலக்கண இலக்கிய வன்மையும் பதிநூலாராய்ச்சித் தேர்ச்சியுமுள்ள C. நல்லதம்பிப்பிள்ளை.

**சேதுகாவலச் சேனுதிராச மாப்பாணமுதலியார்:—** ஒல்லாந்த அரசர்காலத்தில் உடுப்பிட்டியைச் சேர்ந்த தனக்காரக்குறிச்சியிலே வசித்த பிரபலியம்பெற்ற பிரபுக்களுள் இவர் ஒருவர். இப்பிரபு, இந்தியாவைச்சேர்ந்த காஞ்சிபுரத்தைச் சென்னஸ்தானமாய்க்கொண்டவரும், இந்தியாவிலிருந்து பிரயாணமாகி யாழ்ப்பாணம்வந்து பிற்காலத்தில் தனக்காரக்குறிச்சியென்னும் நாமத்தால் அழைக்கப்பட்டபகுதியில் வசித்தவருமாகிய சேதுகாவலச்சேனுதிராச அரசநிலையிட்ட சந்திரசேகர மாப்பாணமுதலியார் வழித்தோன்றலாம். இந்தியாவிலிருந்து இவ்விடம் வந்து குடியேறிய மேற்படி முதலியாரைப்பற்றி அவர் சந்ததியார் கூறும் குறிப்பை யீண்டுத்தருகின்றோம்.

இந்தியாவைச்சேர்ந்த காஞ்சிபுரமென்னும் நகரிலுள்ள பண்டாரத்தோட்டமென்னுமிடத்தில் சென்மித்த சுத்த வேளாண்பிரபுவும், பதினெண்குடிமை வரிசைப்பட்டயம் பெற்றவருமாகிய சேதுகாவலச்சேனுதிராச அரசநிலையிட்டசந்திரசேகர மாப்பாணமுதலியார் என்பார், கசம் என்னுங்கொடியநோயினல் வருந்தியிருந்தனர். குளக்கோட்டு மகாராசா வமிசத்திலுதித்த ஒருவர் அம்முதலியாரைக்கண்டு, யாழ்ப்பாணத்திலுள்ள கீரிமலைக்குச்சென்று அவ்விடத்திற்பாயுஞ் சுத்தோதகத்தில் ஸ்நானஞ்செய்தால் அவரைப்பிடித்த கொடியநோய் சுகமாகுமெனக்கூறினர். அவ்வார்த்தைகேட்டுத் தன்னைவருத்திய கொடிய கசநோயிலிருந்து சுகமடையும்பொருட்டுத் தனது பிராணநாயகி பார்ப்பதியோடும், தனது அரிய புத்திரர் தன்பாலசிங்கம், குணபாலசிங்கம் என்னு மிருவரோடும், தனதுபரோ

திதராகிய காசிப்பிராமணர் கோபாலக்குருக்களோடும் அவர் சமுசாரத்துடனும், தனது பதினெண்வரிசை ஏவற்காரருடனும், 1365-ம் வரு வைகாசிமீ 20-ந் உ தனது சென்மநாட்டை விட்டுப் பிரயாணமாகி நாகபட்டணத்தில் நாவாயேறி யாழ்ப்பாணம் நோக்கிவருகையில் வீரமாகாளியம்மன்துறையில் இறங்கி, இப்பொழுது சந்திரசேகர வீரபத்திரகோவிலிருக்கும் ஸ்தானத்துக்கு உத்தரதிசையில் வந்து தங்கினர். அவ்விடத்தில் மாம்பழங்கள் நிறைந்த ஓர் மாமரமும் ஓர் குளமுமிருந்தன. முதலியார் அவ்விடஞ் சிறிதுநாட்தங்கி, அக்குளத்தில் ஸ்நானபானஞ்செய்து வரும்பொழுது அவருக்கிருந்த கசரோகம் சொஸ்தமாகவும், தேகம் புஷ்டியடையவுங்கண்டு அவ்விடத்தையே தனது வாசஸ்தானமாய்க்கொண்டு, தனது சென்மபதியின் பெயராகிய பண்டாரத் தோட்டமென்னும்பெயரைத் தான் வந்து தங்கியிருந்த இடத்துக்கு இட்டும், தனது சென்மபதியிலுள்ள சந்திரசேகர வீரபத்திரகோவிலையொத்த ஓர்கோவிலை அப்பெயருடன் அங்கே ஸ்தாபித்தும், அக்கோவிலுக்குத் தன் புரோகிதராகிய கோபாலக்குருக்களைப் பூசகராக நியமித்தும், மேலேகுறித்த குளத்துக்குச் சந்திரசேகரகுளமென்னும் பெயர் தரித்தும் அவ்விடத்திற் சிலகாலம் வசித்தனர். அக்காலந்தொடங்கி மேற்குறித்த இடங்களுக்கு அம்முதலியாரிட்ட நாமங்களே பின்னும் வழங்கப்பட்டுவருகின்றன.

அதன்பின்னர் அம்முதலியார் தன்சென்மநாட்டில் தான் பெற்ற வரிசைச் செப்புப்பட்டயத்தை அக்கால யாழ்ப்பாண அரசருக்குக் காண்பித்து அதைப் புதுப்பித்துத் தனது மகன் தனபாலசிங்கமுதலியாரை அவ்விடம் இருத்தி, தனது பதினெண்வரிசை ஏவற்காரரை நாற்றிசையுங் குடியேற்றி, தன்பாரியோடும் இரண்டாம்மகன் குணபாலசிங்கத்தோடும் தன் சென்மநாட்டுக்குத் திரும்பினர். இக்காலத்தில் அவ்விடத்திலுள்ள காணிகளுக்கு வழங்கும் பெயர்களும், தோம்புகளும் கோவிலும் குளமும் மிருகசாதிகளின் குறிகளும் அம்முதலியாரின் சென்மநாட்டிலுள்ளவைகளுக்கு ஒத்திருப்பதும், இவ்வமிசத்தில் முற்காலத்தில் உதித்த சில மகான்கள் பாடிய பாக்களும் மேலேகூறியவைகளுக்கு விசேட அத்தாட்சியாம்.

தனபாலசிங்கனாற் குடியேற்றப்பட்டமையால் அக்கிராமத்துக்குத் தனக்காரக்குறிச்சியென்றும், அவர் சந்ததியில் விசேஷ பிரபலியம்பெற்று விளங்கிய தனக்குமான் நாமத்தினால் தனக்காரக்குறிச்யென்றும், அக்குறிச்சி நீர்வளம் நிலவளஞ்செறிந்த பூமியையும், செந்நெற்கழனிகள், தோட்டக்காணிகள், திரளான ஆடு மாடுகள், அவைகட்குவேண்டிய நல்லபுற்றரை, பனை

ந்தோப்புகள், தென்னஞ்சோலைகளாதியவற்றையுந் தன்னகத்தேயடக்கி யதிக ஐசுவரியத்தைக்கொடுத்தமையால் அக்குறிச்சியிலுள்ளார் அதிக பொருளுடையராய் விளங்கினரென்றும், அக்காரணத்தால் அவர்களுக்குத் தனக்காரரெனவும், அவர்களால் அக்குறிச்சிக்குத் தனக்காரக் குறிச்சியென்றும் பெயராவழங்கலாயின என்பர். "சாதிநிர்ணயபுராணமும் சாதிவிளக்கமும்" என்னும் நூல் மேலேகூறிய கடைசி அர்த்தத்தை அநுவதித்து "தனக்காரர், தனம் என்பது பொன்னின் பரியாயநாமத்தொன்றாதலின் பொருளுடையாரென்னும் பொருள்பட வந்த பெயரே தஞ்சாதிப்பெயரென்பர்" எனக்கூறுகின்றது.

மேற்குறித்த சேதுகாவலச் சேனாதிராச மாப்பாணமுதலியார் குமாரர் மயிலர் சிற்சிங்கமாப்பாணமுதலியார் (இவர் முன்னோருடைய பதினெண்வரிசைச் செப்புப்பட்டயத்தை அரசினர்மூலம் புதுப்பித்தனராம்.) இவர் சகோதரரின் மகன் எதிர்வல்லசிங்க மாப்பாணமுதலியார். அவர் குமாரர் சந்திரசேகர மாப்பாணமுதலியார். அவர் குமாரர் வீரகத்திமணியகாரன். அவர்சகோதரர் சிற்சிங்கஉடையார், அவர்மருமகன் குமாருமணியகாரன். அவர் வல்லையிற் கட்டுவித்த மடமும் குளமும் இன்றும் அவர்பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றன. மேலேகுறித்த வீரகத்திமணியகாரன் குமாரர் கதிர்காம உடையார். அவர் மேலேகுறித்த சந்திரசேகர வீரபத்திரகோவிலைப் புதுப்பித்துச் சில ஆதனங்களை இக்கோவிலுக்குத் தருமசாதனமாய்க் கொடுத்தனர். அவர் குமாரர் 1 சிற்சிங்கர், 2 குமாரு, வட்டுக்கோட்டைச் செமினரியில் கல்விகற்றுக் கணிதசாஸ்திரத்தில் மிகத் திறமையாய் விளங்கிய 3 கெப்பிலர் வீரகத்திப்பிள்ளையென்பவர்களாம். சிற்சிங்கர் அக்குறிச்சியில் ஓர் சைவவித்தியாசாலையை ஸ்தாபித்தனர். அவர் குமாரர் இப்பொழுது அச்சைவ வித்தியாசாலை மானேச்சராயிருக்கும் 1 குட்டிப்பிள்ளை, அவ்வித்தியாசாலைத் தலைமை ஆசிரியராயிருக்கும் 2 வீரகத்திப்பிள்ளையென்பவர்களாம். குமாருவுடைய புத்திரர் அப்பகுதியில் மிகச்செல்வாக்காய் விளங்கும் செல்லப்பா என்பவராம். தனக்கார்க்குறிச்சி விதானையாராயும் உடையாராயும் பல வருடங்களாய்க் கடமைபார்த்துத் தேசாதிபதியவர்களால் சேர்த்திமுத்திரைபெற்று வயோதிபத்தால் உத்தியோகத்தைவிட்டு இளைப்பாறியிருக்கும் சந்திரவர் சிற்சிங்கர் மேலேகுறித்த பிரபுவின் வழித்தோன்றலாம். இப்பகுதியில் பிரபல புலவராயிருந்து காலஞ்சென்றுபோன சின்னத்தம்பிப்புலவரும் [இவரைக்குறித்துப் பாவலர்சரித்திரதீபகம் பார்] அமெரிக்கமிஷனரிமாரின் முனிஷியும் பாலியர்நேசன் பத்திராதிபருமாய் விளங்கி மானிப்பாயில் வசித்துக் காலஞ்சென்றுபோன உவில்லியம்சின்

னத்தம்பியும், கொழும்பில் நகரசங்கத்திலே இன்ஸ்பெக்டரா யிருந்து காலஞ்சென்றுபோன வீரவாகுப்பிள்ளையும் மேலே குறித்த பிரபுவின் சந்ததியாராம்.

**கனகதண்டிகைக் கனகராயமுதலியார்;**—இவர் யாழ்ப்பாணங் குடியேறிய காலத்தில் குன்றாத நீர்வளமும் நிலவளமுஞ் சிறந்த தெல்லிப்பழையிலே குடியேறிய கனகராயன் (வேளாண்செட்டி) வமிசத்தவர். இவர் மகன் பூதத்தம்பி. இவர் தெல்லிப்பழையில் வசித்து நொத்தாரிசு உத்தியோகம்பார்த்து வந்தனர். இவரது சிரேட்டபுத்திரர் கச்சேரி 2-ம் முதலியாராய் கீர்த்தி பெற்று விளங்கிய கனகதண்டிகைக் கனகரத்தினமுதலியார். இவர் புத்திரர் கொழும்பு வைத்தியக்கல்லூரியில் கல்விகற்று சிலவருடங்களாய் வைத்தியராய் அரசாட்சியாரின்கீழ்க் கடமை பார்த்துப் பின் அவ்வுத்தியோகத்தைவிட்டு இப்பொழுது தெல்லிப்பழையில் வசிக்கும் 1 நாகரத்தினம். 2 நவரத்தினம், மானிப்பாய் அமரிக்கன்மிஷன் வைத்தியசாலையில் வைத்தியராயிருந்து செல்வாக்கும் நற்கீர்த்தியும் பெற்று விளங்கிப் பின் காலஞ்சென்றுபோன 3 டக்டர் கேட்டில் சுப்பையா.

மேலேகூறிய பூதத்தம்பி நொத்தாரிசுவின் இரண்டாம்புத்திரர் குஞ்ஞாலம் என்பவராம். இவர் புத்திரர். கொழும்பில் திறைசேரிச் சிறுப்புமுதலியாராயிருந்து தங்கடமைகளை மிக நேர்மையாய் நிறைவேற்றி உபகாரச்சம்பளத்துடன் இப்பொழுது இளைப்பாறி மாவிட்டபுரத்தில் வசிக்கும் 1 தம்பையா. இலங்கை அபராதப்பகுதியில் தமிழருள் உயர்ந்த உத்தியோகம்பெற்று டிஸ்திறிக் சுப்பிறின்டென்றராயிருக்கும் 2 கனகதண்டிகைக்கனகராயர்.

மேலேகூறிய பூதத்தம்பிநொத்தாரிசுவின் மூன்றும்புத்திரர் சொக்கலிங்கம். இவர் குமாரர் இலங்கை அபராதப்பகுதியில் ஸ்தான அதிபராய் உத்தியோகம்புரிந்து காலஞ்சென்றுபோன சக்திவேற்பிள்ளை.

மேலேகூறிய பூதத்தம்பி நொத்தாரிசுவின் நான்காம்புத்திரர் தண்டிகை. இவர் இப்பொழுது நற்சுகத்துடன் தெல்லிப்பழையில் வசிக்கின்றனர்.

மேலேகூறிய பூதத்தம்பி நொத்தாரிசுவின் புத்திரியின் பௌத்திரனே இப்பொழுது யாழ்ப்பாணம், மல்லாகம் கோடுகளில் பிரசித்திபெற்ற பிரக்கிராசியாராய்த் துலங்கும் K. தம்பையா.

**தூல்லாத்துங்கமுதலியார்:**—இவர் மாதகலிலே உயர்குல வேளாண்மகிபாய்க் கத்தோலிக்கசமயத்தில் சிறந்த துர் பத்திமா

னாய் விளங்கிய அரசரத்தின் முதலியாரின் தந்தைவழியினர். அரசரத்தினமுதலியார் புத்திரன் வாரித்தம்பி, இவர்புத்திரன் இன்னாசித்தம்பி, இவர்புத்திரன் அந்தக்குட்டியார். இவர்புத்திரரே சில்லாலையில் பிரபலகீர்த்திபெற்று விளங்கிய சுதேசவைத்தியர் (காலஞ்சென்ற) இன்னாசித்தம்பி. இவர் மாதகல் மயில்வாகனப்புலவரின் சிரேட்டமாணவரிலொருவர். இலக்கண இலக்கிய ஆராய்ச்சியில் வல்லவர். ஓர்பத்திமான். தம்திறங்காட்டி தம ஆசிரியரால் ஓர் இரத்தினமோதிரத்தைப் பரிசெனப்பெற்றவர். இவர் ஏகபுத்திரரே தற்போது வாழையடிவாழையாய்ச் சில்லாலையில் வைத்தியராய் விளங்கும் சூசைப்பிள்ளை. இவர் புத்திரர் 1 சவரிமுத்து, ஆங்கில சுதேசவைத்தியத்திற் சித்திபெற்ற 2 சுவாம்பிள்ளை.

பூதத்தம்பி முதலியார்;—உலாந்த அரசின் தொடக்கத்திலே கங்காகுலத்துதித்த மூத்ததம்பிமுதலியார் உலாந்தரிடத்தே முதலியார் உத்தியோகம் பெற்றவர். அவரின் புதல்வர் சோதிநாதர். அவரின் புதல்வர் இலங்கைகாவலர். அவரின் புதல்வர் பரமானந்தர். அவரின் புதல்வர்கள் கந்தர், இலங்கையர் என இருவர்.

இந்தியாவிலுள்ள கார்காத்த வேளாளர் பாண்டிமழவனையும் தம்பியையும், மைத்துனனாகிய சண்பகமழவனையும், அவன்தம்பியையும், சிங்கையாரியச்சக்கிரவர்த்தி அவர்களுடன் வந்த ஐந்து குடிமக்களுடனே திருநெல்வேலியிலே குடியேற்றிவைத்தவர். அக்குடியிலே கந்தர் என்பவர் வேதவனம் என்பவருடைய புத்திரி சிவகாமியம்மையை விவாகஞ்செய்தவர். அவரின் புதல்வர்கள் தியாகர், சின்னத்தம்பி, பூதத்தம்பி, பரமானந்தர், தம்பு, ஆறுமுகம் என அறுவர்கள்.

அவர்களுள்ளே தியாகர் என்பவர் கவர்மெண்டில் நொத்தாரிசுவேலைபார்த்து வந்தவர். வைத்தியத்திலும் சமர்த்தர். சின்னத்தம்பி என்பவர் கவர்மெண்டில் ‘உடையார்’ என்னும் உத்தியோகம் பார்த்தவர். பூதத்தம்பி சிறுவயசிலே இறந்துவிட்டார். பரமானந்தர் கவர்மெண்டில் நொத்தாரிசென்னும் உத்தியோகம் பார்த்தவர். தமிழிலே இலக்கண இலக்கியங்கள் கற்றுப் பாடுதலிலே மிக்க திறமைபடைத்தவர். அதனாலே பரமானந்தப்புலவர் என்னும் ஒரு புதுப்பெயரையும் பெற்றார். தம்பு என்பவர் கவர்மெண்டில் தன்பிதா பார்த்துவந்த அரசாட்சியுத்தியோகத்தைப்பெற்று இளைப்பாறினவர். ஆறுமுகம் என்பவர் தன்னுடைய சிறுவயதிலே இலக்கண இலக்கியங்களும் சித்தாந்த சாத்திரங்களும், சேனாதிராய முதலியாரிடத்திலும், சரவணமுத்துப் புலவரிடத்திலும் கற்றவர். சமஸ்கிருதம், இங்கிலீசு எ

ன்னும் பாஷைகளையும் கற்றவர். இருக்குமுதலிய நூல்களையுங் கற்றவர். பரமதகண்டனமும் சுயமதஸ்தாபனமும் செய்தவர். வண்ணார்பண்ணையிலும், சிதம்பரத்திலும் சைவப்பிரகாச வித்தியாசாலைகளைத் தாபித்து, அவைகளுக்குத் தக்க தாபர சங்கமப்பொருள்களை ஈட்டிவைத்து, அவைகள் சிறப்பாக நடக்கும் வண்ணம் செய்திருக்கின்றார். பல அரிய தமிழ்நூல்களைத் திருத்தி அச்சிட்டவர். சில அரிய நூல்களுக்குப் புத்துரையும் இயற்றி அச்சிட்டவர். தன் மருகராகிய பொன்னம்பலபிள்ளை என்பவருக்கு இலக்கண இலக்கியங்களைக் கற்பித்து வித்துவசிரோன்மணி என்னும் ஏதுப்பெயரையும் தாபித்தவர். திருவாவடுதுறையிலே பண்டாரச்சந்நிதிகளாலேயே "ஆறுமுகநாவலர்" என்னும் சிறப்புப்பெயரையும் பெற்றவர். சென்ற சென்ற இடங்களிலெல்லாம் ஆறுமுகநாவலர் என்னும் சிறப்புப்பெயரை நாட்டினவர். புலவர்களுக்கும் அரசர்களுக்கும் ஒரு சிங்கேறுபோன்றவர். யாழ்ப்பாணத்துத் தமிழர்களெல்லாம் சைவசமய உண்மையையும், சைவசமயாபிமானத்தையும், சைவசமய நூல்களையும் அறிந்தவர்களும், அறிகிறவர்களும், அறிபவர்களாயும் வரும்படி பிரசங்கமழை பொழிந்து சிறக்கச்செய்தவர். இவர்தான் "மகன்றந்தைக்காற்றுமுதவி—யிவன்றந்தையென்னோற்றான்கொல்" என்னும் ஆப்தவாக்கியத்தாற் தாபித்துப் பெரும் புகழ்படைத்துச் சிவபதம் அடைந்தவர்.

இலங்கையர் என்பவர் தன்னுடைய தமையன் விவாகஞ்செய்த குடும்பத்திலே விவாகம் செய்தவர். இவருக்கு மூத்ததம்பி சின்னப்பு, சின்னத்தம்பி, சரவணமுத்து என்னும் நான்கு புதல்வர்களும், மூன்று பெண்களும் இருந்தார்கள். திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவரும் இந்த வம்மிசத்திலே பிறந்தவர். சிதம்பரத்திலே ஞானப்பிரகாசம் என்னும் திருக்குளம் செய்வித்தவரும், சமஸ்கிருதத்திலே சில சிவாகமங்களுக்கு வியாக்கியானமும், சில சைவசித்தாந்த சாத்திரங்களும், தமிழிலே சிவஞானசித்தியாருக்கு ஒருரையும் இயற்றினவரும் இம்மகானேயாகும். பண்டைக்காலமுதல் இந்த கார்காத்த வேளாளமரபும், கங்காகுலமரபும் இதுவரையும் உத்தியோகம், புலமை, செல்வம் முதலியவற்றிலே சிறந்து விளங்கி வருகின்றது.

இராமலிங்க முனிவர்;— இவர் இந்தியாவில் திருவானைக்கா ஜம்புகேஸ்வரர் அர்ச்சகருளொருவராயிருந்து, பின்னர் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தை அரசுபுரிந்த கூழங்கைச்சக்கரவர்த்தியால் ஜோதிஷநிமித்தமாகக் குடும்பசமேதராய் யாழ்ப்பாணத்துக்கு அழைக்கப்பெற்று நல்லூரிற் சிலகாலம் வசித்து ஜோதிஷராகவேயிருந்த ஆதிசைவப்பிராமண குலதிலகராகிய சந்திர

சேகர சாஸ்திரிகளின் பிரதம புத்திரர். இவர் சுத்தசாலிவாகனசகாப்தம் (1571)க்குச் சரியான விரோதிகிருது ௵ ஜனனமாயினர். இவர் வாலிபபருவத்திலேயே சமஸ்கிருத திராவிட பண்டிதராய், ஜோதிஷசாஸ்திரத்திற் பிரசித்திபெற்று சிவபூஜாதுரந்தரராகியிருக்குங்காலத்தில், சகாப்தம் (1587-)க்குச்சரியான பிலவங்க ௵ வைகாசி மீ ஆரியபட சித்தாந்தத்தை ஆதாரமாகக்கொண்டு, வரருசிமுனிவரருளிச்செய்த வாக்கியவிதிப்படி [இலங்கையில் முதன்முதல் பஞ்சாங்கங்கணித்து வெளிப்படுத்தினர். அப்போது இவருக்கு வயது 18 மேற்படி பஞ்சாங்கம் அவ்வாறே பாரம்பரியமாய் உரிமையின்வழியே தற்காலமும் நடைபெறுகின்றது. மேலும், இவர் சகாப்தம் 1609-க்குச்சரியான பிரபவ ௵த்தில் [பழமொழிப்பிரபந்தம்] என்னும் நூலையும் 1634-ம் ஆண்டுக்குச்சரியான நந்தன ௵ தைமீ இல்லத்தார்க்கின்றியமையாச் சாதனமாகும் [சந்தானதீபிகை] என்னும் நூலையும் தமிழில் மொழிபெயர்த்தியற்றினர். இவருக்கு அக்காலத்து அரசராலே குடிநிலம், விளைநிலங்கள் இராஜமானியமாகக் கொடுக்கப்பட்டுளது. பிற்காலத்தில் இராஜகலகமுண்டானமை காரணமாக, இவரும் இவரது பந்துக்களும் வட்டுக்கோட்டையைச்சார்ந்த அராலியிற்சென்று அங்கே குடியேறினர். இவர் குமாரர் வெங்கடேச சாஸ்திரிகள்; இவர் குமாரர் அகிலேசசாஸ்திரிகள்: இவர் குமாரர் கோணேசசாஸ்திரிகள்; இவர் குமாரர் இரகுநாதசாஸ்திரிகள்; இவர் குமாரர் நடராஜசாஸ்திரிகள்; இவர் குமாரர் நாராயணசாஸ்திரிகள்; இவர், கணிதசிந்தாமணியென்னும் நூலையியற்றினர். இவர் குமாரர் சந்திரசேகரசாஸ்திரிகள், கங்காதரசாஸ்திரிகள், விஸ்வநாதசாஸ்திரிகள் என்னும் ஐவர். இவர்களுள்: சந்திரசேகரசாஸ்திரிகள் திருநல்லைக்கிள்ளைவிடுதூது, மூவரம்மானை, முதலிய சில பிரபந்தங்களும், சிவபூஜாவிதி, நித்தியகன்மவிதி முதலிய சில சமயாசார நூல்களும் இயற்றினர். திருவாரூர் வெண்பா, கங்காதரசாஸ்திரிகளாலே பாடப்பெற்றது.

௫௧. விஸ்வநாத சாஸ்திரிகள்;—இவர் நாராயணசாஸ்திரிகளின் மூன்றாவது குமாரர். இவர் வடமொழி தமிழ்மொழியிரண்டினும் வல்லவராய் சோதிஷ கணிதசாஸ்திரத்தில் மிகவும் பிரசித்திபெற்று, இலங்கை நீதிராசாவாகிய (அலெக்சான்றர்ஜோன்ஸ்தன்) என்பவர் இங்கிலாந்து அரசராகிய நான்காம்(சோர்ச்) அவர்களுக்கு இவரைப்பற்றி வியந்து நிருபமனுப்பி மேற்படி நான்காம் [சோர்ச்] மன்னரால் இராசாவின் கணிதர் என்னும் பட்டப்பெயரும் பெற்று, இவ்வாறு கோவறிந்த கணிதசிங்கமாகக் கீர்த்திப்பிரதாபமுற்று விளங்கினர். இவர் ஒன்பது தலைமுறை

யான சாஸ்திரிகளின் குடும்பத்தைச்சேர்ந்தவரென்று இலங்கை இராஜாங்க லிகிதராகிய [சர் எம்மர்சன்தெனன்று] துரையவர்கள். இவரைப்பற்றி வியந்து Tamil Plutarch என்னும் நூலில்எழுதியிருக்கின்றனர். இவர் பெயர்வாய்ந்த புலவராகி, மாவைக்குறவஞ்சி, வண்ணைக்குறவஞ்சி, வாக்கியகரண கிரகணம் முதலிய சில அருமையான நூல்களையும், மயூரகிரிபுராணத்துத் தெய்வயானைதிருமணச்சருக்கம் முதலிய பாடல்களையுமியற்றினர். இவற்றுள் வாக்கியகரணகிரகணம்என்னும் நூல், ஹோசிங்றன்தேசிகர் 1848-ம் ௵ இயற்றிய சோதிசாஸ்திரத்திற் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கின்றது மற்றையவற்றுட் சில ஏட்டுப்பிரதிகளாகவிருக்கின்றன. இவரிடம் சோதிடங்கற்ற மாணவர் புலருள் வட்டுக்கோட்டைச் சாஸ்திரகலாசாலை ஆசிரியரும், அக்காலத்தில் அமெரிக்க மிஷனுக்காகப் பஞ்சாங்கங் கணித்தவருமான சோமசேகரம்பிள்ளையென்பவர் 1832-ம் ஆண்டிலும், மேற்படி சாஸ்திரிகளைச் சந்தித்தனராம். மேலும் இவரது பந்துக்கள் அனேகருளர். சிலர் வாழையடி வாழையாய்க் கணிதசாஸ்திரிகளாகவேயிருக்கின்றனர். மற்றையோர் அராலி, கொக்குவில், கோப்பாய் முதலியவிடங்களில் தற்காலமுமிருக்கின்றனர். அராலிச்சிவன்கோவில் நிலைத்தற்குக்காரணரும், மேற்படி கோவிற் சொந்தக்காரரும் ஸ்தானிகருமாகி, அக்கோவில் கட்டுவதற்குரிய நிலம் தருமசாதனஞ்செய்தவரும், சில திருப்பணிகளைச் செய்வித்தவரும், மேற்படி கோவிலுக்காக கட்டளைக்கிரமம் ஒன்று ஏற்படுத்தியவரும் இவரேயாம். இவரைப்பற்றி வட்டுக்கோட்டையைச்சார்ந்த அராலி ந. சிதம்பரசாஸ்திரிகளாற் கணிக்கப்பட்ட பிங்கள, குரோதன ௵ பஞ்சாங்கமுகவுரைகளிலும், உதயதாரகைப்பத்திராதிபரும், யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழாசிரியருமான, அ. சதாசிவம்பிள்ளையவர்களால் 1886-ம் ஆண்டில் இயற்றப்பட்ட பாவலர்சரித்திர தீபகத்திலும், அராலிச் சிவன்கோவிற் சொந்தக்காரரும் பன்னிருவருளொருவரும் பிரதிஷ்டோற்சவாசாரியருமான சங். கங்காதரக்குருக்கள்குமாரர் கணேசக்குருக்களவர்களால் 1885-ம்௵ அச்சிடப்பெற்ற நகுலமலைக்குறவஞ்சி நாடகத்திலும், 1901-ம் ஆண்டு சந்தானதீபிகைப் பொழிப்புரை செய்தவரும், சந்திரசேகர சாஸ்திரிகளின் பிரபௌத்திரருமான கொக்குவில் சு. நடராசஐயர் அவர்களால் எழுதப்பெற்ற மேற்படி புத்தகமுகவுரையிலும் ந. சிதம்பரநாத சாஸ்திரிகளின் மருகரும், யாழ்ப்பாணத்தில் மிக்கபிரசித்திபெற்ற நி. சிதம்பரசாஸ்திரிகளின் மருகருமாக, இலங்கை இந்தியா முதலியவிடங்களில் திருக்கணித பஞ்சாங்கம் கணித்தவருமான ஹே. கார்த்திகேய ஐயரவர்களாற் கணிக்கப்பட்ட விகாரி, சார்வரி, பி

லக வருஷ பஞ்சாங்கங்களிற் குருமரபு விளக்கத்திலும்; வண்ணார்பண்ணை ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களால் இயற்றி, 1915-ம் ஆண்டு அச்சிடப்பெற்ற யாழ்ப்பாணச்சரித்திரத்திலும், சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரவர்களால் 1916-ம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்ப் புலவர் சரித்திரத்திலும், இவர்களது எத்திற வித்தைகளின் சித்திகளைப்பற்றியும், கல்விச்சாதுரியங்கள் கீர்த்திப்பிரதாபங்கள் இவர்களின் வைபவங்கள் முன்பின் சந்ததிமுறைகள் முதலானவைகளைப்பற்றியும் ஆங்காங்குக்கண்டு விபரமாயறிந்துகொள்ளலாம்.

௫. சுந்தரசாஸ்திரிகள்:—இவர் தென்னிந்தியாவில் திருநெல்வேலி கல்லிடைக்குறிச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வந்து வைதீக பூர்வ அபரக்கிரியைகளில் யாதொரு பிசகுமின்றித் தமது வாக்கின்திறமையினால் நடத்துவிக்கும் வித்துவத்திறமையுடையவராகி மிக்கபிரசித்திபெற்றவராகையால், சமஸ்தரும் விரும்பிக் கைக்கொள்ளும்படியாய் முதன்முதல் வண்ணார்பண்ணை, நல்லூர், கோப்பாய், விளைவேலி, நீர்வேலி, கந்தரோடை, காரைதீவு, வட்டுக்கோட்டை, மூளாய், தொல்புரம், சுளிபுரம் ஆதியவிடங்களில் பிராமணர்களுக்கு உபாத்தியாயராகவிருந்து, பின்னர் அராலியிலிருந்த ஜோதிஷகணித சாஸ்திரிகளின் மாபினர்க்கு மல்வாதிபற்றியும் வேதாத்தியயனம் செய்வித்தும், பின்னர் அவர்களிடம் விவாகம்முடித்து உறவுபூண்டும், மேற்படி சிவன்கோவிற் பன்னிருவருளொருவருமாயிருந்து இறுதியில் அராலியிற்றானே இறந்தனர். இவரது சந்ததியினர் தற்காலமுமிருக்கின்றனர்.

௬. அருணாசலக்குருக்கள்:—இவர் பூர்வம் இந்தியாவில் திருவண்ணாமலைப்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம்வந்து புன்னாலைக்கட்டுவனிற் குடியேறினர். இவர் அட்டகர்ம மாந்திரீக பிரயோகத்திலும் கல்வித்திறமையிலும் சித்திபெற்றுப் பெரிய அருணாசலக்குருக்கள் என்று பட்டம்பெற்றவர். இவரது சிஷ்யர்கள் வன்னிப்பகுதிகளில் தற்காலமுமிருக்கின்றனர். கோப்பாயில் விக்கினேஸ்வர வைரவாலயங்களை ஸ்தாபித்தவருமிவரே. இவர் குமாரர் நமசிவாயக்குருக்கள். இவர்குமாரர் சுப்பிரமணியக்குருக்கள், இவர்குமாரர் சின்னையாக்குருக்கள் என்றுவழங்கிய சபாபதிக்குருக்கள். இவரும் வேதாகமபண்டிதராய்க் குருத்துவத்திறமை வாய்ந்தவராய், அதற்கேற்ப அனேகசாஸ்திரநுணர்ச்சியில்வல்ல அதிசாமர்த்தியராய், ஆசாரியகுண லட்சணமமைந்த உத்தமகுணசொரூபராயிருந்து விளங்கினர். இவர் சகோதரருள் ஒருவரான ஐயாக்குட்டிக்குருக்கள் என்று வழங்கிய கார்த்திகேயக்குருக்கள் என்பவரும் கல்வித்திறமையு

டையவர். இவ்வூர் வேலம்பராய். தமது குருத்துவத்துக் கேற்ப வேதாகம நூலுணர்ச்சியிலும், மாந்திரீகம், யந்திரநிர்ணயங்களிலும், அட்டகன்ம மாந்திரீகப் பிரயோகசித்தியிலும், ரோகநிவாரண சாந்திபரிகாரங்களிலும், தமக்கொருவரிணையென்று சென்றவிடமெல்லாஞ்சிறப்புடன் கீர்த்திபெற்று விளங்கினர் என்பர். தங்குல முன்னோருள்ளே தெய்வீக வரகவித்திறம்வாய்ந்த இரகுநாதக்குருக்கள் அவர்கள்போல் தாமும் பக்திமேலீட்டால் இஷ்டதேவர்கண்மேல் பற்பல பாமாலைகளும் பாடியுள்ளார். இவர்களிருவரும் இற்றைக்குச்சிலகாலங்களின்முன் இறந்தனர். இவர்களின் புத்திர தத்தபுத்திர பௌத்திரர்களும் தங்கள் முன்னோர்போலவே குருத்துவம் முதலியன நடத்திப் பெருந்தன்மை வாய்ந்தவராய்க் கோப்பாயிலும் மேற்படியூரிலும் தற்காலமுமிருக்கின்றனர்.

**சந்திரசேகரக்குருக்கள்;**—இவர் இந்தியாவில் திருவாடானையென்னுமிடத்தை ஜன்மபூமியாக வுடையவர். இவர் ஆதியில் யாழ்ப்பாணத்து நல்லூரிலே அக்காலத்துத் தமிழரசர்களாலே ஸ்தாபிக்கப்பெற்ற வெயிலுகந்த பிள்ளையார் கோவிலுக்காக அவ்வரசினராலேயே குடும்பசமேதராக முதன்முதல் அழைக்கப்பட்டனர். சிலர் இவரைத் திருவாடானையார் எனவும் வழங்குவர். இவர் குமாரர் இராமலிங்கக்குருக்கள், இவர்குமாரர் சந்திரசேகரக்குருக்கள் இவர் அராலி. கங்காதரசாஸ்திரிகளின் மருகர். இவர் குமாரர் செல்லையாக்குருக்களென வழங்கிய கங்காதரக்குருக்களென்பவரே. இவரும் வேதாகமேதிகாச புராணாதிகளிலும் வல்லராய், தங்கள் முன்னோரின் ஜனனதேசமாகும் இந்தியாவிற்சென்று குருப்பட்டம் தரிக்கப்பெற்று யாழ்ப்பாணம் வந்து மாந்திரீகங்களிலும், குருத்துவத்திலும் மிக்க பிரசித்திபெற்று எவராலும் நன்குமதிக்கப்பெற்றுச் சபைக்கோராண்சிங்கம்போன்று விளங்கினர். இவர் மேற்படியூரில் சிவன்கோவில் ஸ்தானீகரும், அக்காலத்துப் பன்னிருவருளொருவரும், பிரதான பிரதிஷ்டாற்சவாசாரியருமாகி, மேற்படி கோவிலிற் சகல திருப்பணிகளையும் தாம் முயற்சிகொண்டும் தமதுபொறுப்பாகவும், தர்மசீலரின் பொருளுதவிகொண்டும் நடத்தியும் நடப்பித்தும், மேற்படி கோவில உற்சவாதிகளையும் நடத்தி, தம்பதிசமேதராய்ப் புத்திர பௌத்திர சுற்றமித்திர இஷ்ட ஜனபந்துகளுடன் வாழ்ந்து, 1888-ம் ஆண்டு நவம்பர்மாதத்தில் இறந்தனர். இவரது பிள்ளைகளுள் ஜேஷ்ட புத்திரராகும் கணேசக்குருக்கள் என்பவரும் தமது தந்தையார் போலவே சகலதும் அமைந்துள்ளவர். மேலும் தமது தந்தையாரின் அந்தியகால சித்தப்படியே மேற்படிகோ

விற்றிருப்பணி முதலிய சகல பராபரிப்புக்களும் உரிமைவழியே எவருமுவந்தேற்கவியற்றி வருகின்றனர். இவரும் குருத்துவம் மாந்திரீகம் போதகாசாரியத்துவங்களிற் பிரசித்திபெற்றவர். இவர் சகோதரர் சுப்பிரமணியக்குருக்கள் என்பவர் சமஸ்கிருத திராவிட பண்டிதராய்ப் பலவித்தியாசாலைகளில் ஆசிரியராயிருந்ததுமன்றி, சித்திரவெழுத்து, யந்திரநிர்ணயம், சோதிஷம், தர்க்கம் முதலவற்றிலும் தேர்ச்சியுற்று இலங்கை இந்தியா முதலாமிடங்களிலும் பிரக்கியாதம்பெற்றிருந்தார். அருணாசல சாஸ்திரிகள் சங்கரபண்டிதர் ஆறுமுகநாவலர் என்போர் இவர்க்கு ஆசிரியராவர். இவர் 1881-ம் ௵ தக்ஷிணாமூர்த்தி தோத்திரம் என்னும் சமஸ்கிருத நூலுக்குத் தமிழுரைசெய்தும், 1882 ம்௵ சித்தாந்தசாராவளி என்னுஞ் சமஸ்கிருதநூலுக்குத் தமிழுரைசெய்தும் அச்சிடுவித்தனர். மேலும் அகோரசிவாசாரியக் கிரியாக்கிரமஜ்ஜோதி என்னுஞ் சமஸ்கிருத நூலுக்குத் தமிழ்வியாக்கியானமும், வேறுபல நூல்களுஞ் செய்தார். அவை அச்சில் வரவில்லை. இவர் சிவன்கோவிற் றத்துவங்களிலும் மற்றையவித்தைகளிலும் தமது தந்தையைப்போலிருந்து 1893-நந்தன௵ மாசி௴ சிவபதமடைந்தனர். இவரது ஏகபுத்திரன் கங்காதரக் குருக்களும் இவ்வாறே சகலகுணங்களு மமைந்து மேற்படிகோவில் மகோற்சவம்முதலியவைகளை நடத்திவருகின்றனர்.

பொன்னம்பல தீக்ஷிதர்:—இவர் சிதம்பரம் நடேசப்பெருமானை அர்ச்சிக்கும் தில்லைவாழந்தணர்களாகும் மூவாயிரவருளொருவர். இவர் ஓர் காரணத்தால் தமிழரசர்காலத்திலே யாழ்ப்பாணம் வந்து குடியேறினர். பின்னர் இராச்சிய மாறுதலுண்டாயபோது அராலி மேற்கிற்சென்று அங்கேதான்வசித்தனர். இவர் குமாரர் அருணாசலக்குருக்கள். இவர் தங்கள் முன்னோர்போலவே இந்தியாவிற் சென்று வேதம் ஆகமம் முதலியன கசடறக்கற்று குருத்துவம்பெற்று யாழ்ப்பாணம்வந்து மாந்திரீக வலிமையுடையவராகி, பூநகரி வவனியவிளாங்குளப்பகுதியில் தங்கள் சிஷ்யருக்குச் செய்யவேண்டிய முறைகளை நடத்தினர். இவர்குமாரர் சதாசிவக் குருக்கள். இவரும் கல்விமுதலியவற்றிற் சிறந்தவர். இவர் ஆன்மார்த்தநிமித்தமாகத் தங்கள் குலதெய்வமாகும் நடேசப்பெருமான் சிவகாமியம்மன் என்னுமிருவரையும் தாமிரவிக்கிரகமாகவைத்துப் பூசித்தனர். பின்னர் அந்த நடேசரும் சிவகாமியம்மனும் அராலிச் சிவன்கோவிலிற் பிரதிட்டை செய்யப்பட்டது. இவர்களின் சந்ததியினர் அராலி, கோப்பாய், திரிகோணமலை முதலியவிடங்களிற் றற்காலமுமிருக்கின்றனர். இவர் மருகர் அகிலேசக்குருக்கள். இவர் குமாரர் அருணாசலக்குருக்கள். இவர் மருகர் நாகபட்-

டினம் உப்பளம் சுப்பராமஐயர். இவர் தகுந்த உத்தியோகஸ்தர். சம்ஸ்கிருதம், தமிழ், இங்கிலீஷ் முதலியபாஷைகளில்வல்லவர். இவர் குமாரர் தற்காலம் கோப்பாயை வாசஸ்தானமாகவுடைய சிவகடாட்சக்குருக்கள் என்பவரேயாம். இவர் தமது முன்னோரின் சிஷ்யவர்க்கத்திற் கருமங்களையும் நடப்பித்துவருகின்றனர். அகிலேசக்குருக்கள் மருகர் இ. கிருஷ்ணசாமிக்குருக்கள். இவர் புத்திரர் சிவகடாட்சக்குருக்கள், ஞானசேகரக்குருக்கள் என்னுமிருவர். இவர்களின் பின் சந்ததியினர் அராலி, தொக்குவில், கோப்பாய், பூநகரி, வேலணை முதலியவிடங்களில் தற்காலமிருக்கின்றனர்.

வயித்தியாம்பிள்ளை லோப்புப்பிள்ளை:—மாதகலிலே காலஞ்சென்ற விருத்தாப்பியராய்க் கதலிகமத பத்திமானும் எவர்க்கும் உத்தம முன்மாதிரியானவராய், செல்வம், செல்வாக்கு, இன்சொல், பிறர்சினேகம், முதலிய நற்குணங்கள் ஒருங்கே அமையப்பெற்றவராய் விளங்கிய இவர்வல்வெட்டித்துறையில் யாவராலும் பாராட்டப்பட்ட பிரபுவும், நற்செல்வ நற்குணமுடையவருமான வயித்தியாம்பிள்ளையும், அவரதுசீவியவுரிமைபூண்ட சீனாப்பாச்சிப்பிள்ளையும் செய்த தவப்பலனால் 1844-ம் ௵ ஆவணி ௴ 3-ந் திகதி ஜெனனமாயினர். இவரது பாலியதசை "ஐயாண்டுதன்னிலும்மை யேடுகையிடி" என்பதுபோல் கலாப்பியாசஞ்செய்து "மைந்தனொருவன் தந்தையானு" னென்னும்படி தம்மோடொத்த பாலியருள் கலாவிருத்தியால் மேம்பாடுற்று அவர்களுட் சிரமாய் விளங்கினர். கல்வி வனப்பில் மாத்திரமன்று, தமது சமயாசார முறைமையினும் எங்கும் கண்டுபாவிக்கத்தகும் உத்தம ஒழுக்கங்களால் புண்ணிய தருப்பணப் பொற்பென இலங்கினர். நல்லறமென்னும் இல்லறம்வேண்டி மாதகலிலே அந்தோனிப்பிள்ளை புத்திரி மதலேனம்மாளை 1848-ம் ௵ விவாகம்புரிந்து ஐந்து புத்திரிகளையும், 1 ஞானப்பிரகாசம்பிள்ளை, 2 சூசைமுத்துப்பிள்ளை, 3 அமிர்தநாதபிள்ளை, என மூன்று புத்திரரையும் பெற்று சீர்த்தியுற்று விளங்கினர். 2 இப்புலவர் தைரியநாத அச்சியந்திரசாலைக்கதிபர். 'பண்ணியபயிரிற் புண்ணியந்தெரியும்' என்றபடி. இவர் குடும்பசந்தான ஆசீர்வாதம் பொலியப்பெற்று குன்றாதவாழ்வும் குறையாத செல்வமுமாய் விளங்கியது: இவரது கனிஷ்டபுத்திரன், அமிர்தநாதபிள்ளையினது நான்கு புத்திரருடன் மூன்று புத்திரிகளையும், மற்றும் பெண்மகாரின் புத்திரர் புத்திரி பௌத்திரரையும் கண்டுகளித்து, பிதாப்பிதாக்களின் குடும்ப ஆசியே அமையப்பெற்றதாலறியலாம். மாதகலிலே இவரது காலத்திலே இவர் முயற்சியால் கோவில்களிலே இன்னரவாசிப்பு இவர் குடும்பத்தாராலேதான்

ஆரம்பிக்கப்பட்டது. இவர் தாள்ாண்மையின்சிரம் "திரைகட லோடியும் திரவியம்தேடு" எனும் முதுமொழிப்படி தமதுசெ ல்வத்தால் பத்துக்கு மேற்பட்ட பாரிய மரக்கலங்களை (கப்பல் களை) வைத்து அதனால் தேசதேசங்களின் வர்த்தகநிலைகளையறி ந்து பெரியோர், வர்த்தகர், பிரபுக்கள் ஆகியோருடன் ஊடாடி நாக்கோடாமையினால் சத்தியவந்தனெனச் சகலராலும் புகழுப் பெற்று விளங்கினர். இவரது செல்வம் 'நெல்லுக்கிறைத்த நீர் போல' எல்லோர்க்கும் பயன்கொடுத்தது. இவரதுநட்பு உடுக் கையிழந்தவன் கைபோல இடுக்கண்கள் அநேகம் களைந்தன. பிறரறியாப் பெருங்கொடைத்தயாள சம்பன்னராதலினவர் எ ச்சமுகமும் செல்லும் வனசசோபிதமும் இவரது வாக்கு குண மெனும் குன்றேறிநின்ற உசிதோரது உசிதவாக்காயுமிருந்தன. மாதகல் சந்தொம்மையப்பர் ஆலய உயர்ச்சிக்கு இவர் மிக்க ஊ க்கஞ்செய்தவர். இவரது சிவியம் பத்திச்சிவியம். எல்லாவற் றுளும் இவரது சாமகவியில் 'மாதைக்கணிகலனே வருணகுலசி ங்கமே சிதைக்கடாட்ச திருப்பதியே'என வித்துவசிரோன்மணி சுபவாக்கியம்பிள்ளை சொல்லிய வெண்பா அம்சம் பொய்யாமொ ழியேயாம். இவரது குடும்பத்தார் அட்டலட்சுமி கடாட்சம்பெ ற்று இன்றைக்கும் மாதகலில் மலைமேலேற்றிய விளக்கம்போற் பிரகாசிக்க வருகின்றனர். அ—பு.

பெருவேள்ாளன் சங்கிலிமுதலி:—இவர் அச்சுவேலியிலுள் ளவர். இவர்புத்திரர் 1 பூதஉடையார், 2 கந்தஉடையார். 1 பூ தஉடையார்மகன் முதலர். இவருக்கு 9 புத்திரருளர். அவரு ளொருவரே சரவணமுத்து. இவர் உடுவில் (பல்லப்பை)சங்கிலி வமிசத்தைச்சேர்ந்த முருகஉடையார்மகள் வைரவப்பிள்ளையைப் ப் பாணிக்கிரகணஞ்செய்தனர். இவர்க்குப் பிள்ளைகள் 11. இ வர்களுள் மூத்தமகள் வள்ளியம்மை. வள்ளியம்மையை உடு வில் (கப்பாவுடை) பூதஉடையார்மகன் வயிரமுத்துமகன் சின் னத்தம்பி (செட்டியார்) விவாகஞ்செய்தனர். இவர்க்குப் பிள்ளை கள் 5. அவர்களுள் இரண்டாம்மகள் தங்கம்மா என்பாரை மா னிப்பாய் முருகர் கந்தர் மகன் சபாபதிப்பிள்ளை விவாகஞ்செய் தனர். இவர் கொழும்பு கண்டியிலுள்ள ஐரோப்பிய கொம்ப னிகளில் ஐக்கவுண்டன் ஆகவும், சிறுப்பு ஆகவுமிருந்து தற் போது உடுவில் The New Jaffna aerated water கொம்பனி யின் சொந்தக்காரனும் மானேசராயுமிருக்கின்றனர். இவர்க் கு புத்திரர் 1 அரிராசா, 2 செல்வவிநாயகம்.

சயம்புநாதமுதலியார்;—இவர் உடுப்பிட்டியைச் சென்மஸ் தானமாய்க்கொண்டு பெருந்தகையும் பிரபலமுமுற்றுவிளங்கி

குமாரமட்டப்பளியைச் சார்ந்தவர். சேனாதிராஜமுதலியாரும் தென்னர்கோன் முதலியார் மனைவியாரும் இவருடன்பிறந்த சோதரங்களாம். இவர் மூவரும் கோப்பாய் வடபகுதியில்வந்து விவாகஞ்செய்தனர். மேற்கூறிய சயம்புநாதமுதலியார்க்குப் புத்திரர் 1 வயிரவநாதர், 2 சின்னத்தம்பி. வயிரவநாதர்மகன் சபம்புநாதர். இவர் புத்திரருளொருவரே அங்கிளதிராவிட ஆரிய பாஷாபண்டிதராய், இலக்கண இலக்கிய தர்க்க வேதாந்த சித்தாந்த சாகரமாய், திருவாவடுதுறைபாதீன வித்துவானுப், சிதம்பர சபாநாதர் புராணம், திராவிடப்பிரகாசிகை, யேசுமதசங்கற்ப நிராகரணம், சதுர்வேததாற்பரிய சங்கிரகம், இராமாயண தாற்பரிய சங்கிரகம், பாரததாற்பரிய சங்கிரகம், முத்துக்குமாரசுவாமி திருவருட்பா, திருச்சிற்றம்பல யமகவந்தாதி, சுப்பிரமணியசுவாமிகள்மாலை, முதற்பலநூல்களின் ஆக்கியோனாய்க் கீர்த்தியுற்று விளங்கிய வடகோவை வித்துவான் சபாபதிப்பிள்ளை. சின்னத்தம்பி மகன் கணபதியார். இவர்மகள் செல்லம்மா. இவர் விவாகஞ்செய்தது தெல்லிப்பழை கனகராயன் என்னுஞ் செட்டிவழியின் வழித்தோன்றலான சங்கரமூர்த்திமகன் வேலாயுதஞ்செட்டிமகன் முருகேசுவை. இவர் புத்திரர் 1 சின்னப்பா. 2 வேலுப்பிள்ளை. மூன்றாவது பெண். இப்பெண்ணரசியை விவாகம்செய்தது நல்லூர் வில்லவராயமுதலியார் அன்னைமாதகல் வேதவல்லி மகளடித்தோன்றிய அம்பலவாண உடையார் புத்திரன் சுப்பிரமணியம். செகராஜசேகரன், அரசகேசரி, சின்னத்தம்பிப்புலவர், சிற்றம்பலப்புலவர், சபாபதிநாவலர் ஆதியோர் ஷை வில்லவராய முதலியார் வழிதழுவியவராம். 2 மேற்கூறிய வேலுப்பிள்ளை சபாபதிநாவலர்க் குற்றமைத்துனர். இவர் நல்லூர் தாமோதரமுதலியார் வில்லவராயமுதலியார்பொன்னம்பலமுதலியார்மகள் மீனாச்சிப்பிள்ளைமகள் தையல்நாயகியம்மைபின்புத்திரி அருந்ததிநாயகத்தைப்பாணிக்கிரகணஞ்செய்தனர். தமிழ் இலக்கண இலக்கிய ஆராய்ச்சியோடு பதிநூலாராய்ச்சியும் பத்தி நைட்டிகமுமுடையவர். கொழும்பில் தற்போது (Drainage) பிரதம ஸ்ரோர்க்கீப்பராயிருக்கின்றனர். வில்லவராய முதலியார்க்குச் சகோதர முறையினரான சயம்புநாதமுதலியாரின் பூர்வ உரிமைபூண்ட வளவு கோப்பாயிலும், (மனைவியார்உரிமையில்) வில்லவராயமுதல்லியார் வசித்தவளவு சண்டிருப்பாயிலும் இவர்க்கிருக்கிறது. இவர் முற்சந்ததியாரோடு வைசியகுல பிரபுவாகிய சங்கரமூர்த்தி செல்வநாயக முதலியாரென இருவர் கலப்புற்றனரென்பதும் பெருவழக்காயிருக்கின்றது. கந்தனை குமாரசூரியர் மகன் சிற்றம்பலக்குமாரசூரியர், மகன் வாரியான குமாரசூரியர், மகன் பெரியகுமாரசூரியர் மகன் அரசகுலசூரியர் (அச்சுவேலி அடியில்) இவர் பிதாவழியின

ரென்ப. தற்போது விவேசாசிரயம் சண்டிருப்பாயில் "சண்டிருப்பாய் வில்லவராசவாசம்" என்றழைக்கப்படும். பரம்பரைப்பெயர்வழங்க, இவர் குமாரர்க்கு 1 அரசகுலசூரியர். 2 வில்லவராயர். என்னும் நாமகரணங்களிடப்பட்டன.

விநாயகர்;—இவர் ஒல்லாந்தர்காலத்திலே வசித்த கனகசேகரக்கோதண்டக்கூறியான் என்னும் பெருநிதிப் பிரபலபிரபுவின் வழித்தோன்றலாயுள்ளவர். இவர் சென்மஸ்தானம் அரியாலை. (சிவியாதெரு) சிவியார் திருத்தமற்ற சில மாக்களால் இழிகுலயினர்போல் இங்கே மதிக்கப்படுவது ஆச்சரியத்தை. விளைக்கத்தக்கது. தென்னிந்தியாவில் இப்பெயர்பூண்ட சாதியார் இருக்கின்றனர். இவர் அத்தொடர்பினரென்க ஆதாரமில்லை. மெஸ். முத்துத்தம்பிப்பிள்ளை சொல்லுகிறபடி, தொண்டைமான் என்ற அரசனுக்குச் சிவிகை தாங்கிச்சென்றவராயிருப்பினும் அவர்க்கும் இவ்விடத்துள்ளார்க்கும் யாதானுந் தொடர்பிருந்ததாய் யாதொரு ஆதாரமுங் காணப்படவில்லை. தமிழரசர்காலத்தும். பிந்திய சிங்களர், ஒல்லாந்தர், பறங்கியர்காலத்தும் இவர்களடியடியாய்ச் சிவித்த இடம் அரண்மனையிருந்த நல்லூர்க்கணித்தாய் இருப்பதினும், இவர்க்குள்ள வயல்களிற் சில அரசகுமாரன் வயல் என [இதற்கேற்ற காரணம்பெற] இருப்பதினும், நளவர், பள்ளர், பறையர், அம்பட்டர், வண்ணார் ஆதிய அடிமைக் குடிமைகள் இவ்விடத்தில் பரம்பரைக்காணிபூமியுடையராய், தொன்றுதொட்டிவர்க்குத் தொழிலாளராய், இவர்களதிகாரத்தின் கீழ்ப்பட்டுள்ளவராய் இவரையண்மித்திருத்தலினும், இவர் பூர்வமாய் வேளாளர், மடப்பளியார், செட்டிகளுக்குரிய வரிசைகளையுடையராயிருத்தலினும், கூறியான் herald என்னுஞ் சொற்கள் அரண்மனைப் பரிபாலனம், இராசசேவை (அதாவது) எச்சரிக்கைகூறல், சிவிகைமேல்வைத்தரசரைத் தாங்கிச்செல்லல், மெய்காப்பாளராய்ச் சூழ்ந்து செல்லல் உடையார்க்காளப்படுதலினும், தொம்பிலிப்பு வன்னியசிங்கசேகரக் கூறியான், தொம்சுவாம் கோபால எதிர்வன்னியசிங்கக் கூறியான், கனகசேகரக் கோதண்டக்கூறியான் என்னுஞ் சங்கைக்குரிய பட்டப்பெயர்கள் இவர்க்கு வழங்கப்பட்டிருத்தலினும், இவர்கள் அரசர்க் கத்தியர்வசியகம் வேண்டியவர்களாய் அரசராலமைக்கப்பட்டவரு ளொருவரேயன்றிக் கீழ்மக்கள்போல் மதிக்கப்பட்டவருளொருவரன்றென்பது பிரத்தியட்சம். இவருள் ஒருசாரார் பரதேசிச் சிவியார் என்றழைக்கப்பட்டனர். அவரே அரசரல்லார்க்குத் தொண்டுபுரிதலும், உப்புவிளைவித்தல் முதலிய தொழிற்புரிதலும் உடையர். இராசசிவியார் என மேற்கூறப்பட்டவர் கிருஷிகத்தொழில் உடையர். இவர்க்குப் பூர்வர்

தொட்டுக் கோவியருமிருந்தனர். பிற்காலத்தில் அவர்கள் மேற்கூறிய பரதேசிச் சிவியாரோடு கலப்புற்றுத் தந்தொழிலையொழித்துத் தன்னிட்டம்பூண்டனர். இதன்பின் இத்தொழில் சுமார் 100 வருடமட்டாய்க் கோப்பாயிலுள்ள கோவியருளொருயாலாரால் நடைபெற்றுவருகின்றது.

மேற்கூறிய விநாயகர்மகன் விசுவநாதர். இவர் நெடுங்காலமாய் ஆயக்குத்தகைகளை வாங்கிவந்ததினிமித்தம் குத்தகைகாரன் என்ற பட்டப்பெயரும் இவர்க்கு வழங்கியது. இவர்புத்திரர் 1 காசிப்பிள்ளை, 2 ஆறுமுகம், 3 பார்பதிப்பிள்ளை. ஆறுமுகத்தின் புத்திரர் சுப்பிறீங்கோட்டுப் பிறக்றாசாய் J. P. U. P. M. றோட்டுக்கொம்மிற்றி, லோக்கல்போட் மெம்பராய்(சிலகாலம்) பொலிஸ்நீதிபதியாய் விளங்கும், 1 கதிரைவேற்பிள்ளை. சிலோன்பற்றிரியற் மானேசரும், பத்திராதிபரும், பிறக்றருமாய் விளங்கும் 2 கனகரத்தினம். காசிப்பிள்ளையின் பிள்ளைகள் 1 அருளம்பலம் அப்புக்காத்து. 2 இராசம்மா. மேற்படி கதிரைவேற்பிள்ளையின் புத்திரரே கொழும்பு றோயல்கல்லூரி மாணவசிங்கமாய் அரசாட்சியால் ஸ்கலசிப் உபகாரம்பெறும் சிற்றம்பலம்.

ஷை 1 காசிப்பிள்ளை யாழ்ப்பாணத்திற் பிரசித்திபடைத்த பிரபுக்களுளொருவராய், இறவுண்பிறக்றராய், இந்துகல்லூரியைத்தாபித்த மகான்களுளொருவராய், கல்வி, யோக்கியதை, தண்ணளி, விவேகம் நிறைந்தவராய் சிலகாலங்களில் பெரியகோட்டு நீதாசனபதியாய், பொலிஸ்கோட்டு நீதாசனபதியாய்; சிவியார்தெருச் சித்திவிநாயகராலயத்துக்குப் பெருந்திரவியமளித்துத் திருப்பணிவேலைநடத்திக் கும்பாபிஷேகம் முடித்த புண்ணியபுருடனாய், இந்துக்கல்லூரியின் மானேசராய், சிவியாதெரு ஸ்ரீ பார்பதி வித்தியாசாலையைக் கட்டுவித்து நடப்பித்துவரும் தேசாபிமானியாய் அட்டதிசையும் புகழெட்டி விளங்குகின்றனர்.

**குலோத்துங்கமுதலியார் கதிர்காமர்:**—இவர் 18-ம் நூற்றூண்டின் முற்பகுதியிற் தெல்லிப்பழையிலே விளங்கிய பிரபுக்களுள் ஒருவர். இவர் தந்தையாகிய குலோத்துங்கமுதலியார் சோழதேசஞ்சென்று திரவியந்தேடிப் பெரும்புகழ்படைத்து அட்டசெல்வத்துடன் வாழ்ந்த ஒரு பெருமகன். அன்னூர் சிங்கைப் பரராசசேகர சக்கரவர்த்தி பௌத்திரனை பரராசசிங்க இளங்கோவின் குமாரன் 'தனபாலசிங்கமுதலி' என்பவரது வழித்தோன்றலாகிய அருளம்பல முதலியார்க்குப் பௌத்திரரும் வீரசிங்கமுதலியார்க்குப் புத்திரருமாயுள்ளவர்.

கதிர்காமர் புதல்வர் கந்தப்பர், சங்கரப்பிள்ளை என்னும் இருவர். கந்தப்பர்க்கு மூத்ததம்பி, சின்னத்தம்பி உடையார் தா

மோதரர், இராமநாதச்சட்டம்பியார் என நான்கு புத்திரரும், ஐந்து புத்திரிகளுமுளர். சங்கரப்பிள்ளைக்கு பிள்ளையினார் உடையார், காசிநாதர், இராமநாதர், சின்னத்தம்பி என ஐந்து புத்திரரும் இரண்டு புத்திரிகளுமுளர்.

இவ்விரு குடும்பங்கட்கும் மாதகல் செட்டி இராசரத்தின முதலியார் குடும்பமும், நல்லூர் செட்டி கதிர்காமர் கனகசூரியர் குடும்பமும், தெல்லிப்பழை செட்டி இராசசிங்கக் கனகராயமுதலியார் குடும்பமும், வணிகர்குலசூரிய முதலியார் குடும்பமும், மல்லாகம் குமாரசமடப்பளி மதுநாயக முதலியார் குடும்பமும் சம்பந்தத் தொடர்புடையனவாம். தெல்லிப்பழை நீலநாதர் சோமநாதமுதலியார் என்பவர் சங்கரப்பிள்ளையின் மூத்தமகளை மணஞ்செய்த மருகராம்.

இற்றைக்குப் பலவருடங்கட்கு முன்னர்த் தெல்லிப்பழையிலே கீர்த்திப் பிரதாபமுடையராயிருந்த குலோத்துங்கர் என்பவர் மேற்படி சங்கரப்பிள்ளை புத்திரன் கதிரேசர் குமாரனேயாம். அவர் உத்தியோகத்தாற் பிரசித்த நொத்தாரிசுவாக நியமனம் பெற்றவராயிருந்தும் தம் கோப்பாட்டனார் குலோத்துங்க முதலியாரை நிகர்த்து, மலையாள வியாபாரத்தை நன்கு மதித்தாராய், அதனாற் பெரும்பொருளீட்டிச் சகல சம்பத்துடனும் வாழ்ந்தவராவர்.

மலையமாநாட்டிலும் பொன்றாப் புகழ் நாட்டியுள்ளார். அந்நாட்டார்களாற் சன்மானிக்கப்பட்டவராய் ஆங்கு வெகு சம்பிரமமாய்ச் சீவித்தவர் என்ப. அவரை அந்நாட்டவர் எவரும் 'வலியமுதலியார்' (வலிய—பெரிய—மலையாளச்சொல்.)என்று விதந்து சொல்லி வந்தமையும் அவர் பெருமைக்கு ஓர் அறிகுறியாகும்.

அக்காலத்திலே யாழ்ப்பாணத்துக்குப் பலவகை வஸ்திராபரணாதிகளையும், வெள்ளி, வெண்கலம், செம்பு, பித்தளை என்னும் உலோகங்களாற் செய்த விசேஷ சாமான்களையும் வேறும் அநேக நூதனப்பொருள்களையும் நவமாய்க் கொண்டுவந்து, அவைகளைச் செல்வர்கள் வீடுதோறும் உலாவச்செய்த பெருமையும் குலோத்துங்க அண்ணற்கே உரியதாகும்.

காங்கேயன்துறை ஒரு பிரசித்தியான துறைமுகமாவதற்குக் காரணமாயிருந்தது குலோத்துங்கர் செய்துவந்த மலையாளவியாபாரமே என்ப. அவர்பெயரினாலறியப்படும் பண்டசாலையே அவ்விடத்தில் முதன்முதற் கட்டப்பட்ட கட்டடமாம்.

அவ் வுத்துங்க வர்த்தகரிடம் பரிசுபெற்றார் பலர். அவர் பேரிற் கவிசொன்னாரும் அநேகர். இதனடியிற்றருங்கவி இந்தியாவிலுள்ள ஒரு பாவலனாலே பாடப்பட்டதாகும்.

### ஓரடிச்சிந்து.

பல்லவி.

பவனிவாறான்—துரை இதோ
பவனிவாறான்

அநுபல்லவி.

பவனிசதுங்கராங்கதெனத்தெல்லி
பரிவின்வருவணிகர்குலதிலகனமெல்லி
அவனிபுரக்குங்கதிரேசராசவல்லி
யம்பயந்தகுலத்துங்கபூபவில்லி ... பவனி

சரணம்.

தம்புருவீணைமத்தாளமிசைகொள்காளம்
தவில்கின்னரமுரசுதத்தமொலியாற்ற
டகடம்டகடமென்றுதந்தரிகளாட. அருகிற்
சவுந்தரிகள்பாட

தம்பகாமரொடுவடகர்குடகர்பாலர்
சாலர்மாலர்மலையாளரீழரொடு
தங்குசீனர்சோனராணோர்புடையில்வர
தயங்குவீதியிற்சல்லாபமாகவிதோ பவனி

வல்வையம்பதி ஸ்ரீ. க. குமாரசாமி முதலியாராற் பாடப் பட்ட "கொச்சைக்குறத்திதன்கோமானைக்கும்பிடமாவைப்பதிக்
கச்சைக்குதிரையின்மேலேகுலத்துங்கவண்ணல்செல்வான்
இச்சைப்பட்டாள்மாவையம்மாளெனவிங்கழைத்துவந்தால்
பச்சைப்பசுங்கிளியேபாலமிர்தம்பருக்குவனே." என்னும் இக் கலித்துறையில் குறிக்கப்பட்ட 'குலத்துங்கவண்ணல்' யாவரெனின், மன்மதனையொத்த மாட்சியும் இந்திரனையொத்த போகமுமுடையரான தெல்லியம்பதிக் குலோத்துங்கரேயாம்.

அவர்குமாரனே தம்பு என்னும் பெயரால் நன்கு அறியப்பட்ட இரகுநாதர் என்பவர்.

குலோத்துங்கரென்பவர்க்கு அண்ணனான தில்லையம்பல ஆராய்ச்சியார்பெற்ற ஆண்மக்களே சபாபதி, அருளம்பலம், சிவப்பிரகாசம் என்னும் மூவர். ஜேஷ்டரான சபாபதியின் சூநுவே பகிரங்கவேலைப் பகுதியிலே உபமாகாண 'எஞ்சினீர்' உத்தியோகத்திலமர்ந்திருந்த A. D. இரங்கநாதன்.

**சந்திரசேகரர் அம்பலவாணர்;**—இவர் அளவெட்டி தெற்கிலிருந்த தக்கோருள் ஒருவர். தெல்லிப்பழை குலோத்துங்கமுதலியார் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஒல்லாந்த அரசின் திரவிய சாலைக் கணக்கராய் உத்தியோகம் பார்த்தவர். இவர் மைந்தர் வைரவநாதர் தெல்லிப்பழை சேர்மநாதமுதலியார் புத்திரிகளுளொருவரை விவாகஞ்செய்து வேலாயுதர் என்னும் ஏகபுத்திரர்க்கும் பல புத்திரிகட்கும் பிதாவாயுள்ளவர்.

வேலாயுதர் வட்டுக்கோட்டைச் சாஸ்திரசாலையிற் கலைபயின்று அரங்கேறிப் பின்னர் மானிப்பாய் அச்சியந்திரசாலைச் சொந்தக்காரருட் சிரேட்டராய் விளங்கிய றிப்பிளி Ripley என்பவரேயாம். அவர் புதல்வன் இராமலிங்கத்தின் ஏகபுத்திரனே தெல்லிப்பழை R. R. குணரத்தினம் B. A.

**திருக்கச்சி தனியப்பமுதலி;**—இவர் காஞ்சிபுரத்திலுள்ளவர். திருக்கயிலாயபரம்பரைச் செங்குந்தர் மரபாரென்று சொல்லுமிவர் வழித்தோன்றல்—1-1-1-1-முருகேசமுதலி. இவர்மகன் சண்முகமுதலி. மகன் ஆறுமுகமுதலி. இவர்மகனே நல்லூரில் சுதேசவைத்தியத்தில் சீர்த்தியுற்றறியப்பட்ட கார்த்திகேயமுதலி. இவர் கிறிஸ்தவருடம் 1852–ல் பரிதாபிவருடம் பங்குனி மீ 11-ம் திகதி பிறந்தவர். தமிழோடு அங்கிளபாஷையுங் கற்றுத்தேறியவர். வைத்தியத்தில் மாத்திரமல்ல; சோதிடம், சற்பசாத்திரமும் நல்லாயறிந்தவர். வேதாந்த சித்தாந்த ஞானத்தோடு நைட்டிகத்திலும் தவறுதவராய் விளங்கினர். திருநெல்வேலி கிழக்கில் தற்போது நடைபெறும் "கும்பமுனி வைத்திய சாலை" இவரால் ஆக்குவிக்கப்பட்டது. சாதுகுணமுடையவரென்று சமஸ்தராலும் பாராட்டப்பட்டவர். இவர் முன்னோரும் கல்வி நாகரீக சீர்த்தியுற்று வைத்தியத்தைப்பயின்று பெயர்பெற்றவர். இவர் புத்திரரே தற்போது சுதேச வைத்தியராயிருக்கும் 1 கதிரைவேலு. சுதேசவைத்தியரும், யாழ்ப்பாணப்பிசுக்கால்கந்தோர்க் கிளாக்குமாய் இருக்கும் 2 பொன்னையா. 3 அருளம்பலம். 4 தில்லையம்பலம். திருநெல்வேலி கிழக்கு விதானையாயிருக்கும், கந்தப்பர் முருகேசர் மகன் கிருஷ்ணபிள்ளை இவர்க்கு மகன் முறையினராம். மேற்படி கார்த்திகேயமுதலி 1917–நள ஆண்டு மாசி மீ 5-ந் திகதி 64–ம் வயசில் மரணமடைந்தனர்.

குருளிகாவலச் சேனாதிராய முதலியார்;—இவரூர் சுளிபுரம். காலம் 18-ம் நூற்றாண்டின் முற்பகுதி. இவர் அக்காக்குருளி என்பவர்க்குப் புத்திரர். அடைக்கலங்காத்த குருளி என்பவர்க்குப் பௌத்திரர். அன்னக்கொடிக் குருளிகாவலர் என்பவர்க்குப் பிரபௌத்திரர்.

முதாதையரான காவலரவர்கட்குச் சென்னதேயம் தென்னிந்தியாவென்பர். அவர் குலத்தாற் பெருங்குடி வேளாளர். உத்தியோகத்தாற் தளபதி. அக்காலம் யாழ்ப்பாணத்திலே அரசுபுரிந்த சிங்கை ஆரியச்சக்கிரவர்த்தியின் வேண்டுதலினாலேயே ஈழநாட்டை நண்ணினர் என்பர்.

குருளிகாவலச் சேனாதிராய முதலியார் 'இறசுவதோர்' என்னும் ஊராதிகார வுத்தியோகத்திலமர்ந்திருந்து, ஒல்லாந்தவரசினது ஒல்லா மதிப்புடையராய் வாழ்ந்த ஒருத்துங்கர். அவர் மகார் இருவர். சிரேஷ்டர் அம்பலவாணக்குருளி. கனிஷ்டர் சுப்பிரமணியபண்டாரம். அம்பலவாணக்குருளி அளவெட்டி தெற்கிலே பராசசிங்க இளங்கோவின் மரபினரென்று மதிக்கப்படும் குமாரமடப்பளிக்குலத்திலே விவாகஞ்செய்து, இலங்கைநாதமுதலியார், சங்கரநாதர், குஞ்சுத்தம்பி என்னுங் குமாரர் மூவர்க்குத் தந்தையராயினர்.

இலங்கைநாத முதலியார்க்கு மக்கள் ரகுநாதர், சிதம்பரநாத உடையார், வைத்தியநாதர், குமாரவல்லி என்னும் மூவராம். சிதம்பரநாத உடையார் புத்திரி காமாக்ஷிப்பிள்ளையைக் காதற்றுணையாய்க் கொண்டவர், நவாலி குமாரமடப்பளி மரபினரான நாகநாதர் குமாரரும், அதிகாரியார் என்னுங் கண்ணிய உத்தியோகத்திலே அமர்ந்திருந்தவருமான, கதிர்காமர் என்பவரேயாம்.

அம்பலவாணக்குருளியின் துவிதியகுமாரர் சங்கரநாதர் என்பவர் மாந்திரீகம், வைத்தியம் என்னும் மகத்துவ வித்தைகளிலே தமக்குத் தாமே இணையென விளங்கிய வித்தகர். அன்னார் அருந்தவப்பேறாய்த் தோன்றினார் வேலாயுதர், நடுவிலார், பொன்னம்பலவர் எனப்பெயரிய பெருமக்கள் மூவர். வேலாயுதர் நாமம் விளக்கவந்தார் வட்டுக்கோட்டைச் சாஸ்திரசாலையிற் கற்றரங்கேறியவரான Walker தம்பிநாதர், Wirt சின்னத்தம்பி என்னும் இருவர். பின்னவரான சின்னத்தம்பி, கதிர்காம அதிகாரியாரின் குமாரத்தி சேதுப்பிள்ளைக்கு நாயகராகி, வேற்பிள்ளைச் சேனாதிராசா, நடுவிற்றம்பிச் சேனாதிராசா, ஸ்ரீநிவாசக சேனாதிராசா, பொன்னையச் சேனாதிராசா எனப்பெயரிய புத்திரர் நால்வர்க்கும், இராசலக்ஷ்மி, அன்னம்மாள் எனப்பெயரிய புத்திரிகள் இருவர்க்குந் தந்தையராயினர்.

சிரேஷ்டகுமாரர், நவாலி இருமரபுந்துய்ய முதலியார் வீரசிங்க உடையாரின் பௌத்திரியை விவாகஞ்செய்தவர். அளவெட்டி அங்கில வித்தியாசாலைச் சிரேட்ட ஆசிரியராய் விளங்கினவர். நடுவிற்றம்பி, சுப்பிரீங்கோட்டு நியாயப்பிரதிநிதியாயிருந்தவர். 'யாழ்ப்பாண தேசாபிமானி' எனப் பொருள்படும் அங்கில பஞ்சிகையை அதிசாமர்த்தியமாய் நடாத்திவந்த அதிபர். இவர்க்கு இருபுத்திரருளர்.

ஸ்ரீநிவாசகரே E. S. W, சேனாதிராசா என்று அறியப்படுபவர். இவர் பிரான்சு, இங்கிலாந்து என்னும் இருசீமையிலுங் கல்விகற்றுத்தேறி, அவ்விரு"சீமை நியாயசாலைகட்குமுரிய 'பாரிஸ்றர்' என்னும் பாரிய நியாயப் பிரதிநிதிப்பட்டம் பெற்றவர். L.L.B. என்னும் பட்டமும் பெற்றவர். இலத்தீன், பிறெஞ்சு, அங்கிலம் ஆதிய ஐரோப்பிய பாஷைகளிலும் தாய்மொழியாயுள்ள தமிழ்மொழியிலும் வல்லுநர். வடமொழிப்பயிற்சியுமுடையவர். தமிழ்ப்பாஷாபிமானி. தமிழ் மக்களைக்குறித்தும் தமிழ்மொழியைக் குறித்தும் பற்பல பிரசாரணங்களும் சிற்சில நூல்களும் பிறெஞ்சிலும் அங்கிலத்திலும் செய்து தம் புகழ் நிறுவியுள்ளார். நியாய நூல்களுஞ் சில ஆக்கியுள்ளார். நியாயசாஸ்திர பாடகராய் இலங்கையிலும் திருவாங்கூரிலும் பல வருடங்களாக விளங்கினவர். அநேக கல்விக்கழகங்கட்கு அங்கத்தவராயுள்ளவர். அங்கில விஜயைராணியாகிய விக்ரோறியாவினது அரசின் அறுபதாம்வருடக் கொண்டாட்டத்துக்கு இலங்கைத்தீவிலிருந்து இங்கிலாந்துக்குத் தெரிந்தனுப்பப்பட்ட பிரதிநிதிகள் இருவருள் ஒருவராயுள்ளார். பெரியோரை நட்பாடுஞ் சாமர்த்தியம் நன்கு அமையப்பெற்றவர்.

பொன்னையா சேனாதிராசாவே புத்தளத்திலே சுப்பிரீங்கோட்டு நியாயப்பிரதிநிதியும், அரசபக்கத்து நியாயப்பிரதிநிதியும், சமாதான நீதவானுமாயிருந்து, சிலவேளை கீழ்க்கோட்டுநீதவான், மேற்கோட்டு நீதவான் எனு முத்தியோக பதவியுடையராயும் விளங்கினவர். இயல்பிலே அடக்கம், ஆழ்ந்தபுத்தி, தாழ்ந்த சிந்தை, தயை, பொறை, ஆதிய சுகுணலட்சணங்கள் இனிது அமைந்திருக்கப்பெற்றவர். எவ்வெவர்க்கும் இனியராகித் தம் சீவியத்தைச் சீர்த்திபெற நடாத்திய சுசீலர்.

சின்னத்தம்பியவர்கள் சிரேஷ்ட புத்திரியை விவாகஞ்செய்தவர், பேர்பெற்ற அளவையம்பதிக் கனகசபைப்புலவனார் சிரேஷ்ட புத்திரராகிய அருளம்பல நாமதேயமுடைய ஆயுள்வேதபண்டிதர்.

கனிஷ்ட கொழுநர், அளவெட்டி தெற்கிலே உடுப்பிட்டி குமாரமடப்பளி மரபிலே உதித்த கந்தரத்தின முதலியார் குமார

வேலர்க்குப் பிரபௌத்திரரும், விநாயகர் சங்கரப்பிள்ளை என்பவர்க்குப் புத்திரருமாகிய அப்பச்சிப்பிள்ளை என்னும் பெயருடைய ஆசிரியர்.

தண்டிகைக்குலசேகரமுதலியார்;— இவர் சுழிபுரத்திலுள்ள ஓர் உயர்குலப்பிரபு. இவர் மகன் சுப்பிரமணியபிள்ளை. இவர் மகன் வயிரமுத்தாபிள்ளை. இவர்மகனே சுழிபுரத்தில் (பெரிய பரிகாரி என்றும், சின்னத்தம்பி என்றும் வழங்கிய) ஆறுமுகம். இவர் 65—வருடமட்டும் வைத்தியத்தொழில்புரிந்து 80—ம் வயசில் மரணமடைந்தனர். சுதேசவைத்தியத்தில் பலராலும் விதந்து வியந்து பாராட்டப்பட்டவர். இவர் புத்திரரே தற்போது வைத்தியத்தொழில் நடத்திவரும் 1. தம்பிப்பிள்ளை, 2. வயிரமுத்து. பௌத்திரர் 1. நவரத்தினம், 2. இளையதம்பி.

K. U. தம்பையாமுதலியார்:—இவர் முல்லைத்தீவைச்சேர்ந்த அம்பலவன்பொக்கணை என்னுமிடத்தைச் சென்னஸ்தானமாயுடையவர். இவர் கண்ணியமுள்ள உயர்குடும்பத்தைச்சார்ந்தவர். இவர்தந்தையார், அடியடியாய்ப் பெரும் முதலிப்பட்டத்தை ஒல்லாந்தர், பறங்கியர் காலத்திற்பெற்றுள்ளவர்க்கு வழித்தோன்றலாய், முல்லைத்தீவுப்பகுதியில் பிரபலம்பெற்று உடையாராயிருந்த குமாரு உடையார். மேற்படி தம்பையாமுதலியார் விவாகஞ்செய்தது, குமிளமுனை சரவணமுத்துப்புலவர் புத்திரியை. முதலியார் முன் உடையாராய்ச் சிலகாலம்வேலைபார்த்து, தற்போது மணியகாரனும், டிஸ்திரிக் முதலியாராயும், J. P. U. P. M. என்னும் பட்டங்களைப் பெற்றவராயும் விளங்குகின்றனர். இவர் பரோபகாரசிந்தையும், மதநைட்டிகம், மதபரிபாலனோபகாரமுமுடையவர். சர்வசனங்களுக்கும் முல்லைத்தீவுப் பகுதியிலே ஒரு தந்தைபோலப் பாரபட்சமின்றி நடக்கும் தண்ணளிபடைத்தவர். முல்லைத்தீவு வீரகத்திப்பிள்ளையார் கோவிலின் மானேசர். இவர் ஏகபுத்திரியே உடுப்பிட்டியில் பிரபல சுதேசவைத்தியர் ஆறுமுகம் மகன் திருஞானசம்பந்தரின் மனைவி. இம்மாது சிவகதியடைந்தனர். இவர் ஏகபுத்திரனே தற்போது பிரசித்த நொத்தாரிசும், நியாயதுரந்தாருமாயிருக்கும் சபாரத்தினம். இவர் வதிரியிலே உயர்குலப்பிரபுவாயிருந்த சதாசிவம் சந்திரசேகரர்மகன் சதாசிவத்தின் புத்திரியை விவாகஞ்செய்தனர்.

தோம்பிலிப்பு வணிகர்குலசூரியமுதலியார்;—இவரூர் தெல்லிப்பழை. காலம் இற்றைக்கு 110 வருடங்கட்குமுன். இவர் முதாதையர் சோழதேயத்திலிருந்துவந்து, தெல்லிப்பழை குமாரகுலதிலகமெனவிளங்கிய குலோத்துங்கமுதலியார் வம்சத்திலே

பெண்கொண்ட பெருங்குடி வணிகர் என்ப. இவ்வணிகர் குலம்வேறு, தங்குலம் வேறு எனக் குறிப்பாராயுள்ள குலோத்துங்கமுதலியார் சந்ததி முதுமக்கள், "நாம் வணிகர்குலமுமல்ல, மாநாய்கர் கோத்திரமுமல்ல" என்று வார்த்தையாடுவது வழக்கம். இஃது இவ்வணிகரது பூர்வோத்திரத்தைப் புலப்படுத்துவதும்போலும்.

வணிகர்குலசூரியமுதலியார்க்குச் சிதம்பரவல்லியார் என்னும் நாயகியாரிடத்துச் சுப்பிரமணியர், கதிர்காமர் என்னும் இரு புத்திரரும், பரமானந்த வல்லியார் என்னும் மறுதாரப் பன்னியாரிடத்துக் கந்தராயர் எனப்பெயரிய புத்திரரும் மூன்று புத்திரிகளுந் தோன்றினர்கள்.

சுப்பிரமணியரும் கதிர்காமரும் தெல்லிப்பழை குமாரகுலம் கந்தர் நீலநாதர் மக்களிருவரை மணந்து, சோமநாத முதலியார், அமரகோன் என்பவர்கட்கு மைத்துனராகவும், மல்லாகம் குமாரகுலம் கனகசபைமுதலியார், அளவெட்டி குமாரகுலம் சேந்தார் நிருபர்கோன் என்பவர்கட்குச் சகலராகவும் உரிமைபூண்டவர்.

சுப்பிரமணியருக்கு முருகேசர், கதிரேசர், சின்னத்தம்பி என மூன்று புதல்வரும், இரண்டு புதல்விகளுமுண்டு.

முருகேசரது முதற்றாரத்து மகளே குலோத்துங்க முதலியார்வழித்தோன்றிய சின்னத்தம்பி உடையார்புத்திரரான ஆறுமுகம் என்பவரது மனத்துணை.

துவிதியதாரத்துப் புத்திரரான சுப்பிரமணியரின் சூற்வே நீர்கொழும்பு P. W. D. கந்தோரில் இலேககராயிருக்கும் நாகலிங்கம் என்பவர். அவர் மூத்தகுமாரனே யாழ்ப்பாணம் P. W. D. கந்தோரிலிருக்கும் சுப்பிரமணியம்.

கதிரேசர், நல்லூர் செட்டிகனகசூரியர் சேட்ட குமாரரும். தெல்லிப்பழை செட்டி வைசியர்கோன் முதலியார் மருகருமான வேலாயுதர் என்பவரின் புத்திரியை விவாகஞ்செய்து, சுப்பிரமணியர், கந்தப்பர் எனப் பெயரிய புதல்வர் இருவர்க்குத் தந்தையாராயினர். அவ்விருபிள்ளைகளும் வட்டுநகர்க் கல்விக் கழகத்திலே கலைபயிலும்போழ்து, பின்னவர் பேதி என்னும் நோய்வாய்ப்பட்டுப் பொன்னுலகு சேர்ந்தனர். முன்னவரோ அங்கிலம், அருந்தமிழ், பதிசாஸ்திரமாதிய பலசாஸ்திரங்களும் நன்கு கற்றுத்தேறினவராய், மேற்படி கழகம் அளித்த "சினெல்" (Snell) என்னும் அங்கில நாமதேயத்திலறியப்பட்டவர் அவர் ஆதியிலே ஓர் அங்கில வித்தியாசாலை ஆசிரியராயிருந்தவர். அவரிடம் பாடங்கேட்ட மாணவகருள் வல்வை குமாரசுவாமிமுதலியார் கதிரைவேற்பிள்ளை ஒருவராம்.

பின்னர் யாழ்ப்பாணக்கச்சேரியிலே சிலகாலம் ஓர் இலேகக ராக உத்தியோகம் பார்த்தவர். அவ்வுத்தியோகம்அவர்க்குக் கேளாமலே கொடுக்கப்பட்டதாம். ஏதனுலெனில், 'டயிக்' துரை ஒருதருணம் சுப்பிரமணியரைக் காங்கேயன்றுறைத்தெரு விலே காத்திராப்பிரகாரஞ் சந்தித்து வார்த்தையாடி, அவரது குணகுணங்களையும் சாதுரிய சாமார்த்தியத்தையும் நேரிலேகண்டு மெச்சிக்கொண்டதனுலேயேயாம்.

இதற்குச் சில வருடங்கட்குப்பின்னர், தெல்லிப்பழையிலே அமெரிக்கன் 'மிஷனரி'யாயிருந்த 'பூர்' பண்டிதருக்கு வேதசாஸ்திரம் நன்கறிந்த 'செமினரி' மாணவகர் ஒருவர் அத்தியாவசியகம் வேண்டியதாயிருந்தமையின், 'சினெல்' சுப்பிரமணியரே அத்தகை அறிவுடையவரெனக்கண்ட அப்பண்டிதர், டயிக்துரைக்கு ஒரு விண்ணப்பமனுப்பி மேற்படி சுப்பிரமணியரை அரசாட்சி உத்தியோகத்தினின்றும் பிரித்தெடுத்து, அமெரிக்கன் மிஷனிலே ஒரு பிரசங்கியாராக்கி வைத்துக்கொண்டனர்.

'சினெல்' பிரசங்கியார் தம் அங்கில பெயருக்குத்தகத் தாமுயற்சியுடையாராய் என்றும் விளங்கினவர். அடக்கம், தண்ணளி, தெய்வபக்தி, வள்ளன்மை ஆதிய பெருங்குணங்கட்கு ஒரு பீடமாயிருந்தவர். 72-ம் வயதுவரையும் திடகாத்திரமுடையராயிருந்து பரகதியடைந்தவர்.

அவர் பத்தினியார், தெல்லிப்பழை குலோத்துங்க முதலியார் வழித்தோன்றலான பிள்ளையினுர் உடையார்க்கும், தந்தைமாமியாரான பார்வதி என்பார்க்கும் ஏகபுத்திரி. அன்னர்பெற்ற ஆண் மக்கள் 1. பகிரங்கவேலைப்பகுதியிற் பன்னெடுநாட்பற்பல உத்தியோகத்திலமர்ந்திருந்த சம்பன்னர் ஆசீர்வாதம் சினெல், 2. வல்லிபட்டித்துறை, மானிப்பாய் என்னுந் தானங்களிலே 'தபாலாபீஸ்' தலைவராய் விளங்கிய சீரியர் செல்லையா சினெல், 3. கொழும்பிலே நியாயகலை கற்பவராயிருந்தகாலத்திலே காலன்கைப்பட்ட குணசீலர் இளையதம்பிசினெல் ஆகிய இவர்களே.

இற்கொண்ட மருகர் 1. சங்கானை அமரசிங்கம் சரவணமுத்து. 2. அளவெட்டி வேலாயுதர் இராமலிங்கம்.

**கதிர்காமசிங்க முதலியார்;**—இவரூர் அளவெட்டி. காலம் 18-ம் நூற்றாண்டின் முற்பகுதி. இவர் வட்டுக்கோட்டை காராளகுல ரத்தினமென விளங்கிய உலகநாதமுதலியார் பௌத்திரரான பெரியதம்பி உடையார்க்கும், நல்லூர் குமாரகுலக் குரிசிலென விளங்கிய வில்லவராயமுதலியார் வம்சத்தில் வந்த சேதுகாவலர் என்பவரது புத்திரிக்கும் புதல்வராயுதித்தவர்.

இத்தகையோர்க்கு மைந்தனுயுள்ள வைத்தியநாதஉடையார் என்பவர், நல்லூர் குமாரமடப்பளி மரபிலே 'இறசுவதோர்' என்னும் உத்தியோக லக்ஷணமுடையாரயிருந்த புவிசேகரர் என்பவர்க்குப் புத்திரியும், வண்ணை பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவிலடியிலே ஆயுள்வேதபண்டிதராயும், கவிராசராயும் இசையொளிபரப்பிய ஒப்பிலா மணிப்புலவர்க்குச்சகோதரியுமான மாதசிரோன்மணியை மணந்து வேலாயுதர் என்ப் பெயரிய மகவை உயிர்த்தனர்.

வேலாயுதர், மல்லாகம் குமாரகுலத்தவரான கந்தரத்தின முதலியார் குமாரர் மனுநாயகமுதலியார்க்கு மகளும், 'புலியூர் வாழ் நற்சொல்லாகவுறும் புகழ்ச் சுப்பிரமணியதேசிகன்' என்று 'அழகர் சாமிராசன்மடல்" ஆசிரியவணக்கச் செய்யுளிலே துதிக்கப்படுபவரான தம்பிரானவர்கட்குச் சகோதரியுமான நாகமுத்தம்மாட்கு நாயகராகி, கனகசபை, வைத்தியலிங்கம், சரவணமுத்தர் என்னும் மைந்தர் மூவர்க்குத் தந்தையாராயினர்.

இருமரபினும் பரந்திருந்த பாம்பரைப் பாவன்மையெல்லாம் திரண்டு ஒருருவெடுத்ததெனத் தோன்றிய தனயர் கனகசபை, 'மகன்றந்தைக்காற்றுமுதவி'யைத் தப்பாதுசெய்த பெருந்தகவுடையோர். வட்டுகோர்க் கல்விக்கழகத்திலே கலைபல கற்றுணர்ந்த பண்டிதர்.

"முந்துதென்மலய முனியுவந்தீன்ற
செந்தமிழணங்கொடு சேர்ந்தின்பெய்தி
எழுத்துச்சொற்பொருள் யாப்பணியைந்தும்
வழுத்தபத்தெளிந்த வண்மதியாளன்
நாவலர்நாவலர் பாவெலாநனிசேர்
தாவறுமிலக்கியந் தகவொருங்குணர்ந்தோன்
தீதிலாவாயுள் வேதந்தெரிந்தோன்
ஓதியகணித முறுமுறையாய்ந்தோன்
மடனறிடுங்கலை வரம்புணர்வரிய
வடநூற்கடலினை வாய்மடுத்துண்டோன்" என்று மேற்படி 'மடற்' பாயிரத்திலே புகழப்பட்டோர்.

அத் தக்கார்க்குத் தண்டமிழ்ப்போதமூட்டிய தாதையாராயுள்ளார் யாவர் எனின், தெல்லியம்பதிக் குமாரகுலத்திற்றோன்றிய அம்பிகைபாகர் பூதநாதரின் அருந்தவப்பேறுயுதித்த பொன்னம்பலவர் புதல்வரான பரமாநந்தர்க்குப் புத்திரரும், தமிழ்ப்பாவலரும், இலக்கணலக்கிய வித்தியாதாரரும், அங்கில பாஷாபண்டிதரும், வட்டுகோர்க் கலாசாலையிலே ஓர் ஆசிரியராகவும், கோப்பாய் மயில்வாகன முதலியாராதிய பெருமக்கட்குக் குருவாகவும், நெடுந்தீவுக் கோட்டுத் துவிபாஷிதமுதலியாரா

க உத்தியோகம் பார்த்தவரும், பத்திக்கோர்வித்தென்று பல ராலும் பாராட்டப்பட்ட பக்த சிலருமான நிக்கலஸ்பிள்ளையெ ன்னும் கிறீஸ்த நாமதேயமுடைய குலோத்துங்கரவர்களும், நா மகள் கடாக்ஷம் நன்குபெற்றிருந்த நன்மாதுலர் சுப்பிரமணிய த்தம்பிரானவர்களுமேயாம்.

கனகசபைப் புலவரின் பாரியையாயின குருளிகாவலச்சே ஞதராயமுதலியார் குடும்பத்து வேலாயுதர் மகள் சின்னத்தங் கத்துக்கு மேற்படி ஆசிரியர் குலோத்துங்கர் மாதுலரேயாம்.

புலமை அமைப்பேயன்றிச் சமைப்பன்று எனப்பொருள்ப டும் மேலைத்தேய முதுமொழிப்பிரகாரம் பிறவிப்புலவனே புல வனுகும். அசை, சீர் ஆதியன எண்ணி அகராதிபார்த்துக் க விதொடுக்குங் கற்றுக்குட்டிகளெல்லாம் புலவரென்று சொலற் பாலர் அல்லர். அன்னவரைக் கவிகட்டிகளென்றும், கவிக்கொ ல்லரென்றும் கரைவது மேலைத்தேய வழக்காம். அவ்வழக்கை மேற்கொண்டு யாழ்ப்பாணப் புலவர் யாவரென்று பார்ப்போமா யின், அவர் ஒரு சிலரேயாவர். அச்சிலருள் கனகசபைப்புலவ ர் ஒருவரென்பது கரதலஆமலகம்போல் வெளிப்படை. அப் பொய்யில் புலவர்க்குப் பாடுந்திறன் இயல்பிலே அமைந்திருந் தது என்பர். அவர் விரைந்து கவிபாடும் புலமையுடையர். சொ ற்கலைவிநோதர்; இரட்டுறமொழியுந் திறனுடையர்; வழக்குச் சொற்றொடர்கட்குக் கடிதிலே விநோதார்த்தமளித்துக் காலா க்ஷேபம்பண்ணுந் திறனுடையர்; விரைந்து சமயோசிதவிடை கூறுந் திறனுடையர். பின்னும் பல சாதுரிய சம்பிரதாயங்கள் அமையப்பெற்றவர். 'திருவாக்குப்புராணம்' என்னும் கிறிஸ்து வேத சம்பந்தமான பிரபந்தத்தைத் தம் வீட்டிலிருந்து கோப் பாய் வித்தியாசாலைக்குப் போகும் மார்க்கத்திலும், வீட்டுக்குவ ரும் மார்க்கத்திலுமே பாடி முடித்தனர் என்பர். அந்நியாயத் தினுலே ஆக்கியோர் அதனைத் தெருவாக்குப்புராணம் என்னு ஞ் செல்லப்பெயரினுற் குறித்தனுமுண்டாம்.

புலவனுரது எதிருரைவன்மையும், வாக்குச்சித்திரமும், அ ளவெட்டியான் ஒருவன் அவ்விடத்திலிருந்து பிறிதோரிடத்துக் குக் கள்ளுச்சுமந்துவருவதைக்காட்டி, 'புலவனுரே, உங்களூரா ன் வருகின்றது' எனச் சரசஞ்செய்த வேளான்கிராமவாசியான வேளாண் நண்பர்க்கு, 'எங்களூரான் சும்மாவருமோ, உங்க ளூரானிலே ஏறிவருகின்றது' என விரைந்துமொழிந்த மாறத் தாத்தினுலே இனிதுவிளங்கும்.

சித்திரத் தையல் செய்துகொண்டிருந்த சிறுமியொருத்தி யைநோக்கி, 'நீ ஒருபூத்தை' என்றுசொல்லிப் பின்னர்'பூத்தை' என்பதன்பொருள் விளக்கினுர் என்னுங் கதையுங் குறிக்கத்தக் கதே.

'You had better come after tea' என்ற ஐரோப்பிய பர் திரியார்க்கு 'Umust come after T' என்று உரையாடியமையும் வியக்கத்தக்கதேயாம். கனகசபாபிள்ளையின் 'பாநலம் நாநலம் முதலியவற்றைக்குறித்துப் பாவலர்சரித்திரத்திற் கூறியிருப்பதையும் பார்க்க.

புலவனுர்க்கு அருளம்பலம், புவிசேகரர் எனப்பெயரிய புதல்வரிருவருண்டு. அவ்விருவரும் இரு வித்தியா ரத்தினங்களாய்விளங்கி, 'அறிவறிந்த மக்கட்பேறு' என்பதற்கு இணையான ஆக்கம் இவ்வுலகின்கண்ணே இல்லையென்பதன் உண்மையை நேரே உணர்த்தினவராவர். முன்னவர் பைந்தமிழ்க்கல்வியிற் பாண்டித்தியம் படைத்தவர். வைத்தியரத்தினமுமாய்விளங்கினவர். பின்னவர் அங்கிலம், இலத்தீன் ஆதிய அந்நியபாஷைகளிற் பாண்டித்தியம் படைத்தவராய், சுண்டிக்குழிக் கலாசாலையின் பிரதம ஆசிரியராகப் பல்லாண்டு விளங்கினவர். ஆசிரியனது இலக்ஷணம் அனைத்தும் அமையப்பெற்றவர். பண்பிலா மாணவகர் எவரையும் தம் ஆளுகைத்திறனாலே பண்புடையராக்கும் பதிலக்ஷணம்பொருந்தினவர். அவ்வூர்ப் பிரபுக்கள் அனேகர்க்கு ஆசிரியராயிருந்தவர். Jeremiah Evarts என்னுங் கிறிஸ்த நாமமுடையவர். கொல்லாமை என்னும் விரதம்பூண்ட புனிதர்.

அருளம்பலத்தின் ஏகபுத்திரியை விவாகஞ்செய்தவர்; ஆசிரியர் நிக்கலஸ்பிள்ளையின் பௌத்திரரும், மூத்ததம்பியின் புத்திரருமான சக்கிடுத்தார் S. N. வேலுப்பிள்ளை.

வேலுப்பிள்ளையின் ஏகசுதையை வதுவைசெய்தவர்: அங்கிலம், தமிழ் நன்கறிந்தவரும் நாமகள் நோக்குப் பெற்றிருப்பவரும், நியாயகலை கற்பவருமான தெல்லியம்பதி R. K. குணரத்தினம் B. A.

தேவராயேந்திரன்:—இவர் இந்தியாவினின்றும் வந்து கோவிலாக்கண்டியிற் குடியேறினர். இவர்மகன் சமரசேகரன். இவர்புத்திரரிலொருவர் மாதுங்கர், இவர்மகன் கந்தர். இவர்மகன் நிச்சிங்கர். இவர்மக்கள் 1. அம்பிகைபாக முதலியார். 2. சேனாதிராயமுதலியார்.

1. இவர்மகனே பிரபலகீர்த்திப்பிரதாப வள்ளலாயிருந்த காசிநாதமுதலியார். இவர்மகன் அம்பிகைபாகமுதலியார். இவர்மகனே வண்ணார்பண்ணையில் அட்டைஸ்வரிய பிரபுவாய்விளங்கிய காசிநாதமுதலியார். இவர்மகனே தென்மராட்சி மணியகாரனாய் விளங்கிய கந்தநிச்சிங்கச்சேனாதிராயமுதலியார். இவர்மகனே நாவற்குளி உடையாராயிருந்து காலஞ்சென்ற காசிநா

தர். இவர்மகனே தற்போது துன்னாலையில் நிச்சிஸ்றராய்ப் பிர பலமுற்றுவிளக்கும் தாமோதரம்பிள்ளையின் ஏகபுத்திரியின் நாயகன் அம்பிகைபாகர்.

2. இவர்மகன் கந்தர். இவர்மகன் நிச்சிங்கர். இவர்மக்கள் 1. காசிநாதர், 2. சேனாதிராயர், 3. சிதம்பரநாதர். 2. இவர்மகன் கதிர்காமஉடையார். இவர்மக்களிலொருவர் மயில்வாகனம். இவர் மறவன்புலவில் வசித்தவர். இவர்மகள் சின்னத்தங்கம். இம்மாதுசிரோமணியின் புத்திரனே துன்னாலை உடையாராய் நிச்சிஸ்றராய் இருந்து காலஞ்சென்ற மயில்வாகனம். இவர்புத்திரரிலொருவரே மேற்கூறிய துன்னாலைப்பகுதி நிச்சிஸ்றர் தாமோதரம்பிள்ளை. இரண்டாம்புத்திரனே நியாயதுரந்தர மாணவகனாய்த் தற்போது கொழும்பிலிருக்கும் இரத்தினசிங்கம். 3. செல்வத்துரை.

வேலப்பமுதலியார்:—இவர் கைதடியில் வசித்தவர். இவர் மகன் விசுவநாதமுதலியார், இவர்மகன் சிதம்பரநாதமுதலியார். இவர்மகன் இராமலிங்கமுதலியார். இவர்மகன் விசுவநாதமுதலியார். இவர்மகனே தென்மராட்சி மணியகாரனாயிருந்து காலஞ்சென்ற (இராசவாசல்முதலியார்) சரவணமுத்து. இவர்மகள் வள்ளியம்மை. இவர்புத்திரனே மேலே காட்டியிருக்கும் அம்பிகைபாகர்.

கந்தர்;—இவர் புலோலியிலுள்ளவர். மடப்பளிவமிசத்தைச்சார்ந்தவர். இவர்மகன் தவசியார், மகன் ஆழ்வார், மகன் கந்தப்பர், மகன் ஆழ்வார். இவர்மகன் ஆறுமுகம்பிள்ளை. இவர் புத்திரர் 1. ஆழ்வாப்பிள்ளை, 2. சபாபதிப்பிள்ளை, 3. சிதம்பரப்பிள்ளை, 4. வயித்தியலிங்கபிள்ளை. பெண்மகார் மூவர். 1-ம், 2-ம், 4-ம் புத்திரர் திரிகோணமலையில் பெருங் காணிபூமியுடையராய், வியாபார சீர்த்திப்பிரதாபமுற்றவர்களாய், புலோலியிலும் பெருங் காணிபூமியாளராய் விளங்குகின்றனர். 3. சிதம்பரப்பிள்ளையென்பார் தமிழ், சம்ஸ்கிருதம் என்னும் இருபாஷைகளையுங் கற்றுச் சிலகாலம் ஆசிரியராயும், தற்போது மேலைப்புலோலிச் சைவப்பிரகாசவித்தியாசாலைக்கு மானேசராயும், மேலைப்புலோலிச் சைவபாலிகா பாடசாலைக்கு மானேசராயும் சொந்தக்காரராயும் விளங்குகின்றனர். தமிழ், சம்ஸ்கிருதமென்னு மிருபாஷைகளிலும் அரிய பெரிய காவியங்களையும், புராணேதிகாசங்களையும், இலக்கணநூல்களையுந் தேர்ந்தவர். பாடுஞ் சக்தியுமிவர்க்குண்டு. பத்தி நைட்டிகமும் புத்தி விவேகமும் தண்ணளிநேர்மையுமுடையவர். இவர் தந்தையாரான ஆறுமுகப்பிள்ளையே அல்வாய் வடக்கிற் கடற்கரையோரத்தில் விளக்கும் மடத்தையும், சுமைதாங்கி கூபம் முதலியவைகளையும் நிசழ

வைத்தவர். மேலைப்புலோலிச் சைவப்பிரகாசவித்தியாசாலைத் தாபகருள் சிரேட்டமானவர். தமிழில் இலக்கியவன்மையும், வைத்திய சோதிட நுண்ணறிவுமுடையர். பாட்டியற்றவும் இவர் சக்தியுடையவர். பத்திமான் எனப் பாராட்டப்படத்தக்க வோருத்தமகுணம்படைத்தவர்.

முத்துக்குமாரர்;—இவர் வட்டுக்கோட்டையிலுள்ள கிழக்கூரில் கனம்தனமகாத்திரங்கொண்டகுடும்பத்தைச் சேர்ந்தவர். சாதியில் குமாரமடப்பளியார். இவர் சிறந்த தமிழ் வித்துவானும் புலவருமாக அதிக கணிசம்பெற்று விளங்கினர். கஞ்சன்காவியம், வலைவீசும்புராணம் என்னும் இரண்டுபாடல்களையும், வேறு சில நூல்களையும் இவர் இயற்றினர். பின்கூறப்படும் சுவாமிநாதர் இவருக்கு புத்திரர். பாடற்றிறமையைக் காட்டும்பொருட்டுக் கஞ்சன்காவியம் கடவுள் வாழ்த்தில் ஒரு விருத்தத்தை ஈண்டுத்தருகின்றேம்.

வெயிலேறிரத்னமகுடம்புனைக் தவியன்மிக்கசென்னியழகார்
மயிலேறியன்பரிதயத் துலாவிவருபத்மபாதமறவேன்
குயிலேறுபோகிதருமாதினேடுகுறமாதுதோயும்புயத்
தயிலேறுசெங்கைமுருகாமுகுந்தன்மருகாவரன்றன்மகனே.

சுவாமிநாதர்;—இவர் இலக்கண இலக்கியங்களில்மாத்திரமல்ல; சோதிடசாஸ்திரத்திலும் வல்லர். இவர் வட்டுக்கிழக்கிலிருந்த மேற்கூறிய வித்துவான் க. முத்துக்குமாரருக்குப் புத்திரர். வடக்காலியில் செட்டிகள்பகுதியில் சம்பந்தம்பண்ணினவர். கீர்த்திபெற்ற சண்முகச்சட்டம்பியாருக்குத் தந்தையார். இருபாலைச் சேனாதிராயமுதலியார் இவரிடம் இராமாயணப்பொருள் கேட்டவர். கவிபாடுவதில் திறமையுடையவராயிருந்தவர். நவாலியில் களையோடைக் கண்ணகையம்மாள் கோயிலிலே கிந்தப்புராணத்துக் குரைகூறப்போயிருந்தபோது, அங்குள்ள பற்றைக்குச் சமீபத்தில் கீரியும், பாம்பும், எலியும்விளையாடிக்கொண்டிருந்ததைக்கண்டு:

"மலியா ணவமலி மாய்கையை நீக்கி மலர்ப்பதத்தைத்
தெளியா தரவொடு தோத்திரஞ் செய்யச் சுகந்தருவாய்
எலியா டரவொடு கீரியொன் றாகி யினிதிசைந்து
கலியாண மாயுறை யுங்களை யோடையிற் கண்ணகையே.
என்றுபாடினரிவரே.

சண்முகச்சட்டம்பியார்;—இவர் வாழையடி வாழையாய்ப் பிதர் பாட்டன் முப்பாட்டன்தொட்டு வித்துவான்கள் வமிசத்தில் பிறந்தார். வடக்காலியில் செட்டிகள் பகுதியில் விவாகம்பண்ணியிருந்த சுவாமிநாதருக்குப் புத்திரர். இருபாலையிலிருந்த சேனாதிராயமுதலியார் மேற்படி சுவாமிநாதரிடத்தில் இரா

மாயணப் பொருள்கேட்டதற்குக் கைம்மாருக மகனுக்கு அதிகரிசனையோடு இலக்கண இலக்கியங்கள் கற்பித்தனர்.

இவர் அமெரிக்கமிசியோனரிமாரால் நடத்தப்பட்ட வட்டுக்கோட்டைச் செமினரியில் தமிழ்வித்துவானுகச் சிலவருஷங்களாயிருந்ததுமல்லாமல், மிஷனரிமாருக்கு ஒரு பண்டிதராகவுமிருந்து வேதபுஸ்தகத்தைத் தமிழில் மொழிபெயர்ப்பதில் விசேஷ உதவிசெய்தவர். சண்முகச்சட்டம்பியார் என்ற பெயராலேயே எங்கும்நன்கு அறியப்பட்டார். சாஸ்திரசாலையைவிட்டபின் அனேகர் கேள்விப்படி அளவெட்டி, மல்லாகம் முதலியவிடங்களில் மாணுக்கர்களைச்சேர்த்து இலக்கண இலக்கியம் கற்பித்து வந்தனர். இவர் நினைத்தவுடனே வெண்பாக்கள் பாடுகிறதில் வெகுநிபுணுயிருந்தார். கடைசியில் கிறீஸ்தமதந் தழுவி நதானியேல் என்றபெயருடன் ஞானஸ்நானம்பெற்றுர். 1849-ம் ஷு தை மீ 62-ம் வயதில் பரலோக பிராப்தியுற்றுர்.

சில்லாலை வைத்தியர் சந்தியாகுப்பிள்ளையின் கேள்விப்படி கன்னிமரியம்மாள்பேரில் உடனே பாடிக்கொடுத்த வெண்பாக்களில் ஒன்றை இங்கு தருகின்ருேம்.

"நெல்லாலை போல்வளரு நீர்ப்பண்ணை சூழ்ந்திலங்கும்
சில்லாலை யென்னுந் திருவூரில்—எல்லாரும்
போற்றுசரு வேசுரன்ருய் பொற்பாத தாமரையைப்
போற்று மனமே புகழ்ந்து."

இவருக்கு ஆண்மக்கள் இருவர். 1 கணபதிப்பிள்ளை. இவர் இலங்கைப்பகிரங்கவேலைப்பகுதியில் அனேகவருஷம் உத்தியோகமாயிருந்து, கடைசிவரைக்கும் சுத்தசைவனுயிருந்துமரித்தார். இவர் மகன் வெற்றிவேலுப்பிள்ளை சிங்கப்பூர்ப் பகுதியில் வேலையாயிருக்கின்றனர். 2 சுப்பிரமணியர் (கனம். நதானியேல்போதகர்.) இவர் சண்டிப்பகுதியில் சிலவருஷங்களாய் அரசாட்சி உத்தியோகத்திலிருந்து வாலிபனுயிருக்கும்போதே கிறீஸ்தமதந் தழுவினுர். கோப்பாயில் சிறந்த குருத்தொழில் நடாத்திய கனம். கென்ஸ்மன் (முருகேசர்) போதகருடைய இரண்டாம்புத்திரி பாக்கியம்மாளை விவாகஞ்செய்தார். தேவ ஊழியத்துக்கென்று தம்மை ஒப்புக்கொடுத்து மானிப்பாய்ச்சபைக்குப் போதகராக அனேகவருஷம் கடமைபார்த்து, இப்போது தன் சொனஸ்தானமான அராலியிலேயே குருவாயிருக்கிறுர். இவர் பிள்ளைகள் 1 அல்விறெற் முத்துநாயகம் பி. ஏ. இவர் சிலவருஷங்களாய்க் கண்டியில் திறினிற்றிக் கல்லூரியிலும், திரும்ப அனேகவருடங்களாய்ச் சுண்டிக்குழிக் கலலூரியிலும். ஆசிரியராயிருந்து தற்காலம் கோப்பாய் அங்கிளவித்தியாசாலைக்குத் தலைவராயிருக்கிறுர். இவர் தன் மாமனுர் சாமுவேல் தம்பையாசெ

ன்ஸ்மன் என்பவருடைய மகள் சற்குணம்மாளை விவாகஞ்செய்தனர். 2 குணரத்தினம். இவர் சிதாரிக் கிறிஸ்தஆலயத்துக்குக் குருவாயிருந்து, இப்போது கண்டிப்பகுதிக்கு உத்தியோகம் மாறிப்போயிருக்கின்றார். 3 தம்பிரத்தினம். இவர் தபாற்கந்தோர்ப்பகுதியில் உத்தியோகமாயிருக்கின்றார்.

முதல்மனைவி இறந்துபோனபடியால் மறுபடியும் விவாகஞ் செய்துபெற்ற ஆண்பிள்ளைகள் 1 வேதையா இலங்கை றெயில்வே உத்தியோகமாயிருக்கிறார். 2 நல்லையா இவர் கல்குத்தா பி. ஏ. பட்டம்பெற்று, கொழும்பில் சந்தோமஸ் கல்லூரியில் கணிதசாஸ்திர ஆசிரியராய்ப் பலவருடங்களாய்விளங்கி, சென்ற வருஷம் வெள்ளவத்தையில் ஒரு றெயில்அபாயத்தால் சடுதிமரணமடைந்தார். 3 செல்வநாயகம். இவர் கொழும்பில் வைத்திய கல்லூரியில் படிக்கிறார்.

வாரிநிற்சிங்கச் சேனாதிராய முதலியார்:—இவர் உடுப்பிட்டிவெள். இவர் அச்சுவேலி இறசுவர். இவர் மகன் வினாசித்தம்பி. இவர் மனைவியார் மீனாச்சிப்பிள்ளை. இவர்புத்திரி கோப்பாய் வேலாயுதர் மனைவியார் சின்னஉடைச்சி. இவர் புத்திரி கந்தரோடை முத்துக்குமாருபெண் வள்ளியம்மை. இவர்பிள்ளைகள் 1 கந்தரோடை முத்துக்குமாரு கந்தையா. 2 முத்துக்குமாரசூரியர் மனைவியார் மீனாச்சிப்பிள்ளை. சேனாதிராயமுதலியாரின் ஒருமகள் வேதநாயகி அல்லது குட்டிப்பிள்ளை. இம்மாதுசிரோம்மணியைமணந்தவர் உடுப்பிட்டி அத்திமாப்பாணர் கதிர்காமமுதலியார்மகள் (கந்தையாமனைவி) மீனாச்சிப்பிள்ளையின் மகன் இராமலிங்கம். இவர் புத்திரன் கந்தையா. இவர் விவாகஞ்செய்தது, கரணவாய் வெள். நிச்சிங்க நல்லமாப்பாணமுதலியார்மகன் சிதம்பரநாதரின் மகன் வல்லிபுரநாத உடையாரின் மகள் வள்ளியம்மைப்பிள்ளையை. இவர் பிள்ளைகள் 1 இராமலிங்கம், 2 செல்லையா. 3 வல்லிபுரநாதர் இமையாணன் குறிச்சி விதானை. 4 (பெண்) தில்லைநாயகம். 1 இராமலிங்கம் இவர் விவாகஞ்செய்தது, கரணவாய் கதிர்காம நிச்சிங்க உடையார் மகன் சுப்பிரமணியம் அல்லது கைப்பித்தா உடையாரின் மகன் வல்லிபுரம் (விதானை) மகள் கதிராசிப்பிள்ளையையும், இம்மாது இறந்தபின் துவிதியமணமாய் இவர் சகோதரி தெய்வானைப்பிள்ளையையும். கதிராசிப்பிள்ளையின் பிள்ளைகள் பிறக்ராசம் கொத்தாரிசுமாய் விளங்கும் 1 தாமோதரம்பிள்ளை. பொன்னம்பலம் கைம்பெண் 2 வள்ளியம்மைப்பிள்ளை. 3 கரணவாய் வடக்கு விதானை தம்பையா வேலுப்பிள்ளை மனைவியார் மரகதப்பிள்ளை. தெய்வானைப்பிள்ளையின் பிள்ளைகள் 1 அப்புக்காத்துக் கந்தையா, 2 கதிர்காமத்தம்பி, 3 செல்லப்பா, 4 சுப்பிரமணியர் மயி

வாகனம். மனைவியார் கதிராசிப்பிள்ளை. 5 சரவணமுத்துக் குமாரசூரியர் மனைவியார் செல்லாச்சிப்பிள்ளை. 6 தில்லைநாயகம். 1 பிறக்றர் தாமோதரம்பிள்ளை விவாகஞ்செய்தது, காலஞ்சென்ற கரணவாய் உடையார் சிவகுருநாதர் புத்திரி பெரியநாச்சிப்பிள்ளையை. இவர் புத்திரர் 1 இராமலிங்கம், 2 சிவகுருநாதர். பெரியநாச்சிப்பிள்ளை சிவபதமடைந்தபின் இவர் துதியமணமாய்க் காலஞ்சென்ற கைதடிநொத்தாரிசு நிச்சிங்கத் திருவம்பலமுதலியார் மகள் பொன்னர் வன்னிச்சியை விவாகஞ்செய்தனர். இவர்மகள் தில்லைநாயகி.

1 அப்புக்காத்துக் கந்தையா விவாகஞ்செய்தது, அன்னையின் சோதரனை சிதம்பரநாதர் மகள் பொன்னம்மாவை. 3 வேலுப்பிள்ளை மனைவியார் மரகதப்பிள்ளை புத்திரி வள்ளியம்மைப் பிள்ளையை விவாகஞ்செய்தவர் உடுப்பிட்டி அருளம்பலமுதலியார் பீட்டனை கோப்பாய் (பிறக்றர்) அருளம்பலம் (பிறக்றர்) அம்பலவாணர்.

அத்திமாப்பாண கதிர்காமமுதலியார்:—இவர் உடுப்பிட்டிவெள். இவர் பிள்ளைகள் 1 அம்பலவாண முதலியார் பெண் வள்ளிநாச்சன். 2 சின்னத்தம்பி மணியம்பெண் சந்தர்ப்பிள்ளை. 3 கந்தையா பெண் மீனச்சிப்பிள்ளை. 1 வள்ளிநாச்சனின் பிள்ளைகள் 1 மயில்வாகன முதலியார், 2 அருளம்பல முதலியார், 3 மங்கைநாயகம். 2 அருளம்பல முதலியாரின் மகன் சின்னஅம்பலவாணர். இவர்பிள்ளைகளே I.J.P.U.P.M. மயில்வாகனம். 2 பிறக்றர் அருளம்பலம். 3 சுப்பிரமணியம். 4 வயித்திலிங்கம் மனைவி வள்ளியம்மை. 5 தாமோதரம்பிள்ளைமனைவிகதிராசிப்பிள்ளை. 6 நாகநாதமுதலியார்பெண் சேதுப்பிள்ளை. 1 மயில்வாகனத்தின் பிள்ளைகள் 1 காலஞ்சென்ற மாணிக்க மயில்வாகனம், 2 அப்புக்காத்து, மணியம் இரத்தினமயில்வாகனம். 3 முத்துமயில்வாகனம், 4 நாகலிங்கம் மனைவியார் பறுபதபத்தினியம்மா. 5 அப்புக்காத்து நா. சேனதிராசா மனைவியார் சிவக்கொழுந்தம்மா. 2 அருளம்பலத்தின் பிள்ளைகள் 1 பிறக்றர் அம்பலவாணர், 2 இராசரத்தின அருளம்பலம். 3 சுப்பிரமணியத்தின் மகன் சிவசுப்பிரமணியம். 4 வள்ளியம்மையின் பிள்ளைகள் 1 சண்முகசரவணமுத்து, 2 Dr. சுப்பிரமணியம்மனைவியார் சௌபாக்கியசுந்தரி, 5 கதிராசிப்பிள்ளையின் பிள்ளைகள் 1 சின்னத்தம்பி, 2 அம்பலவாணர். 6 சேதுப்பிள்ளையின் பிள்ளைகள் 1 அப்புக்காத்து சேனதிராசா. 2 கனகநாயகம் வங்குச்சிறுப்பு. 3 அப்புக்காத்து, மணியகாரன் இரத்தின மயில்வாகனம் மனைவியார். 3 மங்கைநாயகத்தின் மகன் நீதவான் அம்பலவாணர். இவர்பிள்ளைகள் 1 மயில்வாகனம் குமாரசூரி

யர் மனைவியார் மங்கைநாயகம். 2 மயில்வாகனர்தளை மனைவியார் கதிராசிப்பிள்ளை. மங்கைநாயகத்தின் பிள்ளைகள் 1 காலஞ்சென்ற முத்துக்குமாரசூரியர் மணியம். 2 சிவகுமாரசூரியர். 3 பிறக்றர் சதாசிவகுமாரசூரியர், 4 கச்சேரித் தலிதியமுதலியார் ஆறுமுகம் சரவணமுத்து மனைவியார் வள்ளியம்மைப்பிள்ளை. 1 முத்துக்குமாரசூரியர் மணியகாரனின் புத்திரன் சரவணமுத்துக்குமாரசூரியர்.

பாண்டிமழவன்;—இவர் வழித்தோன்றல் உடுப்பிட்டி 1 தாமோதரம்பிள்ளை முதலியார், 2 செபதுக்கமாப்பாணமுதலியார். 1 இவரே நல்லூர் மஞ்சத்தேரைச் செய்வித்துக் கொடுத்தவர். 2 இவர் மகன் சிதம்பரநாதர். இவர்மகார் 1 வல்லிபுரநாதர் உடுப்பிட்டி உடையார். 2 தாமோதரம்பிள்ளை. 1 வல்லிபுரநாதஉடையார் புத்திரிகள் 1 க. இராமலிங்கம் அன்னை வள்ளியம்மைப்பிள்ளை, 2 ..சாலைநொத்தாரிசு அப்பாக்குட்டிமனைவி தெய்வானைப்பிள்ளை. இவர்மகனே நெடுந்தீவு நொத்தாரிசுவாயிருக்கும் கந்தையா. மேற்படி உடையார் புத்திரர் 1 சுப்பிரமணியர் 2 செபதுக்கமாப்பாணர் 3 சின்னையா. 2 தாமோதரம்பிள்ளையின் புத்திரன் சிதம்பரநாதர். இவர்புத்திரர் 1 வேலுப்பிள்ளை 2 சின்னத்தம்பி 3 அருணாசலம் 4 சரவணமுத்து. புத்திரி கதிராசிப்பிள்ளை. 2 சின்னத்தம்பி புத்திரி 1 அங்கையற்கண்ணி 2 மங்கையர்கரசி 3 அஞ்சலை 4 சின்னத்தங்கம் 5 சிறீரங்கம். புத்திரர் 1 மயில்வாகனம் 2 பரந்தாமபிள்ளை. 1 அங்கையற்கண்ணி அம்மையை விவாகஞ்செய்தவர் காலஞ்சென்ற வலிகாமங்கிழக்கு மணியம் கனகசபைப்பிள்ளை. இவர் ஏகபுத்திரன் முத்துக்குமாரு. அங்கையற்கண்ணி அம்மை சிவபதமடைந்தபின் மேற்படி மணியகாரனே மங்கையர்க்கரசி அம்மையை 2-ந்தாரமாய் மணம்புரிந்தனர். 3 அருணாசலம் புத்திரர் 1 வேன்மயில்வாகனம் 2 தில்லையம்பலம் 3 வேதாரணியம் 4 குமாரசாமி 5 வன்னியசிங்கம். புத்திரி இராசம்மா. 4 சரவணமுத்து. இவர்புத்திரியே, இ. குட்டித்தம்பிமனைவி அன்னலட்சுமி.

மனுவேற்பிள்ளை இராசகாரியர்:— இவர் மாதோட்டத்திலும் மன்னார் முதலியார் குடியிருப்பிலும், பேரும் புகழும் பெற்று போர்த்துக்கீசர் காலத்திலும் ஒல்லாந்தர்காலத்திலும் அரசசன்மானமுற்று வாழ்ந்த அதிகாரிமாரின் வழித்தோன்றல், காரம்பனில்பிரசித்திபெற்ற மனுஷருளொருவராயிருந்த குத்தகைகாரன் சந்தியோகுப்பிள்ளையும் இவர்முன்னோர். இவர் பாட்டனகும் மாதோட்டத்து இராசேந்திரமுதலி, மாதகல் சந்திரசேகர

முதலியின் மைத்துனியை விவாகம்முடிக்க மாதோட்டத்திலிருந்து வரிசை விருதுகளோடு கொம்பன்யானையிலேறிக் கோலாகலத்துடன் வந்தாரென்பர். இவ்விவாகத்தால் இராசகாரியர்குடும்பம் மாதகலின் உயர்குலக்குடும்பங்களோடுறவுபூண்டதாயிற்று.

சமயத்திற் கத்தோலிக்கராகிய இவர் வாலவயதில் கத்தோலிக்க குருவானவர் ஒருவருக்குச் சிஷ்யராயமர்ந்திருந்து அவர் ஆசீர்வதித்துக்கொடுத்த சொற்ப பொருளை மூலதனமாகக்கொண்டு பலவகை வியாபாரங்கள் நடத்தி யாழ்ப்பாணப்பட்டணத்திலுள்ளாருள் அதிவிசிட்டம்பெற்ற தனவந்தனும் கண்ணியவானுமாய் விளங்கினர். ஐரோப்பிய சில்ப்பசாஸ்திரங் கல்லாதவராயினும் தம்மதியூகமொன்றினாலேயே தமக்கெனச்சமைப்பித்து முடித்த மெத்தைவீடும் "யூபிலி அவுஸ்" என்னும்மாளிகையும் சில்ப்பசாஸ்திர நிபுணர்களையும் அதிசயிக்கப்பண்ணத்தக்கவைகளாய் நகரமத்தியில் பிரகாசிக்கின்றன. தேவபயமும் மெய்ப்பத்தியும் நிரம்பக்கொண்டவர். இதனால் தமது பெருஞ்செல்வத்தைத் தமது சமயவிருத்திக்குரிய துறைகளிலும் ஏழை எளியவர்களைக் கைதூக்குவதிலும் வாரி இறைத்துக்கொண்டுவந்தனர். சம்பத்திரிசியார்கல்லூரி, யாழ்ப்பாணக் கத்தோலிக்க வாசிகசாலை என்னும் இருஸ்தாபனங்களும் இவரால் பெரிதும் ஆதரவுபெற்றவைகள். பட்டணத்தின்கண் விளங்கும் அடைக்கலமாதா கோயில், ஊர்காவற்றுறை தேவமாதா கோயில் முகப்புக்கள் இவர்பொறுப்பில் கட்டியெழுப்பப்பட்டன. முற்குறித்த ஆலயத்தின் கடைசி விழாக்கள் யாழ்ப்பாணத்திற் கத்தோலிக்க கோயில்களில எங்குமில்லா விமரிசையோடு இவரால் வருடாவருடம் நடத்தப்பெற்றன. இவராற் திரவியசாயம் பெற்று வாழ்க்கைப்பட்ட அனாத பெண்கள் பலர். பஞ்சம் கொள்ளைநோய்க்காலங்களில் இவர் குலம் சமயம் நோக்காது யாவர்க்கும் வழங்கிய தருமமோ அநந்தம்.

மனுவேற்பிள்ளை இராசகாரியர் நம்'அரசினராலும் நன்கு மதிக்கப்பெற்றவர். பதினொருமுறை உப்புக்குத்தகையும், எட்டுமுறை சாராயக்குத்தகையும்வாங்கிச் சர்வசன அங்கீகாரத்தோடு கவண்மேந்து உத்தியோகஸ்தரின் சன்மானத்தையும்பெற்றவர். வண, லிற்றன்சுவாமியார் யாழ்ப்பாணத்துக்கு றெயிற்பாதைதிறப்பிக்கும்படியாகஎடுத்துக்கொண்ட பிரதமமுயற்சியிலே இவரும் ஆன்னேருக்கு வலக்கை இடக்கையாகநின்றுதவியவர். எவ்வித பிரசித்த கொண்டாட்டக் கொம்மிற்றியிலும் ஓர் அங்கத்தவராய் நின்றவர். 1908-ம் ௵ பரமபதமடைந்தனர். இவர் மூத்தமகன் தோட்டத்துரையும், லோக்கல்போட்டின் முதல் அங்கத்தவருள் ஒருவராய் நின்றவருமான சவிரிமுத்து இராசகாரியர். இளையபுத்திரன் அத்வக்காத்து றேஜிஸ் இராசகாரியர்.

புத்தூர் மு. வேலாயுதபிள்ளை விதானையார்.—பல்வகைச்செல்வங்களாலும் நிறைந்து சிறந்து விளங்கும் புத்தூர்க்கிராமத்திலே கிழக்குப்பகுதியில் புராதன காலந்தொடங்கி விதானை உத்தியோகத்தைப் பரம்பரையாகப் பார்த்துவரும் பிரபல வமிசத்திலே கந்தப்பிள்ளை முருகேசபிள்ளை எனும் விதானையாருக்கும் காசிநாதர் புத்திரி ஆனந்தவம்மைக்கும் அருந்தவப் புத்திரராய் அவதரித்த இவர்; 1873-ம் ௵ சித்திரை ௴ 8ந் திகதியிலன்று கனந்தங்கிய சேர். உவில்லியம் குறப்றன் துவைனம் துரை அவர்களால் புத்தூர்கிழக்கு விதானையாக நியமிக்கப்பட்டுக் கடமைபார்த்து அரசாங்கத்தவராலும் ஏனையோராலும் நன்குமதிக்கப்பட்டவர்.

இவர் உத்தியோகக் கடமையைப் பார்த்துவருங்காலத்திலே புத்தூரிலிருந்து கொடிகாமத்துக்குப்போகுந் தெருவின் இருமருங்கிலும் பரோபகார காரணமாகத் தமது கிராமத்துக்குட்பட்டத் தஞ்செலவில்வைத்து உண்டாக்கிய நிழல்மரங்கள் தற்காலத்தில் எல்லார்க்கும் நல்ல பிரயோசனத்தைக் கொடுக்கக்கூடியனவாய் இருக்கின்றன. இவர் சிற்சிலகாலங்களில் அயற்கிராமங்களுக்கும் பதில்விதானையாகக் கடமைபார்த்தனர். இவருடைய தந்தையாராகிய கந்தப்பிள்ளை முருகேசபிள்ளை புத்தூர்கிழக்கு விதானையாக உத்தியோகம் பார்த்த அந்நாட்களில் தம் வீரதீரத்தின் பொருட்டு அரசினரால் நன்குமதிக்கப்பட்டுப் , பரிசுபெற்றனர். முன்னோர்காலத்திலே வரணியம்பதியைத் தமது செனனஸ்தானமாக உடையவரும் புதுவையம்பதியில் நீடித்தகாலம் வசித்து நற்செல்வமுற்றுப் பெரும்புகழ்பெற்றுவிளங்கிய வேளாளகுலதிலகருமாகிய கந்தப்பிள்ளை வேலாயுதபிள்ளை என்பவரே மேற்கூறிய கந்தப்பிள்ளைக்கு அரியபிதாவானவர்.

புத்தூர்க்கிழக்குக் கிராமத்தில் பதில்விதானையாகச் சிற்சிலகாலங் கடமைபார்த்த சிதம்பரப்பிள்ளை இராமலிங்கமென்பவரின் மாமனாரும், புத்தூர்க்கிழக்கு விதானையாயிருக்கும் இ. முத்துச்சுவாமி என்பவருடைய அரியபேரனுமாகிய இவர், தமது தந்தையாரைப்போலவே பெரும்பாலும் புண்ணியப்பயனை விரும்பியவர். இவர் நற்குண நற்செய்கைகளாற் சிறந்தவர்; இவர் தம்மூரில் ஓர் வைரவ ஆலயத்தை ஸ்தாபித்தவர். இவர் சிதம்பரம் திருவண்ணாமலையாதி சிவஸ்தலங்களிற்சென்று கடவுளைப் பத்தியுடன் வழிபட்டவர். இவர் எவர்க்குங் கிஞ்சித்தும் அஞ்சாத் திடகாத்திரமும் வீரமும் இரக்கமுமுடையவர்.

இன்னோரன்ன சிறப்புகளை உற்று விளங்கிய இவர் தம் 83—ம் பராயமான பிரமாதீச ௵ ஆடி ௴ 20-ந் திகதி (4–8–13) சோமவாரத்தன்றிரவு பூர்வத்திருதியைத் திதியும் பூரநட்சத்திரமுமொருமித்து நிகழ்ந்த சுபவேளையில் இவ்வுலக வாழ்வைநீத்துப் பரலோகப் பிராப்தி அடைந்தனர்.

மனப்புலிசிங்கமுதலி:—இவர்; தமிழரசர் வமிசத்திலுதித்து, மல்லாகப்பகுதிக்கு அதிபதியாகவிருந்தவரும், அதிகாரம்,செல்வம, செல்வாக்கு, அடிமை குடிமையாட்சிகளாற் சீர்த்தியுற்று விளங்கியவருமான தனபாலசிங்கமுதலி வழியிலுதித்தவர். இவர் மகன் வன்னிப்பற்றில் விவாகஞ்செய்து நாட்டாண்மை செலுத்திய மனப்புலிமுதலியார். இவர் மகன் கச்சாயில் விவாகஞ்செய்த கதிர்காமர். இவர் மகன் சுவாமி சுப்பிரமணியர். இவர் விவாகஞ் செய்தது; இணுவில் காரைக்கால் வேளாளன் இராமநாதர் மகன் கந்தப்பர் மகன் (சண்டிருப்பாய்) வேலாயுதர் புத்திரி சிதம்பரவல்லியை. இவர்க்குப்பிள்ளைகள் 1. சிறுப்பர் கதிரவேற்பிள்ளை, 2. முருகேசு, 3. சிறுப்பர் சின்னப்பர், 4. முத்துக்குமாரு, 5. தெய்வானைப்பிள்ளை.

இன்னோருட் சிறுப்பர் கதிரவேற்பிள்ளை தமது பதினாறும் வயதிலே கொழும்புக்குச்சென்று அங்குள்ள பழைய ஓறியன்றல் வங்கி, புதிய ஓறியன்றல் வங்கி, கொங்கோங் வங்கிகளின் சிறுப்பராக சுமார் 50 வருடம் வரையிலிருந்து உத்தியோகம் பார்த்து யாழ்ப்பாணத்துள்ளார் பலர்க்கு உத்தியோக உதவி செய்தவர். சிவாலயதர்மம், மடாலயதர்மம், வித்தியாதர்மம், கன்னிகாதர்மம் ஆதியவை செய்தலில் தற்கொப்பற்றவர். சிவபக்தி, சிவனடியார் பத்திகளிற் சிறந்தவர். கீரிமலையில் விளங்கும் பெரிய மடாலயத்தைத் தாபித்த புண்ணிய புருடர்.

இவர் முதல் விவாகஞ்செய்தது; முதமாலை வெள்-வன்னியநாதமுதலியார், கந்தர், கதிர்காமர், பாண்டியர், தில்லைநாதர், கந்தர், கணபதிப்பிள்ளை, முருகர், காசிநாதர் (மட்டுவில்) அருணாசலம் புத்திரி நாகம்மாவை. இவர்க்குப்பிள்ளைகள், (1) ஞானசேகரம், இவர் கொழும்பு நாஷனல் வங்கிச்சிறுப்பரும், வடமாகாணச் சமாதான நீதிபதியும், அட்டைஸ்வரிய பிரபுவுமாயுள்ளவர். (2) விசாலாட்சிப்பிள்ளை.

1– ஞானசேகரம் விவாகஞ்செய்தது; கண்டி மெக்கின்றயல் வங்கிச்சிறுப்பராகவிருந்து விளங்கிய (வட்டுக்கோட்டை) மாணு முதலியார், பூதத்தம்பி, சுவாமிநாதர், ஆறுமுகத்தார், சிறுப்பு மயில்வாகனம் புத்திரி நீலாட்சிப்பிள்ளையை. இவர் புத்திரர் 1. கொழும்பு நாஷனல் வங்கிச்சிறுப்பரும், சமாதான நீதிபதியுமான சண்முகம்; 2. விக்னராஜா. சண்முகம் விவாகஞ்செய்தது; கண்டி ஒறியன்றல் வங்கிச் சிறுப்பராகவிருந்த (சண்டிருப்பாய்) வயிரவநாதர், வீரசிங்கச் சிறுப்பர் புத்திரி விஜயலட்சுமிப்பிள்ளையை.

2– விசாலாட்சிப்பிள்ளையை விவாகஞ்செய்தது; இணுவில் போராயிரமுடையான் [illegible] யாரியுடை

யார், சோமநாதர், வன்னியசிங்கமுதலியார், பண்டிதவீரகர், பாலர், முருகேசு, முத்துக்குமாரு.

கதிரவேற்சிறுப்பர் தமது முதற்றார மனைவியார் 1864 ம் ஆடு இறந்துபோக, இரண்டாந்தாரமாக விவாகஞ்செய்தது; வட்டுக்கோட்டை வீரசேகரமாணூமுதலியார், பூதத்தம்பி, சுவாமிநாதர், ஆறுமுகம், அருணாசலம் புத்திரி தங்கமுத்துப்பிள்ளையை. இவர்குமாரனே கொழும்பு கொங்கோங்வங்கிச்சிறுப்பராய், இலங்கைமுழுவதற்கும் சமாதான நீதிபதியாய், கொழும்புத்துறைமுகச் சங்கத்தில் அங்கத்தவராக அரசினரால் நியமனம் பெற்றவராய், மேலும் அரசாட்சியாரின் பற்பல சங்கங்களுக்கும் அங்கத்தவராய், அட்டைஸ்வரிய பிரபுவாய், கொடைவள்ளலாய், அரசர் சன்மானமுடையாராய் இருந்து விளங்கும் நமசிவாயம்.

இலங்கையிலுள்ள தக்கார் பலரும் பணஞ்சேர்த்துக் கொழும்பிலுள்ள சிறுபிள்ளைகள்வைத்தியசாலையில் ஓர்பாகத்திலஸ்தாபித்திருக்கும் கட்டிடம் இவர்பேரிற் தாம் கொண்டிருக்கும் கண்ணியமான மதிப்பு, அன்பு ஆதியவற்றைக் குறிக்கும் பெரிய ஞாபக தாபகமேயாகும்.

இத்துணைச்சர்வ சிறப்புகள் வாய்ந்த இவர் விவாகஞ்செய்தது (உடுவில்) மதியாபரணமுதலியார், கெங்காகுலரத்தினமுதலியார், மதியாபரணமுதலியார், கனகசபைமுதலியார், காராளஉடையார், சின்னத்தம்பி சிவகுருநாதர் புத்திரி சின்னாச்சிப்பிள்ளையை. இவர்க்குப்பிள்ளைகள் 1. பத்மாவதி 2. கதிரவேலு ஸ்ரீநமசிவாயம்.

பத்மாவதியை விவாகஞ் செய்தது: முகமாலை இலங்கைநாதமுதலியார், கதிர்காமர், முத்தஉடையார், சிவகுருநாதர், நமசிவாயமுதலியார், பரிஸ்தர் தியாகராஜா, புத்திரன் பரிஸ்தர் ஜெகநாதன் தியாகராஜா.

கதிரவேற்சிறுப்பர் தமது இரண்டாந்தாரமனைவியார் 1866 ம் ஆடு சிவபதமெய்திவிட; மூன்றுவதாய் வட்டுக்கோட்டை மாணூமுதலியார் வமிசத்துதித்த சின்னத்தம்பியின் புத்திரி சீதேவிப்பிள்ளையையும், புங்குடுதீவு ஈசுரமூர்த்திச்செட்டி வழித்தோன்றலான அம்பலவாணச்செட்டி மகன் சங்கரப்பிள்ளை மகன் நல்லூர் சேதுநாதருக்கும், நெடுந்தீவு தனிநாயகமுதலி வழித்தோன்றலான மயில்வாகனம் மகள் வள்ளியம்மைக்கும் புத்திரியான சின்னப்பிள்ளையையும் விவாகஞ்செய்தனர். இன்னொருள் சீதேவிப்பிள்ளை புத்திரபாக்கியமில்லாதவராய் 1912 ம் ஆடு சிவபதமடைந்தனர்.

2— சின்னப்பிள்ளை. இவர்க்குப்பிள்ளைகள் (1) முத்துப்பிள்ளை. இவரை விவாகஞ்செய்தது, ஆனைக்கோட்டை முருகேசர், விசுவநாதர் புத்திரனும், இலங்கை றெயில்வேயில் பிரதம சிறுப்பராயிருந்தவருமான மதியாபரணம். இவர்க்குப் பிள்ளைகள் 1 கொழும்பில் கொம்மிஷன் ஏசன்ருகவிருக்கும் மானிப்பாய் எஸ். இராசையாவின் மனைவி சிவகாமிப்பிள்ளை. 2 கொழும்பு கொங்கோங் வங்கியில் இரண்டாஞ் சிறுப்பராகவிருக்கும் தியாகராஜா. 3 சண்டிருப்பாய் வாசரும் தென்னந்தோட்டச் சுப்பிறின்றனுமான அம்பலவாணரின் மனைவி கனகாம்பிகை.

(2) அபிராமிப்பிள்ளை. இவரை விவாகஞ்செய்தது, சண்டிருப்பாய் இராமனுதர், கார்த்திகேசர் புத்திரனும், யாழ்ப்பாண மண்ணெய்க்குத ஏசன்ருகவிருந்தவருமான மார்க்கண்டு.

(3) காமாட்சிப்பிள்ளை. இவரை விவாகஞ்செய்தது, சண்டிருப்பாய் பூலர், சீனியரின் புத்திரனும், கொழும்பு றெயில்வேயில் சிறுப்பராகவிருந்தவருமான சரவணமுத்துமுதலியார். இவர்க்குப்பிள்ளைகள் 1 டக்றர் சோமசுந்தரம், 2 சண்டிருப்பாய் தில்லையம்பலத்தின் புத்திரனும் டிஸ்திறிக்கு இஞ்சினீராகவிருப்பவருமான முத்துக்குமாருவின் மனைவி அன்னபூரணி. 3 நடராஜா.

(4) வைத்தியலிங்கம். இவர் கொழும்பு றெயில்வேயில் இரண்டாஞ் சிறுப்பராகவிருந்தவர். இவர் விவாகஞ் செய்தது, சண்டிருப்பாய் சரவணமுத்து உடையாரின் புத்திரி நாகம்மாவை.

(5) ஆறுமுகம். இவர் கொழும்பு மோர்கன்குரிசிப்பிள் கொம்பனியின் புறேக்கராகவும், தம்சுயபொறுப்பில் சீமைவர்த்தகம் நடத்திவருபவராகவும், பிரபுசீலராகவும், சற்குணவள்ளலாகவுமிருந்து விளங்குகின்றார். இவர் விவாகஞ்செய்தது, சண்டிருப்பாய் தம்பர், கார்த்திகேசரின் புத்திரி பொன்னம்மாவை. இவர்க்குப் புத்திரிகள் 2.

(6) சிவயோகம். இவரை விவாகஞ்செய்தது, சண்டிருப்பாய் சரவணமுத்து, சின்னப்பாவின் புத்திரனும், குருநாக்கல் கச்சேரியில் முதலாஞ்சிறுப்பரா யிருப்பவருமான அம்பலவாணமுதலியார்.

இன்னோரன்ன பல்வகைச் சிறப்புகளும் வாய்ந்து விளங்கிய மேற்படி சிறுப்பர் தம்மால் கீரிமலையில் ஸ்தாபிக்கப்பட்ட நகுலேசசுவாமி தண்ணீர்ப்பந்தரில் அன்னதானம் முதலிய தருமங்களையெல்லாம் இடைவிடாது 28 வருடக்காலமாகச் சுகசேமத்துடன் இருந்து புரிந்து, தமது 94—ம் வயதாகும் பிங்

ஷ ௲௯௱ மார்கழி மீ 26 ந்த (9–1–18) புதன்கிழமை அபரப க்கச் சதுர்த்தசியும் அநுடநட்சத்திரமுங் கூடிய சுபவேளையிலே கிரிமலையிலே தம்மால் ஸ்தாபிக்கப்பெற்ற திருமடத்திலே சிவப் பிராப்தியடைந்தனர்.

தமாரர். மானிப்பாய்:—இவர் சோளதேசத்தினின்று வந்து குடியேறியவர். இவர் மகன் கதிர்காமர். இவர்மகன் மாதவ ராயமுதலியார். இவர்மகன் வேலாயுதர். இவர்மகன் வண்ணு ரபண்ணை சின்னக்குட்டிச் செட்டியார். இவர்மகன் நெடுங்கா லம் ஆசிரியராகவிருந்து இளைப்பாறிய சிவசிதம்பரம்பிள்ளை. இ வர் விவாகஞ்செய்தது, மானிப்பாய் குலசேகரமுதலியார்வமிச த்துதித்தவரும், பிரக்கியாதிபெற்ற ஆசிரியருமான வைத்திய நாதர் பேச் என்பவரின் புத்திரியை. இவர்க்குப் பிள்ளைகள் (1) இலங்கைப் புகைரதவீதி இக்கவுண்டன் இன்வோஸ் பிரத ம லிகிதர் சிவக்கொழுந்து. இவர் விவாகஞ்செய்தது, மானிப் பாய் சிறுப்பு அரியகுட்டியின் மகனும், அரசினர் உத்தியோக த்தினின்றும் இளைப்பாறியிருப்பவருமான சுவாமிநாதரின் புத் திரியை. இவர் புத்திரன் சிவஞானம்.

(2) கொழும்பு போட் ஞேட்ஸ் தோண்டன் அன் கம்ப னிப் பிரதமலிகிதரும், கொம்மிஷன் ஏச்சன்றும், நாஷனல் இந்தியன் இன்சுரன்ஸ் கொம்பனிப் பிரதம ஏச்சன்றும், இலங் கைச் சைவபரிபாலன சபையின் காரியதரிசியுமான தியாகரா ஜா. இவர் விவாகஞ்செய்தது, மானிப்பாய் பேச் ஆசிரியரின் முதலாம்புத்திரனும், கொழும்பு டேவிற்சன்கொம்பனிப் பிரத ம லிகிதராயிருப்பவருமான இராசரத்தினம் பேச் என்பவரின் புத்திரியை. இவர்புத்திரன் கணேசகுணம்.

கனகசிங்கமுதலியார் —இவர் துன்னாலையில்சீவித்தவரென்ப. இவர்மகன் நற்குணசிங்கமுதலியார். இவர்மகன் ஆனந்தபிள் ளை உடையார். இவர்மகன் கொற்றவுடையார். இதிலிருந்தே துன்னாலைத் தென்பகுதியைக் கொத்தார்மூலை என்பதென்பர். கொற்றர் சங்கிலியரசனுக்கோர் சேனாதிபதியா யிருந்தவரென் றும், ஆதலின் வெற்றி=வலி என்பதின் பரியாய மொழியா ன கொற்றர் என்னும் பொருளைக்கொண்ட பதத்தின் சிதைவே கொத்தர் என்று மிவர்சாரார் கூறுவர். கொற்றர் பவுத்திரர் துப்பாசி ஆறுமுகமாம். இவர்மகன் மூத்ததம்பி, மகன் வயிர வநாதர், மகன் முருகேசர், மகன் வேலாயுதர், மகன் மயில் வாகனம், மகன் வல்லிபுரநாதர், இவர்மகள் சின்னப்பிள்ளை. இம்மாதை மணமுடித்தது, கனகராயர் வல்லிபுரநாதர். இவர் மகனே தற்போது துன்னாலையின் பிரசித்த நொத்தாரிசுவாயி ருக்கும் (கந்தப்பு) வல்லிபுரநாதர். [அ. பு. கு. பு.]

குமாரசேகரமுதலியார்:—இவர் முல்லைத்தீவிலே உயர்தரச் சைவ வேளாண்மரபிலே உதித்தவர். இவர்மகன் வேலாயுத பிள்ளை. இவர் மகன் மயில்வாகனமுதலியார். இவர் நெடுங் காலமாய் இங்கிலீஷ் அரசாட்சியிலே கிராமமுதலியாராகவிரு ந்து பெரும்புகழ்படைத்தவர். இவரது அன்னையார் திரிகோ ணமலையில் வன்னியமரபைச்சார்ந்த சோமநாதவன்னியனார் கு மாரராகிய கந்தஉடையாரின் புத்திரி பார்பதிப்பிள்ளை. இவ்வி ருவருக்கும் 1 இரத்தினசிங்கமுதலியார் 2 கந்தப்பர், 3 கண பதிப்பிள்ளை என்னும் புத்திரரும், வள்ளியம்மைப்பிள்ளை என் னுமோர் புத்திரியும் உளராயினர். இவருள் தலைமகனாகிய இர த்தினசிங்கமுதலியார் முல்லைத்தீவுக் கிராமமுதலியாராக நெடு ங்காலமிருந்து நன் மதிப்புற்று இறந்தனர். 2 கந்தப்பர் ஓர் பி ரபல வைத்தியராகவிருந்தவர். வள்ளியம்மைப்பிள்ளை முள்ளி யவளைப்பகுதிக் கிராம முதலியாராக நெடுங்காலமிருந்து கால ஞ்சென்ற வன்னியசிங்கமுதலியார்க்கு அன்னையாம். 3 கண பதிப்பிள்ளை 1828-ம் ஆண்டு ஆவணி மீ 12 உபுதன்கிழமை பகல் ஜெனனமானவர். இவர் பலவிதகீர்த்திகளாலும் நிறைய ப்பெற்று ஓர் அவதாரபுருடனென்று யாரும் வியக்க இங்கிலி ஷ் தமிழ் என்னும் இரு பாஷைகளையுங்கற்று முல்லைத்தீவில் த பாலாபீசுக் கிளாக்காகக் கடமைபார்த்து வந்தவர். சகல லட் சணங்களும் அமையப்பெற்ற புனிதவதியாகிய முருகஉடையார் புத்திரி அகிலாண்டஅம்மை என்பாரை வதுவைசெய்தவர். 1858-ம் ஆண்டில் கோட்டில் உபதுவிபாஷிகராகவும், 1 60-ல் கச்சேரிச் சிறுப்பராகவும், 1864-ல் கச்சேரிப் பிரதமலிகிதரா கவும் உயர்த்தப்பட்டு உயர்ந்த வேதனம்பெற்றுவந்தனர். இவ ர் சிதம்பரம், சீகாழி, மதுரைமுதலிய திருச் சேத்திரங்களைப் பலமுறை தரிசித்துப் பணிந்த பெரும் பத்திவயிராக்கியமுடை யவர். முல்லைத்தீவிலுள்ள வீரகத்திப்பிள்ளையார்கோவிற் திரு ப்பணியை முடிப்பித்தவர். இவர்மனைவியார் அகிலாண்டஅம் மையார் சிவபதமடைய, இரண்டாந்தாரமாய் வேலாயுதர் புத் திரி சின்னப்பிள்ளை என்பாரை மணம்முடித்துப் பின் அரச சேவையினின்றும் உபகாரச்சம்பளத்துடன் இளைப்பாறி 1897 ம் ஆண்டில் சிவகதியடைந்தனர். இவர்க்கு முதற்றாரத்துப்புத் திரர் எழுவர். இவருள் மூத்தவர் தற்போது வவனியாவில் கி ராமக்கோட்டு நீதிபதியாயிருக்கும் செல்லையாபிள்ளை. 2 திரி கோணமலையில் சுகாதாரசங்க லிகிதராயிருக்கும் வல்லிபுரம்பிள் ளை. 3 நொததாரிசு மயில்வாகனம்பிள்ளை மனைவியார் பார்வ திப்பிள்ளை. 4 கணுக்கேணி இஞ்சினீர்க்கிளாக் ஆறுமுகம்பி ள்ளை. 5 முல்லைத்தீவுக் கச்சேரி உபதுவிபாஷிகராகிய அம்பல வாணபிள்ளை. 6 இங்கிலாந்துசென்று வைத்தியசோதனையில்

சித்திபடைந்து சகலராலும் நன்குமதிக்கப்பெற்று, மட்டக்களப்பு புளியந்தீவு அரசாட்சி வைத்தியசாலையில் டக்றராய் விளங்கும் சிவசிதம்பரம்பிள்ளை. 7 சிவபதமடைந்த பொன்னுத்துரைப்பிள்ளை,

6. சிவசிதம்பரம்பிள்ளை விவாகஞ்செய்தது, இணுவில் பேராயிரமுடையான் வழித்தோன்றலான சந்திரவர் மகன் கதிர்காமர் மகன் மயில்வாகனம் மகன் முருகேசருக்கும், நவாலி இருமரபுந்துய்ய கதிர்காமமுதலியார் மகன் வன்னியசிங்க முதலியார் மகன் கதிர்காமர் மகன் வன்னியசிங்கமுதலியார் மகன் விஞசித்தம்பியார் புதல்வி காதலிப்பிள்ளைக்கும் புத்திராயுள்ள வட்டுக்கோட்டை துணவி வாசரான டக்றர் கைலாயபிள்ளை அவர்களுக்கும், பெரியதம்பியார் மகன் இஞ்சினீர் சபாபதிப்பிள்ளை மகள் அல்லமேல் அம்மையார்க்கும் இரண்டாம்புத்திரியான திரிபுரசுந்தரி அம்மையை.

மேற்படி டக்றர் கைலாயபிள்ளையவர்களின் முதலாம்புத்திரி பகவதிஅம்மையை விவாகஞ்செய்தது, இச்சரித்திரத்தில் முன் காட்டப்பட்டிருக்கும் பேராயிரமுடையான் வழித்தோன்றலான பிறக்றர் பெருமாள்பிள்ளை.

மூன்றும்புத்திரி இரத்தினம்பாளை விவாகஞ்செய்தது, அராலி இரகுநாதர், கொற்றர், ஐயம்பிள்ளை. (வண்ணை)

சின்னையாமகன் டக்றர் துரையப்பாபிள்ளை. இவருடன் பிறந்தோர், வண். தாமோதரம்பிள்ளை, சபாபதிப்பிள்ளை மனைவி முத்துப்பிள்ளை. வோறஸ் டிப்பாட்மென்றுக் கெற்கிளாக்கு கனகரத்தினம், றிச்சிஸ்றூர் ஆபீசில் வேலையாயிருக்கும் சபாரத்தினம், வண். மேற்கு உடையார் ஐயம்பிள்ளை, கொழும்பு ரேகில் வேலையாயிருக்கும் மாணிக்கவாசகர்.

உலகநாவல முதலியார்:—இவர் கனதனமும் செல்வாக்கும் அதிகாரமும்படைத்த காரைக்கால் கார்காத்த வேளாண் பிரபு. இவர்வழித்தோன்றல் வண்ணார்பண்ணை அம்பலவாணபிள்ளை. இவர்மகன் நொத்தாரிசு சீனிவாசகபிள்ளை. இவர் விவாகஞ்செய்தது, உடுவில் வன்னியனார் வமிசத்திலுதித்த அருளம்பல முதலியார்வழியிலுள்ள பார்பதிப்பிள்ளையை. இவர் புத்திரன் தம்பையாபிள்ளை. இவரே பறங்கிக்காரரால் இடிபட்டிருந்த புராதன ஆலயமாகும் ஸ்ரீசட்டநாதசுவாமி, அல்லது நல்லைநாதசுவாமி கோவிலைப் புதுக்கிக் கட்டுவித்துக் கும்பாபிஷேகஞ்செய்வித்தவர். இவர்புத்திரன் சிவப்பிரகாசபிள்ளை. இவர் மானிப்பாயில் டக்றர் கிறீன்பாதிரியாரிடம் அங்கில வைத்தியங்கற்று,

யாழ்ப்பாணத்தில் அங்கில வைத்தியத்திலும் தமிழ் வைத்தியத்திலும் பிரபல கீர்த்திபெற்று விளங்கியவர். இவர்புத்திரரோ (1) தற்போது நியாயதுரந்தரராய்ச் சாதுரியகுணம்பூண்டு விளங்கும் பிறக்றர் தம்பையாபிள்ளை. (2) டக்றர் சின்னத்தம்பியாபிள்ளை. (3) தற்போது ஊர்காவற்றுறையிலே ரேகுத்துரையாகவிருக்கும் அருணாசலம்பிள்ளை செல்லப்பாபிள்ளையின் மனைவி மீனாட்சியம்மா. (4) மேற்படியாரின் துவிதியமனைவி இராசலட்சுமியம்மா. (5) செல்லப்பாபிள்ளை கதிர்காம வன்னியனாரின் மனைவி அன்னபூரணியம்மா. (6) நியாயதுரந்தரர் இராமலிங்கம் சிவகுருநாதரின் மனைவி விசாலாட்சியம்மா.

(1) பிறக்றர் தம்பையாபிள்ளை. இவரே தமது முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பெற்ற நல்லைநாதசுவாமி கோவிலின் திருப்பாணிவேலைகளைக் குறைவின்றி முடிப்பித்து, அவ்வுரிமைகளைத்தையும் தம் தலைமேற்கொண்டொழுகுபவர். இவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் தனதிகாரியாகவும், யாழ்ப்பாண வர்த்தகசங்க சக்கிடெத்தாராகவும், கொம்மேஷல் கொம்பனியின் டிறெக்றராகவுமிருந்து விளங்குபவர். யாழ்ப்பாணம் லோக்கல் போட் அங்கத்தவராயுமிருந்தவர். இவர் விவாகஞ்செய்தது, புத்தூர் சிற்றம்பலம் முத்துச்சுவாமிப்பிள்ளையின் புத்திரி சிவகாமிப்பிள்ளையை. இவர்க்குப் புத்திரர் 1 நல்லைநாதபிள்ளை, 2 முத்துச்சுவாமிப்பிள்ளை, 3 சிவப்பிரகாசபிள்ளை.

மேற்கூறிய கொத்தாரிசு சீனிவாசகம்பிள்ளையின் சகோதரர் சிதம்பரப்பிள்ளை. இவர்மகன் வயித்தியலிங்கம் பிறக்றர். இவர் சகோதரி சின்னாச்சிப்பிள்ளையை விவாகஞ்செய்தது, வண்ணார்பண்ணை சோமசேகரம்பிள்ளை. இவரோர் சோதிடநிபுணராயிருந்து திரியாங்கம் என்ற சிறியபுத்தகத்தை வெளிப்படுத்தியவர். இவர்மகன் மயில்வாகனம். இவர் வல்லுவெட்டித்துறையிலே ரேகுத்துரையாயிருந்தவர். இவர் விவாகஞ்செய்தது, மேற்படி நியாயதுரந்தரர் வயித்தியலிங்கத்தின் புத்திரியை. இவரின் புத்திரி பார்பதிப்பிள்ளையை விவாகஞ்செய்தது, (நியாயதுரந்தரர்) பிறவுன் சின்னத்தம்பியார் மகன் துரையப்பா. இவர் புத்திரியை விவாகஞ்செய்தது, சீனிவாசகர் மகன் கந்தையா பிறக்றர்.

மேற்படி சீனிவாசகபிள்ளை மகன் தம்பையாபிள்ளை விவாகஞ்செய்தது, மாண முதலியார் வழியினரான சின்னாச்சிப்பிள்ளையை. இம்மாதரசியின் மைத்துனரே மலையாளத்தில் சுப்பிரீங்கோட்டு நீதிபதியாயிருந்த (மலையாளம் ராசா) தாமோதரம்பிள்ளை செல்லப்பாபிள்ளை. 2 எக்சைஸ் கொம்மிஷனர் பொன்னம்பலபிள்ளை. மேற்படி சின்னாச்சிப்பிள்ளையின் புத்

திரமே மேற்கூறிய டக்றர் சிவப்பிரகாசபிள்ளை. 2, சிவசம்பு. சிவப்பிரகாசபிள்ளை விவாகஞ்செய்தது, மேற்கூறிய மானாமுதலியார்வழியிலுள்ள அம்பிகைபாகர் வீரவாகுமகள் சிவக்கொழுந்தம்மையை. இப்பெண்மணி பிரபல கீர்த்திபெற்று விளங்கிய அப்புக்காத்து நாகலிங்கம் அவர்களுக்கும், பிறக்றர் கதிரைவேற்பிள்ளையவர்களுக்கும் சகோதரி.

விசுவநாதமுதலியார்:— இவர் திருக்கோவலூர் வேளாளன. பேராயிரமுடையான்வழித் தோன்றலாய் விளங்கியவர். இவ்வழியில் அரசவி விசுவநாதமுதலியார், குழந்தைவேலுமுதலியார், விசுவநாதமுதலியார், இராசசூரிய செகதலைவ முதலியார், கொற்றவுடையார், விசாசித்தம்பியுடையார் புத்திரரான கார்த்திகேசர், (தீவுப்பற்றுமணியம்) அம்பலவாணமுதலியார் இவர்கள் அன்பார்ந்த அரிய சகோதரி சிதம்பரவல்லியை அரிய அன்னையாயும், மேற்படி பேராயிரமுடையான் 13-ம் தலைமுறையினரான (ஆனைக்கோட்டை) ஆறுமுகம், (வட்டுக்கோட்டை இருமரபுந்துய்ய அருளம்பலமுதலியார் மகளை விவாகஞ்செய்தவர்) விசாசித்தம்பியை அரியதந்தையாயும் கொண்டவர் தீவுப்பற்று மணியகாரனயிருந்து காலஞ்சென்ற முத்தையாபிள்ளை. இவர் சகோதரர் 1 ஆறுமுகம், 2 சங்கரப்பிள்ளை, 3 பார்வதி, 4 தையல்நாயகி.

1917-ம் ஆண்டு காலஞ்சென்ற மேற்படி முத்தையாபிள்ளை மலையாளத்தில் அரசாட்சிப்பகுதியில் பெருங் கொந்திறத்து வேலைகளையெடுத்து, நேர்மையாயும், விவேகமாயும், சுறுசுறுப்பாயும் தம் வேலையைமுடித்து அரசாட்சியாரால் நன்மதிப்படைந்தவர். அங்கிளம், தமிழ் என்னும் இருபாஷைகளிலும் நல்லறிவும், மார்க்க பத்தி நைட்டிகமுமுடையவர். விகலஞ்சமென்பதைக் கனவிலும் வெறுக்கும் பெருங் குணமுடையவர். இக்குணத்தை வியந்து இவர் சரமகவியில் ஓர்புலவர்கூறிய ஒரு கவியையும் இங்கே தருகின்றேம்.

"இக்கா சினியி னிருஞ்செல்வத் துற்றவுத் யோகந்தருங்
கைக்கூலி வாங்கு மியல்பு சகசங் கருதிலென்ப
எக்கா ரியத்தினு மோர்துட்டும் வாங்கா விபல்பதனின்
மிக்காய்மணிய மிதுவியப்பென்கொனின் மேதகைக்கே"

இவர் 1891-ம் ஆண்டு தீவுபற்று மணியவேலையைக் கையேற்று, தண்ணளி நேர்மைகாட்டி எவருந்துதிக்க 26 வருடம் நடப்பித்தவர். அம்பலவாணமுதலியார் சிதம்பரவல்லி என்னும் மாதுசிரோமணிக்கு நாயகர். இவர் புத்திரர் சோமசுந்தரம்பிள்

ளை. புத்திரி இலட்சுமிப்பிள்ளை. சோமசுந்தரம்பிள்ளையே தந்தையார்போல் நீவுப்பற்றுமணியமாயினர்.

மழவராயமுதலியார்அல்வாய்—இவர்மகன் கதிர்காமர், மகன் வேலாயுதர், மகன் சங்கரப்பிள்ளை, மகன் வல்லிபுரநாதர். வல்லிபுரநாதர் விவாகஞ்செய்தது முகமாலை சேதுகாவலமுதலியார் அம்பலவாணர் தியாகராசா அம்பலவாணர் சிலம்பாபிள்ளைர்மகள் வள்ளியம்மையை. இவர் மக்கள் 1. சின்னப்பிள்ளை 2. கதிராசிப்பிள்ளை. 3. தின்னாலை சைவவித்தியாசாலை உபாத்தியாயர் சின்னத்தம்பி. 4. உவெஸ்லியன் மிஷனிற் போதகராயிருந்து காலஞ்சென்ற கதிரேசு, 5. வேலுப்பிள்ளை, 6. கந்தையா 7. தற்போது தின்னாலை தெற்கிற் பிரசித்தநொத்தாரிசுவாயிருக்கும் கணபதிப்பிள்ளை.

வயித்திலிங்கச்செட்டியார்:—இவர் அராலியிலே புராதனமான பூவைசியர் மரபிலுதித்தவர். வாழையடிவாழையாய் கனதனம், குலநலம் உத்தியோகம் முதலிய உயர்ச்சிகளுற்ற குடும்பத்திற்பிறந்து அரசினராலும், ஊரினராலும் நன்குமதிக்கப்பெற்றவர். விஜயதெய்வேந்திரமுதலிவமிசத்தில் மணமுடித்தவர். இவரதுமக்கள் 1. பெரியதம்பிச்செட்டியார் 2. சின்னத்தம்பிச்செட்டியார் 3. வழத்தாச்சி.

1. பெரியதம்பிச்செட்டியார் மகள் சிவகாமிப்பிள்ளை. இப்பெண்மணியின் புருஷன் கீர்த்திபெற்ற ஆறுமுகத்தம்பிரான். இவர்கள் புத்திரர் குமாரசுவாமிச்செட்டியார் சின்னத்தம்பிச்செட்டியார் சின்னக்குட்டிச்செட்டியார். புத்திரி முத்துப்பிள்ளை. இம்மாது முருகேசபிள்ளை உபாத்தியாயரை மணமுடித்தவர். இவர்கள் புத்திரர் ஸ்பென்சர் சபாபதிப்பிள்ளை (பிறக்றர்) விசுவநாதர் (உலாந்தா) சிவகாமிப்பிள்ளையென்போர். ஸ்பென்சர் நல்லூரில் நாகமுத்துச்செட்டியார் மகள் சின்னாச்சிப்பிள்ளையென்னும் பெண்மணியை விவாகம் முடித்தவர். இவர்நெடுங்காலம் ஊர்காவற்றுறைப் பொலிஸ்கோட்டில் பிரக்கிராசியாகவிருந்தவர். நேர்மையும், கபடின்மையும், ஆழ்ந்தயூகமும் குன்றாதமுயற்சியும், சுசீலவொழுக்கமும், புருஷ லக்ஷணங்களும் நன்கமையப்பெற்றவர். தற்காலம் யாழ்ப்பாண லோக்கல்போட் இன்ஸ்பெக்ரர் ஆகவிருக்கும் செல்லத்துரை ஸ்பென்சர், செறம்பானில் தமிழ் இன்றெப்பிறிற்றாகவிருக்கும் பொன்னையா, தொடுவாய்ப்பகுதியில்இஞ்சினீராகவிருக்கும் இராசையா முதலியோர் இவர்புத்திரர். சிவகாமிப்பிள்ளை சண்முகம் கிறிஸ்மஸ் (போதகரை) மணமுடித்தனர். இவர் புத்திரர் செல்லையா கிறிஸ்மஸ், கனகரத்தினம் கிறிஸ்மஸ் (புறோக்கர்) விஜயரத்தினம் (சென்றிறல்கொலீஜ் மனேச்சர்) ஆதியோர். வடபகுதித் தந்தி இ

ன்ஸ்பெக்றராகவிருந்த க. முத்துக்குமாரு என்பவர் இவரது புத்திரி இராசம்மாவை மணமுடித்தவர். ஷடி விசுவநாதர் மக்கள் முருகேசபிள்ளை (உபதேசியார்) முதலியோர்.

2. சின்னத்தம்பிச்செட்டியார். இவர்மக்கள் வயித்திலிங்கச்செட்டியார், இராமுப்பிள்ளைச்செட்டியார் (பெக்காஸ்) புவனப்பிள்ளை, சின்னாச்சிப்பிள்ளை என்போர். இராமுப்பிள்ளைச்செட்டியார் பெக்காஸ் என்னும் மறுநாமத்தால் அறியப்பட்டவர். அராலியில் பிரசித்திபெற்ற சுதேசவைத்தியராய் விளங்கினவர். இவரது மக்கள் தம்பையா பெக்காஸ் (போதகர்) ஐயாத்துரை பெக்காஸ் (போஸ்ற் மாஸ்ரர்.) செல்லம், பொன்னம்மா, அன்னம்மா என்பவர்கள்.

தம்பையா பெக்காஸ் உடைய மகளை மணமுடித்தவர், டக்றர் இரத்தினம். செல்லத்தைமணமுடித்தது இந்தியாவில் பொலிஸ் இன்ஸ்பெக்றராகவிருந்த கார்த்திகேசபிள்ளை. இவர்கள் புத்திரர் மேற்குறித்த டக்றர் இரத்தினம், இராசம்மா, தங்கம்மா என்போர். இராசம்மாவின் மணவாளன் மானிப்பாய்வாசரான இராசகோபாலபிள்ளை (மூடி) யென்பவர். பொன்னம்மாவை மணமுடித்தது, கீர்த்திபெற்ற சின்னத்தம்பியாபிள்ளை. இவர்கள் புத்திரர்: சோமசுந்தரம், ப்வளம், கண்மணி, ஆச்சிமுத்து முதலியோர். சோமசுந்தரம் கல்லூர் பெண்போடிங் பாடசாலைத் தலைமை உபாத்தியாயினி கனகம்மாவுடைய மகள் பரிமளத்தை மணமுடித்தவர். சின்னாச்சிப்பிள்ளையை மணமுடித்தவர் வண்ணார்பண்ணையில் பிரசித்திபெற்ற காசிநாதச்செட்டியார் மகன் நாகமுத்துச்செட்டியார்.

லாசறஸ் மூத்ததம்பி, பீற்றர் செல்லப்பா என்னுமிவர்கள் சமேரியா என்னும் மேற்றிராணியார் காலத்தில் கிறீஸ்தவர்களாகி முன்னையவர் உபாத்தியாயராய் விளங்கினவர். ஓனியல் என்னும் மறுநாமம்பெற்ற இவர், அட்மிறல் கப்பல் அதிகாரியாயிருந்த ஆராட்சி தம்பருடையமகளை முதற்றாரமாகவும், கொக்குவில் குலசேகரமுதலிவழித் தனையை அரியற்றென்னும் பெண்மணியை இரண்டாந்தாரமாகவும் மணம்முடித்தவர். கம்பளையில் எஸ்ரேற் கிளாக்காகவும், கண்டக்றாகவுமிருக்கும் ஓனியல் மூத்தையாவென்பவரும், செல்வநாயகத்தின் பிரியை அன்னம்மாவென்னும் பெண்மணியும் இவரது தனையர்.

பீற்றர் செல்லப்பா. இவர் பொஞ்ஜீன் குரவரால் முதன் முதல் யாழ்ப்பாணத்திலிருந்து கல்விபயிற்றற்காய், பிராஞ்சு தேசத்திற்கு அனுப்பப்பட்ட சுதேசிகள் நால்வருள் ஒருவர். நான்குவருடங்களாய்ப் பிரான்சிற்றங்கி, பிரான்சியம், லற்றீன்

முதலிய இதரபாஷைகளைக் கற்றவர். சாவகச்சேரியில் ஆறுமுகம்பிள்ளையுடைய மகள் செல்லமுத்துவென்னும் பெண்மணியை மணம்முடித்தவர். கரவெட்டிக் கத்தோலிக்க மத்திம பாடசாலைத் தலைமை ஆசிரியராகவும், சுதேசவைத்தியராகவும் விளங்கும் ஞானப்பிரகாசம், குளமங்கால் பிரதம உபாத்தியாயர் கனகரத்தினம் முதலியோர் இவரது தனையர். கொழும்பில் இளைக்காயிருக்கும் எற்மன் சிவலிங்கம் என்பவர், இவரது கனிஷ்ட புத்திரி செல்லம் பிறஞ்சிஸ்காவை மணம்முடித்தவர். புவனப் பிள்ளையை மணமுடித்தவர் பிரபலம்பெற்ற சண்முகச்சட்டயார்.

வயித்திலிங்கச்செட்டியார் மகள் 3 வளத்தாச்சியை மணம் முடித்தவர் முத்துக்குட்டிச் சட்டம்பியாரென வழங்கும் இராசரட்ணமுதலியார். அருணாசலச்சட்டம்பியார், ஐயம்பிள்ளைச்சட்டம்பியார் (கொச்சியர்), சண்முகச்சட்டம்பியார், முருகேசபிள்ளைச்சட்டம்பியார், முத்தம்பிச் சட்டம்பியார் என்போர் வாழையடிவாழையாய் இவர்கள்மரபிற்றோன்றிய வித்துவாமிசர்.

கனகராயமுதலியார்:— இவர் மயிலிட்டியிலுள்ளவர். உயர்தர வேளாண் பிரபுக்களுளொருவர். இவர்மகன் கருணாகரர். இவர் உரும்பராயிலுள்ளவர். இவர்மகன் மூத்ததம்பி. இவர்மகள் தங்கம்மா. இம்மாதரசியை வதுவைசெய்தவர், யாழ்ப்பாண இஞ்சினீர்க் கந்தோரில் பிரதம லிகிதராயிருந்து துரைமக்களாலும் பிரபுக்களாலும் நன்குமதிக்கப்பட்டுச் சிவபதமடைந்த (உவின்சிலோ) முருகேசு. இவர் புத்திரி வள்ளியம்மை. இவரை விவாகஞ்செய்தவர், நீர்வேலியிலே செல்வம் செல்வாக்கோடு பலராலும் மதிப்புற்று விளங்கிய சண்முகராசா மயில்வாகனம், மாசிமுத்து மகன் (இஞ்சினீர்) சண்முகம். இவர்மகனே தற்போது யாழ்ப்பாணத்தில் பிரபல ஞாபதுரந்தரராய்விளங்கும் M. S. இளையதம்பி.

மின்னர்;—இவர் காவிரியூர் வேளாளன். இவர் சோதரர் பொன்னர். இவர்கள் மாதகலிற் குடியேறி ஆண்டுச்செட்டிகள் வம்சத்தில் விவாகஞ்செய்தனர். இவர்மகன் செயதுங்கர், இவர்மகன் அம்பலவாணர், இவர் தமிழ் இலக்கண இலக்கியங்களிற் சிறந்தவோர் பண்டிதர். இவர்மகன் ஐயம்பிள்ளை. இவர் அராலியில் செட்டிக்குறிச்சியில் விவாகஞ்செய்தவர். இவர் மகனே (வோட்) வயித்தியலிங்கபிள்ளை. இவர் மலையாளத்திலே அரசாட்சிப்பகுதியில் ஓர் இஞ்சினீயர் உத்தியோகத்திலிருந்து சகல பிரபுக்களாலும் துரைமக்களாலுஞ் சன்மானிக்க

ப்பட்டவர். நெடுந்தீவு இருமரபுந்துய்ய தனிநாயகமுதலியார் பௌத்திரன் சின்னத்தனிநாயகமுதலியார் (வேலணை) ஆறுமுகம் குமாரவேலு புத்திரி கதிராசிப்பிள்ளையை விவாகஞ் செய்தவர். இவர் புத்திரரே தொடுவாய்ப்பகுதியில் இஞ்சினீராயிருக்கும் 1 விசயரத்தினம். யாழ்ப்பாணத்தில் நியாயதரந்தர சிங்கமாய் நேர்மைக்கிருப்பிடமாய் விளங்கும் 2 துரைசாமிப்பிள்ளை. 3 பொன்னுத்துரை இஞ்சினீர். 4 இரத்தினகோபால் இஞ்சினீர். 5 இராசகோபால் இஞ்சினீர். 6 பொன்னம்மா. இம்மாதரசியை மணஞ்செய்தவர், (செட்டி) தம்பிப்பிள்ளை ஓவசியர்மகன் பொன்னம்பலம்.

வயிரவநாதர்.— இவர் வண்ணார்பண்ணையைச்சார்ந்த கந்தர் மடத்திலேயுள்ளவர். ஒல்லாந்தரசர் காலத்திலே மணியகாரனாயிருந்தவர். இவர் சிவபுண்ணியாபிமானிகளிலொருவரென நன்குமதிக்கப்பட்டவர். இவர்மகன் ஆறுமுகம். இவர்மகன் (வயித்தியலிங்கம்) வயிரவநாதர். இவர் புத்திரர் 1 சின்னத்தம்பி, 2 ஆறுமுகம். இவர்கள் கண்டிப்பகுதியிலே பெரும் வியாபாரிகளாய் விளங்கினர். இவர்கள் சிவபுண்ணியசீலர்களாய்ச் சீவித்து, வண்ணை வயித்தீசுரன் கோயிலுக்கு மணிக்கூட்டுக்கட்டடத்தையும் பெரியமணியையும் செய்வித்தனர். பெருமாள் கோவில் திருமஞ்சனக் கிணறும், ஒருகாலப் பூசையும், கீரிமலைச் சிவன்கோவில் திருமஞ்சனக் கிணறும், மறவன் புலம் வள்ளக்குளப் பிள்ளையார்கோவில் மணியும் கட்டடமும், நல்லூர்க் கந்தசுவாமிகோவிற் திருப்பணிச் சகாயமாய் இந்தியாவிலிருந் தழைப்பிக்கப்பட்ட கருங்கற்களும், இந்துசாதன அச்சியந்திரமும், சிதம்பரத்தில் பிரதோஷ விழாவும், கண்டிச் செல்வவிநாயகர் ஆலய ரதோற்சவம், தண்டிகை உற்சவமும், கண்டிக் கதிரேசன் கோவிற் காலப்பூசையும், வண்ணை ஐயன் நீர்வாவிப்பிள்ளையார்கோவில் உச்சிக்காலப்பூசையும் இவர்கள் திரவியசகாயத்திலுள்ளன.

1 சின்னத்தம்பி. இவர் புத்திரரே தமிழ் இலக்கண இலக்கிய வல்லுநராயிருந்து சிவகதியடைந்த சிவகுருநாதபிள்ளை. இவர் புத்திரரே தற்போது ஞாயப்பிரமாண மாணவகனாய் B. A. பட்டம் வகித்து விளங்கும் குமாரசுவாமி.

2. ஆறுமுகம். இவர்புத்திரர் 1 பொன்னம்பலம், 2 மயில்வாகனம், 3 வயித்தியலிங்கம், 4 நடராஜா, 5 குழந்தைவேல், 6 தில்லைநாதர். இவர்களுள் முதற்புத்திரன் சிவபதமடைந்தனர். எஞ்சினோர் நன்னிலையடைந்து நன்மதிப்போடு சீவிக்கின்றனர்.

நரசிங்கமுதலியார்.— காராளகுலபதியான இப்பிரபு புங்குடுதீவில் வசித்தவர். இவர் மகன் முத்துஉடையார். மகன் அம்பலவாணஉடையார். மகன் பசுபதிஉடையார். இவர் புத்திரர் 1 வயித்திலிங்கஉடையார், 2 சுப்பிரமணிய உடையார், 3 முத்துவேலு. 1. இவர்புத்திரர், 1 அம்பலவாணர், 2 பசுபதிப்பிள்ளைவிதானை. 2. இவர்புத்திரர், 1 முத்ததம்பி, 2 தம்பிஐயா, 3 சின்னப்பு, 4 செல்லையா.

3. இவர் சரவணையில் கார்த்திகேசுவிதானைமகள் திருமேனிப்பிள்ளையை மணஞ்செய்தவர். இவர்புத்திரரே தற்போது சிலாங்கூர்ப்பகுதியில் ஓவசியராய் நன்மதிப்போடு விளங்கும் 1 பொன்னையா. உலுசிலங்கூரில் ஓவசியராயிருக்கும் 2 குமரையா. பெண்மகார் இருவர்.

Don Juam. சயம்புநாத முதலியார்.—இவர் உயர்குலப்பிரபுவாய், தேசவழமைப் பிரமாணத்தை யுண்டாக்கிய பன்னிருவரிலொருவராய் மாவிட்டபுரத்திலே வசித்தவர். இவர்க்கு கந்தப்பர், சின்னத்தம்பி என்று இரு புத்திரருளர். கந்தப்பர் பன்னாலையில் வசித்தவர். சின்னத்தபி என்பார்க்கு, கந்தப்பர், வேலாயுதர் என இருபுத்திரருளர். வேல்ாயுதர் என்பார்க்குப் பிள்ளைகள் ஆண் 5. பெண் 5. ஆண்மக்கள் 1 Bartlett வல்லிபுரம். இவர் இருபாலையில் வசித்தவர். 2 Dr. Macintyer நல்லதம்பி. 3 Hetchcock கார்த்திகேசு. இவர் உடுவிலில்வசித்தவர். 4 Philip மாரிமுத்து. இவர் அராலியில் வசித்தவர். 5 John கணபதிப்பிள்ளை. பெண்மக்கள்: 1 Knight இலட்சுமிப்பிள்ளை. இவர் இருபாலையில் வசித்தவர். 2 Edward பாறுபதிப்பிள்ளை. இவர் துணவியில் வசித்தவர். 3 Richaud சின்னாச்சி. இவர் சீதாரியில் வசித்தவர். 4 Arasavarbu சரசுவதி. இவர் நாவற்குழியில் சீவித்தவர். 5 வேலுப்பிள்ளை அன்னமுத்து. இவர் துணவியிற் சீவித்தவர். இவர்களுள்; பாட்லேற் வல்லிபுரத்தின் பிள்ளைகள், 1 தானியேல் பாட்லேற் டாக்குத்தர், 2 தம்பிராஜா பாட்லேற் சேவையர், 3 தம்பித்துரை பாட்லேற் போஸ்ற்மாஸ்றர், 4 தம்பையா பாட்லேற் பிறக்றர். மெக்கின்றையர் நல்லதம்பியின் பிள்ளைகள்; 1 செல்லம் போஸ்ற்மாஸ்றர், 2 தம்பையா டாக்குத்தர், 3 பொன்னையா டாக்குத்தர், 4 ஆச்சிக்குட்டி ஆபிரகாம், 5 செல்லம்மா ஜோட்சு, 6 பாக்கியம் பச்சைமுத்து, 7 தங்கம் குணரத்தினம். இலட்சுமிப்பிள்ளை நயிற்றின் பிள்ளைகள்: 1 முத்தையா நயிற், 2 தம்பிப்பிள்ளை நயிற், 3 இராசையா நயிற், 4 தங்கம் வைராக்கியம், 5 முத்தம்மா பொன்னையா, 6 செல்லம்மா இராமலிங்கம், 7 இராசம்மா பேரின்பநாயகம். பாறுப

திப்பிள்ளை விநாசித்தம்பியின் பிள்ளைகள்; 1 அரியகுட்டி, 2 தம்பிஐயா, 3 ஐயாத்துரை, 4 பூரணம்லீ, 5 தங்கம் வீரகத்தி (பேரதகர்), 6 பொன்னம்மா வேதக்குட்டி. சின்னாச்சி நிச்சேட்டின் பிள்ளைகள்; 1 பொன்னம்மா சுப்பிரமணியம் (பேரதகர்), 2 ஞானம்மா பாட்லேற், 3 ஆச்சிமுத்து பிபுவல், 4 பாக்கியம் மெக்கின்றையர், 5 அப்பையா (பேரதகர்), 6 தம்பியையா, 7 முத்தையா. சரசுவதிப்பிள்ளை இளையதம்பியின் பிள்ளைகள்; 1 கனகரத்தினம், 2 பொன்னையா ஆசீர்வாதம் (இன்ஸ்பெக்றர் போஸ்ற் ஆபீசு.) இற்சுகொக்கின் பிள்ளைகள்; 1 உவில்லியம், 2 கனகரத்தினம் (சேவையர்), 3 நேசரத்தினம் (கிளாக்), 4 அலிஸ் மிச்சேட், 5 பாக்கியரத்தினம் லீ (டாக்குத்தர்), 6 தங்கரத்தினம் (இலட்சுமணபுரி). அன்னமுத்து வேலுப்பிள்ளையின் பிள்ளைகள்; 1 சின்னத்தம்பு, 2 சிவரத்தினம், 3 நேசம்மா நாகலிங்கம். (புங்குடுதீவு)

மழவராயமுதலியார்.—இவர் பொன்பற்றியூர் வேளாளன் மழவன் வழித் தோன்றலாயுள்ளவர். மழவராய முதலியார் மகன் மாப்பாணர். இவர் மகன் கந்தர். இவர்மகன் மாப்பாணர். இவர் புலோலி சிங்கபாகுதேவ முதலியார்மகன் வேலாயுதர் மகன் (நல்லூர்) ஆள்வையினார்மகள் பார்பதிப்பிள்ளையை விவாகஞ்செய்தவர். அடிமை குடிமையாட்சியும் பலதனமாட்சியுமுள்ளவர். இவர்க்குப் பிள்ளைகள்; 1 தெய்வானைப்பிள்ளை, 2 தம்பு, 3 சபாபதிப்பிள்ளை முதலியார், 4 சின்னத்தங்கம், 5 அப்பாபிள்ளை, 6 குழந்தைவேல், 7 யாழ்ப்பாண ரேகுத்துரை சப்கலெக்றர் கனகசபைப்பிள்ளை, 8 கோபாலு, 9 ஆறுமுகம். 1. தெய்வானைப்பிள்ளையின் புத்திரி கண்டாக்கு மு. செல்லையாபிள்ளை மனைவி தங்கமுத்து. 2. தம்புவின் புத்திரன் பருத்தித்துறை ரேவில் வேலையாயிருக்கும் தம்பியப்பா. 3. சபாபதிப்பிள்ளைமுதலியார் புத்திரன்; சுப்பிறீங்கோட்டுப் பிறக்றரும் பிரசித்த நொத்தாரிசுமான சோமசுந்தரம், புத்திரி, மட்டுக்களப்பில் டிஸ்திறிக் நீதவானாய் விளங்கும் ஸ்ரீ. சி. குமாரசுவாமிஅவர்களின் மனைவியார் மங்கையர்க்கரசி. இவர்பிள்ளைகள் 1 இராசேந்திரன், 2 மகாதேவன். 4. சின்னத்தங்கம் பிள்ளைகள்; அனுராசபுரத்தில் நொத்தாரிசுவாயிருக்கும் ஆறுமுகம் மனைவி இராசரத்தினம்மா, கொழும்பில் P.W.D. கிளாக்காயிருக்கும் பெரியதம்பியின் மனைவி 2 நாகரத்தினம்மா, 3 புத்திரன் செல்வத்துரை. 5. அப்பாபிள்ளையின் பிள்ளைகள்; டக்றர் திருநாவுக்கரசும் இன்னுஞ்சிலரும். 6. குழந்தைவேலுவின் பிள்ளைகள்; மாப்பாணபிள்ளையும் சிலரும். 7. கனகசபைப்பிள்ளையின் பிள்ளைகள்; தையல்நாயகி, புனிதவதி, சிவசுப்பிரமணியம்.

**எதிர்வீரசிங்கமுதலியார்.**— இவர் வட்டுக்கோட்டையிலுள்ளவர். மகன் நிச்சிங்கமுதலியார். மகன் தலைவசிங்கமுதலியார்; மகன் (கைப்பித்தார்) எதிர்நாயகமுதலியார், மகன் அம்பலவாணர். இவர்பிள்ளைகள்; 1 அப்புக்குட்டி, 2 இராசேந்திரம், 3 சின்னப்பு, 4 செல்லப்பா. இவருள் அப்புக்குட்டியின் மகன் (குளஇஞ்சினீர்) இராசகாரியர். 2. இராசேந்திரத்தின் பிள்ளைகள்; 1 எதிர்நாயகம், 2 நிச்சிங்கம், 3 இலட்சுமணர், 4 மாணிக்கர். 3 சின்னப்புவின் பிள்ளைகள்: 1 முத்ததம்பி, 2 கதிரேசு, 3 ஆறுமுகம், 4 வேலுப்பிள்ளை. 4 செல்லப்பாவின்பிள்ளைகள்; 1 எதிர்நாயகம், 2 சின்னத்துரை, 3 சுப்பிரமணியம். இவர் இரண்டாந்தாரத்துப்பிள்ளைகள்: 1 இராசகாரியர், 2 கனகரத்தினம், 3 ஆறுமுகம், 4 இரகுப்பிள்ளை.

**பன்னுடம்பப்பெருமாள்.**—சுதுமலையில் உயர்தர வேளாண்பிரபுவாய் விளங்கிய இவர் இணுவில் பேராயிரமுடையான் வழித்தோன்றலாயுள்ளவர். இவர் மகன் கண்ணம்பர். மகன் ஐயம்பெருமாள். மகன் சிதம்பரநாதர். மகன் பெரியதம்பி. மகன் குமாரவேலர். மகன் சின்னத்தம்பியார். மகன் கதிர்காமர். மகன் முருகேசர். இவர் புத்திரரே P. W. D. ஓவசியர் 1. சின்னத்தம்பியார். இராசவாசமுதலியார் 2. சின்னையா. றெயில்வே ஸ்றேக்கீப்பராயிருந்து உபகாரச்சம்பளம் பெறும், 3. நன்னித்தம்பி. இவர்கள், தெய்வேந்திரமுதலியார், வன்னியசிங்கமுதலியார், குலநாயக முதலியார், எனவிளங்கிய கனவான்களின், ஏழாம் எட்டாந்தலைமுறையின் உரிமை பூண்டவர்.

☞ "பேராயிரமுடையான் இணுவிலினின்றும் மேலூரிற்போய்க் குடியேறினன்" என்பதிலிருந்து அதின் மேற்பாலுள்ள சுதுமலையின் எப்பாலாரும் இக்கேவசித்தார், எக்களுக்குரிமையுடையார், எனத் துணிவது பொருந்தாது. அக்காலத்தில் பேராயிரமுடையானும் அவரோடு கூடிவந்தாரும் வேறுவிதப் பயிரிடுதல்களிற் பயிலாதவராயிருந்ததின், நெல்விளையும் நன்னிலநோக்கி (சுதுமலையில் தற்போது ஆனைக்கோட்டை என வழங்குமிடத்துள்ள) உயரப்புலம் என்னுமிடத்தில் வந்து குடியேறினரென்பதே துணியத்தக்கது. சிங்களத்தில் வெள்ளைமண்பகுதி எனப்பொருள்படும் சுதுமலை என்னும் சொல்லின் பிரத்தியட்சப் பொருட்டோற்றமும், அதிகாரமுள்ளவேளாண் பிரபுகளுக்குரிய அடிமைகுடிமைகைப்பும் இப்பாலிலேயேயிருத்தலும், பெருக கர்னபரம்பரைக்காதைக்கும் பிரத்தியட்சத்துக்கு மொத்த சர்வ சனமதிப்புள்ள பிரபுக்கள் இப்பாலிலேயே வசித்தலும், தற்போது காணப்படும் சான்றும்.

**தழந்தைச்சட்டம்பியார்.**—இவர் சுதுமலையிலுள்ள உயரப்புலத்திலேகுடியேறிய மேற்கூறிய பேராயிரமுடையான் வழித்தோன்றலாயுள்ளவர். இவர்மகன் குலநாயகமாப்பாணமுதலியார். மகன் குமாரவேல் உடையார். மகன் சிவராமலிங்கம்.

வைத்தியநாத உடையார். இவர்மகனே பிரக்கியாதைபெற்று வசிக்கு டக்றர் முத்துக்குமாரு. இவர் புத்திரர் மட்டுக்களப்புக்கச்சேரிப் பிரதம லிகிதர் 1. சிவராமலிங்கம். யாழ்ப்பாணமுணியகாரனும் குலமதாசார சீலராய் பிரக்கியாதையுற்று விளங்கும் 2 (வயிரமுத்து) முத்துக்குமாரு. இங்கிலந்தில் M. R. C. S. பரீட்சையிற் சித்தியுற்று விளங்கும் 3. டக்றர் கதிரைவேல், 4. ஆறுமுகம். 5. சரவணமுத்து.

நாயன்மூர்த்திச்செட்டியார்: இவர் உடுவிலைச் சென்மஸ்தானமாகவுடையவர். இவர் பவுத்திரர் பெத்தப்பெருமாள் செட்டியார். இவர்புத்திரர் சங்கரமூர்த்திச்செட்டியார். இவர்புத்திரர் சின்னத்தம்பி. இவர் புத்திரர் வத்தகாமம் வேலுப்பிள்ளையென விளங்கும் பிரபல ஓவசியர் வேலுப்பிள்ளை, 2. இளையதம்பி, 3. மேற்படி வத்தகாமத்தில் பாரிய வர்த்தகராகவிருக்கும் கதிரவேலு. 2. இளையதம்பியின் பிள்ளைகள்: 1 (விசுவலிங்கம்) இரத்தினம், 2 செல்லம்மா, 3 தங்கம்மா. இவருள் விசுவலிங்கம் இரத்தினம் என்பவர் 1876–ம்ஆண்டு வைகாசிமாசம் பிறந்தவர். யாழ்ப்பாணத்தில் மத்தியகல்லூரியிலும், யாழ்ப்பாணக்கல்லூரியிலும் கற்றவர். இலங்கை வைத்தியக்கல்லூரியில் L.M.S., எடின்பறோவில் L.R.C.S.; F.R.C,S. என்னும் பட்டங்கள் பெற்றவர். இவர் பார்த்துவந்த உத்தியோகங்களாவன;– கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் விடுதிவைத்தியர், கண்டி ஆஸ்பத்திரி வைத்தியர், மறியற்சாலை வைத்தியர்.

தற்கால உத்தியோகங்களாவன:—சுயவைத்தியசாலையதிபதி, 1912 ம் ஆண்டுதொடக்கம் கொழும்பு நகரசங்க அங்கத்தவர், பிரித்தானிய வைத்திய கிளைச்சங்கத்து அக்கிராசனர், டாஸிவித்தியாசங்கத்து அக்கிராசனர், கீழ்நாட்டுச் சவள்வலிச்சங்கத்து உபஅக்கிராசனர், நாஷனல்சங்கத்து அங்கத்தவர்; குதிரைப்பந்தயசங்கத்து அங்கத்தவர், தமிழர்பந்தாட்டுச்சங்கத்து அங்கத்தவர். இவர் முயற்சியாற்றான் கொழும்பிலுள்ள அநாதர்களுக்கு ஒரு வீடும், சென்ற் போல் ஆஸ்பத்திரியில் தர்மவைத்தியமும் அரசாட்சியாரால் நடைபெறுகின்றன. இரண்டாம்முறை பால்கட்டுவதைப்பற்றி அரசாட்சியுடன் வாதாடி மறுத்து அநுகூலமடைந்தவரிவரே. இவர் பிரித்தானிய வைத்திய பத்திரிகையில், Bier's Passive, Congestion Treatment, Cannabis Indica என்பதைப்பற்றி எழுதியிருக்கிறார். கொழும்பிலிருந்து காலஞ்சென்றுபோன சி. எஸ். சிற்றி அவர்களின்புத்திரி றேசம்மாவை இவர் விவாகஞ்செய்தவர். இவர்க்கு ஐந்து பிள்ளைகளுளர். இவர் கொழும்பில் தண்ணளி, நேர்மை, தேசாபிமானமுடையாராய்ச் சர்வசனமதிப்புப்பெற்று விளங்குகின்றனர்.

இராம்நாதபிள்ளை:—இவர் தனுக்கோடியென்னும் புண்ணிய தீர்த்தம் முதலியவற்றையுடையதும், ஸ்ரீ இராமபிரானால் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யப்பெற்றதுமாகிய இராமேஸ்வரம் என்னும் சிவஸ்தலத்திலுள்ள மடாலய ஆதீனகர்த்தர்களும், பாண்டிநாட்டு கயினார்கோவிலைபடுத்துள்ள மும்முடிகாத்தான் என்னும் பதியில் வசிப்பவர்களுமான கார்காத்தவேளாளர்களின் குலத்தில உதித்த சண்பகப்பிள்ளை என்பார்க்குப் புத்திரராகவுடையவர். இவர் தம் மரபிலுதித்த பெண்மணியாகும் பார்வதியம்மை என்பாரை விவாகஞ்செய்திருக்குங்காலத்திலே தமதுசகோதரியுடனும் (அவர்கணவன) மைத்துனருடனும் சில விரோதநிமித்தம் இந்தியாவினின்றும் வந்து, பலவழுங்களாலுஞ் சிறந்து விளங்கும் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்து சாவகச்சேரி என்னும்பதியை யடைந்தனர். இவர்க்குத் தங்கச்சிப்பிள்ளையென்னும் ஓர் புத்திரியும் உளர்.

தங்கச்சிப்பிள்ளையென்பவரை, ஈர்மரபும் ஓர்மரபேயென்ன உதித்தவரும், பத்தி நைட்டிகங்களிற் சிறந்து புகழுடையவராக விளங்கியவருமான சாவகச்சேரி வைரமுத்தாபிள்ளை யென்பவர் விவாகஞ்செய்தனர். இவர்க்குப்பிள்ளைகள் 1 சிதம்பரப்பிள்ளை, 2 பர்வதபத்தினிஅம்மாள், 3 முத்துப்பிள்ளைஅம்மாள். இன்னோருள் சிதம்பரப்பிள்ளையென்பார் தமிழ் ஆங்கிலம் என்னும் இருபாஷைகளையும் செவ்வனே கற்று, சிவபத்தி, சிவனடியார் பத்திகளிற் சிறந்தோராகவும், குருநாகல் டிஸ்திறிக்கு இஞ்சினீயராகவுமிருந்து, "தோன்றிற்புகழொடு தோன்றுக" என்னும் ஆன்றோர் வாக்கியத்திற்கிலக்காகி, துரைமக்கள் பிரபுக்களாதிய சர்வ சனங்களாலும் நன்மதிப்படைந்து சிவபுண்ணியசீலராக விளங்குகின்றனர்.

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான் ஸ்ரீ. மு. ரா. அருணசலக்கவிராயர் அவர்களால் எழுதப்பெற்ற தமிழ்வேதமாகிய திருக்குறள்வசனம் என்னும் புத்தகத்தின் சமர்ப்பித நாயகரும் இவரே. தற்போது குருநாக்கல் டிஸ்திறிக்கில் ஆரம்பமாகிநடைபெறும் இந்துவாலிபர்சங்கத்தின் அக்கிராசனரும், மேற்படிசங்கத்தை மிகவும் பிரயாசைபூண்டு சைவாபிமானங்கொண்டு தாபித்தவரும் இவரே.

இவர் முதல் விவாகஞ்செய்தது, பொன்னுச்சாமிப்பிள்ளையின் புத்திரி தங்கச்சிஅம்மாள் என்பவரை. இவர்க்குப் பிள்ளைகள் 1 நடராசபிள்ளை, இவர் வியாயசாஸ்திர மாணவராயிருக்கின்றனர். 2 சொர்னம்மாள். இப்பெண்மணியை விவாகஞ்செய்தது, தம்மரபிலுதித்த பர்வதபத்தினி அம்மாளினதும், சின்னத்தம்பியாபிள்ளையினதும் புத்திரனும், கொழும்பு பெரியஆஸ்பத்திரியில் டக்றராகவும் வைத்தியசாஸ்திரபாடசாலை ஆசிரியரு

ளொருவராகவுமிருந்து விளங்கும் செல்லையாபிள்ளை. "3 பத்மாவதியம்மாள். இவ்வம்மையார் ஆங்கிலம் தமிழ் என்னும் இரு பாஷைகளையும் நன்கு கற்றவர்.

சிதம்பரப்பிள்ளையென்பார் தமது முதற்றாரமனைவியார் இறந்துபோனபின், அவரது சகோதரி இரச்சம்மையைவிவாகஞ்செய்தனர். இவர்க்குப் பிள்ளைகள், 1 இராமநாதபிள்ளை, 2 சோமசுந்தரம்பிள்ளை ஆகிய புத்திரரும், விசாலம்பாள், சேலம்பாள் ஆகியரோடு மேலும் சிலபுத்திரிகளுமாமென்ப.

சிதம்பரப்பிள்ளை என்பவரின் அசிய அன்னையார் சிவபதமெய்தியபோது, அவர்களின் வமிச பரம்பரையைக் குறித்து மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான்கள் பலர் செய்யுள்கள்மூலம் குறிப்புரைகூறியிருக்கின்றனர். அவைகள் ஓர்நூலாகத்திரட்டப்பட்டு; அவ்விடத்தோரும்பிறரும் அறியுமாறு, சென்னை கி.க.அ. சங்கத்தாராலும், மதுரைத் தமிழ்ச்சங்கத்தாராலும் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவற்றுள், மதுரைத் தமிழ்ச்சங்கத்து நூற்பரிசோதகராகிய சேற்றூர் ஸ்ரீமான். மு. ரா. அருணாசலக்கவிராயரவர்களும், மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதியும்; மதுரைக் காலேஜ் தமிழ்ப் பண்டிதருமாகிய ஸ்ரீமத். ம. கோபால கிருஷ்ணையர் அவர்களும் கூறிய சில பாடல்கள் வருமாறு.

ஸ்ரீமத். மு. ரா. அருணாசலக் கவிராயர் அவர்கள் பாடியவை.

அறுசீரடி விருத்தம்.

சிவபிரான் பாண்டியனு யரசுபுரி மதுரைநகர் திகழு மேலோன்
றவமிமோ தினத்தைச் சார்ந்திரா மேசுரத்திற் றயங்கு மேன்மை
யுவமையிலாச் சைவமடா லயத்தினிற்கா ரியமெலா முன்னன் பாலே
நவமுறமுன் னடாத்திவந்த சண்பகப்பிள் ளைக்குமைந்த னிராம நாதன்.

அன்னவன்கார் காத்தகுலந் தனக்கொருதீ பம்போல்வா னருமை யாகப்
பொன்னனைய தங்கச்சிப் பிள்ளையென்னு மொருமகளைப் புகழ்பெற் றோன்க
முன்னமீன் றன்னவளும் நற்குணநற் செய்கைகளின் முதிர்ச்சி யுள்ளா
ளென்னருங்கண் வேகையுறுஞ் சிதம்பரமென் றொருமைந்த னீன்றான் மன்
னே.

அந்தமைநதன் கல்வியினுற் கேள்வியினுற் கொடையினு லன்பால் வாக்கா
லெந்தநய முப்பொருந்துங் குணங்களா லுயர்ந்தோங்கி யிஞ்சி னீராய்
முந்திவரு மூத்தியோ கத்தினிலே சிறப்புற்று முந்நீர் சூழு
மிந்தவுல கத்தினிலே பெரும்புகழ்பெற் றுனிவனுக் கிணையார் மாதோ.

இத்தகைய புகழ்பெறுநற் சிதம்பரமால் பரம்பரையி னிடையே வந்த
வுத்தமர்பற் பலர்நயினுர் கோவிலைச்சூழ்ந் திருக்கின்ற வூரென் றோதுஞ்
சித்தமகிழ் மும்முடிகாத் தானிலே யிருக்கின்றார் சிவபி ரான்றன்
பத்தரா மிவர்பெருமை யாவரே யின்னதெனப் பகரு வாரே.

## ஸ்ரீமத். ம. கோபால கிருஷ்ணையாவர்கள் இயற்றியன.

பார்காத்த புகழுக்ர பாண்டியனாற் றளைப்பட்ட பருமே கத்தை
யார்காத்துச் சிறைமீட்டா ராண்டகையோர் வேளாள னன்றோ வந்தக்
கார்காத்தான் மரபினின்றும் முடிகாத்தா னகர்வருமோர் கவேவாளன்
ஓர்காத்த செண்பகமால் திருமரபு முன்னையினுஞ் சிறக்கு மாற.

சாற்றரிய சற்குணவான் றனென்னத் தனையறிந்த தக்கோர் யாரும்
போற்றிடவே ஸ்ரீராம நாதனெனப் பெயர்கொளுமோர் புனிதன் வந்தான்
ஆற்றன்மிகு மன்னவன்செய் யருச்சவநற் பயனலோ ரரிவை நல்லாள்
நாற்றிசையும் புகழவந்தாள் தங்கச்சிப் பிள்ளையென நாமம் பூண்டே.

கயலனைய கண்ணுடையிக் காரிகைதன் கருத்திசையுங் கணவ னான
மயலறுயாழ்ப் பாணச்சா வகச்சேரி வாழ்மேலோன் வயிர முத்துப்
பெயருடையோர் பெரியோனைப் பெட்புடனே யுற்றிடுமோர் பேறு பெற்றவ்
வுயிரனைய காதலனோ டுளமொருமித் தில்லறநன் குஞற்று நாளில்.

பாராளு மன்னரினும் பண்புடையா ரெனக்கம்பன் பகர்ந்த வர்தக்
காராளர் குலவிளக்காக் கவினுற்ற விளங்கியவக் கற்பின் மிக்காள்
ஏராருந் தன்கொழுந னிருதயமுந் தன்மனமு மின்பு றத்தஞ்
சீராளக் குலம்விளங்கச் சிதம்பரவள் ளலையீன்றாள் செல்வனாக.

முருகஉடையார்.—இவர் புலோலியிலுள்ள உயர்குல வேளாண்பிரபு. இவர்மகன் கந்தப்பர். மகன் நொத்தாரிசு முருகர். இவர் புத்திரரே புலோலி நொத்தாரிசுவாயிருந்து காலஞ்சென்ற 1 கந்தப்பர். 2 காலஞ்சென்ற பிறக்றரும் நொத்தாரிசுவுமான சுப்பிரமண்ணியம். 3 பார்பதிப்பிள்ளை. 4 வள்ளியம்மை. 5 சிவகாமிப்பிள்ளை.

1 கந்தப்பர் புத்திரன்: குள இஞ்சினீராயிருந்த கனகசூரியம். 2 சுப்பிர்மணியம் புத்திரர்: 1 நீர்ப்பாய்ச்சற் கந்தோர்க் கிளாக்காயிருந்த செல்லப்பா. 2 தற்காலம் பிரசித்த நொத்தாரிசும் பிறக்றருமாயிருக்கும் கந்தையா. 3 பார்பதிப்பிள்ளையின் புத்திரரே, தற்போது பிரசித்தநொத்தாரிசுவாயிருக்கும் பரமு சிதம்பரப்பிள்ளை. 4 வள்ளியம்மைப்பிள்ளையின் புத்திரன் கதிரித்தம்பி. இவர்புத்திரரே பிரசித்தநொத்தாரிசும் பிறக்றருமாயிருக்கும் 1 சுப்பிரமணியம். F. M. S. பகுதியில் கிளார்க்காயிருக்கும் 2 பொன்னையர்.

கதிர்காமமுதலியார்.—இவர் புலோலியிலுள்ளவர். இவர்மகன் சந்திரசேகரர். இவர்பிள்ளைகள் 1 விசுவநாதர், 2 வேலாயுதர். 1 விசுவநாதரின் புத்திரர், 1 கந்தப்பர், 2 காசிநாதர், 3 குமாரு. 2 வேலாயுதரின் புத்திரர், குமாரசுவாமிஉடையார். இவர்புத்திரரே, காலஞ்சென்ற 1 பிறக்றர் கந்தப்பா, 2 கதிரித்தம்பி, 3 வேலாயுதஉடையார், 4 நொத்தாரிசு கிருஷ்ணபிள்ளை.

2 காசிநாதரின் மகன் விசுவநாதர். இவர்புத்திரர் காலஞ்சென்ற M. A. (அப்புக்காத்து) 1 சங்கரப்பிள்ளை. 2 இஞ்சினீர் கனகரத்தினம்.

**சிங்கமாப்பாண முதலியார்:**—இவர் காரைக்காலினின்று வந்து சுன்னாகத்திற் குடியேறியவர். இறசுவதோர் உத்தியோகத்திலிருந்தவர். இவர் மகன் சிதம்பரநாதர். இவர்மகன் சிங்கமாப்பாணமுதலியார் (உடையார்.) இவர் மகன் அம்பலவாணர் பொலிஸ் விதானையாயிருந்து பரிசில் பெற்றவர். இவர்மக்கள் 1. சிதம்பரநாதர் சோசியர் வைத்தியர். 2 நாகநாதபிள்ளைமுதலியார். இவர் சமஸ்கிருத இதோபதேசம் என்னும் நூலைத்தமிழில் மொழிபெயர்த்தவர். 1. இவர்மக்கள் 1 சிங்கமாப்பாணர் வைத்தியர். 2 சின்னப்புஆசிரியர். இவர் மக்கள் 1 சிங்கமாப்பாணர், 2 சிற்றம்பலம் சுபேசவைத்தியர் சோசியர்.

**ஐயம்பெருமாள் வேலாயுதர்:**— இவர் வல்லுவெட்டித்துறையிலுள்ளவர். இவர்க்குப்புத்திரர் 1 வர்த்தகராகவிருந்த ஞானமூர்த்தியார். 2 பகுதிப்பராபத்திய மணியமாயிருந்த புண்ணியமூர்த்தியார். 3 ஆறுமுகத்தார்; இவர் அவ்வூர்த்தேவாலயங்களிலுள்ள சுவாமிகள் தீர்த்தமாடுமிடங்களில் மடாலயம், கேணி, கூபமாதியவற்றை ஸ்தாபித்தவர். 4 கமத்தொழில் வர்த்தகமாதியவற்றிற் சிறந்து விளங்கிய திருமேனியார். இவர்களின்தயாருடன் கூடிப்பிறந்த பொன்னம்பலம் என்பவர் ஒல்லாந்தவரசினர்காலத்தில் முதலிப்பட்டம்பெற்றிருந்தது மன்றி, இலங்கை இந்தியா ஆதியாமிடங்களிலுள்ள பலராலும் நன்கறியப்பட்ட வர்த்தகராகவுமிருந்தனர்.

திருமேனியாரின் புத்திரர்; 1. வேங்கடாசலம் எனும் நாமத்தால் அறியப்பட்ட பெரியதம்பியார். இவரே தந்தையின் எண்ணப்படி மேற்படியூரில் தருக்கலம் விளங்கும் சிவாலயத்தை 1867 ம் ஆண்டு ஆரம்பித்து 1883 ம் ஆண்டு வைகாசியில் பிரதிட்டாபிஷேகஞ்செய்வித்தவர். இவர் அவ்வூரிற் கீலமடைந்திருந்த வைகுந்தபிள்ளையார் புட்டணிப்பிள்ளையார் என்னுமிரு ஆலயங்களின் திருப்பணிகளை நிறைவேற்றியவர். முல்லைத்தீவில் கடற்கரையோரத்தில் விளக்கும் பெரியமடாலயமும், ஒவ்வொருவரினதும் வருணாச்சிரமங்களுக்கேற்ப அமைக்கப்பட்டிருக்கும் வீடுகள் கூபங்களும் இவர்பொறுப்பில் ஆக்கப்பட்டனவே.

2. [illegible]ந்தைவேற்பிள்ளை; இவர்கொழும்பில் பிரபலவர்த்தகராகவும், இந்துஸ்தான் வங்கிச்சிறுப்பராகவுமிருந்தவர். தற்காலம் கொழும்பில் யாழ்ப்பாணத்தார் கதிரேசன்கோவில் எனவழங்கும் சுப்பிரமணியாலயத்தைத் தாபித்தவர். மேற்படி சிவாலயம்தற்போது பெரியதம்பியார் புத்திரருளொருவரான திருமேனிப்பிள்ளை பொறுப்பில் நடைபெற்றுவருகிறது. இவர்கள்சந்ததியார் இன்றும் பத்தி நைட்டிகமுடையராயிருந்து விளக்குகின்றனர்

**சிற்றம்பலமுதலியார் மழவராயர்:**—இவர் யாழ்ப்பாணம் புத்தூர்ப் பிரபல தனவந்தர். இவர் அவ்வூர்ச்சிவாலயத் திருப்பணிக்குப்பெரும் பொருளுதவிய புண்ணியசீலர். இவர் மகன் கந்தையா.

**சின்னத்தம்பியார் பொன்னம்பலம்:**—இவர் புத்தூரிலுள்ள தனவந்தருள் ஒருவர். சிறிதுகாலம் இங்கிலீஸ் ஆசிரியராகவிருந்தவர். யூரிமாருள்ஒருவர். இவர் பரோபகார சிந்தையுள்ளவர். இவர் சகோதரர், சி. சங்கரப்பிள்ளை.

மதியாபரணமுதலியார்:—இவர் உடுவிலிலுள்ளவர். மானிப்பாயில் வசித்த கெங்காகுலரத்தினமுதலியார் இவர்க்குப் புத்திரர். இவர் புத்திரர் மதியாபரணமுதலியார். இவர் புத்திரர் கனகசபை முதலியார், இவர் புத்திரர் காராளபிள்ளை உடையார் இவர் புத்திரர் சேவையர் வெற்றிவேற்பிள்ளை இவர் புத்திரர் தம்பிப்பிள்ளை. இவர் புத்திரர் (1) புரோக்கர் காராளபிள்ளை. (2) புரோக்கர் சின்னத்தம்பி.

காராளபிள்ளையின் பிள்ளைகள் – 1 செல்லம்மா 2 சுந்தரம்பிள்ளை 3 சண்முகம்பிள்ளை. 4 தையல்நாயகி, 5 கனகசபை.

செல்லம்மையை விவாகஞ்செய்தது– பிள்ளையுடையார் கனகசபை உடையாரின் புத்திரரில் ஒருவரான கந்தையா. இவர் புத்திரன் பத்மநாதன். 2 சின்னத்தம்பிப்புரோக்கரின் பிள்ளைகள் 1 தம்பிப்பிள்ளை. 2 கெங்காகுலரத்தினம். 3 சந்திரசேகரம். 4 கந்தையா. 5 சோமசுந்தரயாதி எழுவர்.

மேற்படி புரோக்கர் காராளபிள்ளை என்பவர் பெருந் தனப்பிரபுவாய், சகல பிரபுக்களாலும் சன்மானமுடையவராய் புண்ணியரூணம் பூண்டவராயுள்ளவர். இவரே 1918 ம் ஆடி நிகழ்ந்த பஞ்சத்தில் ஏழைகளின் உடைகளுக்காக 16000 ரூபாஉபகரித்தவர்.

வென்றரசுகொண்ட முதலியார்:—இவர், மல்லாகத்திலே உயர்குல மடப்பத்திலேயுள்ள தனபாலசிங்க முதலியார் வழியினர். இவர் புத்திரர் 1. அருணாசலம் 2. கனகசபை. இவர்களில் அருணாசலம் என்பவர் வட்டுக்கோட்டைச் செமினேரியில் கல்விகற்றுச் சாவகச்சேரிப்பொலிஸ்கோட்டில் துவிபாஷித முதலியாராகவிருந்து பின் மல்லாகப்பகுதிக்கு உடையாராகவிருந்தவர். இவர் புத்திரர் 1. கார்த்திகேயபிள்ளை 2. சின்னச்சிப்பிள்ளை 3. வென்றரசர் 4. நன்னித்தம்பி 5. தில்லையம்பலம். 1. கார்த்திகேயபிள்ளையின் புத்திரர் 1. அருணாசலம் 2. முருகேசு. வென்றரசரின் புத்திரர் 1. செல்லப்பா 2. கந்தையா 3. சுப்பிரமணியம் 4. நாகம்மாள் 5. சனகசபை 6. பரநிருபசிங்கம். இவர்களுள் செல்லப்பா என்பவர் சாதுசற்குண சீலராய் சகல சம்மானமுடையராய் சுமார் 16 வருடமட்டில் கொழும்பு நேஷனல் வங்கியில் உதவிச்சிறுப்பராயிருந்து தற்போது தம் சுய பொறுப்பில் மின்னூர் வியாபாரம் நடத்தி வருபவராயிருந்து விளங்குகின்றனர்.

தலைவாணமுதலியார் சண்டிருப்பாய்:— இவர் சண்டிருப்பாய் அரசகாவலமுதலியின் மகள் செல்லாத்தையை விவாகஞ்செய்தவர். இவர் மகன் இராமநாதர். இவர் உடுவிலில் வசித்தவர். இவர்மகன் வேதவனம். இவர்மகன் இராமநாதர். இவர்மகன் சுப்பிரமணியர். இவர்மக்கள் 1 கதிரைவேலு, 2 முருகேசு,

3 காசமுத்து, 4 இராமநாதர், 5 முதலித்தம்பி, 6 இராமாசிப்பிள்ளை, 7 வள்ளியம்மை, 8 சின்னக்குட்டி. 9 பாருபதி. இவருள்: 4 இராமநாதர் உடுவிலில் உடையாராயிருந்தவர். இவர்பிள்ளைகள் 1 அரசகாவலசிங்கம். இவர் களுத்துறையில் தேயிலைத்தோட்டத்தில் வேலையாயிருக்கின்றனர். 2 தனபாலசிங்கம். இவரும் களுத்துறையில் தேயிலைத்தோட்டத்தில் கண்ணியமான வேலையிலிருக்கின்றனர். மேற்படி தனபாலசிங்கமென்பவர் களுத்துறை டிஸ்திரிக்கில் கவறளில்லை, பலாங்கங்கை என்னுந் தோட்டங்களின் சொந்தக்காரர். உடுவில்தெற்குச் சைவவித்தியாசாலைக்குப் பெரும் உதவிசெய்தவரும் மானேசருமாயுள்ளவர். உடுவில் கற்பகப்பிள்ளையார்கோவிலை யாக்குவித்தவர் இவர் தந்தையார் இராமநாதஉடையாரே. தற்போது இவ்வாலயத்தைப் பரிபாலித்துவருபவரும் இவர்பக்கத்தினரேயாம். 3 வீரவாகு. இவரும் மேற்படி களுத்துறைத் தோட்டத்தில் வேலையாயிருக்கின்றனர். 4 சின்னத்துரை மேற்படி களுத்துறையில் வேலையாயிருக்கின்றனர். 5 சிவஞானப்பிள்ளை. இப்பெண்மணியை விவாகஞ்செய்தவர் கோண்டாவில் விசுவநாதர் சின்னத்தம்பிமகன் அருணாசலம். இவரும் மேற்படி களுத்துறைத்தோட்டத்தில் கண்ணியமான வேலையாயிருந்து பலராலும் மதிக்கப்பட்டவர். 6 சின்னத்தங்கச்சி. இப்பெண்மணியை விவாகஞ்செய்தது, கொக்குவில் சிற்றம்பலம் அம்பலவாணர்மகன் பொன்னம்பலம். இவர் பேமாப்பகுதியில் இஞ்சினியராயிருக்கின்றனர். 7 சிவகாமிப்பிள்ளை. இப்பெண்மணி மானிப்பாய் ஆறுமுகம் முத்துத்தம்பியை விவாகஞ்செய்தவர். இவரும் மேற்படி களுத்துறையில் தோட்டத்தில் வேலையாயிருந்தவர். 8 சிந்தர்மணி இப்பெண்மணி மல்லாகம் கோவிந்தர் நாகலிங்கத்தை விவாகஞ்செய்தனர். இவரும் மேற்படி தோட்டத்தில் வேலையாயிருக்கின்றனர்.

5: முதலித்தம்பியின் பிள்ளைகள் 1. சண்முகம் 2. சின்னையா 3. எம் எஸ் சின்னையா 4. சிற்றம்பலம் 5. சின்னாச்சிப்பிள்ளை 6. செல்லம்மா. 5. சின்னாச்சிப்பிள்ளையை விவாகஞ்செய்தது உடுவில் கார்த்திகேய உடையார்பவுத்திரன் வயிரவநாதர் சுப்பையா. 6 செல்லம்மா விவாகஞ்செய்தது வண்ணை பெரியப்பெருமாள் அருளம்பலத்தை. இவர் நெடுங்காலமாய் அரசாட்சி வயித்தியசாலைகளில் வேலைபார்த்து வருகிறார். 3- எம் எஸ் சின்னையா இவா நாவலப்பிட்டித் தோட்டத்தில் ஓர் கிளாக்காயிருக்கின்றனர். 4- சிற்றம்பலம் மேற்படி நாவலப்பிட்டியில் ஓர்கண்டாக்காயிருக்கின்றனர். 5. சின்னாச்சிப்பிள்ளையின் மகன் நாகலிங்கம் என்பவர் சிங்கப்பூரில் அடம்ஸ்ளா சயன்ஸ்க்கூலில் ஓர் உபாத்தியாயிருக்கின்றனர்.

சுப்பிரமணியமுதலியார்...இவரூர் நாவற்குளி. மண்ணாடுகொண்ட முதலிவழியிலுதித்தவர். இவர்புத்திரன் சந்திரசேகரர். இவர்பிள்ளைகள் 1 கண்ணாத்தைப்பிள்ளை. 2 கருணாகரர். 1-இவளை 2-ந் தாரமாக விவாகஞ்செய்தது, மறவன்புலவு சிற்றம்பலவுடையார் சிதம்பரநாதர். இவர்புத்திரன் கார்த்திகேசு. இவர்மனைவி வயிருப்பிள்ளை. இவர்பிள்ளைகள் 1 இலக்கைப்பகுதிகளில் இஞ்சினீராகவிருந்து சகலராலும் சன்மானம் பெற்றுவிளக்கும் சிதம்பரநாதர், 2 கண்டிப்பகுதியில் கண்டாக்கராகவிருக்குஞ் சிற்றம்பலம். 3 கருணாகரர் தம்பையாவின் கனிட்டபுத்திரன் கண்டாக்கு கருணாகரரின் மனைவி தையல்நாயகம், சிதம்பரநாதர் விவாகஞ்செய்தது. இருபாலை முத்துக்குமாரு சண்முகத்தின் சிரேட்ட புத்திரியின் புத்திரி கதிராசிப்பிள்ளையை. சிற்றம்பலம் விவாகஞ்செய்தது. நாவற்குளிவேலாயுதர் சந்திரசேகரர் விதானையின் புத்திரி அம்பிகைப்பிள்ளையை. இவர்பிள்ளைகள் 1 நீர்வேலி மாப்பிள்ளையின் புத்திரனும், கந்தர்மடம் குத்தகைகாரன் வேலுப்பிள்ளையின் புத்திரனுமான நடராசாவின் மனைவி இராசம்மா. 2 நீர்வேலிவாசர் கண்டாக்கு சமசிவாயம் மனைவி இரத்தினா. 3 கார்த்திகேசு 4 பாக்கியம். 5 சிதம்பரநாதர். கருணாகரர்தம்பையாவின்சிரேட்ட புத்திரன் நாவற்குளி உடையார் தில்லைநாதர்.

மேற்படி சிற்றம்பலஉடையார்மகன் சிதம்பரநாதர் கமத்தொழில்பயில்வதின்றிக் கல்விகற்பதிலேயே கண்ணாயிருந்து காலங்கழித்தார். அக்காலத்திருந்த பொன்னார்வன்னிச்சி ஏசன்றர்மூலமாக இவருக்கு நெல்லுக்குத்தகைவேலையை வாங்கிக்கொடுத்தனர். இவர் அவ்வேலையிலிருந்து தமது வேலையாட்களுடன் ஓர்நாள் முகமாலைக்குச்சென்றார். அப்போது அங்குள்ள கோவிற் புராணப்படிப்புக்குச்சென்று தானும்படித்து மற்றையோரால் மகிழப்பட்டனர். பின் படிப்பைநடத்திய வன்னிமையும் பெண்சாதியும் இவரை விருந்துக்கழைத்துச்சென்றனர். வன்னிமையின் மனைவி வீடுசேர்ந்தவுடன் வீட்டுக்குத் தூரமானதால் மகள் சேதுப்பிள்ளையை இவர்க்குச் சோறிடவிட்டனர். சாப்பாடுமுடிந்தபின் வன்னிமையும் மற்றோரும் இவருக்குச் சோறுகொடுத்த பெண்ணை இவருக்கே மனைவியாக்கிவிட்டனர். இவர்க்கு வேலுப்பிள்ளை, சிவகாமிப்பிள்ளையென இருபிள்ளைகளுளர். இவர்கள் மரபினரே நாவற்குளி முத்துத்தம்பிஉடையார் ஆதியோர்

குமாரசிங்கமுதலி:—இவர் உடுவிலைச்சென்மஸ்தானமாய்க்கொண்ட பிரபல பிரபுவாகிய வாரிசிங்கமுதலியின்மூன்றாந்தலைமுறையினராயுள்ளவர். இவர்வழித்தோன்றல் குமாரவேலர் சண்டிருப்பாய். இவர்மகன் அம்பலவாணர். இவர்மகன் கனகசபை. இவர்மகன் தில்லையம்பலம். இவர் புத்திரர் 1 கொழும்பில்றெயில்வே சிறப்பு முதலியாராயிருந்த கனகசபாபதி. 2. P. W .D. டிஸ்திறிக் இஞ்சினியராகவிருக்கும் முத்துக்குமாரு. 3. கொழும்பில் பிறக்றாசும், நொத்தாரிசுமாகவிருக்கும் பொன்னையா. 1. கனகசபாபதி [illegible] உடுவில் இளையதம்பி மகள் சற்குணத்தை விவாகஞ்செய்தனர். இவர் புத்திரி [illegible]கை. [illegible] விவாகஞ்செய்தது; சண்டிருப்பாய் ச[illegible] மகன் [illegible]. இவர் யாழ்ப்பாணக்கச்சேரியில் [illegible]. மேற்படி கனகசபாப

தி இரண்டாந்தாரமாய் விவாகஞ்செய்தது கொழும்பு ஒறியன்றல் வங்குச்சிறுப்பாயிருந்த நவாலி ஆறுமுகம் மகள் தங்கம்மாவை. இவர்க்குப் புத்திரன் கனகசுந்தரம்.

2-முத்துக்குமாரு விவாகஞ்செய்தது, றெயில்வேச் சிறுப்பராயிருந்த சண்டிருப்பாய் சினியர் சரவணமுத்து மகள் அன்னபூரணியம்மையை. இவர்பிள்ளைகள் 1-இரத்தினவேல், 2 யோகேஸ்பரி, 3 ஞானசோதி, 4 அழகேஸ்பரி.

3-பொன்னையா விவாகஞ்செய்தது. அளவெட்டி டக்றர் சினிக்குட்டி மகள் கண்ணம்மாவை. இவர்பிள்ளைகள் 1 பத்மாவதி 2 பரிமளம் 3. பூரணம்

நாகராயன்செட்டி:—இவர் நாகபட்டணத்திலிருந்து வந்து யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையிற்குடியேறிய ஆறுமுகச்செட்டி வழியில்வந்த மங்கையர்க்கரசியை விவாகஞ்செய்தனர். இவர்புத்திரன் தன்மராயன்செட்டி. இவர் உடுவில் குருநாதவுடையார் புத்திரி தெய்வானைப்பிள்ளையை விவாகஞ்செய்தனர். இவர்புத்திரன் தோழனுதன்செட்டி. இவர் புன்னாலைக்கட்டுவன் சுப்பிரமணியஉடையார் புத்திரி வள்ளிப்பிள்ளையை விவாகஞ்செய்தனர். இவர்புத்திரன் பூதத்தம்பி. இவர் புத்தூர் சிற்றம்பலமுதலியாரின் பிரதமபுத்திரன் மூத்ததம்பிஉடையாரின் மகள் குலசேகரப்பிள்ளையை விவாகஞ்செய்தனர். இவர் புத்திரன் மாலாணமுதலியார். இவர் உரும்பராயிலிருந்துவந்து புத்தூரிற்குடியேறிய சிற்றம்பலமுதலியார் பவுத்திரனும், குருநாதவுடையார் மருகருமான அம்பலவாணமுதலியாரின் சகோதரி தெய்வானைப்பிள்ளையை விவாகஞ்செய்தனர். இவர் புத்திரன் கந்தப்பிள்ளை. இவர்புத்திரன் சுவாமிநாதர். இவர் முதல்தாரமாக விவாகஞ்செய்தது, அம்பலவாணமுதலியார் பிரதமகுமாரன் செட்டிகயிலாயவுடையார்மகளை. இரண்டாந்தாரமாக விவாகஞ்செய்தது சுப்பிரமணியவுடையார் பவுத்திரி பொன்னுப்பிள்ளையை. இவர்புத்திரன் கந்தையா. இவர் முதற்தாரமாக மழவராயரின் பவுத்திரியும், சிற்றம்பலத்தின் புத்திரியுமான பராசத்தியம்மையை விவாகஞ்செய்தனர். இவ்வம்மையிறந்தபின் இரண்டாந்தாரமாக வடமராட்சி வல்லிபுரவுடையார் பவுத்திரனும், செயதுங்கமாப்பாணர் புத்திரனுமான தாமோதரம்பிள்ளையின் புத்திரி இராசநாயகியை விவாகஞ்செய்தனர்.

மழவராயமுதலியார்:—இவர் புத்தூர்ப் பிரபுக்களிலொருவர். இவர் புத்திரன் சிற்றம்பலமணியம். இவர்: குஞ்சவுடையார்மகன் தெய்வநாயகப் பொன்னம்பலமுதலியார் மகன் பாகுதேவமுதலியார்மகன் கந்தவுடையார் புத்திரியை விவாகஞ் செய்தனர். இவர்க்குப் பிள்ளைகள்; 1 வைத்தியலிங்கம், 2 முத்துச்சுவாமி, 3 மழவராயர், பெண் 1.

2 முத்துச்சுவாமி விவாகஞ்செய்தது, ஒல்லாந்த வரசினர் காலத்தில் முதலிப்பட்டம்பெற்று விளங்கி நல்லூரில் வசித்த பூதத்தம்பிமுதலியார் மரபில் அவதரித்த கதிர்காமத்தம்பி மகன் பூதத்தம்பிமகன் நொத்தாரிஸ் கதிர்காமத்தம்பி என்பவரைத் தந்தையாராகவும், பரராசசேகர மகாராசாவின் காலத்தில் சிற்றூரிலிருந்துவந்து புத்தூரில் குடியேறி மணங்கலந்த சேனபதியாகிய வாலசிங்கம் என்பவரையும், தில்லையுடையார் முதலியோரையும் தமது தாய்வழியினராகவுங் கொண்ட பார்வதிப்பிள்ளையை. இவர்க்குப் பிள்ளைகள் 1 தில்லைநாதர். 2 சிற்றம்பலம், 3 இராமநாதன் பரிஸ்தர், 4 செயதுங்கமாப்பாணர், தாமோதரம்பிள்ளையின்மனைவி தங்கம்மா, 5 சேனாதிராசர் இராமலிங்கம் மனைவி ஆச்சிப்பிள்ளை, 6 வண்ணார்பண்ணை சிவப்பிரகாசம் மகன் பிறக்றர் தம்பையாபிள்ளையின் மனைவி சோதிப்பிள்ளை, 7 சுப்பிரமணியர் முத்துக்குமாருவின் மனைவி இளையபிள்ளை.

1 வைத்தியலிங்கத்தின் பிள்ளைகள் 1 பூதத்தம்பி. 2 கந்தையா. 3 சின்னையாவின் புத்திரன் போஸ்மாஸ்றர் பூதத்தம்பியின்மனைவி வள்ளியம்மை. 2 கந்தையா விவாகஞ்செய்தது; தில்லையுடையார் மகன் சின்னத்தம்பியார் மகள் வள்ளியம்மைப்பிள்ளையை. இவர்க்குப்பிள்ளைகள் 1 சங்கரப்பிள்ளையின் புத்திரன் றிச்சிஸ்றர் தில்லைநாதரின் மனைவி தங்கம்மா, 2 சிற்றம்பலம். 3 மட்டுவில்விசுவநாதர் தாமோதரம்பிள்ளையின் மனைவிசெல்வநாயகம்.

சிற்றம்பலம் விவாகஞ்செய்தது; செயதுங்கமாப்பாணர்தாமோதரம்பிள்ளையின் புத்திரி செல்லம்மாவை. இவர் தமதுமூதாதையர்போல சகல நிலைகளிலும் சிறப்புற்றுப் பரோபகார குணம்பூண்டு விளங்குகின்றனர்.

மயிலதிற்சிங்க மாப்பாண முதலியார்.—இவர் உடுப்பிட்டியைச் சேர்ந்த தனங்காரக்குறிச்சியில் வசித்தவரும் ஒல்லாந்த அரசாட்சியார் காலத்தில் உத்தியோகம் செல்வாக்கு ஐசுவரியமாதியவற்றால் சிறந்தவருமாய் விளங்கிய ஓர் பிரபு. இவர் குமாரர் கதிரேசமணியம், இவர் புத்திரர் அம்பலவாணர். இவர் மகன் வேலுப்பிள்ளை. மயிலதிற்சிங்கமாப்பாணமுதலியார் புத்திரி வாராத்தைப்பிள்ளையின் புத்திரர் விதானை சுவாமிநாதர். இவர் புத்திரர் வீரகத்தி உடையார். இவர் குமாரர் விதானை இளையதம்பி. இவர்பலவருடங்களாய்த் தனககாரக்குறிச்சி விதானையாகவும் பகுதிப்பராபத்தியமாகவும் உத்தியோகம் புரிந்தவர். இவர் மேலேகுறித்த மயிலதிற்சிங்கமாப்பாணமுதலியார் வமிசத்தில் பிறந்தவரும் சின்னத்தம்பி உடையாரின் சகோதரருமாகிய காசிநாதஉடையார் குமாரசுவாமியின் மகள் தங்கச்சிப்பிள்ளையை விவாகஞ்செய்தனர்.

கதிர்காமர்:—இவரூர் சுதுமலை; காரைக்காலினின்றும் வந்து இணுவிலிற் குடியேறிய பேராயிரமுடையானின் வழித்தோன்றல். இவர் மகன் மயில்வாகனம் என்பவர் மணியம்பதி மாத

வராயமுதலியார் புத்திரி பரமானந்தபிள்ளையை விவாகஞ்செய்தனர். இவர்க்குப்பிள்ளைகள். பெண்கள் 2· ஆண்கள் 8. அவர்கள் நாமதேயங்களாவன.

I. துணைவிவாசரான மூத்ததம்பியென்ன மறுநாமம் பூண்ட முருகேசர். இவர் பிள்ளைகள் (1) டக்றர் கயிலாயபிள்ளை (2) சிவகாமிப்பிள்ளை. டக்றர் கயிலாயபிள்ளையின் பிள்ளைகள் 1. பிறக்றர் பெருமாள்பிள்ளையின் மனைவி பகவதியம்மா. 2. டக்றர் சிவசிதம்பரத்தின் மனைவி திரிபுரசுந்தரம். 3. டக்றர் துரையப்பாவின் மனைவி இரத்தினம்.

(2) சிவகாமிப்பிள்ளையின் பிள்ளைகள் 1 உடுவில் கதாளிவேல் அம்பலவாணரின் மனைவி தங்கமுத்து, 2 நவாலி மதியாபரணம் மனைவி அன்னமுத்து. 3 போஸ்ற்மாஸ்றர் வேதக்குட்டி, 4 ஐக்கியமலாய்நாட்டில் பிரதம போஸ்ற்மாஸ்ரர் செல்லையா, 5 பிறக்றர் தர்மலிங்கம், 6 ஐக்கியமலாய்நாட்டில் உத்தியோகமாயிருந்து இளைப்பாறியிருக்கும் சின்னையா.

II. அராலிகிழக்கில் வசித்த ஆறுமுகம். இவர் பிள்ளைகள் (1) மயில்வாகனம் (2) சபாபதிப்பிள்ளை (3) இந்திய அரசில் உத்தியோகமாகவிருந்து இளைப்பாறியிருக்கும் செல்லப்பாபிள்ளை (4) சிவகாமிப்பிள்ளை. (5) முத்தம்மா. (1) இவர் பிள்ளைகள் 1. சண்டிருப்பாய் பிறக்றர் வயித்தியலிங்கம். 2 டக்றர் சோமசுந்தரம். 3· கண்டாக்குதம்பிப்பிள்ளையின் மனைவி அமிர்தவல்லி. (2) இவர்பிள்ளைகள் 1. மத்திய கல்லூரியாசிரியர் ஸ்பென்சரின் மனைவி இராசம்மா. 2. கொழும்பு போஸ்ருபில் உத்தியோகமாகவிருக்கும் ஆறுமுகம். 3 அன்னம்மா. 4 இலங்கைக் கிளேறிக்கல் சேவிஸ் கிளாக்கு பேராயிரவர். 5 செல்வத்துரை. (3) இவர்பிள்ளைகள் 1–ஐக்கிய மலாய்நாட்டரசில் உத்தியோகமாயிருந்து இளைப்பாறியிருக்கும் நவாலி இ· சின்னையாவின் மனைவி ஞானம்மா. 2 பாப்பம்மா. (4) இவளின் பிள்ளைகள் 1 சிரம்பான் டக்றர் சுப்பையா- 2 கோலலிப்பிஸ் டிறுஸ்மன் முத்துத்தம்பியின்மனைவி ஆச்சிமுத்து. (5) இவளின் பிள்ளைகள் 1 பம்பலப்பிட்டி மருதப்பாபிள்ளையின் மனைவி சிவகாமிப்பிள்ளை. 2 மதராஸ் வங்கி கார்த்திகேயபிள்ளையின் மனைவி செல்லம்- 3 கோலாலம்பூர் அரசினர் கிளாக்கு நவரத்தினத்தின் மனைவி தங்கம்- 4 கொழும்பு டாளிபற்ரரில் கிளாக்கு சுப்பிரமணியம்.

III. கோப்பாய்வடக்கு வேலாயுத உடையார். இவர் பிள்ளைகள், 1 பரிபூரணம் 2 உடுவில் மல்லாகத்தில் வசிக்கும் வயிரமுத்து முத்தையாவின் தாயார்தங்கம். 3 அல்வாய் வேலுப்பிள்ளை உபாத்தியாயரின் மனைவி அன்னம்மா. (4) ஐக்கியமலாய்நாட்டரசில் உத்தியோகமாகவிருந்து இளைப்பாறியிருப்பவரும், மலா

ய்க்குமரி; சிறீஸ்கந்தேலாசங்கள் என்னும் புத்தகங்களின் ஆக்கியோனுமாகிய முத்துத்தம்பி ஆசிரியர். இவர் பிள்ளைகள், 1. வல்வை பிறக்றர் முருகப்பாவின் புத்திரனும், ஐக்கியமலாய்நாட்டரசினர்பாடசாலை பிரதமாசிரியருமான கதிரேசபிள்ளையின் மனைவி தங்கரத்தினம். 2–ஐக்கியமலாய்நாட்டரசினர் கிளேறிக்கல் சேவிஸ் கிளாக்கு நவரத்தினம்.

IV, மானிப்பாய் நாகமுத்து. இவர் மகன் செல்லப்பா. இவர் மகன் நொத்தாரிஸ் சுப்பிரமணியம்.

V. உடுவில் மாரிமுத்து உடையார் (காப்பென்றர்) இவர் பிள்ளைகள், (1) யேன்பரமானந்தம்மா. (2) பிறக்றர் காப்பென்றர் இவர் பிள்ளைகள் 1– அப்புக்காத்து தம்பு துரைசாமியின் மனைவி லூசிப்பிள்ளை; 2–பிறக்றர் கனகசிங்கம். 3- குணரத்தினம் 4. சின்னம்மா. (1) இவவின்பிள்ளை, செல்லையாபிள்ளை B. A. B. L. மனைவி ஆச்சிமுத்து.

VI. மானிப்பாய் (மூடியர்) கனகசபை. இவர் பிள்ளைகள் (1) இராசகோபாலபிள்ளை. (2) அம்மாக்குட்டி. (1) இவர் பிள்ளைகள் 1– ஐக்கியமலாய்நாட்டரசில் வேலையாயிருக்கும் பெக்காசின் மனைவி பாக்கியம். 2–பிறக்றர் அரியரத்தினம். 3-அழகம்மா.

VII. மானிப்பாய் வீரசிங்கம். இவர் மகன் டக்றர் பேறஸ்.

**சேதுகாவலச் சேனாதிராச மாப்பாண முதலியார்.**—இவர் ஒல்லாந்தர் காலத்திலே உடுப்பிட்டி தலைக்காரக் குறிச்சியிலே முதலியார்ப் பட்டத்துடன் கனவரிசைகள் பெற்றுக் கனதனவானாய்ச் சீவித்தவர். இவர் வமிசத்தில் பிறந்த மயில்வாகன உடையாரின் புத்திரி வள்ளிப்பிள்ளையின் புத்திரர் நாகநாதர் ஆபிரகாம் சின்னத்தம்பி என்பவராம். மேலேகுறித்த சேதுகாவலச்சேனாதிராசமாப்பாண முதலியாரின் புத்திரியின் புத்திரர். மயில்வாகனஉடையார் மாப்பாணர். இவர் குமாரர் முருகேசர். இவர் மகன் கார்த்திகேசர். இவர் அமெரிக்கமிஷன் பாடசாலையில் தமிழ் அங்கில கல்விகற்று உபாத்தியாயர் பரீட்சையில் சித்திபெற்று அம்மிஷனில் சில வருடங்களாய் உபாத்தியாயராயிருந்துபின் அதைவிட்டுப்பாரியசமக்காரனாயிருக்கின்றனர்.

**மழவராய முதலியார்.**—இவர்வயாவிளானிலுள்ளவர். இவர்மகன் கதிர்காமர் மகன் விநாயகர் மகன் சின்னக்குட்டி மகன் கணபதிப்பிள்ளை. இவர்விவாகஞ்செய்தது நவாலி குலத்துங்கமுதலியார் வழியில்வந்த மூத்ததம்பி மகன் வயிரமுத்துவின் புத்திரி வள்ளியம்மையை. இவர்க்குப்பிள்ளைகள் 1. கொழும்பில் கொம்மிஷன் ஏசன்ராயிருக்கும் பொன்னம்பலம். 2 கொழும்பு கொம்மேஷல் கொம்பனியில் ஸ்ரோர்க்கீப்பராகவிருக்கும் தம்பையா 3. மலாக்காவில் ஓவசியராகவிருக்கும் ஆறுமுகம் 4. கந்தையா 5. நாகமணி 6. கொம்மேஷல் கொம்பனியில் கிளாக்குத்தியோகமாகவிருந்து காலஞ்சென்ற முருகேசு 7. கொழும்பில் சேவையராகவிருக்கும் எஸ். சபாரத்தினத்தின்மனைவி சரஸ்வதி.

**முத்துமுதலியார் வண்ணார்பண்ணை.**—இவர் இருபாலை மண்ணாடுகொண்ட முதலிவழியிலுள்ளவர். இவர் சந்ததியினர் ஆறுமுகம் என்பவர் இவர்

மகன் சுவாமிநாதர். இவர் யாழ்ப்பாணக் கச்சேரியில் ரோட்டுப்பகுதிக்குச்சம்பளம் கொடுக்கும் உத்தியோகஸ்தராகவிருந்து மூனாயில் விவாகஞ்செய்த சீனிவாசகரின் மகளை விவாகஞ்செய்தனர். இவர்மகன் கதிரவேற்பிள்ளை. இவர் இந்தியாவிலுள்ள ஊத்துக்குளிப் பாளையப்பட்டு இராசாவின்மேனேசராகவும், இந்திய றெயில்வேயில் கொந்திராத்துவாகவும், கோலாலம்பூர் றெயில்வேயில் பேமனற் ஓவசியராகவுமிருந்து இளைப்பாறியிருக்கின்றனர். இவரின் மருமகன் கோலாலம்பூர் சனிற்றறிப்போட்டில் சேவிளாக்காகவிருக்கும் சண்முகம்பிள்ளை-

கோபாலக்குருக்கள்:—இவரூர் திருக்காளாஸ்திரி, சிவபெருமானைக்கண்ணப்பநாயனார் பூசித்தகாலத்திற்பிறந்த சிவகோசரியார் வமிசத்திலுதித்தவர். இவர்மகன் சதானந்தக்குருக்கள். இவர் யாழ்ப்பாணத்து மூளாய்ப்பகுதிக்கு வந்து அங்குள்ள விக்கினேஸ்வராலயம் முதலிய ஆலயங்களுக்குப் பிரதிட்டாசிரியராக விளங்கியிருந்தவர். இவர்மகன் சுதேசவைத்தியர் இராமசாமிக்குருக்கள். இவர்மகன் ஆயுள்வேத வைத்தியர் வைத்தீஸ்பரக்குருக்கள். இவரும் பிள்ளைகளும் தம்முன்னோரைப்போலவே இன்றும் மேற்படியாலயத்தின் குருப்பேற்றையுற்றிருக்கின்றனர்.

இராமநாதபிள்ளை.—இவரூர் தமிழரசர் காலத்திலே பிரதமமந்திரிக்கு வாசஸ்தானமாயிருந்த யாழ்ப்பாணம் திருநெல்வேலி. இவர் ஒல்லாந்தர் காலத்திலே தோம்பதிகாரியாகவிருந்த பழங்குடி வேளாண்டலைவர். இவர்மரபிலுதித்தவர் அம்பலவாணர். இவர்மகன் கார்த்திகேயர். இவர்மகன் தம்பாபிள்ளை முதலியார். இவர் கோலாலம்பூரில் கோட்டுத்துவிபாஷித முதலியாராகவிருந்து யாவராலும் சன்மானமுற்று விளங்குகின்றனர். இவர் தமிழபிமானம் பூண்டு அனேகதமிழ் நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்துவதற்கு உதவிசெய்தவர். வித்தியாதானம் விரும்பி இந்துக்கல்லூரிக்கு 1000ரூபா கொடுத்துதவியபரோபகாரசீலர். இவர் விவாகஞ்செய்தது வைத்தியலிங்கத்தின் புத்திரி தங்கம்மாவை. இவர்பிள்ளைகள் 1 இராசேந்திரம் 2 மகேசபிள்ளை முதலியோர்.

சிவகுருநாதபிள்ளை.—இவர் சுன்னாகத்திற் பிரசித்திபெற்று வாழ்ந்த சைவவேளாளராகிய சங்கரப்பிள்ளையின் மரபிலுதித்தவர். நீர்வேலி மாணிக்கம் பிள்ளையின் புத்திரி தெய்வானையம்மையை விவாகஞ் செய்திருந்தவர். இவர்புத்திரன் தென்மொழி, வடமொழியாதி கலைகளைக்கற்றும், அனேக மாணவர்களுக் கற்பித்தும், இருபாஷைகளிலும் அனேக நூல்களையெழுதி அச்சிட்டு வெளிப்படுத்தியும் சிவபூசா துரந்தரராகவிருந்து விளங்கிய சங்கரபண்டிதர். இவர்புத்திரன் சிவப்பிரகாசபண்டிதர். இவரும் தந்தையாரைப்போலவிருந்து கல்விகற்பித்தலிலும், நூல்களையெழுதி யச்சிடுவித்தலிலும் விளங்கியதுமன்றி நீர்வேலியிலே ஓர் ஆரிய திராவிட பிரத்தக் கல்லூரியையும் தாபித்து நடாத்தியும்வந்தவர். இவர்புத்திரன் நடராசபிள்ளை. இவரே தற்போது தமது தந்தையாரால் எழுதப்பட்டு அச்சிடப்படாதிருந்த சில நூல்களை அச்சிடுவித்தும், மேற்படி பாடசாலைக்கு மனேசராகவிருந்தும் விளங்குகின்றார். சிவப்பிரகாசபண்டிதரின் புத்திரியின் புத்திரியை விவாகஞ்செய்தவர் பண்டிதர்கோட்டம் வ. சி. கந்தையாபிள்ளை ஆசிரியர்.

## இலங்கையில் ஆங்கிலேயர்.

இப்பால் ஆங்கிலேயர் காலம் கிட்டியதால், அவர்கள் வரலாற்றைக்குறித்துச் சிறிது சொல்வாம். அவர்கள் நாடு இங்கிலாந்து என்னுந் தீவு. இவ்வாங்கிலேயர் இற்றைக்கு 300 வருடங்களுக்குமுன் துருக்கி நாட்டுடன் மாத்திரம் வர்த்தகத்தொடர்புடையவராயிருந்தார்கள். அப்பால், அஃதாவது 1580-ன் மேல் பறங்கிக்காரருடைய முயற்சியையும் அதனால் அவர்களுடைய உயர்ச்சியையுங் கண்டு, தாமும் அவரைப்போல் கீழைத்தேயத் தொடர்புடையவராக வேண்டுமென்று விருப்பங்கொண்டார். அவ்வாறே நான்கு ஆங்கிலேய வர்த்தகர் கீழைத்தேயத்தை நாடி வழிக்கொண்டு சிரியா மார்க்கமாய் இந்தியாவையடைந்தனர். அவர்களுள் ஒருவர் "அக்பார்" அரசனிடத்தில் சேவகத்திலமர, மற்றை மூவரிலொருவர்' பஞ்சாப்பிலிறந்துபோக, எஞ்சிய இருவரில் ஒருவர் துறவியாகிக் கோவையில் நின்றுவிட, மற்றவராகிய "பிற்சு" என்பவர் சியம், மலாக்கா முதலியவிடங்களுக்குப் போய்ச் சுற்றிக்கொண்டு தமதூருக்கு மீளுகையில், 1589–ம் ஞு மார்ச்சு மீ 5ஈந் திகதியில் கொழும்பில் வந்திறங்கினர். இவரே ஆங்கிலேயருள் முதன்முதல் இலங்கையைக் கண்டவர் எனலாம்,

அப்பால் இரண்டு வருடங்கழித்து, இங்கிலாந்துக்கு அந்நாளில் அரசியாயிருந்த எலிசபேத்து என்பவர், பறங்கிகளுடைய கொள்கைக்கு மாறாய் இந்துசமுத்திரத்தில் போய் உலாவி வருமாறு சில் கப்பல்களைப் பிரயாணப்படுத்திவிட்டார். அவற்றுள் ஒன்று மலாக்கா நாடுவரையில் சென்று மீளும்போது, காலித்துறையில், 1592–ம் ஞு டிசம்பர் மீ 3-ந்திகதியில் வந்து நங்கூரம்பாய்ச்சிற்று. அக்கப்பற் பெயர் "எட்வேட் போனுவென்சர்." இதுவே முதன்முதல் இலங்கைக்கு வந்த ஆங்கிலேயர் கப்பல் எனலாம்.

இதன்மேல், இந்திய நாடானது பறங்கிகள், ஒல்லாந்தர், பிராஞ்சியர், ஆங்கிலேயர் என்னு மிந்நான்கு சூரர்முன் "இது வென்றார்க்குரியது" என்று வைக்கப்பட்டதோர் விலையுயர்ந்த இரத்தினப் பரிசுபோலாக அதனைக்கையாடும் பொருட்டு ஆங்கிலேயர் ஏறக்குறைய 200 வருடம்வரையிற் போராடி நின்றமையால், இலங்கை அவர்கள் கருத்திற்கு வரவில்லை.

பின்பு, 1763-ல் சென்னைத் தேசாதிபதியானவர் இலங்கைமேல் காதல்கொண்டவராய் (Pybus) பைபஸ் என்னுந்துரையைக் கண்டியரசனுகிய கீர்த்தி ஸ்ரீ ராசசிங்கனிடம் அனுப்பி

ஒருடன்படிக்கைக்குச் சம்மதம் கேட்டார். அதற்கு அரசன் சம்மதப்பட்டானில்லை.

அப்பால், 1782–ல் ஒல்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் போர்மூண்டது. அதுபற்றி, சென்னைத் தேசாதிபதி இலங்கையிலுள்ள ஒல்லாந்த நாடுகளைப் பிடிக்குமாறு கப்பற்றளபதியாகிய (Sir Edward Hughes) ஹியூஸ் துரையுடன் ஓர் கப்பற்படையையும், (Sir Hector Munro) மனுறே என்னுஞ் சேனாபதியுடன் ஓர் சேனையையுமனுப்ப, அவர்கள் வந்து திரிகோணமலையைப்பிடித்தார்கள். இச்சமயத்திலும் சென்னைத் தேசாதிபதி ஒரு தூதனை இராசாதிராசசிங்கனிடத்துக்கனுப்பி "நீ ஒல்லாந்தருடன் போர் செய்வையாயின் நாங்களுதவிசெய்வோம். அதன்மேல் நீயும் நாமும் ஐக்கியமாயிருக்கலாம். இது உனக்கு உடன்பாடாயின் சொல்லுக" என்று கேட்பித்தார். அதுகேட்டு இராசாதிராசசிங்கன், "இவர்களும் பின்னால் நமக்குச் சத்துருக்களாவர்தாமே" என்றெண்ணி உடன்படாது மறுத்தான்.

அடுத்த வருடத்தில் ஒல்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் சமாதானமிடைப்பட்டமையால், திரிகோணமலை மறுபடியும் ஒல்லாந்தர்க்கு விடப்பட்டது.

இப்படியிருக்கையில் மீண்டும் 1795–ல் இங்கிலாந்துக்கும் ஒல்லாந்துக்கும் போர் தொடங்கிற்று. அப்போது சென்னைத்தேசாதிபதியாயிருந்த நரேந்திரப் பட்டமுடைய ஹோபாட்டு என்பவர் ஸ்துவாட் சேனாபதியுடன் ஓர் சேனையை இலங்கைக்கனுப்பினார். அச்சேனாபதி உடனே திரிகோணமலையை வளைந்து மூன்று வாரமாகக் காவல்செய் தீற்றில் கைப்பற்றினான். அப்பால் அவன் ஒரு படையோடு பருத்தித்துறையிலிறங்கி யாழ்ப்பாணஞ்சென்று அதனையும் எதிர்ப்பாராருமின்றிக் கவர்ந்தான். அடுத்த 1796–ல் நீர்கொழும்பையு மவ்வாறு பிடித்தான். அதன்பின்பு கொழும்பைநோக்கி வழிகொண்டு கழனியாற்றையுந் தாண்டி அந்நகரிற் போய் எதிரூன்றினான். அங்கே பெப்பிரவரி மீ 16–ந் உ மலாயர் படையொன்று ஓர் பிராஞ்சித் தலைவனோடும் வந்து எதிரிட்டுச் சிறிதுநேரத்தில் தலைவனையும் மடியவிட்டோட, ஸ்துவாட்துரை வெற்றிமாலையணிந்து, ஜயபேரிகள் "இலங்கைநாடரைப் பிணிவிட்டது! பிணிவிட்டது! பிணிவிட்டது! கொழும்பு நகரும் பிடிபட்டது! பிடிபட்டது! பிடிபட்டது!" என்றொலிப்பதுபோல் முழங்க, கோட்டைக்குச்சென்று துஜாரோகணஞ்செய்தார். இதன்பின் சின்னாளில் காலியும் பிடிபட்டது. இவ்வாறே ஒல்லாந்தர் 138 வருடமாகக் கட்டியாண்டுவந்த கரைதுறை நாடுகள் எல்லாம் ஒருங்கே ஆங்கிலேயருடைய தண்குடை நிழற்கீழ்ப்பட்டன.

இவ்வாறு ஆங்கிலேயருக்கு எளிதில் வெற்றிகிடைத்ததற்குக் காரணம் ஒல்லாந்தருடைய முயற்சியின்மையும் அவர் சேனாவீரருடைய ஐக்கியமின்மையுமேயன்றி மற்றன்று. கொழும்பில் ஒல்லாந்த தேசாதிபதியாய்க் கடைசியிலிருந்த "வான் அஞ்சல்பேக்" என்பவனை ஆங்கிலேயர் மேற்சென்று காக்காதுவிட்டிருப்பரேல், அவனுடைய சேனாவீரரவனைக் கொன்றிருப்பரென்றால், அவர்களுடைய கீழமைவைப்பற்றிக் கூறவும் வேண்டுமா! "துற்புத்தி மந்திரியால் அரசுக்கீனம்" என்றபடி கீழமையில்லாப் படைவீரரால் அவர்கள் அரசுக்கு இவ்வாறு சீக்கிரத்தில் கேடுண்டாயிற்று. (யா. ச.)

## ஆங்கிலேயர் காலம்.

### (இலங்கையரசு இந்திய அரசுடன் இணைக்கப்படுதல்.)

சிங்கக்கொடியினராம் அங்கிலேயர் மேலே கூறியபடி ஒல்லாந்த அரசினரைச் செயித்து, அவராளுகைசெய்த இலங்கையின் கரைநாடுகளைப்பிடித்து, 1796- ம் ஆண்டு மாசிமீ தம் அரசியலை நடத்த ஆரம்பித்தனர். கண்டிநாடும் அதையடுத்த மத்தியபகுதிகளும் இராசாதிராசன் என்னுங் கண்டி அரசனின் ஆளுகைக்குள் இருந்தன. பிரித்தானியஇராச்சியப் பாளிமேந்திலே இலங்கையரசியலைக்குறித்துத் தர்க்கம் நடந்தது. அப்பொழுது பிரித்தானிய இராச்சிய மந்திரியாராயிருந்த பிற்துரைமகனும், மேல்வில் பிரபுவும் இலங்கையை நேரே இங்கிலந்துடன் சேர்த்து ஆளுகைபுரிதல் நல்லதெனக்கூறினர். அக்காலத்தில் இந்தியாவை அரசுபுரிந்த கிழக்கு இந்திய வர்த்தகசங்கத்தாரின் முயற்சியினால் இலங்கை பிடிக்கப்பட்டமையாலும், அச்சங்கத்தார் இலங்கையை இந்தியாவுடன் சேர்த்து அரசுபுரிய விரும்பினபடியாலும், ஒல்லாந்த அரசினர் தம்முடன் சமாதானமாகும்பொழுது இலங்கையைத் திரும்பவும் அவர்களுக்குக் கொடுக்கவேண்டிவரும் என்று எண்ணினபடியாலும், இலங்கையை இந்திய அரசுடன் சேர்த்து அரசியல் நடத்துவதே தகுதியென்று பாளிமேந்து அங்கத்தவர் பலர் கூற இலங்கை அரசியல் இந்திய அரசின் பொறுப்பில் விடப்பட்டது. இலங்கை இந்தியாவின் திறவுகோலாயும், அது கீழைத்தேச வியாபாரங்களுக்கு மத்திய ஸ்தலமாயுமிருந்தபடியால், அங்கிலேய அரசினர் பின்னர் ஒல்லாந்த அரசினருடன் சமாதானமானபொழுது அவர் இலங்கையை ஒல்லாந்த அரசினருக்குக் கொடுக்க மனமற்றவராய் இலங்கைத்தீவுக்காய் யாவாதீவை ஒல்லா

* இவன் சிறிதுகாலம் கொழும்பில் ஆங்கிலேயருடைய பாதுகாப்பிலிருந்து பின் தற்கொலைபுரிந்துகொண்டிறந்தான்.

ந்தருக்குக் கொடுத்து, இலங்கையை அங்கிலேய அரசுக்குச் சொந்தமான நாடாக்கிக்கொண்டனர்.

(அந்திரேசின் அதிகாரமும் கலகமும்)

இந்திய அரசுடன் இணைக்கப்பட்ட இலங்கை, சென்னைத் தேசாதிபதியாகிய கோபாட் பிரபுவின் பரிபாலனத்தின் கீழ் விடப்பட, அவர் இலங்கையரசியலைச் சீராக்கி நடத்த அந்திரேசு என்னுந் துரைமகனை இலங்கை அரசிறை அதிகாரியாக அனுப்பினர். உலகியல் அறியாதவனும் அவிவேகியுமாகிய அந்திரேசு இலங்கைக்கு வந்து, முன் இவ்விடமிருந்து அரசிறைகளைத் திரட்டிய சிங்கள அதிகாரிகளைத் தள்ளி, அவர்களிடத்தில் இந்திய தமிழரை அதிகாரிகளாக நியோகித்து, அநியாய வரிகளை விதித்துக் கொடுங்கோன்மையாய் அதிகாரஞ் செலுத்தினன். அவனால் நியோகிக்கப்பெற்ற தமிழ் அதிகாரிகள் குடிகளுக்குச் செய்த இடுக்கண்களும் அநியாயங்களும் பலவாம். அவைகளை மேலதிகாரிகள் தடாதுவிட்டமையால் அக்கொடுமைகளைச் சகிக்கலாற்றாத சிங்களப் பிரபுக்கள் ஒல்லாந்தரின் உதவியுடன் சனங்களைக் கலகஞ்செய்யும்படி ஏவி, அனேகரைத்திரட்டி, கி.பி. 1797-ம் ஆண்டு அங்கிலேயருக்கு விரோதமாயெழுந்து, கொழும்புக்கும் கண்டிக்கும் இடையிலிருந்த அரண்களையெல்லாங் கைப்பற்றி, எதிர்த்த அங்கிலேயரைக் காயப்படுத்தியுங் கொன்றும் சிலநாட்களாய்ப் பெருந் துன்பஞ்செய்துவந்தனர்.

அங்கிலேயர் கொழும்பை அரசுபுரிந்த ஐந்து மாதங்களுக்குள் அங்கிலேய சேனாவீரருள் மூவர் கொல்லப்பட்டாலும் அங்கிலேயர் இளைப்படையாமல் சில சேனாவீரரைத் திரட்டி அனுப்ப, இருகட்சியாருக்கும் பல இடங்களில் யுத்தம் நடந்தது. இருகட்சியாருக்கும் பெரிய நட்டமுண்டானது. ஈற்றில் கலகக்காரர் கீழடங்கினர். அக்காலத்தில் வன்னிநாட்டை யாண்ட பண்டார வன்னியனும் ஓர் சேனையைச் சேர்த்து அங்கிலேயருக்கு மாறாய் வீறுகொண்டு எழுந்து அங்கிலேயரைத்தாக்கி, அவர் போர்வீரருள் சிலரைக் கொன்று எஞ்சியவர்களைப் பின்னிடச்செய்தான். சிறிதுகாலத்தின்பின் ஆங்கிலபடைவீரர் சென்று அவ் வன்னியனையும் அவன் சேனையையுங் கொன்று அவன் பொருட்களையெல்லாங் கவர்ந்துகொண்டனர்.

இலங்கை நேரே இங்கிலந்துடன் சேருதல்.

இலங்கையில் நடந்த கலகத்தைக்கேள்வியுற்ற சென்னைத்தேசாதிபதி அக்கலகத்தின் மூலகாரணங்களை யாராய்ந்து அறிவிக்கும்படி டீமியூறன் என்னுஞ் சேனைத்தலைவனை இலங்கைக்

கனுப்பினர். அவன் கொழும்புக்கு வந்து கலகமூலகாரணங்களைச் சரியாய் விசாரணை செய்து, அதன் வரலாறுகளை விபரமாயெழுதித் தேசாதிபதிக்கு அறிவித்தான். இனிமேல் . இலங்கை நேரே இங்கிலந்துடன் சேர்க்கப்பட்டு ஆளப்படுதலே தகுந்த முறையென்று சென்னைத் தேசாதிபதி உடனே பிரித்தானிய இராச்சிய வேந்தராகிய மூன்றாம் யோட்சு மன்னவருக்கு அறிவித்தனர். மன்னவர் அச்செய்தியை மகிழ்வோடு அங்கீகரித்து, இலங்கையை இங்கிலந்துக்கு ஓர் உபராசாங்க நாடாக்கி, பிரதரிக் நோர்து பிரபுவை இலங்கைத்தேசாதிபதியாக நியமித்து இலங்கைக்கு அனுப்பினர். அவர் கி. பி. 1798-ம் ஆண்டு ஐப்பசிமீ இலங்கைக்கு வந்து கொழும்பில் வசித்து அரசியலைக் கையேற்று நடத்தினர். கி. பி. 1800-ம் ஆண்டு வரைக்கும் இலங்கைத் தேசாதிபதி சென்னைத்தேசாதிபதிக்குக் கீழ்ப்பட்டவரா யிருந்தார்.

## பிரதரிக் நோர்து தேசாதிபதியின்காலம்.
## கி. பி. 1798-1805.

இலங்கையரசியலைக் கையேற்ற நோர்து தேசாதிபதி அதி யூகசாமர்த்தியத்துடன் அரசர்க்குரிய சதுருபாயங்களையுங் கையாடி, கலக விசாரணைத் தலைவனாகிய திமியூறனின் விண்ணப்பத்துக்கு இசைந்து, அரசிறை திரட்ட அந்திரேசால் நியமிக்கப்பட்ட இந்திய தமிழரை நீக்கி, பூர்வமுறைப்படி சிங்களப் பிரபுக்களை இறைசேர்க்கும் அதிகாரிகளாய் நியமித்து, அங்கிலேயர் முறைகளுக்குக் கீழ்ப்படியாத ஒல்லாந்தர் செருக்கையும் அடக்கினர். இலங்கையில் வசித்த ஒல்லாந்த குடிகள் ஒல்லாந்தர் அரசியல் சீக்கிரம் மறுபடியும் இலங்கையில் நடைபெறுமென்று நம்பினபடியால், அங்கிலேய அரசுக்குச் சத்தியஞ்செய்துகொடுத்து அவர்கீழ் உத்தியோகம்புரிய மறுத்து நின்றனர். ஒல்லாந்த குடிகளுள் சிலர் அங்கிலேயருக்கு விரோதமாயெழுந்து கலகஞ்செய்தனர். அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் வசித்த சில ஒல்லாந்த குடிகளும் அவரோடுகூடிய சில வன்னியரும் சேர்ந்து அங்கிலேயருக்கு விரோதமாய்க்கலகஞ்செய்ய அதைக்கேள்வியுற்ற நோர்து தேசாதிபதி அக்கலகக்காரரின் வீடுகளையும் நிலங்களையும் பொருட்களையுங்கவர்ந்துகொண்டு அவர்களை இவ்விடத்தினின்றும் ஓட்டிவிட்டனர். அதனால் எஞ்சிய ஒல்லாந்தர் அங்கிலேய அரசுக்குக் கீழ்ப்படிந்து அடங்கிநடந்தனர். யாழ்ப்பாணநாடு இலங்கையோடு இணைக்கப்பட்டு நோர்து தேசாதிபதியின் ஆளுகையின் கீழ் துட்டநிக்கிரக சிட்டப்பரிபாலனம் பொருந்திய நல்லரசைப்பெற்றது. கலகக்காரர் யாழ்ப்பாண

த்திற் கிளம்பாதபடிக்கும், தொள்ளைக்காரரின் கொடுமைகளை யழித்தற்கும், நல்லரசு கிரமமாய் நடைபெறுவதற்கு உதவியாகவும் யாழ்ப்பாணக்கோட்டையில் சிப்பாயிப்பட்டாளம் நிறுத்தப்பட்டதுடன் பீரங்கிமுதலாம் போர்க்கருவிகளும் சேர்த்து வைக்கப்பட்டன.

ஒல்லாந்த அரசினரால் விதிக்கப்பட்ட பலவரிகளை அங்கிலேயவரசினரும் தமது அரசாட்சியின் ஆரம்பகாலத்தில் குடிகளிடம் வாங்கி வந்தனர். அவ்வரிகளுள் கனிதருவிருட்சவரியென்றும், பழவரியென்றும் அழைக்கப்பட்ட வரியொன்றும். தென்னமரங்களுக்கும் ஏனைய பழ விருட்சங்களுக்கும் மரமொன்றுக்கு ஓரணுவிதம் வரிகொடுத்தல் குடிகள் கடமையாயிருந்தது. இவ்வரிகளைச் சேர்த்துவந்த தமிழுத்தியோகஸ்தர் கொடுமையினுல் குடிகள் மறுபடியுங் கலகஞ்செய்ய, நோர்துதேசாதிபதி அக் கலகங்களைக்குறித்துத் தக்கவாறு ஆராய்ந்து, அக்கலகங்களுக்குக் காரணராயிருந்த உத்தியோகஸ்தர்களை உத்தியோகத்தினின்றும் நீக்கி, கலகங்களையடக்கிக் குடிகளை நீதியாயபரிபுரிந்து சமாதானம்பெருக ஆளுகைசெய்தனர். இவர் 1800-ம் ஆண்டு ஐப்பசிமாசத்திலும், 1802-ம் ஆண்டு பங்குனிமாசத்திலும் யாழ்ப்பாணத்தைத் தரிசித்துச் சனங்களின் குறைமுறைகளை விசாரணைசெய்து, உத்தியோகஸ்தர்] நீதியாய்ப் பரிபாலனஞ்செய்யக் கற்பித்துச் சனங்களுக்குள் சுதேச கல்வி விருத்திபாக அரசாட்சியார் செலவில் யாழ்ப்பாணம், மன்னர் என்னுமிடங்களில் 47 பாடசாலைகளை ஸ்தாபிக்க ஒழுங்குசெய்து, அப்பாடசாலைகளுக்குச் சுண்டிக்குழியில் வசித்தவரும், அரசாட்சியாரின் குருவாயிருந்தவருமாகிய கனம். கிறிஸ்தியன் டேவிற் போதகரை முகாமைக்காரனுக்கி இராசதானி சென்றனர்.

1800-ம் ஆண்டு வடமாகாணத்திலுள்ள அனேக மாடுகள் கோமாரியால் அழிந்தன. இந்தப்பெரிய அழிவினுல் உழவுக்கு மாடில்லாமற்போகப் பயிர்ச்செய்கை மிகக் குறைந்தது. நாட்டுக்கோட்டைச் செட்டிகள் இவ்வருஷத்திலேயே யாழ்ப்பாணத்தில் முதல் முதல் நெல்லு வியாபாரஞ்செய்ய ஆரம்பித்தனர். அவர்கள் நாகபட்டினம் முதலியவிடங்களிலிருந்து மரக்கலங்களிலும், வன்னி நாட்டிலிருந்து பொதிமாடுகளிலும் நெல்லுக் கொண்டுவந்து யாழ்ப்பாணத்திலுள்ள தமது பண்டசாலைகளில் வைத்து விற்றுவந்தனர். அவ்வருஷத்திலே முத்துக்குளிப்பும் நடைபெற்றது. அவ்வருஷ முத்துக்குளிப்பால் அரசினர்க்கு இரண்டு லட்சம் ரூபா வருமானமாயிற்று.

நோர்த் பிரபு இலங்கைத் தேசாதிபதியாய் வந்த 1798-ம் வருடத்திலே கண்டியரசனாகிய இராசாதிராசசிங்கம் மரணமடைந்தனன். இவனுக்கு ஐந்து மனைவியரிருந்தும், அரசுரிமைக்குரிய சந்ததியில்லாமையால், முதல் மந்திரியாகிய பிளிமைத்தலா அரசனின் 2-ம் மனைவியின் சகோதரி மகனும் 18 வயசு உடையவனும் நிரட்சரகுட்சியுமாகிய கண்ணசாமி என்பவனைத் தெரிந்து முடிதரித்து அரசனாக்கினான். எழுத்தறியா மூடசாமியாகிய இக்கண்ணசாமி, சிறீ விக்கிரமாசசிங்கன் என்னும் பட்டப்பெயர்தரித்து அரசுபுரிந்தான். இலங்கை வேந்தரில் கடைசியானவன் இவனே. பேராசைக்காரனும், சதியாலோசனைப் பிரியனும், தன் நயங்கருதி இராச்சியத்தை நடத்துங் கருத்துடையவனுமாகிய பிளிமைத்தலா தன்னெண்ணப்படி கண்ணப்பசாமியை அரசனாக்கினபின், இராசாதிராசசிங்கனின் முதல்மனைவியின் சகோதரர் சனங்களையேவி யுத்தஞ்செய்து அரசுரிமையைக் கைப்பற்ற வழக்கிடுவாரென யோசித்து, பங்கருசாமி, ராசசாமி என்பவர்களைச் சிறைசெய்து, முத்துச்சாமி முதலாம் ஐவரையும் நாட்டினின்று மோட்டிவிட்டான்: அவர்கள் ஐவரும் கொழும்புக்குச் சென்று அங்கிலேயரைச் சரணடைந்தனர். அங்கிலேயர் அவர்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப, அவர்கள் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் இராசமாளிகையில் வசித்தனர். அவர்கள் யாழ்ப்பாணத்தி லிருக்கும் பொழுது அவர்களுள் முத்துச்சாமியென்பவனை ஓர் கொடிய நாகந் தீண்ட பலவிஷவைத்தியர் அவ்விஷத்தை நீக்க முயன்றும் விஷம் இறங்காது தலைக்கேறிற்றென்றும், அக்காலத்தில் சகலவகையான வைத்தியங்களிலும் ஒப்பாரும் மிக்காருமில்லாது திசையெங்கும் இசைநிறுத்தி விளங்கினவராகிய இருபாலைச் சேட்டியார் மூலம் விஷந் தீர்ந்ததென்றும் பழங்கதை கூறும்.

பிளிமைத்தலா மந்திரி சிறீவிக்கிரம இராசசிங்கன் என்னும் அரசனை நீக்கி, அங்கிலேய அரசினர் சகாயத்தினால் தான் கண்டிக்கு அரசனாகப் பலவகையாய் முயற்சித்தான். அவன் முயற்சிகளுக்கு நோர்த் தேசாதிபதி ஒத்துப்போகாமையால், அங்கிலேய அரசினர்க்கும் கண்டியரசனுக்கும் பகையுண்டாக்கத்தக்க சம்பவங்கள் நடைபெறவும்; இருபகுதியாருக்குமிடையில் யுத்தமுண்டாகவும் பல சூழ்ச்சிகள் செய்தான். அப்பொழுதுண்டான யுத்தத்தினால் கண்டியரசன் அங்கிலேயர்க்குப் பயந்து கண்டியைவிட்டு அக்குறுங்கட்டைக்கோடியொழித்தனன். அக்காலத்தில் கண்டிநாட்டுக்கு அங்கிலோ சேனையை நடத்திச் சென்ற பிரதான சேனாபதியாகிய மக்டோவல் தளபதி நோர்

து தேசாதிபதி அனுமதியுடன் யாழ்ப்பாணத்திலிருந்த முத்துச்சாமியை அழைத்து 1803-ம் ஆண்டு ஆடிமீ 8-ந் திகதி அவனுக்குக் கண்டிநகரிலே சிங்களரின் சாதியாசாரம் சமயாசாரம் தவறாது முடிசூட்டி அவனைக்கண்டிநாட்டுக்கு அரசனாக்கி அவனுடன் ஒருடன்படிக்கை செய்துகொண்டான். "தானொன்றை நினைக்க அதுவேறொன்றாய்முடிந்த"தைக்கண்ட பிளிமைத்தலா னோர்து தேசாதிபதியுடன் வேறோருடன்படிக்கை செய்ய முயற்சித்தான். தேசாதிபதி "அரசனுயிர்க்கு அபாயமின்றி அவனை எம்மிடம் ஒப்புவித்தால், உன்னைக் கண்டியரசனாகவும், முத்துச்சாமியை வன்னிநாட்டின் அதிபனாகவும் நியமனஞ் செய்வோம். நீ இதற்குப் பிரதியாக எங்களுக்குச் சத்தகோறளையையும், புதிதாய்க்கட்டப்பட்ட மக்டோவல் கோட்டையையும், கொழும்பிலிருந்து திரிகோணமலைவரைக்கும் ஓர் பாதை திறத்தற்குப் போதிய நிலத்தையும் விடவேண்டும். முத்துச்சாமியின் சம்ரட்சணைக்காய் வருஷம் 30,000 இறைசால்வீதம் நீ அவனுக்குக் கொடுக்கவேண்டும்" என ஓர் கடிதமெழுதி பிளிமைத்தலா மந்திரிக்கு அறிவித்தனர். அதற்கு மந்திரி சம்மதித்துக் கண்டியிலிருந்த மக்டோவல் தளபதியுடன் தேசாதிபதி கேட்டுக்கொண்டபடி ஒருடன்படிக்கை செய்துகொண்டான். மக்டோவல் தளபதி கண்டியில் ஓர் சிறுச்சேனையைக் காப்புச்சேனையாக நிறுத்திக் கொழும்புசெல்ல, அச்சேனையினுதவியுடன் முத்துச்சாமியரசன் சிலகாலம் கண்டியிலிருந்து அரசுபுரிந்தான். பிளிமைத்தலாவும் மற்ற மந்திரிமாரும் அங்கிலேயருடன் பிலாமைத்தலாவா செய்த உடன்படிக்கைப்படி நடக்க உறுதியாய் நின்றாலும், மற்றைய அதிகாரிகள் பழைய கண்டியரசனுக்குச் சார்பாய்நின்று சனங்களைத் திரட்டி அங்கிலேயரை யெதிர்த்துவந்தனர். கண்டிநாட்டில் நிறுத்தப்பட்ட ஆங்கில சேனையில் சேர்ந்த மலாய்வீரர் பலர் சிங்களவர்பக்கஞ்சேர ஆங்கில வீரர் பலர் நோய்வாய்ப்பட்டும் மரணமடைந்தும்போயினர். இவற்றைச் சிறீ விக்கிரமராசசிங்கனறிந்து அனேக சிங்களவீரரைத் திரட்டி வந்து 1803-ம் ஆண்டு ஆனிமாசம் கண்டியிலிருந்த ஆங்கிலசேனையைத் தாக்கினன். ஆங்கிலேயவீரர் சிறிதுநேரம் யுத்தம்புரிந்தும் தாம் வெல்லுதலரிதெனக்கண்டு சமாதானத்துக்கு அறிகுறியாக வெள்ளைக்கொடியை உயர்த்தினர். அந்நிமிஷமே யுத்தமொழிந்தது. கண்டிநாட்டில் அப்பொழுது ஆங்கில சேனைத் தலைவனாயிருந்த டேவியும் அவன் வீரரும் முத்துச்சாமியரசனும் தத்தம் ஆயுதங்களுடன் கண்டியைவிட்டுச்செல்ல உத்தரவுபெற்றனர். கண்டியரசன் தனது இராச்சியத்தைப் பெற்றாலும், தன் பகைவர் பேரிற் கொண்ட கோபாக்கினியையடக்கமுடியாது தன் சேவ

அரையனுப்பி, முத்துச்சாமியையும் அவன் பரிசனரையும் பிடித்துக்கொண்டுவரும்படி ஏவி, அவர்களைத் தன்முன் நிறுத்தி முத்துச்சாமியையும் அவன் சகோதரரையும் அவன் மாமனையுஞ் சிரபங்கஞ் செய்வித்தான்.

நோர்து தேசாதிபதியின் காலத்திலே கண்டியரசனலுண்டாயின கலகங்கள் இடையிடையே நடந்தாலும் பல திருத்தங்களுமுண்டாயின. ஒல்லாந்த அரசினர் முன்னே கத்தோலிக்க கிறீஸ்தவர்களுக்கு இடுக்கணுக உண்டாக்கியிருந்த ஏற்பாடுகளை இத்தேசாதிபதி நீக்கி, பிரசைகளியாவர்க்கும் சமய இஷ்டங்கொடுத்து, தேசத்தில் நீதிபரிபாலனஞ் சரியாய்நடைபெற நியாய ஸ்தலங்களை ஸ்தாபித்து, சுதேசகல்வி விருத்தியாகச் சுதேசபாடசாலைகளை நடைபெற ஒழுங்குசெய்து, உத்தியோகம்பார்க்கத் திறமையுடைய சுதேசிகளுக்கு உத்தியோகங்கள் கொடுத்து, கமத்தொழில், வர்த்தகமாதியவற்றை விருத்தியாக்க உதவிபுரிந்து நல்லாளுகைசெய்தனர்.

இவர்காலத்தில் 1799-ம் ஆண்டு முன்னடைபெற்றுவந்த சித்திரவதை நீக்கப்பட்டது. 1802-ம் ஆண்டில் "கசெற்" என்னும் அரசாட்சிப் பத்திரிகை ஆரம்பமாயிற்று. 1803-ம் ஆண்டு அக்கடெமி என்னும் வித்தியாசாலை கொழும்பில் அரசினரால் ஸ்தாபிக்கப்பட்டது. இத்தேசாதிபதி காலத்திலே 1804-ம் ஆண்டு லண்டன்மிஷனரிமார் இலங்கையில் வந்து சுவிசேஷத்தைப் பரப்பினர். அவருள் ஒருவராகிய பாம் பாதிரியார் அந்த ஆண்டிலே யாழ்ப்பாணம் வந்து தெல்லிப்பழையில்வசித்துச் சுவிசேஷத்தைக் கூறிவந்தனர். நோர்து தேசாதிபதி தம் ஆளுகையை முடித்து இங்கிலந்துக்குச் செல்ல 1805-ம் ஆண்டு சேர் தோமஸ்மேயிற்லன்ட் தேசாதிபதியாகி இலங்கையரசை நடத்தினர்.

## சேர் தோமாஸ் மேயிற்லன்ட்
## (1805—1811.)

இவர் தேசாதிபதியாய் ஆளுகைபுரிய ஆரம்பித்தபொழுது லீஷ்டன் சிரேஷ்ட நீதிபதியாகவும், றட்னி என்பவர்(கொலோனியல் செக்கிறிற்றெரி) இராசாங்க லிகிதராகவும் நியமனம்பெற்றுவந்தனர். இத்தேசாதிபதி காலத்திலே யாதோர் யுத்தமும் நடைபெறுதிருந்ததுடன் அரசியல் முன்னையிலுஞ் சீராய் நடைபெற்றது. 1806-ம் ஆண்டு ஆடிமாசத்திலே யாழ்ப்பாணத்திலே ஊர்கடோறும் அரசினரால் விதானைமார்கள் நியமிக்கப்பட்டனர். அக்காலத்தில் ஊர்கடோறும்நடந்துவந்த கலகம்,

சண்டை, களவு முதலாம் அக்கிரமங்கள் நடைபெறுதபடி ஊரைச் சரியாய்ப் பாதுகாத்துக்கொள்ளவே இவ்விதானைமார் நியமிக்கப்பட்டனர். அக்காலத்திலே நாட்டாரையடக்கித் தேசத்தைப் பாதுகாத்துக்கொள்ளத்தக்க செல்வாக்குடையவர்களே இப்பதவிக்கு நியமிக்கப்பட்டனர். பறங்கிக்காரர்காலமுதல் யாழ்ப்பாணத்திலே வாங்கப்பட்டு வந்த பூணூலவரியென அழைக்கப்பட்ட ஆபரணவரி (நகைவரி) இந்த ஆண்டிலே இத்தேசாதிபதியால் நீக்கப்பட்டது. இவ்வரி நீக்கப்பட்டதை யறிந்த யாழ்ப்பாணவாசிகள் மிகமகிழ்ந்து இத்தேசாதிபதியையும் ஆங்கிலேய அரசையும் புகழ்ந்து கொண்டாடினர். அந்நாளில் வண்ணார்பண்ணையில்வசித்த பெரிய தாமோதரம்பிள்ளை என்பவரே இந் நகைவரிக்குத்தகையை வாங்கி நடத்தினவராம். இத்தேசாதிபதிகாலத்தில் மற்ற வரிகளைக் குத்தகைகாரர் தம்மனம் போனபடி வாங்காது, சட்டப்படி கூடாமலும் குறையாமலும் நியாயமாய் வாங்கும்படி கண்டிப்பான கட்டளை யிடப்பட்டது. நெல்லுப் பத்திலொருபகுதி வாங்கப்பட்டது. ஒருபறை இரண்டுபணமாக விற்கப்பட்ட உப்பு, பன்னிரண்டுபணமாக விற்க ஒழுங்குசெய்யப்பட்டது. அக்காலத்தில் அரசினரால் கள்ளுக்குத்தகை, சாராயக்குத்தகைகளும் விற்கப்பட்டன. இவற்றால் அக்காலத்தில் அரசுக்குவந்த இறை மிக அற்பமாம்.

நோர்து தேசாதிபதிகாலத்தில் 1801-ம் ஆண்டு சுதேச கல்வி விருத்திக்காய் ஸ்தாபிக்கப்பட்டு அரசாட்சியார் செலவில் நடைபெற்றுவந்த பாடசாலைகளியாவும் (இலங்கை முழுவதிலும் 170 பாடசாலைகளும், யாழ்ப்பாணத்தில் 47 பாடசாலைகளுமிருந்தன.) இத்தேசாதிபதி காலத்தில் 1805 ம் ஆண்டு இலங்கை அரசிறையில் போதிய பணமின்மையால் நிறுத்தப்பட்டன. இது துக்கமான சம்பவமாம். இதற்குப்பின் 60 வருடங்களாய் யாழ்ப்பாணத்திலே சுதேசகல்வியை விருத்தியாக்க அரசினர் யாதும் முயற்சி செய்யவில்லை. இவ்விடம்வந்த மிஷனரிமாரே சுதேச கல்வியையும் ஆங்கிலபாஷைக் கல்வியையும் விருத்தியாக்க அதிகம் முயற்சி செய்தனர். அதைப்பற்றி விரிவாய்ப் பின்னர்க்கூறுவாம்.

ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்த தேசாதிபதிகளிருந்து அரசியலை நடத்தினர். அங்கிலேயர் காலத்தில் இலங்கை முழுவதும் ஒரேதேசாதிபதியின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. அங்கிலேய தேசாதிபதிகள் இலங்கையை மாகாணங்களாய்ப்பிரித்து ஒவ்வோர் மாகாணத்துக்கும் ஒவ்வோர் ஏசண்டரை (இவர்களுக்கு ஆரம்பத்தில் (Collector) கலெக்கட்டர்

என்னும் பெயர் வழங்கின்து. இப்பெயர் இப்பொழுதும் இந்தியாவில் அவ்வகை உத்தியோகஸ்தருக்கு வழங்கப்பட்டு வருகிறது. பிற்காலத்தில் அச் சொல்லைவிட்டு (Agent) ஏசண்டர் என்னும் பெயர் வழங்கலானது.) நியமித்து அரசிறைகளைத்திரட்டி ஆளுகைசெய்ய ஒழுங்குபண்ணி வந்தனர். இவ்வகையாய் வடமாகாணத்துக்கு முதல் நியமிக்கப்பட்ட ஏசண்டர் கர்னல் பார்பெற் என்பவராம். இவர் 1801-ம் ஆண்டு இவ்விடத்தில் அதிகாரியாயிருந்து ஆளுகைபுரிந்தனர்.

"கர்னல் பார்பெற் என்பவர் வடமாகாண அதிகாரியாகநியமனம்பெற்று யாழ்ப்பாணத்துக்கு வந்தனர். அவருக்கு உதவி அதிகாரிகள் அமில்தார் எனப்படுவர். மன்னார், முல்லைத்தீவு, வவனியா, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, ஊர்காவற்றுறை என்னுமிடங்களில் ஒவ்வோர் அமில்தார் இருந்து இறை திரட்டிவந்தார்கள். ஒவ்வோர் அமில்தாருக்கும், எழுத்துக்காரன், மணியகாரன், ஆராய்ச்சி, சராப்பு, கணக்கன், கொத்தவால், கண்காணி, பதினைந்திருபது சேவகர்கள், ஒரு விளம்பரப் பறையன் என்னும் இவ்வளவு வேலைக்காரரிருந்து காருமம் பார்ப்பர். அந்நாளில் அமில்தாருக்கு சம்பளம் ரூபா 75. எழுத்துக்காரனுக்கு (கிளாக்) ச்சம்பளம் ரூபா 13-50. சராப்பு சம்பளம் ரூபா 11-25. கொத்தவால், கணக்கன், ஆராய்ச்சி, மணியகாரன் இவர்களுக்கெல்லாம் தனித்தனி ரூ. 8-25 சேவகர்க்கு ரூ. 2-75. பறையனுக்கு ரூ. 1-50. இந்தச் சம்பள விகிதங்கள் சிற்சிலபகுதிகளிலே கூடியுங் குறைந்துமிருக்கும்." (மா-ச-ம்.)

யாழ்ப்பாணக்கோட்டைத் தளகர்த்தராயும், வடமாகாணக் கொம்மிஷராயுமிருந்த இந்த ஏசண்டர் கச்சேரி வளவில் வசித்து, அப்போதைக்குச் செய்யப்படவேண்டியிருந்தவைகளைச் செய்து, தமது கடமைகளை மிக முயற்சியாயும் விவேகமாயும் நிறைவேற்றிக் குடிகள் மனங்களைத் தம்பா லிழுக்கத்தக்கதாய் நல்லரசுபுரிந்தனர்.

கர்னல் பார்பெற் என்பவர் தம் அதிகாரத்தை விட்டுப்போக 1808-ம் ஆண்டு மார்கழிமீ 2-ந் உ. றிக்குசாலியன் என்னுந் துரைமகன் ஏசண்டராகி ஒன்பது வருடங்களாய் இந்நாட்டில் ஆளுகைசெய்து, குடிகளுக்கு அவசியம் வேண்டியவைகளைச் செய்து வந்தனர். அவருடைய இடத்துக்கு 1817-ம் ஆண்டு மாசி மீ 3-ந் உ. கூப்பர் என்பவர் நியமனம்பெற்று வந்து பன்னிரண்டுவருடங்களாய் யாழ்ப்பாணத்தை ஆளுகை செய்தனர்.

இவ்வூரிலேயுள்ள பிரபுக்கள் தங்கள் அடிமையாட்களை இராப் பகலாய் வருத்தி வேலைகொள்வதைத் தடுத்துக் கிரமமாய் நடத்த அவர் ஒழுங்குசெய்தனர்.

அங்கிலேயர் ஆட்சியின்பின் இந்நாடு பற்பல திருத்தங்களைப் படிப்படியாய் அடைந்துவந்தது. பிரசாநயாபேட்சகராகிய பிரித்தானிய அரசினர் யாழ்ப்பாணத்தைச் செம்மையாய் ஆளுகைசெய்யவும், நீதி நடைபெறவும், சனங்களுக்கு நல்வாழ்வு பெருகவுந் தக்க ஒழுங்குகளைச்செய்து, தம்முயிர்போல் மன்னுயிரை அன்புடன் ஆதரித்து வந்தனர். யாழ்ப்பாணத்திலே நல்லாளுகை நடைபெறுதற்குதவியாய் அங்கிலேய அரசினர் இதற்கு முன்னும் பின்னுஞ் செய்த விசேஷ எத்தனங்களை மீண்டுந் திரட்டிக் கூறுகின்றோம்.

யாழ்ப்பாண நாடு, யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமங்கிழக்கு, வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, தீவுபற்று என்னும் எட்டு மணியப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வடமாகாண அதிகாரியாகிய ஏசண்டரின் கீழ், அவருக்குதவியாய் ஒவ்வொருமணியப்பிரிவுக்கும் ஒவ்வொரு மணியகாரர்மாரும், அவர்கீழ் பல உடையார் விதானைமாரும் நியமிக்கப்பட்டு, அரசிறையை ஒழுங்காய்ச்சேர்ப்பதற்கும், பிரசைகளைப் பாதுகாப்பதற்கும் உதவிபுரிந்து வந்தனர். நீதிநெறி தவறாது செங்கோல் செலுத்தும் அங்கிலேயர் இவ்விடப் பிரசைகளுக்கு நேரிடுங் குறைமுறைகளான வழக்குகளை விளங்கி நீதிசெய்து, துட்டநிக்கிரக சிட்டபரிபாலனம் பண்ணும்பொருட்டு, யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, மல்லாகம், பருத்தித்துறை, சாவகச்சேரி என்னும் இடங்களில் பொலிசுக் கோடுகளை ஸ்தாபித்து, அவற்றுக்கு வேண்டிய கட்டிடங்களையுங் கட்டிப், பொலிசுநீதிபதிகளையும், அவர்கீழுள்ள உத்தியோகஸ்தர்களையும் நியமித்து அவை சீராய் நடைபெற ஒழுங்குசெய்தனர். நூறு ரூபாவுக்குமேற்பட்ட வியாச்சியங்களையும், பொலிசுக்கோட்டில் விளங்கமுடியாத கிறிமினல் வழக்குகளையும் விளங்கித் தீர்ப்பதற்கு இந்நாடுமுழுவதற்குமாய் ஓர் டிஸ்திறிக்கோட்டை ஸ்தாபித்து, அக் கோட்டலுவல்கள் நடைபெறத்தக்க கட்டடங்களையமைத்து, மாகாண நீதவான், சக்கடுத்தார் (லிகிதர்), துவிபாஷிகர் முதலியோரையும் ஏற்படுத்தினர். எம்மூர் நியாயதுரந்தரருள் அனேகர் இக்கோட்டையே தமது உத்தியோக ஸ்தானமாய்க்கொண்டு, வாதி, பிரதிவாதிகள் பட்சஞ்சேர்ந்து, அவ்வப் பட்சத்தாருக்காய்த் தோற்றி, நியாய வாதுபுரிந்து பெரிய உழைப்பு உழைக்கின்றனர். இவ்விருவகைக் கோடுகளினுந் தீர்க்கப்பட்ட தீர்ப்பில்

திருத்தியற்றோர் கொழும்பிலுள்ள சுப்பிறீங் கோட்டாருக்கு அபயம்பண்ணி அங்கே விளங்கி நியாயம் பெற்றுக்கொள்ளவும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. அத்தீர்ப்பிலுந் திருத்தியற்றோர் இன்னும் 'பிறிவிக்கவுன்சில்' என்னும் மேற்கோட்டுக்கு விண்ணப்பம்பண்ணி நீதியான தீர்ப்பைப்பயடைய அங்கிலேய அரசினர் விசேஷ ஒழுங்கு செய்திருக்கின்றனர்.

மேலே குறித்தபடி, பொலிசுக்கோடுகள், பெரியகோடுகளில் தீர்க்கப்படக்கூடாத பாரிய வழக்குகளாம் கிறிமினல்வியாச்சியங்கள் 'சுப்பிறீங்கோடு' என்னும் மகாகோட்டுக்குப் பாரப்படுத்தப்படும். அவ்வழக்குகளை விளங்கித் தீர்ப்பதற்கு யாழ்ப்பாணத்திலேயுள்ள பெரியகோட்டிலே வருடம் இரண்டுமுறை சுப்பிறீங்கோடு கூடும், கொழும்பிலிருக்கும் சுப்பிறீங்கோட்டு நீதிபதிகளிலொருவர் குறித்தகாலங்களில், தமது இரகசிய லிகிதர், முடிக்குரிய நியாயதுரந்தரர், சுப்பிறீம் கோட்டு லிகிதர், சிங்கள தமிழ்த் துவிபாஷிகர் புடைசூழ யாழ்ப்பாணம் வந்து, யூரிமார்முன்பாக வழக்குகளை விசாரணைபண்ணி, யூரிமார் தீர்ப்பைக்கேட்டு அவ்வக் குற்றங்களுக்குத் தக்க தண்டனை விதிப்பர். மரணதண்டனைவிதிக்க இவருக்கு அதிகாரமுண்டு. ஆயின் அத்தீர்ப்புத் தேசாதிபதியுடைய உத்தரவின்றி நடைபெறமாட்டாது. இக்கோட்டுத் தீர்ப்பை மாற்றத் தேசாதிபதிக்குமாத்திர முரித்துண்டு. இவ்வகையாய் நீதிபரிபாலனஞ் செவ்வே நடைபெறத்தக்க ஒழுங்குகள் யாவும் செம்மையாய்ச் செய்யப்பட்டிருக்கின்றன. முன்னர் அநியாயமான காரிருள் மூடியிருந்த யாழ்ப்பாணத்திலே ஆங்கிலேய அரசினருடைய இவ்வகை நல்லொழுங்குகளினால், நீதியான சூரியனுதயமாயிற்றெனக் கூறத்தக்கதாய்ச் செல்வருக்கும், வறிஞருக்கும், கற்றோர்க்கும், மற்றோர்க்கும், வல்லவர்களுக்கும், ஏழைகளுக்கும் சமமே நீதி கிடைக்கத்தக்க காலமாய்விட்டது. வேலி பயிரை மேய்ந்த கணக்கில் பிரசைகளை நெருக்கி அநீதியாய் ஒடுக்கின சில உத்தியோகஸ்தர், மேலதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டு, விசாரணையில் குற்றவாளிகளாகிப் பெருந்தண்டனைக்குள்ளாயினர். அப்படியான சிலர் அரசதண்டனைக்குத் தப்பினும் தேவதண்டனைக்குத் தப்பவில்லை. பொதுவாய் அனேக உத்தியோகஸ்தர் அரசும் பிரசைகளும் உவப்பத் தமது உத்தியோக கடமைகளை நீதியாய்ப் பார்த்துவருகின்றன ரென்பது வெளிப்படையாம்.

இவைகளைவிடச் சனங்களின் வசதிக்கும் நல்வாழ்வுக்கும் உதவியாய், கச்சேரி, தபாற்கந்தோர்கள், இஞ்சினீர்க்கந்தோர்,

காணிப்பதிவுக்கந்தோர், அதுப்பார்த்தி முதலாம் பல ஸ்தாபனங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்திலே அங்குமிங்கும் போக்குவரத்துக்கு வசதியாய்ச் சில தெருக்களுஞ்செப்பனிடப்பட்டன. இவ்வகையாய் அங்கிலோ அரசாட்சியின்கீழ் யாழ்ப்பாணத்திலே முன்னர் நடந்த அநியாயங்கள் ஒழிந்துபோக, நீதியான ஆளுகை நடைபெற ஆரம்பித்தது.

"பறங்கிக்காரராலும் ஒல்லாந்தராலும் தாழ்வெய்திய சாதி சமயநிலைகள் ஒல்லாந்தவரசின் கடைக்கூற்றிலே ஒருவாறு தலையெடுப்பனவாயின. ஆயினும் வெளிப்படையாய் நிலவத் தொடங்கியது ஆங்கிலவரசு வந்த நாள்முதற்றொட்டேயாம். குடிகளும் தத்தம் வருணாசாரத்தையும் சமயாசாரத்தையும் சுவேச்சையாகக் கைக்கொண்டொழுகும் சுவாதீனம் ஆங்கிலவரசாற் கொடுக்கப்பட்டது. முன்னர்க் கோயில்போலாது, கொட்டில் போல இலைமறைவிற் கிடந்த கோயில்களெல்லாம் வெளிப்படத்தொடங்கின. ஆராதனைகள் வாத்தியகோஷங்களோடு நடக்கத்தொடங்கின. இடித்த கோயில்களை மீளக் கட்டிக்கொள்ளும்படி ஆங்கிலவரசு வந்தவுடன் அநுமதி கொடுக்கப்பட்டது. நிலமுங் கொடுக்கப்பட்டது. சைவாலயங்களுக்கு அர்ச்சகர்களும் அரசினரால் நியமனம்பெற்றார்கள். அவர்களுக்குரிய மரியாதைகளும் வரிசைகளும் ஆணைப்பத்திரம்மூலமாகத் தேசாதிபதி கைச்சாத்தோடு வழங்கப்பட்டன. இங்ஙனம் அந்நாளில் தேசாதிபதி கைச்சாத்தோடு நியமன நிருபம் பெற்றாருள்ளே முதல்வர் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அர்ச்சகர் சிவாகன ஐயர் புத்திரராகிய வாலசுப்பிரமணிய ஐயர். இவருக்கு நியமனபத்திரம் 1807-ம் ௵ ஜனவரி ௴ ௫-ந் உ தேசாதிபதி தோமஸ் மேற்லண்ட் (கவனர்) அவர்களாற் கொடுக்கப்பட்டது. அப்பத்திரம் இன்றும் அவர் சந்ததியாரிடமுளது. வித்துவான் அப்புக்குட்டி ஐயரெனப்படுபவர் இவ்வையரே. தற்காலம் பிரசித்தியுற்று விளங்கும் உபயவேதாகம பண்டிதர் கனகசபாபதி ஐயர் இவர் தௌகித்திரர்.

இதுகாறும் பிரமாதிகாரிகள் எண்ணப்படி நடாத்தப்பட்டுவந்த குடிகள், ஆங்கிலவரசர் வரிகளைவாங்குஞ் சிரமத்தாலும் நீதியாலும் அன்பினாலும் வசீகரிக்கப்பட்டவர்களாய் இவ்வரசே தருமராச்சியமென்று சொல்லத்தொடங்கினார்கள்." (யா-ச-ம்)

## சேர் றெபேட் பிறவுண்டிறிக்.
## (1812-1820.)

சேர் தோமஸ் மேற்லாண்ட் தேசாதிபதி இலங்கையிலே தமது ஆளுகை காலம் முடித்து 1811-ம் ஆண்டிலே இங்கிலந்

துக்குச்செல்ல, இவருடைய இடத்தில் ஆளுகை செய்யும்படி சேர் றொபேட் பிறவுண்றிக் தேசாதிபதியாய் நியமனம்பெற்று 1812 ம் ஆண்டு இலங்கைக்கு வந்து சேர்ந்து 1820 ம் ஆண்டுவரைக்கும் இலங்கையில் நல்லரசை நடத்தினர். இவருடைய காலத்தில் கண்டிநாடு அங்கிலேயருடைய ஆட்சிக்குள்ளானது ஓர் விசேஷ சம்பவமாம்.

கண்டியரசனுடைய மந்திரிமாரின் தந்திரச் சூழ்ச்சிகளினாலும், அரசனின் மகா நிஷ்டூரமான கொடுமைகளினாலும் அங்கிலேயருக்கும் கண்டியரசனுக்கும் பெரும் போர்நடந்தது. கண்டியரசனாகிய சிறிவிக்கிரமராசசிங்கன் தனது முதன்மந்திரியாகிய பிலாமைத்தலாவைக் கொல்லுவித்தான். பின் முதன்மந்திரியாக நியமிக்கப்பட்ட எகேலபலையிலும் அரசன் ஐயங்கொண்டு அவனை உத்தியோகத்தால் நீக்கி, அவனைப்பிடிக்கமுயல அவன் கொழும்புக்கோடி அங்கிலேயர்பால் அடைக்கலம்புகுந்தான். அரசன் அவன் மனைவி மக்களைக் கொரூரமாய்ச் சித்திரவதை செய்வித்தான். அந்நாட்களில் அங்கிலேயர் ஆளுகைக்குட்பட்ட பத்துச் சுதேச வியாபாரிகள் கண்டிநாட்டுக்குச் சென்றபொழுது, அரசன் அவர்களை வேவுகாரரென மதித்து, அவர்களைப் பிடித்து அவரவர் மூக்குச் செவி கரங்களை பறத்து மாலையாகக் கோத்து அவரவர் கழுத்துகளில் அம்மாலைகளைத்தரித்துவிட்டான். அவர்களில் ஏழுபெயர் வழியிலிறந்துவிட, எஞ்சிய மூவரும் கொழும்புக்குச்சென்று தேசாதிபதியைக்கண்டு தமக்கு நேரிட்ட இடுக்கணை முறையிட்டனர்.

அரசன் இவ்வளவில் அமர்ந்திராது இன்னும் உக்கிராவேசங்கொண்டு தன் சேனைகளை, சீதவாக்கைக்கணித்தாயுள்ள அங்கிலேயர் நாடுகளுக்கனுப்பி, அங்கேவசித்த குடிகளின் பொருள்களைக் கொள்ளையிடச்செய்து அவர்கள் வீடுகளை அக்கினிக்கிரையாக்குவித்தான். இதைக் கேள்வியுற்ற தேசாதிபதி இனிப் பொறுத்திருத்தல் தகுதியல்லவென நினைந்து, 1815-ம் ஆண்டு தை மீ 10-ந் திகதி தாம் கண்டியரசனுக்கு விரோதமாய் யுத்தத்துக்கு எழுந்தோமெனவும், தாம் யுத்தத்துக்கு எழுந்தது கண்டிநாட்டார்க்கு மாறாயன்று, கொடுங்கோன்மையும் மானுஷிய இயல்பு கடந்து மனம்பதைக்க வருத்திபவனுமாகிய கண்டியரசனுக்கு மாறாகவேயென அறிவித்து, அங்கிலேயபடைகளை யுத்தத்துக்குப் போகக் கற்பித்தனர். அங்கிலேயசேனைகள் கண்டியரசனுக்கு மாறாய் வீறுகொண்டு சென்று கண்டிநகரைக் கிட்டிச்சேர, அவ்வரவுகேட்டு அரசன் தப்பியோடித் தும்பறைநாட்டிலொளிக்கச் சேனைவீரர் தொடர்ந்துசென்று மா

சி மீ 18-ந் உ அரசனைச் சிறையாக்கினர். அவ்வளவில் 2300 வருடங்களாய் இலங்கையில் நடைபெற்ற சிங்கள அரசு முடிவுற, இலங்கை முழுவதும் அங்கிலேய அரசுக்குள்ளானது..

### மிஷனரிமார் வருகையும் அவர் நற்செய்கைகளும்.

இத்தேசாதிபதி காலத்திலே இலங்கைமுழுவதும் அங்கிலேயர் செங்கோன்முறை சிறப்பாய் நடைபெற ஆரம்பித்தது. இக்காலத்திலே இவ்வரசுக்கு உதவியாயும், பிரசைகளின் சரீர ஆன்ம நன்மைகளின் விருத்திக்கு ஏதுவாயும், அமெரிக்காவிலிருந்தும், இங்கிலாந்திலிருந்தும் மிஷனரிமார் யாழ்ப்பாணம் வந்து குடியேறிக் கிறீஸ்துவின் சுவிசேஷத்தை யாவர்க்குங் கூறி மிஷன் கிருத்தியத்தை ஆரம்பித்தனர். 1814 ம் ஆண்டு பட்டணத்தில் வேம்படியில் வந்து குடியேறிய கனம் லின்சு முதலான உவெஸ்லியன் மிஷனரிமாரும், 1816 ம் ஆண்டு தெலலிப்பழை, வட்டுக்கோட்டையில் குடியேறிய கனம் பூர் முதலான அமெரிக்க மிஷனரிமாரும், 1818 ம் ஆண்டு நல்லூரில் குடியேறிய கனம் நைற் முதலாம் சேட்சு மிஷனரிமாரும் யாழ்ப்பாணத்திலே ஆங்காங்கு சுதேசபாடசாலைகளை ஸ்தாபித்து, இளம் மாணுக்கருக்குக் கல்வியறிவையூட்ட மிக முயற்சித்தனர். அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலே கல்வி விருத்திக்காய் அரசினர் யாதும் ஓர் முயற்சியுஞ் செய்யவில்லை. சுதேசிகள்முயற்சியும் மிகக் குறைவாயிருந்தது. இருபாலையில் சேனாதிராச முதலியாரும், உடுப்பிட்டியில் அருளம்பலமுதலியாரும், வல்லிபட்டியிலே குமாரசுவாமி முதலியாரும், வண்ணார்பண்ணையிலே சிலரும் ஒவ்வோர் கலாசாலை ஸ்தாபித்து, தமிழ்க்கல்வி தழைத்து வளர்ச்சியடைந்து விளங்க முயற்சி செய்தனர். இவர்கள் முயற்சியினால் சிலர் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்று வல்ல புலவராய் விளங்கினும், சாதாரண தமிழ்க்கல்வி தேசத்தில் மிகக் குறைவாகவே யிருந்தது. இம் மிஷனரிமார் முயற்சியினால்தான் இத்தேசத்தில் அனேகர் கல்வி கற்கும் பெருஞ் சலாக்கியம் பெற்றனர். இம்மிஷனரிமார் யாழ்ப்பாணம் வந்தபொழுது கல்வியில் நாட்டமில்லாதவர்களுக்குக் கரும்பு தின்னக் கைக்கூலி கொடுத்தவாறு, இளைஞருக்கு வாழைப்பழம் முதலிய உபகாரங்களைக் காட்டி, சிறுவரைக்கூட்டி, கல்விகற்கும் ஆசையை மூட்டி, கல்வியறிவையூட்டி, சுவிசேஷ அறிவைப் புகட்டி நாட்டினர்.

மிஷனரிமார் வந்தகாலத்தில் படித்த ஆடவர் ஆங்காங்கு காணப்பட்டாலும், படித்த ஸ்திரிகளைக் காண்பது அரிதாம்.

அமெரிக்க மிஷனரிமார் யாழ்ப்பாணம் வந்தபொழுது (1816) யாழ்ப்பாணநாட்டில் கோவில்களில் பாடிநடனஞ் செய்யும் நாட்டியப்பெண்களைவிட இரண்டு சுதேசபெண்களுக்கு மாத்திரம் வாசிக்க எழுதத்தெரியுமென்று அம்மிஷனரிமாருள் ஒருவர் எழுதியிருக்கின்றனர். அக்காலத்தில் பெண்பிள்ளைகள் படித்தல் மரபன்றுஎன எண்ணப்பட்டது. பெண்கள் கல்வியை அசட்டைபண்ணின எந்தச்சாதியும் மேனிலையடையவில்லையென்பதை நன்குயறிந்திருந்த மிஷனரிமார் இந்நாட்டார் அறிவு ஒழுக்கம் தேவபக்தியாதியவற்றில் தேறியுன்னத நிலையடையச் செய்தற்குப் பெண்பிள்ளைகளைப்படிப்பித்தல் மிக அவசியமென்பதையுணர்ந்து, பெண்பிள்ளைகளைச்சேர்த்துப் படிப்பிக்க மிகப் பிரயாசப்பட்டனர். படிக்கவிரும்பும் பெண்பிள்ளைகளுக்கு உபகாரங் கொடுத்து மிஷனரிமார் தம் அரும்பிரயாசத்தினாலும், அன்பின்கொடையினாலுஞ் சிலரைப்படிக்க ஏவிவிட்டனர். அவர் முயற்சியினால் சிலபெண்பிள்ளைகள் படிக்கலாயினர். அப்படிப் படித்தவர்களைப்பார்த்து மற்றோரும் படிக்க ஆரம்பித்தனர். இவ்வகையாய் இம்மிஷனரிமார் பெரும்பொருள் செலவழித்து இடையறாது அன்புடன் பிரயாசப்பட்டு வந்ததினால் அனேக ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும்படித்துவந்தார்கள். அமெரிக்க மிஷனரிமார் யாழ்ப்பாணம் வந்து மிஷனரியூழியத்தையாரம்பித்து இருபதுவருடங்களின்பின் யாழ்ப்பாணத்திலே அமெரிக்கமிஷன்கீழ் 155 பாடசாலைகள் நடைபெற்றன. அவற்றில் 6000 ஆண்பிள்ளைகளும் 1000 பெண்பிள்ளைகளும் படித்தனர். மற்றிரு மிஷன்களின் பாடசாலைகளையும் அவைகளில் படிக்கும் பிள்ளைகள் தொகையையுங் கூட்டக்கற்றோர் தொகை இன்னும் அதிகமாகுமென்பது வெளிப்படை. கத்தோலிக்கமிஷனைச்சேர்ந்த குருமாரும் பாடசாலைகளை ஸ்தாபித்துத் தங்கள் மதப்பிள்ளைகளுக்கும் பிறருக்கும் கல்விகற்பித்து வந்தனர்.

இம்மிஷனரிமார் இந்நாட்டார் பலருக்குச் சுதேசகல்விகற்பிக்க முயற்சிசெய்ததுபோல அங்கிலேய கல்வியையும் இலவசமாய்க் கற்பிக்கப்பாடசாலைகளை ஸ்தாபித்தனர். அமெரிக்க மிஷனரிமார் யாழ்ப்பாணம் வந்தபொழுது சுண்டிக்குழியிலே அரசாட்சியாரின் குருவாயிருந்த கனம் கிறிஸ்தியன் டேவிட் போதகரின் முகாமையின்கீழ் ஓர் அங்கிலேய பாடசாலை நடைபெற்றது. அப்பாடசாலையிற் படித்தவரும் அளவெட்டி வாசருமாகிய மெஸ். ப. நிக்கிலாசுப்பிள்ளையென்பவர் தெல்லிப்பழையில் வசித்த கனம். பூர் ஐயர் முதலியவர்களுக்குத் தமிழ்ப்படிப்பிக்கும் முனிஷியும், அவர் ஊழியத்துக்கு உதவிக்காரனுமாயிருந்தார். அமெரிக்க மிஷனரிமார்முதல் தெல்லிப்பழையில் ஓர் அங்கிலேய தருமப்பாடசாலையை ஸ்தாபித்தனர். அதில்படி

த்த மாணாக்கரியாவர்க்கும் உணவு உடை படிப்புயாவும் இலவசமாய்க் கொடுக்கப்பட்டன. அங்கிலேயகல்விகற்பார் தொகை அதிகரிக்க வட்டுக்கோட்டையாதியாம் மிஷன் ஸ்தானங்களில் பல அங்கிலேய பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. மிஷனரிமாரின் அரும்பிரயாசத்தினாலும் பரோபகார உதவியினாலும் நூற்றுக்குமேற்பட்டோர் இலவசமாய் அங்கிலேய கல்வியைக் கற்பாராயினர்.

மேலேகூறிய அங்கிலேய பாடசாலைகளில் கல்விகற்றுத்தேறிய மாணாக்கருக்கு இன்னும் மேலான கல்வியைக் கற்பிக்க அமெரிக்க மிஷனரிமார் விரும்பி, அமெக்கா இங்கிலாந்திலுள்ள பாரிய கல்லூரிகளுக்கொப்பானதாய்ச் சர்வசாத்திரக்களஞ்சியமாய் விளங்கும்; ஓர் சாத்திரசாலையைச் "செமினரி"' யென்னும் பெயருடன் 1823 ம் ஆ. வட்டுக்கோட்டையில ஸ்தாபித்தனர். ஆதி அமெரிக்க மிஷனரிமாருள் பிரசித்திபெற்ற கனம். பூர்பண்டிதரே இச்சாத்திரசாலையின் தலைவராகிப்பதின்மூன்று வருடம் அதைச்செம்மையாய் நடத்திவந்தனர். அக்காலத்தில் இதற்கு ஒப்பான ஓர் ஆங்கில வித்தியாசாலை யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல இலங்கை இந்தியாவிலும் இல்லை. ஆசியாக்கண்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட முதலாம் பெரிய ஆங்கிலவித்தியாசாலை இதுவாம். இச்சாத்திரசாலையிலே மேலைத்தேச வித்தியா கழகங்களிலே கற்பிக்கப்படுகின்ற கணிதசாத்திரம், தத்துவசாத்திரம், ககோளசாத்திரம், பகோளசாத்திரம், இரசாயனசாத்திரம், நியாயசாத்திரம், இலக்கண நூல்கள், இலக்கிய நூல்களாதியவற்றுடன் தமிழிலக்கண இலக்கியங்களும், சம்ஸ்கிருதம், கிரேக்கு, எபிரெயு ஆதியாம் பாஷைகளும் படிப்பிக்கப்பட்டன. அமெரிக்காவிலுள்ள பரோபகாரிகள் உபகரித்தபெரும்பொருள் கொண்டு இச்சாத்திரசாலை நடத்தப்பட்டதால் இப்பாடசாலையில் கல்விகற்றவர்கள் இலவசமாய்க் கல்விகற்கும் பெருஞ்சலாக்கியம் பெற்றனர்.

யாழ்ப்பாண நாட்டிலுள்ள ஆண்பிள்ளைகள் உயர்தரக்கல்வியைக்கற்றுத்தேற்றமடைய வட்டுக்கோட்டையில் ஓர் செமினரியை ஸ்தாபித்த அமெரிக்க மிஷனரிமார் இந்நாட்டுப்பெண்பிள்ளைகள் சுதேச அங்கிலேய பாஷைகளில் உயர்ந்த கல்வியறிவைப்பெற்று விசேஷ அறிவையடையவும், இல்லொழுக்கங்களில் நல்லொழுக்கமுடையாராய்ச் சீவிக்கவும். தங்கள் பிள்ளைகளை உத்தம நெறியில் வளர்க்கத்தக்க பயிற்சியடையவும், 1824 ம் ஆ. உடுவிலில் ஓர் பெண்பாடசாலையை ஸ்தாபித்தனர். ஆசியாக்கண்டத்தில் முதல் ஸ்தாபிக்கப்பட்ட பெண்பாடசாலை இதுவாம். கனம். உவின்சிலோவியர் அம்மாவின் முகாமையின்கீழ்

இப்பாடசாலை நடைபெற்றது. இதுவரைக்கும் இப்பாடசாலையிலே 2500க்கு மேற்பட்ட பெண்பிள்ளைகள் படித்து யாழ்ப்பாணச்சனசமூகத்திலே உன்னதநிலையடைந்து நற்குணநற்செய்கைகளுடையராய் விளங்குகின்றனர்.

மற்றமிஷனரிமாரும் இவ்வகையான ஆங்கில வித்தியாசாலைகளை ஸ்தாபித்து உயர்தரக்கல்வியையும், பெண்கள்கல்வியையும் விருத்தியாக்கினர். செமினரியின் ஆரம்பத்துக்குப்பதினொருவருடங்களின்பின் இப்பொழுது மத்தியகல்லூரியெனப்படும் யாழ்ப்பாண உவெஸ்லியன்மிஷன் மத்திய வித்தியாசாலை கனம். பேர்சிவல் ஐயரால் ஸ்தாபிக்கப்பட்டது. உவெஸ்லியன் மிஷனரிமார் யாழ்ப்பாணத்திலே ஓர் பெண்பாடசாலையையும் ஸ்தாபித்தனர். வட்டுக்கோட்டைச் செமினரியின் ஆரம்பத்துக்கு 18வருடங்களின்பின் சுண்டிக்குழியில் இப்பொழுது சேன்ற்யோன்ஸ் கல்லூரியென அழைக்கப்படும் ஆங்கில வித்தியாசாலை கனம். J. T. யோன்ஸ்றன் ஐயரால் ஸ்தாபிக்கப்பட்டது. சேட்சுமிஷனரிமார் நல்லூரில் ஓர்பெண்பாடசாலையையும் ஸ்தாபித்துப் பெண்கள் கல்வியில் அதிகரிக்க முயற்சிசெய்தனர். வட்டுக்கோட்டைச் செமினரி ஆரம்பத்துக்கு 27 வருடங்களின்பின் இப்பொழுது சேன்ற்பற்றிக்கல்லூரியென அழைக்கப்படும் கத்தோலிக்க அங்கில வித்தியாசாலை யாழ்ப்பாணக் கத்தோலிக்குமுதல் மேற்றிராணியாராகிய டக்றர் பெற்றுசினிவவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. கத்தோலிக்கமிஷன் பகுதியார்பெண்பிள்ளைகளின் உயர்தரக்கல்வியையும் விரும்பி ஓர்கன்னியாஸ்திரிமடத்தை ஸ்தாபித்தனர். இவ்வகையான முயற்சிகளினால் சுதேசஅங்கிலேயஉயர்தரக்கல்வி யாழ்ப்பாணநாட்டிலேஅதிக விருத்திபெற்றன. அமெரிக்கமிஷன் சங்கத்தார்யாழ்ப்பாணத்தாரின் சரீரப்பிணியை நீக்கமுதல் வைத்திய மிஷனரியாய் டக்றர் ஸ்கடர் ஐயரை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினர். உலகத்தில் மிஷன்கள் மூலம் அனுப்பப்பட்ட வைத்தியமிஷனரிமாருள் இவரே முதல்வராம். இவர் 1820 ம் ஆ. பண்டத்தரிப்பில் வசித்து அங்கே ஓர் வைத்தியசாலையை ஸ்தாபித்து அங்கே வரும் நோயாளரைப் பரிசரித்தும், சிலருக்குவைத்தியக்கல்வியைக்கற்பித்தும் வந்தனர். அமெரிக்கமிஷன் சங்கத்தாரின் அன்புநிறைந்த பரோபகாரகுணத்தினால் அம்மிஷனின் ஆரம்பகாலந் தொடங்கி இந்நாட்டாருக்குக்கிடைத்த வைத்தியசகாயம் பெரிது! மிகப்பெரிதாம்!! இதற்காய்இந்நாட்டார் இம்மிஷனுக்கு மிகுந்த நன்றியுடையராயிருத்தல் நியாயமும் தகுதியுமாம்.

இவ்விடக்கல்வி விருத்திக்கு உதவியாய்அமெரிக்க மிஷனரிமார் அச்சியந்திரசாலையொன்றை ஸ்தாபிக்க 1820 ம் ஆ. ஓர்

அச்சியந்திரத்தை அமெரிக்காவிலிருந்தும், அதற்குவேண்டிய எழுத்துகளாதியவற்றைக்கற்குத்தாவிலிருந்தும் வருவிதனர். இதுவேயாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டமுதல் அச்சியந்திரமாம். அமெரிக்கமிஷனரிமாருக்குஉதவியாயிருந்தபிறவுன்றிக்தேசாதிபதிதம் ஆளுகைகாலம்முடிந்து இங்கிலந்துக்குச் செல்ல 1820 ம் ஆ. ஆளுகை செய்தபாண்ஸ்தேசாதிபதி அமெரிக்கமிஷனரிமாரில் நன்மனமற்றவராயிருந்து அச்சுக்கூடம் நடத்த அமெரிக்காவிலிருந்து வந்ததுரைமகனை யாழப்பாணத்தில் வசிக்கக்கூடாதென்று தடுத்தமையால் அத்துரைமகன் இந்தியாவுக்குப்போக, அந்த அச்சியந்திரமும் அதற்குரிய தளவாடங்களும் அம்மிஷனரிமாரால் சேட்சுமிஷனரிமாருக்கு விற்கப்பட்டன. சேட்சுமிஷனரிமார் அந்த அச்சியந்திரத்தை நல்லூரில் ஸ்தாபித்துச் சிலபுத்தகங்களைப் பிரசுரித்து வெளிப்படுத்தினர், பாண்ஸ்தேசாதிபதி ஆளுகை காலம் முடிந்துபோனபின் கோட்டன்தேசாதிபதி இலங்கைத்தேசாதிபதியாய் வந்து; பாண்ஸ்தேசாதிபதி அமெரிக்க மிஷனுக்கு விரோதமாய்ப் புதியமிஷனரிமார் வரக்கூடாதெனவிதித்த பிரமாணத்தைநீக்கிவிட அமெரிக்காவிலிருந்துபலமிஷனரிமார்யாழ்ப்பாணம் வந்தனர். அவருள் மைனர் என்னும் பேருடைய ஓர் அமெரிக்க துரைமகன் யாழ்ப்பாணத்தில் அச்சியந்திரத்தை ஸ்தாபித்து நடத்தயாழ்ப்பாணம்வந்து, அமெரிக்க மிஷனரிமார்முன் சேட்சுமிஷனரிமாருக்கு விற்ற அச்சியந்திரத்தையும் அதன் தளவாடங்களையும் வாங்கி, மானிப்பாயில் ஸ்தாபித்து அதைச் செம்மையாய் நடத்தி அனேக புத்தகங்களை அச்சடித்துப் பரப்பினர். இவ்வகையாய் மிஷனரிமாரின் பலவகை முயற்சிகளினுல் யாழ்ப்பாணநாட்டில் கல்வியறிவு, சீர்திருத்தம், நல்லொழுக்கமாதியன தேற்றம்பெற்றுச் சிறந்து விளங்கின.

## சேர் எட்வேட் பாஞ்ஸ்(1820—1831)

பிறவுன்றிக் தேசாதிபதி 1820 ம் ஆ. தமது ஆளுகை காலம் முடித்து இலங்கையை விட்டுச்செல்ல சேர். எட்வேட் பாண்ஸ் உபதேசாதிபதியாகி இரண்டு வருடம் ஆளுகை செலுத்தினர். 1822 ம் ஆ. சேர் எட்வேட் பாச்செற் தேசாதிபதி இலங்கையை 10 மாதம் ஆளுகைசெய்து இலங்கையை விட்டகல சேர். ஜேம்ஸ் கமெல் உபதேசாதிபதியாயிருந்து 1824 ம் ஆ. தை மீ வரையும் ஆளுகைசெய்தனர். அப்பால் பாண்ஸ் தேசாதிபதி 1831 ம் ஆ. வரைக்கும் இலங்கையரசை நடத்தினர்.

"அவர்காலத்தில் ஊர்கள்தோறும் போக்குவரவுக்குரிய மார்க்கங்களைத் திருத்தினர். ஊர்களிலே கள்வரால்வருந்துன்பங்க

லைக் குறைத்தனர். ஊரிலே தலைமைக்காரர் குடிகளை வருத்தாம
ல் வரிகளை வாங்கும்படி விதித்தனர். இவர் புத்தூரிலே நவக்
கிரி என்னுமிடத்திலுள்ள நிலாவரையென்னும் வற்றாத்வாவி
யை நீர்ப்பாய்ச்சலுக்கு உபயோகமாம்படி அமைக்குமாறு ஒ
ரு பெரியநீராவியந்திரத்தை வரவழைத்து பாண்ஸ்துரையைக்
கொண்டு பரீக்ஷிப்பித்தனர். அவ்வியந்திரத்தால் எட்டுநாள்வ
ரையும் இறைத்தும் அந்நீர்நிலை சிறிதும் குறையவில்லை. முடி
வில் அந்நீர்நிலையின்கீழேகந்தகநீரிருத்தலால் அதுபயிர்களுக்கு
உதவாத நீரெனத்தள்ளினர். இந்நீர்நிலையின்து ஆழம் 144 அ
டி. அகலம் முப்பதடி. இது இடியேறுவிழுந்துண்டானதென்
று பால்டியஸ் (Baldeus) கூறுவதாக (Sir E Tennent) தென்
னென்ற் பண்டிதர் கூறுகின்றார். ஸ்ரீராமர் தமது சேனைக்கு நீ
ரூட்டும்பொருட்டுத்தமது வச்சிராஸ்திரம் விடுத்து இந்நீர்நிலை
யையுண்டாக்கினரென்பது கர்ணபரம்பரை. இடியேற்றை ஒ
ருவாறெடுத்து ஆயுதங்களிலமைத்துக் கொள்ளும்வன்மை நம்
பூர்வ ஆரியர்க்குண்டென்பது பழையசரித்திரங்களாலே துணி
யப்படும். அதுவேவச்சிராயுதமெனப்படுவதாம். பால்டியஸ் பா
திரிமார் இடியேற்றாலுண்டானது என்றுகூறினதுஇக்கர்ணபர
ம்பரையைக்கொண்டுபோலும்." (யா-ச)

## டைக்துரை ஏசண்டர் காலம். (1829—1867)

(இதுவரைக்கும் இலங்கைத்தேசாதிபதிகளின் காலஎல்லைகளை
ப்பிரிவாய்வகுத்து, அவ்வக்காலத்தில்யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த
விசேஷ சம்பவங்களைக் கூறினோம். இனிமேல் யாழ்ப்பாண
த்தை ஆளுகைசெய்த ஏசண்டர்காலங்களைப் பிரிவாய் வகுத்து,
அவ்வவ் ஏசண்டர் காலத்தில் நிகழ்ந்த விசேஷ சம்பவங்களைக்
கூறுவோம்.)

வடமாகாண ஏசண்டராயிருந்த கூப்பர்துரை 1829 ம் ஆ௵
இவ்விடம் விட்டுச்செல்ல டைக்துரை வடமாகாண ஏசண்டரா
யினர். அங்கிலேய கடற்படைச்சேனையைச் சேர்ந்த ஓர் கப்ப
லில் உபதளபதியாயிருந்த இவர் தமது 17 ம் பிராயத்திலே
1822 ம் ஆ௵ வைகாசி மாசத்திலே இலங்கையரசாட்சிச்சிவிலு
த்தியோக நிரையிலே சேர்ந்து உத்தியோகம் புரிந்து, 1824 ம்
ஆ௵ பங்குனி மீ யாழ்ப்பாணம் வந்து உபஏசண்டராயும், அடு
த்தவருடம் பிசுக்காலாயும் பொலிஸ்நீதிபதியாயுங் கடமைபார்
த்து, 1827 ம் ஆ௵ கீழ்மாகாணப் பெரியகோட்டு நீதிபதியா
ய்ச்சென்று திறமையாயும் நீதியாயும் அந்த உத்தியோகத்தை
நடத்திவருகையில் உத்தியோக உயர்வுபெற்று வடமாகாண ஏச
ண்டராகி 1829 ம் ஆ௵ ஐப்பசி மீ 8 உ யாழ்ப்பாணத்துக்கு
வந்தனர். பாலசூரியனையொத்த சாலச்சிறந்த சரீரதோற்றமும்

விவேகமாய் நல்லரசுபுரியும் இராசதந்திர நிபுணத்துவமும் ஆட்களையவர் தோற்றத்தில் மட்டிட்டறியும், யூகசாமார்த்தியமும், தன்னுயிர்போல் மன்னுயிர் ஓம்பிப்பாதுகாக்கும் பிரசாநயாபேட்சையும், துட்டநிக்கிரக சிட்டபரிபாலனமும் பூண்ட இச்சீமான் 38 வருடங்களாய் இம்மாகாண ஏசண்டராயிருந்து தமக்கு வந்த உயர்ந்த உத்தியோகபதவியையும் விரும்பாது, யாழ்ப்பாணத்தையே நேசித்து மரணபரியந்தம் இந்நாட்டில்வசித்து அன்னைபோல் அன்புடன் பிரசைகளையாதரித்துப் பாதுகாத்து இந்நாடுஎல்லாவகையிலுஞ்சீர்சிறப்பும் பேர்ப்பிரஸ்தாபமுமடையக் குடிகளியாவரும் இவரே எம் இராசா என்றுபோற்ற நல்லரசுபுரிந்தனர்.

(ஆளுகைகாலம்)

இவர் சேர் எட்வேட் பாண்ஸ்தேசாதிபதி காலத்தில்வடமாகாண ஏசண்டராகி, சேர் றப்பேட் கோட்டன் (1831—1837) சேர் ஸ்றூவெட் மெக்கன்சி (1837—1841) சேர் கொலின் காமெல் (1841—1847) லோட் தோறிங்ரன் (1847—1850) சேர் யோட்சு அன்டேசன் (1850—1855) சேர் கென்றி உவாட் (1855—1860) சேர் சாள்சு மெக்கார்தி (1860—1863) மேசர் ஜெனறல் ஒபிறையன் உபதேசாதிபதி (1863—1865) சேர் கேர்கியுலஸ் றொபின்சன் (1865---1872) என்னும்பத்துத் தேசாதிபதிகள் காலத்தில் அவர்களியாவராலும் நன்குமதிப்பும் நற்சாட்சியும் பெற்று அவர்கள் மூலம் இங்கிலந்து வரையிலும் அவர் கீர்த்திபரம்ப நல்லாளுகை செலுத்தினர்.

யாழ்ப்பாணத்திலே அங்கிலேயர் அரசு முப்பதுவருடங்களுக்குமேல் நடைபெற்றது. இக்காலத்தில் இவ்விடம் வந்த ஏசண்டர்மார் அங்கிலேய அரசியலைப்பலப்படுத்திஉலாந்தாரானுண்டான கொடுமைகளைநீக்கி, எம்மதத்தவருந்தத்தம் விருப்பப்படி நடக்கச் சமயசுவாதீனமருளி, சனசங்கத்துக்குஅவசியமான நன்மைகளைச்செய்யமுயற்சித்தனர். அங்கிலேயஅரசுக்குரிய நீதியும் புனிதமும் இன்னுஞ் சரியாயுறிக்கவில்லை. "வல்லவன் பம்பரம் மணலினுமாடும்" என்பதுபோல வல்லவருஞ் செல்வருமானோர் காரியமனுகூலமாக, எளியோர்பாடு இடுக்கணுய்த்தானிருந்தது. சிறைத்தன ஏற்பாடு, சாதிக்கட்டுப்பாடு முதலியன அதிபெலனாயிருந்தன. சூரியோதயத்துக்குமுன் வரும்வெளுப்பைப்போலவே அக்காலநிலையிருந்தது. இப்படியானநிலையிலிருந்த இந்நாடு டைக்மன்னவர் பிரயாசத்தினால் அவர் ஆளுகை முடிவில் நடுப்பகல் சூரியப்பிரகாசம்போல் எல்லாவகைச்சிறப்புகளினும் தேர்ச்சியடைந்து சீர்திருத்தம் பெற்றுப் பிரகாசிக்கலானது. தம்

காலத்திலே இந்நாடு பலவளமுஞ்சேர்ந்து சிறந்து பிரகாசிக்க அவர் செய்த அரும் பெருஞ் செயல்கள் அனேகமாம். அவற்றைச் சுருக்கிக் கூறுகின்றோம்.

(பிரயாணவசதி)

டைக்மன்னவர் ஏசண்டராய் வந்தகாலத்தில் யாழ்ப்பாணத்திலே பேர்பெற்ற திருடர்களாய்விளங்கிய அம்மையன், கரியன், ஆட்குத்திநாகன் முதலியோர் பகற்காலத்திலே வல்லைவெளி, தூவெளியாதியாம் இடங்களில் கரந்துறைந்து, இராக்காலத்தில் கிராமங்களுக்குள் புகுந்து செல்வர் வீடுகளையணுகி அச்சபயமின்றி அவ்வீடுகளுள் தீப்பந்தம் பிடித்து, அவ்வீடுகளிலுள்ளாரை அவர் பணம் பண்டஞ் சேமித்த இடங்களைக் காட்டும்படி அவர்களுக்கு (நகக்கண்களில் ஊசியேற்றல் முதலியன) பல இடுக்கண்கள் புரிந்து அவர் சேமிப்பு இடங்களைக் கேட்டு, அவற்றைச் சூறையாடிக்காட்டு இராசாக்களாய்த் தம் மிஷ்டம்போற் றிரிந்து வந்தனர். பின்னோர் சாரான கள்ளர் பிரயாணிகள் செல்லும் பாதைக(அக்காலத்தில் பிரயாணிகள் செல்லச்செம்மையான பாதைகளில்லை)ளின் பக்கங்களிலுள்ள பற்றைகளில் பதுங்கியிருந்து பிரயாணிகளைக்கண்டவுடன் அவர் மேற் பாய்ந்து அவர் வைத்திருக்கும் பொருட்களை அபகரிப்பதுடன் சிலவேளை அவர்களைக்கொன்று விடுதலும் வழக்கமாயிருந்தன. இவற்றால் அக்காலத்தார் தூரப்பிரயாணம் செய்யும் பொழுது தாம் பின்னர்த் திரும்பிவருதல் நிச்சயமன்றென நினைத்துத்தம் பெண்டு பிள்ளைகளையழைத்துத் தமது பணம் பண்டங்கள் இன்ன இன்ன இடத்திலே சேமிக்கப்பட்டிருக்கின்றன எனக்குறிப்புணர்த்தி, அந்திய வாக்குக்கூறி மிகுந்த மனமடிவுடன் பிரயாணஞ் செல்வராம். இக்காரியங்களைக் கேள்வியுற்ற டைக்துரை கள்ளர் கூட்டத்தைத்தொடர்ந்து பிடித்துக் கடுந்தண்டனை புரிந்து அச்சுறுத்தி அவரைத்தொலைக்க விசேஷமுயற்சி செய்தமையால் சிலவருடங்களுக்குள் கள்ளர் கூட்டமொழியக் கள்ளர் பயமும் மெள்ள மெள்ள ஒழிந்தது. யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளுக்கும் அவர் கள்ளர் பயத்தை முற்றாய் நீக்கவுஞ் சனங்களின் சுகவாழ்வுக்கு உதவியாகவும் பல நல்ல தெருக்களைத்திறந்தி கற்படுத்தி அலங்கார வீதிகளாக்கியும் அவற்றின் பக்கங்களிலுள்ள பற்றைகளைவெட்டியும் அத்தெருக்களின் இருபக்கங்களிலும் நிழல்தருமரங்களை நாட்டியும், வழிச்செல்வோர் தங்குவதற்கு வசதியான மடங்களும் நீருண்ணக்கிணறுகளும் வேண்டிய இடங்களில் அமைத்தும், கடல்நீரால்பிரிக்கப்பட்டிருந்த இடங்களாகிய தொண்டைமானாறு, வல்லை கோப்பாய், செம்மணி, கைதடியாதியாமிடங்களில் சிறந்த வாராவதிகளைக்கட்டி அவைகள்மேல் நல்லதெருக்களை வகுத்

னும் யாழ்ப்பாணத்தில் கள்ளர்பயமற்றுச் சிறுவரும்எளிதில் பிரயாணஞ்செய்ய ஒழுங்குகள் புரிந்தனர்.

(பண்டமாற்றுவசதி)

அவர் இந்நாட்டுச் சனங்கள் இலகுவாய்ப் பண்டமாற்றுச் செய்வதற்கு உதவியாய்ப் பட்டணத்தில் பெரியகடையில் பல கடைகளுண்டாகவும்; சங்கானை, சுன்னாகம், அச்சுவேலி, வல்லுவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரியாதிய இடங்களில் விசேஷ சந்தைகள் கூடவும், அவ்வச்சந்தைகளில் சனங்கள் வெய்யில் மழைகளுக்கு ஒதுங்கிக்கொள்ளப்பல கொட்டகைகள் கட்டப்படவும் ஒழுங்குசெய்தனர்.

(கிருஷிமுயற்சிவிருத்தி)

யாழ்ப்பாணத்திலே வெள்ளந்தங்கிக் கிராமங்களையழியாதபடி வெள்ளவாய்க்கால்களையும் மதகுகளையுஞ் சரியாய் வகுத்தும், யாழ்ப்பாணத்திலுள்ள செந்நெற்கழனிகள் நல்விளைவைக்கொடுத்தற்குதவியாய் அக்கழனிகளிலுள்ள குளங்கள் அருகித்தேய்ந்துபோகாது தண்ணீரைச்சேமித்து வைத்து வயல்களுக்குக் கொடுக்கத்தக்கதாய்க் குளங்களைச்செப்பனிட்டும் முன்னோர் காலத்தில் செந்நெற்கழனிகளாயிருந்த வன்னிப்பகுதியில் பல குளங்களைக்கட்டுவித்து அந்நாட்டில் மறுபடியும் நெற்செய்கை நடைபெறவும் அவர் முயற்சிசெய்ததினால் கிருஷிமுயற்சி அதிகப்பட்டது. அவர் கச்சேரியிற் றாங்குடியிருந்த வளவில் ஓர் சிங்காரத் தோட்டத்தையுண்டாக்கி அக்கேசுகந்த வாசனை வீசும் பலவகைப்பூமரங்களையும், மதுரமான கனிதரும் பலவகைக்கனிமரங்களையும் நாட்டி, அவை நற்பலன் கொடுக்கவும் அவைகள் தேசமெங்கும்விருத்தியாகவும் முயற்சிசெய்தார். இந்நாட்டில் ஒட்டுமாமரங்களையும் முந்திரிகைச்செடியையும் மிக விருத்தியாக்க முயற்சித்தவர் அவரேயாம். இந்நாட்டார் கமத்தொழில், கைத்தொழில், வர்த்தகமாதியவற்றில் பெருகவேண்டுமென அச்சீமான் விரும்பி வேண்டிய உதவிகள் புரிந்து, இந்நாட்டார் அவற்றில் பெருகலாயினர்.

(ஆதுலர்சாலை வைத்தியசாலை)

பிரசைகளின்பெருவாழ்வை மிகவிரும்பி வேண்டியநன்மைகள் புரியும் பிரசாநயாபேட்சகராகிய அம்மன்னவர் இந்நாட்டில் யாருமற்ற அகதிகள் ஏழைகளாயிருப்பவர்களுக்குத் தாபரமாய் வேண்டியபணம் மாசந்தோறும் உபகரிக்க ஓர் ஆபத்துக்குதவிச் சங்கத்தையும், இந்நாட்டில் நோய்வாய்ப்பட்டுழலும் அகதிகள் ஏழைகள் தக்கவைத்திய சகாயமும் மற்றும் வேண்டிய உதவிகளும் இலவசமாய்ப் பெறும்பொருட்டு "ஆபத்துக்குதவிவைத்

தியசாலை"யென்னும் பெயருடன் ஓர் வைத்தியசாலையையும் ஸ்தாபித்து இந்த இரண்டு ஸ்தாபனமுஞ் செம்மையாய் நடைபெறத்தக்க பணமுதல் சேர்த்து வைத்தும், வருடந்தோறும் உத்தியோகஸ்தர் செல்வர் என்பவர்களிடம் பணஞ்சேர்த்தும், தமது உழைப்பில் விசேஷ ஓர் பாகத்தைக் கொடுத்தும் அவற்றைச் சீராய் நடப்பித்தனர். யாழ்ப்பாணத்திலே நோய்வாய்ப்பட்டுத் தங்கைப்பொருள் செலவழித்து ஆரோக்கியமடையக் கூடாத அனேக நோயாளருக்கு இவ்வைத்தியசாலை ஆபத்துக்காலத்தில் ஓர் விசேஷ அடைக்கலஸ்தானமாய் விளங்கினது. அங்கே சென்ற ஏழைகளுக்கு வைத்திய சகாயத்துடன் அன்னவஸ்திராதிகளும் உபகாரமாய்க் கொடுக்கப்பட்டன. டைக் மன்னவரைத் தலைமையாய்க்கொண்ட ஓர் கருமகர்த்தர் கூட்டத்தவரால் இவ்வைத்தியசாலை நடைபெற்றது. அமெரிக்க வைத்திய மிஷனரியாய் மானிப்பாயில் வசித்த கிறீன்ஐயர் யாழப்பாணத்தில் வசித்தகாலம் முழுவதும் இவ்வைத்தியசாலையை மேற்பார்வையிட்டு ஒழுங்காய் நடைபெறச் செய்துவந்தனர். இவ்வைத்தியசாலை இம்மன்னவர் காலத்திலும் இவருக்குப்பின் துவைனந்துரை காலத்திலும் மிகச்சீராயும் நன்மையாயும்நடைபெற்றது. இவ்வைத்தியசாலையில் அமெரிக்கமிஷன் வைத்தியவகுப்பில் கற்றுத்தேறிய கூல்ட், டான்வோத். மில்ஸ், போல் என்னுஞ் சிறந்த வைத்தியமார் ஒருவர்பின் ஒருவராய்த் தலைவராயிருந்து இத்தேசத்தாருக்கு அதிக உதவியாய் இவ்வைத்தியசாலையை நடத்திவந்தனர். இப்போது இவ்வைத்தியசாலை அரசினர் வைத்தியசாலையாய் நடைபெறுகின்றது.

(பேதிநோய்ப்பரிகரிப்பு.)

இத்துரை மகன் காலத்திலே யாழ்ப்பாணத்திலே பலமுறை பேதிநோயுண்டானது. இலங்கையிலே 1818 ம் 19 ம் ஆண்டுகளில்* பேதிநோயுண்டாகித் தேசமெங்கும் பரந்து இலங்கையையும் யாழ்ப்பாணத்தையுங் கலக்கினது. பின்னர் இந்த ஏசன்டர் காலத்தில் 1845 ம் 1855 ம் 1865 ம் ஆண்டுகளில் பேதிநோய் தோற்றி யாழ்ப்பாணத்தில் பரந்து அனேகரைக்கொன்றது. இந்நோய் யாழ்ப்பாணத்தில் பரந்த பொழுது டைக்துரை ஊர்கடோறுஞ்சென்று, அவ்வவ்விடங்களின் நிலைமையாராய்ந்து, சனங்களுக்கு மருந்து உணவு வஸ்திரம் பணமாதியன கொடுத்து உதவிபுரிந்து, தமது அனுதாபத்தைக் காட்டினதுடன், யாழ்ப்பாணக்கோட்டைக்கு வடமேற்கே ஓர்வைத்தியசாலையைக்கட்டுவித்து பேதிநோயாளரை அங்கே வைத்துப் பரிகரிக்க ஒழுங்கு செய்தனர். 1855 ம் 1865 ம் ஆண்டுகளில் நடந்தபேதிநோய் காலத்தில் அமெரிக்கமிஷனின் வைத்தியமிஷனரியாகிய கிறீன் ஐயர் யாழ்ப்பாணத்திலே அந்நோயைப்பரிகரித்து நீக்க

அதிகமாய்ப்பிரயாசப்பட்டனர். அக்காலத்தில்அவர்செய்தஉதவி மிக அதிகமாம்.

(கீழுத்தியோகஸ்தர்நிலை)

இவரது அரசாட்சிக் காலத்தில் கூடியளவு தக்க தன்மைக் காரரை இவர் நியமித்து நடத்தியபடியால் இந்நாட்டரசியல் சிறப்பாய்நடைபெறலாயிற்று. இவர் தங்கீழுத்தியோகஸ்தர்சொல்லு வனவற்றைக்கேட்டு நடவாது நாடுநகரங்களுள் தாமேதனித்துச் சென்று, ஊர்க்குறைமுறைகளையாராய்ந்து,குடிகளின் சேமத்துக் கேற்றவைகளைச் செய்து, குடிகளையாதரித்துத் தேசத்திலே நீதி நடைபெறச்செய்வதற்குத் தக்கஉத்தியோகஸ்தரைத்தெரிந்துநிய மித்து நீதிமுன்வழியில்நடந்து, தங்கீழுத்தியோகஸ்தரையுந்நீதி யின்வழியில்நடக்கஏவியதால் யாழ்ப்பாண அரசு முன்னக்காலத்தி லும் பார்க்க இவர் காலத்தில் நீதியாயும் பிரசைகளின்நல்வாழ்வு அதிகரிக்கவுஞ் சிறப்பாய் நடைபெற்றது.

(பாரவரிகள் நீக்கம்)

யாழ்ப்பாணத்திலே மீன்பிடி, சாயவேர்கிண்டல் என்பவற் றால்பிழைத்தஅனேக ஏழைச்சனங்களின் நிலையைக்காட்டி இவர் மேலதிகாரிகளுடன்பேசி அவர்கள்முன் கொடுத்துவந்த மீன்வரி சாயவேர்வரிகளைநீக்குவித்தும், 1844ம் ஆ. யாழ்ப்பாணத்திலே அடிமையாட்சிமுற்றாய்விலக்கப்பட அரசினரைபேவிக்கற்பித்தது ம் யாழ்ப்பாண அரசிறையின் பெரும்பாகத்தைக் கொள்ளைகொ ண்ட சிப்பாயிப்பட்டாளத்தை இவ்விடத்தால் அகற்றி இங்கே 1866 ம் ஆ. சுதேச பொலிஸ்வீரரை நிறுத்தினதும் இந்நாட்டு க்குவிசேஷநன்மையான விஷயங்களாம். 1848ம் ஆ. தலைவரிச்ச ட்டடம்விதிக்கப்பட்டது. இச்சட்டம்றோட்டுவேலைக்காய் 18வய சுக்கும் 60வயசுக்கும் இடையான வயசுடைய ஒவ்வொரு ஆணு ம் வருடம் பதின்மூன்று பணமும் நான்கு வெள்ளைச்சல்லியுஞ் செலுத்தல் வேண்டும்; அல்லது றோட்டில் ஆறுநாள் வேலைசெய் தல் வேண்டுமெனக் கூறினது. தேசநன்மைக்காய் யாழ்ப்பாண த்தில் திறக்கப்படும் புதியதெருக்களுக்கு அவ்வரி உதவியாயிரு ந்ததினுல் டைக்துரை அவ்வரி நியமனத்துக்குச் சார்பாயிருந் தனர். யாழ்ப்பாணத்துச் சனங்கள் அவ்வரியைச் சந்தோஷமா ய்ச்செலுத்தினர். சிங்களர் அவ்வரியைச் செலுத்தமாட்டோ மென்றுமறுத்துகுருநாகல் முதலியஇடங்களில் கலகஞ்செய்தும் ஆங்கில படைவீரரைக்கண்டு அடங்கி ஒழுங்காய் அவ்வரியைச் செலுத்தினர்.

(புகையிலைவியாபாரம்)

"டைக்துரைவந்தகாலமுதல் ஊர்த்திருத்தத்திற்கும் குடிகளு டைய க்ஷேமத்துக்கும் வேண்டியவைகளையெல்லாம் ஆராய்ந்து

செய்துகொண்டேவருவாராயினர். அப்படிவருங்காலத்திலேயாழ்ப்பாணத்துப்புகையிலைக்கு மலையாளத்திலேபிரியமுண்டாயிற்று. மலையாளத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் புகையிலைத்தொடர்பு தமிழரசர்காலத்திலுண்டானது. அது பறங்கிக்காரர் ஒல்லாந்தர்களால் சிறிதுசிறிதாக விருத்தியுற்று, ஆங்கிலேயர்காலத்திலே பெருவிருத்திபெற்றது. மலையாளத்துக்குவேண்டும் புகையிலை முழுதும் கொடுப்பதாக அத்தேசத்து இராசாவோடு பொருத்தச்சாதனம் பண்ணிக்கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து பெருந்தொகையாக அனுப்பிப் பெருநிதிபடைத்தோர் ஆறுமுகச்செட்டியாரும் அவர்புத்திரர் முத்துவேலுச்செட்டியாருமே. அக்காலத்தில் அவர்களோடுசேர்ந்தும் பின்னர்த்தனித்தும் இவ்வியாபாரத்தைப் பெரிதாகநடாத்திப் பெயர்படைத்தவர் கொக்குவில் அருணசலம். காலியில் புகையிலைவியாபாரத்தைப் பருப்பித்தவர் திருநெல்வேலி அம்பலவாணர்புத்திரர்கார்த்திகேசர்." பா-ச-ம்

(சட்டநிருபணசபை)

"1833 ம் ஹூ சட்டநிருபணசபை (பிரமாணவிதிசபை)சட்டநிறைவேற்றச்சபை(பிரமாணநிதிசபை) இரண்டுந்தாபனமாயின. சட்டநிருபணசபை, உத்தியோக அங்கத்தவரும், பிரபு அங்கத்தவராகிய சனப்பிரதிநிதிகளும் கூடியசபை. இச்சபைக்கு முதன்முதலிலே 1835ம் ஹூ தமிழர்பிரதிநிதியானவர் கௌரவ பொன்னம்பலமுதலியார். இவருக்குப்பின் 1846 ம் ஹூ முதல் 1862ம் ஹூ வரையும் தமிழர் பிரதிநிதியாயிருந்தவர் கௌரவ எதிர்மன்னசிங்கமுதலியார். இவரும் மானிப்பாயைப் பிறந்தவூராகவுடையவர். அவருக்குப்பின்னர் 1862 ல் கௌரவ சேர் குமாரசுவாமி தமிழர்பிரதிநிதியானார்." பா-ச-ம்

## ஆங்கில பாஷைக்கல்வி விருத்தி.

டைக்மன்னவருடைய காலத்திலே யாழ்ப்பாணத்திலே ஆங்கிலபாஷைக்கல்வி மிகவிருத்தியடைந்தது. யாழ்ப்பாணத்திலே ஆங்கிலபாஷைக்கல்வியைக் கற்பிக்க அக்காலத்திலே அரசினரா குதல் அல்லது சுதேசிகளாகுதல் யாதும் ஓர் முயற்சியுஞ் செய்திலர். முன்னர் நாங் கூறியபடி மிஷனரிமார் முயற்சியினாலேயே சுதேசபாஷைக்கல்வியும் ஆங்கிலபாஷைக்கல்வியும் வளர்ச்சியடைந்தன. மிஷனரிமாரால்ஸ்தாபிக்கப்பட்ட ஆங்கிலபாஷை வித்தியாசாலைகளுள் யாழ்ப்பாணத்திலே உயர்தர ஆங்கிலகல்வியை வளர்த்து விருத்தியாக்கின விசேஷஸ்தாபனம் வட்டுக்கோட்டைச் செமினரியென அழைக்கப்பட்ட சாத்திரசாலையாம். 1823 ம் ஆ. ஸ்தாபிக்கப்பட்ட இக்கலாசாலை 1855 ம் ஆ. நிற

த்தப்பட்டது. இக்கலாசாலையிற் சேர்ந்து படித்தோர்தொகை 700 க்கு மேற்பட்டது. அவர்களுள் அனேகர் ஆங்கிலம் தமிழ் என்னும் இருபாஷைகளிலுஞ் சிறந்த பண்டிதர்களாய்ப் பிரஸ்தாபம் பெற்று விளங்கினர். அவர்களுள் சிலர் ஆங்கிலம், தமிழ், சம்ஸ்கிருதம் என்னும் மூன்றுபாஷைகளிலுஞ் சிறந்த பண்டிதர்களாய் விளங்கினர். சென்னைச்சருவகலாசாலையிலே 1857 ம் ஆம் முதல் B. A. என்னும் வித்தியாபண்டிதப்பட்டம் பெற்றவர்கள் இச்செமினரியிற் கல்வி கற்றரங்கேறிய காரல் விசுவநாதபிள்ளை, சி. வை, தாமோதரம்பிள்ளை என்பவர்களாம். யாழ்ப்பாணத்திலே வசித்து ஆங்கில தமிழ்க்கல்வி வளர விசேஷமுயற்சிசெய்த கென்றி மாட்டின், ரெவின்சு சிதம்பரப்பிள்ளை, ஆணல்ட் சதாசிவம்பிள்ளை, (உதயதாரகைப்பத்திராதிபர்) எவ்வேட்ஸ் கனகசபைப்புலவர், உவைமன் கதிரைவேற்பிள்ளை(நீதிபதி), R. பிரக்கன்றிட்சு (உபவித்தியாதரிசி) லைமன் சரவணமுத்து, C. உவாட்ஸ்வேர்த், J. P. குக், பேச்சு, முதலாம் ஆசிரியர்மாரும், T. P ஹன்ற், B. H. றைசு, D. P. னைல்ஸ், D. ஸ்நிக்கினி, F. அஸ்பரி முதலாம் போதகமாரும்; நதானியேல் நைல்ஸ், S. பேசின், சிவெல் சுப்பிரமணியர்முதலாம் பிரசங்கிமாரும் இச்செமினரிமாணவராம். இச்செமினரியிற்கற்றோர்பலர்யாழ்ப்பாணம் இலங்கை இந்தியாஎன்னுமிடங்களிலே அரசாட்சிப்பகுதியிலே விசேஷ உத்தியோகம் பெற்றுச் சிறந்து விளங்கினர். அவர்களுள் நீதிபதி உத்தியோகம் பெற்றவர்கள் அம்பலவாணத்துரை, உவைமன் கதிரைவேற்பிள்ளைத்துரை, M. கம்புத்துரை, T.C சங்கரப்பிள்ளைத்துரையென்பவர்களாம். சவிரிமுத்துமுதலியார், ஆசீர்வாத முதலியார், கனகரத்தினமுதலியார், மெக்கன்ஸ்றி கனகரத்தினமுதலியார், றேசேர்ஸ் அரசரத்தினமுதலியார், பார் குமாரகுலசிங்கமுதலியார், பெக்வாஎன் சந்தியாப்பிள்ளைமுதலியார், ஹப்பல் முதலியார், தாமோதரம்பிள்ளை முதலியார், யோன்பிள்ளை யேர்வின், தம்பாபிள்ளை அதிகாரம் டெவற், இராசகாரியர் என்பவர்களும், பகிரங்க வேலைப்பகுதியில் உயர்ந்த உத்தியோகம்பெற்று விளங்கிய ஷேர்மன், வேலுப்பிள்ளை, ஆம்ஸ்றோங் முதலிய கமானிமாரும், துறைமுகப்பகுதியில் உத்தியோகம் வகித்து விளங்கிய றெக்ருவுட், ஹல்லக்முதலியவர்களுமே; அம்பலவாணர், ஹோமர், லோற்றன், முதலிய சிறுப்புமாரும்; அ. சின்னத்தம்பி, பொ. சின்னக்குட்டி முதலிய பிறக்டர்களும்; ஹே முதலித்தம்பி, கொருநேலியு முதலிய நிலஅளவை (சேர்வையர்) உத்தியோகஸ்தரும். வடதேசத்திலே உயர்ந்தஉத்தியோகம் வகித்து விளங்கிய காரல் விசுவநாதபிள்ளை, சி. வை. தாமோதரம்பிள்ளை, செல்லப்பாபிள்ளை, அரியநாயகம்பிள்ளை, சவுந்தாநாயகம்பிள்ளை, மோசெல் வேலுப்பிள்ளை, வினாக் கண

பதிப்பிள்ளை முதலியவர்களும் இச்செமினரி மாணாக்கர்களாம். இச்செமினரி யாழ்ப்பாணத்திலே ஆங்கில தமிழ்க்கல்வி விருத்திக்கு விசேஷ சாதனமாயும், அரசாட்சி உத்தியோகஸ்தர் பலரைப்பயிற்றிய வித்தியாசாலையாயும், யாழ்ப்பாணத்துச் செல்வ சம்பத்து, சீர்திருத்தம், சனசங்கத்தேர்ச்சி முதலியவற்றுக்கு மூலகாரணமாயும், மிஷனரிமாரின் ஊழியத்துக்குப்பலரைப்பழக்கிவிட்ட விசேஷ ஸ்தாபனமாயும் விளங்கினது. இச்செமினரியாழ்ப்பாணத்துக்கு எல்லாவகையிலும் மிகமாட்சியுடைய பெருஞ் சனோபகார ஸ்தாபனமென்பது எவரும் அறிந்த சத்தியமாம். 279 ம் பக்கத்தில் குறிக்கப்பட்டபடி மிஷனரிமாரால் ஸ்தாபிக்கப்பட்ட ஏனைய உயர்தர ஆங்கில வித்தியாசாலைகள் டைக்மன்னவர் அரசாட்சிகாலத்தில் ஆரம்பமாகிநடைபெற்றன. இவ்வித்தியாசாலைகளில் அனேகமாணாக்கர் ஆங்கிலகல்வியைக் கற்பாராயினர். இக்கலாசாலைகள்மூலம் யாழ்ப்பாணத்திலே ஆங்கில கல்வி அதிக விருத்தியடைந்தது.

(விசுவநாதசாஸ்திரியார்)

செமினரியில் ஆங்கில வானசாத்திரத்துடன் தமிழ் வானசாத்திரமும் சோதிடநூலும் கற்பிக்கப்பட்டன. அக்காலத்தில் அராலியில் வசித்தவரும் ஒன்பது தலைமுறைகளாய்ப் பஞ்சாங்கங் கணித்துவந்த சந்ததியிற் பிறந்தவருமாகிய விசுவநாத சாத்திரியார் கணித்த பஞ்சாங்கத்துக்கும், செமினரியார் கணித்த பஞ்சாங்கத்துக்கும் ஓர் சந்திரகிரகணத்தைப்பற்றிக் குறித்த விஷயத்தில் வித்தியாசங் காணப்பட்டது. அவ் வித்தியாசத்தைக் கவனித்துச் செமினரியாரின் பஞ்சாங்கங் குறித்த சந்திரகிரகணக் குறிப்புகள் பிழையெனக் கூறியவர்களுக்கு, அக்காலச் செமினரித் தலைவராகிய பூர் பண்டிதர் அச்சந்திரகிரகணநேரத்தில் செமினரியார் கணித்து வெளிப்படுத்திய குறிப்புகளே சரியானவைகளெனத் தெளிவாய்க் காட்டினர். இதனால், ஆங்கில வானசாத்திரமாதியவற்றின் உண்மையையும், திட்ப நுட்பத்தையும் அனேகர் அறிந்து அச்சாத்திரங்களை நன்குமதிப்பாராயினர். மேலேகுறித்த விசுவநாதசாத்திரியாரும் இச்செமினரியாரின் பஞ்சாங்ககணிதச் சரிமுறையைத் தானுங் கற்றுப் பஞ்சாங்கங் கணித்ததுடன், சோதிடநூல்களை அவர்களுக்குக் கற்பிப்பதில் உதவியாயுமிருந்தனர். செமினரியார்மூலம்அவர் இராசாங்க சோதிடரென்னும் பட்டமும் பெற்றார்.

(பெண்கள் கல்விவிருத்தி)

நாம் முன்னர்ச் சுட்டியபடி அமெரிக்க மிஷனரிமாரின் விசேஷ முயற்சியினால் பெண்கல்வி மிக விருத்தியடைந்தது. உடுவில் பெண்பாடசாலையிலே ஆயிரக்கணக்கான பெண்பிள்ளைகள் தமிழ் ஆங்கில கல்வியைக்கற்று அறிவின்கண் சிறக்கப்பெ

ற்றுக் "கற்ற பெண்டிர் இற்கு விளக்கு" என்றபடி விளங்கினர். டைக் துரை காலத்திலே பெண்கள் கல்வி அதிக விருத்திய டைந்தது. இவர் காலத்திற்தான் 279 ம் பக்கத்திற் சுட்டிய உவெசிலியன்மிஷன் சேட்சுமிஷன் பெண்பாடசாலைகளும் கத்தோலிக்குமிஷன் கன்னியாஸ்திரிமடமும் ஸ்தாபிக்கப்பட்டன. அமெரிக்க மிஷனரிமார் 1868 ம் ஆ. உடுப்பிட்டியிலே ஓர் பெண்பாடசாலையை ஸ்தாபித்தனர். பிற்காலத்திற் பருத்தித்துறையில் உவெசிலியன்மிஷனால் ஓர்பெண்பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது. இப்பாடசாலைகளில் அனேக பெண்பிள்ளைகள் ஆங்கில தமிழ்க் கல்விகளைக் கற்றனர். பெண்பிள்ளைகள் கல்வியறிவில்தேறவும், குடும்பவாழ்வு சீரடையவும், பிள்ளைகள் இளமை தொடக்கம் கல்வியில் தேறவும், யாழ்ப்பாணச்சனசங்கம் நன்னிலையடையவும் இப்பெண்பாடசாலைகள் விசேஷ காரணங்களாய் விளங்கின.

(செந்தமிழ்ப்பாஷைவிருத்தி)

மிஷனரிமாரின்முயற்சியால் ஆங்கிலபாஷை உயர்தரக்கல்வி யாழ்ப்பாணத்தில் விருத்தியடைந்ததுபோலவே உயர்தரத்தமிழ்ப்பாஷைக்கல்வியும் வளர்ச்சியடைந்தது. மேலே குறிக்கப்பட்ட செமினரிப்படிப்பும், அச்செமினரியிற் கற்று அரங்கேறிய செவின்ஸ் சிதம்பரப்பிள்ளை, காரல் விசுவநாதபிள்ளை, உவைமன் கதிரைவேற்பிள்ளை, ஆனல்ட் சதாசிவம்பிள்ளை, எவ்வேடன் கனகசபைப்புலவர் முதலிய வித்துவசிரோன்மணிகளின் முயற்சிகளும், இவர்களியற்றிப் பிரசுரித்து வெளிப்படுத்திய தமிழ்நூல்களும் செந்தமிழ்ப்பாஷை சிறந்து விருத்தியாக விசேஷ உதவியாயிருந்தன. செமினரி நிறுத்தப்பட்டபின் அதனிடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட அமெரிக்கமிஷன் போதனவித்தியாசாலை செந்தமிழ்ப்பாஷாவிருத்திக்குரிய கல்வியைச் செம்மையாய்க் கற்பித்து வந்தது. அவ்வித்தியாசாலையிற்கற்று, அவ்வித்தியாசாலையில் ஆசிரியர்களாயிருந்த யோன் சக்காப்பிள்ளை போதகர், எரேமியா சின்னத்தம்பிப்புலவர், உவில்லியம் சின்னத்தம்பி(பாலியர்நேசன் பத்திராதிபர்) முதலியோர் செந்தமிழ்ப்பஷா விருத்திக்குப் பலவகையிலும் உதவியாயிருந்தனர். கோப்பாய்ப்போதனவித்தியாசாலை முதலியவைகளும் செந்தமிழ்ப்பரிபாலனத்துக்கு உதவியாயிருந்தன.

அமெரிக்க மிஷனால் மானிப்பாயில் ஸ்தாபிக்கப்பட்ட அச்சியந்திரசாலை அனேக தமிழ்ப் புத்தகங்களை அச்சடித்துப் பரப்பினது. பாடசாலைகளுக்கு வேண்டிய புத்தகங்களும், தமிழ் அகராதி முதலிய நூல்களும், இலக்கண இலக்கிய நூல்களும்இந்த அச்சியந்திரசாலையில் பிரசுரித்துவெளிப்படுத்தப்பட்டன. உவின்சிலோ என்னும்நாமமுடைய அமெரிக்கமிஷனரியொருவரால்பல

தமிழ்ப்பண்டிதர்களினுதவியோடு உவின்சிலோஎன்னும் பெயருடனோர் தமிழ் இங்கிலிஷ் அகராதி இயற்றப்பட்டிருக்கின்றது. இவ்வச்சுக்கூடத்தில் 1841ம் ஆடு தொடக்கம் உதயதாரகை என்னும் பெயருடைய ஓர் பத்திரிகை ஆங்கில தமிழ்ப்பாஷைகளில்பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையிலுள்ள ஆங்கில சுதேச பாஷைப்பத்திரங்களுள், இதுவே முதல் உற்பத்தியானது. இப்பத்திரிகையைச் செந்தமிழில் யாவரும் விரும்பிவாசித்து இன்புற நாற்பது வருடங்களாய் அமெரிக்கமிஷனுதவியுடன் ஆனல்ட் சதாசிவம்பிள்ளை சிறப்பாய் நடத்தினர். "பாலியர்நேசன்" பத்திரிகையைப் பலவருடங்களாய் உவில்லியம்சின்னத்தம்பி நன்றாய் நடத்தினர். இவைகள் செந்தமிழ்ப்பாஷை விருத்திக்கு அதிக உபயோகமாயிருந்தன.

## (ஆறுமுகநாவலர்)

இக்காலத்தில் யாழ்ப்பாணத்திலே செந்தமிழ்ப்பாஷை விருத்தியாக விசேஷ முயற்சி செய்தவர் ஆறுமுகநாவலராம். யாழ்ப்பாணம் நல்லூரிலே, கார்காத்த வேளாளர் மரபிலே, பாண்டிமழவர் குடியிலே, அரசாட்சியாரிடம் ஆராச்சி உத்தியோகத்தில் அமர்ந்திருந்த கந்தப்பிள்ளையென்பவருக்குப் புத்திரராய் 1822ம் ௵ மார்கழி ௴ 18 ௳ பிறந்த இவர்; ஐந்து வயசிலே வித்தியாரம்பஞ்செய்து ஆரம்ப தமிழ்க்கல்வி கற்று, வேலாயுதமுதலியார், சேனாதிராயமுதலியார், சரவணமுத்துப்புலவர் என்பவர்களிடம் இலக்கண இலக்கியங்களைக் கசடறக்கற்றுத், தமிழ்ப்பாஷையில் விசேஷ பாண்டித்தியம் அடைந்து, சம்ஸ்கிருதத்திலும் பயிற்சியடைந்து, உவெஸ்லியன்மிஷன் பாடசாலையில் ஆங்கில பாஷையுங் கற்று, 20வயசில் அப்பாடசாலைத்தலைவரான பீற்றர் பேர்சிவல் தேசிகருக்குத் தமிழ்ப்பண்டிதராகிவேதாகமமொழிபெயர்ப்பில் அவருக்கு நல்லஉபயோகியாகி அவருடன்கூடிச்சென்னைபுரிக்குச் சென்று திரும்பி, 1845ம் ௵ வரையிலும்அவருக்குத்துணை செய்து அப்பால் அவரது வேலையை விட்டு செந்தமிழ்ப்பாஷையைப் பரிபாலிக்கவும் சைவசமயத்தை வளர்க்கவும் கருத்துட்கொண்டு முப்பத்திரண்டு வருடங்களாய் விசேஷமுயற்சிகள்புரிந்து 1879 ம் ௵ மார்கழி ௴ 5 ௳ தேகவியோகமாயினர். இவர் செந்தமிழ்ப்பரிபாலனத்துக்கு உதவியாய் வண்ணார்பண்ணையிலும், சிதம்பரத்திலும் இரண்டு சைவப்பிரகாசவித்தியாசாலைகளை ஸ்தாபித்து, அனேக மாணாக்கருக்குச் செந்தமிழ்க்கல்வியைக் கற்பிக்கவேண்டிய ஒழுங்கு செய்து பல மாணாக்கருக்கு இலக்கண இலக்கியங்களைக் கற்பித்தும், கந்தபுராணம் பாரதம், சேதுபுராணம், பிரயோகவிவேகவுரை, திருவள்ளுவர்பரிமேலழகருரை, திருக்கோவையுரை, தொல்காப்பியம்;சேனாவரை

ப்ருரை, நன்னூற் காண்டிகையுரை, விருத்தியுரை, நிகண்டு சூ
டாமணியுரை, இலக்கணக்கொத்து, இலக்கணவிளக்கச்சூறாவளி
கோயிற்புராணஉரை, இலக்கணச்சுருக்கம், திருவிளையாடற்புராண
வசனம், பெரியபுராணவசனம், தருக்கசங்கிரகம் முதலாம் அறுப
துக்குமேற்பட்டபுத்தகங்களைத்திருத்தி அச்சிட்டுப்பிரசரித்துவெ
ளிப்படுத்தினர். இவருடைய முயற்சியினால் செந்தமிழ்க்கல்வி
யாழ்ப்பாணத்திலுந் தென்னிந்தியாவிலும்பெருவிருத்தியடைந்
தது இவரால்ஸ்தாபிக்கப்பட்டசைவப்பிரகாசவித்தியாசாலைகள் இ
ன்றும் நன்றாய் நடைபெற்று வருகின்றன. இவரிடம் கற்றமாணா
க்கராகிய நடராசையர், க. ச. பொன்னம்பலபிள்ளை, சபாபதிநா
வலர், முருகேசபண்டிதர், செந்திநாதையர் முதலியவர்களும்
செந்தமிழ்க்கல்வி வளர முயற்சிசெய்தனர்.

(சங்கரபண்டிதர்)

நீர்வேலியில் வசித்தவரும், செந்தமிழிலும் சம்ஸ்கிருதத்தி
லுஞ்சிறந்த பாண்டித்தியம் பெற்றவருமாகிய சி. சங்கரபண்டிதர்
தமிழ்ப்பாஷையையுஞ் சம்ஸ்கிருதபாஷையையும் அனேகமாணாக்
கருக்குக் கற்பித்துவந்தனர். சித்தாந்தசைவப்பிரசாரக சிரோரத்
தினமும், சிவபூசாதுரந்தருமான இவர்; ஆறுமுகநாவலர் கால
த்தில் அவருக்கு உதவியாகவிருந்து பெரியபுராணசூசனம்
முதலிய பல நூல்களை இயற்றினவர். சைவப்பிரகாசனம்,
சிவபூசையந்தாதி விருத்தியுரை, முதலிய தமிழ்நூல்
களையும்; பாலபரீட்சை. சப்தசங்கிரகம், அகநிர்ணயத்திராவிட
வியாக்கியானம், சிவஞானபோதத்தமிழுரை, சித்தாந்தசாரவலி
லகுடீகை முதலிய சம்ஸ்கிருதநூல்களையும் இயற்றியவர்.

(சிவசம்புப்புலவர்.)

உடுப்பிட்டியை வாசஸ்தானமாகக் கொண்ட இவரும் இல
க்கண இலக்கியவித்துவானாகவிருந்து அனேக மாணவர்களு
க்கு ஆசிரியரானதுமன்றி, யாப்பருங்கலக்காரிகையுரை, வள்
ளியம்மைதிருமணப்படலவுரை, யமகவந்தாதி, பாஸ்கரசேதுபதி
கல்லாடக்கலித்துறை ஆதியாம் பலநூல்களைச்செய்தவர். இவர்.
இராமநாதபுரம் ஸ்ரீ பாஸ்கரசேதுபதி மகாராசாவின்பேரில் சில
நூதனபாடல்களை இயற்றிச்சென்று அவரிடத்தில் விசேஷமதி
ப்பும் நல்லபரிசும் பெற்றவர்.

இக்காலத்தில் இவர்கள் மாத்திரமல்ல யாழ்ப்பாணத்திலே
அனேகர் தோன்றிச் செந்தமிழ் வல்லுநராக விளங்கித்தமிழை
நன்கு வளர்த்து வந்தார்கள்.

(வைத்தியக்கல்விவிருத்தி)

அமெரிக்கமிஷன் சங்கத்தாரால் யாழ்ப்பாணத்துக்கு ஆன்
சில வைத்தியசகாயங் கிடைத்ததென 279 ம் பக்கத்தில் கூறி

னோம். முதல் யாழ்ப்பாணம் வந்த வைத்தியமிஷனரியாகிய டக்றர் ஸ்கடர்ஐயர் சென்னபட்டணத்துக்கு மாறிச்செல்ல உவாட்வைத்தியரும், கிறீன் வைத்தியரும் யாழ்ப்பாணம் வைத்தியமிஷனரிமாராய்வந்து வைத்தியசகாயம்புரிந்தனர். கிறீன் வைத்தியர் மானிப்பாயிலே ஓர் வைத்தியசாலையை ஸ்தாபித்து, அங்கே வைத்தியசகாயம் பெறவந்தவர்களுக்கு வைத்தியஞ் செய்தும், பலமாணாக்கரைச் சேர்த்து வைத்தியக்கல்வியை ஆங்கிலபாஷையிலுந் தமிழ்ப்பாஷையிலும் படிப்பித்து அவர்களைச் சிறந்த வைத்தியர்களாக்கியும், ஆங்கில வைத்திய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துப் பிரசுரித்துப் பரப்பியும், யாழ்ப்பாண ஆபத்துக்குதவி வைத்தியசாலையை மேற்பார்வையிட்டும், யாழ்ப்பாணத்திலே பேதிவியாதிபரம்பினகாலத்தில் அந்நோயாற் பிடிக்கப்பட்டவர்களுக்கு மருந்துகொடுத்து அந்நோய் பரவாதபடி விசேஷ முயற்சிசெய்தும் ஆங்கில வைத்தியத்தின் பெருமையையும் அருமையையும் யாழ்ப்பாணிகள் நன்றாய் அறியச்செய்தனர். இவர்வைத்தியசித்தியிலும் இனியகுணத்திலும் சிறந்தவரெனப் பெரும் பெயர்படைத்து விளங்கினர். கிறீன்வைத்தியர் யாழ்ப்பாணம்வருமுந்தியுஞ் சிலர் வைத்தியங்கற்றனர். அவரிடம் வைத்தியக் கல்விகற்று அரங்கேறினமாணாக்கர் நூற்றுக்குமேற்பட்டோர். அவர்களுள்பலர் அரசாட்சிப்பகுதியில் வைத்தியஉத்தியோகம்பெற்றுவாழ்ந்தனர். அவர்கள்நாமங்கள்: கினிவிலண்ட், கூல்ட், எட்வேட்ஸ், டான்வோத், போல், மில்ஸ், சாப்மன், மெக்கின்றையர், சிவப்பிரகாசம், சாமுவேல், ஸ்திறோங், நவரத்தினம் முதலியனவாம்.

(சமயநிலை)

ஆங்கிலேய அரசர் இலங்கையை ஆள ஆரம்பித்த காலத்திலேயே குடிசனங்களியாவருக்கும் தத்தம் பிரியப்படி சமயங்களை அநுஷ்டிக்க இஷ்டங்கொடுத்தனர். "டைக்துரை காலத்திலே யாழ்ப்பாணத்திலுள்ள எப்பாலாருந் தாம் விரும்பிய சமயங்களை இஷ்டமாய் அநுசரித்து வந்தனர். இவர் எச்சமயத்தாருக்கும் அவரவர் தம்மிஷ்டப்படி சமயாநுஷ்டானஞ் செய்ய வேண்டிய உதவிகள் புரிந்து வந்தனர். இவர் காலத்திலே நெடுங்காலமாக காடேறும் மறைந்து கிடந்த சைவாலயங்கள் பிரகாசிப்பனவாயின. எங்கெங்கே ஆலயங்களோ அங்கங்கெல்லாம் (றோட்டு) தெருக்களை வகுத்துக் கொண்டுபோய் விடுத்து அவைகளை விளக்கமாக்கினர்." ஆறுமுகநாவலர் சைவப்பிரசங்கஞ்செய்தும், சைவப்பிரடசாலைகளை ஸ்தாபித்தும், சைவபாடபைகளும் சைவவினாவிடை சைவசமய நெறியுரை மூதலிய புத்தகங்களை இயற்றி அச்சிட்டுப் பரப்பியுஞ் சைவசமயத்தை வளர்க்கப் பிரயாசப்பட்டனர். போத்துக்கேசர் காலத்திலே

கத்தோலிக்குக் குருமாரால் பரப்பப்பட்ட கத்தோலிக்குமதம் இக்காலத்தில் பலவகையிலும் பரம்பியிருந்தது. ஒல்லாந்த அரசினர் முயற்சியால் புரோட்டெஸ்தாந்த மதந்தழுவினர் ஆங்கில அரசாட்சியாரின் ஆரம்பகாலத்தில் பின்வாங்கிப் பழையபடியே சைவசமய அனுஷ்டானங்கள் புரிந்தனர். நாம்முன்னர்க்குறித்தபடி ஆங்கிலேயர் காலத்தில் யாழ்ப்பாணத்திலே கிறிஸ்து (புரோட்டெஸ்தாந்த)மதத்தைப்பரப்பவந்த உவெஸ்லியன்மிஷன் அமெரிக்கமிஷன் சேட்சுமிஷன் சங்கங்களைச்சேர்ந்த மிஷனரிமார்மூலம் கல்வியறிவு விருத்தியானதுடன் பலர்கிறிஸ்தவர்களாயினர். மிஷனரிமாரிடம் கல்வி கற்றபொழுது கிறிஸ்தவர்களாகிக்கல்வி கற்றரங்கேறி உத்தியோகம் பெற்றபின் கிறிஸ்துமார்க்கத்தைவிட்டுத் தம் பூருவ சமயந்தழுவினோர் சிலருளர். 'உதர நிமித்தம் பலகிருதவேடம்' என்றபடி வயிற்றுப்பிழைப்புக்காய்க் கிறிஸ்தவர்களானவர்களுமுண்டு. ஆயின் பலர் அம்மார்க்கத்தில் உண்மையான விசுவாசமும் பக்தியுமுடையராயிருந்ததுடன் அவர்கள் பின்சந்ததியாரும உண்மையான கிறிஸ்தவர்களாகச் சீவித்து வருகின்றனர். இம்மிஷன் சங்கத்தாரின் நன்முயற்சிகளால் கல்வி விருத்தியும் கிறிஸ்துசமய விருத்தியும் அதிகப்பட்டுக்கொண்டே வருகின்றன.

(தமிழர் உத்தியோகம் பெறுதல்)

ஆங்கிலர் யாழ்ப்பாண அரசைக்கைக்கொண்டபின் யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர்களது பரம்பரையிலுள்ளவர்களே அனேக இராசாங்க உத்தியோகங்களைப்பெற்று வந்தனர். டைக்துரை காலத்தில் சுதேசிகளாகிய தமிழரே அவ்வுத்தியோகங்களைப் பெறுவாராயினர். கோப்பாய் அம்பலவாணர்த்துரை நீதிபதி உத்தியோகம்பெற்றது இவர்காலத்திலாம். பெயர்படைத்த சவரிமுத்துமுதலியார், தெல்லிப்பழை கனகரத்தினமுதலியார் கச்சேரியில்உத்தியோகம்வகித்தனர். நாம்மேலேகுறித்தபடி அனேகர் இவர்காலத்தில் அரசாட்சியுத்தியோகம்பெற்றனர். இவ்வகையாய் இந்நாட்டுச்சுதேசிகள் உயர்ந்தநிலையடையவேண்டுமென்பது இவரது வாஞ்சையாயிருந்தது.

(யாழ்ப்பாணிகள் பிறநாடுசெல்லுதல்)

யாழ்ப்பாணத்தில் முன்னர்க்காட்டியபடி ஆங்கிலகல்வி அதிகரிக்க அதைக்கற்றோர் உத்தியோகந்தேடி இலங்கை இந்தியா ஆகிய இடங்களுக்குச் சென்று, சிறந்த உத்தியோகங்கள்பெற்று ஐசுவரியமடைந்து வந்தனர். அதினால் இந்நாட்டிலும் செல்வ சம்பத்து அதிகரித்தது. இந்த ஏசண்டரினுளுகையின் கடைசிக்காலத்திலே யாழ்ப்பாணத்திலே கல்விகற்ற வாலிபர் சிங்கப்பூர் ஐக்கியமலாய்நாடுகளுக்குச் செல்வாராயினர். 1855 ம் ஆ

வட்டுக்கோட்டைச் செமினரி திறக்கப்பட்டபின் R. பிரக்கன்றிட்சு ஆசிரியரைத் தலைவராய்க்கொண்டு தாபிக்கப்பட்ட வட்டுக்கோட்டை இங்கிலீஷ் மகாவித்தியாசாலையிலே கல்விகற்றறங்கேறியவரும் வட்டுக்கோட்டை வாசருமாகிய மூ. வயித்திலிங்கம்என்பவரே முதல் சிங்கப்பூர்க்குச்சென்று உத்தியோகம்பெற்றுச் செம்மையாய் நடந்து அநேக வாலிபரையழைத்து அவர் உத்தியோகம்பெற உதவிசெய்தனர். அதனால் அவர் சிங்கப்பூர் வயித்திலிங்கமென அழைக்கப்பட்டனர். அவரைப்பின்பற்றி யாழ்ப்பாணவாலிபர் அநேகர் அங்கேசென்று உத்தியோகம்பெற்று அங்கே குடிபதிகளாய்ச் சீர்சிறப்பாய் வாழ ஆரம்பித்தனர். வரவர அங்கேசெல்லும் யாழ்பாணிகள்தொகை அதிகரித்தது. அதனால், இக்கியமலாய்நாட்டைச்சேர்ந்த குவாலாலம்பூர் சின்னயாழ்ப்பாணமென்று அழைக்கப்படுகிறது. இவர்கள் மூலம் யாழ்ப்பாணத்துக்கு வருஷந்தோறும் பெருந்தொகைப் பணம் அனுப்பப்படுகின்றது.

(அந்நியகாலம்)

இலங்கைப்பிராசாங்க லிகிதரும், டைக்மன்னரின் அரியநண்பருமாகிய அன்ஸ்துருதர்துரையின் ஏவுதலால் டைக்துரை 1843 ம் ௵ வடமாகாண எசண்டு உத்தியோகத்தை விட்டு இலங்கையரசிறைத் தனுதிகாரியுத்தியோகம் பெற்று, அந்த உத்தியோகசாலையில் இலங்கையரசினர் இவரைப்போற்றிப்புகழத்தக்கதாய் வியப்புக்குரிய நயப்பான பலதிருத்தங்கள் செய்து சிலகாலத்தால் மீண்டுந் தமதுபழைய உத்தியோகமாகிய (வட. மாகாண. எசண்டர்)யைப்பெற்று, யாழ்ப்பாணஞ் சிறந்த உன்னதநிலையடையத் தம்மாற்கூடிய யாவற்றையும் மிக்கதிறமையாய்ச்செய்து வந்தனர். இவர் பலமுறை இலங்கையரசினரால் உயர்ந்த உத்தியோகம் பெற்றுக்கொள்ள நற்தருணம் பெற்றும், அந்த உயர்ந்த பதவியை விரும்பாது யாழ்ப்பாணநாட்டிலும் யாழ்ப்பாணிகளிலும் இவர் கொண்ட பேரன்பினால் யாழ்ப்பாணத்திலேயே மரணபரியந்தஞ் சீவிக்கக் கருத்துக்கொண்டனர். டைக்துரையின் அரியநண்பராகிய அன்ஸ்துருதர் இராசாங்க லிகிதபதவியை விட்டபொழுது அப்பதவிக்கு அரசினர் இவரை நியமிக்க இவரோ அந்த உயர்பதவி தமக்கு வேண்டாமெனக்கூறி யாழ்ப்பாணத்திற் றாங்கொண்ட பெரும்பற்றை யாவர்க்குந் தெளிவாய்க்காட்டினர். இத்தகைப்பரோபகார சிந்தை கொண்ட இச்சீமான் யாழ்ப்பாணத்தின் பெருவாழ்வுக்கு உதவியாய் நல்லரசு நடாத்திவரும்பொழுது, 1867 ம் ஆண்டிலே இவர் தேகத்திற் குடிகொண்டு இவரை வாட்டிய கடும்பிணியை அமெரிக்க வைத்தியமிஷனரியாகிய டக்டர் கிறீன் ஐயர் நீக்க அரும்பெரும் பிரயாசப்பட்டாலும் அப்பிணி குணமுறாது அதி

காரிக்க இவர் 1867ம் ஆண்டு ஐப்பசி மீ 8உ கோப்பாயிலே தமது சுகிருகத்திலே தேகவியோகமாயினர். இவரிறந்த செய்திகேட்டு யாழ்ப்பாணத்திலே கண்ணீர்விடாதவர் யாவர்? இவர் யாழ்ப்பாணத்திலே நாட்டிய அரும்பெருஞ் செயல்களும் இவர்கீர்த்தியும் யாழ்ப்பாணமுள்ளவரையும் நின்று பிரகாசிக்குமன்றோ? இவர் மரணநேரத்தில் இவருடன் கூடியிருந்தோர் மேலேகூறிய கிறீன் வைத்தியருடன் இவர்நண்பரும் அப்பொழுது மன்னாரிலே உபஏசண்டராயும் பிற்காலத்தில் வடமாகாணம் முழுவதுக்கும் ஏசண்டராயுமிருந்தவராகிய டைவனந்துரையுமாம். அத்துரைமகன் அப்பொழுது கச்சேரிப்பொறுப்பை ஏற்கும்படி அழைக்கப்பட்டுச் சகலபொறுப்பையுமேற்று டைக்மன்னவரிறந்தபொழுது பக்கத்திலிருந்தனர். இச்சீமானின் மரணசெய்தி கொழும்புக்கெட்டினபொழுது அங்குள்ள சிரேட்ட உத்தியோகஸ்தரியாவருந் துக்கசாகரத்தில் மூழ்கினர். அப்பொழுது இலங்கை இராசாங்க லிகிதராயிருந்த கிப்சன் துரை டைக்மன்னவரின் பெருந்திறமைகளையும் அருஞ்செய்கைகளையுமெடுத்துரைத்து இவருக்குத்தக்க ஓர் ஞாபகசின்னம் நாட்டவேண்டுமெனச் சாதித்தனர். இவ்வகையாய் அருங்கீர்த்திபெற்ற பெருந்துரைமகனாகிய டைக்மன்னவரின் சரீரம் சகலவகையான கண்ணியத்துடன் கச்சேரிக்குக் கொண்டுபோகப்பட்டுச் சர்ச்சுமிஷன் குருவால் அந்தியகருமங்கள் செய்யப்பட்டபின் நல்லடக்கஞ் செய்யப்பட்டது.

வெண்பா

"உத்தமன் அக் லன்டைக் குசிதகருமம்வலிது
செத்தனனென்றோ நீவிர் செப்புவீர்—வித்தகனே
புன்குரம்பைவாழ்வைப்புகழ்த்தம்பமாகநட்டு
இன்பசுகாரம்பமுற்றதே"

## ரசல்துரை காலம் கி—பி 1867—1869

டைக் துரைக்குப் பின்னர் கீழ்மாகாண ஏசண்டராயிருந்த றசல்துரை வடமாகாண ஏசண்டராகி யாழ்ப்பாணம் வந்து இரண்டு வருடங்களின்பின் நடுமாகாண ஏசண்டராய்க் கண்டிக்குச்சென்றனர். இவர் காலத்திலே நாம் ஈண்டு குறிக்கத்தக்க காத்திரமான சம்பவங்கள் இந்நாட்டில் நடைபெறவில்லை. ஆயினும் இவ்விடத்தில் அக்காலத்தில் நடைபெற்ற ஓர் சம்பவத்தைக் கூறுதல் அவசியமாம். பெருந்தனவந்தராய்ச் சீவித்து 1868 ம் ஆண்டு தேகவியோகமான விளாவேலி வேதக்குட்டியையரின் ஆதனங்களுக்கு யாழ்ப்பாணத்திலே அக்காலத்திலிருந்த செல்வாக்குள்ளவர்களாயிருந்த அப்புக்காத்து கூல்ட் முதலாஞ் சிலர் பிறப்பித்த பொய்மரணசாதனமும், அம்மரணசாத

ணத்தைப்பற்றி யுண்டான பெரிய வியாச்சியமும், பொலீஸ்விர ரின் அருங்காப்புக்குள்ளே மாகாணக்கோட்டுவீட்டுள்ளே இரு ந்த அவ்வியாச்சியப் புத்தகத்தை எதிர்ப்பட்சத்தைச்சேர்ந்தவர் யாரோ அஞ்சாநெஞ்சராய் உட்சென்று அகப்படுத்திச்சென்ற தும் இக்காலத்தில் நடந்த விசேஷசம்பவமாம்.

துவைனந்துரை காலம் கி—பி 1869—1896

வடமேற்குமாகாண ஏசண்டராயிருந்த துவைனந்துரை 1869 ம் ஸூ புரட்டாதி மீ வடமாகாண ஏசண்டராகி யாழ் ப்பாணம் வந்து 28 வருடம் டைக்துரையுடைய வழிவழியே அதிகாரஞ்செலுத்தினர்.

(மரணசாதனவழக்கு)

இவர் ஏசண்டராய் வந்தகாலத்தில் மேலேகூறிய விளை வேலி வேதக்குட்டி ஐயர் ஆதனங்களுக்குப் பிறப்பித்த மரண சாதனவழக்கைப்பற்றிய அதிர்ச்சியிருந்தது. துட்டநிக்கிரகசிட் டபரிபாலனமாய் நீதிநடப்பிக்கும் ஆங்கில அரசில் நீதிநடை பெற முடியாது நாலுவருடங்களாய் இழுபட்டு உயிரற்றுக்கிட ந்த மரணசாதன வழக்கு; துவைனந்துரையுடைய விடாமுய ற்சியினாலும் மாகாண அதிபதி ரேல்மலிக்கொக்துரையின் விவேகசாமர்த்தியத்தாலும் உயிர்பெற்று, விளக்கப்பட்டு எதி ரிகள் சுப்பிரீங்கோட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டனர். அவ்வழ க்கில் எதிரிகளாய் நின்ற அத்துவக்காத்து நிக்கிலாஸ் கூல்ட் முதலானவர்களின் செல்வாக்கு யாழ்ப்பாணத்திலே அதிகமாயி ருந்தமையால் அவ்வழக்கு கொழும்பு இராசதானியில் விசேட ஆங்கில யூரித்துரைமக்கள் நடுவில் ஸ்ரீ றிச்சேட் மோர்க்கன் துரை இராணியின் அத்துவக்காத்தாய் நின்று வழக்கைநடத்த ஸ்ரீ கிறேசி என்னுஞ் சிரேட்ட நீதிபதியால் விளக்கப்பட்டது. எதிரிகள் குற்றவாளிகளாய் மறியற்தண்டனை பெற்றனர். இம் மரணசாதனவழக்கால் சிலவருடங்களாய்க்கொதிகொப்பளாபோ லிருந்த யாழ்ப்பாணம் வழக்குமுடிவின்பின் அமைதியடைந்தது.

(விசேஷசெயல்கள்)

"இவரும் அநேகறோட்டுக்களும் சந்தைக்கட்டிடங்களும் அமைத்தனர். இலங்கையையும் இந்தியாவையும் இராமர் பெ ருங்கடலடைத்துப்பெருஞ் சேதுபந்தனமிட்டிணைத்ததுபோலக் காரைதீவையும் யாழ்ப்பாணத்தையும் இவரும் சிறுகடல் தூர் த்துச் சிறிய சேதுபந்தனமிட்டிணைத்தனர். இந்நன்மைக்கு யாழ்ப்பாணத்தார் துவைனந்துரையை எந்நாளும் போற்றும் கடப்பாடுடையர். நெடுங்காலம் இச்சிறுபரவைக்கடலைக் காலா ற்றாண்டிவந்த சனங்கள் துவைனந்துரை செய்தநன்மையால் இப்போது இரவிலும் பகலிலும் இராசவீதியிற் செல்வர்

போற் செல்லுகின்றனர். இச்சிறியசேது ஏறக்குறைய ஒன்றரை மைல் நீளமுடையது. மாட்டுவண்டிகள் குதிரைவண்டிகள் 'மோட்டக்கார்' ரதங்கள் அடிக்கடி இதன்மேற்சென்று மீளுகின்றன. புதியவர் புகுந்தால் மீளுதற்கரிதாய்ச் சந்துப்பின்னலாய்க் குடிநெருங்கிக்கிடந்த சோனகதெருவை இவர் சதுரங்கமனைபோலக் குறுக்குநெடுக்குமாக அநேகறோட்டுக்களை வகுத்து விளக்கமாக்கினர். புலான்மணநீங்காது நாறிப்புழுத்தொழுகும் பாழ்க்குடிசைகள் நிறைந்துகொள்ளைநோயைக்கூவியழைக்கு மியல்புடையதாயிருந்த கரையூரையும் குறுக்குமறுக்குமாக அநேக தெருக்களைத்திறந்து திருத்தினர். கண்டிமார்க்கத்தைக் கற்படுத்தி ஆனையிறவுப்பாலத்தை முடித்து மாதங்களுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் தபால்வண்டிப் போக்குவரவையுண்டாக்கினர். யாழ்ப்பாணத்திலே அநேகவூர்களிலே தபாற்சாலைகளைத்திறந்தனர்." யா—ச—ம்

(குடிசனமதிப்பு)

இலங்கையிலே முதல்முதல் 1871 ம் ஆல் குடிசனமதிப்பெடுக்கப்பட்டது. இம்மதிப்பு வடமாகாணத்திலே சரியாய்க் கணக்கிடுதற்குத் துவைனந்துரை தக்கமுயற்சிகள் செய்தனர். அம்மதிப்பு அக்காலந்தொடங்கி 10 வருடங்களுக்கு ஒருமுறை ஒழுங்காய்க் கணக்கிடப்பட்டபடியால் அடுத்த 1881 ம் 1891ம் ஆண்டுகளிலும் இந்த ஏசண்டர் காலத்தில் கணிக்கப்பட்டது.

(புதியநாணய வழக்கம்)

முன்னர் வழங்கிவந்த பவுண் சிலின் பென்சு என்னும் ஆங்கில நாணயங்களும், வராகன் இறைசால் பணம் துட்டு வெள்ளைச்சல்லி என்னும் இந்நாட்டு நாணயங்களும் நீக்கப்பட 1872-ம் ஆண்டு ரூபா சதம் என்னும் நாணயங்கள் இந்நாட்டில்வழங்கலாயின. இந்நாணயவழக்கம் இலகுவாய்க் கணக்கிடுவதற்கு மிக உதவியாயிருந்தது.

(உவேல்ஸ் இளவரசருக்கு உபகாரம்)

பிரித்தானிய இராச்சிய இராணியாராயிருந்த விக்றோறியா மகாராணியாரின் சிரேட்டபுத்திரராகிய உவேல்ஸ் இளவரசர் (அவர் பிற்காலத்தில் ஏழாம் எட்வேட் என்னும் பெயருடன் அரசுபுரிந்தனர்) 1875 ம் ஆண்டு இலங்கைக்கு விசயஞ்செய்தனர். அந்த அரசகுமாரருக்கு வடமாகாணத்திலும் கிழ்மாகாணத்திலும் வசித்த தமிழ் சாதியத்தார் சிறந்த வெகுமதி கொடுத்து அவரைக் கண்ணியப்படுத்தப் பணஞ்சேர்த்தனர். அப்பணத்தொகைக்கு யாழ்ப்பாணத்தில் சிறந்த நகைகள் துவைனந்துரையுடைய ஏவுதலின்படி அக்காலத்தில் யாழ்ப்பாணக் கச்சேரியில் இரண்டாம் முதலியாராயிருந்த கனகரத்தினமுத

யோர் முயற்சியினால் செய்யப்பட்டன. அந்நகைகளை அரசகுமாரருக்கு அம்முதலியாரே கொடுக்குஞ் சலாக்கியம் பெற்றுக் கொழும்புசென்று பெரிய இராசசபையில் அவர் அந்நகைகளை இளவரசருக்கு உபகரித்துச் சன்மானம் பெற்றனர். அப்பணத்தின் மிஞ்சிய தொகையினால் யாழ்ப்பாணத்திலே முற்றவெளியிலே அலங்காரமாய் விளங்கும் மணிக்கூட்டுக்கோபுரம் மூற்றுவிக்கப்பட்டது. அக்கோபுரத்திலே சேர் லேர்ட்டன் தேசாதிபதி உபகரித்த ஓர் மணிக்கூடு வைக்கப்பட்டிருக்கிறது.

(கொள்ளைநோயும் பஞ்சமும்)

1877 ம் ஆண்டிலே யாழ்ப்பாணத்திலே பேதிநோயும் வைசூரிநோயும் அதிகமாய்ப்பரந்து அனேகரைக்கொல்ல, பஞ்சமும் பரந்து எஞ்சிய சனங்களை வாட்ட யாழ்ப்பாணநாடு முன் எக்காலத்திலும் பார்க்க அக்காலத்தில் மிக அவதிப்பட்டது. தம்பிரசைகள்படுந்துயரைக் கண்ட ஏசண்டர் தம்முயிரையுங்கஞ்சுகத்தையும் பேணாமல் தம்பிரசைகளின் உயிரையுஞ் சுகத்தையுங் காக்கவிரும்பி ஆங்காங்கு கொள்ளைநோய் பரந்த இடங்களுக்குச்சென்று பொலிஸ்வீரரை நிறுத்தி அவ்வவ்விடங்களைச் சுத்திசெய்தும், வேண்டிய இடங்களில் சிறுச்சிறு வைத்தியசாலைகளை ஸ்தாபித்து வைத்தியசகாயம் புரியவைத்தியரை நியமித்தும், நோயாளிகளுக்கு வேண்டியவைகளைத் தாராளமாய்க் கொடுக்க ஒழுங்கு செய்தும், கொள்ளைநோயை அகற்ற மிக முயற்சியாயிருந்தனர். இவர் செய்த அரியபெரிய முயற்சிகளினால் கொள்ளைநோய் குறைந்துபோகாது, இன்னும் அதிக வேகமும் மூர்க்கமுங் கொண்டு பலமாசங்களாய் யாழ்ப்பாணம் எங்கும் பரந்து அனேகரையிறக்கச் செய்தது. பஞ்சமும் மிக அதிகரித்தது. அகவிலை மிக விலையாய் அதிகரித்தது. உணவுப்பொருட்கள் இலகுவாய்க்கிட்டாததினால் அனேகர் எலும்புந்தோலுமானவடிவாய் ஊன்புருக்கொண்டனர். கடற்கரையையடுத்த காட்டோரத்தில் இறந்துகிடந்த ஓர் மனுஷனின் சரீரத்தை அங்க சேதனஞ்செய்து பார்வையிட்ட வைத்தியர் அவனிரைப்பையில் புற்கற்றையைக் கண்டனராம். அம்மனுஷன் உணவில்லாக்கொடுமையினால் புல்லைச்சாப்பிட்டு மரித்ததாக எண்ணப்படுகிறது. அக்காலத்துப்பஞ்சத்தின் கொடுமையை இது தெளிவாய்விளக்குகின்றதே. பஞ்சத்தின் கொடுமையால் தீவார்சிலர் தங்கள் அருமையானபிள்ளைகளை விற்று உணவுகொண்டனராம். பஞ்சத்தினால் வருந்தியவர்களுக்குக் கன்றைநினைத்துக் கதறுங்கறவைபோலத் துரைவனந்துரையும் இரங்கி அவர்களுக்கு அரசாட்சியார் சகாயவேலைகொடுத்து அவர்களையாதரிக்க ஒழுங்குசெய்தனர். சுதேசப்பிரபுக்களுஞ் சிலர் ஆங்காங்கு பஞ்சப்பட்டவர்களுக்குதவிசெய்தனர்; சிலர்வண்ணார்பண்ணையிலே கஞ்சித்தொ

ட்டியொன்று வைத்துப்பஞ்சத்தினால் வருந்திவந்தவர்களுக்கு நாடோறுங்கஞ்சி வார்த்துவந்தனர். கொள்ளைநோய் பஞ்சங்காரணமாக அகவிலைமிகவேற, முன் குறைந்தவிலைக்கு வாங்கித்தங்கள் பண்டகசாலைகளிலே சேமித்துவைத்திருந்த நெல்லைக் காலத்தின் கொடுமையையுஞ் சனங்களின் பரிதாபநிலையையுஞ் சற்றுங்கவனியாது "ஆர்குடிகெடினும் நீ குடிமிளகுசாறு" என்றபான்மையாய் அதிக லாபம்பெற விலையை மிகக் கூட்டிச் செட்டிகள் விற்க ஆரம்பிக்க, சனங்கள் திரண்டு அரசாட்சியார் கட்டுக்காவலையுங்கடந்து சிலவிடங்களிற் கொள்ளையடிப்பாராயினர். அக்காலத்தில் தண்ணளிமிகுந்த பிதாவடைவான இந்த ஏசண்டர்; செட்டிகளை அநியாயமாய்க் கண்டபடி அகவிலையையேற்றாதிருக்கவும், சனங்களை நீதிதவறிக் கொள்ளையடியாதிருக்கவும் எச்சரித்து, இருபகுதியாரும் ஒருவருக்கொருவர் உதவியாய்ச்சீவிக்கச் சமப்படுத்திவிட்டனர்.

யாழ்ப்பாணத்திலே நடைபெற்ற கொள்ளைநோய்களின் உக்கிரவேகத்தையும், பஞ்சத்தின் கொடுமையையும் கேள்வியுற்ற தேசாதிபதி, இவ்விடம் பரந்து அனேக உயிர்களை நாசஞ்செய்யும் கொள்ளைநோயின் காரணத்தையும், பஞ்சத்தின் காரணத்தையும் தக்கபடி ஆராய்ச்சி செய்யவும், அவற்றை நீக்கத்தக்க பரிகரிப்புகளைச் செய்யவும், வைத்தியத்தலைவர் கின்சி, பொலிசுராணுவத்தலைவர் காம்பெல், நிலஅளவைத்தலைவர் வையர் என்னுமமூவரையுமனுப்பினர். அவர்கள் 1877-ம்ஆண்டு ஆனிமீ 21-ந் வ. சேரன்தீவு என்னும் புகைக்கப்பல்மார்க்கமாய் யாழ்ப்பாணம் வந்து ஆங்காங்கு ஓடியுலாவி, காரியங்களைத் திட்பநுட்பமாய் ஆராய்ச்சிசெய்து, கொழும்புக்குச் சென்று தமது ஆராய்ச்சியை அரசினருக்கு அறிவித்தனர். அவர்கள் வருகையால் வடமராட்சியாருக்கு ஓர் வைத்தியசாலை புலோலியிலே 1878-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு அரசாட்சியார்பொறுப்பில்நடைபெற்றுவருகின்றது. 1878-ம்ஆண்டுமுற்பகுதியில் கொள்ளைநோய்குறைந்து அகன்றுபோக, பஞ்சமும் இல்லாதொழிந்தது.

(பெரும் அக்கினி விபத்து.)

மேலே கூறப்பட்ட பேராபத்தின் பின்னர் வடமராட்சியிலே ஓர் பெரும் அக்கினிவிபத்துண்டாயிற்று. அதைப்பற்றி அக்காலத்துப் பத்திரிகையொன்று கூறியவற்றை யீண்டுத் தருகின்றோம்.

"எஞ்சீவியநாளில் எம்முனடந்ததாய் நாங்கேளாததும், எமக்கு முன் நடந்ததாய் இதிகாசங்கூற நாமறியாததுமானவோர் குரூரமும், பரிதாபமும், பயங்கரமும், கண்டோர் கேட்டோர் நெஞ்சத்தை ஏங்கச்செய்ததுமான ஓரிடையூறு 1879-ம் வரு

வைகாசி மீ 3ம் உ இரவு வடமாட்சியிலுள்ள கரவெட்டி வெல்லனிற் பிள்ளையார்கோவிலிற் சம்பவித்தது. சாமியார் உள் வீதியுலாவித் திருவீதியெழுந்தருளுவதற்காகக் கோபுரவாசலைச் சமீபிக்காமுன்னே சூலவிளக்கொன்றிலிருந்தவக்கினி பந்தலிற்றூக்கிய வாகைமாலையொன்றிற்றாவி, விசுவரூபங்கொள்ளப் பந்தர்ச்சோடினைகள் கடதாசிகளும் சீலைகளுமானதால் அந்த அக்கினிதேவனுக் கெளிதான உணவாயிருக்கவே, அவனவற்றை வயிறாரவுண்டு பெலங்கொண்டமளியிற் றொடக்கக் கண்டோர் கூரவையிட, வெளியில் நின்றோர்பல ரவங்கேட்டு மக்கினியைக் காணாது, ஒகோ! சண்டையாக்குமெனநினைந்து வாசலையடைக்கவெத்தனிக்க, இவ்வறிவற்றசெயலா லுண்ணின்ற சனங்கள் வெளிநாட விரும்பியும் கூடாது கிணற்றுள் விழுந்து முக்குளித்தவர்போ லாபத்தடைய, அப்பால், வெளியில் நின்றோர் தம் அறியாமைக்கிரங்கியும், சனங்கள் வெளிநாடக்கூடாது முகப்புப் பந்தல் பட பட, சட சட, மட மடென்று மூடு குளைபோலாகப் பிரசண்டவாயு சமயத்திலே வந்து பின்னோர் புறத்தில் மதிற்றுவாரத்தை யடுத்திருந்த கொட்டகையொன்றில் குதிக்கச் சொல்வதென்ன? அந்தவாசலும் சனங்கள் வெளிநாடற்கிடங்கொடாது தடைசெய்தது: இவ்வாறவதி பெரிதாயிற்று. சனங்கள் ஆபத்திற்கஞ்சித் தப்பலாமென்னும் வாஞ்சையால் ஒருவரையொருவர் மிதித்தும், நெருக்கியும், முந்திமுந்தி மேலிட்டதாலும், அக்கினிபகவான் முழுமூச்சினின்றதாலும், அன்றிரவவரவர்பட்ட வவதிக்கு நிகரந்தவவதியேயன்றி வேறியாதுகூறலாம். ஐயையோ! நம்மூர்ப்பெண்கள் தாலமூலங்களையடுக்கிச் சுட்டாற்போலவே அனேகர் சடப்பட்டார், அவ ரம் மூடுகுளையிற் கிடந்த காட்சியைக் காதாரக்கேட்டோமேயாயினும், நம் லேகினியால் வரைதல் கூடாது. பெண்கள் கட்டின வாபரணங்கள் எங்கே? அவர்கள் கார்மேகவழகமெங்கே? அன்னத்தின் முருக்குக்கொத்த தந்தவரிசைகளெங்கே? ஆ! அவர் காலெங்கே? மேலெங்கே? மானமெங்கே? மரியாதையெங்கே! நீட்டினபடி கரிந்து மாய்ந்தோர்சிலர், கைகட்டினபடி விழுந்தோர் பலர்; கைக்குழந்தைகளை பிடித்தபடி கிடந்தோர்சிலர்; பக்கத்தினின்றோரைக் கட்டினபடி சாய்ந்தோர்சிலர்; குந்துகாலிற் கரிக்கட்டிபோற் கரிந்தோர்சிலர்; அன்றி ரா நாற்பதுக்கு மேற்பட்டோர் பிரேதமானார்கள். முக்கால் வேக்காடு அரை கால் வேக்காடாய் அபாயப்பட்டோர்அனேகர்; அவருள் வீட்டிற்போ யிறந்தோரும் பலர்; நாயன்மார்கட்டிற் போயிறந்தோரும்பலர்; யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் போயிறந்தோரும்பலர்; ஊரெங்கும் அந்தோ! ஐயோ! என்ற அ

மூகைச்சத்தமே சத்தமாயிற்று. இறந்தோர் முன்பின் 100 பேருக்குண்டு" என்பனவாம்.

(தமிழர் பிரதிநிதியின் மரணம்)

தந்தைதாய் வழியால் யாழ்ப்பாணத்து மானிப்பாயைச் சேர்ந்தவரும், இலங்கையிலுள்ள தமிழ்க்குடும்பங்களுள் மிகப் பிரசித்தி பெற்றுக் கொழும்பில் விளங்கிய விசேஷ குடும்பத்திற் பிறந்தவரும், கல்விப்பொருளிலுஞ் செல்வப்பொருளிலுஞ் சிறந்து இங்கிலந்து வரையும் பெருங்கீர்த்தியுற்றுச் சட்டநிருபணசபையிற் தமிழரின் பிரதிநிதியாக இருந்தவருமாகிய ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி நைற்பட்டவர்த்தனப்பிரபு. (முதலாம் நைற்பட்டத்தமிழ்ப்பிரபு) 1879 ம் வரு வைகாசி மீ 4 உ சடுதிமரணமடைந்தனர். இவர் மரணந் தமிழர் சாதிபத்த வரியாவருக்கும் ஆற்றொணாத்துயரைக் கொடுத்தது. இவர் சரிதம் வாசிக்கு யாவருக்கும் மதுரமாயிருக்கும் எனநினைந்து அக்காலத்து உதயதாரகைப் பத்திரிகை அவரைப்பற்றிக் கூறியவற்றை மீண்டுத் தருகின்றோம்.

"இலங்காபுரி மகாராசனாகிய இராவணேசுபரனுடைய சிரங்களில் விளங்காநின்ற சூரியப்பிரபைகான்ற நவரத்தினமகுடங்களைக் குரங்கரசனாகிய சுக்கிரீபன் பறித்தெடுத்து மானபங்கஞ் செய்தானென்ற பழங்கதைபோல, மரணேசுபரனாகிய கூற்றுவனும் இலங்கைமங்கையின் சிரேஷ்ட இரத்தினங்களுட் சிறந்துவிளங்கிய சிறீ முத்துக்குமாரசாமி இரத்தினத்தைப் பறித்தெடுத்து மானபங்கஞ்செய்து, ஐயையோ! எம் இளஞ்சிங்கமிறப்பதே யென்னேயென்னே!! என்று எவரையும் இரங்கவுங் கலங்கவும் வைத்துப்போயினன். ஓ! கொடுங்கூற்று! பாலசிங்கம்போன்று சட்டநிருபணச் சபாமத்தியிற் கிளர்ந்து ஒருவர்முகத்தையும் பாராது எடுத்தகருமத்தையே பார்த்து, மேகம்போன் முழக்கிச் சட்டதிட்டங்களினுழம்போய் நிமிர்ந்து சுளிபோடி, இலங்கை மந்திரத்தவருட் சிறந்த மந்திரத்தவரிவரென்று அட்டதிக்கெங்கும் புகழ்விட்ட இவர் 45 வயதிற் தேகவியோகமாவாரெனக் காத்திருந்தவரெவர்? 4-ந் உ ஞாயிற்றுக்கிழமையே காலனுதனவர்மேற் கைவைக்கத்துணிந்தான். அடுத்தநாட்காலையில் அவர் பிரேதசமம் அதி சிங்காரலங்காரமாய் நடந்தது. கொழும்புநகரஞ் சிற்றருக்கொண்டெழும்பிக் கொள்ளுப்பிட்டிக்கு மெள்ளச்சென்றதில்லை? அவ்விராசதானியிலுள்ள பெரியோர், சிறியோர், துரைமக்கள், பிரபுக்கள், ஐரோப்பியர், சுதேசராதியோர் எள்ளிடவிடமின்றி கள்ளிடைதானின்றி அவரது வாசநாடிச் சரிந்தனர். தேசாதிபதியின் படைத்தலைவர், சட்டநிருபணசபைப் பிரதிநிதிகள், இராசாங்க மந்

திரிமார்; சிரேஷ்ட நீதிபதியோடு கனிஷ்ட நீதிபதிகள் நாமும் வ
ந்தோம், வந்தோமென்று அத்தருணம் முந்திச்சென்றனர். அ
த்துவக்காத்து பேடினந்து, வன்லங்கன்பேக், கிறின்சிங்றன்,
பெரேனியராதியார் துரைமக்களோடு அவருடைய மருமகனாகிய
அத்துவக்காத்து இராமநாதர், சவப்பெட்டி தாங்கி நாதனமா
யிபற்றப்பட்ட பாடைமீதேற்ற சோட்டுக்குதிரைக ளிலபாவா
டைமேல் நடந்து மூன்றுமைல்தூரம் அதை இழுத்துச்செல்லக்
கும்புகள் ஒழுக்கெறும்பு கொடிவிட்டாற்போல மயான ஸ்தா
னஞ் சென்றவுடன், சிரேட்ட நீதிபதி, ஸ்துவாட் நீதிபதி, இரா
ணியின் அத்துவக்காத்து பேடினந்து, வேன்துரை, அத்து
வக்காத்து லிங்கன்பேக் என்னும் இவருடன் மருமகன் அத்து
வக்காத்து இராமநாதர் கூடிப் பிரேதப்பெட்டியை இறக்கி, இர
ண்டுவண்டில் சந்தனக்கட்டைகளடுக்கிய ஈமவிறகின்மேல் வைத்
தனர். மந்திராலோசனைச்சபையில் சாத்தனீயர்களுடை
ய வாய்ச்சொல்லிலடங்காச் சிறீ குமாரசுவாமிச்சிங்கத்தை அக்
கினிபகவான் கணத்திற் சாப்பிராக்கினன். இலங்கைச் சுதே
சிகளுள் முதல் முதல் பிரபுப்பட்டம்பெற்ற அவர் 1833-ம்
௵ பிறந்து கொழும்புக்கல்லூரியிற் கற்றுப் பாண்டித்தியம்பெ
ற்று முல்லைத்தீவு ஏசண்டராகி, அதைப் பறவாய்பண்ணிவி
ட்டுப்போய் நியாயசாஸ்திரங்கற்று, 1856-ம் ௵ அத்துவக்கா
த்தாகி, 1861-ம் ௵ சட்டநிரூபண துரைமக்களுள் ஒருவராகி
அப்பால், 1862 ம் ௵ முதன்முதல் இங்கிலாந்துசீமை சென்
றனர். அங்கே சிலகூட்டத்தில் இவர் பேசினபொழுது இவர்
பாஷைத்திறமையை இங்கிலீஷ் துரைமக்கள்தாமும் வியந்து
புகழ்ந்தனர். அங்கிருக்கும்போது அரிச்சந்திர சரிதமொன்றை
இராணிக்குப் பிரதிஷ்டைசெய்து, அச்சடிப்பித்துப் பிரபுக்கள்
சிநேகம்பெற்று நியாயசாஸ்திரிபென்ற பட்டமும் வாங்கித்தி
ரும்பினர். இரண்டாந்தரஞ் சென்றபோதே 1874-ம்௵ அங்
கிலேய மந்திரியாகிய பீக்கன்ஸ்வீல்ட் பிரபு (Lord Beacon
field) சகாயத்தோடு நயிற்பட்டம்பெற்று ஓர் உயர்குல வக்கில
துரைச்சானியை விவாகஞ்செய்துவந்தார். இப்போ தவரும் பு
த்திரரும் அங்கேயிருக்க, இவர் தஞ் சுற்றமித்திரர் மத்தியிற்
றேகவியோகமாயினர். அந்தோ! அந்தோ!" .

இவருடைய மரணத்தின்பின் சட்டநிரூபணசபையிலே இ
வருடைய இடத்துக்கு இவர் மருகராகிய அத்துவக்காத்து இ
ராமநாதர் (இப்பொழுது இலங்கைக் கற்றோர் பிரதிநிதியாயிருப்
பவர்) நியமனம்பெற்றனர்.

(கலாவிருத்தி.)

துவைனந்துரை வடமாகாணஏசண்டரானவருடத்துக்கு அடுத்
தவருடம் இலங்கைஅரசினர்சுதேசபாடசாலைகளுக்கு அரசிறைப்

பணத்திலிருந்து உதவிநன்கொடைகொடுத்துச் சுதேசகல்வியை விருத்தியாக்க முயற்சித்தனர். இதனால் யாழ்ப்பாணத்திலே மிஷனரிமாரால் நடத்தப்பட்ட பாடசாலைகள் அரசினரால் பரீட்சிக்கப்பட்டு உதவிநன்கொடை பெறலாயின. யாழ்ப்பாணச் சுதேசிகளுள் R. பிரக்கன்றிட்சு முதல் உப வித்தியாதரிசியாக அரசினரால் நியமனம்பெற்றுப் பாடசாலைகளைக் கிரமமாய்ப் பரீட்சித்துவந்தனர். இதனால் சுதேச பாடசாலைகள் ஆங்காங்கு அதிகப்பட்டன. உவெசிலியன், அமெரிக்கன், சேட்சு மிஷனரிமாரும், கத்தோலிக்க குருமாரும் ஆங்காங்கு கிராமப்பாடசாலைகளை அதிகப்படச்செய்து, அனேக மாணாக்கரைக்கூட்டிக் கல்விபயிற்றி அரசினர் பரீட்சைக்குவிட்டுத் தாராளமான உதவிப்பணம்பெற்றுச் சுதேசகல்வியை விருத்தியாக்கினர். யாழ்ப்பாணச் சுதேசிகளுள்ளுஞ்சிலர் அவ்வகைப்பாடசாலைகளை ஸ்தாபித்து அரசினர் உதவிநன்கொடைபெற்று நடத்தினர்.

ஆங்கில கலாசாலைகளுக்கு அரசினர் முன் கொடுத்துவந்த ஓர்தொகைப்பணத்தை இக்காலத்தில் நீக்கி, பரீட்சித்துச் சித்தியடையும் மாணாக்கருக்கு உதவிநன்கொடைபுரியும் வழக்கத்தை ஸ்தாபித்தனர். அரசினரால் நியமனம்பெற்ற வித்தியாதரிசி கொழும்பிலிருந்து வருஷந்தோறும் யாழ்ப்பாணம் வந்து ஆங்கில வித்தியாசாலைகளைப் பரீட்சித்து உதவிநன்கொடைபெற ஒழுங்குசெய்வார்.

1879-ம் ஹல புறாஸ்துரை வித்தியாகர்த்தராகி, உதவிநன்கொடைபெறுஞ் சுதேச பாடசாலைகளுக்கும், சுதேச போதனா வித்தியாசாலைகளுக்குமுரிய ஒழுங்குச்சட்டங்களை யுண்டாக்கிச் சுதேசகல்வி முன்னையிலும் விருத்திபெறச் செய்தார். இச்சட்டத்தின்படி யாழ்ப்பாணத்தில் சுதேசகல்வியை விருத்தியாக்க முயற்சித்த உவெசிலியன்மிஷன், அமெரிக்கன்மிஷன், சேட்சுமிஷன், கத்தோலிக்கமிஷன்கள் தத்தம்பகுதியிலொவ்வொரு போதனாவித்தியாசாலைகளை அரசினருதவியுடன் நடத்தி அனேகமாணாக்கரைப்பயிற்றி, அவருட் பலர் அரசினர்பரீட்சையில் சித்திபெற்று, 2-ம், 1-ம் தராதல பத்திரங்கள்பெற்ற உத்தம திறமையுள்ள உபாத்தியாயர்களாய்வரச் செய்தன. ஆண்பிள்ளைகள்மாத்திரமன்று; பெண்பிள்ளைகளும் மேலே சுட்டிய மிஷன்களைச் சேர்ந்த பெண்பாடசாலைகளிற் சேர்ந்து உபாத்தியாயிகளாய்ப் பயிற்றப்பட்டு, அரசினர்பரீட்சைகளில் சித்தியடைந்து உத்தம திறமையுள்ள உபாத்தியாயிகளாயும், 2-ம், 1-ம் தராதலபத்திரம் பெற்றவர்களாயும் வந்தனர். இவர்களால் யாழ்ப்பாணத்திலே சுதேசகல்வி அதிக விருத்தியடைந்தது. இலங்கையரசிலே றிசிஸ்தார் ஜெனறலாயிருந்து அப்பதவியை மிகத்திறமையாய் நடத்திவந்த அருணாசலந்துரையவர்கள் தமிழ்நன்கு

கற்றவர்களை நொத்தாரிசுமாராய் வரவேண்டுமென்ற சிந்தையுடையவராய், நொத்தாரிசுமாராய் வருவார்க்குத் தமிழ்நன்குகற்றோர் தெரியப்படத்தக்கதாய்த் தகுந்த ஓர் பிரவேசப்பரீட்சையை நடத்தி, அவற்றில் சித்தியடைவோரை நொத்தாரிசு உத்தியோகத்துக்குப் படிக்க அனுமதி கொடுத்துவந்தனர். இந்த ஒழுங்கால் மேலேகூறிய போதனாவித்தியாசாலை மாணாக்கர்பலர் மேற்பரீட்சையில் சித்தியடைந்து நொத்தாரிசுமாராகுஞ் சலாக்கியம் பெற்றனர். இக்காலத்தில் வடமாகாணப்பகுதிகளின் பாடசாலைகளை மேற்பார்வையிடவும், ஆங்கிலபாடசாலைகளைப்பரீட்சிக்கவும், பிளேயர் என்னுந் துரைமகன் முதல் வடமாகாண வித்தியாதரிசியாய் நியமனம்பெற்று யாழ்ப்பாணத்தில் வசித்தனர்.

பழைய வட்டுநகர்ச் செமினரியிருந்த இடத்திலே யாழ்ப்பாணக்கல்லூரியென்னும் நாமத்துடன் 1872 ௵ அமெரிக்கமிஷனால் ஓர் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது. அக்கல்லூரிக்கு அமெரிக்காவிலே அதிகபணஞ் சேர்த்து மூலதனமாய்ச் சேமிக்கப்பட்டு அதன் வட்டியினால் அக்கல்லூரித்தலைவருக்கும் அமெரிக்கஆசிரியர்களுக்கும் மாசந்தோறும் வேதனங்கொடுக்கப்படுகின்றது. ஹன்ற்போதகர், பிரக்கன்றிட்சு ஆசிரியர் முயற்சியால் ஆரம்பத்தில் அக்கல்லூரிக்கு யாழ்ப்பாணம் இலங்கை இந்தியாப்பகுதியில் விசேஷ பணநிதி சேர்க்கப்பட்டது. ஹேஸ்திங்ஸ்பண்டிதர் ஹொலன்ட்பண்டிதர் முதலியோர் அக்கல்லூரித்தலைவர்களாயும் ஹன்ற்போதகர், அஸ்பரிஆசிரியர், ஹென்ஸ்மன்ஆசிரியர், ஆணல்ட்பண்டிதர் முதலியோர் ஆசிரியராயுமிருந்தனர். அக்கல்லூரி யாழ்ப்பாணத்திலே கலாவிருத்திக்கு மிக உதவியாய்ச் செம்மையாய்நடத்தப்பட்டுவருகின்றது.

யாழ்ப்பாணம் உவெசிலியன்மிஷன் மத்தியவித்தியாசாலை மத்தியகல்லூரியென்றும், சுண்டிக்குளிச்செமினரி, சேன்யோன்ஸ்கல்லூரியென்றும், கத்தோலிக்கு வித்தியாசாலை சேன்பற்றிக்கல்லூரியென்றும் அழைக்கப்பட்டு ஆங்கிலகல்வி விருத்தியடைய விசேஷ முயற்சிகள் செய்துவருகின்றன.

இவர் காலத்தில் வண்ணார்பண்ணையில் இந்துக்கல்லூரியென்னும் நாமத்துடன் ஓர் கல்லூரி அத்துவக்காத்து நாகலிங்கம், பசுபதிச்செட்டியார், பிறக்தர் காசிப்பிள்ளை, தெவானசபாபதியாதியோரின் விசேஷமுயற்சியினால் ஸ்தாபிக்கப்பட்டது. இக்கல்லூரிக்கு நெவின்சு செல்லத்துரைப்பிள்ளை தலைவராயிருந்து ஆங்கிலகல்வி விருத்தியடையத் திறமையாய்நடத்தி வருகின்றனர். இக்கல்லூரி தளர்ச்சியின்றி நடைபெற இந்துக்கள் பலர் பணமுபகரித்தனர்.

சுளிபுரவாசரும் வட்டுக்கோட்டைச்செமினரி மாணாக்கரும் அரசாட்சிப்பகுதியில் உத்தியோகமாயிருந்து உபகாரச்சம்பளத்துடன் இளைப்பாறியிருந்தவருமாகிய மெஸ். மெக்கன்ஸ்றி கனகரத்தின முதலியார் உபகாரச்சம்பளத்துடன் இளைப்பாறியிருந்த காலத்திலே தாம் ஜென்மித்த சுளிபுரம் என்னுங் கிராமத்திலே ஓர் ஆங்கிலபாடசாலையை ஸ்தாபித்து நடத்தினர். அக்கலாசாலை பிற்காலத்தில் விக்டோறியாக்கல்லூரியென்னும் பெயருடன் அவர் புத்திரரால் நடத்தப்பட்டு வருகின்றது. இக்கல்லூரிகளில் யாழ்ப்பாண மாணாக்கர் அனேகர் கல்விகற்பாராயினர்.

துவைனந்துரையுடைய காலத்திலே தெல்லிப்பழையிலே வசித்த அமெரிக்கமிஷனரியாகிய சிமிதுஐயர் தெல்லிப்பழைப் போதனாவித்தியாசாலையுடன் ஓர் கைத்தொழிற்பாடசாலையை அமைத்து நீராவியியந்திரம் ஸ்தாபித்து அவ்வியந்திர இயக்கத்தினால் அச்சுத்தொழில், தச்சுத்தொழில் முதலியவைகள் சிறப்பாய் நடைபெறச் செய்தனர். அக்கைத்தொழிற்சாலை அதிபராகிய சிமிதுஐயர் அத்தொழிற்காட்சிகளைப் பகிரங்கமாய் பாவருங்காண ஓர்முறை காட்டினபொழுது துவைனந்துரையும், அக்காலவித்தியாகர்த்தரும், யாழ்ப்பாணத்துப் பலபிரபுக்களுங் கூடி அம்மாட்சியான காட்சிகளைக்கண்டு இவ்வகைத்தொழின் முயற்சி யாழ்ப்பாணத்துக்குப் புதிதும் அவசியமுமென்று நயந்து வியந்து அம்முயற்சி நன்றாய் நடைபெறச் சிலர் பணஉதவியும்புரிந்தனர். கத்தோலிக்குமிஷனால் நடத்தப்பட்ட கொழும்புத்துறைப்போதனாவித்தியாசாலையையடுத்தும் ஓர் கைத்தொழிற்பாடசாலை நடத்தப்பட்டது. இவ்வகையாய் இந்த ஏசண்டர் காலத்திலே பலவகையான கல்வியும் மிகவிருத்தியடைந்தது.

(உயர்ந்த உத்தியோகம்)

இக்காலத்திலே யாழ்ப்பாணிகளுக்குள் ஆங்கில கல்வியிலும் நியாயப்பிரமாண அறிவிலும் வல்லவராய் நியாயதுரந்தரர் பரீட்சையிற் சித்திபெற்று ஒழுக்கத்தாலுஞ் சிறந்து விளங்கினோர்பலர். அவருள்ளே முதலில் சிறந்து விளங்கினவர், முத்துக்கிரிஷ்ணர். இவர் இராணி அத்துவக்காத் என்னும் உயர்ந்த பதவி உத்தியோகம்பெற்று அதைத் திறமையாயுஞ் செம்மையாயும் நடத்தினர். இவர் யாழ்ப்பாணத்திலே ஒல்லாந்தஅரசர் காலத்திலே வழங்கிவந்த நியாயப்பிரமாணங்களையும், ஆங்கில அரசர் காலத்தில் இங்கே அனுசரிக்கப்பட்ட நியாயப்பிரமாணங்களையுந்திரட்டி தேசவழமையென்னும் பெயருடன் அரசாட்சியார் அனுமதியோடு ஓர் புத்தகம் இயற்றி வெளிப்படுத்தினர். இப்பிரமாணங்கள் இத்தேசத்துக்கு மாத்திரமுரிய பிரமா

ணங்களாம். தேசவழமையென்னும் நூலிற் குறித்த பிரமாணங்கள் முன்னர்ச் சரியாய்க் கைக்கொள்ளப்பட்டாலும் பிற்காலத்தில் யாழ்ப்பாணத்திலே நீதிபரிபாலனம்புரிந்த பெரியகோட்டு நீதிபதிகளும், கொழும்புச் சுப்பிறீங்கோட்டு நீதிபதிகளும் தேசவழமையிற் கூறியபிரமாணங்களுக்கு மாறாய்ச் சிலதீர்ப்புகள் கூறியபடியால் அத்தேச வழமைப்பிரமாணங்கள் முன்போல வலிமையுடைய பிரமாணங்களாய்க் கொள்ளப்படவில்லை. பிரசைகளின் வேண்டுதலினால் அப்பிரமாணங்களை யாழ்ப்பாணத்தில் நிலைநிறுத்த அரசினர் இப்பொழுது யோசிக்கின்றனர். உடுப்பிட்டி கதிரைவேற்பிள்ளைத்துரை நீதிபதியுத்தியோகம் பெற்று, அப்பதவியை நேர்மையாயும் நீதியாயும் தம் கடமைகளை நிறைவேற்றி, அரசினரும் குடிகளும் நல்ல நீதிபதியென்று போற்றச் சீராய் அவ்வுத்தியோகம் வகித்தவர். அவரின்பின் தம்புத்துரையும் அந்த உத்தியோகபதவியைப்பெற்று அவர் நடந்த வழியில் நடந்து கீர்த்திபெற்றனர்.

எம் எசன்டர் காலத்திலே யாழ்ப்பாண நியாயதுரந்தரர் சபையாருள் முதிர்ந்தவராகிய அ. சின்னத்தம்பிப்பிறக்டர் முடிக்குரிய நியாயதுரந்தர பதவிபெற்று அதை நன்றாய் நடத்தினர். அவரின்பின் தம்புப்பிறக்டரும், அவர்பின் சங்கரப்பிள்ளைப்பிறக்டரும், அவர்பின் காசிப்பிள்ளைப்பிறக்டரும் முடிக்குரிய நியாயதுரந்தரராய்க் கடமைபார்த்தனர். இப்பொழுது கதிரைவேலுப்பிறக்டர் முடிக்குரியநியாயதுரந்தரராய்க் கடமைபார்க்கின்றனர்.

(புயல்வீசுதல்)

1883 ம் ஆண்டிலே யாழ்ப்பாணத்திலே முன்னர் ஒருபோதும் நிகழாத பெருப்புயல் ஒன்று வீசிற்று. அதனால் யாழ்ப்பாணத்தில் அநேகசேதங்களுண்டாயின. காரைதீவுப்பாலம் அப்பிரசண்டமாருதத்தினாலும் அப்பொழுது பொழிந்த மழையினாலும் அழிந்துபோக மறுபடியும் அரசினரால் இப்பொழுதிருக்கிற பிரகாரம் பாலமிடப்பட்டது. இப் பிரசண்டமாருதம் வீசியபின்னர் யாழ்ப்பாணச் சுகநிலைமாறி வருடந்தோறுங் காட்டுக்காச்சல் உண்டாதற்கு ஏதுவான நிலைபடைந்தது. மழை அதிகமாய்ப்பெய்யுங் காலங்களில் மார்கழி தை மாசி மாசங்களில் இக்காச்சல் அதிகமாயுண்டாகிறது. மழைகுறைந்த வருடங்களில் காச்சலுங்குறைவு. இக்காச்சல் காலத்திலே அரசினர் மருந்து கொடுத்துக்காச்சல் அகற்ற விசேஷ முயற்சிசெய்கின்றனர்.

(ஐம்பதாம்வருட மகோற்சவ கொண்டாட்டம்.)

பிரித்தானிய சாம்ராச்சியபதியும் இந்திய சக்கிரவர்த்தினியுமாகிய விக்ரோரியா இராணியாரின் ஐம்பதாம்வருட மகு

டோற்சவ ஆனந்த கொண்டாட்டம் பொழுது ஒருநாளும் அல்லமியாத அவரது இராச்சியபாரமெங்கும் 1887-ம் ஆண்டு ஆனி மீ 28-ம் 29-ம் திகதிகளில் அதுல்லியமாய்க் கொண்டாடப்பட்டது. அக்கொண்டாட்டத்தில் துவைனந்துரையின் ஏவுதலால் யாழ்ப்பாணநாடும் விசேஷபங்குபற்றியது. யாழ்ப்பாண நகரம் பலவகையான சிங்கார அலங்கரிப்புகள்பெற்றன. 28-ந்உ முன்னேரம் 9 மணிவரையில் இங்கிலாந்துசபைத் தேவாலயமாதிய பற்பல தேவாலயங்களிலே இராணியின் நாமத்திற் தேவாராதனை செய்யப்பட்டபின்பு, 11 மணியளவிலே அந்தந்த மணியகாரன்மாரது பராமரிப்பின்கீழாக முன் காரியகாரர் பண்ணிய திட்டப்படி கொடுக்கப்பட்ட பணத்தொகைகளுக்குத் தக்கதாய், ஏழை எளியவர்களுக்குச் சம்பிரம விருந்தூட்டப்பட்டது. அன்னம் வாங்காதார்க்கு அந்தந்தத் தலைமைக்காரர் சிபாரிசுப்படி பச்சைப்படியாய் அரிசி காய்கறி பங்கிடப்பட்டன. அன்று பின்னேரம் நாலுமணிக்குக் கோட்டைக்குக் கீழ்ப்புறமாக முனியப்பர் கோவிற் சமீபத்திலிடப்பட்ட பாரிய அலங்காரப் பந்தரிலே துரைமக்கள் பிரபுக்கள் குருமக்களாதியர்கூடிய பெருங்கூட்டத்திலே இராணிநாயகம் அரசுபுரிந்த ஐம்பதுவருஷங்களையும் பப்பத்தாக்கி, அவ்வைந்து பிரிவுகளிலும் நடந்தேறிய விசிட்டசம்பவங்களைத் தொகுத்துக்கூறியபத்திரமொன்றை எம்வச்சண்டர் துவைனந்துரை எல்லவர் காதிலும் விழ உரத்துவாசித்தனர். ஏழரைமணியளவிலே மேற்படி சிங்காரப்பந்தரிலே நடனசங்கீத வாச்சிய அப்பியாசங்களுடன் வர்த்தகநாடகமுமாடப்பட்டது. அற்றைநாளுக்கு அடுத்த மற்றைநாள் (29-ந் உ) சாயந்தரம் நாலுமணிவரையில் பிரசவ ஸ்திரிகளுக்கென்று ஆரம்பம்பெற்ற விக்தோரியா வைத்தியசாலைக்கு அஸ்திபாரக்கல் இடுஞ் சடங்குக் கொண்டாட்டம் நடந்தது. திரளான சனமத்தியில் சங்கீத மேளதாள வாச்சியங்களுக்கிடையிலே துவைனந்துரை பன்னியரே அஸ்திபாரக்கல்வைக்க, வெஸ்திங்ஸ் பண்டிதர் பிரார்த்தித்தனர். இது நிறைவேற்றம்பெற்றபின் எட்டுமணிவரையில் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டதும், எக்மோரிற் செய்யப்பட்டதுமான நூதன வாணவிளையாட்டு நடைபெற்றது. வாணவிளையாட்டைப்பார்க்கக் கூடிய சனங்கள் முற்றவெளிகொள்ளாதபடி எள்ளிட இடமின்றி எங்கணும் மிக நெருங்கிநின்றனர். அவ்வேளையில் வகைதெரியாது சுட்டார் வகைமோசத்தால் சீமைவாணமொன்று சட்டெனப் பீரங்கிபோல வெடித்துச் சிலரைப் பலியெடுத்தது! ஓ! ஓ! கூழ்ப்பானைக்குள் சாவென்றாற்போல ஒய்யார ஆனந்தக்களிப்புள் மரணம் புகுந்தது. வாணவிளையாட்டந்தமட்டில் நின்றது. ஐயோ! தம்பி! அண்ணே! அவனெங்கே! இவனெங்கே! என்ற அழுகைச்சத்தமும், கூக்குரற்

சந்தமும், விசாலவோசார்த்தமும் முற்றவெளிமுற்றும்பிறந்தன. பொலிஸ்பதியாகிய றட்துரைக்கு வலப்புயம் இடப்புயம்போல நின்ற சபையடக்கிய சார்சன் சுப்பையாமகனும் வீழ்ந்தனன். பின்னுமிருவ ருடன்வீழ வீழ்ந்தாரைப் பொலீசர்தூக்க, துவைனர்துரையும் றட்துரையும் காற்றுப்போ லோட்டமெடுத்தோடி யாற்றிப்போற்ற, காத்திரமான காயம்வாங்கினோர் உடனே வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டுக் காயங்கட்டப்பெற் றன்றிருக்க, அற்றைக் காயம்வாங்கினோர் மருந்துவாங்கி வீடுசென்றனர். வைத்தியசாலையிலும் ஒருவர் இறந்தனர். நடந்த வர்த்தமானங் கண்டு கேட்டுக் கெடிமண்டியோடினோர்போக, அறியாது பந்தரிலிருந்தாரிருக்க, "செத்தவன்வாயில்மண் இருந்தவன்வாயில் சோறு" என, அப்பால் ஒழுங்குதவறாது அரிச்சந்திரவிலாசம் இராப் பிற்சாமபரியந்தம் ஆடப்பட்டது. இவ்வாறு இராணியாரின் ஐம்பதாம்வருட மகுடோற்சவம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்டது.

இம்மகோற்சவதினக் கொண்டாட்டகருணத்திற் பாடும்படி தெல்லிப்பழை போதனாவித்தியாசாலைத் தலைமையாசிரியராகிய மெஸ். சி. சி. எரேமியாப்புலவர் மகோற்சவவாழ்த்து என்னும் நாமத்துடன் நவமாய் இயற்றி அச்சடித்துப் பரப்பிய மகோற்சவவாழ்த்து என்னும் புத்தகத்தில் அடங்கிய சில பாக்களை, விக்தோரியா மகாராணியாரின் இனிய குணசீலங்களை யாவரும் இலகுவில் அறிய ஈண்டுத்தருகின்றோம்.

கட்டளைக்கலித்துறை.

மகிழுமென் சிந்தை குளிருமென் காது வழுத்திமிகப்
புகழுமென் னாவு வணங்குமென் சென்னி புளகிதமா
யகவுமென் றாளிணை கூப்புமென் கைகளு மன்புருகித்
தகைமக ராசிவிக் றோறிய நாமத்தைச் சாற்றிடினே.

சற்குண மேயணி யேயழ கேதையல் நாயகமே
விற்பன ஞானக் களஞ்சிய மேயவி யாவிளக்கே
யற்புத மேபிறித் தன்யசாம் ராச்ய அதிபதியே
விக்டோறி யாவெனுந் தாயே யரசு வியந்திடுமே.

பொன்னே யபரஞ்சி யேமுந்த மேபிர பூஷணமே
மின்னே யொயிலே மனோகர மேபுந்தி விற்பனமே
அன்னே பிரித்தன்ய ஆதிக்க மேபொ ரதிசயமே
இன்னே ரிலர்புவி மீதெவ ரேனிது நிச்சயமே.

(தானியவரி நீக்கம்)

யாழ்ப்பாணத்திலே பிரசைகள் நெல், வரகு முதலிய பெருந்தானியங்களுக்கும், சாமை தினை குரக்கன் பயறு முதலிய சிறுதானியங்களுக்கும் பத்தில் ஒன்று அரசிறைகொடுப்பது நெடுங்கால வழக்கமாயிருந்தது. புராதன தமிழ் அரசர் ஆறிலொருகடமை வாங்கிக் கமத்தொழில் அதிகரிக்கவும், நெல் முதலிய தானியங்கள் நல்விளைவைக்கொடுக்கவும் வேண்டிய ஏற்பாடுகளைச் செம்மையாய்ச் செய்தமையால் அக்காலத்தில் பிரசைகள் அவ்வரியால் கஷ்டநஷ்டமடைந்திலர். பிற்கால அரசினர் அவ்வகைத் தானியங்களில் பத்திலொருபங்கை வாங்க வரி விதித்தனர். அரசரிடம் வருடந்தோறும் குத்தகைகாரர் பேரிகட்டி விலையை உயர்த்தி வாங்கி ஏழைக்கமக்காரரை நெருக்கிப் பத்திலொன்றையல்ல அதிலும் அதிக கூடினபாகத்தைக் கவர்ந்துகொள்வதினால். ஏழைக்கமக்காரர் பாடுபட்டு நெற்றியில் வெயர்வை நிலத்தில்வீழப் பிரயாசப்பட்ட பலனின் பெரும்பாகங் குத்தகைகாரர் வசமாக அவர் கொடுமை மிகக் கடுமையாயிற்று. கமக்காரர் பெரும்பிரயாசப்பட்டுச் செய்த தானியத்தை மிதித்து அளந்துவிடக் குத்தகைகாரர் பத்துக்கொன்று, கந்துக்கொன்று, களத்துக்கொன்று, முன் எடுத்ததுக்கொன்று, சும்மா ஒன்று, சுமைகூலி ஒன்று என்று நெருங்கிப் பத்திலொன்றையல்ல, அதனிலும் மும்மடங்கு நால்மடங்கை அபகரிப்பாராயினர். இதனால் கமக்காரர் ஓலம்பெரிதாயிற்று. சிலபகுதி நிலங்கள் குத்தகையை விட்டு, வாயிதாவரியில் விடப்பட்டன. அது சட்டிசுடுகிறதென்று நண்டனூர் அடுப்பிற்குதித்த பான்மையாயிற்று. விளைந்தகாலத்தில் கமக்காரருக்கு வாயிதாவரி வாசிதான். விளையாக்காலத்திலோ அவ்வரி அறமோசமாயிருந்தது. சிலவிடங்களில் வாயிதாவரி யிறுக்கமாட்டாத சிலருடைய காணிகள் அவ்வரிக்காய் விலைப்படலாயின. குத்தகைக்கொடுமையினாலும் வாயிதாவின் நெருக்கத்தினாலும் மிக இடர்ப்பட்ட கமக்காரரின் ஓலத்தினாலும், யோட்சு உவோல் முதலிய சனோபகாரிகளின் முயற்சியினாலும் இப்பாரவரி 1892-ம் ஆண்டு நீக்கப்பட்டது. இது கமத்தொழில் விருத்திக்கு ஓர் விசேஷ சாதனமாயிற்று.

(மிஷன் வைத்தியசாலைகள்.)

யாழ்ப்பாணத்திலே ஆங்கிலவைத்தியத்தை அனேக மாணாக்கருக்குக் கற்பித்தும், ஆங்கில வைத்தியத்தை அதிக சித்தியுடன் செய்து யாழ்ப்பாணத்தில் அதன் அருமையும் பெருமையும் விளங்கச்செய்தும்வந்த பெருங் கீர்த்திபெற்ற டக்றர் கிறீன் வைத்தியர் 1873-ம் ஆண்டு அமெரிக்காவுக்குச்சென்று பின் இவ்விடம் வாரொழிந்தனர். அதனால் யாழ்ப்பாணத்திலே முன்

போலத் தக்க வைத்திய சகாயஞ்செய்யப்படாதபடியால், யாழ்ப்பாணத்தவர் விசேஷ ஆங்கிலவைத்தியசகாயம்பெற அவாவினர். டக்றர் கிறீன்வைத்தியர் யாழ்ப்பாணம்விட்டுப் போனபின் அவருடைய விசேஷ மாணாக்கரிலொருவராகிய டக்றர் சீ.ரீ. மில்ஸ வைத்தியர் மானிப்பாயிலே மாணாக்கரைச்சேர்த்து வைத்தியக்கல்வியைக் கற்பித்து வந்தனர். அமெரிக்க மிஷனைச்சேர்ந்து யாழ்ப்பாணத்தில் வந்து மிஷனூழியம்புரிந்துவந்த வீற்சு அம்மார்மார் யாழ்ப்பாணத்தவர்மேலிரங்கி அவர்களுக்குத்தக்கவைத்தியசகாயங்கிடைக்கும்படி, பெரியபிரித்தானியா, அமெரிக்கா ஆகிய இடங்களில் பெருந்தொகையான பணஞ்சேர்த்து, மானிப்பாய் வைத்தியசாலையைப் பெருப்பித்தும், இணுவிலிலே பெண்களுக்கும் பிள்ளைகளுக்குமாய் ஓர் பெரிய வைத்தியசாலையை அமைத்தும், அவைகள் செவ்வே நடைபெறத்தக்கஒழுங்கு செய்தனர். அவர்கள் முயற்சியினால் முதல் டக்றர் மாஷ்றன் என்பவர் வைத்தியராய் யாழ்ப்பாணம் வந்து சிலகாலம் வைத்திய சகாயம்புரிந்தனர். அவர் வைத்தியத்தில் மிகத்திறமையுள்ளவராயிருந்தும், நெடுக இங்கே தரித்துநிற்கப் பிரியப்படாது தமது சுயதேசஞ்சென்றனர். மேற்குறித்த பரோபகாரிகளாம் வீற்சு அம்மாமாரின் தளராமுயற்சியினால் டக்றர் ரீ. பி. ஸ்கொற் வைத்தியரும் அவர் மனைவியரும், டக்றர் கேர் அம்மாவும் யாழ்ப்பாணம்வந்து இவ் விருவைத்தியசாலைகளையும் நன்றாய் நடத்தி அனேகருக்கு வைத்தியசகாயம்புரிந்தனர். டக்றர் ஸ்கொற் ஐயரும் அவர் மனைவியரும் டக்றர் கேட்டிஸ் சுப்பையா வைத்தியர் உதவியுடன் மானிப்பாய் வைத்தியசாலையைச் செம்மையாய் நடத்தினர். சென்ற 1913-ம் ஆண்டு டக்றர் ஸ்கொற்வைத்தியர் குடும்ப சகிதராய் அமெரிக்காவுக்குச்சென்று பின் இவ்விடம் திரும்பாதபடியினாலும், அவருக்குப்பின் அவ் வைத்தியசாலையைத் திறமையாய் நடத்திவந்த டக்றர் கேட்டிஸ் சுப்பையா காலஞ்சென்றமையாலும், அவ்வைத்தியசாலையின் வைத்திய சகாயம் முன்போல நடைபெறவில்லை. அவ் வைத்தியசாலையை நடத்த ஓர் அமெரிக்கவைத்தியர் வருவாரென்ற காத்திருப்பு இருக்கிறது. டக்றர் கேர் அம்மா இணுவில் வைத்தியசாலையை மிகத் திறமையாயும் அதிக சிக்கியாயும் நடத்தி வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் அனேக பெண்களும் பிள்ளைகளும் இந்தவைத்தியசாலைமூலம் அதிக நன்மைபெற்றுவருகின்றனர். இந்தஇரண்டு ஸ்தாபனங்களும் யாழ்ப்பாணத்தார் சொற்ப செலவுடன் தக்க ஆங்கிலவைத்திய சகாயம்பெறும்படி அமெரிக்கமிஷனால் ஸ்தாபிக்கப்பட்ட அதிகநன்மைக்குரிய பரோபகார ஸ்தாபனங்களாம். இவற்றுக்காய் யாழ்ப்பாணத்தார் அம்மிஷனுக்கு நன்றிபாராட்டவேண்டியவரா யிருக்கின்றனர்.

(இருப்புப்பாதை விண்ணப்பம்.)

"துவைனந்துரை காலத்தில் யாழ்ப்பாணத்துக்குப் புகைரதப்பாதை அமைத்துத் தரும்படி யாழ்ப்பாணவாசிகள், விட்டன் சுவாமியார், அப்புக்காத்து நாகலிங்கம், நீதிபதி தம்பு, இறவுண் பிறக்டர் காசிப்பிள்ளை முதலியோர்கூடிய ஒருசபைமூலமாக அரசினரைக் கேட்டார்கள். யாழ்ப்பாணம் வியாபார விருத்தியிற் குன்றிவிடுமென்றஞ்சித் துவைனந்துரை அதற்கு மாறாயிருந்தனர். அரசினரும் அஃதவசியமன்றென மறுத்தனர். மேற்கூறிய இருப்புப்பாதைச் சபையாரோவிடாது விண்ணப்பஞ்செய்துகொண்டிருந்தனர்." (யா. ச.)

(துவைனந்துரைகாலப் பிறவிசேஷங்கள்.)

துவைனந்துரை சேர் ஹேர்கியுலஸ்றெபின்சன் (1865—1872) சங். வில்லியம் கிறகோரி (1872–1877) சேர் ஜேம்ஸ்லோங்டன், (1877–1883) சேர் ஆதர்கோடன் (1883–1890) சேர் ஆதர் ஹவ்லொக் (1890–1896) என்னுந்தேசாதிபதிகள்காலத்திலே 1869–ம் ஆண்டுதொடக்கம் 1896–ம் ஆண்டுவரைக்கும் 27 வருடங்களாய் யாழ்ப்பாணத்தை நீதியாய் ஆளுகைசெய்தனர். முன்னர்க்கூறிய சம்பவங்களைவிடப் பின்வரும் சம்பவங்களும் இவர்காலத்தில் நடந்த விசேஷ சம்பவங்களாம்.

1884-ம் ஆண்டு பிரித்தானிய ராச்சியமெங்குமுள்ள ஓறியன்றல் வங்கி முறிந்ததருணத்தில் அவ்வங்கியில் பணஞ்சேமித்துவைத்திருந்த வர்த்தகர், செல்வராதியோர் பிரலாபித்தபொழுது, அக்காலத்தில் இலங்கையை ஆளுகைபுரிந்த சேர் ஆதர் கோடன் தேசாதிபதி பிரலாபித்த பிரசைகள்மீது பரிவுகூர்ந்து அவ் வங்குநோட்டுகளை அரசினர் ஏற்றுப் பணங்கொடுக்கவும், அந்நோட்டுகளுக்குப் பதிலாய் இலங்கை அரசாட்சிநோட்டுகளை அடித்துப் பரப்பவும் ஒழுங்குசெய்தனர். இது யாழ்ப்பாணவாசிகளுக்கும் சந்தோஷசங்கதியாயிருந்தது.

துவைனந்துரைகாலத்திலே கொண்டைச்சிக்குடாவில் முத்துக்குளிப்புப் பெரும்பான்மையும் வருடந்தோறும் நடத்தப்பட்டதினால் இலட்சக்கணக்கான ரூபா வருடந்தோறும் இலங்கையரசுக்கு வருமானமாயிற்று. இவ்வருமானம் இலங்கையரசின் பொதுவருமானமாய்ப் பாவிக்கப்பட்டது. இந்தமுத்துக்குளிப்பை வடமாகாண அதிபராகிய துவைனந்துரை நடத்திவந்தமையாலும் யாழ்ப்பாணவாசிகள் அம்முத்துக்குளிப்போடுசம்பந்தப்பட்ட பல வேலைகளில் அமர்ந்திருந்தபடியாலும் ஓர்தொகைப்பணம் யாழ்ப்பாணத்துக்கு வரலாயிற்று. பிற்காலத்திலே பிளேக் தேசாதிபதி காலத்திலே 1905–ம் ஆண்டு இம் முத்துக்கு

விப்பைப் பிரித்தானிய கொம்பனியொன்று 20 வருடங்களுக்குக் குத்தகையாகப் பெற்றுக்கொண்டது. அதன்பின் இவ்விடத்தில் முத்துவிளைதலும் முத்துக்குளித்தலும் இல்லாதொழிந்தன. இது யாழ்ப்பாணத்துக்கு மிக நஷ்டமான ஓர் சம்பவமாம்.

(நைற்பட்டம்பெறுதலும் இளைப்பாறுதலும்.)

“1896-ல் துவைனந்துரைக்கு “நைற்” பட்டஞ் சூட்டப்பட்டது. அதன் பின்னர் இவர் தமது உத்தியோகத்தினின்றும் இளைப்பாறி யாழ்ப்பாணத்திலேயே குடிகொண்டு தமது காலத்தைப் போக்கிவருகின்றனர். இவர் மற்றைய ஆங்கிலேயரைப்போலப் பொருளீட்டிக்கொண்டு தமது தேசஞ்செல்லாது, தாமீட்டிய பொருளையெல்லாம் யாழ்ப்பாணத்துக்குப் பயன்படும்படி செலவிட்டுவருகின்றார். இவரும் டைக் துரையைப்போல யாழ்ப்பாணத்தாரிடத்து மிக்க அபிமானமுடையவர்.” (யா. ச.)

இவர் இப்பொழுதும் யாழ்ப்பாணத்தில்வசித்து, யாழ்ப்பாணத்துக்கு நன்மையான காரியங்களைச்செய்வதில் வாஞ்சையும் முயற்சியுமுடையராய் விளங்கி வருகின்றனர். இவரது அரும்பிரயாசத்தினாலே யாழ்ப்பாணத்திலே சுண்டிக்குளிச் சேன்ற் யோன்ஸ் கல்லூரிக்குப் பக்கத்தில் ஓர் நூதனசாலை உற்பத்தியாயிருக்கிறது.

(பிற்காலம் — கி. பி. 1896—1916.)

துவைனந்துரை அதிபரின் பின்வந்த வடமாகாண அதிபர்கள் சில சில வருடங்கள் மாத்திரம் யாழ்ப்பாணத்தில் அதிகாரஞ்செலுத்தி மாறிச்சென்றமையால், அவர்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த விசேஷ சம்பவங்களைத்திரட்டி “பிற்காலம்” என்பதன்கீழ்க் கூறுகின்றோம்.

துவைனந்துரை இளைப்பாறினவருடத்திலே சேர் உவெஸ்ற்றிச்வே (1896–1903) இலங்கைத் தேசாதிபதியாயினர். அவரின் பின் சேர் ஹென்றிபிளேக் (1903–1907) சேர் ஹென்றிமக்கலம் (1907–1912) சேர் றப்பேட்சால்மேர்ஸ் (1912-1915) சேர் யோன் அண்டேர்சன் (1916–1918) என்பவர்கள் முறையே இலங்கைத்தேசாதிபதிகளாய் ஆளுகை செய்தனர். இவர்கள் காலத்தில் பிஷர், ஐவேர்ஸ், லூயிஸ், பிறைஸ், கிறிமென், கம்பர்லான்ட், வெஸ்டிங், ஹோர்ஸ்பரோ என்பவர்கள் ஒருவர்பின் ஒருவராய் வடமாகாண அதிபராய் அதிகாரஞ்செலுத்திவந்தனர். 1897-ம் ஆண்டு விக்ரோறியா மகா ராணியாருடைய அறுபதாம்வருட ஜூபிலிக் கொண்டாட்டம் யாழ்ப்பாணத்திலே மிக மகிழ்ச்சியாய்க் கொண்டாடப்பட்டது. பிரித்தா

ணிய இராச்சியத்தை நீண்டகாலமாய் நல்லரசுபுரிந்துவந்த விக்ரோறியா இராணிநாயகம் 64 - ம் வருட ஆளுகைகாலத்திலே பூமிக்குரிய சீவியஒட்டத்தை முடித்துத் தேகவியோகமாயினர். அவரது மரணசங்கதியைக் கேள்வியுற்ற யாழ்ப்பாணவாசிகள் யாவரும் அவருக்காய் மிகத் துக்கமுற்றனர். அவருடைய மரணத்தின்பின் அவர் சேஷ்டபுத்திரராகிய எட்வேட் இளவரசர் 7-ம் எட்வேட் என்னும் பெயருடன் அரசராகி 1902-ம்வரு ஆவணி மீ 9-ந் திகதி மகுடாபிஷேகம்பெற்றுத் தாயைப்போலச் சீராய்ச் செங்கோல்செலுத்திவந்தனர்.

(இருப்புப்பாதை திறபடுதல்).

பிஷர்த்துரை வடமாகாண அதிபராய் அதிகாரஞ் செலுத்தியபொழுது "தேசாதிபதி ரிச்சுவே பிரபுவினது காருண்ணிய செவியில் யாழ்ப்பாணப் புகையிரதப்பாதை விண்ணப்பம் ஏறுவதாயிற்று. அவர் தேசாதிபதியாய் வராதிருந்தால் யாழ்ப்பாணம் புகையிரதப் பாதையைக் காண்பரிது. அவர் சீமையில் இலங்கை மந்திரியோடு யாழ்ப்பாணப் புகையிரதப்பாதை விஷயமாகப் பெரும்வாதப்போராடி அவர் அநுமதிபெற்றனர். அதன்மேல் யாழ்ப்பாணப் புகையிரதப்பாதை தொடங்கப்பட்டு 1902-ல் உள்ளூர்ப் புகையிரதப் பாதையும், 1905ம்வருஷாரம்பத்தில் கொழும்புப் புகையிரதப்பாதையும்திறக்கப்பட்டன. இந்தப் புகையிரதப் பாதையைத் தமக்காக்கிக் கொடுத்த நன்றிக்கு ரிச்சுவே தேசாதிபதியின்பேரால் யாழ்ப்பாணத்தார் ஒரு மகா மண்டபம் நகரமத்தியில் அமைத்திருக்கின்றார்கள். முன்னாளில் கரைமார்க்கமாக ஒரு மாசத்திற் சென்றடையுங் கொழும்பு இப்போது ஒருபகலில் அடையப்படுகின்றது.

(ஐவேர்ஸ், லூயிஸ், பிறைஸ்துரைகள்.)

பிஷர்துரைக்குப்பின்னர் ஐவேர்ஸ்துரையும், அவருக்குப்பின் லூயிஸ்துரையும், அவருக்குப்பின் பிறைஸ்துரையும் ஏஜண்டராயினர். அவருக்குப்பின் கவண்மேந்து ஏஜண்டாய் வந்திருப்பவர் தருமதுரை என்று யாழ்ப்பாணமுழுதுங்கொண்டாடும் பிறீமன்துரை. ஐவேர்ஸ்துரையும் லூயிஸ்துரையும் தங்கடமைகளைக் குறைவற நடாத்தி வந்தனர். பிறைஸ்துரை சனங்களோடு கலந்து அவர்களுடைய குறைமுறைகளைக் கேட்டாராயும் லளிதகுணமில்லாது தங்கடமையை மாத்திரம் தம் புத்திக்கெட்டியபடி பார்க்கும் கண்டிதகுணமுடையவராதலின் யாழ்ப்பாணத்தாருக்கு உவப்புடையராய் விளங்கவில்லை.

(பிறீமன்துரை.)

இவர்கள்பின்வந்த பிறீமன்துரை சனங்களுடைய குறைமுறைகளை நாடியறிந்து அவைகளைத்தீர்க்குந் தயாளகுணம் வா

ய்ந்தவர். வறியவர்களைக் கண்டால் அவருக்குப் பொருளுதவும் பெருங் கருணையுடையவர். சனங்களிடத்தில் அன்பும் இரக்கமுமுடையர். நல்வழியிலே நடக்கும்படி சனங்களுக்குப் புத்தி கூறுவர். பயிர்த்தொழிலை விருத்திபண்ணும்படி தூண்டுவர். மழைவேண்டுமானால் நல்லொழுக்கமும் தெய்வபக்தியுமுடையவர்களாய் நடவுங்கள். உங்கள் கோயில்களைச் செவ்வே நடத்துவாருங்கள். கோயில்களை அழியவிடாதிருங்கள் என்றிவ்வாறு புத்திகூறுவர். யாவரோடும் மலர்ந்தமுகத்தோடுமே பேசுவர்.

"காட்சிக்கெளியன் கடுஞ்சொல்லனல்லனேன்
மீக்கூறுமன்னனிலம்."

என்னுங் குறளுக்கிலக்கியமாயினர் இவர் ஒருவரே." (யா. ச.)

(யாழ்ப்பாணச் சங்கம்)

யாழ்ப்பாணத்திலேயுள்ள பிரபுக்கள் சேர்ந்து யாழ்ப்பாணச்சங்கம் என்னும் பெயருடன் ஓர் சங்கத்தை ஸ்தாபித்தனர். இச்சங்கத்தைச் சேர்ந்தோர் யாழ்ப்பாணத்தின் சனசங்க தேவைகளைக் குறித்துத் தக்க ஆராய்வுடன் யோசித்து அரசினர் சகாயம் பெறவேண்டிய விஷயங்களில் அவர் உதவிபெற முயற்சித்துச் சனசங்க தேவைகளைச் செய்து முடிக்கப் பிரயாசப்பட்டு வருகின்றனர். இச்சங்கத்தின் முதல் சபாநாயகராக கௌரவ அ. கனகசபையும் அவர்பின் மெஸ். ஜே. ஹென்ஸ்மனுந் தெரியப்பட்டனர்.

(சுகாதார சங்கம்)

1906 ம் ஆ யாழ்ப்பாணத்திலே "லோக்கல்போட்" எனப்படுஞ் சுகாதார சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அப்பொழுது அச்சங்கத்தின் அங்கத்தவராய் கதிரவேலுப் பிறக்டர், எஸ். கதிரேசு பிறக்டர், கௌரவ அ. சபாபதியென்னும்மூவரும் சனங்களால் தெரியப்பட்டனர். இப்பொழுது யாழ்ப்பாணப்பகுதி மணியகாரராயிருக்கும் மெஸ். வீ. முத்துக்குமாரு அப்பொழுது இச்சங்கத்தின் லிகிதராய் நியமிக்கப்பட்டனர். அங்கத்தவரைத் தெரிதலில் இடையிடையே கட்சிப்பிரிவுங் கலிபிலியும் நிகழ்ந்தன.

(புகையிலைத் தீர்வை)

"யாழ்ப்பாணத்துப் புகையிலைக்குத் திருவனந்தபுரத்திலே கண்டி 1—க்கு ரூபா 90 ஆகவிருந்த தீர்வை 1910 ம் ஸூ இந்திய ராசாங்கத்தாரால் ரூபா 900 ஆகவுயர்த்தப்பட்டது. அது கேட்டவுடன் யாழ்ப்பாணம் "இனி நம்புகையிலை திருவனந்தபுரத்தில் விலையாகாதே! யாதுசெய்வோம்! ஊணும் உடையுந்தந்தெம்மைக்காக்குஞ் சீவரத்தினம் திருவனந்தபுரஞ்செல்லும் புகையிலையன்றோ!" என்றரற்றியழுவதாயிற்று. அதுகேட்ட பிரீம

ளாதுரை பனம்பழத்துக்கு உத்தேசாதிபதியாகிய (Sir H. E. McCallum) மக்கலம் அவர்களுக்கு வரிநிலையைத் தாமும் விண்ணப்பஞ்செய்து சனங்களையும் விண்ணப்பஞ்செய்யுமாறு தூண்டினர். அதுகேட்ட தேசாதிபதி மகா மந்திரியாருக்கு யாழ்ப்பாண நிலையைக் குறித்து நிருபம் போக்கினர். யாழ்ப்பாண வாசிகளும் தேசாதிபதிக்கு விண்ணப்பஞ் செய்தனர். தேசாதிபதி பின்னருந் தந்திமூலமாக மகா மந்திரியாரோடு வாதாடி. அத்தீர்வையைப் பழமைபோல ரூபா 90 ஆக்குவித்தனர். அதுகேட்டு யாழ்ப்பாண வாசிகள் ஆநந்தக் கூத்தாடிப் பிரீமன்றுரையையும் தேசாதிபதியையும் நெஞ்சாரவாழ்த்தினர். போற்றினர். இன்னும்போற்றுவர். என்றும்போற்றுவர்." (யா-ச.)

(பிரதிநிதிகள் தொகை கூட்டப்படுதல்)

நாம் முன்னர்க் குறித்தபடி கௌரவ இராமநாதனுக்குப்பின்னர் அவர் சகோதரர் கௌரவ பொ. குமாரசுவாமியும், அவருக்குப்பின் டக்றர் ரெக்குவுட்டும், அவர்பின் கௌரவ அ. கனகசபையும் பிரதிநிதிகளாயினர். கௌரவ அ. கனகசபை 1906ம்ஆ. தமிழர் பிரதிநிதியாயினர். இவர் தெல்லிப்பழையைச் சென்மஸ்தானமாகவுடையவர். சேர் மக்கலம் தேசாதிபதி தமிழர்க்காயிருந்த ஒரு பிரதிநிதியுடன் இன்னுமோர் பிரதிநிதியும் சிங்களர்க்கு மேலும் ஓர் பிரதிநிதியும், இலங்கைக்கற்றோர் பிரதிநிதியாக ஒருவரும் இருத்தல் வேண்டுமென மகாமந்திரியாருக்கெழுதி அனுமதிபெற்றனர். இத்தேசாதிபதிகாலத்திலே கௌரவ அ. கனகசபை இரண்டாம்முறை தமிழர் பிரதிநிதியாய் நியமனம் பெற்றனர். மக்கலம்தேசாதிபதி ஒழுங்குப்படி இலங்கைத்தமிழருக்காய் இருபிரதிநிதிகள் சட்டநிருபணசபையில் இருக்குஞ் சலாக்கியம் பெற்றனர். அவ்விருவருளொருவர் கௌரவ அ. கனகசபை. இவர் இவ்வொழுங்கு வரமுன் நியமனம்பெற்றவர். மேலேகூறிய ஒழுங்கின்படி தமிழரின் இரண்டாம் பிரதிநிதியாய் முதல் நியமனம்பெற்றவர், யாழ்ப்பாணத்தைச்சென்மஸ்தானமாகவும் மட்டக்களப்பை வாசஸ்தானமாகவுங்கொண்ட கௌரவ திசைவீரசிங்கமென்பவராம். இலங்கையிலுள்ள கற்றோர்தெரிவுப் பிரதிநிதியாய் முதல்தெரியப்பட்டவர் கௌரவ பொ. இராமநாதனும். கௌரவ திசைவீரசிங்கத்தின் மரணத்தின் பின் கௌரவ க. பாலசிங்கம் தமிழர் பிரதிநிதியாய் நியமனம்பெற்றனர். இவர் யாழ்ப்பாணத்திலே பலவருடங்களாய் நீதிபதியாயிருந்த மெஸ். C. W. கதிரைவேற்பிள்ளைத் துரையவர்களின் குமாரர்.

கௌரவ அ. கனகசபை 1916–ம் ஆண்டு முடிவுடன் அப்பதவியைவிட்டு விலக, இந்துசாதன ஆசிரியர் பத்திராதிபராயிருக்குங் கௌரவ அ. சபாபதி தமிழர் பிரதிநிதியாய்த் தேசாதிப

தியால் நியமனம்பெற்றனர். பத்துவருடங்களுக்குமேல் தமிழர் பிரதிநிதியாயிருந்த சட்டநிரூபணசங்கத்திலே தமிழ்ச் சாதியத்தாரின் நன்மைக்காய்ச்செய்த ஊழியத்தை அரசினர் நன்கு மதித்து, அவருக்கு 'நைற்' பட்டமருளி அவரையும் தமிழ்ச்சாதியத்தாரையும் கண்ணியப்படுத்தினர். இலங்கைத்தமிழருள் முதல் நைற்பட்டம்பெற்றவர் சேர் முத்துக்குமாரசாமியாம். இரண்டாவதாய் நைற்பட்டம்பெற்றவர் சேர் பொன்னம்பலம் அருணாசலந்துரையாம். மூன்றாவதாய் நைற்பட்டம்பெற்றவர் சேர் அம்பலவாணர் கனகசபையாம். இவரே யாழ்ப்பாணத்துத்தமிழருள் முதல் நைற்பட்டம்பெற்றவராம். இப்பொழுது சட்டநிரூபணசபையிலே கௌரவ க. பாலசிங்கமும், கௌரவ அ. சபாபதியும் தமிழர் பிரதிநிதிகளாயும், கௌரவ பொ. இராமநாதன் இலங்கைக் கற்றோர்தெரிவுப் பிரதிநிதியாயு மிருக்கின்றனர். இவர் இரண்டாம்முறையும் இலங்கைக் கற்றோர்தெரிவுப்பிரதிநிதியாய்த் தெரியப்பட்டிருக்கின்றனர்.

(விசேஷ கலாசாலைகள்.)

இலங்கைக் கற்றோர்தெரிவுப் பிரதிநிதியாயிருக்கும் கௌரவ பொ. இராமநாதன் யாழ்ப்பாணப் பெண்மக்களுக்கு உயர்ந்த கல்வி கற்பிக்கும் நோக்கமாய் அதிகபணஞ்செலவிட்டு மருதனார்மடத்தடியில் ஓர் அலங்காரமான சிறந்த மாளிகையமைத்து, ஓர் கல்லூரியை நடைபெற ஒழுங்குசெய்திருக்கின்றனர். மானிப்பாயில் ஓர் இந்துக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டு நடைபெறுகின்றது. சுண்டிக்குழியில் சேட்சுமிஷனால் பெண்கள்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

(குடிசனமதிப்பு.)

1911-ம் ஆண்டு கணிக்கப்பட்ட குடிசனமதிப்பின்படி யாழ்ப்பாண டிஸ்திறிக்கிலுள்ள குடிசனங்களின்தொகை 3,26,712 ஆம். அவர்களுள் தமிழர் தொகை 3,21,910. சிங்களர்தொகை 423. சோனகராதியோர் தொகை 3,564. ஐரோப்பியர் அமெரிக்கர் தொகை 716. பிறர் 99. அவர்களுள் இந்துக்கள் தொகை 2,86,710. புத்தர்தொகை 279. மகமதியர்தொகை 3,641. கிறிஸ்தவர்தொகை 38,082. 1901-ம் ஆண்டு எடுத்த கணக்கின்படி யாழ்ப்பாணக் குடிசனங்களின் தொகை 3,00,851. 100-க்கு 8-வீதம் சென்ற பத்துவருடங்களிலுங் குடிசனத்தொகை அதிகரித்திருக்கிறது. (இக்குடிசனமதிப்பில் பூநகரி, முழுங்காய், கரைச்சி யென்னுமிடங்களில் வசிக்குஞ் சனங்கள்தொகையும் அடங்கும்.)

(கமத்தொழில் விருத்தி.)

1903-ம் ஆண்டில் இலங்கைத் தேசாதிபதியாய்வந்த மேசா கென்றி பிளேக் என்பவர் இலங்கையிலே கமத்தொழிலை விருத்தியாக்கச் சில விசேஷமுயற்சிகள் செய்தனர். அக்காலந்தொட்டு அரசினர் இலங்கையிலே கமத்தொழிலை விருத்தியாக்கப் பலவகையில் விசேஷ முயற்சிகள் புரிந்துவருகின்றனர். அம்முயற்சியில் யாழ்ப்பாணமும் பங்கடைய ஏதுவானது. வன்னிப் பகுதியில் பெருங் குளங்களைக்கட்டி அக்குளங்களுக்குச் சமீபமாயுள்ள நிலங்களை விற்று அவ்விடங் குடியேறிக் கமத்தொழிலை விருத்தியாக்க யாழ்ப்பாணிகளையும் பிறரையும் அரசினர் ஏவினர். யாழ்ப்பாணிகளுள் சிலர் அப்பகுதியிற் காணிவாங்கிக் கம முயற்சி நடத்தினாலும், அனேகர் அம்முயற்சியிற்பங்குபெற இன்னும் நாடவில்லை. அதனால் யாழ்ப்பாணம் அரசினரும் மற்றோரும் விரும்பிய அளவு கமத்தொழிலில் விருத்தியடையவில்லை. யாழ்ப்பாணத்தில் நெற்செய்கை மழையின்மையினால் முற்காலங்களைப்போல் செழிப்பாயிருக்கவில்லை. யாழ்ப்பாணத்திற் கிருஷிமுயற்சி அதிகப்பட அரசினர் சில முயற்சிகள் புரிந்தும், நெற்செய்கையை விருத்தியாக்க அரசினர் யாதும் சகாயம்புரியவில்லை. யாழ்ப்பாணத்தின் பணந்தரு தருக்களாய் மதிக்கப்படும் புகையிலைச்செய்கையை விருத்தியாக்க அரசினர் விசேஷ முயற்சி செய்தனர். மலையாளத்துக்கு யாழ்ப்பாணத்திலிருந்து ஏற்றப்படும் புகையிலை குறைக்கப்பட்டமையால், யாழ்ப்பாணப் புகையிலையை ஐரோப்பியர் பாவனைக்கேற்றபிரகாரமாய்ப் பக்குவப்படுத்தி விற்பதற்குத் திருநெல்வேலியிலே பரீட்சைத்தோட்டமொன்றுண்டாக்கி, அமெரிக்காவிலிருந்து புகையிலைச் செய்கையில் மிக நிபுணரான ஒருவரையழைத்து மூன்று நாலு வருடங்களுக்கு அதை நடத்த ஒழுங்குசெய்தனர். அவரது முயற்சியினால அதிக அநுகூலமுண்டாகவில்லை. கமத்தொழிலைவிருத்தியாக்கவும், ஏழைக்கமக்காரர் குறைந்தவட்டிக்குப் பணம்பெற்றுக் கமத்தொழிலை நடப்பிக்கவுந் தக்கதாய் அரசினர் ஆங்காங்கு ஐக்கிய நாணய சங்கங்களை ஸ்தாபித்து உதவிசெய்துவருகின்றனர்.

(வர்த்தக விருத்தி.)

யாழ்ப்பாணத்திலே பாரிய வர்த்தகம் நாட்டுக்கோட்டைச் செட்டிப்பிள்ளைகளால் நடத்தப்பட்டுவருகின்றது. சுதேசிகள் வர்த்தகமுயற்சி மிகக் குறைவாயிருந்தது. நாற்பது வருடங்களுக்குமுன் சுதேசிகள்முயற்சியினால் யாழ்ப்பாணவர்த்தகசங்கம் என்னும் பெயருடன் ஓர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. தெல்லிப் போதனாவித்தியாசாலையில் ஆசிரியராயிருந்தவரும், நேர்

மையாகிய சுகுணபூஷணம் பெற்றவருமாகிய மெஸ். J. அப்பாச்சிப்பிள்ளை என்பவர் அச்சங்கத்தின் முகாமைக்காரனாயிருந்து அச்சங்கத்தைச் செம்மையாய் நடத்தினர். இப்பொழுது அச்சங்கத்தின் முகாமைக்காரராயிருந்து அதை நடத்துபவர் மெஸ். J. தோமஸ் என்பவராம். இச்சங்கம் நெல், புடவை முதலிய வியாபாரங்களை நடத்திவருகின்றது. இம்முறை இச்சங்கம் பங்காளருக்கு நூற்றுக்குப் பதினாறுவிதம் இலாபங் கொடுத்தது. மேலேகூறப்பட்ட வர்த்தகசங்கம் ஆரம்பித்து இருபது வருடங்களின்பின் (இற்றைக்கு இருபது வருடங்களின்முன்) யாழ்ப்பாண வியாபாரசமுதாயம் என்னும் பெயருடன் ஓர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சங்கத்தின் ஆரம்பந்தொடங்கி மெஸ். உவில்லியம் மேதர் என்பவர் முகாமைக்காரராய் நின்று மிகத் திறமையாய் நடத்திவருவதால், இக்கொம்பனி அதிக உறுதியும் பெலனுமாய் நிலைபெற்றுப் பங்காளருக்கு அதிக இலாபங்கொடுத்துவருகின்றது. சென்றவருடத்திலும் இவ்வருடத்திலும்இக்கொம்பனி நூற்றுக்கு இருபதுவிகிதம் இலாபங்கொடுத்து, இன்னுந் தொகையான லாபப்பணம் முதலுடன் சேர்த்திருக்கிறது. இவ்வகையாய்ச் சுதேசமுயற்சி சீராய் நடைபெறுவது இத்தேசவிருத்திக்கு விசேஷ சாதனமாம்.

(மதுபான விருத்தி)

அரசினர் இலங்கையிலே மதுபான பரிபாலனப் பகுதியை 1912-ம் ஆண்டு ஸ்தாபித்து அதன்மூலம் மதுபானத்தைக் குத்தகையாக விற்றுவருகின்றனர். இம்முறையினால் யாழ்ப்பாணத்திலே மதுபானப்பாவிப்பு அதிகப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணத்திலே கள்ளுக்குத்தகையினால் 1917ம் ஆண்டுக்கு அரசினர்க்கு வந்த வருமானம் 3,12,855 ரூபாய். யாழ்ப்பாண டிஸ்திரிக்கில் லைசென்ஸ்பெற்ற கள்ளுத்தவறணைகளின் தொகை 112. சாராய விற்பனவினால் அரசினர் சென்றவருடம் பெற்ற தொகை மூன்றுலட்சத்துக்குமேல். குத்தகைகாரர் அரசினர்க்குத்தகைப்பணத்தொகையுடன், தங்கள் செலவு, வட்டி., லாபம் ஆகிய தொகைகளுக்குக் கட்டத்தக்கதாய் விற்பர். அதினால் மேற்கூறிய தொகையின் மும்மடங்கு நான்மடங்கு தொகைப்பணம் மதுபானத்துக்காய் யாழ்ப்பாணத்தில் வருடந்தோறுஞ்செலவழிக்கப்பட்டு வருகின்றது. இத்தொகை யாழ்ப்பாணத்திலிருந்து மலையாளத்துக்கேற்றப்படும் புகையிலை விலையிலும் மூன்றுமடங்கு கூடிய தொகையாயிருக்கின்றது! ஐயையோ! இவ்வளவு ஏராளமான பணம் வருடந்தோறும் எரிந்து கரிந்துபோவது எவ்வளவு துக்கம்!!! இந்த நஷ்டங்களையுணர்ந்த சிலர் மதுவிலக்குப் பிரசங்கங்கள் செய்து, ஆங்காங்கு மதுவிலக்குச் சங்

கங்களை ஸ்தாபித்து, அவ்வவ்விடங்களில் மதுபானப்பிரவிப்பை முற்றாய் நீக்கப் பிரயாசப்பட்டனர். அவையுள் அளவெட்டி, காரைதீவு என்ற இடங்களிலுள்ள மதுவிலக்குச் சங்கங்கள் நிலைகொண்டு அப்பகுதிகளில் அனேகர் மதுபானத்தை முற்றாய் விடத்தக்கதாய் விசேஷ முயற்சி செய்திருப்பது மற்றோர் பார்த்துப் பின்பற்றத்தக்க அரும்பெருஞ் செயலாம்.

(சீனிக்கோம்பனி.)

இலங்கையிலே சீனிசெய்யும் ஓர் கொம்பனி ஸ்தாபிதமாகி யாழ்ப்பாணத்திலே வடமராட்சியிலே வல்லுவெட்டித்துறைக்குக் கிழக்கே திக்கம் என்றஇடத்திற் சீனி செய்வதற்குரிய பெரிய சாலைகளைக்கட்டி, இயந்திரங்களை ஸ்தாபித்து, அப்பகுதியி லிறக்கப்படும்கருப்பநீரையும், தென்னிந்தியாவிலிருந்து எடுப்பிக்கப்பட்ட பனங்கட்டிகளையும் பதப்படுத்திச் சீனிசெய்ய ஆரம்பித்தது. அதை நடத்தியவர் முன் யோசனையின்றி அதிக பணத்தொகையை வீணாய்ச்செலவளித்துக் கொம்பனிக்குப் பத்திலட்சம் ரூபா கடன்வரச்செய்தமையாலும், இப்பொழுதுசெய்யப்படுஞ் சீனி செலவுக்குக்கட்டாம லிருந்தபடியாலும், கொம்பனி அம்முயற்சியை முற்றாய் விட்டுவிட்டது. அக்கொம்பனியின் சீனிச்செய்கையினால் யாழ்ப்பாணத்துக்கு அதிக நன்மை வரப்போகுதெனக் காத்திருந்த யாழ்ப்பாணிகள் ஈற்றில் இலவு காத்த கிள்ளைகள்போல் ஏமாந்துபோயினர்.

(பாடசாலைகளும் கிராமச் சங்கங்களும்.)

யாழ்ப்பாணத்திலுள்ள ஆண், பெண் பிள்ளைகள் யாவரும் படிக்கவேண்டுமென்ற பலவந்தப்பிரமாணம் சென்ற 1917-ம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணத்திலே பாவனைக்கு வந்தமையால், பாடசாலைகளில் படிக்கிற மாணாக்கர் தொகை அதிகப்பட்டிருக்கின்றது. அரசினர் பிரமாணப்படி தங்கள் பிள்ளைகளை ஒழுங்காய்ப் படிக்கவிடாதவர்களை விசாரித்து ஒழுங்குசெய்ய ஆங்காங்கு கிராமச்சங்கங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

(பட்டங்கள்.)

"தமிழரசர் காலத்திலே வேளாளருக்கு ராயன் அதிராயன் முதலி என்னும் வரிசைப்பட்டப்பெயர் சூட்டப்பட்டன, பறங்கிக்காரர் காலத்திலே ராயன் அதிராயன் என்னும் பட்டங்களைக் கொடுக்கின் ராசாவென்றெண்ணப் படுவார்களெனத்தள்ளித் தங்கள் பாஷைக்குரிய தொன் என்பதை முதலியென்பதோடு சேர்த்துச் சிலருக்குச்சூட்டினார்கள். பின்னர் அப்பட்டங்களை விலைக்குப் பலசாதிகளுக்கும் விற்று அதனாற் பொருளீட்டினார்கள். ஒல்லாந்தரும் அவ்வாறே பட்டங்களை விற்றுப் பொருளீட்டினர்."

இப்போது நம் ஆங்கிலவரசினர் கல்வியாலும் பரோபகாரத்தினாலும் இராச விசுவாசத்தினாலும் நல்லொழுக்கத்தினாலும் சிறந்தவர்களுக்கு நைட்பட்டம், சி.எம்.ஜி. பட்டம், அதிகாரப் பட்டம், இராசவாயில் முதலியார்ப்பட்டம், முதலியார்ப்பட்டம், சமாதான நீதிபதிப்பட்டம்முதலியனசூட்டிவருகின்றார்கள். இப்பட்டங்கள் பறங்கிக்காரரும் ஒல்லாந்தரும்விற்ற விலைப்பட்டங்கள்போன்றனவல்ல. பாத்திரமறிந்தளிக்கும் பட்டங்களாம். நைட்பட்டம் அதிராயன் என்னும் பட்டத்துக்குச் சமமானது. சி. எம். ஜி. பட்டம் ராயன் என்பதற்கு நிகரானது. நம்மவருள்ளே நைட்பட்டம் பெற்றவர் சேர் குமாரசுவாமி, சேர் அருணாசலந்துரை, சேர் அ. கனகசபை என்பவர்களாம். சி. எம். ஜி. பட்டம்பெற்றவர் கௌரவ பொ. இராமநாதன். அதிகாரப்பட்டம்பெற்றவர் யாழ்ப்பாணம் தலைமை மணியம் தம்பாபிள்ளை. முதலியார்ப்பட்டம்பெற்றவர்கள் சவிரிமுத்துமுதலியார், தெல்லிப்பழை கனகரத்தினமுதலியார், பார் குமாரகுலசிங்கமுதலியார், கல்லக் முருகேசபிள்ளைமுதலியார், Dr. Strong அரசர்கேசன்முதலியார், உயரப்புலம் சின்னையா முதலியார், இலங்கைநாயகமுதலியார், ம. முத்துக்குமாரசுவாமி முதலியார், இராமலிங்க முதலியார், நாகலிங்கமுதலியார் முதலியோர்.

முதலியார்ப் பட்டத்தோடு சமாதானநீதிபதிப் பட்டம்பெற்றிருப்பவர் S.சபாரத்தினமுதலியார், இ. கந்தையா முதலியார் சிறுப்பர் அ. நாகநாதமுதலியார் முதலியோர். இந்தியாவிற் பஞ்சம்புகுந்தபோது அதன் நிவிர்த்திக்காகப் பெரும் பொருள் சேகரித்தனுப்பிய பரோபகாரசிலராகிய இர் நாகநாதமுதலியார் கௌரவ தண்டாதிகாரபட்டமும்பெற்று விளங்கிய கோப்பாய் மயில்வாகனர்துரை J-P க்கு மருகர். இராசவாயில் முதலியார்ப்பட்டம்பெற்றவர் K. குமாரகுலசிங்கம், இளந்தளையசிங்க ரகுநாதர், சிற் கைலாசபிள்ளை முதலியோர். J. P. பட்டம்பெற்றவர் அ. மயில்வாகனம், பிறக்றர் சங்கரப்பிள்ளை, ஆ. கதிரவேல், சிறுப்பர் க. ஞானசேகரம், க. நமசிவாயம், ஞா. சண்முகம் முதலியோர்.

(விசேஷ மனுஷர்)

மேற்கூறப்பெற்றவர்கள் மாத்திரமன்று, யாழ்ப்பாணமாதீன்ற புத்திர இரத்தினங்களாய் இலங்கை, இந்தியா, ஐக்கியமலாய்நாடு ஆகிய இடங்களில் யாழ்ப்பாணமாதின் கீர்த்தியைப்பரப்பிப் பிரபலமுற்றுவிளங்கினோர் அனேகர். அவருள் சிலர்நாமங்களை யீண்டுக் குறிக்கின்றோம். இலங்கையிலே மிகக் கீர்த்தி பெற்ற சத்திரவைத்தியராய் இராசவைத்தியராய் விளங்ினவர் டக்றர் ஞெக்குவுட்வைத்தியராம். அவர்பின் இலங்கையிலே முதலாஞ் சத்திரவைத்தியராய்க் கீர்த்தியுற்று விளங்குபவர் டக்றர் எஸ். சி. போல் வைத்தியராம். கொழும்பிலே மாகாண நீதிப

திகளுளொருவராயிருக்கும் W. உவாட்ஸ்வோது நீதிபதியும்,
C. குமாரசுவாமி, P. வயித்திலிங்கம் என்னும் பொலிசு நீதிப
திகளும், இங்கிலாந்துவரைக்குஞ்சென்று பரிஸ்தர்பட்டம்பெற்
றவர்களான S. சேதுபதி, W. சேனாதிராசா, ஐசக் தம்பையா,
கோமர் வன்னியசிங்கம், M இராமநாதன், S. மகாதேவ, M.வே
லுப்பிள்ளை என்னும் நியாயசாஸ்திர பண்டிதர்களும் யாழ்ப்பா
ணமாதீன்ற புத்திர இரத்தினங்களாம்.

"யாழ்ப்பாணத்தார் எத்தேசத்திற் சென்றிருந்தாலும் அங்க
ங்கெல்லாம் பிரபலமுற்று விளங்கும் இயல்புடையர். மலேயாள
த்திலே மகாநீதிபதியாயிருந்த செல்லப்பாபிள்ளை யாழ்ப்பாண
மாதீன்ற புத்திரரத்தினங்களுள் ஒருவர் என்பதும் வண்ணார்ப
ண்ணையிற் பிரசித்தியுற்ற குடியிலுள்ளவர் என்பதும் யாவருமறி
வர். காரல் விசுவநாதபிள்ளை, ராயபகதூர் சி. வை. தாமோதர
ம்பிள்ளை, அரியநாயகம்பிள்ளை, சவுந்தரநாயகம்பிள்ளை, சரவண
முத்துப்பிள்ளை, ராயபகதூர் முருகேசபிள்ளை, ராயபகதூர் வில்
லியம்ஸ்பிள்ளை, J. ஹென்ஸ்மன் இவர்கள் இந்தியாவிற்படைத்த
கீர்த்தியையறியாதார் யார். இவர்களும் யாழ்ப்பாணத்து இரத்
தினங்களன்றோ. சீமையிலிருந்துகொண்டு இலங்கை இந்தியா
வின் பழைய சித்திர விநோதக்கைத்தொழிலை அபிவிருத்திபண்
ணும்பொருட்டு அநேக விஷயங்களும், இந்தியா விஷயமாக அ
நேக வாதங்களும் எழுதி வரும் ஆனந்த குமாரசுவாமி யாழ்ப்
பாணத்தொடர்புடையாரன்றோ. இன்னும் சிங்கப்பூர்ப்பகுதிமு
தலிய தூரதேசங்களிலே சென்றிருந்து யாழ்ப்பாணமாதை விள
க்கும் புத்திரரத்தினங்கள் எத்தனையோபலர்."

தெல்லிப்பழை அம்பலவாண பண்டிதர், இணுவை அம்பி
கைபாகர், மாதகல் ஏரம்பஐயர், புலோலி கணபதிப்பிள்ளை, அ
ளவெட்டி கனகசபைப்புலவர், தெல்லிப்பழை குமாரகுலசிங்க
முதலியார், உடுப்பிட்டி குமாரசுவாமிமுதலியார், கதிரைவேற்
பிள்ளை, மானிப்பாய் சதாசிவம்பிள்ளை, நல்லூர் சரவணமுத்து
ப்புலவர், சங்குவேலி சிதம்பரப்பிள்ளை, சிறுப்பிட்டி தாமோத
ரம்பிள்ளை, சுளிபுரம் திருஞானசம்பந்த உபாத்தியாயர், நல்லூர்
திருஞானசம்பந்தபிள்ளை, இணுவை நடராசஐயர், சுன்னாகமநா
கநாதபிள்ளை, மாவை பொன்னம்பலபிள்ளை, சுன்னாகம் முத்துக்
குமாரகவிராயர், அராலி விசுவநாத சாஸ்திரியார், புன்னை ச. க
திர்காம ஐயர், நல்லூர் ந. ச. பொன்னம்பலபிள்ளை, சுன்னாகம்
முருகேச பண்டிதர், நீர்வேலி சங். சிவப்பிரகாச பண்டிதர்,
உரெழு சு. சரவணமுத்துப் புலவர், கோப்பாய் சபாபதிநா
வலர், புலோலி வித்துவான் நா. கதிரைவேற்பிள்ளை, வல்லை
இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச. வைத்தியலிங்கம்பிள்ளை, அ
ராலி ஏரமிய ஆசிரியர், வரணி சங்கீத வித்துவான் வே

நாரணியக்குருக்கள் ஆகியோர் யாழ்ப்பாணத்திலும் இந்தியாவிலும் பிரபல தமிழ் வித்துவான்களாய் விளங்கி விசேஷ நூல்களை இயற்றி அநேக மாணவர்க்குத் தமிழ்க்கல்வியை நன்குகற்பித்து விளங்கினர். இவருள் சிவப்பிரகாச பண்டிதர் தந்தையாரைப்போல, சமஸ்கிருதம் தமிழாதிய பாஷைகளிலே பாண்டித்தியமடைந்து விளங்கினதுடன் சமஸ்கிருதம் தமிழ் என்னும் பாஷைகளில் சில நூல்களை இயற்றி வெளிப்படுத்தியும் ஓர் திராவிட சமஸ்கிருத பாடசாலையை ஸ்தாபித்துச் செவ்வனே நடத்தியும் வந்தனர்.

(பாரியயுத்தம்)

எட்வேட் அரசர் இறக்க அவர் குமாரர் ஐந்தாம் யோட்சு அரசர் பட்டம் பெற்றுக் காருண்ணியமாய் பிரித்தானிய இராச்சியமெங்குஞ் செங்கோல் செலுத்திப் பிரசைகளியாவரும் இனிதுவாழ்த்த நல்லரசு புரிந்து வரும்பொழுது, சேர்மனிய சக்கிரவர்த்தியின் பேராசையினால் ஐரோப்பாக்கண்டத்திலே முன் ஒருபொழுதும் நடைபெறாத பாரிய யுத்தம் ஆரம்பமானது. அவுஸ்திரிய இளவரசரைச் சேர்வியர் சிலர் கொன்றதைச் சாட்டாய்க்கொண்டு, சேர்மன்சக்கிரவர்த்தி அவுஸ்திரியசக்கிரவர்த்தியை யுத்தத்துக்கு ஏவித், தானும் பிரான்சின்மேலும் ருஷியாவின் மேலும் யுத்தம்புரிய ஆரம்பித்தனர். பிரித்தானிய அரசு இந்தப் பாரிய யுத்தம் வாராதபடிதடுக்கப் பல பிரயத்தனங்களைச்செய்தாலும், சேர்மனியர் அவர் சொற்கேளாது பிரான்சியருடன் போர்புரியச் சேனைவீரரை யனுப்பினபடியாலும், இராச்சியங்களின் உடன்படிக்கைக்கு மாறாகச் சேனைவீரரைப் பெல்சியத்துக்கூடாக அனுப்பினதினாலும், பிரித்தானிய அரசும் 1914 ம் ஆண்டு ஆவணி மீ 4-ந்திகதி சேர்மனிக்கு விரோதமாய்ப் போர்க்களறைகூவி யுத்தம்புரிந்துவருகின்றது. இந்தப்பாரியயுத்தத்தில் சேர்மனியா, அவுஸ்திரியா, துருக்கை, பல்கேரியா ஒருபுறமாயும், ருஷியா, சேர்வியா, பெல்சியம், பிரான்சு, பிரித்தானியா, யாப்பான், ஐக்கியதேசம் ஒருபுறமாயும்நின்று நாலுவருடங்களுக்குமேல் முன் ஒருபொழுதும் நடந்திராத பாரியயுத்தத்தை நடப்பித்துவருகின்றன. இந்த யுத்தத்தினால் ஐரோப்பாக்கண்டம்மாத்திரமல்ல, உலகம் முழுவதும் அல்லோல கல்லோலப்படுகின்றது. இந்த யுத்தத்தினாலுண்டான நஷ்டங்களை யாழ்ப்பாணமும் அனுபவிக்க நேரிட்டது. யாழ்ப்பாண வாலிபர்சிலர் யுத்தகளத்துக்குச்சென்று இருவர் அங்கே மரித்தனர். இந்த யுத்தத்தினால் வர்த்தகவிருத்தி குறையத், தோட்டங்களின் பிரயோசனங்களாகிய தேங்காய், றப்பர், தேயிலை, கோப்பி ஆதியவற்றின்விலைசுருங்க, வியாபாரக்கொம்பனிகளையும் தோட்டங்களையும் அடுத்துநின்ற யாழ்ப்பாணிகள் பலர் வேலையற்றவர்களாயினர்,

## 1—(ஆங்கிலவரசின் நன்மை)

தொடர்ச்சி.

ஆங்கில அரசினரால் நீதிப்பரிபாலனம் உயர்ந்தோர், தாழ்ந்தோர், செல்வர், வறிஞர், கற்றோர், கல்லாதோர், உத்தியோகஸ்தர், உத்தியோகமற்றோர் என்ற பேதமின்றி எவர்க்கும் ஒப்பச் செம்மையாய் நடைபெறுகின்றது. முற்காலத்தில் அரசினர் சம்பளமின்றிப் பிரசைகள்மூலஞ் செய்வித்த இராசகாரியம் இப்பொழுது முற்றாய் நீக்கப்பட்டது. அடிமை கொள்ளல் விற்றல் அடியோடு நிறுத்தப்பட்டது. குற்றவாளியென்று அத்தாட்சிப்படுத்தப்படாத ஓர் குடியானவனைத் தேசாதிபதிதானுந் தண்டித்தல் கூடாதகாரியம். இராசாங்க உத்தியோகஸ்தரும் பிரசைகளைப்போலவே மறியற்கூட்டிலேறிச் சத்தியம்பண்ணியே தங்கள் முறைப்பாட்டைத் தெரிவித்தல்வேண்டும். பிரசைகள் கள்ளர் முதலிய எப்பயமுமின்றி இனிது வாழ்கின்றனர். பிரசைகளின் சுகவாழ்வுக்கு அவசியம் வேண்டிய சகலசாதனங்களையும் அரசினர் தாராளமாய் அருளிச் செங்கோல் செலுத்தி வருகின்றனர். இவற்றால் முன்னடைபெற்ற எந்த அரசிலும் ஆங்கில அரசை மேலான அரசாய்ப் பிரசைகள் நன்குமதித்துப் போற்றிவருகின்றனர்.

## 2—(கலாவிருத்தி)

முற்காலத்திலும் இக்காலத்தில் யாழ்ப்பாணம் கல்வியில் அதிக விருத்தியடைந்திருக்கிறது பிரத்தியட்சமான சம்பவமாம். இக்காலத்திலே உயர்தர ஆங்கில கல்வியைக் கற்பிக்கும் பதினொரு கல்லூரிகள் யாழ்ப்பாணத்திலுண்டு. இவற்றுள் யாழ்ப்பாணக்கல்லூரி, மத்தியகல்லூரி, இல்கர்கல்லூரி, ஹாட்லிகல்லூரி? சென்ற் யோன்ஸ் கல்லூரி, சேட்சுமிஷன் பெண்கள்கல்லூரி என்னும் ஆறு ஸ்தாபனங்களும் புரோட்டெஸ்தாந்து மிஷனரிமாராலும், பாற்றிக் கல்லூரி ரோமன்கத்தோலிக்குமிஷனாலும், இந்துக்கல்லூரி, விக்தோறியாக்கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, இராமநாதன்கல்லூரியென்னும் நான்கும் இந்துக்களாலும் நடத்தப்படுகின்றன. மேலேகூறப்பெற்ற இராமநாதன்கல்லூரி, சேட்சுமிஷன் பெண்கள்கல்லூரி, உடுவில் விடுதிப்பெண்பாடசாலை, உடுப்பிட்டி விடுதிப்பெண்பாடசாலை, வேம்படி விடுதிப்பெண்பாடசாலை, பருத்தித்துறைவிடுதிப்பெண்பாடசாலை, நல்லூர் விடுதிப் பெண்பாடசாலை, யாழ்ப்பாணம் கன்னியாஸ்திரிமடம் முதலிய ஸ்தாபனங்களும் பெண்களின் உயர்தரக் கல்வியை விருத்தியாக்கும் விசேஷ ஸ்தாபனங்களாய் விளங்குகின்றன. இவ்வளவு கல்லூரிகளும், பெண்விடுதிப்பாடசாலை

சிங்கப்பூர், ஐக்கிய மலாய்நாடுகளிலிருந்து, யாழ்ப்பாணத்துக்கு வந்த பணவரவுமிகக்குறைந்துபோனது. யாழ்ப்பாணத்தார் யுத்தசகாயத்துக்காய் அதிக பணஞ்சேர்த்தனுப்பினர். இப்பொழு து யுத்தத்தினால் கப்பல் போக்கு வரத்துக் குறைந்தபடியால், அரிசி, நெல், புடவைகள் வரத்துக் குறைந்துபோக, அரிசி ஒரு படி 30 சதத்துக்கு மேற்படவும், 1-யார் காரிக்கன் (முன் 25 சதம்) 1 ரூபாவுக்கு விலைப்படவும், ஒன்றரைரூபாவுக்கு விற்ற மல்வேட்டி 6-ரூபாவரையில் விலைப்படவுமௌதுவாயினது. முன் னொருபொழுதுமில்லாத கஷ்டம் யாழ்ப்பாணத்தில் இப்பொழு துதான் ஆரம்பித்திருக்கிறது. இந்த யுத்தஞ் சீக்கிரமொழிந்து சமாதான முண்டாகவேண்டுமென்று யாவருங் கடவுளைப் பிரார்த்தித்து ஆசையோடு நோக்குகிறார்கள்.

(யாழ்ப்பாணத்துப் பூர்வநிலையும் இக்காலநிலையும்)

யாழ்ப்பாணத்தின் புராதன அரசியல், நாகரீகம், கல்வியறிவு, பழக்கவழக்கம் விசேஷமெனப் போற்றுவார் சிலர். அதை மறுத்து, இக்கால அரசியல் கல்வி நாகரீகமாதியன சிறந்தவை யெனப் போற்றுவார் பலர். இருபட்சத்தையும் சரியாய் ஆராய்ந்து பார்க்கும்பொழுது, இக்காலநிலை பலவிஷயங்களில் நண்பகற்சூரியப்பிரகாசம்போல நன்றாயிருப்பதையெவருமொத்துக்கொள்வர். முற்காலத்துக் கொடிய அரசுமுறை, அடிமையாட்சி, கள்வர்பயம், அறியாமை, அவபக்தியாதியன அகன்றன. நல்லரசும், கல்விவிருத்தியும், சீர்திருத்தமும், செல்வசம்பத்தும், சன்மார்க்கசீலமும், தேவபக்தியும் இக்காலத்தில் அதிகமாய்ப்பிரகாசிக்கின்றன.

(ஆங்கில அரசின் நன்மை)

"ஆங்கிலவரசில் நமக்குக் கிடைத்திருக்கும் சுயாதீனம் எத்துணைப்பெரிது. அதுபோல ஒருகாலத்தும் வாய்க்காது. இவ்வரசுபோலும் தருமராச்சியம் உலகத்தில் இல்லை. நாம் நன்னிலையை அடையவேண்டுமென்பது நம்மையாளும் மகா காருண்ணிய மகிமாவது ஐந்தாம் ஜார்ச்சு வேந்தர் விருப்பு. நாம் பயிர்த்தொழில் கைத்தொழில்களை நன்றாக அபிவிருத்திபண்ணுதல் வேண்டும். அதுசெய்யாதவிடத்து நமது தேசம் செல்வம்பொருந்திய தேசமாய் விளங்காது. கல்விக்கழகங்களை நம்பொருட்டு அரசினர் தாபித்தும், தாபிப்போருக்குப் பொருளுதவி புரிந்தும், கல்வியிலே மிக்கசித்தியுற்றுச் சீமைக்குச்சென்று கற்கவிரும்பும் மாணாக்கருக்குப் பொருளுபகாரஞ் செய்தும், அவ்வாறு சென்று கற்றுச்சித்தியுற்றோர்க்கு நல்லுத்தியோகங்கள் கொடுத்தும், உயர்தர இராசரீக சேவைக்குக் கற்று வல்லுநராய் வந்தவருக்கு ஆங்கிலேயர் பெறுதற்குரிய பதங்களைப் பேதம் பாராது கொடுத்தும் வருகின்றார்கள்." யா—ச.

களும் அதிகப்பட்ட வேறு ஓர் ஸ்தானம் இலங்கை இந்தியாவிற் காண்பதரிதாம்.

யாழ்ப்பாணத்திலே படிக்கும் மாணாக்கர் தொகைவீதத்தையும், பெண்பாலாருட் படிப்பவர் தொகைவீதத்தையும் இலங்கையின் மற்ற இடங்களுடன் ஒப்பிடும்பொழுது யாழ்ப்பாணமே 'முதலாவதாய் நிற்பதும் யாழ்ப்பாணத்தின் கல்வி விருத்திக்கு விசேஷசான்றாகும். இலங்கை மாணாக்கர் இங்கிலாந்து சென்று உயர்தரக்கல்வி கற்பதற்காய் இலங்கை அரசாட்சியார் உபகரிக்கும் வெகுமதிப் பணத்தைப்பெற யாழ்ப்பாண மாணாக்கர் பலர் இலங்கையிலுள்ள சிங்களவர், சோனகர் பறங்கிக்காராதிய சாதிய மாணவருடன் போரிகட்டிக் குறித்த பரீட்சைக்குச்சென்று சித்தியடைந்து அரசினர் வெகுமதிப்பணம் பெற்று, இங்கிலாந்துக்குச்சென்று படித்து சிவில் பரீட்சை, வைத்தியப் பரீட்சை, இன்சினியர்ப் பரீட்சை, நியாயசாத்திரப்பரீட்சையாதியவற்றில் விசேஷ சித்தியடைந்து பட்டங்கள் பெற்று இந்தியா இலங்கையில் உயர்ந்த உத்தியோகம் வகித்திருக்கின்றனர். சிலர் அங்கே படிக்கும்பொழுது சுகவீனராகி மரித்துப்போயினர். சிலர் இன்னும் அங்கே படித்துக்கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலர் அவ்வெகுமதிப்பணம் பெற்று இங்கிலந்து சென்று படிக்க ஆசைப்பட்டு அவ்வெகுமதிப்பணம் பெறுதற்குரிய பரீட்சையில சித்தியடைய முயற்சியாய்ப் படிக்கின்றனர். இலங்கை இந்தியாவில் மாத்திரமன்று யாழ்ப்பாண மாணாக்கர் இங்கிலாந்துச் சர்வகலாசாலைகளிலும் சிறந்து தாம் பிறந்த திசைக்கு இசைநிறுத்துவது யாழ்ப்பாணக் கலாவிருத்தியின் உன்னத நிலைக்கு முக்கிய சாட்சியன்றோ?

கல்வி விருத்தியாகச் சுதேச வித்தியாதரிசிகள் தொகையும் அதிகப்பட்டது. யாழ்ப்பாணத்திலே முதல் உபவித்தியாதரிசியாய் நியமிக்கப்பட்டவர். மெஸ். R.பிரக்கன்றிட்ச. அவரின்பின் G. C.தம்பாபிள்ளை, C. செல்லப்பா, L. மனுவேல், S. தில்லைநாயகம், S. கந்தையா, அ. பொன்னையா, இ. கனகசுந்தரம், பிலிப்பையா, யேம்ஸ், க. பொன்னையா, M. தம்பிப்பிள்ளை, S. சிவரத்தினம், க. இராசசிங்கம் முதலியோர் உதவி வித்தியாதரிசிகளாய் நியமிக்கப்பட்டனர். இவர்களுள் தில்லைநாயகம் வித்தியாதரிசி நிரைக்கு உயர்த்தப்பட்டுக் கீழ்மாகாணத்தில் கடமைபுரிந்து தற்போது வடமாகாணத்தில் கடமைபார்க்கின்றனர். இவருடைய இடத்தில் கீழ்மாகாணத்தில் வித்தியாதரிசியாய்க் கடமைபார்க்க S. கந்தையா நியமனம் பெற்றனர்.

இக்காலத்திலே யாழ்ப்பாணத்திலே நடைபெறும் அச்சியந்திர ஸ்தாபனங்களின் தொகையும், அந்த ஸ்தாபனங்களிலிருந்து வெளிப்படும் புதினப்பத்திரங்கள், புத்தகங்களாதியனவும்

யாழ்ப்பாணக் கலாவிருத்திக்கு வேறோர் விசேஷ சாட்சியாம். யாழ்ப்பாணத்திலே இக்காலத்தில் சிறிதும் பெரிதுமான 12 அச்சியந்திர ஸ்தாபனங்களுக்குமேலுண்டு. இவற்றுள் முதலாம் அச்சியந்திர ஸ்தாபனம் அமெரிக்க மிஷனால் 1835ம் ஆண்டுஸ்தாபிக்கப்பட்டது. மற்றைய அச்சியந்திரங்களியாவும் அதன்பின் யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டனவாம். யாழ்ப்பாணத்தில் முதல் வெளிப்பட்ட புதினப்பத்திரிகை இலங்கையிலுள்ள ஆங்கில சுதேச பாஷைப் புதினப்பத்திரங்களுள் முதலாவதாய் விளங்கும் உதயதாரகையாம். இப்பத்திரிகை அமரிக்கமிஷனால் 1841ம் ஆண்டு தொடக்கம் பெற்றது. அக்காலந்தொடங்கி ஆங்கிலம் தமிழ் என்னும் இருபாஷைகளிலும் அது நடத்தப்பட்டு வருகிறது. அதன்பின் 1863ம ஆண்டு மெஸ். C. W. கதிரவேற்பிள்ளை (அக்காலத்தில் அத்துவக்காத்தாயிருந்த இவர் பிற்காலத்தில் நீதிபதியாயினர்) என்பவரால் ஆரம்பமான Ceylon Patriot பத்திரிகை ஆங்கில பாஷையில் நடைபெற்று வருகின்றது. இக்காலத்தில் அதனை நடத்துபவர் சுப்பிறீங்கோட்டு பிறக்தர் ஆ. கனகரத்தினம் என்பவராம். அடுத்து 1876 ம் ஆண்டு யாழ்ப்பாணக் கத்தோலிக்குப்பாதுகாவலன் பத்திரிகை ரோமான் கத்தோலிக்க மிஷனால் ஆரம்பமானது. இப்பொழுது அப்பத்திரிகை தமிழ்ப் பாஷையிலொன்றும் ஆங்கில பாஷையிலொன்றுமாக நடை பெறுகின்றது. அச்சுவேலியிலே S. தம்பிமுத்துப்பிள்ளை என்பவரால் 1884 ம் ஆண்டு சன்மார்க்கபோதினி என்னும் பத்திரிகை ஆரம்பமாகித் தமிழ்ப் பாஷையில் நடைபெற்று வருகின்றது. 1889ம் ஆண்டு இந்துசாதனம் ஆரம்பமாகித் தமிழிலும் ஆங்கிலத்திலும் நடைபெற்றது. இப்பொழுது அப்பத்திரிகை தமிழ்ப்பாஷையில் ஒன்றும் ஆங்கில பாஷையிலொன்றுமாக நடைபெற்று வருகின்றது. ஆங்கில பத்திரிகையின் அதிபர் கௌரவ அ. சபாபதியாம். 1902 ம் ஆண்டு வயாவிளானிலே க. வேலுப்பிள்ளை என்பவரால் சுதேசநாட்டியம் என்னும் பத்திரிகை ஆரம்பமாகி தமிழ்ப்பாஷையில் நடைபெற்று வருகின்றது. 1910ம் ஆண்டு தொடங்கி இதை நடத்தி வருபவர் சி. நல்லதம்பி என்பவராம். அதன்பின் ஞானசந்திரோதயம், கலியுகவரதன், சண்முகநாதன், ஆத்துமபோதினி, இந்துபாலபோதினி, சைவபாலியசம்போதினி, சைவசூக்குமார்த்தபோதினி, ஞானப்பிரகாசம், ஞானசித்தி, பாலபாஸ்கரன், விஜயலட்சுமி, லங்கா, முதலிய பத்திரங்கள் தோன்றி மறைந்தன. இவைகளுக்குமுன் உதயபானு, சுதேசநேசன், பாலியர்நேசன், இலங்கைநேசன், விஞ்ஞானவர்த்தனி, முதலிய பத்திரங்களுந் தோன்றி நடந்து மறைந்தன.

மேலே கூறப்பட்ட அச்சியந்திரசாலைகளில் வெளிப்பட்ட புத்தகங்களும் அநேகமாம். மேற்படி பத்திரிகைகளும் புத்தகங்

களும் யாழ்ப்பாணத்திலே கல்வியினேற்றத்தையுந் தேற்றந்தையுந் தெளிவாய் விளக்குகின்றன. யாழ்ப்பாணத்தின் கல்விவிருத்திக்கு மிஷனரிமாரே விசேஷ காரணராம். அரசினர் வேண்டிய உதவிகள் புரிந்து கல்வி விருத்தியாகத்தக்க ஒழுங்குகள் செய்து வருகின்றனர். சுதேச பிரபுக்களுள் சிலர் தமிழ்க்கல்வி அதிகரிக்க விசேஷ உதவிகள் புரிந்து வருகின்றனர். இவற்றால் யாழ்ப்பாணக் கலாவிருத்தி நண்பகற் சூரியப்பிரகாசம் போல உன்னத நிலையை அடைந்து விளங்குகிறது.

### 3—(ஐசுவரிய விருத்தி)

யாழ்ப்பாணம் முற்காலத்திலும் இக்காலத்தில் ஐசுவரியம் மிகுந்த நாடாயிருக்கின்றது. முற்காலத்திலே வேளாண்மையே யாழ்ப்பாண நாட்டின் ஐசுவரியமாம். இக்காலத்தில் மழை வளங்குன்றியதால் யாழ்ப்பாண வேளாண்மை அதிகங் குறைந்து போனது. யாழ்ப்பாணத்தார் வன்னி முதலிய இடங்களிற் சென்று இக்காலத்தில் வேளாண்மை செய்வதாலும், யாழ்ப்பாணத்தில் முற்காலத்திலும் பார்க்க இக்காலத்தில் சிறுதானியங்களாதியன அதிகமாய் செய்கைபண்ணப் படுவதாலும் முந்திய குறைவு நிறைவடையக் கூடியதாகும். புகையிலைச்செய்கையால் யாழ்ப்பாணம் அதிக பணம்பெற்று ஐசுவரிய நிலையடைந்து வருகின்றது. புகையிலைச்செய்கை யாழ்ப்பாணத்திலே வரவர அதிகப்பட்டுவருகிறது. மலையாளத்துக்கு வருடந்தோறும் 5000 கண்டி புகையிலை மாத்திரம் (அதன்விலை 500000ரூபா) யாழ்ப்பாணத்திலிருந்து ஏற்ற மலையாள அரசு உத்தரவு செய்திருக்கின்றது. கொழும்புக்கு ஏற்றப்படுஞ் சுருட்டுக்காய்ச் செய்யப்படும் புகையிலையும் அதிகரிக்கின்றது. புகையிலைமூலம் யாழ்ப்பாணத்துக்கு வருடந்தோறும் பெருந்தொகைப்பணம் வரலாயிற்று. தென்னந் தோட்டங்கள் மூலமும் யாழ்ப்பாணத்தில் பணவரவு அதிகப்பட்டது. யுத்தத்தின்பின் இவ்வருமானம் மிகக்குறைந்துபோனது.

யாழ்ப்பாணத்திலுழைப்பவர்கள் சம்பாதிக்கும் பணத்தொகையிலும் பிறவூர்களில் உத்தியோகமாயிருக்கும யாழ்ப்பாணிகள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்புந் தொகை பெருந்தொகையாம். சில வருடங்களின் முன் (இப்பொழுது நடைபெறும் பாரிய யுத்தம் தொடங்குமுன்) வடமாகாண ஏசன்றர் எடுத்த கணக்கின்படி ஒருவருடம் யாழ்ப்பாணத்திலுள்ள தபாற்கந்தோர்கள் மூலம் சிங்கப்பூர் ஐக்கிய மலாய்ப்பகுதிகளிலிருந்து அனுப்பப்பட்ட பணத்தொகை 20 இலட்சம் ரூபாவாம். அத்தொகையுடன் ஆட்கள் மூலமாயுஞ் செட்டிகள் மாறலாயும் யாழ்ப்பாணம் வந்

த பணத்தொகைகளையும் கூட்டிக் கணக்கிடின் அக்காலத்தில் வருஷந்தோறும் 50 இலட்சம் ரூபா யாழ்ப்பாணத்துக்கு அப்ப குதிகளிலிருந்து அனுப்பப்பட்டதென மதிக்கலாம். (யுத்தத்தின்பின் அத்திசையிலிருந்து அனுப்பப்படும் பணத்தொகை மிகக்குறைந்துபோனது) முயற்சியும் அனுகூலமுமுள்ள தொழில் புரியும் யாழ்ப்பாணிகளைபொத்தசுதேசிகளை இலங்கையில்தாம் ஓரிடத்திலுங் காணவில்லையென சேர் எம்மேர்சன் தெனன்ற் என்பவர் எழுதிய புத்தகத்தில் குறித்தபடி யாழ்ப்பாணிகள் உள்ளூரில் முயற்சியும் பலனுமான தொழில்களைப் புரிவதாலும், யாழ்ப்பாணிகளுள் கற்ற அனேகர் உத்தியோகந்தேடி இலங்கை இந்தியா பர்மா சிங்கப்பூர் ஐக்கியமலாய்நாடு ஆபிரிக்கா ஆதிய இடங்களுக்குச் சென்று உத்தியோகம் பெற்றுத் தாம் பெறுஞ் சம்பளத்தின் ஓர் பகுதியை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதாலும் யாழ்ப்பாணம் ஐசுவரியத்தில் பெருகி வருகின்றதென்பது வெளிப்படையாம்.

## 4—(சீர்திருத்தம்)

யாழ்ப்பாணம் ஆங்கில வரசாட்சிக்குட்பட்டபின்னர், கல்வியிலும் ஐசுவரியத்திலும் அதிகரிக்க, சீர்திருத்தமும் நாளொருவண்ணம் பொழுதொரு மேனியாய் வளர்ந்து வருகின்றது. யாழ்ப்பாணிகள் நடை யுடை பாங்கு பாவனை பழக்க வழக்கமாதிய எவ்வகைத் திருத்தத்திலும் அதிகரித்து வருகின்றனர். சுகாதாரத்துக்கேற்ற வகையான மாளிகைகள் அதிகப்படுகின்றன. பிரயாணத்துக்கு வசதியான வாகனங்கள் முற்காலத்தில் இல்லை. செல்வரும் அதிகாரிகளும் பல்லக்கிற் பிரயாணஞ் செய்தனர். இக்காலத்தில் இடபரதங்கள், அசுவரதங்கள், மோட்டர் இரதங்கள், புகையிரதங்கள் துவிதியசக்கரங்கள் ஆதியன மலிந்து பொலிந்து விளங்குகின்றன. சுருக்கசெலவுடன் சுருக்க காலத்திற் பிரயாணஞ்செய்யும் வசதி இக்காலத்திலுண்டு. தூரத்துச் செய்திகளை யுடனே யறியவும், தபாற் போக்குவரவு இலகுவில் நடைபெறவும் வசதிகளுண்டு, சனசங்க கொண்டாட்டங்கள் சிறப்பாய் நடைபெறுகின்றன. சனசங்கத்திலே ஆசார உபசாரமுறைகள் ஒழுங்காய் அனுட்டிக்கப்படுகின்றன. சீர்திருத்தம் அதிகப்பட்டுவரும் இக்காலத்தில் 'கல்லமரத்திற்புல்லுருவி' போலச் சிலமோசங்களுஞ் சிறிதுசிறிதாய்ப் பெருகுவதைக்காண்பது துக்கமான சம்பவம், மதுபானம் பாவித்தல், அலங்காரமாளிகை விலைபெற்ற ஆபரணங்கள் வர்ணப்பட்டாடை முதலியவைகளில் அதிகபணத்தை செலவிடுதல், வாணவேடிக்கைகூத்து முதலியவைகளுக்காக வீண்செலவுசெய்தல், ஐரோப்பிய நாகரீக பழக்கவழக்கங்கள் ஆதியன யாழ்ப்பாணத்தின் ஏற்றத்தையுந் தேற்றத்தையும் அழிக்குங் குருவிச்சைகளாம். இ

வர்கள். இவற்றை வெறுத்துத்தள்ளி உத்தமவகைகளைக் கைக்கொள்வாராயின் எம்நாடு அதியுன்னத நிலைபெற்று விளங்குமென்பது நிச்சயமாம்.

(5—சன்மார்க்கம்)

யாழ்ப்பாணத்திலே முற்காலத்திலும் இக்காலத்தில் சன்மார்க்கம் அதிகரித்து வருதல் தெளிவான சத்தியமாம். அறியாமை அவபக்திநிறைந்த முற்காலத்தில் நடந்த துன்மார்க்கசெயல்கள் கல்வியறிவும், கடவுளறிவும் அதிகரிக்க அதிகரிக்கக் குறையச் சன்மார்க்கம் ஏற்றமடைகின்றது. ஆங்கில அரசின் நீதிப்பரிபாலனத்தினாலும் மிஷனரிமாரின் விசேஷ முயற்சிகளினாலும், சன்மார்க்கத்தை விரும்பியசுதேசிகளின் பிரயாசத்தினாலும் சன்மார்க்கநிலை யாழ்ப்பாணத்திலே விசேஷமாய் மதிக்கப்பட்டு அதிகரித்து வருகின்றது. சன்மார்க்கத்தின்பேறாய் உண்மை, பரோபகாரம் முதலிய குணங்கள் அதிகரிக்கின்றன. கடவுளை உண்மையாய் வழிபடுதலே சன்மார்க்க விசேஷ சாதனமாம். யாழ்ப்பாணத்தின் சன்மார்க்க தேற்றகாரணங்களுள் மிஷனரிமாரின் போதனையே விசேஷகாரணமென்பதை அறிவுடையோர் மறுக்கமாட்டாரென நம்புகிறோம்.

இவ்வாறாக யாழ்ப்பாணம் பலவகையிலும் முற்காலத்திலும் இக்காலத்தில் விருத்தியடைந்திருக்கின்றதென்பது பட்டப்பகல்போலத் தெட்டத்தெளிவான சத்தியமாம். மணற்றிடல் என்னும் பெயரினால் அழைக்கப்பட்டு மணல்காடாயிருந்த இச்சிறுநாடு பல அலங்காரங்களும் பெற்று உலகத்திலே சிறந்துவிளங்கும் நன்னாடுகளிலொன்றாய்த் திசையெங்கும் இசைநிறுத்தி நன்றாய் அறியப்பட்ட நாடாய் விளங்கிவருதல் அதன் மக்களுக்கு மகாசந்தோஷ சம்பவமாம். இந்நாட்டில் இக்காலத்தில் வசிப்போர் மேலே கூறப்பட்ட மதுபானம் வீண்செலவு முதலியவற்றையும், பெருமை பிரிவினை சுபநயநாட்டம் முதலியவற்றையுந் தவிர்த்து ஐக்கியம், பிறர்நேசம், நேர்மை, கடவுள் வழிபாடு முதலியவற்றை அனுசரித்து வருவாராயின் உலகத்திலே சிறுஞ்சிறப்பும் பேரும் பிரஸ்தாபமும் பெற்று வாழ்வதுடன் நல்ல சந்ததியையும் உண்டாக்குவார். அதனால் யாழ்ப்பாணம்மென்மேலுஞ் சிறப்புற்று வாழுக. யாழ்ப்பாண வாசிகளும் நன்றாய்ச்சிறந்துவாழ்வார். இந்நாட்டை அரசாளும் பிரித்தானிய இராச்சியமும் நீடூழி வாழும்.

———:o:———

☞ மலையாளர் வரலாறு எனப்பின் வருமிது; முன்கூறப்பட்டிருக்கும் மடப்பள்ளியார் வரலாறு, வன்னியர் வரலாறு என்பவற்றின்பின் இருக்கவேண்டியது

## மலையாளர் வரலாறு,

மலையாளர், மலையகர் என்னும் இருபெயர்கட்கும் இலக்காயிருக்கும் யாழ்ப்பாணவாசிகள் முன்னாளிலே மலையாளத்திலிருந்து வந்தவர் என்றும், தமிழ்மக்கள் அல்லர் என்றும் தப்பித வபிப்பிராயங் கொண்டார் பலர் எம்மூரில் உளர். அன்னவர் சேலம், திருச்சிராப்பள்ளி, வடஆறகாடு ஆதிய தமிழ்நாடுகளில் வசிக்கும் மலையாளிகள் என்னும் பெயருடைய தமிழ்மக்களைச் சற்றும் அறியார் என்பது தெளிவு. ஆகலான், அம்மலையாளிச் சாதியைப்பற்றிச் சிறிதகூறுதல் விரும்பப்படத்தக்கதேயாம். அச்சாதியின் வரலாறு தேர்ஷ்டன் என்பவர் இங்கிலீசிலே இயற்றிய தென்இந்தியாவின் குலகோத்திரங்கள் என்னும் அரியநூலிலே விரிவாய்ச் சொல்லப்பட்டுள்ளது. ஆண்டுக்குறித்திருக்கும் சிலசங்கதிகளின் சாரத்தினை ஈண்டுத் தமிழிலே தருதும்;

சேலம் மலையாளிகளைப் பற்றிய ஐதிகம்:-இவர்கள் காஞ்சி நகரினின்றும் பத்துத் தலைமுறைக்கு முன்னர், மகமதிய அரசினர் காலத்திலே, சேலஞ் சென்று குடியேறின வேளாண்குலத்தினரான சகோதரர் மூவரின் வம்சத்தவர். அம்மூவருள் மூத்தவன் சேர்வைராயன் மலைக்குச் சென்றனன். நடுவிலான் கோல்லிமலையை நாடினன். இளையவன் பச்சை மலைக்கு இவர்ந்தனன். சேர்வைராயன் மலையைச் சேர்ந்தவன் வம்சத்தார் பெரியமலையாளிகள் என்றும், கோல்லிமலையைக் கொண்டவன் சந்ததியார் சின்னமலையாளிகள் என்றும் பெயர்பெற்றனர். இவ்வைதிகம் விகற்பமாகவும் விளம்பப்படும்.

"கதிராமன் என்னுந் தெய்வம் காஞ்சிநகரில் வெறுப்புற்று வேற்றிடம் புக வெளியேறியது. அதனைவழிபட்ட மக்கள் மூவர் பெரியாணன், நடுவாணன், சின்னணன் என்னும் பெயரினர்- தம்பெண்டு பிள்ளைகளுடன் புறப்பட்டுத் தொடர்ந்து, சேலஞ் சேர்ந்து வெவ்வேறுவழிபட்டு, பெரியாணன் சேர்வைராயன் மலையினையும், நடுவாணன் பச்சைமலையினையும் அந்தூர்மலையினையும், சின்னணன் மஞ்சவாடியினையும் நண்ணினர்'

2—திரிசிராப்பள்ளி மலையாளிகளைப் பற்றிய ஐதிகம்;-இது 'நாட்டுக்கட்டு' என்னும் நாமம்பூண்ட பாடலிலேயுள்ளது. 'கச்சி வேந்தர்க்குச் சகோதரரான குருவொருவர் வேந்தனுடன் விவாதப்பட்டு நகர்நீங்கித் தமதாண்மக்கள் மூவருடனும், பெண்மக்களுடனும் சிராப்பள்ளியைச் சேர்ந்தனர். சடையகவுண்டன் எனப்பெயரிய ஜேஷ்டன் (பெரியாணன்) சேலம் சேர்வைராயன்மலையினையும், துவிதியபுத்திரன் (நடுவாணன்) பச்சைமலையினையும், கனிஷ்டன் (சின்னணன்) கோல்லி மலையினையும் தம் உறைவிடமாகத் தெரிந்து கொண்டனர். அன்னார் கைக்கோளர் வேடர் முதலிய வெவ்வேறு குலங்களில் மணங்கலந்தனர்'

3—வடஆறுகாட்டுச் சவாடிமலையில் வசிக்தும் மலையாளிகளின் வரலாறு;-கண்குண்டி வேடர்சிலர் கச்சிக் காரைக்காட்டுக் காரளரிடம் பெண்கேட்டுப் பரிகாசவிந்தனைகள் பலபெற்றுக் கோபாவேசங்கொண்டனராய், அக்காராளர்குலக் கன்னியர் எழுவரைக் கவர்ந்துகொண்டு கடிந்தகன்றனர், அக்கன்னியரை மீட்பான் வேளாண்மைந்தர் எழுவர் நாய் ஏழுடன் நகரம் விட்டு வெளிப்போந்தனர். போகுமுன்னர்த் தம் நாயகிமாரை நோக்கி, நாய்கள் திரும்பித் தனியே வருமாயின் உயிர்நீத்தேமென்று உத்தேசித்து, அபரக்கிரியைகள் யாவும் ஆற்றுமின் என்று ஆஞ்ஞாபித்திருந்தனர்.

இவ்வாறுசொல்லி வழிச்சென்ற வேளாளப்பிள்ளைகள், வெள்ளப்பெருக்குள்ள பாலாற்றினை அதி பிரயாசையுடன் கடந்து அக்கரைப்பட்டனர். நாய்களோ கட்டாறுவரையும் நீந்தி மேற்போகாது மீண்டு வீடுநோக்கி விரைந்து செல்லவாயின. அப்புரோகதிகள் வீடுவந்துசேரக்கண்ட காதன் மனைவியர் தம் காதலர் துஞ்சினர் என்று துணிந்து தாம் செய்யவேண்டிய கடன்கள் அனைத்தினையும் கிரமமே செம்மைபெறச்செய்துமுடித்தனர்.

ஆறுகடந்த வாடவர், வேடுவர் பக்கணஞ்சென்று, கன்னியரைக் கவர்ந்தவரான காளையரைக் கோறல்செய்து, பின்னர்த் தத்தம் மனைகட்கு மீள்வாராயினர். தாம் மாண்டனர் என்று மதித்துக் கலன்கழி மடந்தையராயின மாண்புடை மனைவியரைக் காணலாயினர். அத்தோஷத்தினாலே சாதிப்பிரேஷ்டராகி, வேட்டுவ மங்கையரை மணந்து, சவாடி மலையினையே தம் உறைவிடமாக்கி உழவுதொழிலை மேற்கொண்டு, மலையாளி எனப் பெயரிய குலத்துக்கு மூதாதையராயினர்.

(4) மலையில் வசித்த வேட்டுவ ஆடவரைக் கொலைசெய்து, அக்குல வனிதையரை வதுவை செய்தவரே மலையாளிகள் என்பது தென் ஆறுகாட்டுக் கன்னபரம்பரையாம்.

## (5) மலையாளிகளின் பட்டங்களும் மறுநாமங்களும்.

காரைக்காட்டு வேளாளர் என்ற பெயா குடிமதிப்புக் கணக்கிலே குறிக்கப்பட்டுள்ளது.

கோங்கு வேளாளர் என்னும் ஆக்குலயம் தென்ஆறுகாட்டு மலையாளராலே வழங்கப்படுவது.

காஞ்சிமண்டலம் என்னும் மங்கலப் பெயரினைச் சேர்வைராயன் மலையிலுள்ளார் செப்புவர். வேளாளன், காராளன் என்று விளம்புவார் சிலர். மலைக்காரன், மலைநாய்க்கன் என்பர் வேறுசிலர். யாவரும் கௌண்டன் என்னும் பட்டப்பெயரினை உடையராம்.

தம் முன்னோர் காஞ்சிபுரம் கராளர் என்றும் கதிராமலைக் கொணர்ந்தார் என்றும், எவ்விடத்து மலையாளிகளும் இயம்புகின்றமையும், தென் ஆறுகாட்டு மலையாளிகளின் மணச்சடங்கிலே, மாங்கல்யதாரணஞ்செய்யச் சிறிதுமுன்னர், குருக்கள், காஞ்சி, கதிராமன் என்றத் தொடக்கத்துப் பாட்டொன்று படிக்கின்றமையும், மலையாளிகளைப்பற்றிய வரலாற்றினை வலியுறுத்துறு செய்திகளேயாம்.

இத்துணை விருத்தாந்தமுடையராய் விளக்கும் மலையாளிகளையே யாழ்ப்பாணத்தவர் மலையாளர் என்றும், மலையகர் என்றும் வதுக்கனர் என்பது எவர்க்கும் எளிதிற் புலனாகும். மலையாளன், மலையகன், மலைக்காரன், மலையாளி என்பன எல்லாம் மலைநாட்டவன் என்னும் பொருள் குறித்த காரணப்பெயர்கள். அதுபற்றியே மலையாளி என்னும்பெயர் மலையாளதேயத்தவர்க்கும் வழங்காநின்றது.

மலையாளன், மலையகன் என்னும் வருண நாமங்கள் உலாந்தேச அரசாட்சிப் பதிரங்களினும், பிறபத்திரங்களினும் வழங்கப்பட்டுள்ளன. இவ்விரு மாற்றங்களை உள்ளிட்ட யாழ்ப்பாணத்து இடப்பெயர்கள் சில வருமாறு:—

மலையாளன் போயிட்டி—அச்செழு. மலையாளன் வளவு—அச்செழு. மலையாளன்சீமா—அச்சுவேலிதெற்கு, நீர்வேலி. மலையாளன்காடு—கோப்பாய்தெற்கு, அராலிகிழக்கு. மலையாளன் ஒல்லை—உடுவில். மலையகன்வளவு—நீர்வேலி. மலையாளன்தோட்டம்—சுதுமலை.

## வல்வை வரலாற்று ஆவணக்காப்பகத்தின் வெளியீடுகள்.

1. வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள் - 2006
இரண்டாம் பதிப்பு, வல்வை.ந.நகுலசிகாமணி

2. உடுப்பிட்டி அ.சிவசம்புபுலவர் - வாழ்க்கை வரலாறு அவரது ஆக்கங்களும். 2010 வல்வை ந.நகுலசிகாமணி

3 ஈழத்து வரலாற்று சுவடுகள். 2010. வுல்வை ந.நகுலசிகாமணி

## மீள்பதிப்பு செய்த நூல்கள்

1 கைலாயமாலை. 1619 – முத்துராச கவிராசர்

2 யாழ்ப்பாண வைபவ மாலை. 1884 – மாதகல் மயில்வாகணப் புலவர்

3 யாழ்ப்பாண வைபவ கௌமுதி 1918– கல்லடி க.வேலுப்பிள்ளை

4 அருணகிரிநாதர் அருளிய கந்தரலங்காரமும் வல்வை இயற்றமிழ் போதகாசிரியர் ச.வயித்தியலிங்கபிள்ளை இயற்றிய உரை. 1912- இரண்டாம் பதிப்பு

5. கந்தவனநாதர் நாதர் நான்மணிமாலையும் பதிகமும், திருப்பள்ளி எழுச்சியும். முதற்பதிப்பு மலேசியா 1928.நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

6. பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் சரித்திரம். முதற்பதிப்பு 1954. ஆங்கிலத்திலும் தமிழிலும்.

7. நவரத்தினசாமி நீச்சு வீரன் வாழ்க்கைச் சரித்திரம் -1954

8 தொண்டைமானாறு செல்வச்சந்தியும் வரலாறும். 1974, செ.நாகலிங்கம்

9 அனைத்துலக நீதிச்சபைமுன் இலங்கைத்தமிழர் பிரச்சனை, 1973
தந்தை செல்வா சமர்ப்பித்த அறிக்கை

10 S.J.V.CHELVANAYAKAM a tribute – 1978

11. RE – OPENING OF NORTH – CEYLON PORT – 1951

தொடர்புகளுக்கு : 416 – 4387650

# ஆசு கவி கல்லடி வேலுப்பிள்ளை (1860-1944)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வயாவிளான் சிற்றூரில் பிறந்த இவர் மின் வேகத்தில் பாடுந்திறன் மிக்க ஆசுகவி. பலப்பல கவிதைகளை, பண்டிதர் மட்டுமல்லாது பாமரரும் விளங்கிக் கொள்ளும் வண்ணம் எழுதியவர். யார்க்கும் அஞ்சாதவராக "சுதேசநாட்டியம்" பத்திரிகையை நாற்பது ஆண்டு காலம் நடாத்தி இலக்கியப் பணியும் சமூக சீர்திருத்தப் பணியும் புரிந்தவர். "கண்டனக்கீறக் கல்லடியான்" எனக் கற்றோரால் சிறப்பிக்கப்பட்டவர்.

"யாழ்ப்பாண வைபவ கௌமுதி" என்ற இவ்வரிய யாழ்ப்பாண சரித்திர ஆய்வுநூலை ஆக்கி எமக்களித்த பெருமகன் அவராவார்.

வல்வை ந. நகுலசிகாமணி.

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow